UNIVERSAL
LIBRARY
OU_208260
UNIVERSAL
LIBRARY

ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு

உ

கணபதி துணை

இளங்கோவடிகளருளிச்செய்த

சிலப்பதிகார மூலமும்

அரும்பதவுரையும்

அடியார்க்குநல்லாருரையும்

இவை

உத்தமதானபுரம்

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் வே. சாமிநாதையரவர்கள்

பல பிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து நூதனமாக
எழுதிய பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்

சென்னை, கபீர் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றன.

ஆரும் பதிப்பு

மன்மத ஞ்ரு கார்த்திகை மீ

உரிமைப் பதிவு] 1955 [விலை ரூ. 8

I Edition—1892
II ,, —1920
III ,, —1927
IV ,, —1944
V ,, —1950

Kabeer Printing Works, Madras (3003)

இப்புத்தகத்தில் அடங்கியவை

		பக்கம்
க.	இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலிய வற்றின் முதற்குறிப்பகராதி ...	v
உ.	ஆரும் பதிப்பின் முகவுரை ...	vii
ங.	மூன்றும் பதிப்பின் முகவுரை ...	ix
ச.	இளங்கோவடிகள் வரலாறு ...	xvii
ஞ.	அரும்பதவுரையாசிரியர் வரலாறு ...	xix
ட.	அடியார்க்குநல்லார் வரலாறு ...	xix
ண.	சிலப்பதிகாரத்தாலும் உரைகளாலும் தெரிந்த அரசர் பெயர் முதலியன ...	xxi
அ.	சிலப்பதிகாரக்கதைச் சுருக்கம் ...	xxiii
க.	**சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் குறிப் புரையும்** ...	1–589
	பதிகம் ...	1–29
	உரைப்பாயிரம் ...	6–11
	அடியார்க்கு நல்லாருரைச் சிறப்புப்பாயிரம் ...	11
	உரைபெறு கட்டுரை ...	30–32
	நூற்சிறப்புப் பாயிரம் ...	32

க. புகார்க்காண்டம்

(க)	மங்கலவாழ்த்துப்பாடல் ...	33–41
(உ)	மனையறம் படுத்தகாதை ...	42–55
(ங)	அரங்கேற்றுகாதை ...	56–121
(ச)	அந்திமாலைச்சிறப்புச்செய்காதை ...	122–135
(ஞ)	இந்திரவிழவூரெடுத்தகாதை ...	136–172
(ட)	கடலாடுகாதை ...	173–200
(ண)	கானல்வரி ...	201–217
(அ)	வேனிற்காதை ...	218–238
(க)	கனாத்திறமுரைத்தகாதை ...	239–251
(கஉ)	நாடுகாண்காதை ...	252–287

உ மதுரைக்காண்டம்

		பக்கம்
(உக)	காடுகாண்காதை	... 288–309
(உஉ)	வேட்டுவவரி	.. 310–328
(உங)	புறஞ்சேரியிறுத்தகாதை	... 329–351
(உச)	ஊர்காண்காதை	.. 352–386
(உடு)	அடைக்கலக்காதை	... 387–411
(உசு)	கொலைக்களக்காதை	... 412–436
(உஎ)	ஆயச்சியர்குரவை	.. 437–457
(உஅ)	துன்பமாலை	... 458–464
(உகூ)	ஊர்சூழ்வரி	... 465–475
(உ ஒ)	வழக்குரைகாதை	... 476–482
(உக)	வஞ்சினமாலை	... 483–488
(உஉ)	அழற்படுகாதை	... 489–496
(உங)	கட்டுரைகாதை	... 497–508

ங. வஞ்சிக்காண்டம்

(உச)	குன்றக்குரவை	... 509–516
(உடு)	காட்சிக்காதை	.. 517–528
(உசு)	கால்கோட்காதை	... 529–542
(உஎ)	நீர்ப்படைக்காதை	... 543–555
(உஅ)	நடுகற்காதை	... 556–568
(உகூ)	வாழ்த்துக்காதை	... 569–577
(ங ஒ)	வரந்தருகாதை	... 578–588
	நூற்கட்டுரை	... 589
க ஒ.	விளங்காமேற்கோளகராதி	... 590–594
கக.	அரும்பதமுதலியவற்றின் அகராதி	... 595–736
கஉ	அரும்பதவுரை சம்பந்தமான அநுபந்தம்	737–744

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

அகநா - அகநானூறு
அடிக் - அடிக்குறிப்பு
அடியார் - அடியார்க்கு நல்லாருரை
அம்பிகாபதி - அம்பிகாபதி கோவை
அரும் - அரும்பதவுரை
அறநெறி - அறநெறிச்சாரம்
ஆசார, ஆசாரக் - ஆசாரக்கோவை
ஆதீதிரையன் - ஆதீதிரையன் பேராசிரியன்
இ. கொ - இலக்கணக்கொத்து
இராசராச - இராசராச சோழனுலா
இ. வி - இலக்கணவிளக்கம்
இளம் - இளம்பூரணருரை
இறை - இறையனாரகப்பொருளுரை
இன்னு - இன்னாநாற்பது
உதீதர - உதீதரகாண்டம்
ஐங்குறு - ஐங்குறுநூறு
கடவுள் - கடவுள்வாழ்த்து
கந்த - கந்தபுராணம்
கம்ப - கம்பராமாயணம்
கல் - கல்லாடம்
கலித் - கலித்தொகை
கலிங்க - கலிங்கத்துப்பரணி
கிளவி - கிளவியாக்கம்
குலோத்துங்க - குலோத்துங்க
குறள் - திருக்குறள் [சோழனுலா
குறிஞ்சிப் - குறிஞ்சிப்பாட்டு
கு - ரை - குறிப்புரை
குறுந் - குறுந்தொகை
கூர்ம - கூர்மபுராணம்
சங் - சங்கரநமச்சிவாயருரை
சிலப் - சிலப்பதிகாரம்
சிற், திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்
சிறுபஞ்ச - சிறுபஞ்சமூலம்
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை
சீவக - சீவகசிந்தாமணி
சூ - சூத்திரம்
சூளா - சூளாமணி
சே - சேனாவரையருரை
சேது - சேதுபுராணம்
தக்க - தக்கயாகப்பரணி
தஞ்சை - தஞ்சைவாணன் கோவை
தண்டி - தண்டியலங்காரம்
தணிகைப் - திருத்தணிகைப் புராணம்
தினைமா-தினைமாலைநூற்றைம்பது
திரி, திரிகடு - திரிகடுகம்
திருக்குற்றாலப் - திருக்குற்றாலப் புராணம்
திருக்குறிப்பு - திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணம்
திருவா - திருவாசகம்
திருவாதவூரர் - திருவாதவூரர் புராணம்
திருவால - திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
திருவிளை-திருவிளையாடற் புராணம்
திவ் - திவ்யப்ரபந்தம்
திவா - திவாகரம்
தே - தேவாரம்
தொல் - தொல்காப்பியம்
ந - நச்சினார்க்கினியர் ; நச்சினார்க்கினியருரை
நம்பி - நாற்கவிராய நம்பியகப் பொருள்
நற் - நற்றிணை
நன் - நன்னூல்

நா - திருநாவுக்கரசுநாயனார்
நாலடி - நாலடியார்
நான்மணிக் - நான்மணிக்கடிகை
நீல - நீலகேசித்திரட்டு
நெடுநல் - நெடுநல்வாடை
ப, பக் - பக்கம்
பட், பட்டினப் - பட்டினப்பாலை
பதி - பதிகம்
பதிற் - பதிற்றுப்பத்து
பரி - பரிபாடல்
பரிமேல் - பரிமேலழகருரை
பழ - பழமொழி
பா, பா-ம் - பாடபேதம்
பாகவத - பாகவதபுராணம்
பி - ம் - பிரதிபேதம்
பிரபு - பிரபுலிங்கலீலை
பிர, பிரயோக - பிரயோக விவேகம்
பு. வெ - புறப்பொருள் வெண்பா மாலை
புறநா - புறநானூறு
பெரிய - பெரியதிருமொழி, பெரிய புராணம்
பெருங் - பெருங்கதை
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப் படை
பேர்-பேராசிரியர், பேராசிரியருரை
பொருந - பொருநராற்றுப்படை
மணி - மணிமேகலை
மதுரைக் - மதுரைக்காஞ்சி
மயிலேறு - மயிலேறும் பெருமாள் பிள்ளையுரை
மயிலை - மயிலைநாதருரை
மலைபடு - மலைபடுகடாம்
மாறன் - மாறனலங்காரம்
மு - முற்றும்
முருகு - திருமுருகாற்றுப்படை
முல்லை - முல்லைப்பாட்டு
மேற் - மேறகோள்
யா. கா - யாப்பருங்கலக்காரிகை
யா. வி - யாப்பருங்கலவிருத்தி
விக்கிரம - விக்கிரமசோழனுலா
வி. பா. - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்
விருத்தி - விருத்தியுரை

சிவமயம்

ஆரும் பதிப்பின் முகவுரை

இந்நூலின் முதற்பதிப்பு என்பாட்டனாராகிய டாக்டர் ஐயரவர்களால் 1892-ஆம் ஆண்டிலும், ஐந்தாம் பதிப்பு 1950-ம் ஆண்டில் என் தந்தையாராகிய ஸ்ரீ கலியாண சுந்தரையரவர்களாலும் வெளியிடப் பெற்றன. இந்நூலைப் பற்றிய செய்திகள் ஐயரவர்கள் எழுதியுள்ள முகவுரையால் நன்கு விளங்கும்.

இப்பதிப்பு திருத்தமாக வெளிவருவதற்கு வழக்கம்போல், ஐயரவர்களுடைய தலைசிறந்த மாணவரும, சென்னைக் கிறிஸ்துவக்கலாசாலைத் தமிழாசிரியருமான விதீவான் **வி. மு. சுப்பிரமணிய ஐயரவர்கள், M A** உதவி புரிந்தமைக்கு நன்றி பாராட்டுகிறேன். திருவல்லிக்கேணி தேசீயப் பெண்கள் உயர்தரக் கலாசாலைத் தமிழாசிரியர் விதீவான் **S. பாலசாரநாதன்** அவர்கள் ஒப்புநோக்குதல் முதலிய பணியை உடனிருந்து செய்தார்கள்.

சென்னை-5
20-11-55

இங்ஙனம்
க சுப்பிரமணியன்

மூன்றும் பதிப்பின் முகவுரை

" சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதுந் திகழ்தரற் பொருட்டே "

தமிழ்ப்பாஷையிலுள்ள பழைய காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்றுகிய சிலப்பதிகாரமென்பது சேரமுனியாகிய இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது, பழைய உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப் படும் பிரமாண நூல்களுள் ஒன்று, சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து விளங்குவது, எவ்வெப்பொருளைச் சொல்லினும் அவ்வப்பொருளை நேரிறகண்டாற்போல மனதிற்குத் தோற்றும் வண்ணம் நன்கு புலப்படுத்தும் தெள்ளிய இனிய நன்னடையையுடையது, காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த பெருங்குடி வாணிகர் மரபினராகிய கற்பிற்சிறந்த கண்ணகி அவள் கணவன் கோவலன் என்பவர்களுடைய சரித்திரத்தை விரித்துக்கூறுவது, தமிழ்நாட்டரசர் மூவருடைய இராசதானிகளாகிய புகார் (காவிரிப்பூம்படினம்), மதுரை, வஞ்சி யென்னும் மூன்றன் பெருமைகளையும் விளக்குவது, பண்டைக் காலத்திருந்த பலவகை மாந்தருடைய ஒழுக்கம் முதலியவறறை இக்காலத்தார் எளிதில் தெரிந்து கொள்ளுதற்குச் சிறந்த கருவியாகவுள்ளது, அரசர் நீதியிற் சிறிது பிழைப்பினும் அவரை அறக்கடவுள் கூற்றுகி நின்று கொல்லுமென்பதும், கறபுடைமகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் துதித்தல் இயல்பென்பதும், இருவினையும் செயதமுறையே செய்தோனை நாடிவந்து தம் பயனை நுகர்விக்குமென்பதுமாகிய இம்மூன்றினையும் முக்கியப் பொருளாகக் கொண்டு இளங்கோவடிகளாற செய்யப்பட்டது, இவற் றைச் சிலம்புகாரணமாகத் தெரிவித்தலின், இந்நூல் சிலப்பதிகார மென்னும் பெயர்பெற்றது.

இன்னும் முத்தமிழும விரவப் பெறறதாதலின், இந்நூல் இயலிசை நாடகப்பொருட்டொடர் நிலைச்செய்யுளென்றும், நாடக உறுப்புக்களை உடைத்தாதலின் நாடகக்காப்பியமென்றும், உரைப்பாட்டும் இசைப் பாடடும் இடையிடையே விரவப்பெற்றதாதலின் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளென்றும் பெயர் பெறும். தொல்காப்பியம், செய்யுளியல், 173-ஆம சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர், " பாட்டிடைவைத்த குறிப்பினனு மென்பது ஒரு பாட்டினை இடை யிடைக்கொண்டு நிற்கும் கருத்தினன் வருவனவும் எ - று, அவை தகடூர் யாத்திரையும் சிலப்பதிகாரமும் போல்வன " என்றும்,

"தொன்மைதானே, உரையொடு புணர்ந்த பழமை மேறறே" (தொல். செய். சூ. 237) என்பதனுரையில், "அவை பெருந்தேவனூர் செய்த பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன, சிலப்பதிகாரமும் அதன்பாறபடும்" என்றும எழுதியிருத்தல இங்கே அறியத்தக்கது

"சிந்தா மணியாஞ் சிலப்பதிகா ரம்படைத்தான்" (தணிகை யுலா, 526) எனச் சிலேடையில் இநநூறபெயர் அழகுற அமைந் திருத்தலும, வஞ்சினமாலையில் 5-ஆம் அடி முதலியவற்றில் கூறப்பெற் றுள்ள கறபுடைமாதர்கள், பட்டினத்துப்பிள்ளையார் புராணத்துப் பூம்புகார்ச சருக்கத்தும, "பழிமான முந்தன் மனையறங் காத்தலும் பார்த்திபனைத், தொழுமா தரவும பெறுங்கறபி னுற்றுதித் தோர்ககுச் செம்பொன், பொழிமான துங்கன் குலோத்துங்க சோழன் புகாரப் பிறந்தார், எழுமாத ரோடிவ ளெண்மாத ராவள்" என்னும் குலோத்துங்கசோழன்கோவை, 426-ஆம் பாடலிலும் பாராட்டப் பெற்றிருத்தலும் அறிந்து இன்புறறபாலன.

ஊரகாண்காதை, 180-ஆம அடி முதலியவற்றிலும அவற்றின் உரைகளிலும காணப்படும நவமணியிலக்கணங்கள திருவாலவா யுடையார் திருவிளையாடற்புராணத்தில் மாணிக்கம் விற்ற திருவிளையாடலிலும காணப்படுகினறன.

பின்னும இக்காலத்தில் வேறுருவகையாலும் அறிதறகியலாத இசையிலக்கணவகை, நாடக இலக்கணம, பரத இலக்கணம, அவிநய வகைகள், நகர அமைப்பு, கோயிலமைப்பு முதலியன, ஐவகைத் திணையின் அமைதிகள், இன்ன இன்ன சாதியார் இன்ன இன்ன தொழில் செய்துவந்தன ரென்பது, பலவகை நீதிகள், சமயக் கோட்பாடுகள், இராசபக்தி, ஆச்சிரம அமைதி, ஆசிரிய பக்தி, மாணக்கரியல்பு, ஆபரண வகை, தானிய வகை, யாகவகை, ஊர்திவகை, கருவிவகை, மந்திரவகை, பூவகை, செடிவகை, கொடிவகை, மரவகை ஆகிய இவைகளும் இவைபோல்வன பிறவும் இநநூலால் அறியலாகும.

இக்கதை நடநதகாலமும் இளங்கோவடிகள் காலமும் ஒன்றென்றும இது முதலில் தமிழிலேயே அவராறசெயயப்பட்டதென்றும் இநநூற பதிகச் செய்யுளாலும வரந்தருகாதையாலும விளங்குகின்றமையின், இச்சரித்திரம் வேறு பாஷையிலிருந்து வநததென்று சொல்வதற்கிட மில்லை.

இச்சிலப்பதிகாரம் இளங்கோவடிகளாலேயே செய்யப்பட்டதறகுக் காரணமும் கதைச்சுருக்கமும் அமைநதுள்ள பதிகச்செய்யுளை முதலிற் பெற்று, மங்கலவாழ்த்துப்பாடல் முதலிய பத்துறுப்புக்களையுடைய புகார்க்காண்டமும், காடுகாண்காதை முதலிய பதினமூன்று உறுப்புக் களையுடைய மதுரைக்காண்டமும், குன்றக்குரவைமுதலிய ஏழுறுப் புக்களையுடைய வஞ்சிக் காண்டமுமாகப் பகுக்கப்பெற்றுள்ளது. இதில் இயற்றமிழின் பாகுபாடான வெண்பா, அகவறபா, கலிப்பா என்பவைகளும், இசைத்தமிழின் பாகுபாடான ஆற்றுவரி, ஊசல்வரி,

கந்துகவரி முதலியபாக்களும், நாடகத்தமிழின் பாகுபாடான உரைப் பாட்டுக்களும் வந்துள்ளன. இவற்றுள் மிகுதியாக உள்ளவை அகவற் பாக்களே. இவை **தொல்காப்பியம்** செயுளியல், 157-ஆம் சூத்திர வுரையில் **இளம்பூரணராற** பெரியபாட்டுக்கு உதாரணமாகக் காட்டப் பெற்றுள்ளன

காதையென்பதற்குப் பாட்டென்பது பொருளென்று நீலகேசித் திரட்டின் உரையாசிரியர் ஷை நூல குண்டலகேசிவாதச் சருக்கம், 27-ஆம செய்யுளுரையில், "முன்ருன் பெருமைக்க ணின்ருன என்னுங் காதையை யனுவதித்தவாறு" எனவும், 28-ஆம் செய்யுளுரையில், "பிடகம் என்னும் காதை சொன்னவாறு" எனவும, மொக்கலவாதச் சருக்கம், 23-ஆம் செய்யுளுரையில், "தன் புறத்த என்னும் காதை சொல்லப்பட்டது" எனவும, 40-ஆம் செய்யுளுரையில், "எழும்பைத்தி என்னும காதை" எனவும், 41-ஆம செயயுளுரையில, "காவிஞற் சுமநதுயப்பான் என்னுங காதை" எனவும, 42-ஆம செய்யுளுரையில், "மக்கட பண்பழியாது என்னுங்காதை" எனவும எழுதியிருத்தலால் துணியப்படும காதை யெனபதை இசையோடு பாடப்படுவதாகிய செய்யுளென்று பொருள் படுகிற 'காதா' என்னும் வடமொழிச் சிதை வென்று கொண்டால் யாதோர் இழுக்குமின்றென்று வடமொழியாளர் கூறுவர். இதனுலேயே இந்நூலின் பல பகுதிகள் காதையென்று பெயர் பெறறன போலும.

இந்நூற்கு அரும்பதவுரையென்றும, அடியார்க்கு நல்லாருரை யென்றும் இரண்டுரைகள் உண்டு. இந்திரவிழவூரெடுத்த காதையில், "ஐம்பெருங்குழுவு மெண்பே ராயமும்" [அடி, 157] என்பதன் விசேட வுரையில, 'இனி எனக்காட்டுவர் அருமபத வுரையாசிரியர்' என்று அடியார்க்கு நல்லார் எழுதியிருத்தலால, இவ்விரண்டுரையுள் அரும்பத வுரையே முந்தியதென்று தெரிகிறது. இப்படியே அருமபதவுரையிலுள்ள சிலகுறிப்புக்களால் அவவுரைக்கு முன்பும இநநூறகு வேறு பழைய வுரை யொன்றிருந்திருக்கலாமென்றும் தோற்றுகிறது. அவ்வுரை இக் காலத்து அகப்படவில்லை இந்நூலிற சிலசில இடங்களில் அரும்பத வுரையாசிரியர் கொண்ட பாடம வேருகவும், அடியார்க்குநலலார் கொண்ட பாடம் வேருகவும் உள்ளன. அடியார்க்குநல்லார் உரையுள்ள பகுதிவரையில் அவர் கொண்ட மூலபாடமே இப்புத்தகத்திற பதிப்பிக்கப் பெறறிருக்கிறது. அரும்பதவுரையாசிரியர் கொண்டபாடம் வேருயுள்ள இடங்களில் அப்பாடத்தைப் புலப்படுத்தற்கு ஆங்காங்கு அவ்வுரையின் முன், 'பா' (பாடபேதம்) என்னும் குறிப்பு அமைக்கப்பட்டுள்ளது.

அரும்பதவுரை, ஆங்காங்குள்ள திரிசொற்களின் பொருளை மட்டுமே ஒருவாறு புலப்படுத்திச் சிற்சிலவிடத்து மேற்கோள்களை உடையதாய் மிகவும் சுருக்கமாக இந்நூல் முழுமைக்கும் அமைந்துள்ளது. அவ்வுரை யாசிரியர் பெயரும அவர் இருந்தவிடமும் அவர்காலம் முதலியனவும் ஒருவாற்ருனும் தெரிந்துகொள்ளக்கூடவில்லை.

பலவருடங்களுக்கு முன்பு மிகவும் பழையதாகிய இந்த அரும்பத வுரைப் பிரதியொன்று என் நண்பர் தேரழுந்தூர் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியாரவர்களிடமிருந்து கிடைத்தது. அது மிக வும் பழுதுபட்டு ஏடுகள் குறைந்தும், உள்ள ஏடுகள் தேய்ந்தும், முன் னுள்ளவைகள் பின்னும் பின்னுள்ளவைகள் முன்னுமாக மாறி எழுதப் பட்டும், அதிகமாகப் பிழைகள் விரவியும் இருந்தது அதனோடு ஒப்பு நோக்கிப் பொருளை ஒழுங்குபடுத்துவதற்கு இன்னும் கையெழுத்துப் பிரதிகள் கிடைத்தால் அனுகூலமாக இருக்குமென்று பலவிடங்களிலே தேடிப்பார்த்தும் வேறு பிரதி அகப்படவில்லை. அந்த ஒரு பிரதியை மட்டும் சோதித்துப் 'பதிப்பித்தறகு எனக்குச் சிறிதும் மனமில்லையா யினும், அவ்வொருபிரதியும் சில நாளில் இறந்துவிடின் அதனோடு இவ் வுரை இறந்தேவிடுமாகையால் இதனைச் சோதித்துப் பதிப்பிக்கவேண்டு மென்று சில அன்பர்கள் தூண்டினமையால், துணிந்து பரிசோதித்து 1892-ஆம் வருஷத்தில் வெளிப்படுத்தலானேன் அப்பதிப்பில் அரும்பத வுரை தனிப்பகுதியாக இறுதியிலே பதிப்பிக்கப் பெற்றிருந்தது, அப்பால் சில காரணங்களால் மூலமுள்ள பக்கங்களிலேயே கீழே டி உரை பதிப் பிக்கப்பெறறிருக்கின்றது இதிலுள்ள மேற்கோள்களுள் அடியார்க்கு நல்லார் உரையால் விளங்குகின்றனவற்றின் முதல் இறுதிகளை மட்டும் விளக்கி அவற்றின் இடையில் (.....) இவ்வொற்றைப் புள்ளிநிரைகள் போடுவித்தும், அவ்வுரையிற் காணப்படாத மேறகோள்களை முற்றுங் காடடியும், ஏடுகளிற் பழுதுபட்டுப்போன இடங்களைப் புலப்படுத்து வதற்கு அவ்வவ்விடங்களில் மேற்கூறிய ஒற்றைப் புள்ளி நிரையை அமைத்தும், விளங்காதபாகத்தின் முதல இறுதிகளில் [ ] இவ்விருதலைப் பகரத்தைச் சேர்த்தும், படிப்பவர்களுக்குப் பொருள் புலப்படுதற்கு மூலத்தின் அடியெண்களையேனும் முதலையேனும அவ்வவ்விடங்களில் அமைத்தும் பதிப்பித்திருக்கிறேன்.

அடியார்க்குநல்லாருரை முதலிலிருந்து கானல்வரி நீங்கலாக ஊர் சூழ்வரி முடியவே உள்ளது. மேற்கூறிய அரும்பதவுரையை அது பெரும்பாலுந் தழுவியும், சிறுபான்மை மறுத்தும், சிலவிடத்துப் பதவுரையாயும் சிலவிடத்துப் பொழிப்புரையாயும் எழுதப்பட்டு, சொன் னயம், பொருணயங்களை இனிது புலப்படுத்தி, உரியவிடங்களில் இயற் றமிழ்ப்பகுதியாகிய ஐந்திலக்கணங்களையும், இசைத்தமிழ் நாடகத் தமிழின் பகுதிகளையும பல நூன்மேற்கோள் முகமாக நன்கு விளக்கும் விசேடவுரையோடுகூடி மிகவிரிவாக அமைந்துள்ளது. இவ்வுரையில், இக்காலத்தில் விசேடித்து வழங்காத இசைத்தமிழ் நாடகத்தமிழிலக் கணங்களும் அவற்றிறகுரிய சூத்திரங்களும், பரிபாஷைகளும, இன்னும் வேறு பலவும் நிறைந்திருக்கின்றனவாதலால், இது நூலாராய்ச்சி செய் வோருக்கு மிகவும் பயன்படும். இவ்வுரையாசிரியர்க்கு நிரம்பையர் காவலரென்று ஒரு பெயர் உண்டென்பதும், இவ்வுரை அக்காலத்திருந்த பொப்பண்ண காங்கெயர்கோன் என்ற ஒரு பிரபுவாற் செய்விக்கப்

படடதென்பதும் இந்நூல், 11-ஆம் பக்கத்துள்ள உரைச்சிறப்புப்பாயிரச் செய்யுட்களால் தெரிகின்றன.

இவருக்கு நிரம்பையர் காவலரென்னும் பெயர் ஊரால் வந்ததென்றும் நிரமபையென்னும ஊர் கொங்குமண்டலத்திற் குறும்புநாட்டில், பெருங்கதையின் ஆசிரியராகிய கொங்குவேளிர் பிறந்த விசயமங்கலத்தின் பக்கத்தில் உள்ளதென்றும கொங்குமண்டல சதகம் தெரிவிக்கின்றது; பெருங்கதையில், நூலாசிரியர் வரலாறு, பக்கம் XLV, XLVI பார்க்க.

இந்நூலை அடியார்க்குநலலாருரையுடன் பலபிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து எழுதுவோரால் நேர்ந்தவழுக்களை இயன்றவரையில் மாற்றி யாவருக்கும் பயன்படும்படி அச்சிடவேண்டுமென்று நெடுநாளைக்கு முன்பே உண்டான விருப்பம் நாள்தோறும் பெருகி என் மனதைக் கவர்ந்து கொண்டமையால், சீவக சிந்தாமணியை முதலில் அச்சிட்ட காலம தொடங்கிப் பல கையெழுத்துப் பிரதிகளைத்தேடி அவற்றின் உதவியால் பரிசோதித்து வந்தேன், அவற்றுள் ஒரு பிரதியிலேனும் ஏழாவது கானல் வரிக்கும், இருபதாவது வழக்குரைகாதை முதலிய பிற்பாகத்திற்கும் உரை காணப்படவில்லை. சில இடத்துள்ள விசேடவுரைக் குறிப்பாற் கானல்வரிக்கு அடியார்க்கு நல்லார் உரையெழுதியிருந்தாரென்றும் பின்னுள்ள வற்றிறகும் எழுத ஆயத்தமாக இருந்தாரென்றும் தெரிந்தமையால், அவைகளிருந்தால் எப்படியும் பெறலாமென்றெண்ணித் திருவாவடுதுறையாதீனம தருமபுரவாதீனம திருவண்ணமலையாதீனம் செங்கோல்மடம் முதலிய ஆதீனமடங்களிலும், சென்னையிலும் தஞ்சையிலுமுள்ள பழைய கையெழுத்துப் புத்தகசாலைகளிலும், ஆழ்வார்திருநகரி, ஸ்ரீ வைகுண்டம், வெள்ளூர், திருச்செந்தூர், ஆறுமுகமங்கலம, ஊர்க்காடு, ஊற்றுமலை, கடையநல்லூர், கிருஷ்ணபுரம், பூழியன்குடி, கல்லிடைக்குறிச்சி, விக்கிரமசிங்கபுரம், களக்காடு, மேலகரம், செங்கோட்டை, தென்காசி, திருநெல்வேலி, வண்ணர்பேட்டை, பாளையங்கோட்டை, குமபகோணம், கொட்டையூர், சீகாழி, சிதம்பரம், சேலம், பாகற்பட்டி, தஞ்சை, திரிசிரபுரம், திருப்பாதிரிப்புலியூர், துழாவூர், மதுரை, மிதிலைப்பட்டி, செவ்வூர், சென்னபட்டணம், திருமயிலை முதலிய பலவூர்களிலுள்ள பரம்பரைத் தமிழ் விதுவான்கள வீடுகளிலும் சென்று தேடியும் இதீதமிழ் நாட்டில் நான் செல்லக்கூடாத இடங்களிலும் † இங்கிலாந்து பாரிஸ் நகரம் இவற்றிலிருக்கும் கையெழுத்துப் புத்தகசாலைகளிலும் ஆங்காங்குள்ள

† இங்கிலாந்திலுள்ள கையெழுத்துப் புத்தகசாலைகளில் தேடிப் பார்த்த கனவான் கொழும்பு நகரத்துப் பிரபு சிகாமணியாக விளங்கிய ஸ்ரீமான். பொ. குமாரசாமிமுதலியாரவர்கள், பாரிஸ் நகரத்துள்ள கையெழுத்துப் புத்தக சாலையில் தேடிப்பார்த்து உதவி செய்தவர் புரொபெஸர் ஜூலியன் வின்ஸன் என்பவர்.

அன்பர்களைக்கொண்டு தேடுவித்தும் பார்த்தேன். அங்ஙனம் செய்தும் அவற்றின் உரைப்பகுதி கிடைக்கவில்லை. ஆதலால், தேடுவதிற் பயனில்லையென்றெண்ணிக் கிடைத்தவுரையையும், மூலமுழுவதையும் மேற்கூறிய 1892-ஆம வருஷத்தில் முதன்முறை அச்சிட்டு முடித்தேன்; அடியார்க்கு நல்லாருரையில்லாத பகுதிகள் அரும்பதவுரையின் பேருதவியைக்கொண்டே ஒருவாறு பரிசோதிக்கப்பெறறன.

இவற்றிலுள்ள இசைநாடகப் பகுதிகள் எனக்குக் கிடைத்த சச்சபுட வெண்பா, தாளசமுத்திரம், ‡ சுத்தாநந்தப்பிரகாசம் முதலிய பழைய தமிழ் நூல்களைக்கொண்டும் இசையிலும் பரதத்திலும் வல்லோரை விஞவியும் ஒருவாறு ஆராய்ச்சி செய்யப்பெற்றன. அங்ஙனம் செய்யப்பட்டும் சில பாகம மட்டும் சற்றே விளங்கின. இசை நாடகங்களுக்குரிய பரிபாஷைகளிற பெரும்பாலன வடமொழியிலும தென்மொழியிலும வேறு வேறு உருவங்களோடு கூடியிருத்தலால் இவறறிலுள்ள சொற்கள் பல வட நூல்களினுல தெரிந்துகொள்ளக் கூடவில்லை. அன்றியும ஊர்காண் காதையிலுள்ள நவமணியிலக்கணமும வேறு சிலவும் விசாரித்ததில் இப்பொழுதுள்ள வடநூல்களிற கூறிய இலக்கணத்தோடு சிற்சில மாறுபாடுள்ளனவாகத் தெரிந்தன இந்நூலில் அடியார்க்கு நல்லார் ஒவ்வொன்றையும பழைய தமிழ்நூல் மேறகோள்களைக் கொண்டு நன்கு புலப்படுத்தியிருநதும அப்பழைய நூலகளும் அவற்றின் கருத்தை ஒருவாறு எடுத்துச் சொல்வோரும இக்காலத்து இலலாமையால் அவை அறிதறகரியனவாயிருக்கின்றன. அன்றியும் இவறறில் வந்திருக்கிற இயற்றமிழ்ச் சொறகளுட் சில இக்காலத்து வழங்காதொழிந்தமையால் அவறறிறகுப் பொருள் ஒருதலையாகப் புலப்படவில்லை, அவறறினுருவமும் விளங்கவில்லை, ஆயினும் இப்படியே முன்பு விளங்காதிருந்தவைகள் பல பின்பு இந்நூலாலும் இவவுரையாலும் ஒருவாறு விளங்கிவருதலால் இதுபோலப் பழைய நூல்களையும உரைகளையும ஒழுங்காக ஆராய்ச்சி செய்யச்செய்ய அவைகளும் விளங்குமென்பது எனது துணிபாதலின், உலகவழக்கு செய்யுள்வழக்கு என்னும் இரண்டையும் கருவியாகக்கொண்டு பலமுறை ஆராய்ச்சி செய்து பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன்.

மேற்கூறிய பழைய பிரதிகளுட் பல இனி வழுப்படவேண்டுமென்பதற் கிடமில்லாமற் பிழை பொதிந்து, அநேக வருடங்களாகத் தம்மைப் படிப்போரும் படிப்பிபபோரும் இலலையென்பதையும், நூல்களைப் பெயர்த்தெழுதித் தொகுத்து வைத்தலையே விரதமாகக்கொண்ட சில புண்ணியசாலிகளாலேயே தாம் உருக்கொண்டிருத்தலையும் நன்கு புலப்படுத்தின. ஒன்றேடொன்று ஒவ்வாது பிறழ்ந்து குறைவுற்றுப் பழுதுபட்டுப் பொருட்டொடர்பின்றிக் கிடந்த இப்பிரதிகளைப் பரிசோதித்த துன்பத்தை உள்ளுங்கால் உள்ளம் உருகும்.

---

‡ இந்நூல் திலலையம்பூர் ஸோமயாஜி ஸ்ரீ வேங்கடராம ஐயங்காரவர்களாற் கிடைத்தது.

இதன் இரண்டாம் பதிப்பு 1920-ஆம் வருஷத்தில் வெளியாயிற்று. அதன்பின்பு செய்துவந்த ஆராய்ச்சியால இதன் மூலமும் உரை முதலியனவும் சில திருத்தங்களைப் பெறறுள்ளன.

இந்நூலைக்கொண்டு வேறு நூல்களையும், அவற்றைக்கொண்டு இதனையும் ஆராய்ந்து உண்மை காண்டற்குக் கருவியாக மூலத்திலும் உரையிலும் காணப்பட்ட பல விஷயங்களும் தொகையகராதி முதலியனவாக மூன்றாம்பதிப்பில் அதன் முகவுரையின் பின்னர்ப் பதிப்பிக்கப்பெற்றிருந்தன. அப்பால் அவைகளையும், மூலத்திலும் இருவகை உரைகளிலும காணப்பட்டு முன்பு பதிப்பிக்கப்பெறுமலிருந்த அரும்பதங்களையும், அருந்தொடர்களையும், சில உவமான உவமேயங்களையும், பழைய செய்திகளையும வழக்கங்களையும் ஒருங்கு சேர்த்து ஒரே அகராதியாக நூலின் பின் 'அரும்பத முதலியவறறின் அகராதி' என்னும் பெயருடன் பதிப்பிக்கலானேன் இவ்வகராதியில் சில அரும்பதங்களுக்கு உரையும் எழுதப்பெறறிருக்கிறது இந்நூறபகுதிகளை ஒத்த பிறநூறபகுதிகளும், இந்நூற்பகுதிகள் மேறகோளாக வந்துள்ள இடங்களும் அவ்வப் பக்கங்களின் கீழே அடிக்குறிப்பாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. முதற் பதிப்பில் 'என' என்று கொண்ட ஆசிரியப்பாக்களின் இறுதியசை அப்பால் 'என்' என்று கொள்ளப்பட்டது

முதறபதிப்பின் பரிசோதனைக்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதிகளின் விவரம் —

அடியார்க்கு நல்லாருரையோடு கூடியவை .

திருவாவடுதுறையாதீனத்துப்		பிரதி	1
	ஷை ஆதீனத்து மஹாவித்துவான்		
திரிசிரபுரம்	ஸ்ரீ சி மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்	,,	1
திரிசிரபுரம்	,, சி தியாகராச செட்டியாரவர்கள்	,,	1
திருநெல்வேலி	,, சாலிவாடீசுவர ஓதுவாரவர்கள்	,,	1
சேலம்	,, இராமசுவாமி முதலியாரவர்கள்	,,	1
சிதம்பரம்	,, சாமி ஐயங்காரவர்கள்	,,	1
சென்னை	,, தொ வேலாயுத முதலியாரவர்கள்	,,	1
,,	,, சூ அப்பன் செட்டியாரவர்கள்	,,	1
,,	,, குருசாமி ஐயரவர்கள்	,,	1
திருமயிலை	,, அண்ணாசாமி உபாத்தியாயரவர்கள்	,,	1
யாழ்ப்பாணம்	,, சி வை. தாமோதரம பிள்ளையவர்கள்	,,	1
,,	,, தி குமாரசுவாமி செட்டியாரவர்கள்	,,	2
,,	,, வி. கனகசபைப் பிள்ளையவர்கள்	,,	1
	ஆக உரைப்பிரதிகள்		14

மூலப்பிரதிகள்

திரிசிரபுரம்	ஸ்ரீ சி. மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்	பிரதி	1
மிதிலைப்பட்டி	,, அழகிய சிற்றமபலக் கவிராயரவர்கள்	,,	1
திருநெல்வேலி	,, சாலிவாடீசுவர ஒதுவாரவர்கள்	,,	1
ஆறுமுகமங்கலம்	,, குமாரசாமிப் பிள்ளையவர்கள்	,,	1
திரிசிரபுரம்	,, அண்ணுசாமி பிள்ளையவர்கள்	,,	1
திருமயிலை	,, அண்ணுசாமி உபாத்தியாயரவர்கள்	,,	1
யாழ்ப்பாணம்	,, தி. குமாரசாமி செட்டியாரவர்கள்	,,	1
,,	,, வி கனகசபைப் பிள்ளையவர்கள்	,,	1
	ஆக மூலப்பிரதிகள்		8

2-ஆம் பதிப்பின் பரிசோதனைக்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதிகள் .

கொழும்புத்துறை ஸ்ரீ குமாரசாமி செட்டியாரவர்கள் தந்த	பிரதி	1
ஆழ்வார்திருநகரி ம-ா-ா-ஸ்ரீ பெரியதிருவடிக்கவிராயரவர்கள் தேடித்தந்த	,,	1
திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் பேராகிய குருசாமி ஐயர் தநத†	,,	1

இந்தக் கையெழுத்துப் பிரதிகளை உதவியவர்கள்பால் மிக்க நன்றி பாராட்டுகிறேன்.

நூற்பரிசோதனைக்கு உடனிருந்து உதவி பரிபவர்கள் விஷயத்தில் நான் கவலையுருவண்ணம் பல வருடங்களாக மாதவேதனமளித்து ஆதரித்துவரும் ஸ்ரீசேது ஸமஸ்தானாதிபதிகளும், மதுரைத்தமிழ்ச் சங்கத் தலைவர்களும், சென்னைச் சட்டநிரூபணசபை அங்கத்தினர்களுமான கௌரவம்பொருந்திய மகாராஜராஜஸ்ரீ **பா. இராஜராஜேசுவர சேதுபதி மகாராஜா** அவர்களுடைய வள்ளன்மையை ஒரு பொழுதும் மறவேன்.

இப்பதிப்பிற் காணும் பிழைகளைப் பொறுத்துக்கொள்ளும்படி விவேகிகளைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இம்முயற்சியிற் புகுத்தி நடத்தி ஊக்கமளித்து அடியேனைப் பாதுகாத்தருளும் தமிழ்த் தெய்வதத்தை அனவரதமும் வந்திக்கின்றேன்.

"தியாகராஜவிலாஸம்"
திருவேட்டீசுவரன்பேட்டை
30—1—27.

இங்ஙனம் .
வே. சாமிநாதையன்

† இப்பிரதியில் அரும்பதவுரையின் சில ஏடுகள் இருந்தன

ஙூ

இந்நூலாசிரியராகிய

இளங்கோவடிகள் வரலாறு

இந்நூலாசிரியராகிய இளங்கோவடிகள் சேரநாட்டில் வஞ்சி நகரத்திருந்து அரசுசெய்த சேரலாதன் என்னும் அரசனுடைய புதிதிரர், சேரன் செங்குட்டுவனுடைய தம்பி, இதனுல் இவர் முதலில் இளங்கோவென்று சொல்லப்பட்டுப் பின்பு துறவுபூண்டமையால் இளங்கோவடிகளெனறு பெயர் பெற்ருர், இவர் துறவு பூண்டதற்குக் காரணம இப்புத்தகத்தின் 12-ஆம் பக்கம் முதலியவற்ருலும், இந்நூல் செய்ததறகுக் காரணம் இதன் பதிகத்து முதறபாகத்தாலும் அதன் உரைகளாலும விளஙகும், துறவுபூண்ட பின்பே இந்நூல் இவராற் செய்யப்பட்டது. பத்தினியைத் துதித்தலையும் சில தருமங்களை உலகத் தார்க்குத் தெரிவிக்க வேண்டுமென்பதையும் எண்ணி இவர் இந்நூலைச் செய்தனர், தமது மரபிலுள்ளாருடைய உயர்ச்சியைக் கூறுதல் போலவே ஏனைசசோழ பாண்டியர்களுடைய உயர்வுகளையும் சிறிதும் வேறுபாடினறி இவர் நன்ருகச சொல்லியிருத்தலால், இவரது மனத் தூய்மை நன்கு புலப்படுகின்றது

இந் நூலினிடையிடையே சொல்லப்படுபவர்களுடைய சரித்திர நிகழ்ச்சியாற்போந்த நறபயனையும், தீப்பயனையும ஆங்காங்கு உலகத் தாரை நோக்கிச் சொல்லிப்போதல் இவருக்கு இயல்பு. பின்னும் யாரேனும் மிக்க துன்பம் அனுபவித்ததாகச் சொல்லுங்கால் அத்துன்பத் திற்குக் காரணமாக முறபிறப்பில் அவர்கள் தீவினை செய்ததைக் குறித்து இவர்மனம் இரங்கிறறென்பதை ஆஙகாங்குள்ள பாடற்பகுதிகள் நன்கு புலப்படுத்தும. இவர் மலைநாட்டினராதலால் இந்நூலில் அந்நாடடுச் சொற்கள் பல அவ்வவ்விடத்து வந்துளளன.

இவர் இக்கதை நிகழ்ந்தகாலத்திருந்தவராதலாற் காவிரிப்பூம் பட்டினத்திலும் மதுரையிலும் நடந்த சரித்திரங்களை அறிந்தோர்வாய்க் கேட்டும் மலைநாட்டில நிகழ்நதவறறைக் கேட்டதோடு தாமே நேரிற் கண்டும் இந்நூலைச் செய்தனர். இங்ஙனம் செய்தாரென்பதை இந்நூற் பதிகமும், 24-ஆவது 30-ஆவது காதைகளும் விளக்கும்.

இக்கதையோடு தொடர்புள்ளதாகிய மணிமேகலையின் கதையையும் இந்நூலின் இறுதியிறசேர்த்துப் பாடக்கருதியிருந்த இவர், 'இக் கதையை மணிமேகலையென்ற பெயரால் ஒரு காப்பியமாக யான் செய்து முடித்தேன்' என்று மதுரைத்தமிழாசிரியர் கூலவாணிகன் சாத்தனர் சொல்லக்கேட்டு அவ்வாறு செய்யாது விடுத்தனர்.

சமயம்.—கால்கோட்காதையில், செங்குட்டுவன் இமயஞ்செல்லப் புறப்பட்டபொழுது, "நிலவுக்கதிர் முடிதீத நீளிருஞ் சென்னி, உலகு பொதி யுருவதீ துயர்ந்தோன் சேவடி, மறஞ்சேர் வஞ்சி மாலை யொடு புனைந், திறைஞ்சாச் சென்னி யிறைஞ்சி வலங்கொண்டு" [அடி, 54-7] எனவும், "ஆடக மாடதீ தறிதுயி லமர்ந்தோன், சேடங் கொண்டு சிலர் நின்றேதீததீ, தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள், வண்ணச் சேவடி மணிமுடி வைதீதலின், ஆங்கது வாங்கி யணிமணிப் புயதீதுதீ, தாங் கினனுகி" [அடி, 62-7] எனவும், செங்குட்டுவனை நோக்கி இமயத்தினின் றும் வந்த முனிவர்கள் கூறியதாக, "செஞ்சடை வானவ னருளினில் விளங்க, வஞ்சிதீ தோன்றிய வானவ கேளாய்" [அடி, 98-9] எனவும், வரந்தருகாதையில் மாடலன் கூறியதாக "ஆனே றூர்ந்தோ னருளி னிற்ருேன்றி, மாநிலம் விளக்கிய மன்னவ ஞதலின்" [அடி, 141-2] எனவும் இவரே கூறியிருதீதலாலும், இவர் அவனுடைய தம்பியாதலா லும் இவரது சமயம் சைவமென்று தோற்றுகின்றது. இவருக்கு அடிக ளென்று பெயர் வந்திருதீதலையும் பதிகதீதில், "குணவாயிற கோட் டதீது" என்பதிற் கோட்டமென்றதற்கு 'அருகன்கோயில்' என்று அடி யார்க்குநல்லார் பொருள் செய்திருதீதலையும், இந்நூலிற் சிலவிடதீதுச் சைனமதக் கொள்கையை இவர் மிகுதீதுக்கூறியிருதீதலையும் கொண்டு இவரது சமயம் சைனமென்று ஐயுறுதற்கும் இடம் உண்டு.

காலம்—"உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள், உரைசா லடிக ளருள மதுரைக், கூலவாணிகன் சாதீதன் கேட்டனன்" என இந்நூற் பதிகதீது இறுதியிலும், "இளங்கோ வேந்த னருளிக்கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாதீதன், மாவண் டமிழ்தீதிற மணிமேகலை துற, வாறைம் பாட்டினு ளறியவைதீ தனனென்" என மணிமேகலை யின் பதிகதீதிறுதியிலும் கூறியிருதீதலால், இளங்கோவடிகளும் சாதீத னரும் ஒருவர் முன்னிலையில் ஒருவர் முறையே சிலப்பதிகாரதீதையும் மணிமேகலையையும் அரங்கேற்றினரென்று போதருதலாலும் **தொல் காப்பியச் செய்யுளியலில்,** "ஞகாரை முதலா" (240) என்னும் சூதீ திரதீதின் விசேடவுரையில், **"சீதீதலைச் சாதீதனாற் செய்யப்பட்ட மணிமேகலை"** என்று **பேராசிரியர்** எழுதியிருதீதலால் மேற்கூறிய சாதீதனர் கடைச்சங்கப்புலவருளொருவராகிய **சீதீதலைச்சாதீதனு** ரென்று தெரிதலாலும், இளங்கோவடிகள் காலம் கடைச்சங்கப்புலவர் காலமென்று நிச்சயிக்கப் படுகிறது.

இளங்கோவடிகளுக்குதீ தமையனுகிய செங்குட்டுவன் பதீதினிக் கடவுளாகிய கண்ணகியார்க்குக் கோயில்சமைதீது விழாக்கொண்டாடிய காலதீது இலங்கையரசனுகிய **கயவாகு**வென்பவன் உடனிருந்தா னென்று வரந்தரு காதையாலும், அக்கயவாகுவும் இலங்கையிற் கண் ணகியார்க்குக் கோயில் கட்டுவிதீது விழாக் கொண்டாடினனென்று இந் நூற்பதிகதீதைச் சார்ந்த உரைபெறு கட்டுரையாலும் தெரிகின்றன.

இற்றைக்குச் சற்றேறக்குறைய 1800 வருடங்களுக்கு முன்பு கய

வாகு வென்னும் அரசனொருவன் இருந்தானென்று இலங்கைச் சரித்திர மாகிய மகாவம்சத்தாற் புலப்படுகின்றது. பின்னும் சற்றேறக்குறைய 800 வருடங்களுக்குமுன்பு கயவாகுவென்று மற்றோர் அரசனிருந்ததாக வும் அச்சரித்திரத்தால் தெரியவருகின்றது. ஆயினும், இந்நூலிற் கூறிய வேறு சில அரசர்களுடைய காலத்தை ஆராயும்போது இந்நூலாசிரியர் காலம் முதற்கயவாகுவின் காலமென்றே துணியப்படுகின்றது.

அரும்பதவுரையாசிரியர் வரலாறு

இவருடைய பெயர்முதலியவற்றுள் யாதொன்றும் தெரியவில்லை. இவ்வரும்பதவுரையையே பெருங்கருவியாகக்கொண்டு இந்நூலுக்கு அடியார்க்குநல்லார் உரைசெயதனர், அஃது இவ்விரண்டு உரைகளையும் வைத்து ஒப்புநோக்கின் நன்கு விளங்கும். ஆயினும் இந்நூலில் இவ் விரண்டு உரையாசிரியர்களுங்கொண்ட பாடம் சில சிலவிடத்து வேறு பட்டுள்ளன, அவ்வேறுபாடுகள் அவ்வவ்விடத்துள்ள உரைநடைகளால் நன்கு புலப்படும். அடியார்க்குநல்லாருரையிற் காணப்படாத பல மேற் கோள்களும் சில நூற்பெயர்களும் இவ்வுரையிற் காணப்படுகின்றன. வாக்கியங்களின் முதலிறுதிகளையேனும், மூதலைமட்டுமேனும், சொற்களை யேனும் எழுதிப் பொருளெழுதுவதும், ஒன்றையுமெழுதாது பொருளை மட்டும் எழுதிக்கொண்டு போவதும் இவ்வுரையாசிரியருடைய கொள்கை யாக இருக்கின்றன. இதிற் சங்கச் செய்யுட்களுடைய கருத்து முதலிய வற்றை இவர் ஆங்காங்கு விளக்கியிருப்பதுடன் சிலசிலவிடத்து மிகச் செவ்விதாகப் பதசாரமும் எழுதியிருக்கிறார். அடியார்க்குநல்லாருரை யாற் புலப்படாத சில விஷயங்கள் இவ்வரும்பதவுரையால் விளங்கு கின்றன. இவ்வுரையிற் பல விடங்களில் வாக்கியங்கள் பூரணமாக எழுதப்படவில்லை. சில பாகங்களுக்கு ஒருவகையாக உரையெழுதிப் பின்பு வேறு உரையெழுதும்பொழுது அதனைப் புலப்படுத்தற்குரிய உம்மை முதலியன கிடையா. இவ்வுரையிலுள்ள முடிவுகளும் பொருளும் இல்லையாயின், அடியார்க்கு நல்லாருடைய உரை கிடையாத பாகங் களுக்குப் பொருள் காண்பது அரிது.

அடியார்க்குநல்லார் வரலாறு

இவருடைய வருணம், சமயம், காலம் ஆகிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை; ஆனலும் நச்சினார்க்கினியரால் மறுக்கப் படுவன வற்றுட் சில இவருடைய கொள்கையாக இருத்தல்பற்றி இவரது காலம் நச்சினார்க்கினியருடைய காலத்திற்கு முந்தியதாக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது. இவர் மற்றையுரையாசிரியர்கள் போலன்றித் தாம் எடுத்துக்காட்டும் மேற்கோள்கள் இன்ன இன்ன நூல்களின்கண்

உள்ளனவென்று பெரும்பாலும் புலப்படுத்தியிருக்கிறார்.† சில சில விடத்துப் பதப்பிரயோசனமும் அலங்காரமும் மெய்ப்பாடுகளும் வேறு சில குறிப்புக்களும் இவரால் எழுதப்பட்டுள்ளன.

ஐந்திணைக்குமுரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருளாகிய இவற்றுள் ஒவ்வொன்றின்வகை பலவற்றிற்கும் இந்நூலிலிருந்தே உதாரணங்காட்டி விளக்கியிருக்கின்றனர் இந்நூல் செய்யப்படும்பொழுதிருந்த இசைத்தமிழ் நாடகத்தமிழ் நூல்கள் பலவும இவர்காலத்து இறந்துபோனமையால், இவர் அவ்விசை நாடகப்பகுதிகட்கு **இசை நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், மதிவாணர் நாடகத்தமிழ்நூல்** என்னும் ஐந்து நூல்களையுமே மேறகோளாகக் கொண்டனர். இந்நூலுள் இந்திரவிழவூரெடுத்த காதையில், ''சித்திரைத் திங்கள் சேர்ந்தென'' (அடி, 64) என்றும், கட்டுரை காதையில், ''ஆடித் திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று, வெள்ளிவாரத்து'' (அடி, 133-5) என்றும் சொல்லப்பட்டுள்ள காலவரையறையைக் கொண்டும், அவ்வவ்விடத்து நிகழ்ந்தவற்றைக் கொண்டும் ஊகித்துக் கோவலன் கண்ணகி இருவரும் இன்னகாலத்துக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து புறப்பட்டார்களென்றும், இன்ன இன்ன காலத்து இன்னது இன்னது செய்தார்களென்றும் எழுதிக்கொண்டு போகிறார் , பக்கம் 235, 267, 342, 372-3, 386. இதனால் இவருடைய கணித நூற்பயிற்சி விளங்குகின்றது

இவருடைய உரைநடை சிற்சில விடத்து எதுகை மோனை முதலியவற்றோடுகூடி இனியசுவை பயந்து செய்யுள்நடையாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே படிப்போர்க்கு அவ்வப் பகுதி ஆங்காங்குள்ள உரையாலேயே புலப்படவேண்டுமென்பது இவருடைய கருத்தாதலால் முன்னெழுதியவற்றையே பின்னுமெழுதுவர். இவர் கருத்து இன்னதாதலை இப்புத்தகத்தின் 379-ஆம் பக்கம் முதலியவற்றிற் காண்க. மூலத்தில் எவ்விடத்தேனும் திசைச்சொற்கள் வந்திருப்பின் அவற்றைத் தனித்தனியே எடுத்துக்காட்டி இன்னசொல் இன்ன நாட்டு வழக்கென்றும், முற்காலத்து வழங்கிய பழமொழிகளின் கருத்து எவ்விடத்தேனும் வந்திருக்குமாயின் அவற்றைத் தனித்தனியே எடுத்துக் காட்டி இன்னது இன்ன பழமொழி யென்றும் புலப்படுத்துவர். ஒருதலையாகப் பொருள்கொள்ளாது பலரும் தத்தமக்குத் தெரிந்தவாறே பொருள் கொள்ளக் கிடந்த போற்றியென்பதை இவர் இகரவீற்றுவியங்கோளாகக் கொண்டு போற்றுவாயாகவென்று பொருள் செய்திருக்கிறார் ; பக்கம் 345. நச்சினார்க்கினியரும் காட்டியென்பதை இகரவீற்று வியங்கோளாகக் கொண்டார் ; சீவக. 466. இவர், 'கானல்வரியில் விரியக்கூறுதும்' (பக். 88, 100) என்றும், 'முன்னர் ஆணி என்பதனுட் கூறினும்' (பக். 231)

† **பெருங்கதையை** ஆராய்ச்சி செய்வதற்குக் காரணமாயிருந்தது இதுவே.

என்றும எழுதியிருத்தலால், இவர் கானல்வரிக்கு உரை செய்திருந்தன ரென்பதும், 'அழற்படுகாதைக்கண்ணே விரித்துக் கூறுதும்' (பக். 115) என்றும் 'கட்டுரைகாதையுள் விரியக்கூறுவாம்' (பக். 235) என்றும் எழுதியிருத்தலால், அழறபடுகாதை முதலியவற்றிற்கும் உரை செய்ய வெண்ணியிருந்தனரென்பதும் வெளியாகின்றன

சிலப்பதிகாரத்தாலும் அதன் உரைகளாலும் தெரிந்த † அரசர் பெயர் முதலியன:—

(1) **அரசர்** —அநாகுலன், அவந்திநாட்டரசன், அழும்பில்வேள், இளஞ்செழியன், உதீதரகௌதீதன், உதீதரன், உதியஞ்சேரல், உருத்திரன், கங்கர் கட்டியர், கடுங்கோன், கயவாகு, கரிகால்வளவன், கருநாடர், கலிங்கர், கன்னர், கனகன், காய்சினவழுதி, கொங்கணர், கொங்கர், கொங்கிளங்கோசர், சிங்கன், சித்திரன், சிவேதன், சேரலாதன், தனுதீதரன், தொண்டியோர், பழையன், பெருநறகிள்ளி, பைரவன், மகதநாட்டரசன், மாகீர்தீதியாகிய நிலந்தருதிருவிற்பாண்டியன், மாந்தரஞ்சேரலிரும்பொறை, மாஞுவவேந்தர், முசுகுந்தன், யவனர், வச்சிரநாட்டரசன், வசு, விசயன், விசிதீதிரன், வெறறிவேறசெழியன்.

(2) **நாடுகள்** —அவந்தி, ஈழம, கலிங்கம, குடகம், குண்டூர்க் கூற்றம், குணகாரைநாடு, குமரிநாடு, குறுமபனைநாடு, குன்றநாடு, கொங்கு, கொல்லம், சோணாடு, தெங்கநாடு, தென்பாலி, நாகநாடு, பாண்டிநாடு, பின்பாலைநாடு, மகதநாடு, மதீதிமதேசம், மதுரைநாடு, முதீதூர்க்கூற்றம், முன்பாலைநாடு, வச்சிரநாடு

(3) **ஊர்கள்** —இடும்பில், இரவிபுரம், இருந்தையூர், இலங்காபுரம், உஞ்சை (உச்சைனி), உறந்தை, கச்சி, கபாடபுரம், கபிலபுரம், காப்பியக்குடி, குணவாயில், கொடுங்கோளூர், கொடும்பாளூர், கொற்கை, சிங்கபுரம், செந்தில், சேடி, சோநகர், தங்கால், தலைச்செங்கோடு, திருவநந்தபுரம், திருவரங்கம், தொண்டி, நெடுங்குளம், நேரிவாயில், பட்டினப்பாக்கம், பறையூர், புகார், மங்கலாபுரம (மங்களூர்), மதுரை, மருவூர்ப்பாக்கம், மாங்காடு, வஞ்சி, வயலூர், வாரணம் (வாரணசி), வியலூர்.

(4) **மண்டிலம்**:—கொங்கு.

(5) **மலைகள்** —அழகர்மலை, இமயம், ஏரகம், குடமலை, குமரிக்கோடு, கொல்லி, சிறுமலை, செங்குன்று, திருச்செங்கோடு, நீலகிரி, நெடுவேள் குன்றம், பெருமலை, பொதியில், மேரு, வெண்குன்று, வெள்ளியம் பெருமலை, வேங்கடம்

---

† இவற்றின் விவரணங்களையும் பக்க எண்களையும் அரும்பத முதலியவற்றின் அகராதியிற் கண்டுகொள்க.

(6) **ஆறுகள்** :—அயிரை, கங்கை, காவிரி, குமரி, சிலம்பாறு, சோணை, தொழுனை, பஃறுளி, பேராறு, பொருநை, வையை.

(7) **பொய்கைகள்** .—இட்டசித்தி, சூரியகுண்டம், சோமகுண்டம், பவகாரணி, புண்ணியசரவணம்

(8) **கோயில்கொண்ட தெய்வங்கள்** —அரன், அறுமுகன், இந்திரன், இயக்கி, இருந்தவளமுடையார், ஐயை, ஐராவதம், கண்ணகி, கயிலாயம், கற்பகம், காமன், சந்திரன், சாத்தன், சாதவாகனன், சினன், சூரியன், திருமால், பலதேவன், புத்தன், மங்கலாதேவி, வச்சிரம், வேல்.

(9) **புலவர்** .—அகத்தியனார், அறிவனார், அறிவுடையரனார், ஆதி வாயிலார், இருந்தையூர்க்கருங்கோழிமோசியார், இறையனார், கீரந்தையார், கீரங்கொற்றர், சாத்தனார், சிகண்டியார், சிறுபாண்டரங்கனார், செயிறறியனார், துவரைக்கோமான், தொல்காப்பியனார், நாரதனார், நிதியின்கிழவன், பரதசேனபதியார், பாண்டியன் மதிவாணனார், மதுரைக்கூலவாணிகன் சாத்தனார், மதுரையாசிரியன் மாறனார், முரஞ்சியூர் முடிநாகராயர், யாமளேந்திரர், வெள்ளூர்க் காப்பியனார்.

(10) **உரையாசிரியர்** .—இளம்பூரணர், நக்கீரர்.

(11) **உரைகளிற் கண்ட நூல்கள்** —

அகத்தியம், அகநானூறு, அணியியல், ஆசிரியமாலை, இசை நுணுக்கம், இந்திர காளியம், உதயணன் கதை, ஓவிய நூல், கலி, கலிங்கத்துப்பரணி, கலித்தொகை, களரியாவிரை, கனாநூல், குருகு, குறுந்தொகை, கூத்தநூல், சயந்தம், சிறுபாணாற்றுப்படை, சீவக சிந்தாமணி, சூளாமணி, செயிறறியம், சொல்லகத்தியம், தண்டியலங்காரம், தாளவகையோத்து, திருக்குறள், திருச்சிறறம்பலக்கோவையார், திருமுருகாற்றுப்படை, திவாகரம், தொல்காப்பியம், நற்றிணை, நாலடியார், நான்மணிக்கடிகை, நூல், நெடுநல்வாடை, பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, பதினாறு படலம், பரத சேனபதீயம், பரதம், பரிபாடல், பழமொழி, பாசண்டம், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, பெருங்குருகு, பெருங்குறிஞ்சி, பெருநாரை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மணிமேகலை, மதிவாணர் நாடகத் தமிழ்நூல், மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், முதுதொள்ளாயிரம், மூறுவல், வளையாபதி, வெண்டாளி.

சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம்

[1 —புகார்க்காண்டம்]

சோழவளநாட்டிற் காவிரிநதி கடலொடு கலக்கும் சங்கமுக மென்னும் துறையையுடையதும் சோழர்களுடைய பழைய இராசதானி யாக உள்ளதும் பெரியோர்களாற் சிறப்பித்துப் பாராட்டிப் புகழப்படு வதுமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில், இப்பர் கவிப்பர் பெருங்குடிய ரென்னும் மூவகை வணிகருட் பெருங்குடியர் குலத்தில் உதித்தோனுகிய மாசாத்துவானென்பான், தன் மகன் கோவலனுக்கு அந்நகரில் அம்மர பில உதித்த மாநாய்கன் மகள் கண்ணகியை மிக்க சிறப்புடன் மணமபுரி விக்க, கோவலன் கண்ணகிபால் மிகவும அன்புவைத்து நலம்பாராட்டி இன்புறறுத் தருக்கி மகிழ்ந்து நடக்கும நாட்களில் ஒருநாள், அக் கோவலன் தாயாகிய பெருமனைக்கிழத்தி யென்பவள், கோவலனும் கண்ணகியும் இல்வாழ்க்கையைச் செவ்விதாக நடத்திக் கைதேர்ந்து உயர்ச்சி பெறறு விளங்குதலைக் காணவேண்டி வேருெரு மாளிகையில் இல்லறம நடத்துவதற்கு வேண்டும் பொருள்களை நிரபபி வேலை செய்ப வர்களையும நியோகித்து அவ்விருவரையும் அதிலிருத்த, அவர்கள் மனவொருமையோடு அதிலிருநது அறவோர்க்களித்தல், அநதண ரோம்பல், துறவோர்க்கெதிர்தல் முதலியவறறைச் செய்து இல்லறத்தை ஒழுங்காக நடத்திவருவாராயினர்

இப்படியிருக்கையில், கோவலன் மிக்க அழகுடையவளும் ஆடல் பாடல் முதலியவறறில் மிக்க தேர்ச்சி பெறறவளுமாகிய மாதவி யென்னும் நாடகக் கணிகையை விரும்பித் தன்பாலுள்ள பலவகைப் பொருள்களையும் நாள்தோறும் கொடுத்து அவளோடும் இடைவிடாது மருவி மகிழ்வானுயினன். கண்ணகி பிரிவாற்றது வருந்தி அவ்வருத் ததைச் சறறும் வெளிப்படுத்தாமல் அவன்பாற் சிறிதேனும் வெறுப் பின்றி இல்லறவொழுக்கத்தை வழுவாது நடத்திவந்தாள், அக்காலத்து வழக்கப்படி அந்நகரத்தில் இநதிரனுக்குத் திருவிழா நடத்தப்பட்டது. அதன் முடிவில் அந்நகரத்தார் தம் தம பரிவாரங்களோடு கடலாடு தற்குச் சென்ருர்கள், கோவலனும் மாதவியுடன் கடற்கரையையடைந்து அவள் கையிலிருந்த வீணையை வாங்கிப் பலவகைப்பட்ட வரிப்பாட்டுக் களைப் பாடிக்கொண்டு அவ்வீணையை வாசித்தான், அவன் பாடிய பாட் டுக்கள் பலவகைப்பட்ட அகப்பொருட் சுவையைத் தழுவியிருந்தமை யின் மாதவி, 'இவன் வேறுமகளிர்பால் விருப்புடையன்' எண்றெண்ணிப் புலந்து அவன் கையிலுள்ள வீணையை வாங்கித் தான் வேறு குறிப்பில் லாதவளாக இருப்பினும் அவன் வேறு குறிப்புள்ளவனுகத் தனக்குத் தோன்றினமையின், தானும் வேறு குறிப்புடையாள் போலவே அகப்

பொருட்சுவையைத் தழுவிய பலவகைப்பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடிக் கொண்டு அவ்வீணையை வாசித்தாள், அதனைக் கேட்ட கோவலன், வேறொருவர் மேல் மனம் வைத்து அவள் பாடினாளென்றெண்ணி ஊழ் வினையின் முயற்சியால் வெறுப்புற்று அவளோடு அளவளாவாமல் தன் வீட்டை யடைந்து, தேவந்தியென்னும் பார்ப்பனத் தோழியோடு சல்லாபஞ் செய்துகொண்டிருந்த கண்ணகியைக்கண்டு, அவளுடன் பள்ளி யறையிற் புகுந்து அவள்மேனி வாட்டத்தையும் மனவருத்தத்தையும் தெரிந்து, 'பொய்யை மெய்யாகக் காடியொழுகும் பரத்தையோடு மருவி ஒழுகிய காரணத்தால் முன்னேர் தேடிவைத்த பொருட்குவியல் களையெல்லாம் தொலைத்து வறுமையடைந்தேன். அஃது எனக்கு மிக்க நாணத்தைத் தருகின்றது' என்று சொன்னன் அதனைக்கேட்ட கண்ணகி மாதவிக்குக் கொடுத்தறகுப் பொருளில்லாமையால் அவன் தளர்ந்து சொன்னனென்று கருதி, 'அடியேனிடத்தில் இரண்டு சிலம புகள் உள்ளன, அவற்றைக் கைக்கொண்டருள்க' என்று சொன்னள், அவன், 'மதுரையையடைந்து இச்சிலம்பை வாணிக முதலாகக்கொண்டு வியாபாரஞ்செய்து மிக்க பொருள் தேடுதற்கெண்ணினேன், நீயும உடன் வரவேண்டும்' என்றன், அவளும் உடன்பட, கோவலன் அன் றிரவின் கடையாமத்திற் கண்ணகியை அழைத்துக்கொண்டு ஒருவரும அறியாதபடி புறப்பட்டுக் காவிரியின் வடகரை வழியாக மேறகே சென்று ஒரு பூஞ்சோலையையடைந்து அதில் தவஞ்செய்துகொண்டிருந்த ஆருகத சமயத் தவமுதியோளாகிய கவுந்தியைக்கண்டு வணங்கி, 'மதுரையி லுள்ள பெரியோர்கள்பால் அறநூற்கேள்விகளைக் கேட்டறகும அறி வினைத் தொழுதறகுமாக உடன் வருவேன்' என்று சொலலிய அவ ளோடும் வழிக்கொண்டு அரங்கமடைந்து அங்குவந்த சாரணர்களைத் தரிசித்து ஓடமேறிக் காவிரியின் தென்கரை சேர்ந்து ஒரு பொழிலில் இருந்தான், அப்பொழுது அங்கு வநது கண்ணகியையும கோவலனையும் அவமதித்துப் பேசிய ஒரு பரத்தையையும் ஒரு தூர்த்தனையும கவுநதி நரிவடிவங்கொள்ளும்படி சபித்து, அவர்கள் அவ்வாறுனதையறிந்து இரங்கிய கோவலன் கண்ணகியிவர்கள் வேண்டுகோளால் அவர்களுக்கு அவ்வடிவு ஒரு வருடத்தில் நீங்கும்படி சாபவிடைசெய்தாள் பின்பு மூவரும் உறையூரை யடைந்தார்கள்

[2 —மதுரைக்காண்டம்]

அடைந்தவர்கள் அன்று அந்நகரில் தங்கி மறுநாட்காலையிற புறப் பட்டுச் சிறிதுதூரஞ்சென்று ஓரிடத்திருந்து இளைப்பாறி அங்கு வந்த ஓரந்தணனுல் வழிதெரிந்துகொண்டு அப்பாறசென்றார்கள். செல்லும் பொழுது ஒருநாட்காலையிற் கோவலன் கவுந்தியையும் கண்ணகியையும் ஓரிடத்தில் வைத்துவிட்டுக் காலைக் கடன் கழித்தற்பொருட்டு ஒரு பொய்கையையடைந்து நிற்கையில், தன் பிரிவாற்றாது வருந்திய மாதவி யாலனுப்பப்பட்டு அவளோலையுடன் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும்

அங்கு வந்த கௌசிகனென்னும் அந்தணனைக்கண்டு தன்பிரிவால் தன் தாய்தந்தை முதலியோரும் மாதவியும் படுகிற வருத்தங்களை அவனுல் தெரிந்து மிக்க வருத்தமுற்றுத் தான் புறப்பட்டதற்குக் காரணங்களையும் தன் வணக்கத்தையும் தன்னுடைய தாய்தந்தைக்குச் சொல்லிப் பாது காத்து வரும்படி அவனையனுப்பிவிட்டுக் கவுந்தியையும் கண்ணகியையு மடைந்து அவர்களுடன புறப்பட்டு இடையிற் சந்தித்த பாணர்களுடன் அளவளாவி அவர்களால் வழியின் அளவு தெரிந்துகொண்டுபோய் வையையாற்றை யடைந்து அதனைத் தொழுது புணையேறி அக்கரை சென்று மதுரையின் மதிற்புறத்ததாகிய முனிவர் இருக்கையில் தங்கினன்

மறறைநாட்காலையிலெழுந்து கவுந்தியை வணங்கித் தங்களுக்கு முன்பு நேர்ந்த துன்பங்களைச் சொல்லி வருந்திப் பின்பு அவள் தேற்றத் தேறிக் கண்ணகியை அவள்பால் வைத்துவிட்டுத் தான் வாணிகஞ் செய் தற்குரிய இடமறிதறபொருட்டு மதுராநகரத்தின் உள்ளே சென்று அதன் வளங்களை யெல்லாங கண்டு மீண்டு கவுந்தியையடைந்து அந்நகர்ச் சிறப்பு முதலியவற்றைச் சொல்லி அப்பால் அங்கே வந்த தன் நட்பாள னுகிய மாடலனென்னும் அந்தணனேடு சலலாபஞுசெய்து கொண்டிருந் தான் அப்பொழுது கவுந்தி அங்குவந்த இடைச்சியர் தலைவியாகிய மாதரியைக் கண்டு அவளது நல்லொழுக்கத்தை நோக்கி, 'இவளிடத்திற் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுக்கலாம' என்று நிச்சயித்து அவளையழைத்துக் கண்ணகியின கறபுமேமபாட்டையும் அவளது மென்மைத்தன்மையையும் உயர்ந்தோரகளாற கொடுக்கப்படும அடைக் கலப்பொருளைப் பாதுகாத்தோர் அடையும பயனையும அவட்கு விளங்கச் சொல்லிக் கண்ணகியை அவளிடம் ஒப்பிக்க, அவள் மகிழ்ச்சியுடன் ஏறறு விடைபெற்றுக் கண்ணகியைக் கோவலனுடன் அழைத்துக்கொண்டு ஆயர் பாடியிலிருககும் நன்வீடடையடைநது அவ்விருவரையும் புதிய மனை ஒனறில் அடைவித்து மிக உபசரித்துத் தன்மகள் ஐயை என்பவளைக் கண்ணகிக்குத் துணையாக வைத்துச் சமைத்தறகுரிய பொருள்கள் பல வறறையும கொணர்ந்து கொடுப்பக் கண்ணகி அவறறைச் செவ்விதாகச் சமைத்து முறைப்படி உண்பிக்கக் கோவலன இனிதாகவுண்டு கண்ண கியை அருகழைத்து அஃதித்து, 'நீ இநதப்பாலைவழியில் வந்ததை எண்ணி நம் தாய்தந்தையர் என்ன துனபமுறறிருக்களோ! மிக்க இன் பத்தை அனுபவித்து வந்த நாம இந்தக் கொடிய துன்பத்தையனுப விதித்தது கனவோ? நனவாயின், இதறகுக் காரணமாக முன்புசெய்த தீவினை யாதோ? யான் ஒன்றுமறிநதிலேன், வீணரோடும் விட ரோடுங்கூடிப் பிறரைப் புறங்கூறுங் கூட்டத்திற்புகுந்து நல்லொழுக் கத்தைத் துறநத மகாபாவியாகிய எனக்கு இனித்தீக்கதியன்றி நற்கதியுண்டாமோ? இருமுதுகுரவர்க்கும ஏவல்செய்தலையொழிந் தேன்; உனக்கும் துன்பஞ்செய்தேன், இக்கூடாவொழுக்கம் தீ தென்று சிறிது மெண்ணிலேன்' என்று பலவாறிரங்கி, 'சுற்றமுதலிய

வற்றை நீங்கி நாணமுதலியவற்றையும் கற்பையும் பெருந்துணை யாகக் கொண்டு என்னோடு வந்து எனது தனிமையைத்தீர்த்த பொன்னே, கொடியே, பூனபூங்கோதாய், நாணின்பாவாய், நீணில விளக்கே, கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வீ! இனி, உன்னுடைய சிலம்புகளுள் ஒன்றைக் கொண்டுபோய் விரைவில் விற்றுவருவேன், வருமளவும் தனிமையால் வருந்துதலே யொழிவாயாக' என்று சொல்லி, ஒரு சிலம்பை வாங்கிக்கொண்டு அவள் தனியே இருத்தலேக்கண்டு மனம் வெதும்புதலாலே பெருகிய தன் கண்ணீரை அவள் கண்டால் வருந்துவா ளென்று மறைத்தவனுகி அவ்விடத்தை நீங்கிப் பிரிதற்குத் துணி வில்லாத மனமுடையவனுகிச் சென்று எதிர்ப்பட்ட துந்நிமித்தங்களே அறியாமற் கடைத்தெருவிற் புகுந்து எதிரே நூறு பொறகொல்லர் பின்னேவர முன்வந்த ஒரு பொற்கொல்லனேக்கண்டு 'இவன் அரசனுற் பெயர் பெற்றேன்' எனறெண்ணி அவனருகிற்சென்று, 'அரசன்றேவி அணிதற்குத் தகுதியான சிலம்பினே விலே மதிக்கும் வன்மை யுடையாயோ?' என்று வினவி, அவன் மிக்க பணிவுடன் தான் வல்லனுதலேக்குறிப்பிக்கக் கோவலன் தான் கொணர்ந்த சிலம்பைக் காட்டினன். அவன் பார்த்து, 'இதனே அரசனுக்கு யான் தெரிவித்து வருமளவும என்வீட்டிறகு அயலதாகிய இவ்விடத்தே நீர் இரும்' என்று ஓரிடத்தைக் காட்டிச்செல்ல, கோவலன் அவ்விடத்தேயிருந்தான்.

சென்ற பொற்கொல்லன் முன்பு அரசன் மனைவியின் சிலம்புகளுள் ஒன்றை வஞ்சித்துத் திருடிக்கொண்டவனுதலால், 'யான் முன்பு வஞ்சித் துக் கவர்ந்துகொண்ட சிலம்பு என்னிடத்தேயுள்ளதென்று இராசாவுக்கு வெளிப்படுவதற்கு முன்னமே அதனே ஒத்த சிலம்பைக்கொணர்ந்த இப் புதியவனுல் என்மீதுண்டாகும் ஐயத்தைப் போக்கலாம்' என்று தன் னுள்ளே நிச்சயித்து, தன் மனைவியின் ஊடலேத் தீரத்தற் பொருட்டுத் தன் கோயிலே நீங்கி அவள் கோயிலே நோக்கிக் காம பரவசனுய்ச் செல்லும் பாண்டியன் நெடுஞ்செழியனேக்கண்டு வணங்கித் துதித்து, 'கன்னக்கோல் முதலியன இல்லாமலே கோயிறகண் இருந்த சிலம்பைத் திருடியவன் அடியேனுடைய சிறிய குடிலின் புறத்தே அச்சிலம்போடு வந்திருக்கிருன்' என்று சொல்லப் பாண்டியன் உடனே காவலாளர்களே யழைத்து, 'என் மனைவியின் சிலம்பு இவன் கூறிய கள்வன் கையிடத்த தாயிருப்பின், அவனேக் கொல்லுதற்கு அச்சிலமபோடு கொண்டுவருக' என்று சொல்லக்கருதியவன், வினை பலிக்குங் காலமாதலால் மயங்கி, 'அவனேக்கொன்று அச்சிலம்பைக் கொண்டுவாரும்' என்று கட்டளை யிட்டான். பொற்கொல்லன் தன்னெண்ணம் பலித்ததென்று மகிழ்ந்து அக்காவலாளருடன் சென்று கோவலனேயடைந்து அவனே நோக்கி, 'இவர்கள் அரசன் கட்டளையாற் சிலம்பு காணவந்தவர்கள்' என்று சொல்லிக் கோவலனுடைய முகக்குறி முதலியவற்றைக்கண்டு அவன் கள்வனல்லனென்று சொல்லும் காவலாளர்களே இகழ்ந்துரைத்து அவனைக் கள்வனென்று வற்புறுத்துதற்குக் களவு நூல்களிலுள்ள ஏதுக்

களை யெல்லாம் அவர்களுக்கு எடுத்துக் காட்டினன்; அப்பொழுது அவர் களுள்ளே கொலையஞ்சாஞெருவன் விரைந்து சென்று அறிவின்மையி ஞற் கோவலனைத் தன் கைவாளால் வெட்டி வீழ்த்திஞன்.

இப்பால் கண்ணகியிருந்த இடைச்சேரியில் பலவகையான உற் பாதங்கள் உண்டாயின, அதுகண்ட மாதரி முதலியோரால் உற்பாத சாந்தியாகத் திருமாலுக்குறித்துக் குரவைக்கூத்து ஆடப்பட்டது, அதன் முடிவில் மாதரி நீராடுதற்பொருட்டு வையையாற்றிறகுச் சென்ருள்; அப்பொழுது, சிலம்பு திருடியவனென்று துணிந்து கோவலனை அரச னேவலாளர் கொன்ற செய்தியை மதுரையிலிருந்து வந்த ஒருத்தி சொல்லக்கேட்டுக் கண்ணகி பதைபதைத்து மூர்ச்சித்துப் பலவாறு புலம்பித் தானும் அவனுடன் இறத்தறகுத் துணிந்து இடைச்சியர் மத்தியில்நின்று சூரியனை நோக்கி, 'கதிர்ச்செல்வனே! நீயறிய என் கணவன் கள்வனே?' என்ருள், அவன், 'நின் கணவன் கள்வனல்லன்; அவனைக் கள்வனென்ற இவ்வூரை விரைவில் தீயுண்ணும்' என்று அசரீரி யாகக் கூறினன். அதனைக்கேட்ட கண்ணகி மிகுந்த கோபத்தோடு தன்னிடமிருந்த மற்ருெரு சிலம்புடனே புறப்பட்டுக் கண்டார் நடுங்கும் படி வீதிவழியே சென்று ஆங்குள்ள மகளிரை நோக்கிப் பலவாறு புலம்பி, 'என்கணவனை முன்போலக் கண்டு அவன் சொல்லும் நல்லுரை யைக் கேட்பேன், அங்ஙனம் கேளேனையின், என்னை இகழுமின்' என்று சபதஞ் செய்துகொண்டு சென்று வெட்டுண்டுகிடந்த கோவலனைச் சிலர் காட்டக்கண்டு அளவில்லாத துயரத்தை அடைந்து அவனை முன்னிலைப் படுத்திப் பலவிதமாகப் பிரலாபித்து அவனுடம்பைத் தழுவிக்கொள்ள அவ்வளவில் அவன் உயிர்பெற்றெழுந்து நின்று மதிபோன்றமுகம் வாடியதே யென்றுசொல்லிக் கையாலே அவள் கண்ணீரை மாற்ற, அவள் அவனுடைய பாதங்களை இரண்டு கைகளாலும் பூண்டு பணிந்தாள், உடனே அவன், 'நீ இங்கிருக்க' என்றுசொல்லி அவ்வுடம்பை யொழித்து விட்டுச் சுவர்க்கம் புகுதற்குத் தேவர்களோடுகூடிச் சென்ருன்.

இங்கே இப்படியிருக்கப் பாண்டியன் நெடுஞ்செழியன் மனைவி, தீக்கனவுக்கள் பலவற்றைக்கண்டு அவறறைத் தன்கணவனுடு சொல்லிக் கொண்டிருந்தாள், அப்பொழுது, கண்ணகி கோபந்தணியாதவளாகி அரண்மனை வாயிலை அடைந்து வாயிலோனுல் தன்வரவை அரசனுக்கு அறிவித்து அவன் அனுமதிப்படி அவன் முன்சென்று, அவன் கேட்பத் தன் ஊர் பேர் முதலியவறறையும், ஆராயாது கோவலனைக் கொல்வித்த கொடுங்கோன்மையையும் மிக்க துணிவாகச் சொல்லிக் கோவலன் கள்வனலலனென்று தெளிவித்தற் பொருட்டு, தன் சிலம்பினுள்ளே யுள்ள பரல்மாணிக்கமென்ருள்; அவன், தன் தேவி சிலம்பின் பரல் முதீதென்று சொல்லி, கொல்லப்பட்ட கோவலனிடமிருந்து கிடைதீத சிலம்பை வருவிதீது வைப்ப, கண்ணகி அதனை யுடைதீதாள், உடைக்கவே அதனினின்றும் மாணிக்கப்பரல் தெறிதீதது, அதுகண்டு அரசன் நடுநடுங்கி, 'இழிந்த பொற்கொல்லன் சொல்லைக்கேட்ட கொடுங்

கோன்மையையுடைய நானே அரசன்! நானே அரசன்!! ஐயோ! மிக்க புகழ்பெற்ற இந்த அருமந்தகுலம் என்னுற் பழியடைந்ததே! என் ஆயுள் இன்றே அழியக்கடவது' என்று சொல்லி மிகவும் துக்கித்து மயங்கித் தானிருந்த ஆசனத்தில் வீழ்ந்து இறந்தான், அதனையறியாத அவன் மனைவி பாதுகாத்தருள வேண்டுமென்று கண்ணகியின் பாதத்தில் வீழ்ந்தாள்; வீழவே கண்ணகி, 'நான் பத்தினியாயிருத்தல் உண்மையாயின், இவ்வூரை அழித்து விடுவேன் பார்' என்று சபதஞ் செய்து தனது இடக் கொங்கையை வலக்கையால் திருகி யெடுத்து அதனை அந்நகரத்தின் மீது எறிந்தாள்.

எறியவே அக்கினிதேவன் பார்ப்பனக் கோலத்தோடுவந்து, 'மகா பத்தினி! உனக்குப் பிழைசெய்த நாளில் இவ்வூரை எரித்துவிடும்படி முன்னமே ஒரேவல் பெற்றுளேன், இப்பொழுது யாரை யழித்தல் வேண்டும?' என்று கேடப, அவள், "பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர், மூதாதோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத், தீதிறந்தார் பக்கமே சேர்க" என்று சொல்ல, அப்பொழுதே அந்நகரில் அவள் சொல்லியவண்ணம தீப்பற்றிக்கொண்டது. உடனே அந்நகரைக் காக்கும் வருணப் பூதங்கள் நான்கும் பெயர்ந்து சென்றன, அந்நகரத்துள்ள இடங்கள் பலவும எரியத்தொடங்கவே அவ்வெம்மையை ஆற்றுத வளாகி மதுரையின் அதிதேவதை கண்ணகிபால் வந்து நின்று அவளை நோக்கி "யான் இந்நகரின் தெய்வம், உனக்குச சிலவற்றைச் சொல்ல வந்தேன், அவறறை நீ கேட்பாயாக, இந்நகரத்து முன்பிருந்த பாண்டியர்களுள் ஒருவரேனும் சிறிதும் கொடுங்கோன்மை யுடையாரல்லர், இந்நெடுஞ்செழியனும அத்தன்மையனே, ஆயினும் இது வந்த வரலாற்றைச் சொல்லுவேன் முன்பு கலிங்கநாட்டிலுள்ள சிங்கபுரத்தரசனுகிய வசுவென்பவனும் கபிலபுரத்தரசனுகிய குமரனென்பவனும் தம் மூட்பகைகொண்டு ஒருவரையொருவர் வெல்லக் கருதியிருந்தார், அப்பொழுது சிங்கபுரத்துக் கடைவீதியிறசென்று இயலபாகப்பண்டம் விற்றுக் கொண்டிருந்த சங்கமனென்னும் வணிகனை அந்நகரத்தரசனிடம் தொழில் செய்துகொண்டிருக்கும் பரதனெனபவன் இவன் பகைவனுடைய ஒற்றனென்று பிடித்து அரசனுக்குக் காட்டிக்கொலை செய்துவிட்டான், அப்பொழுது அநதச் சங்கமன் மனைவியாகிய நீலியென்பவள் மிகுந்த துயரமுற்றுப் பதினன்குநாள் பலவிடத்தும் அலைந்து பின்பு ஒரு மலையின்மேல் ஏறிக் கணவனைச் சேர்தற்பொருட்டுத் தன்னுடைய உயிரை விடுதறகு நினைத்தவள், 'எமக்குத் துன்பஞ் செய்தோர் மறு பிறப்பில் இத்துன்பத்தையே அடைவார்களாக' என்று சாபமிடடிறந்தாள், அப்பரதன் இக்கோவலனுகப் பிறந்தான், ஆதலால் நீங்கள் இத்துன்பமடைந்தீர்கள்! நீ இற்றைக்குப் பதினன்காவது தினத்தின் பகல் சென்றபின்பு உன்னுடைய கணவனைக்கண்டு சேர்வை" என்று சொல்லி அவளைத் தேற்றிச்செல்ல, கண்ணகி மதுரையை நீங்கி வையைக் கரைவழியே மேற்றிசை நோக்கிச் சென்று மலைநாடடைந்து அதிலுள்ள

திருச்செங்குன்றென்னும் மலைமேலேறி ஒரு வேங்கை மரத்து நிழலினின்று பதினான்காவது தினத்தின் பகல் சென்ற பின்பு அங்கே தெய்வ வடிவத்தோடு வந்த கோவலனைக் கண்டு களித்து அவனுடன் விமானத்தின்மேல் ஏறித் தேவர்கள் போற்றுமபடி சுவர்க்கமடைந்தாள்.

[3 —வஞ்சிக்காண்டம்]

கண்ணகி, இவ்வாறு கணவனோடு விமானமேறிச் சுவர்க்கம் போகக் கண்ட வேட்டுவமகளிரும் வேடர்களும மிகுந்த ஆச்சரியமடைந்து தமது குறிச்சியிற் கண்ணகி பொருட்டு ஒரு குரவைக்கூத்து நடப்பித்தார்கள்; பின் அவ்வேடர்கள், அந்த அதிசயத்தைத் தம நாட்டு அரசனுகிய செங்குட்டுவனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றெண்ணிப் பலவகையான காணிக்கைப் பொருள்களையும் கைக்கொண்டு சென்று, மலைவளங் காண்டறகுத் தனது தேவி வேண்மாளோடும் தம்பி இளங்கோவடிகளோடும் புறப்பட்டு நால்வகைத்தானையும சூழவந்து பேராற்றங்கரையிலுள்ள மணறகுவியலில் இருக்கும் சேரன்செங்குட்டுவனைக் கண்டு வணங்கிச சொன்னார்கள். அதுகேட்டு அவ்வரசன் அதிசயிக்க, அங்கு வந்திருந்த மதுரைத் தமிழாசிரியராகிய சாத்தனார், மதுரையிற் கோவலன் கொலையுண்டதையும், அஙகே கண்ணகியால் நடந்தவற்றையும், மதுராநகர்தெய்வம் முன் வந்து சொல்லியதையும் விரித்துச் சொன்னர், செங்குடடுவன், பாண்டியன் இறநததற்கு இரங்கித் தன் தேவியின் வேண்டுகோளால் கண்ணகியாகிய பத்தினிக்கடவுளைப் பிரதிஷ்டிதது வழிபடுவதற்கு எண்ணி, அவளுருவஞ்செய்தறகுச் சிலை கொணர்தற் பொருட்டு மந்திரிகளோடும் ஆலோசித்து, முன்னம் இமய மலையினின்றும வந்த முனிவர்கள் 'ஆரியமன்னராகிய கனகனும் விசயனும் தமிழ்நாட்டரசரை யிகழ்ந்தார்' என்று சொல்லக் கேட்டவனுதலால், அவ்வரசர்களை வென்று அவர்கள் முடியில் அச்சிலையை யேற்றிக் கொண்டு வருவேனென்று சபதம்செய்து, உடனே சேனைகளுடன் புறப்பட்டு நீலகிரியையடைந்து அங்குததங்கி இமயமலையினின்றும் வந்த முனிவர்கள் கூறிய ஆசியைப்பெற்று, அப்பாற்சென்று கங்கா நதியையடைந்து தனது நட்பரசராகிய கன்னர்கள் கொணர்ந்து வைத்திருந்த ஓடமேறி அக்கரை சென்று அவ்விடத்தே தங்கி அங்கே போர் செய்தறகு வந்த கனகவிசயரையும் அவருக்குத் துணையாக வந்த உதீதரன் முதலிய அரசரையும் வென்று தாபதவேடமுதலியவற்றைக் கொண்டோடிய அவ்வரசர்களைப் பிடித்து அகப்படுத்திக்கொண்டு தன் மந்திரியாகிய வில்லவன் கோதையையும் சேனையையும் அனுப்பி இமய மலையினின்றும் சிலை வருவித்து அதனைக் கனகவிசயர் முடியிலேற்றி விதிப்படி கங்கையில் நீர்ப்படை செய்து அதன் தென்கரை சேர்ந்து சேனையோடும் தங்கி அங்கே கங்கையாடிவந்த மாடலனுற் கோவலன் வரலாறு முதலியவற்றையும் நெடுஞ்செழியனுக்குப்பின்பு இளங்கோ

வேந்தன் அரசாட்சி செய்துவருதலையுமறிந்து அம்மாடலனுக்குத் தன் நிறையாகிய ஐம்பதுதுலாம பொன்தானஞ்செய்து தன்னுல் வெல்லப் பட்ட கனகவிசயரைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டிவரும்படி நீலன் முதலிய ஒற்றர்களை யனுப்பிவிட்டுச் சேனையுடன் புறப்பட்டு இடையிலுள்ள வளங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு வஞ்சிநகர மடைந்து ஆங்குள்ளவர்களோடும் அளவளாவி மகிழ்வுற்றிருந்தான்.

அப்படியிருக்கையில், ஒருநாள், முன்பு அனுப்பப்பட்ட நீலன் முத லிய ஒற்றர்கள் வந்து, 'தோல்வியடைந்து மாறுவேடம் பூண்டு சென்ற கனகவிசயர் முதலியோரைப் பிடித்துக்கொண்டு வந்ததைச் சோழனும் பாண்டியனும் இகழ்ந்துசொன்னார்கள்' என்று சொல்லக் கேட்டு மிகுந்த கோபங்கொண்டு, அங்கு வந்திருந்த மாடலன், 'நீ கோபந்தணிக; இளமை யாக்கை செல்வ முதலியவை நிலையா, நல்ல பததீதையடைவிக் கும் யாகத்தை இனிச் செய்தல் வேண்டும்' என்று பல ஏதுக்கள் முக மாக எடுத்துச் சொல்லக் கேட்டு அக்கோபந் தணிந்து, அம்மாடலன் சொல்லிய வண்ணம் யாகதீதிற்குரியவற்றை அமைக்கும்படி சிலரை யனுப்பி, ஆரியவரசர் முதலியோரைச் சிறையினின்றும் நீக்கி அவர் களுக்கு வேண்டியவற்றை உபகரிக்கும்படி வில்லவன் கோதைக்குச் சொல்லி ஆன்ரேர் பலருடன் சென்று சிறந்த கம்மியர்களாற் செய்யப் பட்ட ஓராலயதீதில் இமயச் சிலையாலியற்றப் பட்டுள்ள வடிவதீதிற் பதீதினிக்கடவுளாகிய கண்ணகியைப் பிரதிஷ்டை பண்ணி விதிப்படி நிதீதியபூசை முதலியவற்றை நடதீதும்படி கட்டளையிட்டு அங்கே யிருந்தான்.

அங்ஙனம் இருக்கும்பொழுது முன்னம், கோவலன் கொலையுண் டது முதலியவற்றை மாடலனுற் கேட்ட தேவந்தியும் கண்ணகியின் செவிலிதீதாயும் அவளடிதீதோழியும் காவிரிப்பூம் பட்டினதீதினின்று நீங்கி மதுரையையடைந்து அங்கே கண்ணகியைக் காணுமல் மாதரிமகள் ஐயையைக் கண்டு அவளையழைதீதுக்கொண்டு வையைக்கரைவழியே சென்று மலைநாடு புகுந்து கண்ணகி கோயிலை யடைந்து அங்கிருந்த செங்குட்டுவனைக் கண்டு தங்களை இன்னுரென்று அறிவிதீதுக் கண்ணகி யின் பிரிவாற்றுமையால் வருந்திப் புலம்பினார்கள்; அப்பொழுது கண்ணகி தெய்வவடிவதீதோடு வெளிப்பட்டுச் செங்குட்டுவனுக்குக் காட்சி கொடுதீது வாழ்தீதினாள்.

பின்பு மாதவிமகளாகிய மணிமேகலையின் துறவைதீ தேவந்தி சொல்லக் கேட்ட செங்குட்டுவன், அவள்மேல் ஆவேசிதீத சாதீத னென்னும் தெய்வதீதின் கட்டளையால் மாடலன் தன்கையிலுள்ள கமண் டல நீரை அங்கு வந்திருந்த மூன்று இளம் பெண்கள்மீதும் தெளிப்ப உடனே கண்ணகியைக் குறிதீதுப் புலம்பிய அம்மூவரையும் கண்ணகி நற்றுய் கோவலன் நற்றுய் மாதரி என்னும் மூவருடைய பிறப்பினராக அறிந்து, அவர்கள் அவ்வாறு பிறதீதற்குக் காரணதீதை மாடலன் சொல்லக்கேட்டுப் பதீதினிக் கடவுளுக்கு நிதீதியபூசை செய்யும்படி

தேவந்திக்குச் சொல்லித் தான் அக்கடவுளை மூன்றுமுறை வலம்வந்து வணங்கி நின்றான்; அப்பொழுது ஆரிய மன்னரும் மாளவவேந்தரும் இலங்காபுரத்தரசனுகிய கயவாகுவும் அங்குவந்து அக்கடவுளை நோக்கி, 'இச்செங்குட்டுவனைப் போல எங்களுடைய நாட்டில் யாங்கள் உனக்குச் செய்யும் பூசையில் நீ எழுந்தருளி எங்களுக்கு அருள் செய்யவேண்டும்' என்று பிரார்த்திப்ப, 'நீங்கள் விரும்பியபடியே வரந்தந்தேன்' என்று அப்பொழுது ஒருகுரல் உண்டாயிற்று. அதனைக் கேட்ட செங்குட்டுவனும் மறையரசர்களும் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். பின்பு, செங்குட்டுவன் மாடலனுடு யாகசாலைக்குச் சென்றான். அப்பால், இளங்கோவடிகள் பத்தினிக்கடவுள் கோயிலுக்குச் சென்றார்; அவருக்கு முன்பு பத்தினிக்கடவுள் தேவந்திமேல் தோன்றி அவருடைய வரலாறு களைச் சொல்லி உவப்பித்தாள்.

கோவலன் வெட்டுண்டு விழுந்தகாலந் தொடங்கிப் பாண்டி நாட்டில் மழை இல்லாதுபோயிறறு; வறுமையும் நோயும் அதிகரித்தன, அது தெரிந்து கொற்கை நகரத்திருந்த அரசனுகிய **இளஞ்செழியன்** பத்தினிக் கடவுளுக்கு ஆயிரம் பொறகொல்லரைப் பலியிட்டுக் களவேள்வி யாற சாந்தி செய்து விழாவெடுத்தலால், அநநாட்டில் மிகவும் மழை பெய்தது முற் கூறிய வறுமையும நோயும் நீங்கின. அதைக் கேள்வியுற்றுக் கொங்கு மண்டிலத்தரசரும், இலங்காபுரத்தரசனுகிய **கயவாகுவும்** சோழநாட்டில் உறையூரிலிருந்த அரசனுகிய **பெருநற்கிள்ளியும்** கண்ணகிக்குக் கோயில் கடடுவித்து நித்தியபூசை விழா முதலியவறறைச் செய்து வழிபட அவர் நாடுகள் மிகுந்த வளமுறறன.

உ

கணபதி துணை

சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்

பதிகம்

குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்குக்
குன்றக் குறவ ரொருங்குடன் கூடிப்
பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமூலை யிழந்தாளோர் திருமா பத்தினிக்
சமரர்க் கரசன் றமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி யவளொடெங்

அரும்பதவுரை

காப்பு

கருமபு மிளநீருங் கடடிக் கனியும்
விருமபும விநாயகனை வேண்டி—அருமபவிழதார்ச்
சேரமான் *செய்த சிலப்பதிகா ரக்கதையைச்
சாரமாய் நாவே தரி

அடி, 1. குணவாயிற கோட்டம் - திருக்குணவாயிற கோயில்.

2 சேரலென்றது செங்குட்டுவனை சேரறகு இளங்கோவாகிய அடி கட்கென்க. இளங்கோவடிகள தாம துறநதிருந்து இக்காவியம் செயதார்

4. கொழுநிழறகண் நின்று (எ) காடடி.

குறிப்பு

இந்நூலுட் சிலசில இடஙகளில் அரும்பதவுரையாசிரியர் கொண்ட பாடம் வேருகவும அடியாரக்குநலலார் கொண்ட பாடம் வேருகவுமுள்ளன, பதிப்பிக்கப் பெற்றுளள நூலி மூலப்பகுதிகள் அடியார்க்குநல்லார் கொண்ட பாடத்திற்கு ஏற்றவை.

(மேற்கோள்) சிலப்பதிகாரம இப்பெயர் மென்றொடர்க்குற்றிய லுகரம் இயல்பு கணதத்துக்கண் திரிந்து வநதது, (தொல். குற்றியலுக ரப் 9, ந) அடி, 4-9, 'இப்பகுதி புதுமையெனனும மெய்ப்பாட்டிறகு மேற்கோள் (தொல் மெய் 7, நளா.)

(பிரதிபேதம்) *'சொன்ன சிலபபதிகா ரக்கவியைச்'

கட்புலங் காண விட்புலம் போய
திறும்பூது †போலுமஃ தறிந்தரு ணீயென
அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்
‡யானறி குவனது பட்டதென் றுரைப்போன்
ஆரங் கண்ணிச் சோழன் மூதூர்ப்
பேராச் சிறப்பிற் புகார்நக ரத்துக்
கோவல னென்பானேர் வாணிக னவ்வூர்
நாடக மேத்து நாடகக் கணிகையொ
டாடிய கொள்கையி னரும்பொருள் கேடுறக்
கண்ணகி யென்பாண் மனைவி யவள்காற்
பண்ணமை ¶சிலம்பு பகர்தல் வேண்டிப்
பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருஞ்சீர்
மாட மதுரை புகுந்தன னதுகொண்டு
மன்பெரும் பீடிகை மறுகிற் செல்வோன்
பொன்செய் கொல்லன் றன்கைக் காட்டக்
கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்
பியாப்புற வில்லையீங் கிருக்கென் றேகிப்
பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறனேர் கள்வன் கையென
வினைவிலை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் றேரா னுகிக்
கன்றிய காவலர்க் கூஉயக் கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கெனக்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களங் காண் ணெடுங்கணீ ‡‡ருகுத்துப்

8. கட்புலம் - கண்ணென்கின்ற புலம் விட்புலம் - விண்ணென்
13. பேராச்சிறப்பு - நீங்காத பெருமை. [கின்ற இடம்.
15. நாடகமேத்தும் நாடகக்கணிகை-நாடகத்தை ஆடிச்சிறப்பிக்கும்
16. ஆடிய கொள்கையின்-இவன் ஆடிய கோட்பாட்டால [கணிகை.
20. புகுந்தனன் - புகுந்தனனுய். 21. பீடிகை - வணிகர்தெரு.
24. யாப்புறவில்லை - பொருத்தமில்லை.
25 பண்டுதான்கொண்ட - முன்பு தான் களவிற்கொண்ட.
29. கன்றிய காவலர் - காவலில் தழும்பியவர். [நீர் உகுத்து.
32. நிலைக்களம் - நிலையிடம். நெடுங்கணீருகுத்து - நெடுங்கண்ணுல்

அடி, 20. மாடமதுரை . 8.3, 9 76, 15 . 112, கலித். 35 . 17; புறநா. 32 : 5.

(பி - ம்.) † 'போலுமறிந்தரு' ‡ 'யானறிகுவனிது' ¶ 'பொற் சிலம்பு' ‡‡ 'ருகுப்பப்'

பத்தினி யாகலிற் பாண்டியன் கேடுற
முத்தார மார்பின் முலைமுகந் திருகி
†நிலைகெழு கூட னீளெரி யூட்டிய
பலர்புகழ் பத்தினி யாகு மிவளென
வினைவிளை கால மென்றீ ரியாதவர்
வினைவிளை வென்ன விறலோய் கேட்டி
அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்
வெள்ளியம் பலத்து நள்ளிருட் கிடந்தேன்
ஆரஞ ருற்ற வீரபத் தினிமுன்
மதுரைமா தெய்வம் வந்து தோன்றிக்
கொதியழற் சீற்றங் கொங்கையின் விளைத்தோய்
‡ முதிர்வினை நுங்கட்கு முடிந்த தாகலின்
முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவனெடு
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்துச்
சங்கம னென்னும் வாணிகன் மனைவி
இட்ட சாபங் கட்டிய தாகலின்
வாரொலி கூந்தனின் மணமகன் றன்னை
ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானேர் தங்கள் ¶வடிவி னல்லதை
ஈனேர் வடிவிற் காண்ட லில்லெனக்

---

33. பத்தினியாகலின் - ஆக்கலும் அழித்தலும் வல்லளாதலின்.

34. முலைமுகம் - முலையிடம்.

36. பலர்புகழ் பத்தினியாகும் இவளென்று சாதீதன் சொல்ல.

39. அதிராச் சிறப்பு - பகைவரால் அதிர்ச்சியில்லாத சிறப்பு.

40. கொன்றையஞ்சடைமுடி : ஆகுபெயர்.

40-41. (பாடபேதம்.) மன்றப் பொதியில் வெள்ளியம்பலம் - மன்றதின்கட் பொதியிலாகிய வெள்ளியம்பலம்.

42. வீரபத்தினி - சீறிய கற்புடையாள்.

46. பைந்தொடி முன்னிலைப்பெயர். 47. சிங்காமை - சுருங்காமை.

46 - 9. கணவனெடு கட்டியதென்க. 50. கூந்தல் - கூந்தால்.

53. ஈனேர் - இவ்வுலகத்தின் மக்கள். காண்டல் இல்லென - காண்டல் இல்லையென்று சொல்ல.

அடி, 49 · மணி . 26. 31. அடி, 53. மு. 23 · 176 , ஈனேர் : பெருங். 3. 24 : 207 ; மணி. 28 : 132. அடி, 50-53 : 23 : 173-6.

(மேற்.) அடி, 35-6. இது கற்பென்னும் பொருளது (தொல். பொருள். 53, ந.)

(பி - ம்) † 'நிலைகிளர்' ‡ 'முதுவினை' ¶ 'வடிவினனல்லதை'

கோட்டமில் கட்டுரை கேட்டனன் யானென
அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென
முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரிய
தடிக ணீரே யருளுகென் றுற்கவர்
மங்கல வாழ்த்துப் பாடலுங் குரவர்
மனையறம் படுத்த காதையு நடநவில்
மங்கை மாதவி †யரங்கேற்று காதையும்
அந்தி மாலைச் சிறப்புச்செய் காதையும்
இந்திர விழவூ ரெடுத்த காதையும்
‡கடலாடு காதையும்
மடலவிழ், கானல் வரியும் வேனில்வந் திறுத்தென
மாதவி யிரங்கிய காதையுந் தீதுடைக்
கனைத்திற முரைத்த காதையும் விளைத்திறத்து
நாடுகாண் காதையுங் காடுகாண் காதையும்
வேட்டுவ வரியுந் தோட்டலர் கோதையொடு
புறஞ்சேரி யிறுத்த காதையுங் கறங்கிசை
ஊர்காண் காதையுஞ் சீர்சா னங்கை
அடைக்கலக் காதையுங் கொலைக்களக் காதையும்

56. உரை சால் பத்தினிக்கு - புகழ் அமைந்த பத்தினியை

57. ஊழ் வினை - முறைமையாகிய பழவினை. உருத்துவந்து - வெளிப் பட்டுவந்து.

58. சூழவினை - சூழ்ந்த சிற்பதொழில்.

60 பாடுடைச் செய்யுள் - உருவாகிய பாட்டுக்களையுடைய காவியம்.

61. முடிகெழு வேநதர் மூவர்க்கும் உரியது - புகாரினும் மதுரை யினும் வஞ்சியினும் நிகழ்தலான் மூவர்க்கும் உரியது.

62. அடிகளென்றது இளங்கோவடிகளை. என்றுற்கு - என்று சொன்னனுக அவனுக்கு.

63. மங்கலவாழ்த்து - கலியாண வாழ்த்து 69. மடல் - பூ

71 விளைத் திறத்து - கவுந்தியடிகள் விளைவிய திறத்தையுடைய.

73. தோடு அலர்.

அடி, 57. 'ஒளிப்பினு மூழ்வினை யூட்டாது கழியாது' (இறை 2, உரை), மணி. 26 . 32.

(பி - ம்.) † 'யரங்கேற்றுக்காதை' ‡ 'கடலாட்டுக்காதையும்'

ஆய்ச்சியர் குரவையுந் தீத்திறங் கேட்ட
துன்ப மாலையு †நண்பக னடுங்கிய
ஊர்சூழ் வரியுஞ் சீர்சால் வேந்தனெடு
வழக்குரை காதையும் வஞ்சின மாலையும்
அழற்படு காதையு மருந்தெய்வந் தோன்றிக்
கட்டுரை காதையு மட்டலர் கோதையர்
குன்றக் குரவையு மென்றிவை யனைத்துடன்
காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
வாழ்த்து வரநதரு காதையொ
டிவ்வா றைந்தும்
உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்
இது, பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென்

78. நண்பகல் நடுங்கிய - கண்ணகி நண்பகறகண்ணே நடுங்கிய
82. கட்டுரை - விளங்கச் சொல்லுதல்.
82-3. மட்டலர் கோதையர் குன்றக்குரவை-குறத்தியர் ஆடிய குரவை.
87. பாட்டும் உரையும் கலந்துவநத காவியம.

[1] வஞ்சிமூதூர் மணிமண்டபத்திடைத் தந்தையோடிருந்துழி அரசு வீறறிருக்கும் திருப்பொறியுண்டென்று ஒரு நிமித்திகன் சொல்ல,முன்னே ஞகிய செங்குட்டுவன் இருப்ப இவ்வாறு முறைபிறழக் கூறியது பொருது குணவாயிற் கோட்டத்துக் கடவுளர் முன்னர்த் துறந்திருந்த இளங்கோ வடிகளுக்குக் கண்ணகி வானவர்போற்றத் தன் கணவனெடு கூடியது கண்டு செங்குட்டுவனுக்கு உரைத்த குறவர் வந்து, 'எல்லாமறிந்தோய்! இதனை அறிந்தருள்' என்று கூறிப்போக, பின்பு செங்குட்டுவனைக் கண்டு போந்து அடிகளுழை வந்த சாத்தன் அதுபட்டவாறெல்லாம் கூற, அது கேட்டு, அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றென்பதூஉம், பத்தினிமகளிர் [2] பெய்யெனப் பெய்யுமழை யென்பதூஉம், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டுமென்பதூஉம இக்கதையகத்து உண்மையின், அதனை யாம் ஒரு செய்யுளாகச் செய்வோமென்று இளங்கோவடிகள் கூற, 'மூவேந்தர் நாட்டினும் நிகழ்ந்த கதையாகலான் ஏனை இருவேந்தரியல் பும் வேத்தியலும் பொதுவியலும் எல்லாம் உணர்ந்த நீரே அருளவேண் டும்' என்று சாத்தன் சொல்ல, இம்முப்பது வகைத்தாகிய செய்யுளை இளங்கோவடிகள் அருளக் கூலவாணிகன சாத்தன் கேட்டனனென்க.

அடி, 84 பு வெ சூ. 10

[1] 30 173-5 முதலியவற்றைப் பார்க்க

[2] "தெய்வந் தொழாஅள் கொழுநற றெழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" (குறள், 55) (பி - ம்) † 'நன்பக'

அடியார்க்கு நல்லாருரை

உரைப்பாயிரம்

குணவாயில். வாழ்வீரிங்கென் (30 202)

இவ்வியலிசைநாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ்நூல் தொல்காப்பிய மாதலானும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பா இலக்கணத்தனவாத லானும் அந்நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க அந் நூலிற் செய்யுளியலின்கண்ணே ஆசிரியர் பாவும் இனமுமென †நான்கினீக்கிய பாவினைத் தொகைவரையறையான் இரண்டென அடக்கியும், விரிவரையறையான் ஆறென விரித்தும், அவற்றை அறம்பொருளின்பத்தாற் கூறுக வென்றுங்கூறிப் பின்பு அம்மை முதலிய ‡எட்டுவனப்பும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கண மென்று கூறியவர், ''இழுமென் மொழியான் விழுமியது நுவலி னும், பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினும்'' (தொல் செய் 239) என்பதனால், குவிந்து மெல்லென்ற சொல்லானும் பரந்து வல்லென்ற சொல்லானும் அறம்பொருளின்பம் பயப்ப வீடென் னும் விழுமிய பொருள் பயப்ப ஒருகதைமேற் கொச்சகத்தானும் ஆசிரியத்தானும் வெண்பா வெண்கலிப்பாவானும் மற்றும் இன் னோரன்ன செய்யுட்களானும் கூறுகவென்றமையான், இத்தொடர் நிலைச்செய்யுள் அங்ஙனங் கூறிய [1]தொடர்நிலையென வுணர்க

முந்து நூல்களிற் காப்பியமென்னும் வடமொழிப்பெயர் இன்றேனும் ஆசிரியர், ''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே'' (தொல் எச்ச 5) என்றுர், 'ஆகும்மே' என்ற இலேசினுன் உய்த்துணரற்பால தனை மாணாக்கன் ஐயந்தீர்தற்கன்றே பின்னும், ''சிதைந்தன வரினு மியைந்தன வரையார்'' (தொல் எச்ச 6) என்று ரெனக் கொள்க அன்றியும் பெரியதனைப் பெருங்காப்பியம் என்றேகூறி மறுக்கவேண்டுதலானும், சான்றோர் செய்யுட்களி லும், ''கூத்திய ரிருக்கையுஞ் சுற்றிய தாகக், காப்பிய வாசனை கலந்தவை சொல்லி'' (பெருங் 4 3 41-2) என இரண்டாம்

[1] இந்நூலைத் தொன்மையென்பர் (தொல். செய். 237, ந.)

(பி - ம்.) † 'நான்கினீக்கியப்பாவினை' ‡ 'எட்டுந்தொடர்'

ஊழியதாகிய [1]கபாடபுரத்தின் [2]இடைச்சங்கத்துத் தொல்காப் பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்து அகத்தியனுரும், தொல்காப்பிய

---

[1] "ततो हेममय दिव्य मुक्तामणिविभूषित ।
मुक्ताकवाट पाण्ड्याना गता द्रक्ष्यथ वानरा: ।

(கிஷ்கிந்தா காண்டம், 41 . 19) என்னும் ஸ்ரீ வான்மீகி முனிவர் திருவாக்கு இங்கே அறிதற்பாலது.

[2] இடைச்சங்கமும் மற்றை இரண்டு சங்கங்களும் இருந்த இடமுத லியவறறைப் பின்வரும் ஆசிரியப்பாவானும் உணர்க.—"வேங்கடங் குமரி தீம்புனற் பௌவத், திந்நான் கெல்லையி னிருந்தமிழ் பயின்ற, செந்நாப் புலவர் செய்தியீண் டுரைப்பின், ஆடகக் குடுமி மாடக் கூட லின், முன்னர்ச் சங்கக் கன்மாப பலகையில், திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள், மன்றன் மராதிதார்க் குன்றெறி யிளஞ்சேய், திண்டிறற் புல மைக் குண்டிகைக் குறுமுனி, புவிபுகழ் மருதங் கவினிய முரஞ்சிப், பதிமுடி நாக னிதியின் கிழவன், இனையர்நா னூற்றுநாற் பதிதொன் பதின்மர், அனையர் நானுன் காயிர நூற்றெடு, நாறபதிதொன் பதின்மர் பார்க்கிற்செந் தமிழோர், புரிந்தன செய்யுட் பெருமபரி பாடலும, முதுமை யடுத்த நாரையுங் குருகும், கதியுறச் செய்த களரியா விரையும், ஆங்கவ ரிருந்தது மதிதொகை யாகும், ஈங்கிவர் தம்மை யிரீஇயபாண் டியர்கள், காய்சின வழுதிமுதற் கடுங்கோ னீரு, ஏசி லாவகை யெண்பதி தொன் பதின்மர், கவியரங கேறினு ரெழுவ ராகும், மகதத்துவ முடைய வகத்திய மிலக்கணம், வடுவறு காட்சி நடுவட் சஙகதி, தகத்தியர் தொல் காப் பியதமிழ் முனிவர், இருந்தை யூரிற கருங்கோழி மோசியார், எள் ளாப் புலமை வெள்ளூர்க் காப்பியன், இறவா விசையிற சிறுபாண்ட ரங்கன், தேசிக மதுரை யாசிரியன் மாறன், தவரொப் பாய துவரைக் கோமான், தேருங் கவிபுனை கீரந்தை யாரிவர், ஒன்பதோ டடுத்த வைம்ப தின்ம ராகும், தவலருங கேள்விதீ தன்மைய ருள்ளிட், டிவர்மூ வாயிரதீ தெழுநூற றுவரே, வையகம் பரவச் செய்த செயயுளும், இருங்கலி கடிந்த பெருங்கலிதீ தொகையொடு, குருகுவெண் டாளி தெருள்வியாழ மாலை, அந்நா ளிலக்கண மகதீதிய மதனெடு, பின்னுட் செயத பிறங்குதொல் காப்பியம், மதிநலங் கவின்ற மாபு ராணம், புதுநலங் கனிந்த பூத புரா ணம், வல்லிதி னுணர்ந்த நல்லிசை நுணுக்கம், தாவாக் காலந் தமிழ் பயின் றதுவும், மூவா யிரதீதோ டெழுநூற றியாண்டு, பரீஇய சங்க மிரீஇயபாண் டியர்கள், வெண்டேர்ச் செழியன் முதலா விறல்கெழு, திண் டேர்க் கொற்ற முடதீதிரு மாறன், முரசுடைதீ தானை மூவா வந்தம், அரசுநிலை யிட்டோ ரைம்பதிதொன் பதின்மர், இவ்வகை யரசரிற் கவி யரங்கேறினர், ஐவகை யரச ராயிடைச சங்கம், விண்ணகம் பரவு மேதகு கீர்தீதிக், கண்ணகன் பரப்பிற கபாடபுர மென்ப, அருங்கடைச சங்க மிருந்தோர் யாரெனிற், சிறுமே தாவியார் சேந்தம் பூதனுர், அறிவுடை யரனுர் பெருங்குன் றூர்கிழார், பாடல் சான்ற விளந்திரு மாறன், கூடலா சிரியர் நல்லந் துவனுர், பரவுதமிழ் மதுரை மருதனிள நாகர், அவிர் கணக் காயர் நவினக் கீரர், கீரங் கொறறர் கிளர்தே னூர்கிழார், ஓருங் கலமண னூரா சிரியர், நல்லூர்ப் புளியங் காய்ப்பெருஞ் சேந்தர், செல்லூ ராசிரியர் முண்டம் பெருங்குமரர், முசிறியா சிரியர் நீல கண்டனுர், அசைவிரி குன்றதீ தாசிரிய ரன்றி, நாதீதலங் கனிக்குஞ் சீதீதலைச் சாதீ தர், முப்பா லுணரு முப்பூரி குடிகிழார், உருதீதிர சன்மர் மருதீதுவ

ஞரும், இருந்தையூர்க் கருங்கோழிமோசியாரும், வெள்ளூர்க் காப்பியஞரும, சிறுபாண்டரங்கஞரும், †மதுரையாசிரியன் மாறஞரும், துவரைக் கோமகனும், கூந்தையாரும் என்றித் ‡தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் உளரிட்ட முவாயிரத்து எழுநூற்றுவர் கண்மாற் பாடப்பட்ட கலியும் தருகும் வெண்டாளியு முதலிய †செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த [1] உதயணன் கதையுள்ளும், ''கருதவ தங்கொன் றுண்டோ காப்பியக் கவிகா ளாம, வெயினெ விருற்பித திட்டார்'' (1585) எனச சிந்தாமணியுள்ளும, ''நாடகக் காப்பிய நன்னூ னுளிப்போர்'' (19 80) எனவ மணிமேகலை யுள்ளும் பிறவற்றுளளும் கூறினமை யானும் சொற்றொடர்நிலை பொருட்டொடர்நிலை யென்னும் தொடர்நிலைச செய்யுடகும் காப்பியமென்று பெயர் கூறுதலும் ஆசிரியர் கருதெனவுணர்க

இதனுள முற்கூறிய வனப்பென்பது ‡‡பெரும்பான்மையும் பலவுறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகாதலின் பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டுபெருகிய தொடர்நிலைச் செய்யுட்கு

ராகிய, நாம நாறகலைத் தாமோ தரனுர், மாதவள ஞரோ டோதுமிள நாகர், கடியுங் காமப் படியங் கொற்றனுர், அருஞசெய லூர்வாழ் பெருஞ சுவ ஞருடன், புவிபுகழ் புலமைக் கபிலர பரணர், இன்னுதீ தடிந்த நன்னுக ரன்றியும், ஒல்காப் பெருமைத் தொலகாப் பியத்துக், குரையிடை யிட்ட விரகர் கல்லாடர், பேர்மூல முணரு மாமூலர தமமொடு, விச்சை கறறிடு நச்செள்ளை யார்முதல, தேனூற் றெடுப்பச் செந்தமிழ் பகர்ந்தோர், நானூற றுவர்முத ஞற்பதிதொன் பதினமர், பீடுபெற வுல கிற பாடிய செய்யுள், முத்தொள் ளாயிர நற்றிணை நெடுநதொகை, அகநா னூறு புறநா னூறு, குறுந்தொகை சிறறிசை பேரிசை வரியோ, டறம்புகல் பதிறறுப்பத் தைமபதோ டிருபான், பெறும்பரி பாடலுங் குறுங்கலி நூறறைம், பதுமுத லாகிய நவையறுங கலைகள், அக்கா லத்தவர்க் ககத்திய மதனெடு, மிக்கா மிலக்கணம விளங்குதொல் காப்பியம, எண்ணூற் கேள்விய ரிருந்த தாயிரத், தெண்ணூற றைம்பது வருட மென்ப, இடர்ப்படா திவர்களைச் சங்க மிரீஇயினுர், முடத்திரு மாறன் முதலா வுக்கிரப், பெருவழுதி யீருப் பிறங்கு பாண்டிய, நரபதிக ளாகு நாற்பத்தொன் பதின்மர், இவருட் கவியரங கேறினர் மூவர, புவியிற சங்கம புகழ்வட மதுரை, ஆதிமுச் சங்கத் தருந்தமிழக் கவிஞர், ஓதிய செய்யு ளுலவாப் பெரும்பொருள், வாளாக் கேட்குந் தோளாச் செவிக்கும, கேட்டுந் தெரியா வோட்டைநெஞ் சினுக்கும, நுழையா வாதலி னுழை புலன் றன்னெடும, விழைவார்க் குரைக்க வெண்டுவர் தெரிநதே''— இச்செய்யுள் பாண்டி நாடடிலுள்ள செவ்வூரச சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டிலிருநத பழைய ஏட்டுப்பிரதிகமொன்றில் எழுதப்படடிருந்தது இவ்வகவலிலுள்ள சிலபகுதி மறறீதறகுரியனவாக இருநதும ஒருசாராருடைய கொள்கை தெரிவதறகு இஙகே பதிப்பிக்கலாயிறறு

[1] இது பெருங்கதை யென்றும், கதை யெனறும் இவவுரையுள் மேல் எடுத்தாளப்படும்.

(பி - ம்) † 'மதுரைப்பன்மாறனுரும்' ‡ 'தொடர்க்கதிதரான பதின்மருள்ளிட்ட' †† 'செய்யுளிலக்கியமாராய்ந்த', 'செயயுளிலக்கிய மாராய்நத' ‡‡ 'பெருமபான்மையாயப்'

இவ்வெட்டும் அலங்காரமாயின, ஆகவே இக்காப்பியத்திற்கும் தோலென்பது ஒரு சொல்லலங்காரமாகவே யுணர்க

இனி, இதன் செய்யுள் காதையென்று வழங்குதலிற் கதையையுடையது காதையாமாகலின், ஆசிரியம் வெண்பா வெண்கலிப்பா என்னும் இவற்றோடு சிறுபான்மையான் ஒருசார் கொச்சகக்கலி மயங்கிவருதலானும், காண்டமெனக் குறிபெறுதலானும் இதனைக் கதையென்றல் வலியுடைத்தென்பாரக்கு அற்றன்று, கதையென்பது பொய்ப்பொருள் புணர்த்துக் கூறுவது, என்னை? "கதையெனக் கருதல் செய்யான் மெய்யெனத் தானுங் கொண்டான்" (சீவக 2144) என்றமையானும், வழக்கினுள்ளும் இஃது ஒரு கதை யென்பவாகலானும், "நாடகக் காப்பியம்" (மணி 19 80) என்றலானும் கதையென்பது அல்லது இனி, அது நல்ல புலவராற் பொருளொடு புணராப் பொய்ம்மொழியால் நாட்டப்பட்டு வருவதாகலின், இஃது அவ்வாறன்றி யோனியென்னும் நாடகவுறுப்பும் நாடகமும் தழுவி, உள்ளோன் தலைவனுக உள்ளதொரு பொருள்மேற் சித்திரிக்கப்படாது பட்டாங்கு கிளந்து பலவினப் பாட்டான் வருதலின், ஈது அன்னதன்றென்பார்க்குக் காப்பியமென்றலுமாம்

இனி இசைத்தமிழ்நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலா உள்ள தொன்னூல்கள் இறந்தன நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணுமையின் அவையும் இறந்தனபோலும் இறக்கவேவரும், †பெருங்கல முதலிய பிறவுமாம் இவற்றுட் பெருங்கலமாவது பேரியாழ், அது கோட்டினதளவு பன்னிரு சாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிருசாணும், இப்பெற்றிக்கேற்ற ஆணிகளும், திவவும், உந்தியும் பெற்று ஆயிரங்கோல் தொடுத்து இயல்வது, என்னை? "[1] ஆயிர நரம்பிற் றுதியா ழாகும், ஏனை யுறுப்பு மொப்பன கொளலே, பக்தர தளவுங் கோட்டின தளவும், ஒத்த வென்ப விருமூன றிரட்டி, வணர்சா ணெழித்தென வைததனர் புலவர்" என நூலுளும், "தலமுத லூழியிற் றுனவர் தருக்கறப், புலமக ளாளர் புரிநரப் பாயிரம், வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச், செலவுமுறை யெல்லாஞ் செய்கையிற் றெரிந்து, மற்றை யாழும் கற்றுமுறை பிழையான்" (4 3 51–5) எனக் கதையினுள்ளும் கூறினராகலாற் பேரியாழ் முதலிய ஏனவும் இறந்தனவெனக் கொள்க

---

[1] "ஆயிர நரமபிற றுதியா ழாகும" எனபதுமடடும் பிங்கலததில் ஒரு சூதீதிரமாகக் காணப்படுகின்றது.

(பி - ம்) † 'அருங்கலம'

இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணிக்கர் பன்னிருவருள் சிகண்டி யென்னும் அருந்தவமுனி, இடைச் சங்கத்து அநாகுலனென்னும் தெய்வப் பாண்டியன் தேரோடு விசும்புசெல்வோன் திலோத்தமை யென்னும் தெய்வமகளைக் கண்டு தேரிற் கூடின விடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவ ரும் † சரியாநிற்கத் தோன்றினமையிற் சாரகுமாரனென அப் பெயர் பெற்ற குமரன் இசையறிதற்குச்செய்த இசைநுணுக்க மும், பாரசவமுனிவரில் ‡யாமளேந்திரர் செய்த இந்திரகாளிய மும், அறிவனூர் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரதசேனுபதியமும், கடைச்சங்கமிரீஇய பாண்டியருட் கவியரங் கேறிய பாண்டியன் மதிவாணனூர் செய்த முதனூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்து இயன்ற மதி வாணர் நாடகத் தமிழ்நூலுமென இவ்வைந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒருபுடை யொப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக்கொள்க

உலகதீதுக் காப்பியஞ்செய்வோன் அறனும பொருளும் இன்பமும் வீடும் கூறல் வேண்டுமன்றே, இந்நாடகக் காப்பியத்தினுள் அறனும் பொருளும் இன்பமும கூறிச் சிறிதாயினும் வீடு கூறிற்றிலர், என்னை யெனின், "யானறிகுவனது பட்டதென்று" (பதி. 11) உரைதீத சாத்த னூர் நாற்பொருளும் பயப்பப் பெருங்காப்பியமாகச் செய்யக் கருதியிருக் கின்றார்க்கு அடிகள், "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செயயுள்" (பதி. 60) என உளப்பாட்டுதீ தன்மையாற் கூறச் ¶சாத்தனூர் இவர் ஏனையிருவேந்தரையும் புகழ்ந்துரையார் என்பது கருதி மூவேந்தர்க்கும் உரியதாகலின், "நீரே யருளுக" (பதி 62) என்று ஏகார வினைப் பொருண்மையான் அவர் கருதீது நிகழ்ச்சி விளங்குவான் கூற, அவர் அதனையே துணிந்து தமது முதீதமிழ்க் கல்வியும் விதீதகக் கவியும் காட்டுதற்குதீ தாம வகுதீதுக்கொண்ட மூவகை உள்ளுறையின் விளைவு தோன்ற, மங்கல வாழ்தீதுப் பாடல் முதல் வரந்தருகாதையிறுதி முப்பது வகைதீதாக வரையறுதீது, அதனை அதிகாரமாகப் பொதிந்து முன்வைதீ துப் பின்னர், அறனும் பொருளும் இன்பமும் கூறி அடைக்கலக்காதை யிறுதிக்கண், "போதி யறவோன் . . யளிப்பவும" (103-4) எனக் கோவ லன் முன் கண்ட கனவின்கண் நிகழ்ந்ததை எதிர்கால நிமிதீதமாக மாடலறகுக் கூறுதலானும், நீர்ப்படையுள், "மாதவி . . . . . போதிதீ தானம் புரிந்தறங் கொள்ளவும" (103-8) என்றலானும், வாழ்தீதின்கண், "மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழி, மணிமே கலைதுறவுங் கேட் டாயோ தோழீ" (அடிதீதோழியரற்று) எனதீ தேவந்தி கூறுதலானும், வரந்தருகாதையில், "மணிமேகலையார், யாதவ டுறதீதற் கேதுவீங் குரை" (4-5) என "மையீ ரோதி" (10) முதல் "போதிதீ தானம் புரிந்

(பி - ம்.) † 'சரிய நிற்கதீ தோன்றினமையிற் சயந்த குமாரனெனப் பெயர்பெற்ற' ‡ 'யமளேந்திரர் செய்த பஞ்ச மரபும்' ¶ 'சாதீதர்'

தறம் படுத்தனள்'' (28) என்பதீருகப் பக்குவஞ்சொல்லி, ''பருவ மன்றி யும் பைந்தொடி நங்கை, திருவிழை கோல நீங்கினள்'' (35-6) என்றமை யானும் மணிமேகலை துறந்தாளென்பது உணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து அதனெடு நாறபொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக் கருதி அடிகள் சாத்தனுர்க்கு இவ்வுரையை உரைத்துழி, அவர் மணிமேகலைபெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும் பயப்ப ஒரு காப்பியம் செய்தமைத்தனமெனக் கேட்டு, அவ்வடிகள் விருமபி இவ்விரண்டினையும் ஒரு காப்பியமாக்கி உலகின்கண் நடாத்து வான் வேண்டவும இருவர் செயதலின், இரண்டாகி நடந்தனவென்க.

எழுத்தின் றிறனறிந்தோ வின்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
றெழுதத் துணிவதே யான்

உரைப்பாயிரம் முற்றிற்று

அடியார்க்கு நல்லாருரைச் சிறப்புப்பாயிரம்[1]

(1) பருந்து நிழலுமெனப் பாவு முரையும்
பொருந்துநெறி யெல்லாப் பொருளும்—தெரிந்திப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூல்
அடியார்க்கு நல்லானென் பான்
(2) ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவகுத்துச்
†சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொருள்
ஆருந் ‡தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்
காருந் தருவு மனையா னிரம்பையர் காவலனே
(3) காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்தக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வாரசெய்கை போலுமற் கால
[மெனும்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர்
[கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்ததே

---

1 இவை பண்டைக்காலத்தனவே, இயற்றியவர் பெயர் தெரிய வில்லை. இவை ஒவ்வோருறுப்பின் உரையிறுதியிலும இருந்தன, விரி வஞ்சி விடப்பட்டன

(பி - ம்) † 'சேரன் றெருதித' ‡ 'தெளிய'

பதிகம்

அடியார்க்கு நல்லாருரை

1 - 2 குணவாயில் அடிகட்கு

அடிகளெனறது துறத்தலான் †அத்துறவின் வரலாறு யாதோ வெனின், குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலா தறகுத் திகழொளி ஞாயிற றேழபரி நெடுநதேரச சோழன் றன்மக ணற சோணயீன்ற மக்க ளிருவருள முன்னேன் றனனைப் பின்ன ரியறறிப் பின்னென றனனையும பெருநமபியாகென அனனவர தம்மொடு தென னர் செமபியர கனனடி போறறத் தமனிய மண்டபத்துச் சிங்கஞ் சுமந்த பொங்கணை மீமிசை உவரித் திரையிற கவரி யிரடட வேநதனிருநதுழிச் சார்நத நிமித்திகன் அடிமுதல முடிவரை நெடிதுநோக்கி யினறேள் கழியப் பொன் நிகழலகஞ் சேர்த்தி நீயெனச் சேரலற குறைத்தவன் மைந தரை நோக்கி நநதாச் செஙகோ லநதமிலின்பத் தரசா ஞரிமை இனை யோற் குண்டென வுனைவன ணனிவெகுண் டழுக்காற றெழுக்கத் திழுக்கு நெஞ்சினன் கண்ணெரி தவழ வண்ணலை நோக்குங கொங்கவிழ் நறுந தார்க் கொடித்தேர்த்தானைச் செஙகுடடு வன்றன் செல்ல னீங்கப் பகல செல் வாயிற படியோர் தம்மு னகலிடப் பார மகல நீக்கிச் சிந்தை செல் லாச் சேணெடுந தூரத் தந்தமி லினபத் தரைசாள் வேநதாயினனென் பது இக்கதையைப் பதிறறுப்பத்தினுள் அஞ்சாமபதித்தின் முடிவின் கண், "வடவருடகும" (பதிகம்) என்னுங கவியுள்ளும், இநநூலுள் வாழ்த்தின்கண்ணும, வரந்தரு காதைக் கண்ணும காண்க.

குணவாயில்-திருக்குணவாயிலென்பதோரூர, அது வஞ்சியின் கீழ்த் திசைக்கண் உள்ளது, அஃது ஆருபெயர் அது குணக்கண்வாயில் குணவாயில், குணக்கின்கண்வாயில் குணவாயிலெனச் சாரியையெருதும் பெறறும வரினும அமையும எனனை? "ஏழ னுருபிறகுத் திசைப் பெயர் முன்னர்ச, சாரியைக கிளவி யியற்கையு மாகும" (தொல் உருபு 29) என்ருராகலின் வாயிறகோட்டமென்பது "லகார விறுதி னகார வியறறே" (தொல் புள்ளி 71) என்பதனுல், ஏழனுருபின்கண் வந்த சாரியை லகார வீறு, வருமொழிமுதல் வல்லெழுத்து வர னகாரம வேறறுமைக்கண் திரிநது றகாரமாயிறறே போலத் ‡திரிந்தது. கோட்டம் - அருகன் கோயில் அது "மஃகான் புள்ளிமு னதீதே சாரியை" (தொல்

(பி - ம்.) † 'துறவிறகுக்காரணமயாதோ' ‡ 'திரிநதுவாயிறகோட் டமாயிறறு'

உருபு 13) எனபதனுல ஏழனுருபின்கண் சாரியை பெறறு, "அதீதே வற்றே யாயிரு மொழிமேல், ஒற்றுமெய் கெடுத றெறறென் றற்றே" (தொல் புணர் 31) என்பதனுல மகரங்கெடடு, "அதீதி னகர மகர முஜன யிலலே" (தொல் பணர். 23) என்பதனுல் அகரங்கெட்டு முடிந்தது "அவற்றுள், மெய்யிறெல்லாம் புள்ளியொடு நிலையல்", "குற்றிய லுகரமு மறறென மொழிப" (தொல். புணர். 2, 3) என்ப வற்ருலும், "புள்ளி யீற்றுமு னுயிர்தனித் தியலாது, மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுதீதே" (தொல். புணர. 36) என்பதனுலும் வருமொழி அகார வுயிரேறிற்று அரசு - அரசாட்சி துறந்திருதீத: நிலை மொழியீறறுக் குற்றுகரமும், முறகூறியவாறே முடிந்தது. குடக்கோ வென்பது, "அகர விறுதிப் பெயர்நிலை முன்னர், ...ஒற்றிடை மிகுமே", "வேறறுமைக் கண்ணு மதனே ரறறே" (தொல் உயிர்மயங். 1, 14) என்பவற்ருல், பெயரொடு பெயர் புணர்ந்து வல்லொற்று மிக்கது. கோச் சேரலென்பது, "ஓகார விறுதி யேகார வியறறே" (தொல் உயிர் 87) என்பதனுல, ஓகாரவீறறுப் பெயர்ச்சொல் அல்வழிக்கண் ஏகார வீறறு அல்வழியேபோல வலலெழுதீதுப் பெற்றுமுடிகவென்றலின் வல்லொற்று மிக்கது சேரலென்றது அண்ணல், தோனறல், திரையல், இளவலென்ருற் போல்வதோர் லகாரவீறறுப் பெயர்ச்சொல, அன்றியும் சேரலனென்னும் பெயர்த்திரிசொல் எனினும அமையும் சேரலிளங்கோவென்பது "புள்ளி யீறறுமுனுயிர்" என்பதனுல், லகாரவொறறீற்று நிலைமொழி மேல் வருமொழி முதல இகரவுயிரேறி முடிநதது கோவடிகட்கென்பது "எல்லா † மொழிக்கு முயிர்வரு வழியே, உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்" (தொல். புணர் 38) என்பதனுல், வகரவுடமபடுமெய்யா யிறறு அடிகட்கென்றது "ளகார விறுதி ணகார வியற்றே" (தொல். புள்ளி. 101) என்பதனுல், ணகாரம வேறறுமைக்கண் திரிநது டகார மாயிற்றேபோல இதுவும வேற்றுமைக்கண் திரிந்து டகாரமாயிறறு

அரசென்பதற்கு இரண்டனுருபு விரிதீதுத் துறந்தென்னும விஜன யெச்சதீதோடும, துறந்தென்னும் விஜனயெச்சதீதை இருந்தவென்னும் பெயரெசசதீதோடும முடிதீது அதனையும் அடிகளென்னும் பெயரோடே முடிக்க

அரசாட்சியைத் துறந்து திருக்குணவாயிற கோயிறகண்ணே இருந்த குடதிசைக்கோவாகிய செங்குட்டுவனென்னும சேரற்கு இளங்கோவாகிய அடிகட்கெனப் பண்பொடடு விரிதீதுரைக்க

இளமைப்பருவதீதே இராசபோகதீதைதீ துறதீதல் அருமையால் துறந்தென்றும, அங்ஙனம போகம நுகர்ந்தவிடதீதே மீட்டும் தவவுருதீ தாங்கியிருதீதல் அருமையான் இருந்தென்றும் கூறினர்

(பி - ம்.) † 'மொழியும்'

இம்முதலிரண்டடிக்கும் இத்துணையுங்கூறியது எழுத்துச்சந்தி முடிவும் சொல் முடிவும் எனக் கொள்க.

இனிப் பொருளாராய்ச்சி எண்வகைய:—அவை திணை, பால், செய்யுள், நிலம், காலம், வழு, வழக்கு, இடமென்பன. அவற்றுள், திணை இரண்டு; ஆவன: அகத்திணை புறத்திணையென்பன. பால் பதினொன்று, ஆவன: கைக்கிளைமுதல் பெருந்திணையிறுவாய் [1] ஏழும், வெட்சிமுதல் பாடாண்டிணை இறுவாய் [2]ஏழும். செய்யுள் அறுவகை, ஆவன. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடற்பா, மருட்பா வென்பன. நிலன் நால்வகை, ஆவன: முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்த லென்பன. காலம் பன்னிரண்டு, ஆவன: [3]சிறுபொழுதாறும் [4]பெரும் பொழுதாறும். வழுபதினொன்று, ஆவன: அகத்திணைவழுவேழும், புறத் திணை வழுவேழும். வழக்கு இருவகை, ஆவன. நாடகவழக்கும், உலகியல் வழக்கு மென்பன. இடம் இருவகை, ஆவன· வழக்கிடமும், செய்யு ளிடமும்.

இவற்றுள் நிறுத்தமுறையானே அகத்திணைப்பொருட்பகுதி முதலி யன இப்பதிகச்செய்யுளுள் முடியாமையின், அவை முடியுமிடங் கூறு தற்கு, ஆசிரியர் அகப்பொருட்பகுதி கூறுவார், "மாயோன் மேய காடுறை யுலகமும், சேயோன் மேய மைவரை யுலகமும், வேந்தன் மேய தீம்புன லுலகமும், வருணன் மேய பெருமண லுலகமும், முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" (தொல். அகத். 5) என முல்லைத் திணையை முதலாக நாட்டுதலின் அம்முறையே அகத்திணைப் பொருட்பகுதி முடியுமிடம ாண்டு எடுத்துக்காட்டப்படும்.

"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின், இயல்பென மொழிப வியல்புணர்ந் தோரே" (தொல். அகத். 4) என்பதனால், முதறபொருள் இருவகைப்படும். முல்லைத்திணை நிலமுதற்பொருள். "காருமாலையு முல்லை" (தொல் அகத். 6) என்பதனால், அத்திணைக்குரிய பெரும் பொழுதும் சிறுபொழுதும் கொள்ளப்படும். பெரும்பொழுது. "காரோ வந்தது" (26. 118) என்பதனாற் காரும், சிறுபொழுது "மாலை நீயாயின்" (7. 'பையுணேய்') என்பதனால் மாலையும் கூறினர் கருப்பொருள், "தெய்வ முணவே மாமரம் புட்பறை, செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ, அவ்வகை பிறவுங் கருவென மொழிப" (தொல். அகத். 18)

---

[1] கைக்கிளைத்திணை, முல்லைத்திணை, குறிஞ்சித்திணை, மருதத் திணை, நெய்தற்றிணை, பாலைத்திணை, பெருந்திணையென்பன, இவை அகத்திணை யெனப்படும்.

[2] வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடா ணென்பன, இவை புறத்திணையெனப்படும்.

[3] மாலை, யாமம், வைகுறு, காலை, நண்பகல், எற்பாடென்பன.

[4] கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனி லென்பன.

என்பதனலுணர்க இந்நிலத்திற்குக் கருப்பொருள் : "கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்" (17. 'கன்று') என்பதனால தெய்வமும், "அஃ விலை யுணவின்" (16 3) என்பதனால் உணவும், "நீர்நசைஇ வேட்கை யின் மானின்று விளிக்கும" (11 78) என்பதனால் மாவும், "கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தான்" (17. 'செந்நிலை') என்பதனால் மரமும், "கான வாரணங் கதிர்வர வியமப" (13 37) என்பதனாற் புள்ளும், "ஏறங் கோட்பறை" என்பதனாற் பறையும, "கோகுல மேய்த்து" (17. 'கோவா') என்பதனாற செய்தியும், "குட முதல்.. ..வேண்டிய பெயரே" (17· 'குடமுத') என்பதனால் முல்லையாழும், பண் "முல்லைத் தீம் பாணி யென்ருள்" (17: 'செந்நிலை') என்பதனாற் சாதாரியும் கூறினர். உரிப்பொருள் "புணர்தல் பிரித லிருத்த லிரங்கல், ஊட லிவற்றி னிமித்த மென்றிவை, தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே" (தொல் அகத். 14) என்பதனலுணர்க. "இருந்தேங்கி வாழ்வா ருயிர்ப் புறத்தாய்", "பேரருளி னீழல்" (7 'பிரிந்தார்') என்பவறருல் இருத் தலும், இருத்தல் நிமித்தமும் கூறினர். பிறவுமென்றதனால் நிலமக்களும் நீர்நிலையும் வார்கொடியும் பூவும் கொள்ளப்படும். இவற்றுள், "இஃசூழ் கோவலர்" (16. 4) என்பதனால் நிலமக்களுமு, "புடைநெறிப் போயோர் பொய்கையிற சென்று" (11 169) என்பதனால் நீர்நிலையும், "ஆய் கொடிக் கவலையும்" (11 82) என்றதனால் வார்கொடியும், "காயாமலர் மேனி" (12. 'ஆய் பொன்னரி'), "முல்லை நிகர் மலர்" (9. 1-2) என்பவறருற் பூவும் கூறினர்

குறிஞ்சித்திணை நிலமுதறபொருள் பெரும்பொழுது "அருவி யொலிக்கு. .மலைகாண் குவம" (25 6-7) என்பதனாற் கூதிர்ப்பொழு தும், சிறுபொழுது "குன்றத்துச் சென்று வைகியும்" (24. 'குருவி') என்றதனால் நள்ளியாமமும், கருப்பொருள் "நீலப்பறவைமேல. .. புதலவன் வரும" (24 'வேலனுர்') என்பதனால் தெய்வமும், "ஐவன வெண்ணெலும் ..... கொய்பூந் திணையும்" (11 80-81) என்பதனால் உணவும், "புலியொடு பொரூஉம புகர்முகம்" (25 29) என்பதனால் மாவும், "கோங்கம் வேங்கை" (25 17) என்பதனால் மரமும், "கானக் கோழியுந் தேன்மொழிக் கிள்ளையும்" (25· 54) என்பதனாற் புள்ளும், "தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்" (24 'குருவி') என்ப தனாற பறையும், "கொய்பூந் திணையும்" (11 81), "நறவுக்கண்ணு டைதீத" (25 27) என்பவற்றுற செய்தியும், "அந்தீங் குறிஞ்சி" (28. 35) என்பதனால் யாழும், "குறிஞ்சி பாடுமின்" (24 'குருவி') என்பதனாற் பண்ணும், உரிப்பொருள் "அஞ்சலோம்பென்று நல னுண்டு", "நல்காதார்" (24. 'ஆங்கொன்று') என்பனவற்றுற் புணர் தலும் புணர்தல் நிமித்தமும், "குன்றவருங்கண்டு நிறக" (24: 'குருவி') "குறத்தியர் பாடிய" (27· 224) என்பனவற்றுல் நிலமக்களும், "அருவி யாடியு மகன்சுனை குடைந்தும்" (24 'குருவி') என்பதனால் நீர் நிலையும், "ஏல வல்லியு மிருங்கறி வல்லியும்" (25 41) என்பதனால் வார்

கொடியும, "விரவு மலர் தூவுமின்" (24 'குருவி') என்பதனுற பூவும் கூறினர

மருதத்திணை நிலமுதறபொருள் "இன்னிள வேனில வந்த தில்ல னென" (8 7) என்பதனுற் பெருமபொழுதும, "வான்கண் விழியா வைகறை யாமத்து" (10 1) என்பதனுற் சிறுபொழுதும, கருப்பொருள "மலைச்சிற கரிந்த வசிர வேந்தறகு" (14 94) என்பதனுல் தெய்வமும, "குமரிக் கூட்டிற கொழும்பல லுணவு" (10 123) என்பதனுல் உணவும, "கழாமயிர யாக்கைச செங்கட் காரான்" (10 121) என்பதனுல் மாவும, "மருதோங்கு முன்றுறை" (14 72) என்பதனுல் மரமும, "கமபுட கோழியுங் கனகுர னுரையும' (10 114) என்பதனுற புள்ளும, "தெண் கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த" (10 138) எனபதனுற பறை யும, "ஏரொடு நின்றேர்", "அரிந்துகால குவித்தோர்" (10 135, 136) என்பனவறறுற செய்தியும், யாழ் "அதிரா மரபின யாழ்கை வாங்கி" (8 23) என்பதனுல மருதயாழும, பண் "வைகறைப் பாணியும்" (13 148) என்பதனுல் மருதப்பண்ணும, உரிப்பொருள் "சிலமபுள கொண்மென" (9 73) என்பதனுல் ஊடலும், "விடுதலறியா விருப் பினன்" (3 174), "போற்று வொழுக்கம புரிநதீர்" (16 81) எனபன வற்றுல் ஊடனிமித்தமும, "கருங்கை வினைஞருங் களமருமம" (10 125), "சினமொழிக் கடைசியர்" (10 130) எனபனவற்றுல நிலமக்களும, "பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி" (10 78) என்பதனுல் நீர்நிலையும், "கோதை மாதவி" (14 113) எனபதனுல வார்கொடியும, "வெண்பூ மல்லிகை . தண்செங் கழுநீர்" (14 78-9) எனபதனுற பூவும கூறினர்.

நெய்தறறிணை நிலமுதறபொருள பெருமபொழுது காருமம, இரு வகை வேனிலும இவை ஆசிரியர் எடுத்தோதாமையின் அடிகள கூறிறறிலர் போலும சிறுபொழுது "வையமோ கணபுதைப்ப வநதாய் மருண்மாலை" (7 'பையுணேய கூர') என்பதனுல மாலையும, கருப் பொருள் தெய்வம "கடறறெய்வங் காடடிக் காடடி" (7 'கரியமலர') எனபதனுல் வருணனும், உரு "விலைமீ னுணங்கற பொருட்டாக" (7 'வலைவாணர்') என்பதனுல் மீன்விலையுணவும் கூறினர் மா, உமணர பகடன்றி இநநிலத்திறகு விலங்கினமையின ஆசிரியர் கூறிறறிலர் போலும் இனி முதலையும் சுருவும மாவென்பர்[1], "கெண்டை யஞ்சின மேய்ந்து கிளர்நதுபோய, முண்ட கத்துறை சேர்நத முதலைமா, வண்டலல் வாரதரை மாமக ரக்குழாம, கண்டு நினறு கனலுங் கழியெலாம" (சூளா நாட்டு 22) எனக் காடடுவாருளராயினும, அவை மீனெனப்படுவவல்லது மாவெனப்படா, "பொறைமலி பூம புன்னை" (7 'துறைமேய்') என்ப தனுல மரமும, "அன்னந்துணையோடாட" (7 'அன்னம') என்பதனுற் புள்ளும் கூறினர் பறை கூறிறறிலர், மீன்கோட் பறையென்க 'கடலபுக்

[1] என்பவர் இளமபூரணருமு, இறையனுரகபபொருள உரையாசிரிய ருமு, அகப்பொருள் விளக்க ஆசிரியருமு, வீரசோழியமுடையாருமு

குயிர் கொனறு வாழ்வர்' (7 'கடல்புக்') என்பதனுற் செயதியும், "சிதீதி ரப் படதீதுள். குற்ற நீங்கிய யாழ்" (7: முதற் கட்டுரை) என்ப தனுல யாழுமு, பண் "நுஊயர் விளரி" (7 'நுஊயர்') என்பதனுல் விளரிப் பண்ணும, உரிப் பொருள் "கொஊவல்லா யென்னவி கொள்" (7 'நுஊயர்') எனபதனுல இரங்கலும், "பேரருளினீழல், இருந்தேங்கி வாழ்வார்" (7 'பிரிந்தார்') என்பதனுல நிமிதீதமும, "சேரிப் பரதர் வலமுன்றில" (7 'வாரிதீதரள'), "பவளவுலக்கை" (7 'பவள'), "எறிவஊக ளார்ப்ப" (7 'எறிவஊ') எனபனவறறுற பரதரும பரதீதி யரும நுஊயரும் நுஊச்சியருமாகிய நிலமக்களும், "ார்ந்தண்டுறை" (7 'நேர்ந்தநம்') என்பதனுல் நீர்நிலையும், "அமமெ னிணர வடும்பு காள்" (7 'தமமுடைய') என்பதனுல் வார்கொடியும, "நறுஞாழல் கையி னேந்தி" (7 'நி ாங்கொள்') என்பதனுற் பூவும் கூறினுர்

"சொலலிய முறையாற சொல்லவும் படும" என்பதனுறை சொலலாத முறையாற் சொல்லவுமபடுமென அருதீதாபதீதி கோடலானும, "நடுவு நிலதீதிணையே நண்பகல் வேனிலொடு, முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறிதீதே" (தொல் அகதீ 9) என்பதனனும, "முலலையுங் குறிஞ்சியு முறைமையிற றிரிநது, நலலியல பிழந்து நடுங்குதுய ருறுதீதுப், பாலை யென்பதோர் படிவங கொள்ளும, காலையெயதினிர்" (11 64-7) என்பதனு னும போநத இபபெறறிதீதாகிய பாலைதீதிணை நிலமுதறபொருள். பெரும் பொழுது "வேனிற கிழவனெடு வெங்கதிர் வேநதன், தானலந் திருகிதீ தன்மையிற குன்றி" (11 62-3) என்பதனுல் இருவகை வேனிலும, சிறு பொழுது "படுங்கதிரமயம பார்தீதிருந தோரக்கு" (13 16) எனபதனுல் †நண்பகலும கூறினுர கருப்பொருள் தெய்வம, ஆசிரியர் புலப்பட எடுதீதோதிறறிலரேனும், "கடுங்கதிர திருகலின்" (12 1) எனவும், "வெஙகதிர வேந்தன் தானலந் திருகி" (11 62-3) எனவும, "ஐயை கோடடதீ தெயயா வொருசிறை" (12 4) எனவும், "கொறறவையுங் கொடுமரமுன் செல்லும்" (12 'கள்விலையாட்டி') எனவும கூறுத லானும், பிறவாறருனும பருதியஞ்செல்வனும, திகிரியஞ் செலவியுமெனக் கொளக. உணு "ஆரிடை யதீததீ தியங்குந ரல்லது, மாரி வளமபெரு விலலேருழவர்" (11 209-10) என்பதனுல், ஆறெறிந்தும் சூறை கொண்டும உண்ணும உணவாம் மா "மானின்று விளிக்கும" (11 78) என்பதனுல் உழைமான் முதலியனவும, "அலறுதலை மராமு முலறுதலை யோமையும" (11 75) என்பதனுல் மரமும, "கான வாரணங் கதிர்வர வியம்ப" (13 37) என்பதனுற் புளளும, "துண்ணென் றுடியொடு" (12 'துண்ணென்') என்பதனுற் பறையும, "பொருள்கொண்டு புண் செயின" (12 'பொருள்') என்பதனுற் செய்தியும, "செந்திறம புரிந்த செஙகோட்டியாழ்" (13 106) என்பதனுல யாழும், பண் "ஆசான் றிறதீதின்" (13 112) என்பதனுறை காநதாரபஞ்சமமும கூறினுர், உரிப் பொருள் "தொடிவஊச் செஙகை தோளிற் காட்டி" (13 33) எனவும,

(பி - ம்) † 'எறபாடு'

"ஆரிடை யுழந்த மாதரை நோக்கி" (13 · 30) எனவும் கூறினமையாற் போக்கும், வாளாது [1] "போக்கெல்லாம் பாலை" என்றலின் உடன்போக்கும் கொள்ளப்பட்டன நிலமக்கள். "கண்ணிலெயினர்" (12 'துண்ணென்') எனவும், "இளமாவெயிற்றி" (12 'இளமா') எனவும் கூறலின், எயினரும எயிறறியரும், ாண்டு நீரின்மை நிலை "நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்" (11 78) என்பதனலும், "நீரின்றி வேனிறெறுநிலம் பாலை" (திவா. 5) என்பதனலும் நீரின்மையே இந நிலத்திறகுச் சிறப்பென உணர்க. "அறுநீர்ப் பைஞ்சுனை யாமறப் புலர்தலின், உகுநெறபொரியும் வெம்மை" (1) என அகப்பாட்டினும், "மரையா மரல்கவர" (6) எனக் கலியுளளும கூறினர் "ஆய்கொடிக் கவலையும்" (11 82) என்பதனல் வார்கொடியும, "கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன" (12 'செம்பொன்') என்பதனற பூவும் கூறினர்.

இச்சொல்லப்பட்ட ஐந்திணையின் முதல் கரு உரிப்பொருளும் பிறவுமாகிய அகத்திணைப் பொருட்பயன் †உடம்பொடு புணர்த்தியுணர்த்திப் புறத்திணைப் பொருட்பயனும் பிறவும் இவ்வாறு † உடம்பொடு புணர்த்தி உணர்த்துங்காற் புனைந்துரைக்கப்பட்டுக் கேட்போரக்கு இன்பம பயவாது **உணர்வு** சலிக்குமாதலின் வநதன வந்துழிக்காட்டுதலைக் கருதிறறு இவவுரையென்க.

இனி, **இசைநாடகத் தமிழ்நூலது** பகுதியும், இவைபோலப் பெருவழக்கின்ருதலானும் நிலதீதோடும் கலதீதோடும் கண்டதீதோடும கருவியோடும், நிலையோடும் இயக்கதீதோடும் இருவகை பலவகை விலக்குறப்புக் கை கால் வடடணை பொருள் யோனி விருதீதி சந்தி சுவை சாதி குறிப்பு சதீதுவம் அவிநயம் சொல் சொல்வகை வண்ணம வரி சேத மென்பனவற்ருேடும கதையோடும பல கூதீதுக் கூறுங்கால உயதீதுணர் விலலோரக்குச் செவிச்சுவை பயக்குமாதலானும் ாண்டு விரியாது விரிதீதலைக் கருதிறறு இவ்வுரையெனக் கொள்க

இனிப பதிகச் செயயுளுள, முதலீரடியும போல யாண்டும விரியாதது உரை பெருகுமென்பதனைக் கருதியெனக் கொளக

1 - 9 குணவாயில் அறிந்தருணியென

(இதன் பொருள்) திருக்குணவாயிற்கோயிற்கண்ணே அரசபோகதீதைதீ துறறந்து தவவுருதீதாங்கியிருந்த குடதிசைக்கோவாகிய செங்

[1] "போக்கெல்லாம பாலை புணரத னறுங்குறிஞசி
ஆக்கஞ்சே ரூட லணிமருதம்—நோக்கொன்றி
இல்லிருக்கை முலலை யிரங்க னறுநெய்தல்
சொல்லிருக்கு மைமபாற ருெகை"

இச்செய்யுள் **நாற்கவிராய நம்பியகப் பொருள்விளக்கவுரை** யின் இறுதியிலும், திருவாய்மொழியீட்டின் "அஞ்சிறையமடநாராய்" என்பதன் அவதாரிகைக்குரிய ஜீயரும்பதவுரையிலும் காணப்படுகின்றது, இன்ன நூலிலுளளதெனறு தெரியவில்லை

(பி - ம்) † 'உடமபடு புணர்தீதி'

குட்டுவ னென்னும் சேரற்கு இளங்கோவாகிய அடிகட்குக் குறவரெல் லாரும் திரண்டு சென்று எமதூர் மலைப்பக்கத்துப் பொன்போலும பூவினையுடைய வேங்கைமரத்தின் நிழற்கண்ணே ஒரு முலையிழந்து வந்து நின்ருள் ஒரு மாபத்தினி, அவள்பொருட்டு இந்திரன்றமர் ாண்டி வந்து அவள்கொழுநனைக்காட்டி அவளோடும் அவர் எம் கட்புலம் காண விட்புலம்போயவது ஓர் அதிசயமாயிருந்தது, அதனை நீ அறிந்தருளு வாயாக என்ற அளவிலே யென்க.

குன்றக்குறவர் ஏழனுருபுதிதொகை, குன்றம்-கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்றென்னும் மலை. அது திருச்செங்கோடென்பவா லெனின், அவரறியார், என்னை? அத்திருச்செங்கோடு வஞ்சிநகர்க்கு வடகீழ்த்திசைக் கண்ணதாய் அறுபதின்காத ஆறுண்டாகலானும், [1]அரச னும் உரிமையும் மலை காண்குவமென்று வந்து கண்ட அன்றே வஞ்சி புகுதலானும் அது கூடாமையினென்க.

பொலம்பூ - உவமத்தொகை. நலம் - குளிர்ச்சி. கிளர்தல் - மிகுதல். திரு மாபத்தினி - அழகிய வீரபத்தினி, குவ்வுருபு பொருட்டு, அது "வரிசைக்கு வருந்தும்" (புறநா. 47 6) என்றுற்போல நின்றது. தமர் - தேவர். ஒடு உடனிகழ்ச்சி. கட்புலம் - கண்ணினது அறிவு; கண்ணென்கின்ற புலமுமாம். விட்புலம் - விண்ணிடம். இறும்பூது - அதிசயம், "இறும்பூது சான்ற" (20 55) என்றுர் மணிமேகலையிலும்.

சென்றெனவும, நின்ருளெனவும் வருவிக்க.

குறவர் கூடிப் பத்தினிக்கு ாண்டி வந்து போய அது இறும்பூது போலு மென்ருனென்க

ாண்டி வந்து காட்டிக் காணப்போயவென்னும் பெயரெச்சம் அது வென்னும் சுட்டுப்பெயரோடு முடிந்தது

போய அது போயதென விகாரம்.

இதனுட் பத்தினியென்பதூஉம், தமரென்பதூஉம், கொழுநனென் பதூஉம் குன்றக்குறவர் அறிந்தமை குன்றக்குரவையுட் காண்க.

இது மருட்கையென்னும மெய்ப்பாடு

10 - 11 அவனுழை உரைப்போன்

(இ - ள்) குறவர் இளங்கோவடிகளை நோக்கி அறிந்தருளென்ற அளவிலே செங்குட்டுவன் அதிசயித்து முகநோக்கப் பரிசில்காரணமாக வந்து அவனுழையிருந்த சாதத்தன் அதனைக் குறிப்பான் அறிந்து அது விளைந்த தெல்லாம யானறிகுவனென்று உரைக்கின்றவனென்க

அதுவென்றது ஒருமுலையிழந்ததனை. பட்டது - விளைந்தது.

---

[1] அரசன் - செங்குட்டுவன், உரிமை - வேண்மாள் இவர்கள் மலை கண்டவன்றே வஞ்சி புகுந்ததனை இந்நூற் காட்சிக் காதையிற் காண்க

12 - 20. ஆரங்கண்ணி புகுந்தனன்

(இ - ள்) ஆதீதிதீதாரையுடைய செம்பியனது பழைய நகரங்களில் வைதீது மாறுத விழுவுச்சிறபபினையுடைய புகாராகிய நகரதீதிடதீதுக் கோவலனென்று பெயர் கூறப்படுவானெரு வாணிகன் தன்னூர்க்கண் நாடகநதானேதீதும நாடகப் பொதுமகளாகிய மாதவியென்பாளோடு கூடிய ஏழுக்கதீதாலே பெறுதற்கரிய பொருள் தொலைதலின், அவன் மனைவி கணணகியென்று பெயர் கூறப்படுவாள், அவளுடைய காலணி யாகிய ஓசையமைநத சிலமபினை விற்றலவேண்டிதீ தமிழினது பாடல சிறந்த சிறப்பினையுடைய பாண்டியனது மிக்க புகழையுடைய மாட மதுரைக் கண்ணே சென்றுபுக்கானென்க.

நாடகமேதீதுமென்றது - நாடகம் தான் இவளாற சிறப்பெய்துதலின் ஏதீதிறறெனறவாறு இனி ஏதீது நாடகமென மாறிப் பதினேராடலாக்கி உரைப்பினும அமையும, இனி நான்கனுருபு விரிதீது உருப்பசி முதலியோர் யாவரும் ஏதீதுமெனவுமாம. கணிகையர் பலராதலின், இவளை நாடகக்கணிகையென்றார், பதியிலாளென்பது தோன்ற ஆடுதல்-அனுபவிதீதல், "இளையார் விளையாட" (1349) எனறார் சிந்தாமணி யினும். அரும்பொருள் - அறனும இன்பமும் தரும பொருள், "அப் பொருள், துன்னுங் காலதீதுன் னுதன வில்லையே" (சீவக. 1923) என்றார் பிறரும கேடுற - அழிவுற "வளுசியும வறிதே", "மதுரையும் வறிதே", "உறந்தையும் வறிதே" (சிறுபாண். 50, 67, 83) என்று ராதலின், இதனைப் பேராச் சிறப்பினையுடைய புகாரென்றார். காற்சிலம்பு பகர்தல் வேண்டியெனவே தலைக்கோல முதலிய அணிகள் அனைதீதும், முன்னமே தொலைந்தது விளஙகிநின்றது. சிறப்பிற் பாண்டியனென்றும், பெருஞ்சீர் மாடமதுரையென்றும அடிகள் புகழ்ந்தார், இவையும் பழ வினையால் அழிந்த வென்னும் இரக்கம் தோன்ற. மாடமதுரை புகுந்தன னென்பது - காட்டினன்றி ஓர் ஊரின்கண் உயிரும் பொருளும இழந்தா னென்பது மேல் விளையதீ தோன்றி நின்றது

நகரதீது வாணிகன் கொள்கையாற் கேடுறுதலிற் பகர்தல் வேண்டி மனைவியோடு புகுந்தனனென்க.

20 - 22. அதுகொண்டு காட்ட

(இ - ள்) அங்ஙனம் முன்னுட் புகுந்தனனுய்ப் பிற்றைஞான்று அதனைக் கொண்டுபோய் விற்கைக்குப் பீடிகைமறுகிற் செல்கின்றவன் கூற்றுவன் வந்தாறபோல முன்வந்த பொற்கொல்லனைக் கண்டு அவன் கையிற காட்டவென்க.

கண்டென ஒருசொல் வருவிக்க. அது கொண்டென்றார், அச் சிலம்பால் மேல்விளைவன தோன்ற, அது அநியாயபுரதீதே புகுகின்றவன் கூற்றதீதையும் உடன்கொண்டு புக்கான் என்றற்போன்றிருந்தது மன் : கழிவின்கண் வந்தது

செல்வோன் கண்டு காட்டவென்க.

23 - 6 கோப்பெருந் தேவி கள்வன் கையென

(இ - ள்) அங்ஙனம காடடக்கண்ட பொற்கொல்லன் இப்பெரு விலைச சிலமபு கோப்பெருநதேவிக்கே ஆவதன்றிப் பிறர் பூணுந்தரமல்ல வாதலான், இதனை யான அரசறகு உணர்தீதிவருநதுணையும இக்கோட் டதிதிருக்கவெனச் சொல்லிப்போய்தீ தான முன்பு பணிக்களரியில் வஞ சிதது்க் கொண்டு நிலை நிறறலான் -ஆராயசசி சிறிது பிறநதுவருகின்ற சிலமபினைப் பிறர்நாடடு ஒரு கள்வன் கையிற கண்டேனென்று அரசறகு உரைப்பவென்க.

நான்கொண்டவென்ருர், தன்னைஞசறியதீ தான் கொண்டதனை இங்ஙனம கூறினனென்பது தோனற ாங்கிருக்கவென்ருர், பிறிதோ ரிடதீதாயின் ஊர்காவலர ஆராயவரென்று கருதினனென்பது தோனற. என்றேகியென்ருர், அவன கருதீதும முயறசியும் தோன்ற. சில்லரிச் சிலமபினையென்ருர், தொழிற பன்மை தோன்ற பிறனைர் கள்வன கையிற்கண்டனனென்ருர, தன்னையும் கள்வனென்றமை தோன்ற.

27 - 30. வினைவினை ஈங்கென

(இ - ள்) அங்ஙனம அவன் சொல்லக்கேடட பாணடியன் தான் முறபவதீதிற செய்த தீவினை வநது பலிக்கின்ற காலமாதலாலே ஒன்றை யும தேராளைப் காவலில அடிபபட்டோரை அழைதீது இவன்சொன்ன அக்கள்வனைக் கொலல அசசிலமபையும அவனையும இப்பொழுதே இங்கே கொண்டுவருவீராகவெனச் சொல்லக் கருதினவன் காமபரவசமுய் இச் சிலமபு இவளுடல தீரக்கும மருநதாமென்றும் கருதீதால் வாய்சோர்ந்து கொன்று அச்சிலம்பை இப்பொழுதே கொணர்கவென்று கூறவென்க.

இதனனனறே "தென்னவன் றீதிலன் றேவர் கோமான் கோயில், நல்விருந் தாயினன்" (29 'தென்னவன்') என்ற கருதீதுமெனக் கொள்க. அச்சிலமபெனக் கோப்பெருந்தேவி சிலம்பைச்சுடடிக் கூறினை னையிற கள்வனைக்கொன்று சிலம்பைக் கொணர்க என்றனெனினும் குறற மில்லை, அக்கருதீதினனன்றே வழக்குரை காதையுள்ளும "கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று" (64) என்றது மென்க. இங்ஙனமகூறியது, "பாடடிடை வைதீத குறிப்பி னனும, பாவின் றெழுநத கிளவி யானும், பொருளொடு புணராப் பொயம்மொழி யானும், பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென், றுரைவகை நடையே நான்கென மொழிப" (தொல் செய். 173) என்பதனனென்க. இதனை மேல் வருவனவற்றிற் கும் கொள்க.

இதனை ஆராயுநெறி பலவுளவாகவும், அவற்றில் ஒன்றையும் தேர்ந் திலனென்பார் யாவதும தேராளகியென்ருர், முன்னரக்[1]கைகுறைதீதல்

[1] பாண்டியன் தன் கைகுறைதீததை மேற் கட்டுரைகாதை (42-53) யிலும், "நாடுவிளங் கொண்புகழ் நடுதல் வேண்டிதீதன், ஆடுமழைதீ தடக்கை யறுதீதுமுறை செய்த, பொறகை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்" (தொல். களவு. 1, இளம். நம்பி. 45, உரை; இ. வி. 495,

முதலிய முறைசெய்தோன் இதனைத் தேர்ந்திலனென்று அடிகள் இரங்கிக் கூறினர். கன்றிய காவலரென்றார், அவரும் முன்னர்த் தீதுசெய்யா ரென்பது தோன்ற.

காலமாதலின் தேரானுகிக் கூஉய்க் கொன்று கொணர்கவென்ரு னென இயைக்க.

31 - 6 கொலைக்களப் .. இவளென

(இ - ள்.) அங்ஙனம் கொன்று கொணர்கவென்று அரசன்கூறக் கேட்ட காவலரும் வினைவிளைகாலமாதலிற கொல்லக் கொலையிடத்தே பட்ட கோவலன் மனைவி தனக்கு நிலையிடம் காணுளாய் அவள்தான் பத்தினியாதலிற் பாண்டியன் முன்னர்ச்சென்று அவனுயிர் கேடுறக் கண்ணீர் உகுத்து அவனுரையும் தன்முலை முகத்தெழுந்த தீயை யுண்ணப்பண்ணிய பலரும் புகழப்படும் பத்தினிகாணும இக்குறவர் சொன்னவளென்று கூறவென்க.

பாண்டியனும கூடலும் கேடுற உகுத்து ஊட்டியவென்க கண்ணும் முலையும் உகுத்த நீரானும் நெருப்பானும் அடுதலும் சுடுதலும் செய்தாள் என்பதாயிறறு. இக்கருத்தானன்றே வாழ்த்தினுள்ளும் "தொல்லை வினையாற றுயருழந்தாள கண்ணினீர், கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன்" என்பதூஉம்.

37 - 8 வினைவிளை என்ன

(இ - ள்) நீர் முன்னை வினைவிளைகாலமென்று சொல்லிப்போந்தீர், அவர்க்கு வினை விளைந்தகாலம் என்னையென்று அரசன் வினவவென்க

38 - 54 விறலோய் யானென

(இ - ள்) விறலோய், கேட்பாயாக, நடுக்கமில்லாத சிறப்பினை யுடைய மதுரையாகிய மூதூரிடத்து மன்றப்பொதியில்களில் இறைவன் உறைகின்ற வெள்ளியம்பலத்துள் யான் துயின்றேனுக, செறிந்த இருளின் கண்ணே அந்நகர்க்குக் காவறறெய்வமாகிய மதுரைமாதெய்வம் பெரிய வருத்தமுற்ற வீரபத்தினி முன்னர் வந்து வெளிப்பட்டு நினது மிக்க சினத்தால் வெவ்விய அழலை நின்கொங்கையிடத்தே விளைவித் தோய்! பைந்தொடி! நுங்கட்கு முற்பட்ட நல்வினை முடிந்ததாகலான், நின் கணவனுேடு நினக்கு முறபிறப்பின்கண்ணே குன்ருத புகழை யுடைய நல்ல கலிங்கநாட்டுச் சிங்கபுரமென்னும் நகரின்கண் சங்கம உரை, மேற்.) என்பதிலும், "எனக்குத் தகவன்ரு லென்பதே நோக்கித் தனக்குக் கரியாவான் ருனைத் தவற்றை, நினைத்துத்தன் கைகுறைத்தான் றென்னவனுங் காண, ரெனச்செய்யார் மாண வினை" என்னும் 102-ஆம் பழமொழிச் செய்யுளிலும் காண்க. இதனை 547-ஆம் திருக்குறளுரையில் "தன்கைகுறைத்தான்" எனப் பரிமேலழகரும் குறிப்பித்தனர். இக் கதையையுட்கொண்டே "தீமைசெய் தாய்போற் செங்கை குறைத் தாய் முறையேயோ" என்ருர் பரஞ்சோதிமுனிவரும்.

னென்னும் வாணிகனுடைய [1]மனைவியிட்ட சாபம் இப்பிறப்பின்கண்ணே வந்து மூண்டதாகலின், நீண்டு செறிந்ததோர் கூந்தலையுடையாய்! நின்கணவனை இவ்வேளையன்றி நீ இனிப் பதினாலாநாட்பகல் நீங்கிய பொழுதிற் காண்பை, காணுங்கால் வானேர்வடிவிற் காண்பதல்லது மக்கள் வடிவிற காண்பதில்லையென்று கூற அவ்வஞ்சமற்ற கட்டுரையினை யான் கேட்டேனெனறு கூறவென்க

கேட்டி. இகரவீறறு முன்னிலையொருமை வினைதிரிசொல், "இ ஐ ஆய்" (தொல் வினை. 26) என்னும சூத்திரத்தான் முடிக்க. அதிராச் சிறப்பு-பகைவரால் நடுக்கமில்லாத சிறப்பு, "நீர்முறறி மதில்பொரூ உம" (கலித். 67) என்பதனுன் உணர்க கொன்றையஞ் சடைமுடி, ஆகுபெயரான் இறைவன் பொது இல்-பொதியில், உகரவீறு இகரமாய்த் திரிந்து உடம்படுமெய்யும் பெறறு, "கிளந்தவல்ல" (தொல் குறறிய லுகரப். 78) என்னும் அதிகாரப் புறனடையான் முடிந்தது. மனறப் பொதியிலில் வெளளியம்பலதென்றது, பொன்னமபலமும் உண்டாக லின, என்னை? "கண்ணெலாங் கவர்வன கனக கூடமும் ெ,வண்ணிலாச் சொரிவன வெள்ளி வேயுளும், தண்ணிலாத் தவழ்மணித் தலமுஞ் சார்ந் தரோ, மண்ணினு லியன்றில மதலை மாடமே" (நகரவருணனை, 7) என் றுர் சூளாமணியுள்ளும் நள்ளிருள்-செறிந்தவிருள், [2]உரிச்சொல் ஈறு திரிநதது, இனி வினைதிதொகையாக்கி அனுகரணதையுடைய இரு ளென்பதும சிறந்தது, "நளளென் றிறுதித நடுவுகொள் யாமதி" என்றுராகலிற். ஆரஞர்-பெரிய வருத்தம், ஆவது கணவனை இழத்தல்; "மக்க ளிழந்த விடுமபையினு மனையா ளிழந்த விடுமபையினு, மிக்க விடும்பை வேல்வேந்தே விதவை யிடும்பை யெனவிளம்பித், தக்க வதனு லென்கழுத்திற றுலி நீதந் தருளென்று, தொக்க மணிநீண் முடியானைத் தொழுது பின்னு மிவைசொல்லும்" (உத்தர. திக்கு. 137) என்றுர் பிறரும். வீரபத்தினி மறக்கறபுடையாள் கோப்பெருநதேவி அறக்கற் புடையாள், ஆக [3]ஆறியகறபுளு சீறியகற்புமெனக் கற்பு இருவகை கொதி யழல்-வெவவழல் சீறறம-மிகுசினம விளைத்தோய் முன்னிலைத் தொழிற்பெயர். முதிர்தல்-முற்படுதல் எனவே நல்வினை முடிதலாலென்க. "ஏனை வினையுலப்ப" (நாலடி. 3) என்றுர் பிறரும். இனி முதிர்வினை யால் இவை முடிந்தவென்ன வழக்காறுக்கினும் அமையும பைநதொடியும் கூந்தலும அண்மைவிளி சிங்கல்-குன்றல் வார்தல்-நெடுமை. ஒலி-தழைத்தல் எலலை-பகறபொழுது கோட்டம்-வளைசம. கட்டுரை-பொருள் பொதிந்த சொல், உறுதியையுடைய சொல்லுமாம் வினை விளைவு யாதென்று வினவினறகுப் பாண்டியன் வினைவிளைவு கூறிற்றிலர், என்னை? அது கடடுரைகாதையில விளங்க உரைக்கப்படும்

[1] மனைவி-நீலி, இவள் சாபமிடட செய்தி முதலியவறறை இந்நூற் கட்டுரை காதையாலும, மணி. 26-ஆம காதையாலும உணர்க

[2] உரிச்சொல் நளி [3] "ஆறிய கறபிற் றேறிய நல்லிசை, வண் டார் கூந்த லொண்டொடி கணவ" (பதிற் 90)

55 - 60 அரைசியல் செய்யுளென

அங்ஙனம அரசனேடு சாதிதனுர் கூறக்கேடட அடிகள் பொருட் பகுதியை மூவகை உள்ளுறையாக வகுத்துக் கூறுவார் :

(இ - ள்.) நூலொழுக்கிறுய அரசியலுட சிறிது ஒழுக்கம பிழைப் பினும அவ்வரசரை அறக்கடவுள் தானே கூற்றமாய்க் கொல்லுமென் பதூஉம, புகழமைந்த கறபுடைமகளே மக்களேயன்றித் தேவரு முனிவரு முதலாயுள்ளோர் சென்றேத்துதல் இயல்பாகலும், முன்செய்த இருவினை யும் செய்த முறையே செயதோனை நாடிவநது உருக்கொண்டு நின்று நுகர்விக்கு மென்பதூஉமாகிய இம்மூன்று பகுதியும் இச்சிலம்பு காரண மாக முறைமையிற பிறந்தனவாதலிற சிலப்பதிகாரமென்னும் பெயரான் ஒரு காப்பியமாக நாம நிறுத்துதுமென்று அவவடிகள் சொலலவென்க

அறம் - அறக்கடவுள் பத்தினிக்கு - பத்தினியை. உருத்து - உருக் கொண்டு, முதிரந்தென்றுமாம விணை - தொழில. நாடடுதும், உயர் திணைக்கண் வநத இடவழுவமைதித் தனித்தன்மை; அஃது உளப்பாட்டுத் தன்மைபோன்றிருந்தது. பாட்டுடைச் செய்யுள்-பல பாக்களோடு உரைப் பாட்டையும் இசைப் பாட்டையுமுடைய இயலிசை நாடகப் பொருட டொடர் நிலைச்செய்யுள். அறம் கொல்லுமென்பது, "என்பி லதனை வெயில் போலக் காயுமே, அன்பி லதனை யறம்" (குறள், 77) என்பதனாலுணர்க.

ஆவதூஉம், ஏதீதலும், ஊட்டலும் இச்சிலம்பு காரணமாகப் பிறந்தனவென ஒரு சொல் வருவித்து முடிக்க

61 - 2. முடிகெழு யருளுகென் ருற்கு

(இ - ள்.) முடிபொருந்திய தமிழநாட்டு வேநதர் மூவர்க்கும உரிய தாகலின், அடிகள் நீரே அருளிச் செய்கவென்று வினவிய சாதிதறகென்க.

கெழுவென்னும் சாரியை, "லனவென வரூஉம புள்ளி யிறுதிமு, னும்முங் கெழுவு முளப்படப் பிறவும், அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச், செய்யுட் டொடர்வயின் மெயபெற நிலையும்" (தொல் குற றியலுகரப். 76) என்னும் சூத்திரத்துள், அன்னமரபின் மொழியிடைத் தோன்றி என்பதனால் அவ்விருபுள்ளியீற்றுச் சொல்லும் அல்லாதனவும் சாரியை பெற்று முடிவனவுளவென்றுராகலின், புள்ளியீறல்லாதவழி வந்த சாரியைச் சொல்லெனக் கொளக. சாரியையாவது சொல் தொடர்நது செல்லும் நெறிக்கண் நின்று அதற்குப் பற்றுக்கோடாகச் சிறிது பொருள் பயந்ததும் பயவாததுமாய நிறபது. அவற்றுள் இது சிறிது பொருள் பயப்ப நிற்பது, பொருந்துதலென்னும் பொருண்மைசாரும. மூவர்க்கும் உரியது, புகாரினும் மதுரையினும் வஞ்சியினும் நிகழ்ந்ததாகலின். அடிகள் அண்மைவிளி. என்ருற்கு - தான் பாடக்கருதி விஞவின சாதி தற்கு, அங்ஙனம் கூறுது இங்ஙனம் கூறினரென்க என்சொல்லிய வாறேவெனின்,—இச்செய்கின்ற காப்பியம் மூவேந்தர்க்கும உரியதென் பதனால், ஏனையோரை இவர் புகழ்ந்துரையாராகலின், யாம காப்பியம செய்யக்கடவேமென்பது கருதி நீரே அருளுகென ஏகாரவினுப்

பொருண்மை தோன்ற இதுகருதி இதுசொன்னற்கு அவர் கருதியபொரு ளிற்கு உடம்படாது சொல்லிறகு உடமபடடாரென்பதாயிற்று.

இனித் தாம வகுத்துக்கொண்டதனைக் கூறுவார்

62 - 3 அவர் மங்கல வாழ்த்துப் பாடலும்

(இ - ள்) அவர்மணத்தில மகளிர் வாழ்த்துதலையுடைய பாடலும்.

மங்கலம - கலியாணம இதனை மங்கலவாழ்த்துக் காதையுமென் னுது பாடலுமென்றது என்னையோவெனின்,—இஃது ஆசிரியப்பாவால் வாராது கொச்சகக்கலியால் வருதலானும, கதையையுடையது காதையா மாதலானும, அவவாறு இதிற கதை நிகழசசியினமையானும, வாழத்தும் உரையும பாடலுமாய வருதலானும இஙஙனம பெயர் கொடுத்தாரென உணர்க அஃது அற்றுக , மேலும் கானல்வரி, வேடடுவவரி, ஆயசசி யர்குரவை, துன்பமாலை, ஊர்சூழவரி, வஞ்சினமாலை, குன்றக்குரவை இவையிற்றையும் காதையென்றிலராலெனின,—அவறறைக் கூறுததும் சில வேறுபாடு கருதிப்போலும , என்னை வேறுபாடெனின், அவை தத்த முடிவிற கூறுதும.

63 - 4 குரவர் மனையறம் படுத்த காதையும்

(இ - ள்.) இருமுதுகுரவரும இவரை இல்வாழ்க்கையில் அடிப்படுத்த வேண்டி வேறுபடவிட்ட காதையும்,

64 - 5 நடநவின் மங்கை மாதவி யரங்கேற்று காதையும்

(இ - ள்) ஐயாண்டில் தண்டியமபிடித்து எழாண்டு நடம் நவின்ற மாதவி மஙகைப்பருவதீதே அரங்கேற்றின காதையும,

66 அந்தி மாலைச் சிறப்புச்செய் காதையும்

(இ - ள்.) அநதிக்காலத்துமாலையைச் சிறபபுச செய்த காதையும்,

67 இந்திர விழவூ ரெடுத்த காதையும்

(இ - ள்) அந்நகரின்கண் இந்திரனுக்கு விழவெடுத்த காதையும,

68 கடலாடு காதையும்

(இ - ள்.) அங்ஙனமெடுத்த விழவிறுதியிற கடலாடின காதையும,

69 மடலவிழ் கானல்வரியும்

(இ - ள்.) அங்ஙனம் கடலாடிய கோவலனும மாதவியும் கழிக்கான லிடத்து யாழப்பாட்டு நிகழத்திய கானல் வரியும,

இஃது இசைப்பாவாற பெறற பெயர். இதனுளளும் கதை நிகழாமை யுணர்க

69 - 70 வேனில்வந் திறுத்தென மாதவி யிரங்கிய காதையும்

(இ - ள்.) இளவேனில்வந்து தலைப்பட்டதாகப் பிரிந்த மாதவி வருந்திய காதையும்,

70 - 71 தீதுடைக் கனத்திற முரைத்த காதையும்

(இ - ள்) கண்ணகி தான் கண்ட தீங்கையுடைய கனவின் திறத்தைத் தேவந்திக்கு உரைத்த காதையும்,

இது கலிவெண்பாட்டாகலின், "ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலால், திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே" (தொல். செய். 153) என்பதனுற் கனநிலையுரைத்தற் பொருண்முடிபாகிய பாலதனைக் கூறுதலிற் காதையாயிறறென வுணர்க.

71 - 2 விஞத்திறத்து நாடுகாண் காதையும்

(இ - ள்.) கண்ணகியார் மதுரைமூதூர் யாதென விஞவின திறத்தையுடைய சோணுட்டின் வளனை அவர் கண்ட காதையும்,

இனிக் கவுந்தியடிகள் வினவின திறமெனவும், பிறர் வினவும் திறத்தையுடைய எனவும் அமையும்.

72 காடுகாண் காதையும்

(இ - ள்) அங்ஙனம் மருதநிலமாகிய நாட்டினைக் கண்டு இன்புற்றவர் பாலை நிலமாகிய காட்டினைக்கண்டு துன்புற்ற காதையும,

73 வேட்டுவ வரியும்

(இ - ள்.) வேட்டுவ மகளாகிய சாலினி கொற்றவை உருக்கொண்டாடிய கோலச்சாரியும்,

"இருவகை பல்வகை யென்னும் விலக்கோ, டரியவுறுப் புப்பதிஞெராட்டுக் - குரவைவரி, †சொக்க மவிநய நாடக மென்றிவற்றுல், தக்கவனே யாடலா சான்" என்றமையான், வரியென்பது கோலச்சாரி, இது வேட்டுவ மகளாகிய சாலினி கொற்றவை யுருக்கொண்டு ஆடுதலின், "கொற்றவை கொண்ட வணிகொண்டு நின்றவிப், பொறறெடி மாதர் தவமென்னை கொல்லோ" (12 'கொறறவை') என்பதனுலறிக. கூத்துள் படுதலின், நாடக வரிப்பெயராய், வேட்டுவவரி நிகழ்தலின் இது வேட்டுவ வரியாயிறறு.

இது கூத்தாறபெறற பெயர்

73 - 4 தோட்டலர் கோதையொடு புறஞ்சேரி இறுத்த காதையும்

(இ - ள்) கண்ணகியோடு மதுரைப் புறஞ்சேரியிற சென்று விட்ட காதையும்,

74 - 5 கறங்கிசை யூர்காண் காதையும்

(இ - ள்.) முழங்காநின்ற முரசொலியையுடைய மதுரையைக் கோவலன் கண்ட காதையும,

(பி - ம்.) † 'சோகம்', 'சேதம்'.

75 - 6 சீர்சா னங்கை யடைக்கலக் காதையும்

(இ - ள்) அழகெல்லாமமைந்த கண்ணகியாகிய நங்கையை மாதரி பாற் கவுந்தியடிகள் அடைக்கலம கொடுத்த காதையும்,

76. கொலைக்களக் காதையும்

(இ - ள்.) கோவலன் கொலைக்களப்பட்ட காதையும்,

77. ஆய்ச்சியர் குரவையும்

(இ - ள்) தம் சேரிக்கு உற்பாதசாந்தியாக மாதரிமுதலாயுள்ள ஆய்ச்சியர் குரவைக்கூத்தாடின முறைமையும,

" குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் விறலும், எய்த வுரைக்கு மியல்பிற் றென்ப " எனவும், " குரவை யெனப தெழுவர் மங்கையர், செந்நிலை மண்டலக் கடகக் கைகோத், தந்நிலைக் கொட்பநின் ருட லாகும " எனவும சொன்னராகலின், இதுவும ஆயச்சிய ரிடத்து நிகழ்தலான் ஆய்ச்சியர்குரவையெனக் கூத்தாற பெறறபெயர்.

77 - 8 தீத்திறங் கேட்ட துன்ப மாலையும்

(இ - ள்) அங்ஙனம அவன் கொலையுண்ட தீத்திறத்தைக் கண்ணகி கேட்டுத் துன்புறற இயலபும,

இதுவும் ஊர்சூழ்வரியும சிறிது கதைநிகழ்ச்சியுளவெனினும் மருடகையென்னு மெயப்பாடும அவலம் அரறறுக் கவலை கையாறென்னு மிவையும் (மணி 30 116) நிகழ்தலியலபினுன் இதனை மாலையென்ரு ரெனக்கொள்க

78 - 9 நண்பக னடுங்கிய வூர்சூழ் வரியும்

(இ - ள்) எல்லாரும் காண நாணிறந்து வெளிப்பட்டவுருவினெடு கண்ணகி ஊர்சூழவந்த ஊர்சூழ்வரியும,

கண்ணகி ஊர்சூழவருவதனைப் பதினிப்பெண்டிர் கண்கூடாகக் காண்டலின் இஃது ஊர்சூழ்வரி யென்பதாயிறறு

இதுவும் கூத்தாற பெற்றபெயர்

79 - 80 சீர்சால் வேந்தனெடு வழக்குரை காதை யும்

(இ - ள்.) புகழமைந்த தென்னனெடு கண்ணகி வழக்குரைத்த காதையும , உரைகாதை . விளைதீதொகை , இறப்பு.

80. வஞ்சின மாலையும்

(இ - ள்.) அங்ஙனம் தானுரைத்த வழக்கும் தோற்று உயிரும் தோறற நெடுஞ்செழியன்தேவியைநோக்கிக் கண்ணகி வஞ்சினங்கூறிய இயல்பும்,

வஞ்சினமாவது மேற்கோள். இக்கலிவெண்பாட்டுப்பத்தினிதீதன் மைத்தாகிய ஒரு பொருளையே கருதிக்கூறிய இயல்புடைத்தாகலின், மாலையென்ரூர்

81. அழற்படு காதையும்

(இ - ள்) அங்ஙனம் வஞ்சினங் கூறினவள்முலைமுகத்து எழுந்த தீ அவளேவிய இடமெங்கும் படடு எரித்த காதையும,

81 - 2 அருந்தெய்வந் தோன்றிக், கட்டுரை காதையும்

(இ - ள்) அங்ஙனம் அழறபடுதலின் அதறகாற்றாது மதுரைமா தெயவம அவ்வழல் தணித்தறகு வந்து இவளது பவதிதொடர்பு கட்டு ரைத்த காதையும,

82 - 3 மட்டலர் கோதையர் குன்றக் குரவையும்

(இ - ள்) மதுவொழுக மலர்ந்த கோதையினையுடைய குறதியர் இவளை வேங்கை நிழறகண் கண்டதறகு உறபாதசாந்தியாக முருகவேளை நோக்கி அக்குன்றினகண் ஆடிய குரவையும்,

ஆய்ச்சியரகுரவையிற கூறியது (77) இதற்குங்கூறுக கோதை யென்று பாடம கூறிக் கோதைக்கு அவர்கள் எடுத்த குரவையெனினும அமையும்.

83 என்றிவை யனைத்துடன்

(இ - ள்) என்று சொல்லபபடட இவ்விருபதியுநான்குடனே,

84. காட்சி—(இ - ள்.) காட்சிக் காதையும்,

கறகாடசியும, குறவர் [1] பாகுடக் காட்சியுமென்க

84 கால்கோள்—(இ - ள்) கறகொண்ட காதையும், கற்கோள் கால்கோளென விகாரம

84 நீர்ப்படை—(இ - ள) அக்கொண்ட கல்லினைக் கங்கை யாற்று நீர்பபடுத்தின காதையும,

84 நடுகல்—(இ - ள) அக்கல்லினை நட்ட காதையும்,

85 வாழ்த்து—(இ - ள்) அங்ஙனம தடுங்கல்லான பிரதிட் டையும் விழவும் பெறற பத்தினிக்கடவுள் செங்குடடுவனையும் நெடுஞ் செழியனையும பெருங்கிள்ளியையும வாழ்த்தின காதையும,

85. வரந்தரு காதையொடு

(இ - ள்.) அங்ஙனம் வாழ்த்திய கடவுள் அவரோடு கனகவிசயர் முதலிய ஆரியமன்னருள்ளிட்டார்க்கு வரங்கொடுத்த காதையோடே,

ஒடு - ஒப்பலொப்புரை, எண்ணெடுவுமாம். தருதல் - கொடை.

86. இவ்வா றைந்தும்

(இ - ள்.) முப்பதுமென்றெண்ணப்பட்ட,

[1] சீவக. 2708, ந.

87 உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்

(இ - ள.) உரையிடையிட்டனவும் பாட்டுடையனவுமாகிய செய்யுளை, அனைதீதுடன் காதையொடு இவ்வாறைந்தும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளென்க உமமை முற்று

88 உரைசாலடிக ளருள

(இ - ள்.) புகழமைந்த இளங்கோவடிகள அருளிச் செய்ய, அருளுகென்றற்கு அருளவெனக

88 - 9 மதுரைக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்

(இ - ள்.) மதுரைக் கூலவாணிகனை சாத்தன் கேட்டனன், கூலம் எண்வகைத்து, அவை —நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, பதினெண்வகைத்தென்பர் கூத்த நூலார்

90 இது—(இ - ள்.) இவ்வரையறை

90 பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென்

(இ - ள்) அறபபால், பொருட்பால், காமத்துப்பாலாகிய அப்பால் களின் வகையைத் தெரிந்த செய்யுளின் பதிகத்தினது மரபு இதுவென்க.

என்னென்னும் அசைசசொல் ஆசிரியப்பாவிறகு முடிபு சிறப் புடைத்து.

அடிகட்கு அறிந்தருள் நீயென இருந்த சாத்தன் உரைப்போன் இவ னென, வினைவினைவு யாதென, விறலோய, கேட்டனன் யானென, அறங் கூற்றுவதாஉம உயர்நதோரேத்தலும ஊடடுமென்பதாஉம் காரணமாகப் பெயரான் நாடடுதும் யாம் ஒரு பாட்டுடைச் செய்யுளென, அருளுகென் றுறகு அருளக் கேடடனனென்க.

அறுபதீதெட்டாமடியுள், "கடலாடு காதையும" எனக் குறளடியும், "வாழதீது வரந்தரு காதையொடு" (85) எனச் சிந்தடியும், "இவ்வா றைந்தும" (86) எனக் குறளடியும் வந்து, "ாற்றய லடியே யாசிரிய மருங்கிற, ரேற்ற முச்சீர்த் தாகு மென்ப" (தொல். செய். 68) என்ற ஆசிரியர், "இடையும் வரையார் தொடையுணர் வோரே" (தொல் செய் 69) என்றதனை குட்டச செந்தூக்காயிறறு.

இது நாறபொருளுள்ளும் அகத்திணைக்கண்ணது இன்பமாகலாலும், புறத்திணைக்கண்ணது பொருளும அறனுமாகலானும் வீடொழிந்த முடிபு கூறிநின்றது அதனனன்றே, "மணிமே கலேமே லுரைப்பொருண் முறறிய சிலப்பதிகாரம்" (நூறகட்டுரை, 17-8) என்பாரானதுவுமென்க

பதிகம் முற்றிற்று

[1]உரைபெறு கட்டுரை



1 அன்றுதொட்டுப் பாண்டியனுடு மழைவறங்கூர்ந்து வறுமையெய்தி வெப்புநோயும் குருவும் தொடரக் கொற்கையி லிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு †சாந்தி செய்ய நாடுமலிய மழைபெய்து நோயும் துன்பமு நீங்கியது.

2. அதுகேட்டுக் [2]கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்திசெய்ய மழைதொழில் என்றும் மாறுதாயிற்று

3 அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகுவென் பான் நங்கைக்கு [3]நாட்பலிபீடிகைக் கோட்டமுந்துறுத்தாங்கு [4]அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித்திங்க ளகவையின் ஆங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறை யெடுப்ப மழைவீற் றிருந்து வளம் பல பெருகிப் [5]பிழையாவிளையுள் நாடாயிற்று

4 அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி [6]கோழியகத்து [7]எத்திறத்தானும் வரந்தருமிவளோர் பத்தினிக்கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக்கோட்டமும் சமைத்து [8]நித்தல்விழாவணி நிகழ்வித்தோனே

---

1 உரைபெறுகட்டுரை - உரைத்துப்போதுகின்ற கட்டுரை.

2. கொங்கிளங்கோசர் - குறுமபு செலுத்துவார் சில வீரர்.

3. நாட்பலிபீடிகைக் கோட்டம் - நித்தலும் பலியிடும் இடத்தை யுடைய கோட்டம். 4. அரந்தை - துக்கம். 5. பிழையாவிளையுள் - குன்றுவிளையுள்.

6. கோழி - உறையூர். 7. எத்திறத்தானும் - வேண்டினுர் வேண் டியவாறெல்லாம். 8. நித்தல்விழாவணி - நித்தமாகிய அணிவிழா.

---

† சாந்தி செய்தல் . பதிற். 9 : பதி. 15.

1 அன்றுதொட்டு . நோயுந்துன்பமுநீங்கியது

அன்றென்றது கதையை உடகொண்டு நின்றது, ‘‘வெள்வா ளெறிந்தனன் விலங்கூ டறுதீதது, புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப, மண்ணக மடந்தை வான்றுயர் கூரக், காவலன் செங்கோல் வளைஇய வீழந்தனன், கோவலன் ’’ (16 213-7) என்ரு ராகலின்.

(இ - ள்) பாண்டியனுடு அன்றுதொடங்கி மழைவறதீதன்மிக்கு அதனுனே வறுமையுற்றுதீ தொழுநோயும குருவும் இடைவிடாது நலித லிற கொற்கைக்கண் இருந்த இளஞ்செழியன் நங்கைக்கு ஆயிரம் பொற் கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியாற சாந்திசெய்து விழவெடுதீத லானே அவன் நாடு மிகவும் மழைபெய்து முற்கூறிய வறுமையும் நோயும் நீங்கிற்று.

வெப்பு - தொழுநோய, ‘‘ வெப்பின்முப்பழச்சுனை ’’ (சீவக. 75) என்ரராகலின் இது வெதுப்பெனினும் அமையும்.

2 அதுகேட்டு மாருதாயிற்று

(இ - ள்) அங்ஙனம் செழியன் நன்மைசெய்து அவைநீங்குதலின் அதனைக்கேடடுக் கொங்குமண்டிலதீது இளங்கோவாகிய கோசரும நங் கைக்கு அங்ஙனம் சாந்தியும் விழவும செய்தலான் அவை நீங்குதலோடே மழை பெய்தறருழில் பெயயுநாள் என்றும் வழுவாதாயிற்று.

பெய்யுநாளென்றது திங்கண்மும்மாரியை, பருவநாளெனினும் அமையும்

3 அதுகேட்டு நாடாயிற்று

(இ - ள்) அதுகேட்டுக் கடலை அகழாகவுடைய இலங்காபுரதீதுக் கயவாகு வென்று பெயர் கூறப்பட்ட அரசன் நஙகைக்கு அங்ஙனம் நாள்தோறும் பலிகொள்ளுதலையுடைய பலிபீடதீதை முநதச்செய்து பின்பு கோட்டமும அமைதீது முறகூறிய துன்பங்களைக்கெடுதீது நமக்கு வேண்டும வரங்களை இவள்தருமென்று துணிந்து ஆடிதீதிங்களிடதீதே ஆட்டைவிழாவாகதீ தன நகரவீதிதோறும் உலாச்செயவிக்க மழை குறைவின்றி நிலைபெறுதலானே அன்றே பொய்யாது விளையும் விளை விணையுடைய நாடாயிறறு அவன் நாடு.

பாடி - நகரி.

4 அதுகேட்டு நிகழ்வித்தோனே

(இ - ள்) அதனைக்கேட்டுச் சோழநாட்டு உறையூரிட தீதே பெரு நற்கிள்ளி யரசனுகிய வளவன இவள பதினிக்கடவுளாதலின், எதி திறதீதானும் நமக்கு அரந்தையைக்கெடுதீது வரந்தருமெனக்கருதி நங் கைக்கு அங்ஙனம் கோடடமும் அமைதீது நிதீதல்விழவும நடதீதினு னென்க.

எதிதிறதீதானுமென்ரூர், இவள்பிறந்த உரிமைபற்றி கோழியென் றது, ஒருகோழி நிலமுக்கியதீதால் யானையொடு பொருது அதனைப் போர்

தொலைத்தல் கண்டு அந்நிலத்திற்செய்த நகர்க்குப் பெயராயிற்று, "முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய, புறஞ்சிறை வாரணம்" (10. 247-8) என்பர் மேலும். நிதித்தல் விழா - சீபலி அரந்தை-துன்பம

உரைபெறுகட்டுரை - இவை முற்கூறிய கட்டுரைச் செய்யுள். "உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், உரைசா லடிக ளருள" (பதி 87-8) என்றமையால், காப்பியங்கட்குச் சிறுபான்மை இவ்வுறுப்புக்களும் சில வருமெனக்கொள்க எனின்? "உரையும் பாடையும் விரவியும் வருமே" (தண்டி பொது 11) எனபது அணியியலாகலின்.

உரைபெறுகட்டுரை முற்றிற்று

[1] நூற்சிறப்புப்பாயிரம்

வெண்பா

நீடிருங் குன்ற நிழல்காலு மண்டிலத்துக்
கோடுகோ டாய்த்தோன்றுங் கொள்கைத்தே—கூடலார்
கொண்டாடுஞ் செஞ்சொற் குடக்கோ முனிசேரன்
தண்டா வுரைமுத் தமிழ்

கட்டளைக்கலித்துறை

நலத்தகு நால்வரென் றோதிய நான்முகத் தோன்படைத்த
குலத்ததி காரவ ணிகர் குலபதி கோத்ததமிழ்ப்
புலத்ததி காரமு றைபதி பூம்புகார் போற்றநின்ற
சிலப்பதி காரஞ் † செய் தானெடுஞ் சேரர் சிகாமணியே

---

[1] இவ்விரண்டும் பழைய செய்யுட்களே, இயற்றியவர் பெயர் விளங்க வில்லை.

(பி - ம்.) † 'செய்தான்சேரனன்பர் சிகாமணியே'

முதலாவது

†புகார்க்காண்டம்

(க) மங்கலவாழ்த்துப்பாடல்

திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதும்
‡கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்
ஞாயிறு போற்றுது ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் றிகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்
மாமழை போற்றுது மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்
பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்
ஆங்கு,
பொதியி லாயினு மிமய மாயினும்

1. திங்களைப்போற்றுதும் திங்களைப்போற்றுதுமென்னும் அடுக்கு சிறப்பின்கண் வந்தது

3. அங்கணுலகு - அழகிய உலகிடம்.

8. நாமநீர் - அச்சத்தைத் தருகின்ற கடல் 9. மேனின்று-எல்லாப் பொருளுக்கும மேலாகநின்று.

11. வீங்குநீர் - நிறைநத நீர்.

1 - 12 இவை நானகு சிநதியல வெண்பாவும செம்பியனையும் புகாரினையும் சிறப்பித்தன 13 ஆங்கு - ஆதலால்.

அடி, 1-3 புறநா. 60 (மேற்) இது குடைமங்கலம் (தொல். புறத். 30, இளம், 36, ந) அடி, 4-6 இது திகிரியைப்புனைந்துரைத்தது (தொல். புறத் 36, ந) அடி. 7-9. "மதிவாழி ரவிவாழி மழைவாழியே" (தக்க. 9, உரை), இத்தொடர், "திங்களைப் போறறுதும்" என்பது முதலிய மூனறையும் பினபறறிநிற்கும முறை இங்கே அறிதறபாலது.

(பி - ம்.) †'புகார்காண்டம' ‡'கொங்கலரார்ச'

பதியெழு வறியாப் பழங்குடி † கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லதை
ஒடுக்கங் கூரு ருயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே
அதனால்,
நாகநீ ணகரொடு நாகநா டதனெடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னில்
மாகவா னிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
‡ ஈகைவான் கொடியன்னு ளீராருண் டகவையாள்
அவளுந்தான்,
¶ போதிலார் திருவினுள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாண்மன்னே
ஆங்கு,

16 பொதுவறு சிறப்பு - தனக்கே உரிய சிறப்பு

14-9 பொதியில் இமயம் புகாரென்ற மூன்றனையும் ஒருவாறருள ஒப்புரைக்கின்றார்

17. (பா) நிலைஇய - நிற்பதாக. 17 - 20 கேள்வியான் முழுதுணர்ந் தோர் அப்படிப் புகழினல்லது இம்மூன்றிடத்திறகும ஒடுக்கம கூறார்; உயர்ந்தோருண்மையானென்க. புகார்ச்சிறப்புக் கூறியவாறு 20 அதனால் - ஆதலால்.

21 - 2 நாகருலகத்துடனும தேவருலகத்துடனும போகம நீள்புகழ் இவை பொருந்தும்.

23. மாக வான் - விண்ணின் மேகம் 24. ாகை - பொன்

26 போதிலார் திரு - போதில் நிறைந்த திரு; இவள்வடிவென வருவிக்க.

28 - 9. வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் - விளங்கிய பெருங்குணத்தாற் காதலித்தவள்.

இவளை முன்கூறிற்று, கதைக்கு நாயகியாதலின்

அடி, 15 **மலைபடு.** 479.

(மேற்) அடி, 21 "மேலைநாகர் கீழைநாகர் போன்மயங்கி வீழவே" (தக்க. 510, உரை.)

(பி - ம்.) † 'தழீஇய' ‡ 'ாய்கை' ¶ 'போதில்வாழ்'

பெருநில முழுதாளும் பெருமகன் றலைவைத்த
ஒருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பான்
இருநிதிக் கிழவன்மக னீரெட்டாண் டகவையான்
அவனுந்தான்,
மண்டேய்த்த † புகழினன் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினு ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலனென் பான்மன்னே
அவரை,
இருபெருங் குரவரு மொருபெரு நாளான்
மணவணி காண மகிழ்ந்தனர் ‡ மகிழ்ந்துழி
யாஅன யெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் ¶ கீந்தார் மணம்
அவ்வழி, [வெண்குடை
முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம்
அரசெழுந்ததொர் படியெழுந்தன வகலுண்மங்கல வணியெ
மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து [முழந்தது

31 - 3 பெருமகன் முன்வைக்கப்பட்ட வணிகராகிய தன் கிளையோடு கூடி உயர்ந்த செல்வத்தினையுடையான், இது [1] சுறறதத்தாற் சுற்றப் பட வொழுகல், எனவே தமக்குத் தாமே நிகராகிய வணிகரென்றவாருயிற்று. மாசாத்துவான் குடிப்பெயர்.

36. மண் தேய்த்த புகழ் - பூமி சிறுகும்படி வளர்ந்த புகழ். 36 - 9. மடவார் ஆயத்துக் கண்டேத்துஞ் செவ்வேளென்று கண்டார் கொண்டேத் தும் கிழமையான்.

43 - 4. யாஅனயெருத்தத்தின்மேல் அணியிழையாரை இருத்தி மா நகர்க்கு அறிவித்தார்.

46. முருடு - மத்தளம்.

47. அகலுள் - ஊரிலே. மங்கலவணி எழுந்தது - மாங்கலிய சூத்தி ரம் வலஞ்செய்தது.

48. மாலைதாழ் சென்னித்தூண்.

---

[1] "சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்" (குறள், 524)

(பி - ம்.) † 'புகழுடையான்' ‡ 'மகிழ்ந்துழீஇ' ¶ 'கீயந்தார்மணம்'

நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணேன்பென்னை
விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
உரையினர் பாட்டின ரொசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு †கோதையர்
ஏந்திள முலையின ரிடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிநத பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
போதொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியன்னார்
காதலற் ‡பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி
¶அங்க ணுலகி னருந்ததி யன்னாள
மங்கல நல்லமளி யேற்றினர் தங்கிய
இப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா வெப்பாலும்
செருமிகு $சினவேற் செம்பியன்
ஒருதனி யாழி §யுருட்டுவோ னெனவே

---

50 - 53. சந்திரன் உரோகிணியைச்சேர அருந்ததியினது தகை யாளைக் கோவலன் கலியாணம் பண்ணுவது.

54 - 9. விரையினர் மலரினராகிய விளங்குமேனியர்; பிறவுமன்ன. இவை வினைக்குறிப்புப்பெயர்.

60. இச்சொல்லப்பட்ட கொடியன்னார்.

63. உலகினருந்ததி. இல்பொருளுவமை.

66. உழையதாம்படி (68) உருட்டுவோனென (64) அமளியேற்றினு ரென்க.

அடி, 50. "அங்க ணிருவிசும்பு விளங்கதி திங்கட், சகடம் வேண்டிய துகடீர் கூட்டதீது.. .....வதுவை மண்ணிய மகளிர்" (அகநா. 136.)

அடி, 56. "பலவகை விரிதித வெதிர்பூங் கோதையர், பலர்தொகு பிடிதித தாதுகு சுண்ணதீதர்" (மதுரைக். 398 - 9.)

(பி - ம்) †'மேனியர்' ‡'பிரியாமைக் கவவுக்கை ஞெகிழாமை' ¶'அங்கண்விசும்பி னருந்துதி' $'நெடுவேற்' §'யுருட்டுகோ'

1 - 3. திங்களை.. அளித்தலான்

(இ - ள்.) நாம் திங்களைப் போற்றுவேம், திங்களைப் போற்றுவேம்; அஃது எற்றுக்கெனின், தாது பரத்தல் செய்த மாலையையுடைய சென்னியுடைய குளிர்ச்சியையுடைய வெண்குடைபோன்று பொதுவற இவ்வுலகிற்கு அளிசெய்தலானென்க.

இது பண்பும் பயனும் கூடின உவமம். கொங்கு - தாது அம் - அழகு. கண் - இடம். போற்றுதும் • பன்மைத் தன்மை, "அம்மாம்" (தொல் விளை 5) என்னும் சூத்திரத்துக் கடதறவால் முடிந்தது.

இது "நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபு" (தொல். புறத். 36.)

4 - 6. ஞாயிறு திரிதலான்

(இ - ள்) நாம் ஞாயிறறைப் போறறுவேம், ஞாயிற்றைப் போற்றுவேம், அஃது எற்றுக்கெனின், காவிரிநாட்டை யுடையானுடைய ஆழி போலப் பொலிவு பெற்ற கொடுமுடியையுடைய மேருவை வலமாகத் திரிதருதலானென்க.

திகிரி - ஆக்கினை சக்கரம், இது தொழிலுவமம்

7 - 9 மாமழை .. சுரத்தலான்

(இ - ள்.) நாம் பெரிய மழையைப் போற்றுவேம, பெரிய மழையைப் போற்றுவேம், அஃது எற்றுக்கெனின், அச்சத்தைத் தரும் கடல்சூழுலகிற்கு அவன் அளிசெயயுமாறுபோல மாறுது மேலாய்நின்று தன்பெயலான் வளத்தைச் சுரத்தலானென்க.

நாம நாமமென உரிச்சொல் ாறு திரிந்தது, புகழெனினும் அமையும்; ஏழ்வகைப் பெயருமாம வேலி - சூழ்தல் அளி - கொடை. மேனின்று - மேலாய் நின்று தான் அசை. சுரத்தல் - இடைவிடாது சொரிதலுமாம். உலகிற்குச் சுரத்தலானென இயையும்

10 - 12 பூம்புகார் ஒழுகலான்

பூம்புகார் விகாரம, பூ - பொலிவு

(இ - ள்) நாம் புகாரைப் போற்றுவேம், புகாரைப் போற்றுவேம், அஃது எறறுக்கெனின், மிக்க கடலை வேலியாகவுடைய உலகின்கண் அவன் குலம்புகழ்வார் இதனையும் புகழ்வாராகலினென்க.

உலகிறகு - உலகின்கண், உருபுமயக்கம, "யாதனு. ..சாரும்" (தொல். வேறறுமை மயங். 23) என்பதனுன் முடிந்தது; "தில்லைச்சூழ் பொழிற்கு" (திருச்சிற். 167) என்றாற்போல

திங்களை முற்கூறினார், இதிதொடர்நிலைச் செய்யுட்குச் சிறந்த முதன்மொழி அதுவாகலான். இதிதிங்கள் முதலியவறறு இவனளிதீதல் முதலிய செய்கையொதீதலான், இவையும் இவனுற் சிறந்தனவென்பதாம் இறப்பப் புனைந்துரைதீதற்கு, "குடைநிழல் மரபு" (தொல். புறத். 36) என்ற தனால் கொடையும் திகிரியும் உயர்ச்சியும் புனைந்து கூறியவாறுயிற்று.

13 - 9 ஆங்கு முழுதுணர்ந்தோரே

(இ-ள்.) அப்படிப் போற்றினல்லது, முனைவனூலின் முடிதீதகேள்வி யான் எனைத்துப் பொருளையும் உணர்ந்த பெரியோர், பொதியில் இமயம் புகாரென்னும் இமமூன்றும் ஒருதன்மையவாதலான், ஆதியிற்றேன்றிச் சலிப்பின்றி நிலைபெற்றனவென்று கூறினல்லது, அவற்றிறகு அந்தமுண் டென்று கூறார், அவற்றில் உயர்நதோருண்டாகலானென்க.

ஆயினுமென்பது ஓர் எண்ணிடைச்சொல், "கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும், கிளந்தவற றியலா னுணர்ந்தனர் கொளலே" (தொல் இடை. 48) என்னும் புறனடையாற கொள்க. பதியெழுவறியா - பதியி னின்றும் பெயர்தலை அறியாத, எனவே பகையின்மை கூறிற்று. பழங் குடி - தொன்மரபு, ஆதிகாலத்தேறிய குடியுமாம. கெழீஇய - பொருந்தின பொதுவறுசிறப்பு - தனக்கே உரிய சிறபபு ஒடுக்கம் - முடிபு உயர்ந தோர் - முனிவனும், இறைவனும, அரசனும், இனி, உயர்ந்தோர் அகத் தியனும் இருடிகளும் பழங்குடியிலுள்ளாரும என்றுமாம், என்றது இம யதீதோடும் பொதியிலோடுமுள்ள இருடிகளையும் புகாரிலுள்ள வணி கரையும் உவமித்தவாரும் உண்மையின் - உண்டாகலின். முடிதீத கேள்வி - கரைகண்ட கேள்வி

இவற்ருற் செம்பியன்சிறப்பும் புகார்ச் சிறப்பும் கூறியவாருயிற்று

20. அதனால் (இ - ள்) அஃது அத்தன்மையதாகலான்.

என்றது புகார் நிலைபேறுடையதாகலாற் போகமும் புகழும் நிலைபே றுடையவென்றவாறு

21 - 4 நாகநீ ணகரொடு... அகவையாள்

(இ - ள்) சுவர்க்கம் [1]பவணமென்னும் இவற்றிற்குள்ள புகழும் போகமும் நிலைபெற்ற அப்புகாரென்னும் நகரின்கண் மழைபோல் வழங் கும் கையையுடைய மாநாய்கனுடைய குலதீதிறறேன்றிய கொம்புங்கொடி யும் போல்வாள், பன்னீராண்டிற்குட்பட்ட பிராயதீதாளாயினளென்க.

நாகநீணகர் - சுவர்க்கம். நாகநாடு - பவணம். போகநீள்புகழ் : உம் மைத்தொகை; இருபெயர்க்கண் வந்தது, எதிர்நிரனிறை. மன்னும்-நிலை பெறும், இடைநிலை விளக்கு. மாக வான் - விசும்பின் மேகம். மாநாய்கன். சிறப்புப்பெயர். ாகை - பொன்; வான்கொடி - வானவல்லி; பொன்மெய் வானவல்லியென்க. அவற்றேடுமொக்க மன்னும்புகாரெனினும் அமையும்.

25 அவளுந்தான் (இ-ள்.) அவள்தான். உம்மை:இசைநிறை.

26 - 9. போதிலார் என்பாண்மன்னே

(இ - ள்.) போதிற்பொருந்திய திருமகளுடைய புகழுடைய வடிவு இவள் வடிவையொக்குமென்றும், பழுதில்லாத அருந்ததியுடைய புகழை

[1] பவணம் - நாகலோகம். சுவர்க்கத்தினும் நாகலோகம் போகதீதிற் சிறந்ததென்பது சைனநூற்றுணிபு.

யுடைய கற்பு இவள் கற்பையொக்குமென்றும் உலகின்மாதரார் தன்னைத் தொழுதேத்தும்படி விளங்கிய பெருங்குணங்களைக் காதலிப்பாள், அவள் யாரெனிற் கண்ணகியென்று பெயர் கூறப்படுவாளென்க.

பெயரால வேறுபடுமென்பதாம். திருவினுள் ஒரு பெயர். தீது - [1]பிறர் நெஞ்சு புகுதல். திறம் - கற்பு. மன்னும் : இடைச்சொல் புகழ் : இடைநிலை விளக்கு. பின்வருகின்ற இவளென்பதனை முன்னுங்கூட்டுக. மன்னும் ஓவும் இடைச்சொல்.

30 - 34 ஆங்கு அகவையான்

(இ - ள்.) அப்புகாரினிடத்து †நெடுநிலமுழுவதையும் தனியே ஆளும் கரிகாலனை முதறகுடியாகவைத்து எண்ணுதலையுடைய ஒப்பற்ற குடிகளின் மிக்கோங்கிய செல்வத்தையுடையான், அவன் யாரெனின், தன்னுடைய பொருளை இல்லாதார்க்கருளும் மாசாத்துவானென்று பெயர் கூறப்படுவான்; அவ்விருநிதிக்கிழவனுடைய மகன் பதினருண்டிற்கு உட்பட்ட பிராயத்தானென்க.

பன்னிரண்டும் பதினறுமாகிய பிராயத்தின் முதிர்தல் மரபன்மையின், அகவையாள் அகவையானென்றார் ஒப்பின்மையின் மிகுதி கூறுவார் ஒரு தனிக்குடியென்றார் ஓடு - இன், உருபுமயக்கம், உறழ்பொரு; இதுவும் புறநடையான் முடிந்தது வருநிதி - நல்வினையாற் [2]கலத்தினும் காலினும் வருநிதி, நியாயத்தால் வரும நிதியுமாம். பிறர்க்கு - பொருளற்றார்க்கு, நிதியறறர்க்கும் நல்வினை செய்தாரக்குமென்றுமாம்.

பலர்க்கென்றும் பாடம், அதற்கு இல்லாராகிய பலர்க்கென்க. ஆர்த்தும் - நிறைவிக்கும், நுகர்விக்குமென்றுமாம். மாசாத்துவான் : **இயற் பெயர்.** இருநிதிக்கிழவன் · சிறப்புப்பெயர்.

35 அவனுந்தான் (இ - ள்.) அவன்றன்
ாண்டும் உம்மை இசைநிறை.

36 - 9 மண்டேய்த்த என்பான்மன்னே

(இ - ள்) மண்ணைத்தொலைத்த புகழினையுடையான், பண்ணைத் தொலைத்த மொழியினராகிய மதிபோலும் முகத்தினையுடைய மடவார் தம் காதலால் உலகிற் கண்டேத்தப்படும் செவ்வேளென்று அவனிசையைத் தமதாயத்தின்கட் பாராட்டிப் பரப்பிக் காமக்குறிப்பினுல் உட்கொண்டு ஏத்துதறகுரியான், அவன்யாரெனின், கோவலனென்று பெயர் கூறப்படுவானென்க.

'மண்தேய்த்த' என்றார், புகழ்வளரப் பூமி சிறுகலான், மண் இடத்திற் சிறிது என்றார் [3]வள்ளுவனும் புகழினை . எழுவாய். பண்டேய்த்த - பண்ணைக்கெடுத்த. செவ்வேளென்றார், வேள் இருவர் உளராகலின். முருகவேளைச் செவ்வேளென்றது, "ஞாயிறு கடற்கண் டாஅங்கு"

[1] மணி 22 46. [2] 2 . 7. [3] குறள். 777.

(பி - ம்) † 'நேமிநில'

(முருகு. 2) என்பதனுல். போக்கி - எங்கும் போகப்பண்ணி; பரப்பி யென்றபடி. கொண்டு - காமக்குறிப்பினுல் உட்கொண்டு. கிழமை-உரிமை.

இனி, மடவாரென்பதற்குப் பூமாதும் கலைமாதும் சயமாதும் புகழ் மாதும் புவிமாதுமென்று கூறி, இவர் அழகிற்கும் அறிவிற்கும் ஆண்மைக் கும் புகழுக்கும் பொறைக்கும் இவனென்று உட்கொண்டு ஏதீதும் கிழமை யானெனினும அமையும , " கலையின தகலமுங் காட்சிக் கின்பமும், சிலை யின தகலமும் வீணைச் செல்வமும், மலையினி னகலிய மார்ப னல்லதிவ், வுலகினி லிலையென வொருவ னுயினுன் " (சீவக. 411) என்றுறபோல

இனி, மொழியினுலென்று பாடமாயின், மடவார்திரள் நடுவே மொழி யாலே புகழினுன், செவ்வேளென்று இசையைப் பரப்ப ஏனையோரும் காதன்மையாற கொடை அழகு வீரம் இவறறிற்குரியான் யாவனெனிற் கோவலனென்று பெயர் சொல்லப்படுவானென்றலுமொன்று , இப்பொரு ளுக்கு, போக்கி - போக்கவென்க.

கண்ணகியை முற்கூறினுர், பதினியை ஏதீதுதல் உட்கோளா கலான்.

40 - 42 அவரை மகிழ்ந்துழி

(இ - ள்.) அதீதன்மையாரைக் குரவர் இருவரும் ஒரு பெருநாளிலே மணவணி காணவேண்டி மனமகிழ்ந்தனர் , மகிழ்ந்த அளவிலேயென்க.

உழி - அளவு.

43 - 4 யானை ஈந்தார் மணம்

(இ - ள்.) அவர் அணியிழையாரை யானையெருதீததது இருதீதி அம மாநகர்க்கு இவர்மணமென்னும் மகிழச்சியைக் கொடுதீதாரென்க

எருதீதம் - புறக்கழுதீது. இரீஇ - இருதீதி. ாந்தாரெனவே அறிவிதீதா ரென்பதாயிறறு. சில மகளிரையணிந்து யானையேறறி அறிவிதீதல் மரபு.

45 - 7. அவ்வழி அணியெழுந்தது

(இ - ள்) அவ்விடதீது முரசு முதலிய இயம்பின முருடு முதலிய அதிர்ந்தன , பணிலமுதலிய முழங்குதல் எழுந்தன , வெண்குடைகள் அரசனுயர்வு எழுந்தபடி எழுந்தன ; மங்கலவணி ஊரெங்கும் எழுந்த தென்க.

முருடு - பதீதல் , மதீதளமுமாம் அகலுள் - தெருவுமாம்.

48 - 9 மாலைதாழ் பந்தர்க்கீழ்

(இ - ள்) மாலை தங்கிய சென்னியையுடைய வயிரமணிதீ தூண் நிரை பொருந்திய மண்டபதீது நீலப்பட்டு மேறகட்டியின்கீழ் நிறுதீதின முதீதின் பந்தரிடதீதே யென்க

நீல விதானங்கூறினுர், முதீது ஒளிபெறுதல்நோக்கி , அஃது அக் காலதீது முதீது நோக்குவார் ஒப்புக்கு விரிதீது நோக்குப பூ - பொலிவு.

50 - 53. வாணுர் நோன்பென்னை

(இ - ள்) மதியம் சகடணைநத நாளிலே பார்ப்பான் மறையிற் சோதிடாங்கத்துள் வணிகர்க்குக் கூறியநெறியிலே சடங்குகாட்ட இவர் இங்ஙனம் தீவலம் செய்கின்ற இதனைக் காண்கின்றவர் கண்கள் முற்பவத்திற் செய்ததவம் யாதுகாணென்பாராயும்,

காண்கின்றவர்கள் நோன்பு என்னையெனினும் அமையும். சகடு - உரோகிணி. மாமுதுபார்ப்பான் - பிதாமகன், புரோகிதனுமாம்.

54 - 5 விரையினர் நோக்கினர்

(இ - ள்.) விளங்குமேனியர், விரையினராய் மலரினராய் உரையினராய்ப் பாடடினராய ஒதுங்கிப்பார்த்த பார்வையினராயும,

56 - 7 சாந்தினர் சுண்ணத்தர்

(இ - ள்.) ஏந்திளமுலையினர், சாந்தினராய்ப புகையினராய்க் கோதையராய்ச் சுண்ணத்தினராயும்,

58 - 9 விளக்கினர் மூரலர்

(இ - ள்.) முகிழ்த்த மூரலர், விளக்கினராய்க் கலத்தினராய் முளைப் பாலிகையினராய் நிறைகுடத்திட்ட கை புல்லினும் போதினும் நெகிழாமற் புணர்ந்தனராயும் நிரையினர்கள்

[1] ஒருசொல் வருவிக்க.

60 - 68 போதொடு எனவே

(இ - ள்) கூந்தலையுடைய கொடியன்னர், இவளும தன்காதலனைத் தன் கண்ணினும நெஞ்சினும பிரியாமற புணர்வோளாக, இவள் காதலனும் இவளை அகத்திடடகை †புலலினும போதினும நெகிழாமற் புணர்வோனுக, இருவர் அன்பும சருவதா ஒருவர் அன்பாகவென நினைநது தம் வழிபடு தெய்வத்தை மனத்தால வணங்கி அவ்வகையேத்திப் பின்பு சில மலரைத் தூவி, இப்பால இமயத்திருத்திய வேங்கை பொற்கோடடு உப்பாலிடத்ததாயே நிறபதாக, எப்பாலும் தன போரமேமபடட வேலையுடைய கரிகாலன் மாறில்லாத தன்திகிரியை உருட்டுவோனுகவெனச் சொல்லி, உலகில் அருநததியன்னளை அமளியேறறினுரென்க

கொடியன்னர, பிரியாமல நெகிழாமல தீதறுகென ஏத்தித் தூவி அருந்ததியன்னளை உழையதாக உருட்டுவோனுகவென அமளியேற்றினுரென்க

இது பிராசாபத்தியம்

பா மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா

(க) மங்கலவாழ்த்துப்பாடல் முற்றிற்று

---

[1] ஒரு சொல். 'ஆய்' என்பது

(பி - ம்.) † 'புல்லும்போதுநெகிழாமற'

இரண்டாவது

மனையறம்படுத்த காதை

உரைசால் சிறப்பி னரைசுவிழை திருவின்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்
முழங்குகடன் ஞால முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
அரும்பொரு டரூஉம் விருந்திற் றேஎம்
ஒருங்குதொக் கன்ன வுடைப்பெரும் பண்டம்
கலத்தினுங் காலினுந் தருவன †ரீட்டக்
குலத்திற் குன்ருக் கொழுங்குடிச் செல்வர்
அத்தகு திருவி னருந்தவ முடித்தோர்
உத்தர குருவி ணெப்பத் தோன்றிய
கயமலர்க் கண்ணியுங் காதற் கொழுநனும்
மயன்விதித் தன்ன மணிக்கா லமளிமிசை
நெடுநிலை மாடத் திடைநிலத் திருந்துழிக்
கழுநீ ராம்பன் முழுநெறிக் குவளை

---

1. உரைசால் சிறப்பு - புகழமைந்த சிறப்பு.
2. பரதர் - கடலோடிகள்.
4. வழங்க - உபகரிக்க. தவா - கெடாத.
5. விருந்திற்றேம் - பரதேசங்கள்.
6. அதீதேயங்களிற் பொருள்களின் தொகுதிகூறுவார் தேம் ஒருங்கு தொக்கன்னவென்ருர்.
8. குலதீதிற் குன்ரு - குலதருமதீதிற் குன்ருத செல்வர் - இருவர் பிதாக்களும்.
9 - 10. அதீதகு.... தோன்றிய - அங்ஙனம் தக்க திருவினையுடைய அருந்தவமுடிதீதோர் போகபூமியில் தோன்றுமாறுபோலத் தோன்றிய.

(7) கலத்தினும் காலினும் தருவனரீட்டுதலால் (5) விருந்திற்றேஎம் (6) ஒருங்குதொக்கன்னபண்டம் (4) வழங்கத் தவாஅப் பெருக்கத்ததாகி (1) அரசுவிழை திருவினையுடைய (2) கடலோடிகள் மலிந்தநகர் (10) உத்தர குருவினை யொக்கும்படி (9) செல்வர்க்குத் தோன்றிய (11) கண்ணகியும் கோவலனும்.

இவர்தோன்றுதலான் நகர் உத்தரகுருவை ஒத்தது.

அடி, 7. கலமும் காலும் : பெருங். 1. 47 . 180.
அடி. 12 : பெருங். 1. 33 : 103.
(பி - ம்.) † 'ரீட்டிக்'

அரும்பொதி யவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை
வயற்பூ வாச மனை இ யயற்பூ
மேதகு தாழை விரியல்வெண் டோட்டுக்
கோதை †மாதவி சண்பகப் பொதும்பர்த்
தாதுதேர்ந் துண்டு மாதர்வாண் முகத்துப்
புரிகுழ லளகத்துப் ‡புகலேக் கற்றுத்
திரிதரு சுரும்பொடு செவ்வி பார்த்து
மாலைத் தாமத்து மணிநிரைத்து வகுத்த
கோலச் சாளரக் குறுங்க ணுழைந்து
வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்
கண்டுமகிழ் வெய்திக் காதலிற் சிறந்து
விரைமலர் வாளியொடு ¶வேனில்வீற் றிருக்கும்
நிரைநிலை மாடத் தரமிய மேறிச்
சுரும்புணக் கிடந்த நறும்பூஞ் சேக்கைக்
கரும்பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி
முதிர்கடன் ஞால முழுவதும் விளக்கும்
கதிரொருங் கிருந்த காட்சி போல
வண்டுவாய் திறப்ப நெடுநிலா விரிந்த
வெண்டோட்டு மல்லிகை விரியன் மாலையொடு
கழுநீர்ப் பிணையன் முழுநெறி பிறழத்
தாரு மாலையு மயங்கிக் கையற்றுத்
தீராக் காதலிற் றிருமுக நோக்கிக்
கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை
குழவித் திங்க ளிமையவ ரேத்த
அழகொடு முடித்த வருமைத் தாயினும்
§ உரிதி னின்னே டுடன்பிறப் புண்மையின்

35. இருவரது புணர்ச்சி கூறுவார், 'தாரு மாலையு மயங்கி' என்றார். கையறறு - செயலறறு, புணர்ச்சியால் அவசமாகி.

(11) கண்ணகியும் கோவலனும் (13) இடைநிலத்திருந்துழித் (24) தென்றல் (25) கண்டுமகிழ்வெய்திச் சிறநது (27) ஏறியிருந்து (29) எழுதிக் (35) கையற்றெனக் கூட்டுக.

இனி நயப்புக் கூறுகின்றது. 40. உரிதின் - உரித்தாக.

அடி, 29. மகளிர் தோளில் கரும்பினை எழுதல் குறுந். 384: 1; கலித். 63 . 7-8, 76 . 15. அடி, 31 . பெருங். 1. 32 . 22-3, இறை. 2, உரை.

(மேற்.) 38 . குழவியென்னும் இளமைப்பெயர் திங்களோடுதீது வரும் (தொல். மரபு. 24, பேர்., நன். 387 மயிலை.)

(பி - ம்.) † 'மாதவிச்' ‡ 'பூவிலேக்கறறு' ¶ 'வேனில் வீறறிருந்த, நெடுநிலை' § 'உரிதிதுநின்னேடு', 'உரிதினினின்னேடு'

பெரியோன் றருக திருநுத லாகென
அடையார் முனையகத் தமர்மேம் படுநர்க்குப்
படைவழங் குவதோர் பண்புண் டாகலின்
உருவி லாள னெருபெருங் கருப்புவில்
இருகரும் புருவ மாக † வீக்க
மூவா மருந்தின் முன்னர்த தோன்றலின்
தேவர் கோமான் றெயவக் காவற்
படைநினக் களிக்கவத னிடைநினக் கிடையென
அறுமுக வொருவனேர் பெறுமுறை யின்றியும்
இறுமுறை காணு ‡மியல்பினி னன்றே
அஞ்சுடர் நெடுவே லொன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்க ணிரண்டா ¶வீத்தது
மாயிரும் பீலி மணிநிற §மஞ்ஞைநின்
சாயற் கிடைந்து தண்கா னடையவும்
அன்ன நன்னுதான் மென்னடைக் கழிந்து
நன்னீர்ப் பண்ணை $நளிமலர்ச செறியவும்
அளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழு மமிழ்துங் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்
மடநடை மாதுநின் ¶மலரக்கையி னீங்கா
துடனுறைவு மரீஇ யொருவா வாயின
நறுமலர்க் கோதைநின் னலம்பா ராட்டுநர்
மறுவின் மங்கல வணியே யன்றியும்

42-5. காமனுக்கு வெனறி கொடுத்தலால அமர் மேமபடுநரது முறைமை இவடகுக கூறபபடடது

46. இவளைத் திருமகளாக்கி அமிர்தின் முன்பிறத்தல் கூறப்பட்டது.

49-52. இவ்வாறு ஓர உரிமையினறியேயும குமரவேள் தன்கையில் வேலொன்றையும இரண்டாக்கித் தந்தது எமமை வருத்தும் இயல்பினு னன்றே.

55. (பா.) நன்னுதல . முன்னிலைப் பெயர். 56. செறிதல்-ஒளித்தல்.

57. கிளி (61) நீங்காவாயின , அதனுல் (57) அளியவென்க.

58. குழைத்தல - கூட்டுதல் , இலபொருளுவமை.

62. நலமபாராட்டுநர் - ஒப்பிப்பார்.

63. மங்கலவணி - இயறகையழகு

(மேற்.) 42-5 தக்க 629, உரை.

(பி - ம்.) † 'வீய்த்தனன்' ‡ 'மியல் பினன்றே' ¶ 'வீதீதனன்' 'மஞ்ஞை, சாயற்கு' $ 'நளிர்மலர்' ¶ 'மலர்க்கை நீங்கா, துடனுறைபு'

பிறிதணி யணியப் பெற்றதை யெவன்கொல்
பல்லிருங் கூந்தற் சின்மல ரன்றியும்
எல்லவிழ் மாலையொ டென்னுற் றனர்கொல்
நான நல்லகி னறும்புகை யன்றியும்
மான்மதச் சாந்தொடு வந்ததை யெவன்கொல்
திருமுலைத் தடத்திடைத் தொய்யி லன்றியும்
ஒருகாழ் †முத்தமொ டுற்றதை யெவன்கொல்
திங்கண்முத் தரும்பவுஞ் சிறுகிடை வருந்தவும்
இங்கிவை யணிந்தன ரென்னுற் றனர்கொல்
மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ
தாழிருங் கூந்தற் றையா னின்னையென்
றுலவாக் கட்டுரை பலபா ராட்டித்
தயங்கிணர்க் கோதை தன்னெடு தருக்கி
வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்துசெல் வுழிநாள்
வாரொலி கூந்தலைப் பேரியற் கிழத்தி
மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க

---

64. பிறிதணி அணிதலாற பெற்ற பயன் என் ? 66. எல் - ஒளி. என்னுறறனர் - என்ன உறவுடையார் ? 67 நானம-நாற்றம. 68 மான்மதம்-புழுகு கத்தூரி முதலாயின. வநததை - வந்த உறவு. 70. உற்றதை-உறவு. 72. என்னுறறனர் - என்ன பிதிதேறினர். 81. உலவாமை - ஒழியாமை. 82. தருக்கி - மிக்கு. 84 (பா) பேரிற்கிழதீதி - கோவலன் மாதா. 85. கேண்மை - சுறறதீதாரைப் பேணுதல். (பா) அறப்பரிகாரம் - துறந்தாரைப் பூசிதீது அறதீதைப் பரிகரிதீதல். 86. பெருந்தண் வாழ்க்கை இல்லறம். 87. வேறுபடு திருவின் - நானுவிதமான செல்வதீதோடே. வீறு - பெருமை. 88 உரிமைச் சுறறம் - அடிமைதீதிரள். ஒருதனியாகப் புணர்க்கவென்க.

அடி, 77. மலையில் மணி பிறதீதல் . புறநா 218 . 2
(பி - ம்.) † ‘ முதீதுட னுறறதை ’

யாண்டுசில கழிந்தன விற்பெருங் †கிழமையிற்
காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென்

வெண்பா

[1] ‡தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து—நாமம்
தொலையாத வின்பமெலாந் துன்னினூர் மண்மேல்
நிலையாமை கண்டவர்போ னின்று.

1 - 2. [2] உரைசால் ...மாநகர்

(இ - ள்) புகழமைந்த சிறப்பினையுடைய அரசரும் விரும்பும் செல்வத்தையுடைய பரதரான் மிகுதிபெற்ற பயன்மிக்க மாநகரென்க.

அரசென்பது, "குடிமை யாண்மை" (தொல். கிளவி. 56) என்னும் சூத்திரத்து 'நிலையினவாயினும், அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்' என்பதனால் முடிந்தது, சிறப்புமமை விரிக்க.

இனிப் பரதர் மிகுதி பெறுதற்குக் காரணமான நகரெனினுமாம். பயம் - மன்னர் விழைச்சி

3 - 11. முழங்குகடல் கொழுநனும்

(இ - ள்) மாநகர், கலத்தானும் காலானும் ஈட்டுதலானே பெறுதற் கரிய பொருளாத்தரூஉம் புதுமையையுடைய தீவுமுதலிய தேயங்கள் வந்து கூடி ஒருங்குதொக்காற் போன்றுள்ள பண்டம் முழங்குகடல சூழ்ந்த ஞால முழுதும் ஒக்க வரினும வழங்கத் தொலையாத வளத்தினையுடையதாகலின், அங்ஙனம் அறத்தினுகிய பொருளால் [3] தலைப்படுதானத்தைச் செய்தோ ரெய்தும் உத்தர குருவினை யொக்கும்படி குலத்திற குன்றுத செல்வர்க்குத் தோன்றிய பெரிய மலர்போலும கண்ணையுடையாளும் அவள் காதலிக்கப் படும் கொழுநனுமென்க.

---

[1] இவவெண்பாவானது பல பிரதிகளில் இலலை.

[2] இந்த "உரைசால் சிறப்பின்" என்னும் அடிக்குமுன்னர், "திரு வின் செல்வியொடு பெருநில மடந்தையை, ஒருதனி யாண்ட செருவடு திண்டோள், கரிகாற பெரும்பெயரத் திருமா வளவனைப், பாலை பாடிய பரிசிலன் றெடுத்த, மாலைத் தாகிய வளங்கெழு செல்வத், தாறைந் திரட்டியு மாயிரங் குடிகளும, வீறுசான் ஞாலத்து வியலணி யாகி, உயர்ந்தோ ருலகிற் பயந்தரு தானமும, இல்லது மிரப்பு நல்லோர் குழுவும, தெய்வத் தானமுந் திருந்திய பூமியும, ஐய ருறையுளு மறவோர் பள்ளியும், விண்ணவ ருலகினி னண்ணிடு நகரமொ, டெண்ணுவரம் பறியா விசையொடு சிறந்த" என்னும் அடிகள் பதின்மூன்றும் மிதிலைப்பட்டி **அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள்** வீட்டுச் சிலப்பதிகார மூலப்பிரதியில் இருந்தன.

[3] தலைப்படுதானம் - உத்தமதானம், "அறத்தி னூற்றிய வரும்பெரும் பொருளைப், புறத்துறைக் குற்றமூன் றறுத்தநற் றவர்க்குக், கொள்கெனப் பணிந்து குறையிரந் தவரவயின், உள்ளமுவந் தீவ துத்தம தானம்" (திவாகரம்.)

(பி - ம்.) † 'கேண்மையிற்' ‡ 'தூமப் பணிபலவுந்தோலாத வேலேந்து'

அத்தகு திருவினென்பதற்கு அவ்வளத்திற்குத் தக ஒழுகும் மனைவி யோடேயெனினும் அமையும்.

அரும்பொருளாவன —" நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும, காலின் வந்த கருங்கறி மூடையும், வடமலைப் பிறந்த மணியும் பொன்னும், குட மலைப் பிறந்த வாரமு மகிலும, தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும், கங்கை வாரியுங் காவிரிப் பயனும, ாழத் துணவுங் காழகத் தாக்கமும், அரியவும பெரியவும " (185-92) எனப் பட்டினப்பாலையுட் சொன்னவும் பிறவும்.

" இருவகைப் பிரிவு நிலைபெறத் தோன்றினும், உரிய தாகு மென் மனுர் புலவர் " (தொல். அகத். 11) என்பதனுறை கலத்தினும் காலினு மென்றுர், கலம் - மரக்கலம். கால் - வட்டை. இதனுனே பின்னர் இருமர போரும கலத்தொடுசேறல் பின்னர் ஊழிக்கு மரபெனக்கொள்க.

அருந்தவம் - ாண்டுத் தானம் உத்தரகுரு - போகபூமி, அஃது அறு வகைப்படும், என்னை " ஆதி யரிவஞ்ச நல்லரி வஞ்சம், ஏமத வஞ்ச மிரண வஞ்சம், தேவ குருவ முத்தர குருவமெனப், போக பூமி யறுவகைப் படுமே " (திவா. 12) என்ருராகலின். அதிற்பிறந்து [1] போகநுகருமாறு, [2] முடிபொருட்டொடர்நிலையுள் தானப்பயன் கூறும்வழிக் காண்க.

ாட்டுதலால் ஒருங்குதொக்கன்ன பண்டம் வழங்கத் தவா வளத்த தென ஒட்டுக.

குலத்திற்குன்றுதல் - பூப்பின்கட்பிரிதல், அன்றி [3] நடுவின்றி நன் பொருள் வெஃகலுமாம். குலத்திறகுன்ருமை - " நெடுநுகத்துப் பகல் போல, நடுவுநினற நன்னெஞ்சினேர், வடுவஞ்சி வாயமொழிந்து, தம வும் பிறவு மொப்ப நாடிக், கொள்வதூஉமிகைகொளாது, கொடுப்பதூ உங் குறைகொடாது " (பட்டினப். 206-10) என்பதெனக்கொள்க. செலவர் - இருவர் பிதாக்களும்.

மாநகர், வளத்ததாகலின் ஒக்கும்படி செல்வர்க்குத் தோன்றிய கண்ணியும கொழுநனுமென்க.

12 - 3. மயன்விதித் தன்ன . இருந்துழி

(இ - ள்.) அங்ஙனம் தோன்றிய கண்ணியும் கொழுநனும் மாடத்து இடைநிலைக்கண்ணே மயன் நிருமித்துவைத்தாற போன்ற மணிக்கா லமளி மிசையே இருந்துழியென்க.

உழி - அளவு. மயன் - தெய்வத்தச்சன் நெடுநிலை - எழுநிலை. இடை நிலம் - நாலாநிலம்.

---

[1] போகபூமியிற பிறந்து போகம நுகருதல் " பதினு ருட்டைக் குமர னும் விதிவழிப், பன்னீ ராட்டைக் குமரியு மாகி, ஒத்த வன்பினு மொத்த நலத்தினும, கற்பக நன்மர நற்பய னுதவ, ஆகிய செய்தவத் தளவு மவ் வழிப், போக நுகர்வது போக பூமி " (திவாகரம்)

[2] முடிபொருட் டொடர் நிலையென்றது அறம் முதலிய நாற்பயனையும் கூறும் சீவகசிந்தாமணி முதலியவற்றை

[3] குறள், 171.

14 - 25 கழுநீ ராம்பல் . சிறந்து

(இ - ள்) முழுநெறியாகிய மேதகு குவளையுடைய அரும்புகள் சுரும்பு இமிர இதழ் அவிழ்ந்த கழுநீர்முதலிய நீரப்பூக்களின் வாசத்தைக் கலந்துண்டு அவறறின் வேருய கோட்டுப்பூ முதலியவறறுள் தாழையினது விரிந்த வெள்ளிய தோடடினையும் சண்பகப்பொதுமபரில் உண்டாகிய கோதைபோலும மாதவிப்பூவின் தாதினையும ஆராய்ந்துண்டு போந்து வாண்முகத்து மாதருடைய புரிந்த குழற்சியையுடைய அளகத்துண்டாகிய கலவைமணம்பெறுதறகு ஏக்கறறுப புகுதறகு வழிகாணுமற சுழலுகின்ற சுருமபொடுமப வண்டொடுமப மணித்தாமத்தாலே ஒழுங்குபட நிரைத்து வகுத்த அழகினையுடைய சாளரக்குறும்புழையாற செவ்வியறிந்து நுழைந்து புக்க மணவாயதென்றலைக்கண்டு மகிழ்ச்சியெய்திப் புணர்ச்சியை விருமபிக் காதன்மிகுதலா லென்க.

சாதிபறறி ஆம்பலென்ருரெனினும் ாண்டுக்கூறியது சேதாமபலென உணர்க, இஃது அவற்ரேடு ஒருதனமைத்தாகிய பகறபோதன்றெனினும் அவை விரியுங்காலத்து இது குவிதலின்மையிற் கலந்துண்டென்ருர். இதழ் ஒடிக்கப்படாதவெனவே செவவிகூறிறறு, "தீநீரப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக் கூமபுவிடு முழுநெறி" (116) என்ருர் **புறபபாட்டினும்.** கோதை - மாலை, ஒழுங்குமாம, வெண்டோட்டுத்தாழையுமாம, சண்பகப் பொதும்பர்க் கோதை மாதவியென்க பொதுமபர் - மரச் செறிவு. இவை சண்பகத்தோடு மலர்தலின் தேர்ந்துண்டென்ருர்

வாண்முகத்தளகமென்பாருமுளர் புகல் - புகுதற்கு. ஒடு ஒருவினை. செவ்விபார்த்து நுழைந்து புக்கவெனக. செவ்வி - இவர்மகிழுஞ்செவ்வி.

பின்னின்ற உண்டென்பதனை அளஇ உண்டெனவும், தேர்ந்துண்டெனவும் இரண்டிடத்தும் ஒட்டுக அன்றி அளஇ வண்டொடு புக்கதென்றலெனினும் அமையும் மணவாய்தென்றல் - மணத்தைத் தன்னிடத்தேயுடைய தென்றல்.

அளஇ உண்டு தேர்ந்துண்டு ஏக்கற்றுத் திரிதருசுரும்பொடும் வண்டொடும் புக்க தென்றலென்க.

26 - 7. விரைமலர் ஏறி

(இ - ள்.) அங்ஙனம் அவர் காதன்மிகுதலாலே இடைநிலைத்துநின்றும் மேல் நிரைத்துவகுத்த நிலங்களில் மணத்தினையுடைய மலர்வாளியோடே காமன்வீறறிருக்கும் மேனிலமாகிய நிலாமுறறத்தின்மேல ஏறியென்க.

வேனில் · ஆகுபெயராற் காமன். பகையின்றிக் கல்வியொடு செல்வத்திடை [1] நஞ்சுற்றகாமம் நுகர்ந்திருத்தலின், வாளியும் காமனும வருந்தாதிருந்தமைதோன்ற வீறறிருக்குமென்ருர், இஃது உதாரமென்னுமலங்காரம், என்னை ? [2] "உதார மெனப தோதிய செயயுளிற், குறிப்பி ஞெரு பொரு ணெறிப்படத் தோன்றல" என்பது **அணியியலாகலின்.**

---

[1] சீவக. 11. [2] இது **தண்டியலங்காரத்திலும்** (பொது. 21) காணப்படுகின்றது.

28 - 31 சுரும்புணக் கிடந்த காட்சிபோல

(இ - ள்) அங்ஙனம் நிலாமுற்றத்து ஏறினவர்கள், சுரும்புகள் உண்டற்குப் பரிதித்து வைத்தாறபோலக் கிடந்த நறும்பூஞ் சேக்கைக் கண்ணே கடல்சூழ் ஞாலமுழுவதையும் விளக்கும் ஞாயிறும் திங்களும் சேர இருப்பக் கண்ட காட்சிபோல இருந்து கரும்பு வல்லியென்பனவற்றைப் பெரிய தோளிலே எழுதியென்க.

கருமபையும் வல்லியையும தோளில் எழுதியெனவே தொய்யிலொன்றையும் முலைமேலெழுதி யென்பதாயிற்று. பூவின்செவ்வி கூறுவார், சுருமபுணக்கிடந்த என்றார்.

இனி அதிகாரப் புறனடையால் (தொல். குறறியலுகரப். 78) உகரங் கெடுத்து உண என்பதனைப் பெயர்ப்படுத்துச் சுரும்புகள்தாம் பலவகையுணவும உளவழி அவவக்காலத்து ஆண்டுச் சென்று ஏறியும இழிந்தும் சுழன்றும் மெய்வருநதாது அவையெல்லாம் ஒருகாலத்து ஒருவழியுண்ணும உணவுகிடந்த தன்மையொத்த பூஞ்சேக்கை யெனவும் அமையும். இது பூக்களின் சாதிப்பன்மையும் செவ்வியும் கூறிறருகும.

முதிர்தல - முறறுதல், சூழ்தலுமாம, " நீர்முறறி மதில்பொரூஉம் " (கலித். 67 4) என்றார் பிறரும, முதிர்ந்த கடலுமாம்.

ஒருங்கிருத்தல் இல்பொருளுவமம். போல இருந்தென ஒரு சொல் வருவிக்க இனிப் புணரச்சி கூறுவார்.

32 - 7 வண்டுவாய் கட்டுரை

(இ - ள்) அங்ஙனமிருந்தவர்கள், வண்டுகள் புரிநெகிழ்க்க வாய விழ்ந்த வெள்ளிய இதழையுடைய மல்லிகையினது பெரிய இளக்கத்தையுடைய மாலையோடே இதழொடியாது கட்டின கழுநீர்ப்பிணையலும குலைந்தலைய மார்பிலிட்ட இவ்விருவகை மாலையும மயங்கப்பட்டு இருவரும் செயலறற பணர்ச்சியிறுதிக்கண்ணே கோவலன் திருமகளைப்போல் வாளுடைய முகத்தை நோக்கித் தனது அறிவு முதலியனவற்றைக் குறியாத நலம்பாராடடலென்னும பொருள்பொதிந்த உரையைக் கூறுமென்க.

நிலாவிரிநத உவமைத்தொகை, ஒளியுமாம். விரியல் - மலர்ச்சி. பிறழ - சரிய. மயங்கி - மயங்கப்பட்டு, இடக்கர். தீரா : தீர்தலென்னும் விடறபொருண்மையெதிர்மறை கூறும் முறறு ஓர் ' இடைச்சொல்.

இனிக் குறியாக் கட்டுரை - முன் கருதப்படாத கட்டுரை யெனினும் பொருந்தும் " குறியா வின்ப மெளிதினின் .. எய்தும " (அகநா 2) என்றார், கட்டுரை - நலம்பாராட்டலென்னும் பொருள் பொதிந்த உரை

ஏறியிருந்து எழுதிப் பிறழ மயங்கிக் கையற்றுக் கூறுமென்க.

அக்கட்டுரை மேறகூறுவார்.

38 - 41 குழவித் திங்கள் ஆகென

(இ - ள்) பிறை, இறைவன் இமையவர் ஏத்தாநிறகத் தன்முடிக்கு அழகு செய்தல் காரணத்தாற் சூடிய பெறுதற்கருமையுடைதெனினும் அதனை அவன் நினக்குத் திருநுதலாகத் தரக்கடவன் : அஃது எற்று

லெனின் அப்பிறை நின்னோடு உடன்பிறப்பு உண்டாகலின் நினக்கு உரித்தாதலானென்க.

பெரியோன் - இறைவன். உரிது - உரித்து, "உரிதினிற், கொண்டாங்குப் பெயர்தல் வேண்டும்" (10) என அகப்பாட்டினும் கூறினர்.

திங்கட்குழவியென்றது "சொல்லிய வல்ல பிறவவண் வரினும்" (தொல். மரபு. 110) என்னும் மரபியற் புறனடையான் முடியும். "அப்பிறை, பதினெண் கணனு மேத்தவும படுமே" (கடவுள் வாழ்த்து) என்றார் புறப்பாட்டினும். அருமைத்து அஃறிணை விணைக்குறிப்பு முறறு தருகவென்றது சூடின பிறை இரண்டுகலையாதலின், அதனை எண்ணுட்டிங்களாக்கித் தருக வென்பது கருத்து, என்னை? "மாக்கடனடுவ ணெண்ணுட் பக்கத்துப், பசுவெண் டிங்க டோன்றி யாங்குக், கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்" (குறுந். 129) என்றாராகலின்

இதனுன் மேறகூறுகின்ற கரும்பையும் வச்சிரத்தையும் அவ்வவ் வுறுப்புக்கட்கேற்பத் திருத்தி ஈக்க அளிக்கவென்பதாயிற்று, என்றது கரும்பிற்கு நிறனும், வச்சிரத்துக்கு நேர்மையும் உண்டாக்கி என்றவாறு.

இஃது எதிரது போற்றலென்னும் தந்திரவுத்திவகை.

இங்ஙனங் கூறினர், பிறை திருவொடு பாறகடலிடைப் பிறத்தலின், இவளுந் திருமகளாக மதித்து

42 - 5. அடையார் முனையகத்து ஈக்க

(இ - ள்) அநங்கன் போர்செய்தறகு எடுத்த ஒப்பிலலாத கருபபுவில் ஒன்றையும் நினக்குக் கரிய இருபுருவமாகத் திருத்தித் தரக்கடவன, அஃது எற்றுலெனின், பகைவர் முனையிடத்தே தம்மை மேம்படுப்பார் சிலர்க்குப்படைக்கல முதலியகொடுத்தல் அரசர்க்கு இயல்பாதலானென்க.

தன்னுல் ஒறுக்கப்படாத தெவ்வரை அழிக்குங்கால் இவருறுப்பாகிய படைக்கலங்கொண்டன்றி அழிக்கலாகாமையின், இங்ஙனம் கூறினர். ஈக்க. "ஈதுவக்கும்" (குறள், 228) என்றற்போல நின்றது. முனிவராகிய முரட்பகையை அழித்தற்கு வல்வில்லே வேண்டுதலின், ஒரு பெருங்கருப்பு வில்லென்றார் என்றது, காமனுக்குக் [1]காமநூலும் [2]ஆலியும் வில்லாதலின், அதன் வன்மை கூறினர். ஒருபெருங்கருப்புவில இருகரும்புருவமாகவென்றது [3]சேமவில்லியும் கூட்டி, "வானுர் வேண்டினுன்" (சீவக. 2065) என்றாராகலின்.

46 - 8. மூவாமருந்தின் ...இடையென

(இ - ள்.) இந்திரன் அசுரரையழித்துச் சுரரைக் காத்தறகாக எடுத்த வச்சிரப்படையை நினக்கு இடையாகவெனத் திருத்தித் தரக்

---

[1] காமநூல் - பூவிசேடம, இதனை மனமத தந்திரமென்பர் வடநூலார், இது மன்மதனுக்கு வில்லென்பதை அரவிஜயதீபிறகாண்க, "கயகக ணின்ற பூவின் மிக்க காம காண்டங் கன்னல்வில்" (கந்த. காமதகன. 62) என்பதும் இங்கே கருதற்பாலது.

[2] ஆலி - கரும்பு. [3] தக்க. 23, உரை.

கடவன்; அஃது எற்றுலெனின், இமையவர்க்கு மரணமின்மையைப் பயக்கும் அமிழ்திற்கு நீ முற்பிறதலானென்க.

ஆகவென ஒருசொல் வருவிக்க. மூவா மூதவென்னும் பெயரெச்ச எதிர்மறை. எனவே மூப்புக்கும் பிணிக்கும் மருந்தென்பதாயிறறு, என்றது அமிர்ததை. மருந்தின் உருபுமயக்கம். நீ அமுதாகலின், நினக்கு முன்னர் வச்சிரம் பிறதலானெனினும அமையும்.

வச்சிரமும் அமுதமும் கடல்கடைகின்ற காலதீதுப் பிறந்தவெனப் புராணம் கூறும், வச்சிரம் இருதலைச்சூலமாய் நடுவுபிடியாயிருதீதலான் அதனிடையை [1] நுசுப்புக்கு உவமங்கூறுப

இறைவன் காமன் இந்திரனென்னுமிவர், பிறை கரும்பு வச்சிரமென் னுமிவற்றை நுதல் புருவம் இடையாகதீ தருக ாக்க அளிக்க உடன்பிறப் புண்மையிற பண்புண்டாகலின் முன்னர்தீ தோன்றலினென உய்தீ துரைக்க

49 - 52 அறுமுக வொருவன் ஈத்தது

(இ - ள்.) முருகவேள் தன்கையில் அழகிய சுடரையுடைய நெடிய வேலொன்றையும நின்முகதீது மழைக்கண் இரண்டுமாம்படி ாதற்குக் காரணம் வேறில்லையாகவும் ாதீதது யான் இறந்துபடுமுறைமையைதீ தன்கண்ணுற் காணவேண்டுதல் காரணதீதானென்க.

" துள்ளுநர்க் காண்மார் " (கலித் 4 5) என்றுற்போல பெறுமுறை யின்றியும் - அவ்வாறு தான் ாதீதற்கு உரிமையின்றுகவும். வேலொன்று இரண்டாக ாதீதல் - நிருமிதீதுதீ தருதல " ஓக்கிய முருகன் வைவே லொன்றிரண் டனைய கண்ணுள் " (சீவக. 1291) என்றுராகலின்.

இனிப் பெறுமுறையின்றியும் என்பதற்குதீ தனக்குப் பெறுங்கூறு ஒன்றும் இல்லையாகவுமெனினும் அமையும் இறுமுறை - முடியுமுறை; வருந்துந்தன்மை யெனினும அமையும்.

இவை [2]புகழுவமையலங்காரம், அஃதாவது " இறையோன் சடை முடிமே லெந்நாளுந் தங்கும், பிறையேர் திருநுதலும் பெற்ற - தறைபுனல் சூழ், பூவலயந் தாங்கு மரவின் படம்போலும், பாவைநின் னல்குற் பரப்பு " (தண்டி. பொருள். 5) எனவரும்.

இவற்றுட் கட்புலனுய் எழுதப்படும் உறுப்புக்களைப் பாராட்டி, இனிக் கட்புலனுயும் ஆகாதுமாய் எழுதப்படாதன பாராட்டுவான்.

53 - 61. மாயிரும் பீலி .ஒருவாவாயின

(இ - ள்.) நன்னுதால், மாதே, மயிற்குலம் நின்னுடைய சாயற்கு எதிர்ந்து வந்து பொருது தோற்றுதீ தண்ணிய காட்டிடதீதே போய் ஒடுங்கா நிற்கவும், அன்னம் மெல்லிய நடையினைக் கண்டு எதிர்ந்துவந்து தோற்றுதீ தனது நடையழிந்து நல்ல நீர்பொருந்தின பண்ணையிற்

---

[1] கம்ப. கங்கைப். 34

[2] புகழுவமையாவது உவமையைப் புகழ்ந்து உவமிப்பது.

செறிந்த மலரிற் புக்கு மறையவும, சிறிய பசிய கிள்ளைகள்தாம் குழலிசை யினையும் யாழிசையினையும் அமுததத்தினையும் கலந்து குழைத்தாலொத்த நினது முதிராத மழலைக்கிளவிக்கு எதிர்ந்து வந்து தோறறனவாயும் நின்னை வழிபட்டு அக்கிளவி கற்பக்கருதி நினது கையினின்றும் நீங்கா வாய் நின்னுடனே வெறுப்புதீதோன்றுமல் உறைதலையும் பொருந்திப் பிரியாவாயினவாகலின், அவை அளிக்கத்தக்கன காணெண்ருனென்க.

மாயிரு "கோயில்" (சீவக. 155) போலநின்றது, அதிகாரப் புற னடைவிதி (தொல் குறறியலுகரப். 78) மா - கருமை. இருமை - பெருமை. மணி - நீலமணி. சாயல் - மென்மை (தொல். உரி. 29). தண்கான் - இழிந்த காடு. நன்னுதல், "எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே, நின்ற வீறறய னீட்டம வேண்டும்" (தொல். விளிமரபு 27) என்பதனுல் நீட்டிதீதது. நளி - செறிவு. செறிதல் - ஒடுங்குதல். குழைதீத : இல்பொருளுவமை. "கருமபுந் தேனு மமுதும் பாலுங் கலந்த தீஞ் சொல்" (சீவக. 2438) என்ருறபோல. இனிக்குழைதீத. குழைவிதீத வெனினும் அமையும, வருதீதியவென்பதாம், "குழைமுற்றின வாழைக் கொழுங்கனி குழைதீதும்" என்ருராகலின் மாது முன்னிலை, விளி, "ஓவு முவ்வு மேயொடு சிவணும்"(தொல். விளிமரபு. 5) என்பதனுன்முடிந்தது.

அடையவும், செறியவுமே இவை ஒருவாவாயினவாகலான் அளிய வென்க.

கிளியும் இவள் வளர்ப்பன பலவாகலாற் பன்மை கூறினுர்.

62 - 4. நறுமலர்க் கோதை எவன்கொல்

(இ - ள்) இதீதன்மையையாகிய கோதாய, நின்னைப் புனைந்து அழகு செய்யுமகளிர் குறறமற்ற நினது புனையாத அழகன்றியும் வேறு சில அணிகளை அணிந்ததனுறபெறற உதவி யாதுதானென்ருனென்க.

"ஐயா யாகும்" (தொல் விளிமரபு. 4) என்பதனுற் கோதை கோதாயென விளியேற்றது. மங்கலவணி - மாங்கலியமென்பாருமுளர்

65 - 6. பல்லிருங் கூந்தல் என்னுற்றனர்கொல்

(இ - ள்.) பலவகைதீதாகிய கூந்தலிற் சிலமலரைப் பெய்தலேயன்றி அதன்மேலும் ஒளிபொருநதி அவிழ்கின்ற மாலையைப் புனைதற்கு அந்த மாலையோடு அவர்கள் என்ன உறவுடையார்களோவென்ருனென்க.

சின்மலர்-மங்கலமலர், [1]கற்புமுல்லை முதலியவை, [2]அருச்சனை மலருமாம்.

67 - 8. நான நல்லகில் எவன்கொல்

(இ - ள்.) அவர், கூந்தறகு நெய்யையுடைய நல்ல அகிற்புகையை ஊட்டுதன்மேலும் மான்மதச் சாந்தை அணிதற்கு அதனேடு தமக்குள தாகிய அந்தக் கண்ணேட்டம் யாதுதானென்ருனென்க.

மான்மதம் - கதீதூரி.

69 - 70. திருமுலைத் தடத்திடை . எவன்கொல்

(இ - ள்.) அவர் அழகிய முலைதீதடதீதின்மேல் தொய்யிலெழுதுதன்

[1]சீவக. 680, ந., தக்க. 119. [2]சீவக. 164. [3]கெழுதகைமை-உரிமை.

மேலும் தனிமுதீதுவடதீதைப் பூட்டுவதற்கு அதனேடு அவர்க்குண்டான [3] கெழுதகைமை யாதுதானென்ருனென்க.

திரு - [1] முலேமேறறேன்றும் வீறறுதீதெய்வம். தடம் - பரப்பு. தொய் யில் - பதீதிக்கீறறு காழ் - வடம், முதீதக்காழென மாற்றுக.

71 - 2. திங்கள் என்னுற்றனர்கொல்

(இ - ள்) இங்ஙனமாகிய மங்கலவணியும் சின்மலரும் அகிறபுகை யும் தொயயிலும் பாரமாய் அரும்பவும் வருந்தவும் இவ்விடதீது இவை கண்டு வைதீதும் பிறிதணியும மாலேயும சாந்தும் முதீதும அணிந்தா ராகலின், அவர்கள் என்னபேய் கொண்டார்களோவென்ருனென்க.

73 மாசறுபொன்னே (இ - ள்) கட்கு இனிமையான் மாசற வோடிய பொன்னே யொப்பாய்,

வலம்புரிமுத்தே (இ - ள்) ஊறறின் இன்பதீதான் முதீதை யொப்பாய், மரபின் தூய்மை கூறுவான் [2]வலம்புரி முதீதென்ருன்.

74 காசறு விரையே (இ - ள்.) உயிர்ப்பின் இனிமையாற் குற்றமற்ற விரையையொப்பாய்,

கரும்பே (இ - ள்.) சுவையின் இனிமையாற் கரும்பை யொப்பாய்,

தேனே (இ - ள்) இனிய மொழியை யுடைமையால் தேனே யொப்பாய,

இவற்ருற சொல்லியது, ஒளியும் ஊறும் நாறறமும் சுவையும் ஓசையு மாகலின், "கண்டுகேட் டுண்டுயிர்தீ துறறறியு மைமபுலனும், ஒண்டொடி கண்ணே யுள" (குறள், 1101) என நலம் பாராட்டபபட்டன.

75 - 81 அரும்பெறற் பாவாய் பாராட்டி

(இ - ள்) பாவாய், மருந்தே, மடமகளே, தையால், நின்னே யான் மணியேயென்கோ! அமுதேயென்கோ! இசையேயென்கோ வெனச் சொல்லிதீ தொலேயாத நலம் பாராடடாகிய பொருள் பொதிந்த உரை யைப் பல பாராட்டியென்க

உயிர்மருந்து - மிருத சஞ்சீவினி. இவற்ருற் சொல்லியது என்னே யெனின்,—காட்சியின் உயிர் மயக்குறுதலிற கொல்லியிற பாவாயென் றும், அவ்வாறு அழியுமுயிரை இமைப்பிற றருதலின் ஆருயிர்மருந்தே என்றும் கூறி, மலேயிடைப் பிறக்குமணி குழையாமையின் அதிற்பிறவா மணியே யென்பேனே! அலேயிடைப் பிறக்கும் அமிர்திற்கு இவ்வடிவின் மையின் அதனிற் பிறவாத அமுதே யென்பேனே! யாழ் கட்கு இன்ன தாகலின் அதனிடைப்பிறவாத இசையே யென்பேனேவெனதீ [3]தெரிதரு

---

[1] "ஆமணங்கு குடியிருந் தஞ்சுணங்கு பரந்தனவே" (சீவக. 171)

[2] "வலம்புரி முதீதிற் குலம்புரி பிறப்பும்" (ஆதீதிரையன். பொது.)

[3] தண்டி. பொருள். 5.

தேற்றவுவமை யென்னும் அலங்காரமும், மலை கடலென [1]விரோதமும், பின்வரு நிலையென்னும் அலங்காரமும் புலப்படுத்தினரென வுணர்க.

82 - 3. தயங்கிணர் செல்வுழிநாள்

(இ - ள்.) வயங்கிணர்த்தாரோன் இங்ஙனம் கோதையொடு தருக்கி மகிழ்ந்து செல்லாநின்ற நாளிலே ஒருநாள்,

[2] தயங்கல் வயங்கலிரண்டும விளக்கமாதலிற் பரியாயமென்னும் அலங்காரமும், தலையாய எதுகைத்தொடையின்பமும் புலப்படுத்தினமை யுணர்க.

84 - 90 வாரொலி கண்ணகி தனக்கென்

(இ - ள்.) நீண்டு ஒலித்த கூந்தலையுடைய வீரபத்தினியை இருநிதிக் கிழவன் மனைக்கிழத்தி, சுற்றந்தழாலோடே துறவறத்திற்குச் செய்யும் பரிசாரமும் விருந்தினரைப் புறங்கண்டு புகுத்தலும் ஒழிந்த செய்கைகளுமாகிய இவற்றோடு பொருந்திய இல்வாழ்க்கையைப் [3]பல படைப்பாகிய செல்வத்தோடே நடத்திக் கைவந்து உயர்ச்சி பெறுதலைக் காண வேண்டி அடிமைத்திரளோடே வேறே கூட்ட, அத்தைக் கண்ட கண் அங்ஙனம் காட்சிதரும் சிறப்பினையுடைய கண்ணகிக்கு இற்பெருங் கிழமையிற் சிலவாண்டு கழிந்தனவென்க.

மறப்பு - பொச்சாப்பு இதனை எல்லாவற்றோடு மொட்டுக.

இதன் கருத்து —கேண்மையோடெனவே சுற்றந்தழாலும், அறப் பரிசாரமுமெனவே அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க் கெதிர்தலும் என்பதாயிற்று. இவற்றோடே பொருந்திய வாழ்க்கையெனவே அருளுடைமை, அன்புடைமை, இனியவை கூறல் முதலிய இல்லறப்பகுதி யெல்லாம் அடங்கும். இக்கருத்தானன்றே, **கொலைக் களக்காதையிற** கண்ணகியார், "அறவோர்க் களித்தலு மந்தண ரோமபலும், துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந் தெதிர் கோடலு மிழந்த வென்னை" (71 - 3) என்றதுமென்க.

கூந்தலையுடைய பேரியற்கிழத்தி யெனினும் அமையும்; பேரியற் கிழத்தி - கோவலன்மாதா.

கண்ணகிக்குச் சில யாண்டு கழிந்தனவெனவே மாதவிக்குப் பல யாண்டு கழிதலும் கொள்ளப்பட்டது. இன்னும் மேற் **கனைத்திற**

---

[1] **தண்டி.** பொருள். 54.

[2] '**இளங்கோவடிகள்** மனையறம்படுத்த காதையுள், 'தயங் கிணர் . .. செல்வுழி' என்றவற்றுள், தயங்கல் வயங்கல் இரண்டும் விளக்க மாதலின் அதற்கு விரித்துரை யெழுதிய **அடியார்க்கு நல்லாராகிய** ஆசிரியர் அதனையும் பரியாயமென்னும் அலங்காரமாகக் குறித்தார்; அஃது இப்பொருளணியுள் முந்துறக்கூறிய பொருட்பின்வருநிலையுள் அடங்குமென்றறிக' (**மாறன்.** 199, உரை.)

[3] "படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும், உடைப்பெருஞ் செல்வர்" (**புறநா.** 188.)

முரைத்த காதையில், தேவந்தி, "கண்ணகி நல்லாளுக் குற்றகுறை யுண்டென்று" (41) என்புழி எச்சவும்மை விரிக்க, இவட்கு அவள் இள மைப்பருவந்தொடங்கி நிகழும் பார்ப்பனதீதோழியாய் மாநாயகன் மண வளர்தலின், ஒருகாலதீதே குடிபுக்குச் செல்கின்றுழிப் பிரிவும் ஒருகாலதீ தாயிறறென்பதாகலின், "நாலீ ராண்டு நடந்ததற் பின்னர்" (30 : 85) என்பதனை இருவர்க்குமாக்கி மாதவிக்கு எட்டினிறந்த பலயாண்டு சேற லிற் கண்ணகிக்குச் சிலயாண்டு கழிந்தவெனப் பொருள்கூறலுமொன்று; இதனுன் மிக்க பலமின்று, ஏற்குமேற் கொள்க. இது போலி.

[1]செல்வர்க்குதீதோன்றிய கண்ணியும் கொழுநனும தென்றலைக் கண்டு மகிழ்ந்து சிறந்து ஏறிக் காட்சிபோலச் சேக்கையிலிருந்து எழுதி மயங்கிக் கையறறு முகநோக்கிக் குறியாக்கட்டுரை கூறுகின்றவன் திங்கள் முதலியவற்றை முதன்முதலில்வரச் சொல்லிப் பலபாராட்டி மகிழ்ந்து செலவுழி ஒருநாள பேரியற்கிழதீதி புணர்க்கக் கண்ணகிதனக் குப் பெருங்கிழமையோடு ஆண்டுசில கழிந்தன வெனக்கூட்டுக.

எல்லாவடியும் நேரடியாய் வந்து முடிதலின், இது நிலைமண்டில வாசிரியப்பா.

(உ) மணியறம்படுத்த காதை முற்றிற்று.

---

[1]இம்முடிபிலுள்ள செய்தெனெச்சங்களுட் சிலவற்றைச் செயவெனெச் சதீதிரிபாகக்கொள்க, பின்னும் இங்ஙனம் கொள்ளவேண்டிய இடங்கள் உண்டு.

மூன்றுவது

அரங்கேற்று காதை

தெய்வ மால்வரைத் திருமுனி யருள
எய்திய சாபத் திந்திர சிறுவனெடு
தலைக்கோற் றானத்துச் சாப நீங்கிய
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றுச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றுப் பெருந்தோண் மடந்தை

கூத்தியதமைதி கூறுகின்றது :—

1. தெய்வமால்வரை - பொதியின்மலை, தெய்வத்தன்மையையுடைய வரை, உருபுதொக்குத் தெய்வமால்வரையென்றுயிறறு.

திருமுனி - அகத்தியன் அருள - அவன் சாபமிட்டருள

2. எய்திய - அச்சாபத்தையெய்திய.

(1) அருளாலென்று பாடமோதி அருளாற் சாபநீங்கியவென்றுமாம்

2. இந்திரசிறுவன் - சயந்த குமாரன். இந்திரசிறுவனெடென்ற தனாற் சயந்த குமாரனேடே உருப்பசியும் சாபநீங்கிப் போனளென்க, [1] "திருந்திய.....வாகிவந் தனனென்" என்றுராகலின்.

3. தலைக்கோற்றானம் - நாடக அரங்கு.

4. மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிரென்றது ஒப்பியால் ஒப்பில்லாத சிறப்பினையுடைய வானவர் மகளிர், ஆவார் - தளியிலார், உருப்பசி வந்து சாபத்தாற் பிறக்கையால் அவள் வழியுள்ளாரையும் வானவர்மகளிரென்றுராயிற்று. அவருள்,

5. சிறப்பு - வரிசை. செய்கை - தொழில்.

6. பிறப்பு - அம்மாதவி வழிவந்த பிறப்பு. பெருந்தோண்மடந்தை. மகளிர்க்குத் தோள்பெருக்கை இலக்கணம், என்னை? "அகலல்குரேள் கண்ணென மூவழிப் பெருகி" (கலித். 108. 2) என்றுராகலின்.

(மேற்.) அடி, 1. 'தெய்வ மால்வரைத் திருமுனியருளால் என் புழித் தெய்வவரை யென்று ஒட்டித் தெய்வத்தன்மையுடைய வரையெனப் பொருள் தருகின்றது, இன்னேசை தருதற்கு மாலென்பதனேடும் ஒடடினும் போல' (தொல். புணரியல். 9, ந.)

[1] அரும்பதவுரையில், இப்படி முதலிறுதிகள் மட்டும் கொடுக்கப் பெறும் சூத்திர முதலியவறறின் முழுவடிவங்களை 'அடியார்க்கு நல்லா ருரையிற் காண்க.

தாதவிழ் புரிகுழன் மாதவி தன்னை
ஆடலும் பாடலு மழகு மென்றிக்
கூறிய மூன்றி னொன்றுகுறை படாமல்
ஏழாண் டியற்றியோ ரீரா ருண்டிற்
சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி
இருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து

7. தாதவிழ் புரிகுழல் மாதவி தன்னையென்றது பூக்கள் தாதுக்களை அவிழ்க்கும் புரிந்த குழலையுடைய மாதவியாகியவள் தன்னை.

8 - 9. ஆடலும .....குறைபடாமலென்றது கூத்தும் பாட்டும் அழகுமென்று சொல்லப்பட்ட இம்மூன்றினுள்ளும்ஒன்றும குறைபடாமல்.

10. ஏழாண்டு இயற்றி ஓரீராருண்டில் - மையுண்கண்ணி மடந்தை மற்றவளை ஐயாண்டு நிரம்பிய பினறைக் காண்போர் காண அரங்கிற் சிரமம் இருபொழுது ஏழாண்டியற்றுவித்து இப்படியாற் பன்னீராண்டு பிராயம் புக்கபின்பு.

11. சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி - வீரக்கழலினையுடைய **சோழன் கரிகாற்பெருவளத்தான்** அவையரங்கேறிக் காட்டல் வேண்டியென்றவாறு

இனி, ஆடலாசிரியனமைதி கூறுகின்றது —

12 - 25 இருவகைக் கூத்தின் . .ஆடறகமைந்த வாசான் றன் னெடுமென்றது - தேசியும் மார்க்கமுமென்று சொல்லப்படாநின்ற இரண்டு வகைப்பட்ட அகக்கூத்தினது இலக்கணங்களை அறிந்து பல வகைப்பட்ட புற நடங்களையும விலக்குறுப்புக்களைச் சேரப்புணர்க்கவும் வல்லனாகி அல்லியம முதலாகக் கொடுகொட்டி ாருகக்கிடந்த பதினெரு கூத்துக்களும அக்கூத்துக்களுக்குரிய பாடடுக்களும் அவற்றுக்கு அடைத்த வாச்சியக்கூறும் நூல்களின் வழியே தெரியவறிந்து அக்கூத் தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின்வழியே வந்த தூக்குக்களும் தம்மிற்கூடி நிகழுமிடத்துப் பிண்டி பிணையல் எழிறகை தொழிறகை யென்னும் அந்த நான்கினையும நூல்களினகத்துக் கொண்ட கூறுபாட்டை யறிநது அகக்கூத்தினிடத்துக் கூடைக்கதியாகச் செய்த கை வாரகததியிற புகுதாமலும் வாரக்கதியாகச் செய்த கை கூடைக்கதியிற புகுதாமம்லு புறக்கூத்தில் ஆடல் நிகழுமிடத்து அவிநயம நிகழாமலும அவிநயம் நிகழுமிடத்து ஆடல் நிகழாமலும் குரவைக்கூத்தும் வரிக்கூத்தும தம் மில் விரவாதபடியும செலுத்தவல்ல ஆடலாசிரியனுமென்றவாறு.

இது பொழிப்புரை. என்சொல்லியவாரேனின் .—

12. இருவகைக் கூத்தாவன —தேசி மார்க்கம எனவிவை, " மார்க்க மென்பது வடுகின் பெயரே." இவறறது இலக்கணமாவது .—" அறுவகை

அடி, 8. ' ஆடல் பாடல் அழகு என்பவற்றுற் களித்து ' (குறள், 916, பரிமேல்.)

பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினே ராடலும் பாட்டுங் கொட்டும்
15 விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்

நிலையும்.. .. ஆகுமென்ப.'' இவை ஈங்குரைப்பிற் பெருகும், விரிந்த நூலிற் கண்டுகொள்க

இவ்வுறுப்புக்களையுடைய கூத்தை இலக்கணத்துடனே பொருந்தக் கற்றென்றவாறு.

13. பலவகைக்கூத்தும் விலக்கினிற் புணர்த்தலாவது-நகைக்கூத்து முதலாகப் பலவகைப்பட்ட புறநடங்களையும வேந்துவிலக்கும் படை விலக்கும் ஊர்விலக்குமென்று சொல்லாநின்ற விலக்குக்களாகிய பாட்டுக் களுக்கு உறுப்பாய் வருவனவற்றுடனே பொருந்தப்புணர்த்தல், என்றது பாட்டுக்களுக்கு வரவுறுக்கும்படியை.

விலக்குறுப்பாவன :—பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்தியவம், அவிநயம், சொல், சொல்லின்கூறுபாடு, வண் ணம், வரி, சேதமென இவைபதினைலும், என்னை ? ''விலக்குறுப் பென் பது.....ாரே முறுப்பே '' இவை ஈங்குரைப்பிற் பெருகும்.

14 - 5 பதினேராடலும்..... அறிந்தென்றது - அல்லியமுதற் கொடு கொட்டி ாருகக்கிடந்த பதினெருகூத்தும், அக்கூத்துக்களுக்குரிய பாட் டுக்களும் அக்கூத்துக்களின் விகறபங்களுக்கெல்லாம் அமைந்த வாச்சி யக் கூறுகளும் நூலின்வழியே விளங்கவறிந்து.

14. அவறறுள், பதினெராடலாவன —''கடைய. . . .. பதினேர் கூத்து.'' இவை தெய்வவிருத்தி, இரண்டு கூறுபடும் —அல்லியம்... . ஆறு'', ''துடிகடையம் .... ஐந்து '' இவை அசுரரைக் கொல்ல அமர ராடின. இவையிற்றின் விரிவு நூல்களுட்காண்க.

பாட்டுமென்றது அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்குமுரிய உருக்களுமென்றவாறு

அகக்கூத்திற்குரிய உருவாவன —கந்தமுதலாகப் பிரபந்தவுரு வீறுக இருபதிதெட்டும

புறநாடகங்களுக்குரிய உருவாவன —தேவபாணி முதலாக அரங் கொழி செய்யுள் அந்தமாகச் செந்துறை விகற்பங்களெல்லாமென்றவாறு

கொட்டுமென்றது - கூத்து விகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக் கூறுகளுமென்றவாறு.

அவை கீதானுகம், நிருத்தானுகம், உபயானுகமெனவிவை.

இவறறுள், கீதானுகம் - கீததீதுக்கு வாசித்தல், நிருத்தானுகம் - நிருத்ததீதுக்கு வாசித்தல், உபயானுகம் - இரண்டுக்கும் வாசித்தல்.

15. விதிமாண் கொள்கையின் விளங்கவறிந்தென்றது - நூல்களில் விதித்தவழியே விளங்கவறிந்து.

ஆங்கென்பது அசைச்சொல்.

காடலும் பாடலும் பாணியுந் தூக்கும்
கூடிய † நெறியின கொளுத்துங் காலைப்

16. ஆடலுமென்றது - அகக்கூத்தினும் புறக்கூத்தினுமுள்ள ஆடலுமென்றவாறு

கீறறு கடி சரி முதலாகத் தேசிக்குரிய கால்களும, சுறறுதல் எறிதல் உடைத்தல முதலான வடுகிறகுரிய காலகளும், உடறறூக்கு முதலாய உடலவர்த்தனையுமுடைய அகக்கூத்துக்குரியன

ாங்குச் சிங்களமென வழங்கிவருகின்ற கூத்துச் சொல்லிறறிலரெனின், ''சிங்கள . மெய்தும்'' என்னுஞ் சூத்திரத்தால் அதறகு வேறு கால்கள் இன்மையினென்பது, [1] பாலைக்கு நிலமில்லாததுபோல வென்க.

புறக்கூத்திற்குரிய கூத்தாவன —பெருநடை சாரியை பிரமரி இவை முதலாயினவும பதினேராடலுமான கூத்துக்களுமாம்.

இவ்வகையால் அகக்கூத்துக்களுக்கும புறக்கூத்துக்களுக்குமுரிய ஆடலுமென்றவாறு

பாடலுமென்றது - பண்ணல் முதலான எட்டுவகைப்பட்ட குறிக்கோளும்.

அவை —''இன்பம்.... . பயனே'' என எண்வகைப்பட்ட பயனையுமுடைய பாடலுமென்றவாறு

பாணியுமென்றது - தாளங்களுமென்றவாறு

அவை —சச்சபுடமுதலான பஞசதாளமும், அரைமாத்திரையுடைய ஏகதாளமுதலாகப் பதினறு மாத்திரையுடைய பார்வதிலோசனமீருகச் சொன்ன நாறபத்தொருதாளமும, ஆறன்மடடம் எட்டன்மட்டமென்பனவும், தாளவொரியல் தனிநிலையொரியலென்பனவும், ஒன்றன்பாணி முதலாக எண்கூத்துப்பாணியிறுதியாகக் கிடந்த பதினெரு பாணி விகற்பங்களும், முதனடை வார முதலாயினவுமென்றவாறு

தூக்குமென்றது - இத்தாளங்களின் வழிவருமு செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிவுதூக்கு, கோயிறறூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கென்று சொல்லப்பட்ட ஏழு தூக்குக்களுமென்றவாறு

17. கூடியநெறியினவென்றது - இசசொல்லப்பட்ட கூத்தும் பாட்டும் தாளமும் தூக்கும் தம்மிற்கூடிய நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்து முதலியன வென்றவாறு.

கொளுத்துங்காலை யென்றது - ஆடுவிக்குமிடத்தும் பாடுவிக்குமிடத்து மென்றவாறு.

[1] தொல். அகத். 2, உரை.

(பி - ம்.) † 'நெறியிற்'

பிண்டியும் பிணையலு மெழிற்கையுந் தொழிற்கையும்
கொண்ட வகையறிந்து கூத்துவரு காலைக்
கூடை செய்தகை வாரத்துக் களைதலும்
வாரஞ் செய்தகை கூடையிற் களைதலும்
பிண்டி செயதகை யாடலிற் களைதலும்
ஆடல் செய்தகை பிண்டியிற் களைதலும்
குரவையும் வரியும் விரவல செலுத்தி
ஆடற் கமைந்த வாசான் றன்னெடும்

18. பிண்டி - ஒற்றைக்கை, அவை பதாகை முதலாக இருபதீது நான்கு. பிணையல் - இரட்டைக்கை, அவை அஞ்சலி முதலாகப் பதின் மூன்று. எழிறகை - அழகுபெறக் காட்டும் கை
தொழிறகை - தொழில்பெறக் காட்டும் கை
"அவைதா, மெழிறகை .. பொருளா கும்மே."

19. கொணடவகையறிதல - பிண்டியும் பிணையலும புறக்கூதீதிற குரிய கையென்றும், எழிறகையும தொழிற்கையும அகக்கூதீதிறகுரிய கையென்றும அறிதல்

கூதீதுவருகாலையென்றது - கூதீதுக்களின் வரவு நிகழுமிடதீதென்ற வாறு.

20 - 21 கூடை செய்தகை . . . களைதலுமென்றது - அகக்கூதீதினிடதீது ஒறறையிறசெயத கைதீதொழில் இரட்டியிறபுகாமலும், இரட்டியிற் செய்த கைதீதொழில் இரட்டிக்கிரட்டியிலும் ஒறறையிலும புகாமலும் களைதல இன்னும் தேசியிற கைதீதொழில் மார்க்கதீதிற புகுதாமலும் மார்க்கதீதிற கைதீதொழில தேசியிற் புகுதாமலும களைதலெனறுமாம். ஒற்றையும இரடடியும தேசிக்கூறுதலானும, இரட்டியும இரட்டிக்கிரட்டியும் வடுகிற் கூறுதலானுமென்றுமாம

22 - 3. பிண்டி . ..களைதலுமெனறது - புறக்கூதீதினிடதீதுப பிண்டி யென்றது பொருடகையென்றும பிணையலென்றது தொழிறகை யென்றும அறிந்து ஆடல் நிகழுமிடதீது அவிநயம் நிகழாமலும், அவி நயம் நிகழுமிடதீது ஆடல் நிகழாமலும் களைதலென்றவாறு.

24 குரவையும் ... . செலுதீதியென்றது - குரவைக்கூதீதிற்குரிய கால்களும் வரிக்கூதீதிறகுரிய கால்களும தம்மில் விரவாதபடி செலுதீதி யென்றவாறு, "குரவை யென்பது . .....இயல்பிற் றுகும்", "வரி யெனப்..... ..வழங்கல்" என்பவாகலின்.

25. ஆடற்கமைந்த வாசான் றன்னெடுமென்றது-இக்கூதீதுக்களை இப்படியால் அவறறுடனே பொருந்த ஆடவும் ஆடுவிக்கவும் வல்ல ஆட லாசிரியனெடுமென்றவாறு.

யாழுங் குழலுஞ் சீரு மிடறும்
தாழ்குரற் றண்ணுமை யாடலொ டிவற்றின்
இசைந்த பாட லிசையுடன் படுத்து

இனி, இசையாசிரியன் அமைதி கூறுகின்றது —

26 - 36. யாழுங்குழலும் . இசையோன்றுனும் - யாழ்ப்பாடலும், வங்கியப்பாடலும, இருவகைத்தாளக்கூறுபாடுகளும், மிடற்றுப்பாடலும், மந்தமாகிய சுரத்தினையுடைய தண்ணுமையும், அகக்கூத்துப் புறக் கூத்துப் பதினேராடலென்னும் கூத்துக்களும் வல்லனுய் இவற்றுடனே சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும் படியும் புணர்க்கவும் வல்லனுய் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொரு ளான இயக்கம் நான்கினையும் அமைத்துத் தேசாந்தரங்களிற பாடைகளை யும் அறிந்து அந்தப் பாடைகள் இசைபூணும்படியையும் அறிந்து இயற் புலவன் நினைவும் நாடகப்புலவன் ாடும் வரவுகளும் இவறறுக்கு அடைத்த பாடல்களும் தம்மிற சந்திக்குமிடத்துக் குற்றநதீர்ந்த நூல் வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லனுயுள்ள இசைப்புலவனுமென்றவாறு.

இது பொழிப்புரை , என்சொல்லியவாறுவெனின —

26 யாழுமென்றது - " கோட்டின தமைதியும் . வகையே " என முடிக்கப்பட்ட யாழ்ப்பாடலுமென்றவாறு

குழலுமென்றது - பருமையும் நீளமும் இலக்கணத்துடன் அமைந்து விரலிடையிட்ட விரலுளர்துளையும ஊதுதுளையும உடைத்தாயச் சுர பேதங்கள் நிலைகுலையாமல் அளவறுக்கப்பட்டு நின்ற வங்கியப்பாடலு மென்றவாறு

சீருமென்றது - " செம்முறை .. . நிமிர்த்தல " என்று சொல்லப்படா நின்ற வண்ணக்கூறுபாட்டையும் இருவகைத்தாளக்கூறுபாட்டையும் பாலைநிலையினையும் பண்ணுநிலையினையும நிலப்படையகத்தும் தூய் தாகக் காட்டும் தன்மையு மென்றவாறு.

மிடறுமென்றது - மூலாதாரந்தொடங்கிய மூச்சைக் காலாற் கிளப்பிக் கருத்தாலியக்கி ஒன்றெனத்தாக்கி இரண்டெனப்பகுத்துப் பண்ணீர்மை களைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கு அமைந்த மிடற்றுப்பாடலு மென்றவாறு.

27. தாழ்குரற்றண்ணுமையென்றது - தாழ்ந்த குரலினையுடைய தண்ணுமைக்கருவிமுதலாயின வாசித்தலு மென்றவாறு.

ஆடலொடென்றது - அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினேராட லென்று சொல்லப்படாநின்ற ஆடலுடனென்றவாறு.

ஒடுவென்றது உடனிகழ்ச்சி, இச்சொல்லப்பட்டவற்றுடனேயென்ற வாறு.

27 - 8. இவற்றின் இசைந்த . படுத்தென்றது - இச்சொல்லப்பட்ட கூத்துக்களுக்குச் சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவல்லனுகியென்றவாறு.

வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
தேசிகத் திருவி னேசை கடைப்பிடித்துத்
தேசிகத் திருவி னேசை யெல்லாம்
ஆசின் றுணர்ந்த வறிவின ஞகிக்
கவியது குறிப்பு மாடற் றெருதியும்
பகுதிப் பாடலுங் †கொளுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபி னிசையோன் ருனும்
இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறியத்
தமிழ்முழு தறிந்த தன்மைய ஞகி

29. வரிக்கு.. இயக்கியென்றது - செந்துறை வெண்டுறையென்னப் படாநின்ற இருவகைப்பாடல்களுக்கும் பொருளாயமைந்த இயக்கம் நான்கினையும் அமைத்தென்றவாறு.

30. தேசிகத் .....பிடித்தென்றது - இயற்சொல் திரிசொல் திசைச் சொல் வடசொலென்று சொல்லப்படாநின்ற சொற்கள் இசைபூணுமபடியைக் கடைப்பிடித்தென்றவாறு

31 - 2. தேசிகத் . ஆகியென்றது - இச்சொற்களிற் புணர்ப்புண்ட இசைவேறுபாடுகளையெல்லாம் குற்றந்தீர உணரவல்ல அறிவினையுடைய ஞகியென்றவாறு.

33. கவியது குறிப்புமென்றது - இயறபுலவன் நினைத்த கோட்பாடு மென்றவாறு.

ஆடற்றெருதியுமென்றது - ஆடலாசிரியன் ாடும் வரவுகளின் தொகுதியு மென்றவாறு.

34. பகுதிப்பாடலுமென்றது - இவற்றுக்கு அமைந்த பாடற்பகுதியு மென்றவாறு

கொளுத்துங்காலையென்றது - இக்கூத்துக்களை ஆசிரியன் குறிப்புக்கும் பாடலுள்ளிட்டனவறறுக்கும் சேர இயறறுமிடத்தென்றவாறு.

35 - 6. வசையறு .....தானுமென்றது - இச்சொல்லப்பட்டவற்றைக் குற்றந்தீர்ந்த நூல்வழக்கால் வகுக்கவும் விரிக்கவும் வல்ல பாடலாசிரியனுமென்றவாறு.

இசையுடன்படுத்து இயக்கிக் கடைப்பிடித்து அறிவினஞகி விரிக்கும் இசையோனென்க.

இனிக் கவிஞனமைதி கூறுகின்றது —

37 - 8. இமிழ்கடல்.....ஆகியென்றது - ஆரவாரத்தினையுடைய கடல் சூழ்ந்த நிலத்தில் வடக்கும் தெறகும் குடக்கும் குணக்கும் வேங்கடங் குமரி தீம்புனறபௌவமெனத் தமிழோரால் எல்லைகூறப்படாநின்ற தமிழ்த் தேசத்தாரறிய மூன்றுதமிழும் போமென்னும் தன்மையுடைய ஞகியென்றவாறு.

அடி, 37 இமிழ்கடல் · பதிற் 2 - ஆம்பதி. 5, மணி. 17 : 62.
(பி - ம்.) †'கொளுத்துக்காலை'

வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்தின் [1]
நாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்
திசையோன் வக்கிரித் திட்டத்தை யுணர்ந்தாங்
கசையா மரபி னதுபட வைத்து
மாற்றேர் செய்த வசைமொழி யறிந்து
நாத்தொலை வில்லா நன்னூற் புலவனும்
ஆடல் பாட லிசையே தமிழே

---

39 - 40 வேத்தியல் . ..கடைப்பிடித்தென்றது - வேத்தியலென்றும் பொதுவியலென்றும இரண்டு கூறுபாட்டினையுடைய நாடகநூல்களை நன்றாகக் கடைப்பிடித்தென்றவாறு

41 - 2. இசையோன்... .வைத்தென்றது - இசைப்புலவன் ஆளத்தி வைத்த பண்ணீர்மையை முதலும் முறைமையும் முடிவும் நிறைவும் குறையும் கிழமையும் வலிவும் மெலிவும் சமனும் வரையறையும் நீர்மையு மென்னும பதினெரு பாகுபாட்டினனும் அறிநது அவன் அவை தாள நிலையில் எய்தவைத்த நிறம் தன் கவியினிடத்தே தோன்றவைக்க வல்லனெயென்றவாறு.

43 - 4 மாற்றேர் செய்த .. ..புலவனுமென்றது - சதுருக்களாற் செய்யப்பட்ட வசையாயுள்ளனவறிந்து அவை தோறருதபடி வசையின் மொழிகளால் நாடகக்கவி செய்யவல்ல நல்ல நூல்களையுணர்நத புலவனு மென்றவாறு, "இன்ன ..தருமே" என்றுராகலின்.

தன்மையனுகிக் கடைப்பிடித்து உணர்ந்துவைத்து அறிந்து தொலை விலலாத புலவனென்க

இனித் தண்ணுமையாசிரியன் அமைதி கூறுகின்றது —

45 - 55 ஆடல்பாட .. . முதல்வனுமென்றது - எல்லாக்கூத்துக் களும், எல்லாப்பாடலுக்களும், எல்லா இசைகளும், வடவெழுதிதொரீஇ வந்த எழுத்தாலே கடடப்படட ஓசைக்கட்டளைக் கூறுபாடுகளும், எல்லாப் பண்களும், இருவகைத்தாளங்களும், எழுவகைத்துரக்குக்களும், இவை யிற்றின் முடங்களும், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் லென்னும் சொறகளுமென்று சொல்லப்பட்டனவறறையுணர்ந்து ஓர் உருவை இரட்டிக்கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரமப நிறுத்த வும் அவ்விடத்துப் பெறுமிரட்டியை ஒப்பாக உருவானவழி நிற்குமானம் நிறுத்திக் கழியுமானம கழிக்கவும வல்லனுய் இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலின்பாடலும் கண்டப்பாடலும இயைந்து நடக்கிற படி கேட்போர் செவிக்கொள அமைந்த கரணத்தாற குறியறிந்து சேர வாசித்தலும் மற்றைக்கருவிகளிற் குறைநிரப்புதலும் அக்கருவிகளின் மிகுதியடக்குதலும் ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இசையின் இரந் திரம் தோன்றுதபடிசெய்தலும் செய்யுமிடத்துக் கைதொழில அழகு

[1] இவ்வடியின்பின், 'மாத்திரையறிநது மகிழ்தரு மரபின்' என ஓரடி மிகுதியாக ஒரு பிரதியிற் காணப்பட்டது.

பண்ணை பாணி தூக்கே முடமே
தேசிக மென்றிவை யாசி னுணர்ந்து
கூடை நிலத்தைக் குறைவின்று †மிகுத்தாங்கு
வார நிலத்தை வாங்குபு வாங்கி
50 வாங்கிய வாரத் தியாழுங் குழலும்
ஏங்கிய மிடறு மிசைவன கேட்பக்
கூருகிர்க் கரணங் குறியறிந்து ‡சேர்த்தி

பெறச்செய்து காட்டலும வல்லனுய் அழகுதக்க தண்ணுமைக் கருவி யினையும் அரியதொழிலினையுமுடைய ஆசிரியனுமென்றவாறு.

இது பொழிப்புரை, என்சொலலியவாறுவெனின் :—

45 ஆடலென்றது - எல்லாக்கூத்துக்களும்.

பாடலென்றது - பண்ணல் முதலிய பாடலியல்புகளும்.

இசையாவது - நரப்படைவால் உரைக்கப்பட்ட பதினேராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறருென்றுகிய ஆதியிசைகளும், அவை யாவன. "உயிருயிர்.. . கடனே" என்னும் சூத்திரத்தால் உறழ்நது கண்டுகொள்க.

தமிழாவது - வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக்கூறுகளும், இயலிசை நாடகங்களும் என்று சொல்லப்படா நின்ற மூன்று தமிழ்களுமு

46. பண்ணென்றது - நரப்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படா நின்றபண்ணும், பண்ணியறறிறமும், திறமும், திறத்திறமும்.

பாணியென்றது - இருவகைத் தாளவிகறபங்களும்.

தூக்கென்றது - செந்தூக்குமுதலாய ஏழுதூக்குக்களும்.

முடமென்றது - இவையிற்றின் குற்றங்களும்.

47. தேசிகமென்றது - இயற்சொல திரிசொல் திசைச்சொல் வடசொ லென்று சொல்லப்படாநின்ற சொற்பிரயோகம்.

இவை யாசினுணர்ந்தென்றது - இசசொல்லப்பட்ட ஒன்பதும் இலக் கணவழியே நுண்ணிதாக அறிந்தென்றவாறு.

48 - 9. கூடைநிலத்தைக் .. ..வாங்கியென்றது - ஒருருவை இரட்டிக் கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரம்பநிறுத்தவும அவ்விடத்துப் பெறும் இரட்டியை ஒப்பாக உருவானவழி நிற்குமானம் நிறுத்திக் கழியு மானம கழிக்கவும் வல்லனுயென்றவாறு.

50 - 52 வாங்கிய..... சேர்த்தியென்றது - இப்படி நிகழ்ந்த உருக் களில் யாழ்ப்பாடலும் குழலிசையும் கண்டப்பாடலும் இயைந்து நடக் கின்றபடி கேட்போர்க்குச் செவிகொள்ளாநிற்கத் தண்ணுமைக்கருவி யமைந்த கரணத்தாற் குறியறிந்து சேரவாசிக்க வல்லனுயென்றவாறு.

(பி -ம்.) †'மிகுத்து, வார' ‡'செலுத்தி'

ஆக்கலு மடக்கலு மீத்திறம் படாமைச்
சித்திரக் கரணஞ் சிதைவின்று செலுத்தும்
அத்தகு தண்ணுமை யருந்தொழின் முதல்வனும்
சொல்லிய வியல்பினிற் சித்திர வஞ்சனை
புல்லிய வறிந்து புணர்ப்போன் பண்பின்
வர்த்தனை நான்கு †மயலறப் பெய்தாங்

---

53. ஆக்கல் - மற்றக் கருவிகளின் குறையை நிரப்புகை.

அடக்கல் - மற்றக் கருவிகளின் மிகுதியை அடக்குதல்

மீத்திறம்படாமை - ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் [1]இரந்திரம் தோன்றுமற் செய்கை

54 சித்திரக்கரணஞ் சிதைவின்று செலுத்தும் - இவ்வனைத்தும் செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகுபெறச் செய்து காட்டவல்லவென்ற வாறு

55 அத்தகு ...முதல்வனுமென்றது - இச்சொல்லப்பட்ட கூறுபாடு களில் ஒன்றும குறைவின்றியே யிருக்கும தண்ணுமைக் கருவியாசிரியனு மென்றவாறு

உணர்ந்து மிகுத்து வாங்கிச் சேர்த்திச் செலுத்தும் தண்ணுமை முதல்வனென்க

இனிக் குழலோனமைதி கூறுகின்றது —

56. சொலலிய வியல்பாவது - நூல்களிற சொன்ன முறைமை யென் றவாறு.

56 - 7 சித்திரவஞ்சனை புல்லியவறிந்தென்றது - சித்திரப் புணர்ப் பும் வஞ்சனைப் புணர்ப்புமென்று சொலலப்படாநின்ற இரண்டு கூற் றினையு மறிந்தென்றவாறு

இவற்றுள், சித்திரப்புணர்ப்பாவது - இசைகொள்ளுமெழுத்துக்களின் மேலே பண்ணீர்மை நிறுத்தல்

வஞ்சனைப் புணர்ப்பாவது - இசைகொள்ளாவெழுத்தின்மேல் வல் லொற்று வந்துழி மெல்லொற்றுபோல் நெகிழ்த்துப் புணர்த்தல்.

57 புணர்ப்போன் பண்பினென்றது - புணர்க்கத்தக்க பாடலாசிரி யனையொத்த அறிவினையுடையனுகியென்றவாறு.

58. வர்த்தனை. . பெய்தாங்கென்றது - வங்கியத்து விரலுளர்ந்து ஊதுந்துளைகள் தர்ச்சனி முதலாக விடடுப்பிடிப்பது ஆரோகணமாத லானும் கனிட்டன் முதலாக விட்டுப்பிடிப்பது அவரோகணமாதலானும் இரண்டு கூறும் இப்படிச் செய்தல் வர்த்தனையாதலின் இப்படியால் [2]நூற்றுமூன்று பண்ணீரமைகளையும தந்நிலை குலையாமல் நிரம்பக் காட்ட வல்லனுயென்றவாறு

ஆங்கு - அவ்விடத்து. தர்ச்சனி - [3]சுட்டாமுட்டி கனிட்டன் - சிறு விரல்.

---

[1] இரந்திரம் - இடைவெளி [2] 3 72-8, உரை பார்க்க [3] சுட்டா முட்டி - ஆள்காடடி விரல்

(பி - ம்.) † 'மயலறத் தெறிந்தாங், கெற்றிய'

கேற்றிய குரலிளி யென்றிரு நரம்பின்
ஒப்பக் கேட்கு முணர்வின ருகிப்
பண்ணமை முழவின் கண்ணைறி யறிந்து
தண்ணுமை முதல்வன் றன்னெடும் பொருந்தி
வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்
கிசையோன் பாடிய விசையி னியற்கை
வந்தது வளர்த்து வருவ †தொற்றி
இன்புற வியக்கி யிசைபட வைத்து

---

59 - 60. ஏற்றிய குரலிளி.... ஆகியென்றது - பதினெற்கோவையி னிடத்துக் குரனரம்பிரட்டிக்க வரும் அரும்பாலையும் இளிநரமபு இரட் டிக்க வரும் மேற்செம்பாலையும்போல அல்லாத பாலைகளையும் இசைநூல் வழக்காலே இணைநரம்பு தொடுத்துப்பாடும் அறிவினையுடையனு யென்ற வாறு.

61 பண்ணமை.. ...அறிந்தென்றது - பண்ணுதலமைந்த முழவின் கண்ணைறியினை யறிநதென்றவாறு

62 தண்ணுமை பொருந்தியென்றது - தண்ணுமையாசிரியன் றன்னெடும் பொருந்தியென்றவாறு.

உம்மையாற் பொருந்துமிடமும் பொருந்தியென்க.

63. வண்ணப்.....வைத்தென்றது.....

பட்டடையென்றது நரமபுகளில் இளிக்குப்பெயர் , என்னை ? எல்லாப் பண்ணிற்கும் அடிமையாதலின் வண்ணமென்றது - நிறம் , நிறத் தினையுடைய பட்டடையென்றவாறு , இதனை யாழ்மேல்வைத்தென்க

ஆங்கென்றது அசை

64. இசையோன்.....இயற்கையென்றது - இக்கிரமத்தினுலே பண் களை யாழ்மேல்வைத்து அதன் வழியே இசைக்காரன் பாடிய பாட்டின் இயல்பையென்றவாறு.

65. வந்தது வளர்த்தென்றது - பாடுகின்ற பண்வரவுகளுக்குச் சுரம் குறைவுபடாமல் நிறுத்தியென்றவாறு.

வருவதொற்றியென்றது - அந்தப் பண்ணுக்கு அயல்விரவாமல் நோக்கி யென்றவாறு.

66. இன்புறவியக்கியென்றது - வண்ணமுதலாகக் காட்டப்பட்ட பாடலியல் வழக்கெல்லாம் இரதம்பொருந்த நிரம்பக்காட்டியென்றவாறு.

இசைபடவைத்தென்றது - முற்கூறிய முதலும் முறையுமுதலான பண்ணிலக்கணம் பதினென்றினையும் நிரம்பவைக்கவல்லனுயென்றவாறு.

---

61. முழவின் கண்ணைறி : மணி. 19 : 82. (பி - ம்.) † 'தெற்றி'

வார நிலத்தைக் கேடின்று வளர்த்தாங்
கீர நிலத்தி னெழுத்தெழுத் தாக
வழுவின் றிசைக்குங் குழலோன் ருனும்
ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியின்
ஓரேழ் பாலை நிறுத்தல் வேண்டி
வன்மையிற் கிடந்த தார பாகமும்
மென்மையிற் கிடந்த குரலின் பாகமும்
மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளக்
கைக்கிளை யொழிந்த பாகமும் பொற்புடைத்
தளராத் தாரம் விளரிக் கீத்துக்
கிளைவழிப் பட்டன ளாங்கே கிளையும்
தன்கிளை யழிவுகண் டவள்வயிற் சேர

---

67. (பா) வாரநிலத்தைக் கேடின்று பார்த்தென்றது-முதனடை வாரம் கூடை திரளென்று சொல்லப்படாநின்ற இயக்கம் நான்கினும் முதனடை மிகவும் தாழ்ந்த செலவினையுடைத்தாதலானும், திரள் மிகவும் முடுகிய நடையினையுடைத்தாதலானும், இவை தவிர்ந்து இடைப்பட்ட வாரப்பாடல் சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் உடைத்தாத லானும், கூடைப்பாடல் சொற்செறிவும் இசைச்செறிவும் உடைத்தாத லானும், சிறப்புநோக்கி இவ்விரண்டினுள்ளும் வாரப்பாடலை அளவுநிரம்ப நிறுத்தவல்லனெனறவாறு.

எனவே, கூடைப்பாடலும் அமைவதாயிற்று. நிலம் - இடைநிலம்.

67-8. ஆங்கு ார நிலத்தின் எழுத்தெழுத்தாகவென்றது-பாடலிடத் துச் சொன்னீர்மையின் எழுத்துக்கள் சிதையாமல் எழுத்தை எழுத்தாக இசைக்கும் குழலோனென்றவாறு, அன்றியும் சரிகமபதநி **என்பாரு முளர்.**

69. வழுவின்றிசைக்கும் குழலோன்ருனுமென்றது - இச்சொல்லப் பட்ட இயல்புகளை இலக்கணப்படியே வாசித்துக்காட்ட வல்ல வங்கிய ஆசிரியனுமென்றவாறு.

அறிந்து மயலறப்பெய்து உணர்வினலகி அறிந்து பொருந்தி வைத்து வளர்த்து ஒற்றி இயக்கி வைத்துப் பார்த்து இசைக்குங் குழலோ னென்க.

இனி, யாழாசிரியனமைதி கூறுகின்றது :—

70 - 71. ாரேழ் தொடுத்த . .. வேண்டியென்றது - ஆயப்பாலையாய் நின்ற பதினேற்கோவை பொலிந்து செப்பமுடைத்தாய்ப் பாடலியல்பு ஒத்த மைந்த சிறப்புடைத்தாகலினுல் அதிலே செம்பாலை படுமலைப்பாலை செவ் வழிப்பாலை அரும்பாலை கோடிப்பாலை விளரிப்பாலை மேற்செம்பாலை யென்று சொல்லப்பட்ட ஏழுபாலையினையும் இணைநரம்பாகத்தொடுத்து நிரம்பநிறுத்திக்காட்டல் காரணமாகவென்றவாறு.

72 - 8. வன்மையிற்கிடந்த.. .. அவள்வயிற் சேரவென்றது - " தார பாகமும் .....என்மனுர் புலவர்" என்னுஞ்சூத்திரத்தாலே வரப்பட்ட பாலை யின் முடிவுதானமாய் வலிந்த நிலைமையினையுடைய தாரம்பெற்ற இரண்

ஏனை மகளிருங் †கிளை வழிச் சேர
மேல துழையிளி கீழது கைக்கிளை
வம்புறு மரபிற் செம்பாலை யாய
திறுதி யாதி யாக வாங்கவை
பெறுமுறை வந்த ‡பெற்றியி னீங்காது
படுமலை செவ்வழி பகரும் பாலையெனக்
குரல்குர லாகத் தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்
கிளிமுத லாகிய § வெதிர்படு கிழமையும்
கோடி விளரி மேற்செம் பாலையென
நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையின்

டலகில் ஓரலகையும் விளரிப்பாலையின் முதல்தாரமாதலின் மேல் நிற்கிற குரனரம்பு பெற்ற நாலலகில் இரண்டலகையும் தாரநரம்பில் அந்தரக் கோலிலே கைக்கிளையாக நிறுத்தத் தாரந்தான் கைக்கிளையாயிற்று. அந்த நரம்பில் ஒழிந்த ஓரலகையும் பண்டைவிளரியிலே கூட்ட அவ்விளரி துத்த நரம்பாயிற்று. இப்படியாற் பன்னிருகால் திரிக்கப் பன்னிருபாலையும் பிறக்கும், பன்னிருபாலையினுருத் தொண்ணூற்றொன்றும் பன்னிரண்டு மாய்ப் பண்கள் நூறறுமூன்றுதற்குக் காரணமாமெனக்கொள்க.

இவ்விடத்துத் தாரநரம்பின் அந்தரக்கோலத் தாரமென்றது— " தன்னமும்.. .. வழிப்படர " என்னும் சூத்திரத்தாலெனக்கொள்க.

79. ஏனை மகளிருங் கிளைவழிச்சேரவென்றது - இதனைப்பெண்டிர்க் குரிய தானமாகிய பதினற்கோவையிலே கூட்டவென்றவாறு.

கூட்டும்படி —

80 - 81. மேலதுழையிளி ...செம்பாலையாயதென்றது - உழைமுதற கைக்கிளையிறுதியாக மெலிவுநான்கும் சமமேழும் வலிவு மூன்றுமாய்ச் செம்பாலையாயதென்க

82 - 3. இறுதி யாதி.....நீங்காதென்றது - தாரமுதலாகப் பெறுமுறை யாய்வந்தபடியே நீங்காமலென்றவாறு.

84 - 5. படுமலை செவ்வழி..... திரிந்தபினென்றது - கைக்கிளைகுர லாய்ப் படுமலைப்பாலையும், துத்தம் குரலாய்ச் செவ்வழிப்பாலையும், குரல் குரலாய் அரும்பாலையும் தற்கிழமை திரிந்தபின் என்க.

அரும்பாலைக்கு நரம்பு இரட்டித்த பெற்றித்தென்றவாறு.

86 - 9. முன்னதன் வகையே.....கிடக்கையினென்றது - முன்பிற் படியே தாரம் குரலாகக் கோடிப்பாலையும், விளரிகுரலாக விளரிப்பாலையும், இளிகுரலாக மேற்செம்பாலையும் ஆயின.

இனி, மேற்செம்பாலை இளிநரம்பு இரட்டித்த நிலைமையினையுடைத் தாய் இப்படிச்சமைந்த பதினற்கோவைப்பாலை நிலையிலென்றவாறு.

(பி - ம்.) † 'கிளைவயிற் சேர' ‡ 'பெற்றிநீங்காது' § 'வேர்படு'

இணைநரம் புடையன வணைவுறக் கொண்டாங்
கியாழ்மேற் பாலை யிடமுறை மெலியக்
குழன்மேற் கோடி வலமுறை †மெலிய
வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம்
பொலியக் கோத்த புலமை யோனுடன்
எண்ணிய நூலோ ரியல்பினின் வழாஅது
மண்ணக மொருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபி னரங்க மளக்கும்
கோலள விருபத்து நால்விர லாக

---

90. இணைநரமபுடையன வணைவுறக் கொண்டாங்கென்றது - இப் பதினுற்கோவைப்பாலை நிலையிலும பண்ணுநிலையிலும் இரட்டித்த குரல் குரலாகிய அருமபாலையும இளிகுரலாகிய மேற்செமபாலையும்போல அல் லாத ஐந்து பாலையும் உழை குரலாகச் செமபாலைககு உழை பெய்தும் கைக்கிளை குரலாகப் படுமலைக்குக் கைக்கிளை பெய்தும துத்தம் குரலாகச் செவ்வழிப்பாலைக்குத் துத்தம் பெயதும் தாரம் குரலாகக் கோடிப்பாலைக் குத் தாரம் பெய்தும் விளரிகுரலாக விளரிப்பாலைக்கு விளரிபெய்தும் பாடப்படுமென்றவாறு.

91 - 2. யாழமேற் பாலை . .மெலியவெனறது - யாழினிடத்து அரும் பாலை முதலியன இடமுறை மெலியவும் குழலினிடத்துக் கோடிப்பாலை முதலியன வலமுறை மெலியவும் பாடப்படுமென்றவாறு.

93 - 4 வலிவு . புலமையோனென்றது - இப்படியால் வலிவும் மெலிவும் சமனுமென்று சொல்லப்படாநின்ற தானநிலையினையுடைய இசைக்கூறுபாடுகளுக்கெல்லாம் நரப்படைவு கெடாமலும் பண்ணீர்மை முதலாயின குனருமலும் பணர்க்கவல்லனுய் அப்புணர்ப்பிற்கு அமைந்த எழுத்துக்களால் இசை செய்யவல்ல யாழாசிரியனுமென்றவாறு.

(71) நிறுத்தல்வேண்டிப் (94) பொலியக்கோத்த புலமையோனென்க.

94. உடனென்றது-ஆடலாசிரியன் முதலாயுள்ளாருடனென்றவாறு

இனி, அரங்கினமைதி கூறுகின்றது.—

95 - 6 எண்ணியநூலோர்... . வகுத்தனர் கொண்டென்றது - எண் ணப்பட்ட நாடக நூலாசிரியர் வகுத்த இயல்புகளின் வழுவாதவகை அரங்கு செய்யத் துவர் வரி வளை பொருத்தல் முதலிய நிலக்குற்றங்கள் நீங்கின விடத்திலே நலந்தெரிந்து இவ்விடமென்று வகுத்துக் கொண் டென்றவாறு.

97 - 100. புண்ணிய நெடுவரைப் .....நால்விரலாகவென்றது - பொதி யில்வரை முதலான புண்ணிய நெடுவரைப் பக்கங்களில் நெடிதாகி உயர வளர்ந்த மூங்கிலிற் கண்ணெடு கண்ணிடை ஒரு சாணுக வளர்ந்தது

(பி - ம்.) † 'வலிய'

எழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
உத்தரப் †பலகையோ டரங்கின் பலகை
வைத்த விடைநில நாற்கோ லாக
ஏற்ற வாயி லிரண்டுடன் பொலியத்
தோற்றிய வரங்கிற் ரெழுதன ‡ரேத்தப்
பூதரை யெழுதி மேனிலை வைத்துத்
தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்தாங்

கொண்டு நூல்களிற் சொல்லுகிறபடியே அரங்கஞ்செய்ய அளக்குங்கோல் உத்தமன்கைப்பெருவிரல் இருபத்துநாலு கொண்டது ஒரு முழமாகக் கோல் நறுக்கியென்றவாறு;

"ஒத்த வணுமுத லுயர்ந்துவரு கணக்கில், உத்தமன் பெருவிர லிரு பத்து நாலு, கொண்டது கோலெனக் கோற்குறிப் புணர்ந்த, தண்டாக் கேள்வித் தலைவர் கிளந்தனர்" என்ருராகலின்.

101 - 2. எழுகோல் . ..உறுப்பினதாகியென்றது - அக்கோலால் ஏழு கோல் அகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒருகோல் குறட்டுயரமுமாயென்க;

என்னை? "அக்கோலேழகன்று ..உயரவுமுரித்தே" என்ருராகலின்.

103 - 6. உத்தரப் பலகை.....அரங்கிலென்றது - தூணத்துக்குமீது வைத்த உத்தரப் பலகைக்கும் அரங்கினிடத்து அகலத்துக்கிட்ட பலகைக்கும் இடை நின்ற நிலம் நான்கு கோலாக உயரங்கொண்டு இத்தன்மையவாய அளவுக்குப் பொருந்த வகுத்த வாயிலிரண்டினை யுடையதாகச்செய்த அரங்கி லென்றவாறு.

வாயிலிரண்டு .—புகச்சமைத்த வாயிலும் புறப்படச்சமைத்த வாயிலு மெனக் கொள்க.

106. தோற்றியவரங்கு - இப்படியாற் சமைக்கப்பட்ட நூலிற் சொல் லுகிறபடியே எல்லா விலக்கணமும் தோற்றின அரங்கென்க.

106 - 7. தொழுதனர் .....வைத்தென்றது - அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்று சொல்லப்படாநின்ற நாலு வருணத்துப் பூதரையும் மேனி லத்தே யாவரும் புகழ்ந்து வணங்க எழுதி வைத்தென்றவாறு;

என்னை? "கூறிய வரங்கில்... ..இயல்பிற் ருமே" என்ருராகலின்.

108. தூணிழற்.....கெடுத்தென்றது - தூண்களினிழல் நாயகப் பத்தியின்கண்ணும் அவையின்கண்ணும் படாதபடி மாட்சிமைப்பட்ட விளக்கை யேற்றி யென்றவாறு.

---

101. மணி. 18 : 103. (பி - ம்.) † 'பலகையோ டோங்கின' ‡ 'ரேத்திப்'

கொருமுக வெழினியும் பொருமுக வெழினியும்
கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்தாங்
கோவிய விதானத் துரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுட னுற்றி
விருந்துபடக் கிடந்த வருந்தொழி லரங்கத்துப்
பேரிசை மன்னர் பெயர்புறத் தெடுத்த
சீரியல் வெண்குடைக் காம்புநனி கொண்டு
கண்ணிடை நவமணி யொழுக்கி †மண்ணிய
நாவலம் பொலந்தகட் டிடைநிலம் போக்கிக்

---

109 - 10. ஒருமுகவெழினியும் ....வகுத்தென்றது - இடத்தூணினிலை யிடத்து ஒருமுகவெழினியும் இரண்டு வலத்தூணினிலையிடத்துப் பொரு முகவெழினியும் மேற் கரநதுவரலெழினியுமாகச் செயற்பாட்டுடனே வகுத்தென்றவாறு.

111. ஓவியவிதானத்து - சித்திரவிதானமான பலதொழில்களையு முடைத்தாகி.

111 - 2. உரைபெறு .....நாற்றியென்றது - நல்லவாகிய முத்து மாலைகளாற் சல்லியும் தூக்குமாக நாறறியென்றவாறு.

113. விருந்துபடக் .....அரங்கத்தென்றது - அழகினுற் புதுமைத் தாகச் சமைத்த அரங்கினகத்தென்றவாறு.

(96) வகுத்தனர் கொண்டு (107) வைத்து (108) எடுத்து (110) வகுத்து (112) நாற்றிக் (113) கிடந்த அரங்கமென்க.

நாறறுதற்கு இடமாகிக் கிடந்த அரங்கமென்க.

114 - 5. பேரிசைமன்னர்.....நனிகொண்டென்றது - பெரியசீர்த் தியையுடைய அரசர் பொருதுடைந்து புறங்கொடுத்தவழிப் பறிக்கப்பட்ட அழகிய நற்கொற்றக்குடையின் காம்பைத் தலைக்கோலாகக் கொண் டென்றவாறு.

என்றது தலைக்கோல் கொள்ளுமிடத்து மாற்றுவேந்தரெயிற் புறத்து வெட்டினமுங்கிலும் புண்ணியவரையின் மூங்கிலும் மாற்றரசர் குடைக்காம்புமாமென்.....

இது கூறிற்று, வேத்தியலும் பொதுவியலுமாதலான்.

116 - 7. கண்ணிடை..... போக்கியென்றது - கண்கள்தோறும் நவ ரத்தினங்களாற் கட்டி இடைநிலங்களைச் சாமபூநதமென்னும் பொற்றகட் டாலே செறிய மலக்கமாகக் கட்டியென்றவாறு. மலக்கமாகக் கட்டலாவது- மாருகக்கட்டுவது.

---

109 - 10 · "எழினி தானே மூன்றென மொழிப", "அவைதாம், ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியும், கரந்துவர லெழினியு மெனமூ வகையே" (சீவக. 675, ந. மேற்.), "பொருமுகப் பளிங்கி னெழினி" (மணி. 5. 3.)

111. நித்திலவிதானம். மணி. 18. 46.

114. இவ்வடி முதலியன 28 : 98-ஆம் அடி முதலியவற்றை ஒத் துள்ளன.

(பி - ம்.) † 'நண்ணிய'

காவல் வெண்குடை மன்னவன் கோயில்
இந்திர சிறுவன் சயந்த னுகென
வந்தனை செய்து வழிபடு தலைக்கோல்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணிய பின்னர் மாலை யணிந்து
நலந்தரு நாளாற் பொலம்பூ ணுைடை
அரசுவாத் தடக்கையிற் பரசினர் கொண்டு
முரசெழுந் தியம்பப் பல்லிய மார்ப்ப
அரைசொடு பட்ட வைம்பெருங் குழுவும்
தேர்வலஞ் செய்து கவிகைக் கொடுப்ப
ஊர்வலஞ் செய்து புகுந்துமுன் வைத்தாங்

---

118 - 20. காவல்வெண்குடை.. தலைக்கோலென்றது - இத்தலைக் கோலைத் தேவேந்திரன் மகன் சயந்தனுக நினைத்து மந்திரவிதியாலே பூசித்து வழிபடடு இராசாவின் கோயிலிலே காப்பமைத்து இருத்தக்கடவ தென்றவாறு

சயந்தனுதற்குக்காரணம் மேலே (பக்கம் 56) சொன்னேம்

121 - 2. புண்ணிய நன்னீர்.....மாலையணிநதென்றது - நாடகக் கணிகை தலைக்கோல் கொள்ளுஞான்று புண்ணியதீர்த்தங்களினீரைப் பொற்குடத்திலே யெடுத்துக்கொண்டுவந்து இத்தலைக்கோலை அபிடேகம் பண்ணிய பின்பு மாலைகளும் சூட்டியென்றவாறு.

முன்புசொல்லிப்போந்த (25) நாடகவாசிரியன் முதலானேர் (113) அரங்கத்தின்கண்ணே (128) இத்தலைக்கோலைவைத்துப் (121) பொற் குடத்தால் (122) நீராட்டிய பின்பு மாலைசூட்டியென்க.

123. நலந்தருநாளாலென்றது - நல்லநாளிலென்றவாறு

இதனை நல்லநாளில் (122) மண்ணியபின்னரென முன்னேசேர்க்க.

123 - 4 பொலம்பூணுைடை .....கொண்டென்றது - பொற்பட்டத் தையும் ஆபரணங்களையுமுடைய பட்டவருத்தனத்தினகையில் வாழ்த் துடனே கொடுத்தென்றவாறு.

125 - 8. முரசெழுந்தியம்பப் .... முன்வைத்தாங்கென்றது - வீர முரசுமுதலாயினவும் பலவாச்சியங்களும் ஆர்ப்ப அரசனும் மந்திரி புரோகித சேனபதித் தொடக்கத்தாருங்கூட வீதியின்கண் நின்ற தேரினையும் இவ்வைராபதத்தினையும் உடன்கொண்டுவலஞ்செய்து தேரின்மேல் நின்ற பாடுவானது கையிலே இத்தலைக்கோலைக் கொடுத் துத் தேரினைக்கொண்டு நகரியை வலமாக வந்து அரங்கத்தின்கட்புகுந்து தலைக்கோலை எதிர்முகமாக வைத்தபின் என்றவாறு.

என்னை? "பிணியுங் கோளு...தக்க தென்ப" என்றார் செயிற்றி யனார்.

கியல்பினின் வழாஅ விருக்கை முறைமையிற்
குயிலுவ மாக்க †ணெறிப்பட நிற்ப
வலக்கான் முன்மிதித் தேறி யரங்கத்து
வலத்தூண் சேர்தல் வழக்கெனப் பொருந்தி
இந்நெறி ‡வகையா லிடத்தூண் சேர்ந்த
தொன்னெறி ¶ யியற்கைத் தோரிய மகளிரும்
சீரியல் பொலிய நீரல நீங்க
வார மிரண்டும் வரிசையிற் பாடப்
பாடிய வாரத் தீற்றினின் றிசைக்கும்
கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாம்

இனி, அரங்கிலேபுகுந்து ஆடுகின்ற இயல்பு கூறுகின்றது.—

129 இயலபினின் ..முறைமையினென்றது - வரிசைக்கேற்ற இருக் கைமுறைகளிலே இருந்தபின் என்றவாறு.

130. குயிலுவமாக்கள் நெறிப்பட நிற்பவென்றது - குயிலுவக்கருவி யாளர் நிறகக்கடவ முறைமையிலே நிறபவென்றவாறு

முறைமையிலே நிற்கையாவது —" ஆடிட முக்கோல் ..நிலையிட மொருகோல்" எனறு கூறின முறை வழுவாதே நிறகை

குயிலுவர் - இடக்கை முதலான கருவியாளர்.

131 - 2 வலக்கானமுன் .. . பொருந்தியென்றது - நாடகக்கணிகை யாகிய அரங்கேறுகின்ற மாதவி அரஙகத்திலே வலக்கால் முறபடவிட் டேறிப பொருமுகவெழினிக்கு நிலையிடனை வலப்பக்கத்துதீ தூணி டத்தே சேர்தல வழக்கென்னுமிடத்தாலே சேர்நதென்றவாறு.

133 - 4 இந்நெறி வகையா .. .. தோரியமகளிருமென்றது - மாதவி வந்தேறி நின்றபடி இடத்தூணிலையாகிய ஒருமுகவெழினியிடமபறறிய பழைய நெறியியற்கையினையுடைய தோரியமடந்தை முதலாயினரு மென்றவாறு.

தோரியமடந்தையராவார் - ஆடி முதிர்ந்தார், என்னை? " இந்நெறி வகையால்.. .. தோரிய மகளே" எனவும், " தலைக்கோ லரிவை... தோரிய மகளே" எனவும் சொன்னராகலின்.

135 - 6 சீரியல்... . பாடவென்றது - நன்மையுண்டாகவும் தீமை நீங்கவும்வேண்டித் தெய்வப் பாடல பாடவென்றவாறு.

வாரமிரண்டாவன —ஒரொற்றுவாரம, ாரொற்றுவாரமென்னும் செய் யுள் அவை தாளத்து ஒரு மாத்திரையும இரண்டு மாத்திரையும பெறறு வரும்

137 - 8 பாடிய வாரத்து. கருவிகளெலலாமென்றது - தெய்வப் பாடலின் ாறறிலேநின்று கூடி இசைக்கப்படாநின்ற கருவிகளெல்லா மென்றவாறு.

இக்கருவிகள் எவ்வண்ணங்கூடியிசைத்தனவோவெனின் —

---

130. கூடிய குயிலுவக் கருவிகள் மணி 7 · 45.

(பி - ம்.) † 'ணெறிபட' ‡ 'வகையில்' ¶ 'யியற்கையிற் ரோரிய மகளும்'

குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் †றிசைத்த தாமந் திரிகை
ஆமந் திரிகையோ டந்தர மின்றிக்
கொட்டிரண் டுடையதோர் ‡மண்டில மாகக்
கட்டிய ‡மண்டிலம் பதிஞென்று போக்கி
¶வந்த முறையின் வழிமுறை வழாமல்

---

139. குழல்வழி நின்றதியாழேயென்றது - வங்கியத்தின்வழியே நின்றது யாழ்ப்பாடலென்றவாறு.

எனவே மிடற்றுவழி யாழாதலின் மிடற்று மட்டமும் யாழ்வழித் தெனக்கொள்க.

139 - 40. யாழ்வழி.....தகவேயென்றது - யாழ்ப்பாடலின் வழியே தண்ணுமைக்கருவி நின்றதென்றவாறு.

140 - 41. தண்ணுமைப் பின்வழிநின்றது முழவேயென்றது - மத்தளக் கருவியின் வழியே குடமுழவு நின்றதென்றவாறு.

141 - 2. முழவொடு கூடிநின்றிசைத்த தாமந்திரிகையென்றது - முழவொடுகூடிநின்ற வாச்சியக் கூறுகளை அமைத்தது ஆமந்திரிகை யென்னும் கருவியென்றவாறு.

ஆமந்திரிகையாவது - இடக்கை. நின்றது கருவியென்னுது ஓசை யென்க.

அஃதேல் மிடற்றுப்பாடல் சொல்லிற்றிலராலெனின், வாரப்பாடல் பாடிய பின்னெனவே மிடற்றுப்பாடலும் அடங்கும்.

143. ஆமந்திரிகையோடந்தரமின்றியென்றது - இவ்வாமந்திரிகை யோடே முன்சொன்ன குயிலுவக்கருவிகள் அனைத்தும் பருந்தும் நிழலும் போல ஒன்றுய் நிற்பவென்றவாறு.

144. கொட்டிரண்டுடையதோர் மண்டிலமாகவென்றது - ஒரு தாளத்துக்கு இரண்டுபற்றுக வென்றவாறு.

145. கட்டிய மண்டிலம் பதிஞென்று போக்கியென்றது - பஞ்ச தாளப் பிரபந்தமாகக் கட்டப்பட்ட தேசியொத்தை ஒரு தாளத்துக்கு இரண்டு பற்றுகப் பத்தும் தீர்வு ஒன்றுமாகப் பதிஞெருபற்றுலே தேசிக் கூத்தை ஆடிமுடித்தென்றவாறு.

146. வந்த முறையின் வழிமுறை வழாமலென்றது - இப்படிச் செய்கை நாடகநூல்களில் அமைந்த முறையாகலான், அமமுறை வழுவாமலென்றவாறு.

---

139 மதுரைக் 605-6 அடி, 139-43. "குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர், முழவியம்ப லாமந் திரிகை" (சீவக. 124, 675, ந மேற்.), "குழலெழீஇ யாழெழீஇத் தண்ணுமை...ஆமந்திரிகை என்று கூத்தநூலுடையாரும் சொன்னர்" (இறை. 40, உரை, மேற்.)

(பி - ம்.) † 'றிசைத்ததியாமந்திரிகை' ‡ மண்டலம்' ¶ 'வந்த முறைமையின்'

அந்தரக் கொட்டுட னடங்கிய †பின்னர்
மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப்
பாற்பட நின்ற பாலைப் பண்மேல்
நான்கி ஞெரீஇய நன்கன மறிந்து
மூன்றளந் தொன்று ‡கொட்டி யதனை
ஐதுமண் டிலத்தாற் கூடை போக்கி
வந்த வாரம்வழி மயங்கிய பின்றை
ஆறு நாலு மம்முறை போக்கிக்

147. அந்தரக் கொட்டுட னடங்கிய பின்னரென்றது.....

அந்தரக்கொட்டென்றும் முகமென்றும் ஒதீதென்றும் இதற்குப் பெயர்.

இந்த ஒதீது ஆடிய பின்னரல்லது உருவுகாட்டுகை வழக்கல்ல வென்றவாறு,

என்னை? முகமா டுதறிரி யோகப் பொருட்டே" என்பதனுற் காண்க.

148 - 9. மீத்திறம்.....பாலைப்பண்மேலென்றது - மங்கலப் பண்ணுய் நரப்படைவுமுடைதீதாயிருக்கிற பாலைப்பண்ணை அளவுகெடாதபடி ஆளதீதியிலேவைதீது அதன்மேலே யென்றவாறு.

150. நான்கி ஞெரீஇய நன்கனமறிந்தென்றது - மங்கலச் சொல்லினை யுடைதீதாய் நாலுறுப்பும் குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுதீதியும் இசைப்படுதீதியுமறிந்து பாட்டும் கொட்டும் கூதீதும் நிகழ்தீதியென்ற வாறு.

நாலுறுப்பாவன:—உக்கிரம் துருவை ஆபோகம் பிரகலை எனவிவை நாலுறுப்பும் குறைபாடில்லாத உருவெனவேண்டியது, மூன்றுறுப் பாலே வருவனவுமுளவாதலின், அவை இரண்டாமடியே ஈறறடியாகப் பாடிமுடிவன, அவை மங்கலதீதுக்குப் பொருந்தாவென்க.

151. மூன்றளந் தொன்று கொட்டியென்றது - மூன்றெதீதுடைய மட்டதீதிலேயெடுதீது ஓரொதீதுடைய ஏகதாளதீதிலே முடிதீதென்றவாறு.

152. ஐதுமண்டிதீதாலென்றது - அழகிய மண்டிலநிலையாலென்ற வாறு;

என்னை? "கொண்ட.....வருதக வுடைதீதே" என்பவாகலின்.

153. கூடை போக்கியென்றது - தேசிக்கு ஒற்றிதீதொதீதலும் இரட்டிதீதொதீதலுமேயாகலின், தேசிக்கூறெல்லாம் ஆடி முடிதீதென்க.

இனி, மார்க்கம் கூறுகின்றது —

154. ஆறுநாலுமம்முறை போக்கியென்றது - பஞ்சதாளப்பிரபந்த மாகக் கட்டப்பட்ட வடுகிலொதீதையும் தேசியிலொதீதைக் காட்டினுற் போல இரட்டிக்கிரட்டியாக ஆடியென்றவாறு.

(பி - ம்.) † 'பின்றை, மீதீதிறப் படாமை வர்தீதனை வகுதீதுப்' ‡ 'கொட்டிய வதனை, யைந்துமண் டலதீதால்'

155 கூறிய வைந்தின் கொள்கை போலப்
பின்னையு மம்முறை †பேரிய பின்றைப்
பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் ‡வகுத்தென
நாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்துக்
காட்டின ளாதலிற் காவல் வேந்தன்
160 இலைப்பூங் கோதை யியல்பினின் வழாமைத்
தலைக்கோ லெய்தித் தலையரங் கேறி
§விதிமுறைக் கொள்கையி னுயிரத் தெண்கழஞ்
சொருமுறை யாகப் பெற்றன ளதுவே

155 - 6 கூறிய வைந்தின் . பின்றையென்றது - சொல்லிப்போந்த தேசிபோல வடுகும ¶மடடதீதாளமுதலாக ஏகதாளம் அந்தமாக வைசாக நிலையிலே ஆடி முடித்தபின்னரென்றவாறு ,

என்னை ? “ வைசாக . . வரையார் ” என்றாராகலின்

157 பொன்னியல்.... வகுத்தெனவென்றது - பொலிவினையுடைத் தொரு பொறகொடியானது கூத்தாடினுற்போலவெல் றவாறு

158 - 9 நாடடிய . ...ஆதலினென்றது - தாண்டவம நிருத்தம நாட்டியமெனனும மூன்று கூறுபாட்டினும் நாட்டியமென்பது புற நடதீதையாதலின், அதனை நூலகளிற சொன்னமுறைமை வழுவாமல அவிநயங்காடடிப் பாவகந்தோனற விலக்குறுப்புப் பதினுலின் வழுவா மல் ஆடிக்காட்டினளாதலினென்றவாறு.

அனறியும, நாட்டிய நன்னூல. ....காடடினளாதலின் - இக்காதை யிற் கூறிய முதீதமிழ வகையும காட்டினளாதலினெனறுமாம்.

160. (பா) இலைப்பூங் கோதை யியல்பினின் வழா அதென்றது - இம மாதவியுடைய கூதீதுக்கும் பாடடுக்கும் அழகுக்கும் தக்கபடியென்ற வாறு.

அனறியும, அரசனுடைய மாலையுடனே முறைமையாகிய ஆயிரதீ தெண்கழஞ்சுபொனனும் சிறப்பாகப் பெற்றுள் ,

என்னை ? ‘ முட்டில் பாணரு ..பெறுப ” என்றாராதலின்.

இலைப்பூங்கோதை - பச்சைமாலை , இதீதுடனே தலைக்கோலெய்தி யென்றுமாம பச்சைமாலைக்கிடை ஆயிரதீதெண்கழஞ்சாதலின், இது பரியதீதுக்குப படிக்கலனெனறுமாம

161 தலைக்கோலெய்தியென்றது - வரிசைக்குதீ தக்கபடி தலைக்கோற் பெயர்பெற்றென்றவாறு.

தலையரங்கேறியென்றது - முன்னரங்கேறப்பெற்றென்றவாறு.

162 - 3. விதிமுறை.. ...பெற்றனளென்றது - இந்நாடகக்கணிகை யர்க்குதீ தலைவரிசை ஆயிரதீதெண்கழஞ்சுபொன் பரியம்பெறுகை வழக் காதலின், இவளும் ஆயிரதீதெண்கழஞ்சுபொன் பரியம்பெற்றுளென்ற வாறு.

(பி - ம்.) † ‘ பெயரிய ’ ‡ ‘ வகுதீது ’ § ‘ விதிமுறை யாகிய ’, ‘ விதி முறை யாக ’ ¶ ‘ அடதாளம் ’

†நூறுபத் தடுக்கி யெட்டுக் கடைநிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை
மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகிற்
பகர்வனர் போல்வதோர் பான்மையி னிறுத்த
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னெடு
மணமனை புக்கு மாதவி தன்னே
டணைவுறு வைகலி னயர்ந்தனன் மயங்கி
‡விடுத லறியா விருப்பின னுயினன்
வடுநீங்கு சிறப்பிற்றன் மனையக மறந்தென்

163. ஒருமுறையாகப் பெறறனளென்றது - ஒருநாளைக்குப் பரிய மாகவென்று அரசனுற பெறப்பட்டாளென்றவாறு.

பெறுகை - பெறநினைப்பிடுகையுமாம ஆயிரங்கழஞ்சு பரியதீதிற் கும, எண்கழஞ்சு அழிவுக்குமாக்கி நிச்சயித்து

அதுவேயென்றது - அன்று தொடங்கி நாடோறுமம அந்தப்படியே பரியமாகவென்றவாறு. அன்றியும், அந்தமாலையென்றுமாம

164 - 9. நூறுபத்தடக்கி.. பான்மையினிறுத்தவென்றது - இப்பொன் தந்து இம்மாலை வாங்குவான் மாதவிக்கு மணவாளப்பிள்ளை யாவனென்று சொல்லி மானவிழிபோன்ற நோக்கினையுடையாளோர் கூனிகைக் கொடுத்து நகரியிற பெருநதெருவிலே விலைக்கு விறபாரைப்போல்வதோர் பண்பினுல் நிறுத்தவென்றவாறு.

இவளுக்குப் பரியமென்னுதே மாலைக்குப்பரியமென்றது இடக்க ரடக்கு.

165. வீறுயர் பசும்பொன் - மாற்றற்ற பசும்பொன் இம்மாலை இரா சாவின் பக்கறபெறற பச்சைமாலை

170 - 72. மாமலர் நெடுங்கண் ....மணமனைபுக்கென்றது - பெரிய தாமரை மலர்போன்ற கண்ணையுடைய மாதவிமாலையைப் பரியம் ஆயி ரதீதெண்கழஞ்சு பொன்னையுங்கொடுத்து வாங்கிக் கோவலன் கூனி யுடனே மாதவியுடைய மணமனையிலே புகுந்தென்றவாறு.

172 - 4. மாதவி தன்னெடு .....விருப்பினனுயினனென்றது - இக் கோவலன் மாதவி தன்னுடனே அணைந்தபொழுதே அயர்ந்து மயங்கி யிருந்து மனையையும் அவளையும் விட்டு நீங்கமுடியாத விருப்பதீதை யுடையனுயினு னென்றவாறு.

175. வடுநீங்கு .....மறந்தெனென்றது - குற்றமறற சிறப்பினை யுடைய தன் அகதீதையும் மனையாளையும் மறந்தென்றவாறு.

என்னென்றது ாற்றசை.

அடி, 164 : பெருங். 1 35 82-3 166 . பரி. 20 : 79 168 : மு. பெருங். 1. 35 : 219 (பி - ம்.) † 'நூற்றுப்பதி' ‡ 'விடுத லீயா'

வெண்பா

எண்ணு மெழுத்து மியலிலந்தும் பண்ணுன்கும்
†பண்ணின்ற கூத்துப் பதிஞென்று—மண்ணின்மேற்
போக்கினுள் பூம்புகார்ப் பொற்றெடி மாதவிதன்
வாக்கினு லாடரங்கின் வந்து

[கூத்தியது அமைதி]

1 - 7 தெய்வ மால்வரை . . மாதவிதன்னை

தெய்வமால்வரை - தெய்வதீதன்மையையுடைய பெரியவரையென உருபுதொக்கது; வரை - பொதியில, திருமுனி - அகத்தியன், வரை பொதியிலாதலும், திருமுனி அகத்தியனுதலும பெறுமாறு என்னை? இம யமும் இறைவனுமாகறபாலவெனின்,—அறறன்று, மேல், "திருமுனி யருள, எய்திய சாபத் திந்திர சிறுவனெடு, தலைக்கோற ருனதீதுச் சாப நீங்கிய" (1-3) என இக்காதையிலும், "நயந்தெரி பாடலும, தோரிய மடந்தை வாரம் பாடலும், ஆயிரங் கண்ணேன் செவியக நிறைய, நாடக முருப்பசி நல்கா ளாகி, மங்கல மிழப்ப வீணை மண்மிசைத், தங்குக விவளெனச் சாபம் பெறற, மங்கை மாதவி வழிமுதற ருேன்றிய, வஙகர வல்குல்" (18 - 25) எனக் கடலாடு காதையிலும் கூறினுராதலானும், நூன்முகத்துள்ளும் "திருந்திய பொதியி லருந்திற லகத்தியன், [1] சுந் தர மணிமுடி யிந்திரன் மகனை, மாணு விறலோய் வேணு வாகென, விட்ட சாபம பட்ட சயந்தன், சாபவிடை யெமக்கரு டவத்தோ யென்று, மேவினன் ருெழுது மேதக வுரைப்ப, அருந்தவ மாமுனி தமிழ்க்கூத் தியர்க்குத், திருந்திய தலைக்கோற ருனந் தீருமென், றவனினி துரைப்ப வாகிவந் தனனென்" என்ருராகலானும் பொதியிலும் அகத்தியனுமென் பதாயிறறெனக் கொள்க.

அருள நீங்கியவென்க, அவன் சாபமிட்டருள வென்றுமாம.

அருளாறபாடமாயின் - அவனது அருளாற் சாபநீங்கியவென்க

(இ - ள்.) தெய்வதீதன்மையையுடைய பெரிய பொதியின் மலைக் கண் திருமுனியாகிய அகத்தியன் முன்பாலிட்ட [2] சாபம் இந்திரசிறு வனேடே அமமுனியருளத் தலைக்கோறருனதீது நீங்கிய மாறுபடுதலரிய சிறப்பினையுடைய அரமபையரில் வரிசையிற் குறைவற்ற நாடகத்தொழி லொடு பொருந்திய உருப்பசியாகிய அம்மாதவி மரபில் வந்த பிறப்பிற் குன்றுதலில்லாத பெரிய தோளினையும தாதுகள் அவிழும் பூக்களை யுடைய கடைகுழன்று சுருண்ட குழலினையுமுடைய மாதவியாகிய மடந்தைதன்னை யென்க.

பெருந்தோளென்ருர், மகளிர்தோள் பெருதீதல் மரபாதலின்; என்னை?

"அகலல்கு ருேள்கண்ணென மூவழிப் பெருகி" (கலித். 108 . 2) என்ரு ராகலின்.

---

[1] சிலப். 6 . 18-25, உரையைப் பார்க்க.

[2] இந்திரனவைக்களத்து ஒருவரையொருவர் விழைந்து அகத்திய முனிவராற் சாபம் பெறற சயந்தனும் உருப்பசியும் முறையே விந்தமலை யில் மூங்கிலாயும், காஞ்சி நகரத்துத் தேவகணிகையாயும் பிறந்தன ரென்று, "வானவர் கோமான் வானிடை யிருந்து" என்னும் ஆசிரியப் பாவாற் சுத்தானந்தப் பிரகாசப்பரத நூலாசிரியர் கூறினர்.

(பி - ம்.) † 'பண்ணமைந்த கூத்து'

8 - 9. ஆடலும் பாடலும் குறை படாமல்

(இ - ள்.) கூத்தும் பாட்டும் அழகுமென்று சொல்லப்பட்ட இம் மூன்றினுள்ளும் ஒன்றுங் குறைவு படாமல,

இவை குறைவுபடாமைக்குக் காரணமுடையளாகலினென்க.

10 - 11 ஏழாண் டியற்றி... வேண்டி

(இ - ள்.) ஐயாண்டில் தண்டியம் பிடிப்பித்து ஏழாண்டு இயற்றுவித்துப் பன்னீராண்டில் வீரக்கழல் சூழ்ந்த காலினையுடைய **சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கு** அவனவையரங்கேறிக்காட்டலை விரும்பியென்க.

என்னை? "பண்ணியமவைதீ தானைமுகன் பாதம் பணிந்துநாட், புண்ணிய வோரை புகன்றனகொண்—டெண்ணியே, வண்டிருக்குங் கூந்தன் மடவரலை யையாண்டில், தண்டியஞ்சேர் விப்பதே சால்பு" எனவும், "வட்டணையுந் தூசியு †மண்டலமும் பண்ணமைய, எட்டுட னீரிரண்டாண் டெய்தியபின்—கட்டளைய, கீதக் குறிப்பு மலங்கார முங்கிளரச், சோதித் தரங்கேறச் சூழ்" (சீவக. 673, ந. மேற்.) எனவும், "நன்னர் விருப்புடையோ ணறகுணமு மிக்குயர்ந்தோள், சொன்னகுலத் தால மைந்த தொன்மையளாய்ப்—பன்னிரண்டாண், டேய்ந்ததற்பி னுடலுடன் பாடலழ கிம்மூன்றும், வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு" எனவும் கூறினர் **பரதசேனாபதியார்.**

[ஆடலாசிரியன் அமைதி]

12 - 25 இருவகைக் கூத்தின் ஆசான் றன்னெடும்

(இ - ள்) இருவகைத்தாகிய அகக்கூத்தின் இலக்கணங்களை யறிந்து பலவகைப்பட்ட புறநடங்களையும் விலக்குறுப்புக்களைச் சேரப்புணர்க்கவும் வல்லனாகி அல்லியமுதற கொடுகொட்டியீறாகக்கிடந்த பதினெரு கூத்துக்களும் அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும் அவற்றுக்கு அடைத்த வாச்சியங்களின் கூறுகளும் நூல்களில் விதித்தவழியே தெரிந்து கூத்தும் பாட்டும தாளங்களும் தாளங்களின் வழிவந்த தூக்குக்களும் தம்மிற் கூடின நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்துமுதலாயின நிகழ்த்துமிடத்துப் பிண்டி பிணையல் எழிறகை தொழிற்கையென்று சொல்லப்பட்ட நான்கினையும் நூலினகத்துக்கொண்ட கூறுபாட்டையறிந்து அகக்கூத்து நிகழுமிடத்துக் கூடைக்கதியாகச் செய்த கை வாரக்கதியுட்புகாமலும், வாரக்கதியாகச் செயத கை கூடைக்கதியுட்புகாமலும், புறக்கூத்தினிடத்து ஆடனிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும், அவிநயம் நிகழுமிடத்து ஆடனிகழாமலும், குரவைக்கூத்தும் வரிக்கூத்தும் தம்மில் விரவாதபடியும் செலுத்தி அமைந்த ஆடலாசிரியனுமென்க

இது பொழிப்புரை.

12. இருவகைக் கூத்தாவன —வசைக்கூத்து, புகழ்க்கூத்து, வேத்தியல், பொதுவியல், வரிக்கூத்து, வரிச்சாந்திக்கூத்து, சாந்திக் கூத்து, விநோதக்கூத்து, ஆரியம், தமிழ், இயல்புக்கூத்து, தேசிக்கூத்தெனப் பல வகைய. இவை விரிந்தநூல்களிற் காண்க

(பி - ம்.) † 'பண்ணமைய வெண்மையாண், டிட்டுட னீராருண் டெய்தியபின் - வட்டணையுங், கீதக்'

12. ாண்டு இருவகைக்கூத்தாவன '—சாந்தியும், விநோதமும், என்னை ? [1] "அவைதாம, சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென், ருய்ந்துற வகுத்தன னகத்தியன் ருனே" என்ருராகலின்

[1] "சாந்திக் கூத்தே தலைவ †னின்பம், ஏந்திநின் ருடிய வீரிரு நடமவை, சொக்க மெய்யே யவிநய நாடகம், என்றிப் பாற்படூஉ மென மனுர் புலவர்" என்பதனுல் நாயகன் சாந்தமாக ஆடிய கூத்துச் சாந்திக் கூத்தெனப்படும். இவறறுள்,—

சொக்கமென்றது - சுத்தநிருத்தம் அது நூற்றெட்டுக்கரண முடைத்து

மெய்க்கூத்தாவது —தேசி வடுகு சிங்களமென மூவகைப்படும் இவை மெய்த்தொழிற்கூத்தாகலின், மெய்க்கூத்தாயின. இவை அகச சுவைபற்றி யெடுத்தலின், அகமார்க்கமென நிகழ்த்தப்படும

அகச்சுவையாவன —இராசதம், தாமதம், சாத்துவிகமென்பன "குணத்தின் வழியதகக் கூத்தெனப் படுமே" என்ருர் **குணநூலுடை** யார், [1]"அகத்தெழு சுவையா னகமெனப் படுமே" என்ருர் **சயந்தநூ** லுடையாரு மெனக்கொள்க

அவிநயக்கூத்தாவது —‡கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபளு செய்யும பலவகைக்கூத்து

நாடகம —கதைதழுவி வரும் கூத்து.

விநோதக்கூத்தாவது —குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்பர். இவற்றுள் —

குரவையென்றது —காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாடடாக எழுவரேனும எண்மரேனும ஒன்பதின்மரேனும கைபிணைந்தாடுவது "குரவையென்பது .இயல்பிற் றென்ப" (பதி 77, உரை) என்ருராகலின்

குரவை-வரிக்கூத்தின் ஓர் உறுப்பு, அவை வந்தவழிக்கண்டுகொள்க

[2] கலிநடமென்றது - கழாய்க்கூத்து.

குடக்கூத்தென்றது - மேறபதிஞெராடலுட் காட்டப்படும்

கரணமாவது - படிந்த ஆடல்

நோக்கென்றது - பாரமும் நுண்மையும் மாயமுமுதலாயினவற்றை உடையது.

தோற்பாவையென்றது - தோலாற பாவை செய்து ஆட்டுவிப்பது

இன்னும் நகைத்திறச்சுவையென்பதனேடு கூட்டி ஏழென்பாரு முளர், அஃதாவது விதூடகக்கூத்து இதனை வசைக்கூத்தென்பாருமுளர்.

வசை - வேத்தியல், பொதுவியலென இரண்டுவகைப்படும், அவை முந்துநூல்களிற கண்டுகொள்க.

வெறியாட்டுமுதலாகத் தெய்வமேறியாடுகின்ற அத்திறக்கூத்துக் களும் கூட்டி ஏழென்பாருமுளர்.

[1] சீவக 672, ந. மேற் [2] கம்ப. பம்பை. 22

(பி - ம்.) † 'னவிநயம்' ‡ 'நிருத்தக்கை'

என்னை? "எழுவகைக் கூத்து மிழிகுலத் தோரை, ஆட வகுத்தன னகத்தியன் ருனே" என்ருராகலின்.

இவற்றின் இலக்கணங்களாவன .—"[1]அறுவகை நிலையு [2]மைவகைப் பாதமும், [3]ாரெண் வகைய வங்கக் கிரியையும, [4]வருத்தனை நான்கு [5]நிருத்தக்கை முப்பதும், அத்தகு தொழில வாகு மென்ப." இவை விரிப்பிற் பெருகும.

13. பல்வகைக்கூத்தாவன :—வென்றிக்கூத்து, வசைக்கூத்து, விநோதக்கூத்து முதலியன, என்னை? "பல்வகை யென்பது பகருங் காலை, வென்றி வசையே விநோத மாகும்" என்ருராகலின்.

"அவற்றுள், மாறரு ணெடுக்கமு மன்ன னுயர்ச்சியு, மேற்படக் கூறும் வென்றிக் கூத்தே."

"பல்வகை யுருவமும் பழித்துக் காட்ட, வல்லவ ணுதல் வசையெனப் படுமே."

[6] "எனவிவை தாளத்தி னியல்பின வாகும்."

"விநோதக் கூத்து வேறுபா டுடைத்து, வென்றி விநோதக் கூத் தென விளம்புவர்" இதன்கருத்து கொடிதீதேர்வேந்தரும் குறுநில மன்னருமுதலாக உடையோர் பகைவென்றிருந்தவிடத்து விநோதங் காணுங் கூத்தென்பதாம்.

விலக்கினிற்புணர்த்து - விலக்குறுப்பினெடு பொருந்துவித்து;
இன் . சாரியை, மூன்றனுருபு ஐந்தனெடு மயங்கிறறு.

---

[1] அறுவகை நிலையாவன .—(1) வைணவம், (2) சமநிலை, (3) வைசாகம், (4) மண்டலம், (5) ஆலீடம், (6) பிரத்தியாலீடமென்பன.

[2] ஐவகைப்பாதமாவன —(1) சமநிலை, (2) உற்கடிதம, (3) சஞ்சாரம், (4) காஞ்சிதம், (5) குஞ்சிதமென்பன.

[3] அங்கக்கிரியை பதினருவன .—(1) சரிகை, (2) புரிகை, (3) சமகலி, (4) திரிசை, (5) ஊர்த்துவகலிகை, (6) பிருட்டகம், (7) அர்த்தபிருட்டகம், (8) சுவத்திகம், (9) உல்லோலம், (10) குர்த்தனம், (11) வேட்டனம், (12) உபவேட்டனம், (13) தானபதப்பிராய விருத்தம், (14) உக்ஷேபணம், (15) அவக்ஷேபணம, (16) நிகுஞ்சனமென்பன.

[4] வருத்தனை நான்காவன :—(1) அபவேட்டிதம், (2) உபவேட்டிதம், (3) வியாவர்த்திதம், (4) பராவர்த்திதமென்பன.

[5] நிருத்தக்கை முப்பதாவன :—(1) சதுரச்சிரம், (2) உத்துவீதம், (3) தலமுகம், (4) சுவத்திகம், (5) விப்பிரகீர்ணம், (6) அருத்தரேசிதம், (7) அராளகடகாமுகம், (8) ஆவித்தவத்திரம, (9) சூசீமுகம், (10) இரேசிதம், (11) உத்தானவஞ்சிதம், (12) பல்லவம், (13) நிதம்பம், (14) கசதந்தம், (15) இலதை, (16) கரிக்கை, (17) பக்கவஞ்சிதம், (18) பக்கப் பிரதியோகம், (19) கருடபக்கம், (20) தண்டபக்கம், (21) ஊர்த்துவ மண்டலி, (22) பக்கமண்டலி, (23) உரோமண்டலி, (24) உரப்பார் சுவார்த்த மண்டலி, (25) முட்டிகச்சுவத்திகம், (26) நளினீபதுமகோசம், (27) அலபதுமம், (28) உற்பணம், (29) இலளிதை, (30) வலிதையென்பன. இவை சுத்தானந்தப்பிரகாசமெனனும் பழைய தமிழ்ப்பரத நூலிற் காணப்பட்டன

[6]வென்றிக்கூத்தும் வசைக்கூத்தும் தாள இயல்புடையனவென்றபடி.

வென்றிக்கூத்துமுதலாகிய பலவகைப்பட்ட புறநடங்களையும் வேந்து விலக்குப் படைவிலக்கு ஊர்விலக்கென்று சொல்லப்பட்ட விலக்குக்களாகிய பாட்டுக்களுக்கு உறுப்பாய் வருவனவற்றுடனே பொருந்தப்புணர்த்தி.

பொருந்தப் புணர்த்தல் - ாண்டுப்பாட்டுக்களுக்கு வரவு வகுத்தல்.

விலக்குறுப்பாவன :—பதினொன்குவகைப்படும், அவை [1] பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம, வரி, சேதமெனவிவை ;

என்னை ? "விலக்குறுப் பென்பது விரிக்குங் காலைப், பொருளும் யோனியும் விருத்தியுஞ் சந்தியும், சுவையுஞ் சாதியுங் குறிப்புஞ்சத்துவ மும், அவிநயஞ் சொல்லே சொல்வகை வண்ணமும், வரியுஞ் சேதமுமுளப் படத் தொகைஇ, இசைய வெண்ணி னீரே முறுப்பே" என்ருராகலின்.

அவற்றுள்,—**பொருள்** நான்குவகைப்படும், என்னை ? "அறம் பொரு ளின்பம் வீடென நான்கும், திறம்படு பொருளெனச் செப்பினர் புலவர்" என்ருராகலின்.

இவை நாடகத்திற் பிரிந்தும் கூடியும் வருங்காற பெயர் வேறுபடும். அவை நாடகம், பிரகரணப்பிரகரணம், பிரகரணம், அங்கமெனப்பெயர வாம் ;

என்னை ? "அவைதாம், நாடகம் பிரகர ணப்பிர கரணம், ஆடிய பிரகரண மங்க மென்றே, ஒதுப நன்னூ லுணர்ந்திசி னோரே" என்ருர் **மதிவாணனுரும்** "அறமுத னொன்கு மொன்பான் சுவையு, முறைமுன் னுடக முன்னே னுகும" எனவும், "அறம்பொருளின்ப மரசர் சாதி" எனவும், "அறம்பொருள் வாணிகர் சாதியென் றறைப" எனவும், "அறமேற் சூதிதிர ரங்க மாகும" எனவும் சொன்னூர் **செயிற்றியனூர்.** இவை நான்கும் நாடகமென்றறிக

யோனி நான்கு வகைப்படும —உள்ளோன் தலைவனுக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனுக உள்ளதோர் பொருண் மேறசெய்தலும், உளளோன் தலைவனுக இல்லதோர் பொருண்மேற் செய்தலும, இல்லோன் தலைவனுக இல்லதோர் பொருண்மேற் செய்தலு மென இவை,

என்னை ? "உள்ளோற் குள்ளது மில்லோற் குள்ளதும், உள்ளோற கில்லது மில்லோற கில்லதும், எள்ளா துரைத்தல் யோனி யாகும்" என்ருராகலின்.

விருத்தி நான்குவகைப்படும் :—அவை சாத்துவதி, ஆரபடி, கைசிகி, பாரதியெனவிவை

இவற்றுள்,—சாத்துவதியாவது அறம் பொருளாகத் தெய்வமானிடர் தலைவராக வருவது.

ஆரபடியாவது :—பொருள் பொருளாக வீரராகிய மானிடர் தலைவ ராக வருவது,

கைசிகியாவது .—காமம் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவ ராக வருவது

[1] பதி. 1 - 2, உரை.

பாரதியாவது :—கூத்தன் தலைவனுக நடன் நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது.

இச்சொல்லப்பட்ட நால்வகை விருத்தியுள்ளும் பாரதிவிருத்தி, அந்த மூன்று விருத்தியும்போலப் பிறிதின்தலைவர் பிறிதுபொருள்பற்றி விருத்தி கூறுது பொருளாலே விருத்தி கூறுமெனக்கொள்க.

சந்தி ஐந்துவகைப்படும்.—அவை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தலென இவை.

இவற்றுள் முகமாவது :—[1]எழுவகைப்பட்ட உழவினுற் சமைக்கப் பட்ட பூழியுள் இட்ட விதைத்துப் பருவஞ்செய்து முளைத்து முடிவதுபோல் வது ;

பிரதிமுகமாவது.—அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலைதோன்றி நாற்றாய் முடிவதுபோல்வது ,

கருப்பமாவது—அந்நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுட் பொருள்பொதிந்து கருப்பமுற்றி நிற்பது போல்வது ,

விளைவாவது.—கருப்பமுதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்ந்து முற்றி விளைந்து முடிவது போல்வது ,

துய்த்தலாவது.—விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலிசெய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வது போல்வது.

இவை ஐந்துசந்தியும் நாட்டியக் கட்டுரை

சுவை ஒன்பதுவகைப்படும் —அவை வீரச்சுவையவிநயம், பயச் சுவையவிநயம், இழிப்புச்சுவையவிநயம், அற்புதச்சுவையவிநயம், இன் பச்சுவையவிநயம், அவலச்சுவையவிநயம், நகைச்சுவையவிநயம், நடுவு நிலைச்சுவையவிநயம, உருத்திரச்சுவையவிநயமென , அவற்றுள்,—

“ வீரசசுவை யவிநயம விளம்புங் காலை, முரிந்த புருவமும் சிவந்த கண்ணும், பிடித்த வாளுங் கடிதீத வெயிறும், மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலும, திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை, எண்ணல் செல்லா விகழச்சியும் பிறவும், நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே” ;

“ அச்ச வவிநய மாயுங் காலை, ஒடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையும், மலங்கிய கண்ணும் கலங்கிய வுளனும், கரந்துவர லுடைமையுங் கையெதிர் மறுத்தலும், பரந்த நோக்கமு மிசைபண் பினவே ”,

“ இழிப்பி னவிநய மியம்புங் காலை, இடுங்கிய கண்ணு மெயிறுபுறம் போதலும், ஒடுங்கிய முகமு முளுறருக் காலும், சோர்ந்த யாக்கையுஞ் சொன்னிரம் பாமையும், நேர்ந்தன வென்ப நெறியறிந் தோரே ”,

“அற்புத வவிநய மறிவரக் கிளப்பிற், சொறசோர் வுடையது சோர்ந்த கையது, மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய, தெய்திய திமைத் தலும் விழித்தலு மிகவாதென், றையமில் புலவ ரறைந்தன ரென்ப ”,

“ காம வவிநயங் கருதுங் காலைத், தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலும், காரிகை கலந்த கடைக்கணுங் க்வின்பெறு, மூரன் முறுவல் சிறு

---

[1] ஆரம்பத்திற்கு ஏழங்கமுண்டென்று வடநூலாரிற சிலர் கூறுவ ராதலின் அதற்குப்பொருந்த எழுவகைப்பட்ட உழவென்றார்.

நிலா வரும்பலு, மலர்ந்த முகனு மிரந்தமென் கிளவியும், கலந்தன பிறவுங் கடைப்பிடித் தனரே",

"அவலத் தவிநய மறிவரக் கிளப்பிற், கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும், வாடிய நீர்மையும் வருந்திய செலவும், பீடழி யிடும்பையும் பிதற்றிய சொல்லும், நிறைகை யழிதலு நீர்மையில் கிளவியும், பொறையின் ருகலும் புணர்த்தினர் புலவர்";

"நகையி னவிநய நாட்டுங் காலை, மிகைபடு நகையது பிறர்நகையுடையது, கோட்டிய முகத்தது....., விட்டுமுரி புருவமொடு விலாவிறுப் புடையது, செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென், றையமில் புலவ ராய்ந்தன ரென்ப",

"நாட்டுங் காலை நடுவுநிலை யவிநயம், கோட்பா டறியாக் கொள்கையு மாட்சியு, மறந்தரு நெஞ்சமு மாறிய விழியும், பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும், குறிப்பின் ருகலுந் துணுக்க மில்லாதி, தகைமிக வுடைமையுந் தண்ணென வுடைமையும், அளத்தற் கருமையு மன்பொடு புணர்தலும், கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிர்ப்பும், விலக்கா ரென்ப வேண்டு மொழிப் புலவர்",

[1] "உருத்திரச்சுவை யவிநயம்.. .....

[2]அஃதாவது விறலென்பது, சதீதுவமென்பாருமூளர். அச்சதீதுவந் தான் [3]பதீதுவகைப்படும; என்னை? மெய்ம்மயிர்சிலிர்தீதல், கண்ணீர்வார்தல், நடுக்கமடுதீதல், வியர்தீதல், தேறறம், களிதீதல், விழிதீதல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு எனவிவை.

சதீதுவமாவது - குறிப்புவரையறை; ஆவது, சுதீதச்சுவையாகின்ற ஒன்பதினும் பாவிக்கும் அதீதுணையே மெய்ம்மைதீதாய் வருவதெனக் கொள்க.

என்னை? வேம்பென்று காட்டப்புக்கால் அவ்வேம்பின் இரதங்காட்டாதே அதுதான் தின்றவனுக்கு மெய்யின்கண் வருவது.

கருணையென்ருற் பாவிதீதுக்காட்டுமதன்றி மெய்யாகக் கண்ணீர் வந்தழுவது.

அல்லாத சுவைகளும் வந்த சதீதுவமும் இப்படி ஒட்டிக்கண்டு கொள்க.

அவைதாம் அச்சுவைகளில் எண்ணம் வந்தால் தோற்று முடம்பில்; உடம்பின் மிகதீதோற்றும் முகதீது; முகதீதின் மிகதீதோற்றும் கண்ணில்; கண்ணின் மிகதீதோற்றும் கண்ணின் கடையகதீதென்றவாறு.

---

[1]உருத்திரச்சுவையவிநயச் சூத்திரம் ஒருபிரதியிலும் இல்லை. அச்சுவையின் மெய்ப்பாடுகளை, "கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா, மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான்" (தண்டி. 70, மேற.) என்பதனலுணர்க.

[2] அஃதென்றது அச்சுவையுணர்வு உள்ளதீது நிகழ்ந்தவழிதீதோன்றும் மேற்கூறிய உடம்பின் வேறுபாட்டை.

[3] இத்தொகையும் இதன்வகையும் வடநூல் விதிக்கு மாறுக உள்ளன.

[1] சாதியாவது.....

குறிப்பாவது - சுவையதன்கட்டோன்றுவது.

சத்துவமாவது - அக்குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சி.

அவிநயமென்றது - பாவகம், அஃது இருபதீதுநான்கு வகைதீது; வரலாறு —வெகுண்டோனவிநயம், ஐயமுற்றோனவிநயம், சோம்பிஞோனவிநயம், களிதீதோனவிநயம், உவந்தோனவிநயம், அழுக்காறுடையோனவிநயம், இன்பமுறறோனவிநயம், தெயவமுறறோனவிநயம், ஞஞ்ஞையுற்றோனவிநயம், உடன்பட்டோனவிநயம், உறஙகிஞோனவிநயம், துயிலுணர்ந்தோனவிநயம, செதீதோனவிநயம், மழைபெய்யப்பட்டோனவிநயம், பனிதீதலீலப்படடோனவிநயம், வெயிறறலீலப்பட்டோனவிநயம் நாணமுற்றோனவிநயம், வருதீதமுற்றோனவிநயம், கண்ணேவுற்றோனவிநயம், தலீலநோவுறறோனவிநயம், அழற்றிறமபட்டோனவிநயம், சீதமுற்றோனவிநயம், வெப்பமுறறோனவிநயம், நஞ்சுண்டோனவிநயமெனவிவை அவறறுள்,—

"வெகுண்டோ னவிநயம் விளம்புங் காலை, மடிதீத வாயு மலர்ந்த மார்பும், துடிதீத புருவமுஞ் சுட்டிய விரலும், கன்றின வுள்ளமொடு கை புடைதீ திடுதலும, அன்னநோக்கமோ டாய்ந்தனர் கொளலே";

"பொய்யில் காட்சிப் புலவோ ராய்ந்த, ஐய முறறோனவிநய முரைப்பின், வாடிய வுறுப்பு மயங்கிய நோக்கமும், பீடழி புலனும் பேசா திருதீதலும், பிறழ்ந்த செய்கையும் வான்றிசை நோக்கலும், அறைந்தனர் பிறவு மறிந்திசி ஞேரே",

"மடியி னவிநயம் வகுக்குங் காலை, நொடியொடு பலகொட் டாவிமிக வுடைமையு, மூரி நிமிர்தீதலு முனிவொடு புணர்தலும், காரண மின்றி யாழ்ந்துமடிந் திருதீதலும், பிணியு மின்றிச் சோர்ந்த செலவோ, டணிதரு புலவ ராயந்தன ரென்ப",

"களிதீதோ னவிநயங் கழறுங் காலை, ஒளிதீதவை யொளியா னுரைதீத லின்மையும், கவிழ்ந்துஞ சோர்ந்துந் தாழ்ந்துந் தளர்ந்தும், வீழ்ந்த சொல்லொடு மிழற்றிச் சாய்தலும், களிகைக் கவர்ந்த கடைக்கணேக் குடைமையுமு, பேரிசை யாளர் பேணினர் கொளலே";

"உவந்தோ னவிநய முரைக்குங் காலை, நிவந்தினி தாகிய கண்மல ருடைமையும், இனிதி னியன்ற வுள்ள முடைமையும், முனிவி னகன்ற முறுவனகை யுடைமையும், இருக்கையுஞ் சேறலுங் கானமும் பிறவும், ஒருங்குட னமைந்த குறிப்பிற் றன்றே",

"அழுக்கா றுடையோ னவிநய முரைப்பின், இழுக்கொடு புணர்ந்த விசைப்பொரு ளுடைமையும், கூம்பிய வாயுங் கோடிய வுரையும், ஓமபாது விதிர்க்குங் கைவகை யுடைமையும், ஆரணங் காகிய வெகுளி யுடைமையும், காரண மின்றி மெலிந்தமுக முடைமையு, மெலிவொடு புணர்ந்த விடும்பையு மேவரப், பொலியு மென்ப பொருந்துமொழிப் புலவர்";

---

[1] நிறுதீதமுறையே சுவையின்பின்னர் வகைகாட்டுதற்குரிய சாதி பதீதுவகைப்படும், அவை நாடகம், பிரகரணம், பாணம், பிரகசனம், டிமம், வியாயோகம், சமவாகாரம், வீதி, அங்கம், ாகாமிருகம் எனவிவை.

"இன்பமொடு புணர்ந்தோ னவிநய மியம்பில், துன்ப நீங்கித் துவர்தீத யாக்கையும், தயங்கித் தாழ்ந்த பெருமகிழ் வுடைமையு, மயங்கி வந்த செலவுநனி யுடைமையும், அழகுள் ளுறுதீத சொற்பொலி வுடைமை யும், எழிலொடு புணர்ந்த நறுமல ருடைமையும், கலங்கள்சேர்ந் தகன்ற தோண்மார் புடைமையும், நலங்கெழு புலவர் நாடின ரென்ப";

[1] "தெய்வ முற்ரே னவிநயஞ் செப்பிற், கைவிட் டெறிந்த கலக்க முடைமையு, மடிதீதெயிறு கௌவிய வாய்தீதொழி லுடைமையும், துடிதீத புருவமுந் துளங்கிய நிலையும், செய்ய முகமுஞ் சேர்ந்த செருக்கும், எய்து மென்ப வியல்புணர்ந் தோரே",

"ஞஞ்ஞை யுற்ரே னவிநய நாடிற், பன்மென் றிறுகிய †நாவழி வுடைமையும், நுரைசேர்ந்து கூம்பும வாயு நோக்கினர்க், குரைப்போன் போல வுணர்வி லாமையும, விழிப்போன் போல விழியா திருதீதலும், விழுதீதக வுடைமையு மொழுக்கி லாமையும, வயங்கிய திருமுக மழுங்க லும் பிறவும், மேவிய தென்ப விளங்குமொழிப் புலவர்"; இஃது ஏழுறு மாக்களவிநயம்,

"சிந்தையுடம் பட்டோ னவிநயந தெரியின், முந்தை யாயினு முணரா நிலைமையும், பிடிதீத கைமே லடைதீத கவினு, முடிதீத லுருத கரும நிலைமையும, சொல்லுவது யாது முணரா நிலைமையும், புல்லு மென்ப பொருந்துமொழிப் புலவர்",

"துஞ்சா நின்ரே னவிநயந் துணியின், எஞ்சுத லின்றி யிருபுடை மருங்கு, மலர்ந்துங் கவிழ்ந்தும் வருபடை யியறறியும், அலர்ந்துயிர்ப் புடைய வாற்றலு மாகும",

"இன்றுயி லுணர்ந்தோ னவிநய மியம்பின், ஒன்றிய குறுங்கொட் டாவியு முயிர்ப்பும, தூங்கிய முகமுந் துளங்கிய வுடம்பும், ஓங்கிய திரிபு மொழிந்தவுங் கொளலே";

"செதீதோ னவிநயஞ் செப்புங் காலை, அதீதக வச்சமு மழிப்பு மாக்க லும், கடிதீத நிரைப்பலின் வெடிதீதுப் பொடிதீதுப், போந்ததுணி வுடை மையும் வலிதீத வுறுப்பு, மெலிந்த வகடு மென்மைமிக வுடைமையும், வெண்மணி தோன்றக் கருமணி கரதீதலும், உண்மையிற் புலவ ருணர்ந்த வாறே",

"மழைபெய்யப் பட்டோ னவிநயம் வகுக்கின், இழிதக வுடைய வியல்புநனி யுடைமையும், மெய்கூர் நடுக்கமும் பிணிதீதலும் படாதீதை, மெய்பூண் டொடுக்கிய முகதீதொடு புணர்தீதலும், ஒளிப்படு மனனி லுல றிய கண்ணும், விளியினுந் துளியினு மடிந்தசெவி யுடைமையும், கொடுகி விட் டெறிந்த குளிர்மிக வுடைமையும், நடுங்கு பல்லொலி யுடைமையு முடியக், கனவுகண் டாற்ரு னெழுதலு முண்டே",

"பனிதீதலைப் பட்டோ னவிநயம் பகரி, னடுக்க முடைமையு நகை படு நிலைமையும், சொற்றளர்ந் திசைதீதலு மற்றமி லவதியும், போர்வை விழைதலும் புந்திநோ வுடைமையும், ‡நீரும் விழியுஞ் சேறு முனிதலும், இன்னவை பிறவு மிசைந்தனர் கொளலே",

"உச்சிப் பொழுதின் வந்தோ னவிநயம், எசச மின்றி யியம்புங் காலைச், சொரியா நின்ற பெருந்துய ருழந்து, தெரியா நின்ற வுடம்பெரி

---

[1] 30 : 38 முதலியவற்றைப்பார்க்க.

(பி - ம்) † நாவளி' ‡ 'நீராம்'

யென்னச், சிவந்த கண்ணு மயர்ந்த நோக்கமும், பயந்த தென்ப பண் புணர்ந் தோரே ";

"நாண முற்றே னவிநய நாடின், இறைஞ்சியு தலையு மறைந்த செய்கையும், வாடிய முகமுங் கோடிய வுடம்பும், கெட்ட வொளியுங் கீழ்க்க ணேக்கமும், ஒட்டின ரென்ப வுணர்ந்திசி னோரே ";

"வருத்த முற்றே னவிநயம் வகுப்பிற், பொருத்த மில்லாப் புன்க ணுடைமையும், சோர்ந்த யாக்கையுஞ் சோர்ந்த முடியும், கூர்ந்த வியர் வுங் குறுமபல் லுயாவும், வற்றிய வாயும் வணங்கிய வுறுப்பும், உற்ற தென்ப வுணர்ந்திசி னோரே ",

"கண்ணே வுற்றே னவிநயங் காட்டி, னண்ணிய கண்ணீர்த் துளி விரற றெறித்தலும், வளைந்தபுரு வத்தொடு வாடிய முகமும், வெள்ளிடை நோக்கின் விழிதரு மச்சமும், தெள்ளிதிற் புலவர் தெளிந்தனர் கொளலே",

"தலைநோ வுறறே னவிநயஞ் சாற்றி, னிலைமை யின்றித் தலையாட் டுடைமையும், கோடிய விருக்கையுந் தளர்ந்த வேரொடு, பெருவிர லிடுக் கிய நுதலும் வருந்தி, ஒடுங்கிய கண்ணெடு பிறவும், திருந்து மென்ப செந்நெறிப் புலவர் ",

"அழறறிறம பட்டோ னவிநய முரைப்பின், நிழற்றிறம் வேண்டு நெறிமையின் விருப்பும், அழலும் வெயிலுஞ் சுடரு மஞ்சலும், நிழலு நீருஞ் சேறு முவத்தலும், பனிநீ ருவப்பும் பாதிரித் தொடையலும், நுனி விர லீர மருநெறி யாக்கலும், புக்க துன்பமொடு புலர்ந்த யாக்கையும், தொக்க தென்ப துணிவறிந் தோரே ";

"சீத முறறே னவிநயஞ செப்பி, னேதிய பருவர லுள்ளமோ டுழதீத லும், ார மாகிய போர்வை யுறுத்தலும், ஆர வெயிலுழந் தழலும் வேண்ட லும், உரசியு முரன்று முயிர்த்து முரைத்தலும், தக்கன பிறவுஞ் சாற்றி னர் புலவர் ",

"வெப்பி னவிநயம் விரிக்குங் காலத், தப்பில் கடைப்பிடித் தன்மை யுந் தாகமும், எரியி னன்ன வெம்மையோ டியைவும், வெருவரு மியக்க மும் வெம்பிய விழியும், நீருண் வேட்கையு நிரம்பா வலியும், ஓருங் காலை யுணர்ந்தனர் கொளலே",

"கொஞ்சிய மொழியிற் கூரெயிறு மடித்தலும், பஞ்சியின் வாயிற் பனிநுரை கூம்பலும், தஞ்ச மாந்தர் தம்முக நோக்கியோர், இன்சொ லியம்புவான் போலியம் பாமையும், நஞ்சுண் டோன்ற னவிநய மென்ப";

"சொல்லிய வன்றியும் வருவன வுளவெனிற், புல்லுவழிச் சேர்த்திப் பொருந்துவழிப் புணர்ப்ப " என வரும்.

இனி, சொல் வருமாறு :—அது மூன்று வகைப்படும், [1]உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல்லென.

அவை நெஞ்சொடு கூறல், கேட்போர்க் குரைத்தல், தானே கூற லென்பன, என்னை? "நெஞ்சொடு கூறல் கேட்போர்க் குரைத்தல், தஞ்சம்

[1] ப. 92.

வரவறிவு தானே கூறலென், றம்மூன் றென்ப செம்மைச் சொல்லே" என்றுராகலின்.

சொல்வகை நான்கு வகைப்படும்.—சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகமென.

சுண்ணம் - நான்கடியான் வருவது,

சுரிதகம் - எட்டடியான் வருவது,

வண்ணம் - நாலுன்கடியான் வருவது,

வரிதகம் - முப்பத்திரண்டடியான் வருவது

என்னை? "சுண்ண நான்கடி சுரிதக மெட்டடி, வண்ண நாலுன்கு வரிதக மெண்ணுன்கென், றெண்ணிய வடிதொகை யெயதவும் பெறுமே" என்றுராகலின்

வண்ணம் ஒருவகையான் மூன்று வகைப்படும்:—பெரு வண்ணம், இடை வண்ணம், வனப்பு வண்ணமென அவறறுள், பெரு வண்ணம் ஆறுய் வரும், இடை வண்ணம் இருபதிதொன்றுய் வரும்; வனப்பு வண்ணம் †நாற்பதிதொன்றுய் வரும்

[1] **வரி** எட்டு வகைப்படும் —கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புற வரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி யென. என்னை? "கண்கூடு காண்வரி யுள்வரி புறவரி, கிளர்வரி, யைந்தோ டொன்ற வுரைப்பிற், காட்சி தேர்ச்சி யெடுத்துக் கோளென, மாட்சியின் வரூஉ மெண்வகை நெறிதே" என்றுராகலின் அவற்றின் பகுதியெல் லாம [2]கானல் வரியிற் கூறுதும்.

இவ்வரியென்பதனைப் பல்வரிக்கூத்தென்பாருமுளர், என்னை? "சிந் துப் பிழுக்கை யுடன்சந்தி யோர்முலை, கொநதி கவுசி குடப்பிழுக்கை ‡கந்தன் பாட, டாலங்காட் டாண்டி §பருமண னெல்லிசசி, சூலந தருநட் டந் தூண்டிலுடன்-சீலமிகும், ஆண்டி யமண்புனவே டாளத்தி கோப் பாளி, பாண்டிப் பிழுக்கையுடன் பாம்பாட்டி - மீண்ட, கடவுட் சடைவீர மாகேசங் காமன், மகிழ்சிந்து வாமன சூபம் - விகடநெடும, பதிதிரங் கொற்றி பலகைவாள் பப்பரப்பெண், டதிதசம் பாரந் தகுணிச்சங்-கதிது, முறையீண் டிருஞ்சிதிது முண்டித மன்னப், பறைபண் டிதன்புடப பாணம் - இறைபரவு, பதிதன் குரவையே பப்பறை காவதன், பிதிதனெடு மாணி பெருமபிழுக்கை, எதிதுறையும், ஏதிதிவருங் கட்களி யாண்டு விளையாட்டுக், கோதித பறைக்குடும்பு கோற்கூதிது - மூதித, கிழவன் கிழவியே கிள்ளுப் பிறுண்டி, அழகுடைய ¶பண்ணிவிக டாங்கம் - திகழ செம்பொ, னமமனை பந்து கழங்காட லாலிக்கும, விண்ணகக் காளி விறற கொந்தி - அல்லாத, வாயந்த தனிவண்டு வாரிச்சி பிச்சியுடன், சாந்த முடைய சடாதாரி - ஏய்ந்தவிடை, தக்கபிடார நிர்தீதந் தளிப்பாட்டுச் சாதுரங்கம், தொக்க தொழில்புனைநத $சோணுண்டு - மிக்க, மலையாளி வேதாளி வாணி குதிரை, சிலையாடு வேடு சிவப்புத் - தலையில், திருவிளக்

---

[1] 8 74 - 7 அடிகளின் உரையைப் பார்க்க

[2] இதற்கு **அடியார்க்கு நல்லார்** இயற்றிய உரை கிடைத்திலது; ஆனலும் இந்நூல், 8 74 முதலியவற்றுலும அவற்றின் உரையிற்கண்ட மேற்கோள்களாலும் கண்கூடுவரி முதலிய எட்டன் பகுதிகள் நன்கு விளங்கும்.

(பி - ம்) † 'நாற்பதிதொன்பதாய்' ‡ 'கந்தியின் பாட்டு' §'படுஞமன னெல்லிச்சி' ¶ 'பள்ளிவிக்கட்டாங்கந்' $ 'சொன்ணுண்டு'

குப் பிச்சி திருக்குன் றயிற்பெண், டிருண்முகத்துப் பேதை யிருளன் - பொருமுகத்துப், பல்லாங் குழியே பகடி பகவதியாள், நல்லார்தந் தோள் வீச்சு நற்சாழல் - அல்லாத, உந்தி யவலிடி பூராளி யோகினிச்சி, குந்தி வரும் பாரன் குணஜலக்கூத்- தந்தியம்போ, 'தாடுங களிகொய்யு முள்ளிப் பூ வையனுக்குப், பாடும்பாட் டாடும் படுபள்ளி-நாடறியும, கும்பீடு நாட்டங் குணுட்டங் குணுலையே, துஞ்சாத சும்மைப்பூச் சோனக-மஞ்சரி, ஏறறவுழைமை பறைமைமுத லென்றெண்ணிக், கோத்தவரிக் கூத்தின் குலம'' என்ருராகலின்.

சேதம்.—ஆரியம் தமிழென இருவகைத்து; என்னை? ''ஆரியந் தமிழெனுஞ் சீர்நட மிரண்டினும், ஆதிக் கதையை யவற்றிற் கொப்பச், சேதித் திடுவது சேதமென் ருகும'' என்ருராகலின்.

இனி, விலக்குறுப்பென்ற சொற்குப்பொருள் யாதோவெனின்.—தலை வன் செலுத்துகின்ற கதையை விலக்கியும் அக்கதையை நடாத்தியும் முன்பு செயத கதைக்கே உறுப்பாகுவதென்க

14-5 பதினேராடலும் . . அறிந்தாங்கென்றது, அல்லிய முதற் கொடுகொட்டி ஈருய்க்கிடந்தனவும், அவற்றுக்குரிய பாட்டுக்களும், அக் கூத்துக்களின் விகறபங்களுக்கெல்லாம் அமைந்த வாச்சியக்கூறுகளும், மாட்சிமைப்பட்ட நூல்களில் விதித்த முறைமையாலே விளங்க அறிந் தென்க.

14 பதினேராடலாவன —''கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன், குடைதுடிமா லல்லியமல் கும்பம்—சுடர்விழியாற், பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கம், கொட்டியிவை காண்பதினேர் கூத்து''

இவை தெய்வ விருத்தி

இவை இரண்டு கூறுபடும், என்னை? ''அல்லியங் கொட்டி குடை குடம் பாண்டரங்க, மல்லுட னினருட லாறு'', ''துடிகடையம் பேடு மரக் காலே பாவை, வடிவுடன் வீழ்ந்தாட லேந்து''

இவை அசுரரைக் கொல்ல அமரராடின.

''அல்லிய மாயவ ணுடிற் றதற்குறுப்புச், சொல்லுப வாரு மெனல்'';

''கொடடி கொடுவிடையோ ணுடிற் றதற்குறுப், பொட்டிய நான்கா மெனல்'',

''அறுமுகதீதோ ணுடல் குடைமற றதற்குப், பெறுமுறுப்பு நான்கா மெனல்'',

''குடதீதாடல் குன்றெடுதீதோ ணுட லதனுக், கடைக்குப வைந்துறுப் பாய்ந்து'',

''பாண்டரங்க முக்கண் ணுடிற் றதற்குறுப், பாய்ந்தன வாரு மெனல்'',

''நெடியவ ணுடிற்று மல்லாடன் மல்லிற், கொடியா வுறுப்போரைந் தாம'',

†''துடியாடல் வேன்முருக ணுட லதனுக், கொடியா வுறுப்போரைந் தாம்'',

''கடைய மயிராணி யாடிற் றதனுக், கடைய வுறுப்புக்க ளாறு'',

(பி - ம்.) † 'துடியாட னங்கை யெழுவர தாடல்'

"காமன தாடல்பே டாட லதற்குறுப்பு, வாய்மையி னுராயி னுன்கு",
"மாயவ ளாடன் மரக்கா லதற்குறுப்பு, நாமவகை யிற்சொலுங்கா னுன்கு";
"பாவை திருமக ளாடிற் றதற்குறுப், போவாம லொன்றுடனே யொன்று";
"புரமெரித்தல் சூர்மாதி துளைபடுத்தல் கஞ்ச, னுரனெரித்தல் வாணனைவா னுய்த்தல்-பெரிய, அரன்முத லாகவே லன்முதன் மாயோன், அமர்முத லாடிய வாறு" எனக்.. ... . கண்டுகொள்க.

பாட்டுமென்றது - அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்கும் உரிய உருக்களுமென்க.

அகநாடகங்களுக்குரிய உருவாவன .—கந்த முதலாகப் பிரபந்தவுரு ஈருவுள்ள இருபதிதெட்டும் இவற்றுள்,—

கந்தமென்றது - அடிவரையறையுடைதாய் ஒரு தாளதிதாற்புணர்ப் பது.. ....

பிரபந்தமென்றது - அடிவரையறையின்றிப் பலதாளதிதாற் புணர்ப்பது.

புறநாடகங்களுக்குரிய உருவாவன .—தேவபாணிமுதலாக அரங் கொழி செய்யுளீருகவுள்ள செந்துறை விகற்பங்களெல்லாமென்க.

கொட்டுமென்றது-கூதிதுவிகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக் கூறு களுமென்றவாறு.

அவை கீதாங்கம், நிருதிதாங்கம், உபயாங்கமென்பன அவறறுள்,—

கீதாங்கம - கீததிதுக்கு வாசிப்பது,

நிருதிதாங்கம் - நிருதிததிதிற்கு வாசிப்பது;

உபயாங்கம - இரண்டிறகும வாசிப்பது.

15. ஆங்கு . அசைநிலை.

16. ஆடலும் - முற்கூறிய அகக்கூதிதினும் புறக்கூதிதினுமுள்ள ஆடலுமென்றவாறு.

கீற்று கடிசரிமுதலாகிய [1]தேசிக்குரிய கால்களும், சுற்றுதல் எறிதல் உடைதிதல் முதலாகிய [2]வடுகிற்குரிய கால்களும், உடற்றூக்கு முதலாகிய [3] உடலவர்திதனையும் அகக்கூதிதுக்குரியன.

---

[1] தேசிக்குரிய கால்கள் 24 .—(1) கீறறு, (2) கடிசரி, (3) மண்டலம், (4) வர்திதனை, (5) கரணம், (6) ஆலீடம், (7) குஞ்சிப்பு, (8) கட்டுப்புரியம், (9) களியம், (10) உள்ளாளம், (11) கட்டுதல், (12) கம்பிதிதல், (13) ஊர் தல், (14) நடுக்கல், (15) வாங்குதல், (16) அப்புதல், (17) அனுக்குதல், (18) வாசிப்பு, (19) குதிதுதல், (20) நெளிதல், (21) மாறுகால், (22) இட்டுப் புகுதல், (23) சுற்றி வாங்குதல, (24) உடற்புரிவு

[2] வடுகிற்குரிய கால்கள் 14 —(1) சுற்றுதல், (2) எறிதல், (3) உடைதி தல், (4) ஒட்டுதல், (5) கட்டுதல், (6) வெடடுதல், (7) போக்கல், (8) நீக்கல், (9) முறுக்கல், (10) அனுக்கல், (11) வீசல், (12) குடுப்புக்கால், (13) கதிதரி கைக்கால், (14) கூட்டுதல்.

[3] உடலவர்திதனை 9 ·—(1) மெய்சாய்திதல், (2) இடைநெரிதிதல், (3) சுழிதிதல், (4) அணைதிதல், (5) தூக்குதல், (6) அசைதிதல், (7) பற்றல், (8) விரிதிதல், (9) குவிதிதலெனவிவை; "மெய்சாய் விடைநெரிவு மேற் சுழிவோடாங்கணைதிதல், கைதாக் கசைதிதல் கலபற்றல் - கைகள், விரிதி தல் குவிதிதலிவை சிங்களமா மென்று, தெரிதிதனர் தண்டமிழோர் தேர்ந்து" (சுத்தானந்தப் பிரகாசம்.)

ாண்டுச் சிங்களமென்று வழங்கிவருகின்ற கூத்துச் சொல்லிற்றிலரா லெனின், " சிங்கள மிருவகை நிலையினு மெய்தும் " என்னும் சூத்திரத் தான் இதற்கு வேறு கால்கள் இன்மையினென்க, [1]பாலைக்கு நிலமில் லாததுபோல.

புறக்கூத்துக்குரிய ஆடல்களாவன :—பெருநடை, சாரியை, பிரமரி இவை முதலாயினவும், பதினேராடலிற் கூத்துக்களுமாம்.

இவ்வகையால் அகக்கூத்துக்களுக்கும, பறக்கூத்துக்களுக்குமுரிய ஆடலுமென்றவாறு.

16. பாடலுமென்றது - [2]பண்ணல் முதலிய எட்டுவகைப்பட்ட குறிக் கோளும், " இனபந் தெளிவே நிறையோ டொளியே, வன்சொ லிறுதி மந்த முச்சமென, வந்த வெட்டும் பாடலின் பயனே " என்று சொல்லப் பட்ட எண்வகைப்பயனுமுடைய பாடலும்.

பாணியுமென்றது - தாளங்களுமென்றவாறு, [3]" கொட்டு மசையுந் தூக்கு மளவும், ஒடடப் புணர்ப்பது பாணி யாகும் " என்ருராகலின்

இவை மாத்திரைப்பெயர்கள், கொட்டு அரைமாத்திரை; அதறகு வடிவு, க; அசை ஒருமாத்திரை, அதற்கு வடிவு, எ, தூக்கு இரண்டு மாத்திரை; அதறகு வடிவு, உ, அளவு மூனறுமாத்திரை அதற்குவடிவு ஃ எனக்கொளக

என்னை? " ககரங் கொடடே யெகர மசையே, †உகரந் தூக்கே யளவே யாய்தம் " என்ருராகலின்

இவற்றின் தொழில் வருமாறு —கொட்டாவது - அமுக்குதல்; அசை யாவது - தாக்கியெழுதல, தூக்காவது—தாக்கித் தூக்குதல, அளவாவது - தாக்கினவோசை நேரே மூன்றுமாத்திரை பெறுமளவும் வருதலெனக் கொள்க.

அரைமாத்திரையுடைய ஏகதாளமுதலாகப்பதினறுமாத்திரையுடைய பார்வதிலோசனமீருகச் சொன்ன நாறபதிதொரு தாளமும் புறக்கூத்திற் குரிய; ஆறன்மட்டமென்பனவும், எட்டன்மட்டமென்பனவும், தாள வொரியலென்பனவும், தனிநிலையொரியலென்பனவும, ஒன்றன்பாணி முதலாக எண்கூத்துப் பாணியீருகக் கிடந்த பதிஞெருபாணிவிகற்பங் களும், முதனடைவாரமுதலாயினவும அகக்கூத்திறகுரியவென்க.

16. தூக்குமென்றது - இத்தாளங்களின் வழிவரும் செந்தூக்கு, மத லைத் தூக்கு, துணிபுதீதூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புதீதூக்கு, கழாற் றூக்கு, நெடுந்தூக்கெனப்பட்ட ஏழு தூக்குக்களுமென்க; என்னை? " ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை, மூச்சீர் துணிபு நாற்சீர் கோயில், ஐஞ்சீர் நிவப்பா மறுசீர் கழாஅலே, எழுசீர் நெடுந்தூக் கென்மனுர் புலவர் " என்ருராகலின்.

17. கூடிய நெறியினவென்றது - மூற்சொல்லப்பட்ட கூத்தும் பாட்டும் தாளமும் தூக்குமு தம்மிற்கூடின நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்தும் முதலாயினவென்க.

கொளுத்துங்காலை - ஆட்டுவிக்குமிடத்தென்க.

18. பிண்டியுமென்றது - ஒற்றைக்கையுமென்றவாறு.

---

[1] பாலைக்கு நிலமின்மையை, தொல். அகத். 2, உரையிற் காண்க.
[2] 7 . 1. [3] 14 : 150, உரை. (பி - ம்.) † ' ஙகரந் '

முற்கூறிய சொல்விகற்பமாகிய உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொ லென்னு மூன்றினையும், அவிநயத்தோடே நாட்டிச்செய்யுமிடத்துச்செய்யு முறைமைதான் நான்குவகைப்படும், கையும் கருத்தும் மிடறும் சரீரமு மென என்னை? "அவைதாம், கையே கருத்தே மிடறே சரீரமென், றெயதமுன் பமைத்த விவையென மொழிப" என்றுராகலின்.

அவற்றுட் கைதான் இரண்டுவகைப்படும், இணையாவினைக்கையும் இணைக்கையுமென இவை ஒறறைக்கை இரட்டைக்கையென்றும் வழங் கப்படும்.

இன்னும் [ஒரு சாரார்] ஒற்றைக்கை இரட்டைக்கையென்னு மிவற்றை, இவ்வகையோடும் [1]ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கை யென்னும் நான்கினையுங்கூட்டி ஆறென்பாருமுளர். என்னை? "மெய்பெறத் தெரிந்து மேலோ ராய்ந்த, கைவகை தன்னைக் கருதுங் காலை, இணையா வினைக்கை யிணைக்கை யென்ன, அணையு மென்ப வறிந் திசி னோரே", " மொழிநரு முளரே", "இணையா தியல்வ திணையா வினைக்கை, இணைந்துடன் வருவ திணைக்கை யாகும்" என்று பிறரும் கூறினுராதலின்

இனி அவற்றுள் இணையா வினைக்கை முப்பத்துமூன்று வகைப்படுமு; அவை -1. பதாகை, 2 திரிபதாகை, 3 கத்தரிகை, 4 தூபம, 5 அராளம், 6 இளம்பிறை, 7. சுகதுண்டம், 8 முட்டி, 9. கடகம், 10, சூசி, 11 பதுமகோசிகம், 12. காங்கூலம், 13. கபித்தம, 14 விறபிடி, 15. குடங் கை, 16. அலாபத்திரம், 17. பிரமரம, 18 தாமபிரசூடம, 19 பிசாசம, 20 முகுளம், 21 பிண்டி, 22 தெரிநிலை, 23 மெய்ந்நிலை, 24. உன்னம், 25 மண்டலம், 26. சதுரம், 27 மான்றலை, 28. சங்கு, 29. வண்டு, 30. இலதை, 31. கபோதம், 32. மகரமுகம், 33 வலம்புரி என என்னை? "இணையா வினைக்கை யியம்புங் காலை, அணைவுறு பதாகை திரிபதா கையே, கத்தரிகை தூப மராள மிளம்பிறை, சுகதுண் டம்மே முட்டி கடகம், சூசி பதும கோசிகந் துணிந்த, மாசில்காங கூலம வழுவறு கபித் தம், விறபிடி குடங்கை யலாபத் திரமே, பிரமரந் தன்னெடு தாமபிர

---

[1] ஆண்கை முதலிய நான்கன்வகையினை வரும் வெண்பாக்களால் உணர்க.—

(1) "முட்டி சிகர மலர்பதுமஞ் சந்தஞ்சம், விட்ட சிலந்தி மிகுசூசி-ஒட்டும, சதுரம் பதாகந் தருதிரிப தாகம, அதிகமுறு மாண்கைநவ மாம்",

(2) "கடகஞ் சுகதுண்டங் காங்கூல மன்னும், அடைவாம் பிறைக் கை யராளம் - தடமருவு, மன்னபக்கந் தாம்பிர சூடமொடு மான்றலையே, இன்னவெட்டும் பெண்ணுகு மே",

(3) "சர்ப்பசிரம் வண்டு தனிமுகுளங் கத்தரிகை, விற்பனஞ்சேர் கோசங்க விதத்முடன் - அற்புதமே, ஆகு மலிக்கைக ளாறென் றுரைப் பரே, பாகனைய சொல்லாய் பரிந்து";

(4) "உன்னமா மண்டல . வலம்புரியே, மெய்ந்நிலையாஞ் சங்கி லதை மேம்படவே - மன்னிவரு, தூமமொடு பிண்டியாய்ச் சொன்னுர் பொதுக்கையெனத், தாம முறுங்குழலாய் தான்." இவை சுத்தானந்தப் பிரகாசத்திலுள்ளன.

சூடம், பிசாச முகுளம் பிண்டி தெரிநிலை, பேசிய மெய்ந்நிலை யுன்ன மண்டலம், சதுர மான்றலை சங்கே வண்டே, அதிர்வி லிலதை கபோத மகரமுகம், வலம்புரி தன்னெடு முப்பதீது மூன்றென், றிலங்குமொழிப் புலவ ரிசைதீதன ரென்ப" என்ருராகலின்

இவற்றுள், பிண்டியென்றது ஒன்ருய் ஆகுபெயரான் ஒற்றைக்கைக் குப் பெயராயிற்று.

பிணையல் - இணைதலாதலால் இணைக்கையாயிற்று. ஆதலாற் பிண்டி யும் பிணையலுமென்ருரெனக்கொள்க.

இவறறுட் பிண்டிக்குக்காட்டிய முப்பதீது மூன்று வகையினுள்,—

பதாகைக்கையாவது - நான்குவிரலும் தம்முள் ஒட்டிநிமிரப் பெரு விரல் குஞ்சித்துநிற்பது, என்னை? "பதாகையென்பது பகருங் காலைப், பெருவிரல் குஞ்சித் தலாவிர னன்கு, மருவி நிமிரு மரபிற் றென்ப" என்ருராகலின்.

இக்கைகளின் தொழில் முதலிய விரிப்பின் உரைபெருகுமாதலின், விடுக்கப்பட்டன, விரிந்தநூல்களிற் கண்டுகொள்க. (1)

திரிபதாகையாவது - பதாகைக்கையின் [1] அணிவிரல் முடக்குவது; என்னை? "திரிப தாகை தெரியுங் காலை, அறைப தாகையி னணிவிரன் முடக்கினஃ, தாமென மொழிப வறிந்திசி னோரே" என்ருராகலின். (2)

கத்தரிகையாவது-திரிபதாகையின் முடங்கிய அணிவிரற்புறத்த தாகிய நடுவிரலைச்சுட்டுவிரலோடு பொருந்த நிமிர்ப்பது, என்னை? "கத்தரிகையே காண்டக விரிப்பின், அத்திரி பதாகையி னணியின் புறத்தைச், சுட்டக மொடட விட்டுநிமிர்ப் பதுவே" என்ருராகலின். (3)

தூபமென்றது - நிமிர்ந்த நடுவிரலும் சுட்டுவிரலும் பாதிப்பட வளைய நிற்பது, என்னை? "தூப மென்பது துணியுங் காலை, விளங்குகத் தரிகை விரலகம் வளைந்து, துளங்கு மென்ப துணிபறிந் தோரே" என்ரு ராகலின். (4)

அராளமாவது - பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரல் முடக்கி ஒழிந்த விரன்மூன்றும் நிமிர்ந்து வளைவது, என்னை? "அராள மாவ தறிவரக்கிளப் பிற், பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரன் முடக்கி, விரல்கண் மூன்று நிமிர்தீதகம் வளைதீதற், குரிய தென்ப வுணர்ந்திசி னோரே" என்ரு ராகலின். (5)

இளம்பிறை·—"சுட்டும் [2]பேடு [3]மநாமிகை சிறுவிரல், ஒட்டி யகம் வளைய வொசித்த பெருவிரல், விட்டு நீங்கும விதியிற் றென்ப." (6)

சுகதுண்டம்·—"சுகதுண்டமென்பது தொழில்பெறக் கிளப்பிற், சுட்டுவிரலும் பெருவிர ருனும், ஒட்டி யுகிர்நுனை கௌவி முன்வளைந், தநாமிகை முடங்கப் பேட்டொடு சிறுவிரல், தான்மிக நிமிர்ந்த தகுதித் தென்ப" (7)

---

[1] அணிவிரல் - பவித்திர விரல்.
[2] பேடு - நடுவிரல், இது பேடியெனவும் வழங்கப்படும்.
[3] அநாமிகை - பவித்திர விரல்.

முட்டி .—" முட்டி யென்பது மொழியுங் காலைச், சுட்டு நடுவிர லநா மிகை சிறுவிரல், இறுக முடக்கி யிவறறின்மிசைப் பெருவிரல், முறுகப் பிடித்த முறைமைத் தென்ப " (8)

கடகம் .—" கடக முகமே கருதுங் காலைப், பெருவிர னுனியுஞ் சுட்டு விர னுனியு, மருவ வளைந்தவ் வுகிர்நுனி கௌவி, ஒழிந்த மூன்றும் வழி வழி நிமிர, மொழிந்தன ரென்ப முடிபறிந் தோரே." (9)

சூசி .—" சூசி யென்பது துணியுங் காலை, நடுவிரல் பெருவிர லென் றிவை தம்மில், அடைவுட னெறறிச் சுட்டுவிர னிமிர, ஒழிந்தன வழிவழி முடங்கி நிறப, மொழிந்தனர் மாதோ முடிபறிந் தோரே." (10)

பதும கோசிகம் .—" பதும கோசிகம் பகருங் காலை, ஒப்பக் கைவளைத் தைந்து விரலு, மெய்ப்பட வகன்ற விதியிற ருகும் " (11)

காங்கூலமாவது - மூன்று வகைப்படும் , குவிகாங்கூலம், முகிழ்காங் கூலம், விரிகாங்கூலமென. என்னை ? " [1] காங்கூ லமமே கருதுங் காலைச், சுட்டும் பேடும் பெருவிரன் மூன்றும், ஒட்டிமுன் குவிய வநாமிகை முடங் கிச், சிறுவிர னிமிர்ந்த செய்கைத் தாகும் ", " முகிழ்காங் கூல முநதுற மொழிந்த, குவிகாங் கூலங் குவிவிழந் ததுவே ", " மலர்காங் கூல மது மலர்ந் ததுவே." (12)

கபித்தமாவது - சுட்டுவிரனுனியும் பெருவிரனுனியும் உகிர்நுனை கௌவிப்பிடித்து ஒழிநத மூன்றுவிரலும மெல்லெனப் பிடிப்பது, என்னை? "கபித்த மென்பது காணுங் காலைச், சுட்டுப் பெருவிர லொட்டிநுனி கௌவி, அல்ல மூன்று மெல்லப்பிடிப் பதுவே " என்றராகலின். (13)

விற்பிடி —" விறபிடி யென்பது விரிக்குங் காலைச், சுட்டொடு பேடி யநாமிகை சிறுவிரல், ஒட்டி யகப்பால வளையப் பெருவிரல், விட்டு நிமிரும் விதியிற் ருகும." இதறகுச் சிகரமென்றும் பெயர். (14)

குடங்கையாவது - எல்லாவிரலுங்கூட்டி உட்குழிப்பது , என்னை ? " குடங்கை யென்பது கூறுங் காலை, உடங்குவிரற கூடடி யுட்குழிப் பதுவே " என்றராகலின். (15)

அலாபதிரமாவது - சிறுவிரன் முதலாகியவைந்தும் வளைந்துமறி வது ; என்னை ? " அலாபத் திரமே யாயுங் காலைப், புரைமையின் மிகுதித சிறுவிரன் முதலா, வருமுறை யைந்தும் வளைந்துமறி வதுவே " என்ரு ராகலின். (16)

பிரமரமாவது - அநாமிகைவிரலும் நடுவிரலும் தம்மிற்பொருந்தி வலஞ்சாயப் பெருவிரல நடுவிரலினுளளே சேரச் சுட்டுவிரலும சிறு விரலும் பின்பே வளைந்துநிறபது, என்னை? " பிரமர மென்பது பேணுங் காலை, அநாமிகை நடுவிர லறவுறப் பொருந்திதீ, தாம்வலஞ் சாயதீ தகை சால் பெருவிரல், ஒட்டிய நடுவுட் சேரச சிறுவிரல், சுட்டு வளைந்துபின் ருேன்றிய நிலையே " என்ரு ராகலின். (17)

தாம்பிரசூடமாவது - நடுவிரலும் சுட்டுவிரலும் பெருவிரலும் தம்மில் நுனியொதீதுக் கூடி வளைந்து சிறுவிரலும் அணிவிரலும் முடங்கி

---

[1] காங்கூலமென்றது குவிகாங்கூலதீதை.

நிமிர்வது ; என்னை ? " தாம்பிர சூடமே சாற்றுங் காலைப், பேடே சுட்டுப் பெருவிர னுனியொதீதுக், கூடி வளைந்து சிறுவிர லணிவிரல், உடனதின் முடங்கி நிமிரநிற் பதுவே " என்ருராகலின். (18)

பசாசமாவது - பெருவிரலும் சுட்டுவிரலுமன்றி ஒழிந்த மூன்று விரலும் தம்மிற்பொலிந்து நிற்பதெனகொள்க.

அப்பசாசநதான் மூன்றுவகைப்படும் , அகநிலைப்பசாசம், முகநிலைப் பசாசம், உகிர்நிலைப்பசாசமென. அவற்றுள்,

அகநிலைப்பசாசம் - சுட்டுவிரல் நுனியிற் பெருவிரல் அகப்படுவது ;

முகநிலைப்பசாசம் - அவ்விரன்முகங்கூடி உகிர்விட்டு நிற்பது ,

உகிர்நிலைப்பசாசம் - சுட்டுவிரலும் பெருவிரலும் உகிர்நிலை கௌவி நிற்பது

என்னை ? " பசாச மென்பது பாற்படக் கிளப்பின், அகநிலை முகநிலை யுகிர்நிலை யென்னதீ, தொகநிலை பெற்ற மூன்றுமென மொழிப ", " அவை தாம், சுட்டுவிர னுனியிற் பெருவிர லகப்பட, ஒட்டிவளைத்த தகநிலை முக நிலை, அவ்விர னுனிகள் கௌவிப் பிடித்தல், செவ்வி தாகுஞ் சிறந்த வுகிர் நிலை, உகிர்நுனை கௌவிய தொழிந்த மூன்றும், தகைமையி னிமிர்த்தலம் மூன்றறகுந தகுமே " என்ரு ராகலின். (19)

முகுளமாவது - ஐந்துவிரலும் தம்மில் தலைகுவிந்து உயர்ந்து நிற்பது , என்னை , " முகுள மென்பது மொழியுங் காலை, ஐந்து விரலும் தலைகுவிந் தேற்ப, வந்து நிகழு மாட்சித் தாகும " என்ருராகலின். (20)

பிண்டியென்றது - சுட்டுவிரல் பேடிவிரல் அநாமிகை சிறுவிரல், ஒட்டி நெகிழமுடங்க அவற்றின்மேலே குறுக்கிடப்பெருவிரல் கட்டி விலங்கி விரல் வழி முறையொற்றல் , என்னை ? " பிண்டி யென்பது பேசுங் காலைச், சுடடுப பேடி யநாமிகை சிறுவிரல், ஒடடி நெகிழ முடங்க வவற் றின்மிசை, விலங்குறப் பெருவிரல் விட்டுங் கட்டியும, இலங்குவிரல் வழி முறை யொறறலு மியல்பே " என்ருராகலின். (21)

தெரிநிலையாவது - எல்லாவிரலும் விரிந்து குஞ்சித்து நிற்பது , என்னை ? " தெரிநிலை யென்பது செப்புங் காலை, ஐந்து விரலு மலர்நது குஞ்சித்த, கைவகை யென்ப கற்றறிந் தோரே " என்ருராகலின். (22)

மெய்நநிலையாவது - சிறுவிரலும் அணிவிரலுமந நடுவிரலும் சுட்டுவிர லும் விட்டுநிமிரச் சுட்டுவிரன்மேற பெருவிரல் சேரவைப்பது , என்னை ? " மெய்ந்நிலை யெனபது விளம்புங காலைச், சிறுவிர லநாமிகை பேடொடு சுட்டிவை, உறுத லின்றி நிமிரச் சுட்டின்மிசைப், பெருவிரல் சேரும் பெற் றிதீ தென்ப " என்ருராகலின். (23)

உன்னமாவது - சிறுவிரலும் பெருவிரலும் தம்முட்கூட ஒழிந்த மூன்று விரலும் விட்டு நிமிர்வது , என்னை ? " உன்ன நிலையே யுணருங் காலைப், பெருவிரல் சிறுவிர லென்றிவை யிணைய, வருமுறை மூன்று மலர்ந்துநிமிர் வதுவே " என்ருராகலின். (24)

மண்டலம் -" மண்டல மென்பது மாசறக் கிளப்பிற், பேடு நுனியும் பெருவிர னுனியும், கூடி வளைந்துதம் முகிர்நுனை கௌவி, ஒழிந்த மூன்று

மொக்க வளைவதென, மொழிந்தன ரென்ப முழுதுணர்ந் தோரே ” என்ரு ராகலின் (25)

சதுரமாவது - சுட்டுவிரலும் நடுவிரலும் அணிவிரலும் தம்முட் சேர்ந்து இறைஞ்சப் பெருவிரல் அகம்வரவைத்துச் சிறுவிரல் பின்பே நிமிர்ந்து நிறபது, என்னை? “ சதுர மென்பது சாற்றுங் காலை, மருவிய மூன்று நிமிர்ந்தகம் வளையப், பெருவிர லகமுறப் பொறபச் சேர்த்திச், சிறுவிரல் பின்பே நிமிர்ந்த செவ்வியின், இறுமுறைத் தென்ப வியல் புணர்ந் தோரே ” என்ருராகலின். (26)

மான்றலையாவது - பெருவிரலும சிறுவிரலுமொழிந்த மூன்றும் தம் மில் ஒத்து ஒன்றி முன்னே இறைஞ்சிநிற்பது; என்னை? “ மான்றலை யென்பது வகுக்குங் காலை, மூன்றிடை விரலு நிமிரந்தக மிறைஞ்சிப், பெருவிரல் சிறுவிர லென்றிவை நிமிர்ந்து, வருவ தென்ப வழக்கறிந் தோரே ” என்ருராகலின். (27)

சங்கமாவது - பெருவிரல் நிமிர ஒழிந்த நான்குவிரலும் வளைந்து நிற்பது, என்னை? “ சங்கெனப் படுவது சாற்றுங் காலைச், சிறுவிரன் முதலாச் செறிவிர னைகும், பெறுமுறை வளையப் பெருவிர னிமிர்ந்தாங், கிறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே ” என்ரு ராகலின். (28)

வண்டாவது - பெருவிரலும் அணிவிரலும் வளைந்து நுனியொன்றிச் சிறுவிரல் நிமிர்ந்து சுட்டுவிரலும் நடுவிரலும் நெகிழ வளைந்து நிற்பது; என்னை? “ வண்டென் பதுவே வகுக்குங் காலை, அநாமிகை பெருவிர னனிமிக வளைந்து, தாநுனி யொன்றித் தகைசால் சிறுவிரல, வாலிதி னிமிர மற்றைய வளைந்த, பாலின தென்ப பயன்றெரிந் தோரே ” என்ரு ராகலின். (29)

இலதையாவது - நடுவிரலும் சுட்டுவிரலும் கூடிநிமிரப் பெருவிரல் அவற்றின் கீழ்வரைசேர ஒழிந்த இரண்டுவிரலும் வழிமுறை பின்னே நிமிர்ந்து நிற்பது, என்னை? “ இலதை யென்ப தியம்புங் காலைப், பேடி யுஞ் சுட்டும் பிணைந்துட னிமிர்ந்து, கூடிய பெருவிரல் கீழ்வரை குறுகக், கடையிரு விரலும் பின்னர் நிமிர்ந்த, நடையின தென்ப நன்னெறிப் புலவர் ” என்ருராகலின். (30)

கபோத மென்றது - பதாகைக்கையிற் பெருவிரல் விட்டு நிமிர்வது; என்னை? “ காணுங் காலைக் கபோத மென்பது, பேணிய பதாகையிற் பெருவிர னிமிரும் ” என்ருராகலின். (31)

மகரமுகமாவது - பெருவிரலும் சுட்டுவிரலும் நிமிர்ந்துகூட ஒழிந்த மூன்றுவிரலும் தம்முளொன்றி அதற்கு வேருய் நிற்பது; என்னை? “ மகரமுக மென்பது வகுக்குங் காலைச், சுட்டொடு பெருவிரல் கூட வொழிந்தவை, ஒட்டி நிமிர்ந்தாங் கொன்ரு வாகும் ” என்ருராகலின். (32)

வலம்புரியாவது - சிறுவிரலும் பெருவிரலு நிமிர்ந்து சுட்டுவிரலின் அகம் வளைந்து ஒழிந்தவிரண்டும் நிமிர்ந்து இறைஞ்சிநிற்பது. என்னை? வலம்புரிக் கையே வாய்ந்த கனிட்டன், நலந்திகழ் பெருவிர னயமுற

நிமிர்ந்து, சுட்டுவிரன் மூடங்கிச் சிறுவிர னடுவிரல், விட்டுநிமிர்ந் திறைஞ்சும் விதியிற் றென்று, கூறுவர் தொன்னூற் குறிப்புணர்ந் தோரே" என்ருராகலின். (33)

இச்சொலலப்பட்ட மூப்பதுமூன்றும் பிண்டிக்கையெனக்கொள்க.

† இணையாவினைக்கையெனினும் ஒற்றைக்கையெனினும் பிண்டிக்கை யெனினுமொக்கும்

இதிதன்மையவாகிய பிண்டிக்கையுமென்க.

18. பிணையலுமென்றது - இரட்டைக்கையுமென்றவாறு.

அஃதாவது இணைக்கை அது பதினைந்து வகைப்படும்.

அவையாவன —அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவதீதிகம், கடகாவருத்தம், நிடதம, தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானமென்றிவை ; என்னை ? "எஞ்சுத லில்லா விணைக்கை யியம்பில், அஞ்சலி தன்னெடு புட்பாஞ் சலியே, பதுமாஞ் சலியே கபோதங் கற்கடகம், நலமாஞ் சுவத்திகங் கடகா வருத்தம், நிடதந் தோரமுற் சங்க மேம்பட, உறுபுட் பபுட மகரஞ் சயந்தம், அந்தமில் காட்சி யபய வத்தம், எண்ணிய வருத்த மானந் தன்னெடு, பண்ணுங் காலைப் பதினைந் தென்ப" என்ருராகலின். அவற்றுள்,—

அஞ்சலியென்றது - இரண்டு கையும் பதாகையாய் அகமொன்றுவது; என்னை ? "அஞ்சலி யென்ப தறிவுறக் கிளப்பின், எஞ்ச லின்றி யிருகை யும் பதாகையாய், வந்தகம் பொருந்து மாட்சித் தென்றனர், அந்தமில் காட்சி யறிந்திசி னோரே." (1)

புட்பாஞ்சலியாவது - இரண்டு கையும் குடங்கையாய் வந்து ஒன்றுவது, என்னை ? "புட்பாஞ் சலியே பொருந்தவிரு குடங்கையும், கட்டி நிறகுங் காட்சிய தென்ப" என்ருராகலின். (2)

பதுமாஞ்சலியாவது - இருகையும் பதுமகோசிகமாகக் கூட்டுவது ; என்னை ? "பதுமாஞ் சலியே பதும கோசிகம், எனவிரு கையு மியைந்து நிற்பதுவே" என்ருராகலின். (3)

கபோதமென்றது இரண்டு கையும் கபோதமாகக் கூட்டுவது ; என்னை ? "கருதுங் காலைக் கபோத விணைக்கை, இருகையுங் கபோத மிசைந்துநிற பதுவே" என்ருராகலின். (4)

கற்கடகமென்றது - தெரிநிலைக்கையிரண்டும் அங்குலிபிணைந்துவரு வதெனக்கொள்க, என்னை ? "கருதுங் காலைக் கறகட கம்மே, தெரிநிலை யங்குலி யிருகையும் பிணையும்" என்ருராகலின். (5)

சுவதீதிகமென்றது - மணிக்கட்டிற்பொருந்திய பதாகை யிரண்டை யும் மணிக்கட்டி லேறறிவைப்பது, என்னை ? "சுவதீதிக மென்பது சொல்லுங் காலை, மணிக்கட் டமைந்த பதாகை யிரண்டையு, மணிக்கட் டேற்றி வைப்ப தாகும்" என்ருராகலின். (6)

(பி - ம்) † 'இணையாவிணைக்கை'

கடகாவருத்தமாவது - இரண்டு கையும் கடகமாய் மணிக்கட்டுக்கு ஏற இயைந்து நிறபது, என்னை? "கருதிய கடகா வருத்தக் கையே, இருகையுங் கடக மணிக்கட் டியைவது" என்ருராகலின். (7)

நிடதமாவது - முட்டியாக இரண்டுகையும் சமஞ்செய்வது, என்னை? "நிடத மென்பது நெறிப்படக் கிளப்பின், முட்டி யிரண்டுகை யுஞ்சம மாகக், கட்டி நிறகுங் காட்சித் தென்ப" என்ருராகலின். (8)

[1] தோரமாவது - இரண்டு கையும் பதாகையாக்கி அகம்புறமொன்றி முன் தாழ்ந்து நிறபது, என்னை? "தோர மென்பது துணியுங் காலை, இருகையும் பதாகை யகம்புற மொன்ற, மருவிமுன் ருழும வழக்கிற் றென்ப" என்ருராகலின். (9)

உற்சங்கமாவது - ஒருகை பிறைக்கையாகக்கொண்டு ஒருகை அராள மாக்கி இரண்டு கையும் மணிக்கட்டில் ஏற்றிவைப்பது, என்னை? "உற்சங்க மென்ப துணருங் காலை, ஒருகை பிறைக்கை யொருகை யராளம், தெரிய மணிக்கட்டி லேற்றிவைப் பதுவே" என்ருராகலின். (10)

புட்பபுடமாவது - குடங்கையிரண்டும் தம்மிற் பக்கங்காட்டி நிற்பது; என்னை? "புட்பபட மென்பது புகலுங் காலை, ஒதீத விரண்டு குடங்கையு மியைந்து, பக்கங் காட்டும் பான்மைத் தென்ப" என்ருராகலின. (11)

மகரமென்றது - கபோதமிரண்டு கையும் அகம்புறமொன்றவைப்பது; என்னை? "மகர மென்பது வாய்மையி னுரைப்பிற, கபோத மிரண்டு கையு மகம்புறம், ஒன்ற வைப்பதென் றுரைத்தனர் புலவர்" என்ரு ராகலின். உச்சிதமென்பதும் இதனது பெயர் (12)

சயந்தமென்றது. . . .. (13)

அபயவத்தமாவது - இருகையும் சுகதுண்டமாக நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிறபது, என்னை? "அபயவத் தமமே யறிவுறக் கிளப்பின், வஞ்சமில் சுகதுண்ட மிருகையு மாட்சியில், நெஞ்சுற நோக்கி நெகிழ்நது நிற பதுவே" என்ருராகலின். (14)

வருத்தமானமாவது - முகுளக்கையிற கபோதக்கையை எதிரிட்டுச் சேர்ப்பது, என்னை? "வருத்த மானம் வகுக்குங் காலை, முகுளக் கையிற் கபோதக் கையை, நிகழச் சேர்த்து நெறியிற் றெனப" என்ரு ராகலின். (15)

இச்சொல்லப்பட்ட பதினைந்தும் பிணையறகையெனக் கொள்க.

இணைக்கையெனினும் இரட்டைக்கையெனினுமை பிணையலெனினு மொக்கும்

இத்தன்மையவாகிய பிணையலுமென்க.

18. எழிற்கையுந் தொழிற்கையுமென்றது, எழிற்கை-அழகுபெறக் காட்டுங்கை. தொழிறகை - தொழில்பெறக் காட்டுங்கை.

உம்மையாற் பொருட்கையும் கூறப்பட்டது

பொருட்கை - பொருளுறக்காட்டுங்கை, என்னை? "அவைதாம், எழிற்கை யழகே தொழிற்கை தொழிலே, பொருட்கை கவியிற் பொருளா கும்மே" என்ருராகலின்.

19. கொண்ட வகையறிந்து. கொண்டவகையறிதலாவது - பிண்டி

[1] உடோளமெனவும் இது கூறப்படும்.

யும் பிணையலும் புறக்கூதிதுக்குரிய கையென்றும், எழிற்கையும் தொழிற் கையும் அகக்கூதிதுக்குரிய கையென்றுமறிதல்.

கூதிதுவருகாலையென்றது - கூதிதுக்களின் வரவு நிகழுமிடதிதென்க.

20 - 21 கூடை செய்தகை... . . ..கூளதலுமென் றது-அகக்கூதிது நிகழுமிடதிது ஒற்றையிறசெய்த கைதிதொழில் இரட்டை யிற் புகாமலும் இரட்டையிற் செய்த கைதிதொழில் ஒறறையிற்புகாமலும் கூளதல். இன்னும தேசியிற கைதிதொழில மார்க்கதிதுப் புகாமலும் மார்க் கதிதுக்கைதிதொழில் தேசியிற்புகாமலும் கூளதலென்றுமாம், ஒறறையும் இரட்டையும் தேசிக்கூருகலானும் இரட்டையும் இரட்டைக்கிரட்டையும் வடுகிற் கூருகலானுமென்க.

22 - 3. பிண்டி செய்தகை..... .....கூளதலுமென்றது :— புறக்கூதினிடதிது. பிண்டியென்றது - பொருட்கையென்றும், பிணைய லென்றது - தொழிற்கையென்றுமாம்.

இதன் கருதிது ஆடல் நிகழுமிடதிது அவிநயம் நிகழாமலும் அவி நயம் நிகழுமிடதிது ஆடல் நிகழாமலும் கூளதல்.

24. குரவையும். .. .. செலுதியென்றது - குரவைக் கூதிதிற்குரிய கால்களும் வரிக்கூதிதிற்குரிய கால்களும் தம்மில் விரவாதபடியே கூதிதை நடதிதியென்க.

[1] "குரவை..... ....இயல்பிற் றென்ப."

"வரியெனப் படுவது வகுக்குங் காலைப், பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலும், அறியக் கூறி யாற்றுழி வழங்கல்."

25. ஆடற்கு.. ..... . தன்னெடு மென்றது - இக்கூதிதுக்களை இப்படி யால் அவறறுடனே பொருந்த ஆடவும் ஆடுவிக்கவும் வல்ல ஆடலாசிரிய னெடு மென்றவாறு

அறிந்து புணர்தீது விளங்கவறிந்து அறிந்து செலுதீதி அமைந்த ஆசானென்க

[இசையாசிரியன் அமைதி]

26 - 36. யாழுங்குழலுஞ் இசையோன் ருணும்

(இ - ள்.) யாழ்ப்பாடலும் வங்கியப்பாடலும் இருவகைதீதாளக் கூறு பாடுகளும் மிடறறுப்பாடலும் மந்தமாகிய சுரதிதினையுடைய தண்ணுமை யும் அகக்கூதிதுப் புறக்கூதிதுப் பதினோடடெனனும் கூதிதுக்களும் வல் லனுப் இவற்றுடனே சேரச்செய்த உருக்களை இசைகொள்ளுமபடியும் இரதம் பொருந்தும்படியும புணர்க்கவும் வல்லனுய் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையும் அமைதிதுதீ தேசாந் தரங்களிற் பாடைகளையும் அறிந்து அந்தப்பாடைகள் இசைபூணும்படி யையும் அறிந்து இயற்புலவன் நினைவும் நாடகப்புலவன் ஆடுவரவுகளும் இவற்றுக்கு அடைதித பாடல்களும் தமமிற சந்திப்பிக்குமிடதிதுக் குறறந் தீர்ந்த நூல்வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லனுயுள்ள இசைப்புல வனுமென்றவாறு

இது பொழிப்புரை.

---

[1] பதி . 77, 3 : 24-ஆம் அடிகளின் உரையைப்பார்க்க.

26. யாழுமென்றது - யாழ்ப்பாடலுமென்றவாறு.

யாழ் நால்வகைப்படும்; அவை :—பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோடியாழென்பன. இவை நாலும் பெரும்பான்மைய; சிறுபான்மையான் வருவன பிறவுமுள, என்னை? "பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன், சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினுர் - தார்பொலிந்து, மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே, பின்னு முளவே பிற" என்ரு ராகலின்.

[1] இந்நால்வகை யாழிற்கும் நரம்புகொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபதிதொன்றும், மகரயாழிற்குப் பதிதொன்பதும, சகோடயாழிறகுப் பதினலும், செங்கோட்டியாழிறகு ஏழும் கொள்ளப்படும், என்னை? "ஒன்று மிருபது †மொன்பதும் பதிதுடனே, நின்றபதி னுன்கும் பின்னேழும் - குன்ருத, நால்வகை யாழிறகு நன்னரம்பு சொன்முறையே, மேல்வகை நூலோர் விதி" என்ருராகலின்.

இனி இவ்வியாழென்னும் ஒன்றிற்கு அமைந்த பலவுறுப்பாகிய "கோட்டின தமைதியுங் கொளுவிய வாணியும், ஆட்டிய பதிதரின் வகையு மாடகமும, தந்திரி யமைதியுஞ் சாற்றிய பிறவு, முந்திய நூலின் முடிந்த வகையே" வகுக்கப்பட்டனவெல்லாம் கானல்வரியில், "குற்றநீங்கிய யாழ்" என்பதன்கண் விரியக் கூறுதும்.

26 குழலுமென்றது - வங்கியப்பாடலுமென்றவாறு.

குழல் - வங்கியம், அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலியென ஐந்துமாம், என்னை? "ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே, பாங்குறுசெங் காலி கருங்காலி - பூங்குழலாய், கண்ணணுவந்த கழைக்கிவைக ளாமென்ருர், பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து" என்ருராகலின்.

இவற்றுள் மூங்கிலிற்செய்வது உதிதமம், வெண்கலம் மதிதிமம்; ஏனைய அதமமாம். மூங்கில் பொழுதுசெய்யும்; வெண்கலம் வலிது; மரம் எப்பொழுதும் ஒதிதுநிற்கும்.

இக்காலத்துக் கருங்காலி செங்காலி சந்தனம் இவற்ருற் கொள்ளப் படும், கருங்காலி வேண்டுமென்பது பெருவழக்கு. இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒதித நிலதிதிற் பெருகவளர்ந்து நாலுகாற்று மயங்கின் நாத மில்லையாமாதலான் மயங்காநிலதிதின்கண் இளமையும் நெடும்பிராயமு மின்றி ஒரு புருடாயுப்புக்க பெரிய மரதிதைவெட்டி ஒரு புருடாகாரமாகச் செய்து அதனை நிழலிலே ஆற இட்டுவைதிதுத் திருகுதல் பிளதிதல் போழ்ந்துபடுதலின்மையை அறிந்து ஓர் யாண்டு சென்றபின் இலக்கண வகையான் வங்கியம் செய்யப்படும், என்னை? "உயர்ந்த ‡சமதலதி தோங்கிக்கா னுன்கின், மயங்காமை நின்ற மரதிதின் - மயங்காமே, முறறிய மாமரந் தன்னை முதறடிந்து, குற்றமிலோ ராண்டிற் கொளல்" என்ருராகலின்.

---

[1] புறநா. 152, உரையைப்பார்க்க.

(பி - ம்) †'மோரேழ்மேற் பதிதுடனே, நின்றபதி னுறேழு நேடுங் காற்' ‡'சமநிலதி'

இதன் பிண்டியிலக்கணம் :—நீளம் இருபதுவிரல் ; சுற்றளவு நாலரை விரல். இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒருபாதி மரனி றுதிதிக் கடைந்து வெண்கலத்தாலே அணைசுபண்ணி இடமுகத்தை யடைத்து வலமுகம் வெளியாகவிடப்படும், என்னை ? " சொல்லு மிதற் களவு நாலைந்தாஞ் சுற்றளவு, நல்விரல்க ணுலரையா நன்னுதலாய் - மெல்லதீ, துளையளவு நெல்லரிசி † தூம்பிட மாய, வளைவலமேல் வங்கிய மென் " என்ருராகலின்.

இனித் துளையளவிலக்கணம் :—அளவு இருபது விரல். இதிலே தூம்பு முகத்தின் இரண்டு நீக்கி முதல்வாய்விட்டு இம்முதல்வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினுமிரண்டு நீக்கி நடுவில் நின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளை இடப்படும் இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்து நீக்கி நின்ற ஏழினும் ஏழுவிரல் வைத்து ஊதப்படும். துளை களின் இடைப்பரப்பு ஒரு விரலகலம் கொள்ளப்படும் ; என்னை ? " இரு விரல்க ணீக்கி முதல்வாயேழ் நீக்கி, மருவு துளையெட்டு மன்னும் - பெரு விரல்கள், நாலஞ்சு கொள்க பரப்பென்ப நன்னுதலாய், கோலஞ்செய் வங்கியத்தின் கூறு " என்ருராகலின்.

இவ்வங்கியம் ஊதுமிடத்து வளைவாய்சேர்ந்த துளையை முத்திரை யென்று நீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழுவிரல்பற்றி வாசிக்க.

ஏழுவிரலாவன :—இடக்கையிற்பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்றுவிரலும், வலக்கையிற் பெருவிரலொழிந்த நான்குவிரலும் ஆக ஏழு விரலுமென்க. என்னை ? " வளைவா யருகொன்று முத்திரை யாய் நீக்கித், துளையேழி னின்ற விரல்கள் - விளையாட், டிடமூன்று நான் குவல மென்றுர்கா ணேகா, வடமாரு மென்முலையாய் வைத்து " என்ரு ராகலின்.

இவ்வங்கியத்து ஏழுதுளைகளில் இசைபிறக்குமாறு :—அஃது எழுத் தாற் பிறக்கும் எழுத்து, சரிகமபதநி என்பன. இவ்வேழெழுத்தினை யும் மாத்திரைப்படுத்தித் தொழில்செய்ய இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும்.

ஏழிசையாவன :—சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன. இவைபிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக் கும், என்னை ? " சரிக மபதநியென் றேழெழுத்தாற் ருனம், வரிபரந்த கண்ணினுய் வைத்துத் - தெரிவரிய, ஏழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்கும், சூழ்முதலாஞ் சுத்தத துளை " என்ருராகலின்

இத்தன்மைத்தாகிய குழலுமென்க.

26. சீருமென்றது - " செம்முறை யுறழ்பே மெய்ந்நிலை கொட்ட, னீட்ட னிமிர்த்தல் " என்று சொல்லப்படாநின்ற வண்ணக்கூறுபாட்டை யும் இருவகைத்தாளக் கூறுபாட்டையும் பாலைநிலையினையும் பண்ணுநிலை யினையும் நிலைப்படப் படுத்துத் தூய்தாகக் காட்டும் தன்மையுமென்க.

இதன்பகுதியெல்லாம் ாண்டுரைப்பிற்பெருகும், வந்தவழிக்கண்டு கொள்க. அஃதன்றித் தாளவகையோத்தினுள்ளும் காணலாகும்.

26 மிடறுமென்றது - ‡ சாரீரவீணையுமென்றவாறு.

(பி - ம்) † ' தூபமிடமாய் ' ‡ ' சரீரவீணை '

அதனை, "பூதமுதற் சாதனத்தாம் புற்கலத்தின் மத்திமத்து, நாத முத லாமெழுத்து நாலாகி - வீதி, வருவரத்தாற் ருனத்தால் வந்து வெளிப் பட், டிருவரத்தாற ரேறற மிசைக்கு" என்பதனலுணர்க.

புற்கலம் - உடம்பு. அப்புற்கலத்துக்கு முதலாயுள்ள பூதமாவன : மண் நீர் தீ வளி வான் எனவிவை, என்னை ? "மண்ணுட னீர்நெருப்புக் கால்வான மென்றிவைதாம், எண்ணிய பூதங்க ளென்றறிநது - நண் ணிய, மன்னர்க்கு மண்கொடுத்து மாற்ருர்க்கு விண்கொடுத்த, தென்ன வர்கோ மானே தெளி" என்ருராகலின்.

இப்பூதங்களைந்தானும் புற்கலமாம் என்ற ஆசானை மாணைக்கன் பணிந்து பூதங்கள் தாம் ஒன்ரேடொன்று கூடுவனவல்ல, மண் செறி தலைக் குணமாக வுடைத்து, நீர் நெகிழ்தலைக் குணமாகவுடைத்து, தீத் தெறுதலைக் குணமாகவுடைத்து, காறறு ஓரிடத்தும் நிலைபெறறு நிற்ப தன்று, ஆகாய மென்பது ஒருருவுண்டில்லையன்று, அன்றியும், "செப் பிய பூதங்கள் சேர்ந்தோர் குறியன்றே, அப்பரிசு மண்ணைந்து நீர் நாலாம் - ஒப்பரிய, தீயாகின் மூன்றிரண்டு காறறம் பரமொன்று, வேயாருந தோளி விளம்பு" என்பதனல் மண் ஐந்து பயனுடைத்து, நீர் நான்கு பயனுடைத்து, தீ மூன்று பயனுடைத்து, காறறு இரண்டு பயனுடைத்து, வான் ஒருபயனுடைத்து, ஆதலால் இவை ஒன்ரே டொன்று கூடுவன வல்லவாகவும் இவறறின் கூட்டம் உடம்பென்றீராத லால் இவ்வைந்தின் கூட்டம் உடமபாவது எவ்வாரேவெனின்,—இதற்கு விடை, "மெய்வாய் கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற, ஐவாயு மாயவற்றின் மீதடுத்துத் - துயய, சுவையொளி யூரேசை நாற்றமென் றைந்தால், அவைமுதற் புறகல மாம்" என்பது. இது பூதங்கள் பரிணமித்து உடம்பாமாறு கூறுகின்றது :—

பூதங்களைந்தும் ததீதம் தன்மைநீங்கி மண் உடம்பாயும், நீர் வாயா யும், தீக் கண்ணுயும், காறறு மூக்காயும், ஆகாயம் செவியாயும் நின்று உடம்பாம். பொறிகள்தோறும் வினியோகப்பட்ட புலன் சுவைமுதல் ஐந்து வகைப்படும். இவ்வைந்தும் பொறியைந்தினுமேறி, மண்ணுல் உடமபு ஊருயும, நீரால் வாய் சுவையாயும், தீயாற கண் ஒளியாயும், காற்ருல் மூக்கு நாற்றமாயும், வானுற செவி ஓசையாயும் வந்து உடம் பாம். அன்றியும் மண்ணின்பகுதி, நரம்பு இறைச்சி என்பு மயிர் தோலென ஐந்து. நீரின் பகுதி, நீர் மூளை சுக்கிலம் நிணம் உதிரமென வைந்து.

"பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை, தெசிகின்ற தீக் குணமோரைந்து - மொசிகின்ற, போக்கு வரவுநோய் கும்பிதீதன் மெய்ப் பரிசம், வாக்குடைய காற்றின் வகை" என்பது தீயின் குணமும் காலின் குணமுமுணர்தீதுகின்றது, ஆவன பசி சோம்பு மைதுனம் காட்சி நீர் வேட்கையெனவிவை தீக்குணம். போக்கு வரவு நோய் கும்பிதீதல் பரிச மெனவிவை காற்றின் குணம்.

"ஓங்கும் வெகுளி மதமான மாங்காரம், நீங்கா வுலோபமுட னிவ் வைந்தும் - பாங்காய, வண்ண முலைமடவாய் வானகத்தின் கூறென்ருர், எண்ணிமிக நூலுணர்ந்தோ ரெண்" இஃது ஆகாயத்தின் குணம் உணர்தீதுகின்றது; ஆவன வெகுளி மதம் மானம் ஆங்காரம உலோப மெனவிவை. இப்பூதகுணம் இருபதீதைந்தும் கொண்டு உடம்பாம்.

"ஒப்பார் பிராண னபான னுதானனுடன், தப்பா வியானன் சமா னனே - இப்பாலும், நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன், தீதிலாத் தேவதத்தனே" என்பது தச வாயுக்களையும் உணர்த்துகின்றது; ஆவன :—பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சய னெனவிவை

"இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி, புடைநின்ற சிங்குவை சங்கினி பூடாவோ, டங்குகு கன்னி யலம்புடை யென்றுரைத்தார், தங்கு தச நாடிக டாம்." தச நாடிகளாவன :—இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, சங்கினி, பூடா, குகு, கன்னி, அலம்புடை எனவிவை

"பூத வகைகளோ ரைந்தாய்ப் பொறியைந்தாய், வாதனையோரை யைந்தாய் மாருதமும் - மேதகுசீர்ப், பத்தாகு நாடிகளும் பத்தாகும் பாரிடத்தே, முத்திக்கு வித்தா முடம்பு" என்பது பூதபரிணமம் உணர்த்துகின்றது —பூதங்கள் ஐந்தாவன —மண் முதலாயின · பொறியைந்தாவன —செவி முதலாயின, புலனைந்தாவன —சத்த முதலாயின, வாதனை ஐயைந்தாவன —நரம்பு முதலிய ஐந்தும், நீர் முதலிய ஐந்தும், பசி முதலிய ஐந்தும், போக்கு முதலிய ஐநதும, வெகுளி முதலிய ஐந்தும், தச வாயுக்களாவன —பிராணன் முதலிய பத்தும்; தச நாடிகளாவன —இடை பிங்கலை முதலிய பத்தும், மூலாதாரத்து எழு பத்தீராயிர நாடிகளும் பீர்க்கங்கூட்டின் மூன்று கண்ணும்போல இடை பிங்கலை சுழுமுனையென்னும் மூன்று நாடிகளுமாய் நடுவுநின்ற சுழு முனையொழிய இரண்டானும் மேனேக்கியேறி இரண்டு மூக்கானும் ஓரோர் பாரிசத்து ஐந்து நாழிகையாகக் கொண்டு ஒரு மாத்திரையில் நூற்றிருபத்தைந்து சுவாதமாய் ஒருசுவாதத்திலே பன்னிரண்டங்குலி யளவு புறப்பட்டு நாலங்குலி தேய்ந்து எண் விரலடங்குகின்றது பிராண வாயுவெனக் கொள்க.

மாத்திரையாவது —இரண்டரை நாழிகையை † எட்டுக்கூறிட்டு ஒரு கூறென்றறிக.

அபானவாயு மல மூத்திரங்களைப் பெய்விக்கும். உதானன் கண்டத் தானத்தில் நிற்கும். வியானவாயு போக்குவரவு செய்து இயங்கப் பண்ணும். சமானவாயு அறுவகைச் சுவையையும் அன்னத்தையும் பிரித்து எழுவகைத் தாதுவின் கண்ணும் கலப்பிக்கும். கூர்மன் இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும். நாகன் விக்கல் இடுவிக்கும். கிருகரன் கோபத்தைப் பண்ணுவிக்கும். தேவதத்தன் உடம் பெரிப்பைப் பண்ணுவிக்கும. தனஞ்சயன் பிராணன் போனபின்னும் உடம்பை விடாதேநின்று மூன்ருநாள் உதிப்பித்து உச்சந்தலையிற் பிற் கூற்றிலே மூன்று நெற்கிடை வெடித்துப் போமென்றறிக.

நாடிகள் எழுபத்தீராயிரத்திலும் தசநாடிகள் பிரதானமெனக் கொள்க.

(பி - ம்.) † 'இருபத்தெட்டுக்'

என்னை ? "இடைபிங் கலையிரண்டு மேறும் பிராணன், புடைநின் றபானன்மலம் போக்கும் - தடையின்றி, உண்டனகீ ழாக்கு முதானன் சமானனெங்கும், கொண்டெறியு மாறிரதக் கூறு" எனவும், "கூர்ம னிமைப்புவிழி கோணகன் விக்கலாம், பேர்வில் வியானன் பெரிதியக்கும் - போர்மலியும், கோபங் கிருகரனுங் கோப்பி னுடமபெரிப்புதீ, தேவததீத னுகுமென்று தேர்" எனவும், "ஒழிந்த தனஞ்சயன்பே ரோதி லுயிர் போய்க், கழிந்தாலும் பின்னுடலைக் கட்டி - அழிந்தழிய, முந்நா ளுதிப் பித்து முன்னியவான் மாவின்றிப், பின்னு வெடித்துவிடும் பேர்ந்து" எனவும் இசை நுணுக்கமுடைய சிகண்டியாரும் கூறினராகலின்.

இங்ஙனம் பூதங்களானும பொறி முதலியவற்றானும் வாயுக்களானும் நாடிகளானும் பரிணமித்துச் சுக்கில சுரோணிதங்களாலே உடம்பு கொண்டு இருவினையும தன்னகத்தடக்கி உயிர் பிறக்குமென்றறிக.

"துய்ய வுடம்பளவு தொண்ணூற்று றங்குலியா, மெய்யெழுதீது நின்றியங்கு மெல்லதீதான் - வையதீ, திருபாலு நாற்பதோ டேழ்பாதி நீக்கிக், கருவாகு மாதாரங் காண்" என்பது இசைக்குப் பிறப்பிடமா யுள்ள ஆதாரம் உணர்த்துகின்றது :—

சரீரதீதளவு தன் கையால் தொண்ணூற்று றங்குலம். இதனுள் மேலே நாற்பதீதேழரை யங்குலமும கீழே நாற்பதீதேழரை யங்குலமும் விட்டு நடுநின்ற ஓரங்குலம் மூலாதாரம். இதன் மேலே நால்விரல் விட்டுப் பின்னுதாரம நின்றியங்குமெனக் கொள்க.

"ஆதாரம் பறறி யசைவ முதலெழுதீது, மூதார்ந்த மெய்யெழுதீது முன்கொண்டு - போதாரு, முந்தி யிடைவளியா யோங்குமிடை பிங்கலை யால், வந்துமே லோசையாம் வைப்பு", "ஐவகைப் பூதமு மாய சரீ ரதீது, மெய்பெற நின்றியங்கு மெய்யெழுதீதால் - துய்ய, ஒருநாடி நின்றி யங்கி யுந்திமே லோங்கி, வருமா லெழுதீதுடமபின் வந்து"

இனி ஆளதீதியாமாறுணர்தீதுகின்றது .—"மகரதீதி ஞெற்ருற சுருதி விரவும், பகருங் குறினெடில்பா ரிதீது - நிகரிலாதீ, தென்னு தெனு வென்று பாடுவரே லாளதீதி, மன்னுவிச் சொல்லின் வகை." முதலிற பாடுமிடதீது மகரதீதிஞெற்ருலே நாததீதை உச்சரிக்குமரபு பகரிற் பாரிதீது முற்கூறிய நாததீதினைத் தொழில்செய்யுமிடதீதுக் குற்றெழுதீ தாலும் நெட்டெழுதீதாலும் செய்யப்படும.

அவை அச்சு பாரணையென்று பெயர்பெறும். அசசுக்கு எழுவாய குற்றெழுதீது. பாரணைக்கு எழுவாய் நெட்டெழுதீது. அச்சு தாளதீதுடன் நிகழும். பாரணை கூதீதுடன் நிகழும

ஆளதீதிசெய்யுமிடதீதுதீ தென்னுவென்றும், தெனுவென்றும் இரண் டசையுங்கூட்டிதீ தென்னுதெனுவென்றும் பாடப்படும். இவைதாம் காட் டாளதீதி, நிறவாளதீதி, பண்ணுளதீதியென மூன்றுவகைப்படும்.

இவற்றுட் காட்டாளதீதி அச்சுடனிகழும். நிறவாளதீதி நிறம் குலை யாமற் பாரணையுடனிகழும். பண்ணுளதீதி பண்ணையே கருதி வைக்கப் படும்.

"குன்ருக் குறிலேந்துங் கோடா நெடிலேந்தும், நின்ருர்ந்த மந்நகரந் தவ்வொடு - நன்ருக, நீளதீதா லேழு நிதானதீதா னின்றியங்க, ஆளதீதி யாமென் றறி" என்பது ஆளதீதிக்கு இன்னும் படுவதோரிலக்கணம் உணர்தீதுகின்றது —குன்ருக்குறிலேந்தும் கோடாநெடிலேந்துமென்றது- குற்றெழுதீதாலும் நெட்டெழுதீதாலும் ஆளதீதி செய்யப்படும் எ - று. குற்றெழுதீதைந்தாவன :—அ இ உ எ ஒ , நெட்டெழுதீதைந்தாவன :— ஆ ா ஊ ஏ ஓ என இவை. நின்ருர்ந்த வென்றது - மெய்யெழுதீதாகிய பதினெட்டெழுதீதுள்ளும் மவ்வும் நவ்வும் தவ்வுமென மூன்றெழுதீது மல்லா மற்றை யெழுதீதுக்கள் ஆளதீசிக்கு வரப்பெரு எ - று. இம் மூவகைமெய்யினுள்ளும மவ்வினம் சுதீததீதிறகுரிதீது: நவ்வினம் சாளரதீதிற்குரிதீது , தவ்வினம் தமிழ்க்குரிதீது , விரவவும் பெறும்.

இங்ஙனம் மூலாதாரந்தொடங்கிய எழுதீதின் நாதம ஆளதீதியாய்ப் பின் இசையென்றும் பண்ணென்றும் பெயராம்; என்னை ? "பாவோ டூணத லிசையென்ருர் பண்ணென்ருர், மேவார் பெருந்தான மெட்டா னும் - பாவாய், எடுதீதன் முதலா விருநான்கும் பண்ணிப், படுதீதமை யாற பண்ணென்று பார்." பல இயற்பாக்களுடனே நிறதீதை இசைதீ தலால் இசையென்று பெயராம்.

பெருந்தானமெட்டினும கிரியைகளெட்டாலும் பண்ணிப்படுதீதலாற் பண்ணென்று பெயராயிற்று

பெருந்தானமெட்டாவன ' நெஞ்சும் மிடறும் நாக்கும் மூக்கும் அண் ணுக்கும உதடும பல்லும் தலையுமென இவை.

கிரியைகளெடடாவன —எடுதீதல் படுதீதல் நலிதல் கம்பிதம் குடி லம் ஒலி உருட்டு தாக்கு என இவை

இங்ஙனமபிறநது பண்ணப்படும் பண்ணும இசையுமாகிய இவற றைப் பயக்கும் மிடறு ஆகுபெயரான் மிடற்றுப்பாடற்காயிற்று.

27. தாழ்குரற் றண்ணுமையென்றது - தாழ்ந்த குரலினையுடைய தண்ணுமைக்கருவி முதலாயின வாசிதீதலுமென்க

அவையாவன .—பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மதீதளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவலயம, மொந்தை, முரசு, கண்விடுதூமபு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம, தகுணிசசம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறையெனத் தோலாற் செய்யப்பட்ட கருவிகள்.

என்னை ? "பேரிகை படக மிடக்கை யுடுக்கை, சீர்மிகு மதீதளஞ் சல்லிகை கரடிகை, திமிலை குடமுழாதீ தக்கை கணப்பறை, தமருகந் தண்ணுமை தாவி றடாரி, அந்தரி முழவொடு சந்திர வலயம், மொந்தை முரசே கண்விடு தூம்பு, நிசாளந் துடுமை சிறுபறை யடக்க, மாசி றகுணிச்சம் விரலேறு பாகம், தொக்க வுபாங்கந்[1] துடிபெரும் பறையென, மிக்க நூலோர் விரிதீதுரைதீ தனரே" என்ருராகலின்.

[1] முன்புகூறிய நாழிகைப்பறை இவ்விடதீதுக்கூறப்பட்டிலது.

இவை அகமுழவு அகப்புறமுழவு புறமுழவு புறப்புறமுழவு †பண்ணமைமுழவு நாண்முழவு காலைமுழவென எழுவகைப்படும்.

அவற்றுள் அகமுழவாவன —முன்சொன்ன [1]உதீதமமான மதீதளம் சல்லிகை இடக்கை கரடிகை பேரிகை படகம் குடமுழா வெனவிவை.

அகப்புறமுழவாவன —முன்சொன்ன மதீதிமமான தண்ணுமை தக்கை தகுணிச்சமுதலாயின.

புறமுழவாவன .—முன்சொன்ன அதமக்கருவியான கணப்பறை முதலாயின.

புறப்புறமுழவாவன .—முற்கூறப்படாத நெய்தறபறைமுதலாயின.

பண்ணமைமுழவாவன —முன்சொன்ன வீரமுழவு நான்கும். அவையாவன —முரசு நிசாளம் துடுமை திமிலையெனவிவை

நாண்முழவாவன —நாட்பறை, ஆவது நாழிகைப்பறை.

காலைமுழவாவன —முன்துடியென்றது.

இனி இவற்றுள், மதீதளம்'—மதீது ஓசைப்பெயர்; இசையிடனுகிய கருவிகட்கெல்லாம் தளமாதலான் மதீதளமென்று பெயராயிறறு.

இக்கருவி பலகூதீதுக்களுக்கு உரிதீதாகலானும் பாடலெழுதீதான் உள்ளே பிறதீதலானும முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறதீதலானும இதனை ‡நான்முகனெனபர்

சல்லிகையென்றது - சல்லென்ற ஓசையையுடைதீதாதலாற் பெற்ற பெயர்.

ஆவஞசியெனினும் குடுக்கையெனினும் இடக்கையெனினுமொக்கும், அதற்கு ஆவினுடைய வஞ்சிதீதோலைப் போர்தீதலால் ஆவஞ்சியென்று பெயராயிற்று, குடுக்கையாகவடைதீதலாற் குடுக்கையென்று பெயராயிற்று, வினைக்கிரியைகள் இடக்கையாற்செய்தலின் இடக்கையென்று பெயராயிற்று.

கரடி கதீதினுற்போலும், ஓசையையுடைதீதாதலாற் கரடிகையென்று பெயராயிற்று.

பிறவற்றையும் இங்ஙனம் உய்தீதுணரீந்துகொள்க.

இவற்றுள் முதலிற் கரங்கொள்வது மதீதளமாதலின் முதற்கருவியாயிறறு.

இடைக்கருவி சல்லி, இடைகொள வைதீததாகலின்.

கடைக்கருவி உடுக்கை, கடைக்கடடட்டுக்கு உரிதீதாகலின்

இங்ஙனமாகிய கருவிகட்கெல்லாம் முதலாதல் நோக்கிதீ தண்ணுமையொன்றனையுமே கூறினர்

27. ஆடலொடென்றது - அகக்கூதீதுப் புறக்கூதீதுப் பதினேராட லென்று சொல்லப்படாநின்ற ஆடலுடனே எ - று.

---

[1] "தரிதீத மதங்கமொடு மதீதளஞ் சல்லி, பெருதீத கரடிகையே பேரி - உரதீத, படகங் குடமுழவம் பாங்காய வேழும், அடைவே முதற் கருவி யாம்" என்பது கூத்தானந்தப்பிரகாசம்.

(பி - ம்.) † 'பன்மைமுழவு' ‡ 'நான்முகனுமென்றவாறு'

ஒடு. உடனிகழ்ச்சி, "ஒடுவென் கிளவி யுடனிகழ் வாகும்" என்ரு ராகலின்.

இச்சொல்லப்பட்டவற்றுடனே யென்றவாறு.

27 - 8. இவற்றி னிசைந்த. படுதீதென்றது—இச்சொல்லப்பட்ட கூத்துக்களுக்குச்சேரச்செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் சுவை பொருந்துமபடியும் புணர்க்கவல்லனுகி எ - று.

29. வரிக்கும் ஆடறகும உரிப்பொருளியக்கியென்றது - செந்துறை வெண்டுறை என்னப்படாநின்ற இருவகைப்பாடல்களுக்கும் உரிமைப் பொருளாயமைந்த இயக்கம் நான்கினையும் அமைதியென்றவாறு

30 தேசிகத்திருவின் ஓசை கடைப்பிடித்தென்றது - இயற்சொல் திரிசொல் திசைச் சொல் வடசொல் என்று சொல்லப்பட்ட சொறகள் இசைபூணும்படியைக் கடைப்பிடித்தறிநதென்றவாறு.

31 - 2. தேசிகத்திருவின் . அறிவினனுகியென்றது - இச்சொறக ளிற் புணர்ப்புண்ட இசைவேறுபாடுகளையெல்லாம் குற்றந்தீர உணர வல்ல அறிவினையுடையனுகி எ - று.

33. கவியது குறிபபுமென்றது - இயறபுலவன் நினைந்த கோட்பாடு மென்க.

ஆடற் ருெகுதியுமென்றது - ஆடலாசிரியன் ாடும மேல்வரவுகளின் தொகுதியும் எ - று.

34. பகுதிப்பாடலுமென்றது - இவறறின்பகுதிக்கு அமைந்த பாட லும் என்றவாறு.

கொளுத்துங் காலையென்றது - இக்கூத்துக்களை ஆசிரியன் குறிப்புக் கும் பாடலுள்ளிட்டவறறுக்கும் சேரவியற்றுமிடத்தென்றவாறு.

35 - 6. வசையறுகேள்வி . .. இசையோன்ருனுமென்றது - இச்சொல் லப்பட்டவற்றைக் குறறந்தீர்ந்த நூல்வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்ல பாடலாசிரியனுமென்க.

இசையுடன்படுத்து இயக்கிக் கடைப்பிடித்து உணர்ந்த அறிவின னுகி விரிக்கும் இசையோனென்க

[கவிஞன் அமைதி]

37 - 44. இமிழ்கடல் நன்னூற்புலவனும்

37 - 8. இமிழ்கடல்.. ...தன்மையனுகியென்றது - ஆரவாரத்தை யுடைய கடல்சூழ்ந்த நிலத்திலே வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும் வேங்கடம் குமரி தீம்புனற்பௌவமெனத் தமிழ்நாட்டிற்கு எல்லைகூறப் பட்ட தமிழ்த்தேசத்தாரறிய மூன்றுதமிழும் போமென்னும் தன்மையை யுடையனுகி எ - று

39 - 40 வேத்தியல்.....பிடித்தென்றது - வேத்தியலென்றும் பொது வியலென்றும் கூறப்பட்ட இரண்டு கூறுபாட்டினையுடைய நாடகநூல் நன்ருகக் கடைப்பிடித்து எ - று.

வேதீதியல் அகம், பொதுவியல் புறமென்பாரும், பிறிதுகூறுவாரு முளர். அவை முடிந்த நூல்களிற் கண்டுகொள்க.

41 - 2. இசையோன்... .அதுபட வைதீதென்றது - இசைப்புலவன் ஆளதீதிவைதீத பண்ணீர்மையை முதலும் முறையும் முடிவும் நிறையும் குறையும் கிழமையும வலிவும் மெலிவும் சமனும் வரையறையும் நீர்மையு மென்னும் பதிஞெருபாகுபாட்டினுனும் அறிந்து அறிந்தவண்ணம் அவன் தாள நிலையில் எய்தவைதீத நிறம் தன் கவியினிடதீதே தோன்ற வைக்கவல்லனுய் எ - று.

43 - 4. மாற்ருர் செய்த.....நன்னூற் புலவனுமென்றது - பகைவ ராற செய்யப்பட்ட வசையின் அளவறிந்து அவை தோற்ருதபடியிலே வசையின்மொழிகளான் நாடகக்கவி செய்யவல்ல நல்ல நூலவல்ல புல வனும் எ - று

" இன்ன னல்லோன் செய்குவ னுயிற், றேற்ரு மாந்த ராரியம் போலக், கேட்டார்க் கெலலாம் பெருநகை தருமே " என்ருர்.

தன்மையனுகிக் கடைப்பிடிதீது உணர்ந்து வைதீது அறிந்து தொலவில்லாத புலவனுமென்க.

[தண்ணுமையோன் அமைதி]

45 - 55 ஆடல் பாட லிசையே முதல்வனும்

(இ - ள்) எல்லாக் கூதீதுக்களும எல்லாப்பாட்டுக்களும் எல்லா இசைகளும் வடவெழுதீதொரீஇ வந்த எழுதீதானே கட்டப்பட்ட வாக்கி யக்கட்டீனைக் கூறுபாடுகளும் எல்லாப்பண்களும் இருவகைதீதாளங் களும் எழுவகைதீ தூக்குக்களும் இவறறின் குறறங்களும் இயற்சொல் முதலிய நால்வகைச் சொற்களுமென்று சொல்லப்பட்டனவற்றை நுண் ணிதாக உணர்ந்து ஓரோர் உருவை இரட்டிக்கிரட்டி சேர்தீதவிடதீது நெகிழாதபடி நிரமப நிறுதீதவும் அவ்விடதீதுப் பெறும் †இரடடியைப் பாகவுருவானவழி நிறகுமானம் நிறுதீதிக் கழியுமானம் கழிக்கவும் வல்லனுய் இப்படி நிகழ்நத உருக்களில் யாழ்ப்பாடலும் குழலின்பாடலும் கண்டப்பாடலும் இயைநது நடக்கின்றபடி கேட்போர் செவிக்கொள்ள அமைந்த காரணதீதாற் குறியறிந்து சேரவாசிதீது மற்றைக் கருவிகளிற் குறைநிரப்புதலும மிகுதியடக்குதலும் ஆக்குமிடதீதும அடக்குமிடதீதும் இசையில் இரந்திரந்தோன்ருதபடியே செய்தலும் செய்யுமிடதீதுக் கைதீ தொழில் அழகுபெறச் செய்து காட்டலும் வல்லனுய் அழகுதக்க தண் ணுமைக் கருவியினையும் அரிய தொழிலினையுமுடைய ஆசிரியனுமென்ற வாறு.

இது பொழிப்புரை.

45. ஆடலென்றது - எல்லாக்கூதீதுக்களும் எ - று.

பாடலென்றது பண்ணல் முதலிய எல்லாப் பாடல் இயல்பும் எ - று.

இசையென்றது - நரப்படைவாலுரைக்கப்பட்ட பதிஞேராயிரதீதுதீ தொள்ளாயிரதீதுதீ தொண்ணூற்ருென்ருகிய ஆதியிசைகளும் எ - று.

(பி - ம்.) † ' இரட்டியே யாய்ப்பாகவுரு ', ' இரட்டியை ஒப்பாக '

அவையாவன —"உயிருயிர் மெய்யள வுரைத்தவைம் பாலினும், உடறமி ழியலிசை யேழுடன் பகுத்து, மூவேழ் பெய்தந்.....தொண்டு மீண்ட பன்னீ ராயிரம், கொண்டன ரியற்றல் கொளவல்லோர் கடனே" என்னும் சூத்திரத்தால் உறழ்ந்து கண்டுகொள்க.

தமிழென்றது - வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தானே உறழ்ந்து கட்டப்பட்ட வாக்கியக்கூறுகளும், இயலிசைநாடகமென்று சொல்லப் பட்ட மூவகைத் தமிழ்களும் எ - று.

46. பண்ணென்றது - நரப்படைவால் நிறந்தோன்றப் பண்ணப் படாநின்ற பண்ணும் பண்ணியறறிறமும் திறமும் திறத்திறமும் எ - று.

பாணி யென்றது - இருவகைத்தாள விகற்பங்களும் எ - று.

தூக்கென்றது - செந்தூக்கு முதலாய ஏழு தூக்குக்களும் எ - று.

மூடமென்றது - இவறறின் குறறங்களும் எ - று.

47. தேசிகமென்றது - இயற்சொல் முதலிய நான்கு சொற்கூறுய சொற்பிரயோகமும் எ - று

என்றிவையாசினுணர்ந்தென்றது - என்று சொல்லப்பட்ட ஒன்பதும் இலக்கணவழியே நுண்ணிதாக அறிந்து எ - று

ஆசு - சிறுமை.

ஆசின்றென்பது பாடமாயிற் குற்றமின்றியுணர்ந்தென்க : என்னை ? "ஆசே சிறுமையுங் குற்றமு மாகும்" (திவாகரம்) என்றுராகலின். இன்றியென்றது இன்றுயிற்று ; செய்யுளாதலின்.

48 - 9. கூடை நிலத்தை..... வாங்கியென்றது - ஓர் உருவை இரட்டிக் கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரம்ப நிறுத்தவும் அவ் விடத்துப்பெறும் இரட்டியைப் பாக உருவானவழி நிற்குமானம் நிறுத்திக் கழியுமானம் கழிக்கவும் வல்லனுய் எ - று.

50 - 52. வாங்கிய வாரத்து.....சேர்த்தியென்றது - இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலிசையும் கண்டப்பாடலும் இயைந்து நடக்கின்றபடி கேட்போர் செவிக்கொள்ளத் தண்ணுமைக் கருவியமைந்த கரணத்தாற் குறியறிந்து சேரவாசித்து எ - று.

53. ஆக்கலாவது - மற்றைக்கருவிகளிற் குறையை நிரப்புதல்.

அடக்கலாவது - மற்றைக்கருவிகளின் மிகுதியை அடக்குதல்.

மீத்திறம் படாமையாவது - ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் இரந் திரம் தெரியாமற் செய்வதென்க.

54. சித்திரக்.....செலுத்துமென்றது - இவ்வனைத்தும் செய்யுமிடத் துக் கைதொழில் அழகுபெறச் செய்து காட்டும் எ - று.

55. அத்தகு.. ...முதல்வனுமென்றது - இச்சொல்லப்பட்ட கூறுகளில் ஒன்றும் குறைவின்றியேயிருக்கும் தண்ணுமைக்கருவியாசிரியனும் எ-று.

உணர்ந்து மிகுத்து வாங்கிச் சேர்த்திச் செலுத்தும் தண்ணுமை முதல்வனுமென்க.

[குழலோன் அமைதி]

56 - 69. சொல்லியவியல்பிற் குழலோன்ருணும்

56. சொல்லியவியல்பினென்றது - நூல்களிற்சொன்ன முறைமை யாலேயென்க.

56 - 7. சித்திர வஞ்சனை.....அறிந்தென்றது - சித்திரப்புணர்ப்பும் வஞ்சனைப்புணர்ப்புமென்று சொல்லப்பட்ட இரண்டு கூற்றினையும் அறிந் தென்க.

இவற்றுட் சித்திரப்புணர்ப்பாவது .—இசைகொள்ளும் எழுத்துக் களின் மேலே வல்லொற்று வந்தவழி மெல்லொற்றுப்போலப் பண்ணீர்மை நிறுத்தல்.

வஞ்சனைப்புணர்ப்பாவது —இசைகொள்ளா எழுத்துக்களின்மேலே வல்லொற்று வந்தவழி மெல்லொற்றுப்போல நெகிழ்த்துப்புணர்த்தல்.

57. புணர்ப்போன்பண்பினென்றது - பாடலாசிரியனையொத்த அறி வினை யுடையனுகியென்க.

58. வர்த்தனை.....பெயதாங்கென்றது - வங்கியத்து விரலுளர்ந் தூதுந் துளைகள் தர்ச்சனி முதலாக விடடுப்பிடிப்பது ஆரோகணமாதலா னும் கனிட்டன் முதலாக விடடுப்பிடிப்பது அவரோகணமாதலானும் இரண்டுகூறும் இப்படிச்செய்தல் வர்த்தனையாகலான் இப்படியால் [1]நூற்று மூன்று பண்ணீர்மைகளையும் தந்நிலைகுலையாமற் காட்டவல்லனெனென்க.

[தர்ச்சனி - சுட்டுவிரல். கனிட்டன் - சிறுவிரல்] ஆங்கு - அவ்விடத்து.

59 - 60. ஏற்றிய குரலிளி..... . .. ... உணர்வின னுகியென்றது - பதினுற்கோவையினிடத்துக் குரனரம்பு இரட்டிக்கவரும் அரும்பாலையை யும் இளிநரம்பு இரட்டிக்கவரும் மேறசெம்பாலையையும், இவைபோல அல்லாத பாலைகளையும் இசைநூல்வழக்காலே இணைநரம்புதொடுத்துப் பாடும் அறிவினையுமுடையனுயென்க

61. பண்ணமை... . ... . அறிந்தென்றது - பண்ணுதல் அமைந்த முழவின் கண்ணைறியினையறிந்தென்றவாறு.

62. தண்ணுமை.. .. . . .. பொருந்தியென்றது - தண்ணுமை முதல் வனுடன் பொருந்தியென்றவாறு.

தன்னெடுமென்ற உம்மையாற பொருந்துமிடமும் பொருந்தியென்க.

63. வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்கென்றது... ..... பட்டடை - நரமபுகளில் இளிக்குப் பெயர், என்னை? எல்லாப்பண் ணிற்கும் அடிமையாதலின். வண்ணம் - நிறம். இதனை யாழ்மேல் வைத்தென்க ஆங்கு, அசை. இளிக்கிரமத்தாலே பண்களை யாழ்மேல் வைத்தெனக்கூட்டினும் அமையும்.

64 இசையோன்.. .. . .இயறகையென்றது - அங்ஙனம்வைத்து அதன்வழியே இசைக்காரன் பாடிய பாட்டினியல்பையென்க.

---

[1] 3 : 72 - 8, உரையைப் பார்க்க.

65 வந்தது வளர்தீதென்றது - பாடுகின்ற பண்வரவுகளுக்குச் சுரம் குறைவுபடாமை நிறுதீதியென்க.

வருவதொற்றியென்றது—அந்தப் பண்ணுக்கு அயல்விரவாமல் நோக்கி யென்க.

ஒற்றல் - நினைதல்.

66. இன்புற வியக்கியென்றது - வண்ணம் முதலாகக் காட்டப்பட்ட பாடலில் இயன்ற †அழகெல்லாம் நிரம்பக்காட்டியென்க.

இசைபட வைதீதென்றது - முற்கூறிய முதலும் முறையுமுதலாய பண்ணிலக்கணம் பதினென்றையும் நிரம்பவைதீதென்க.

67. வார... ..வளர்தீதென்றது - முதனடை வாரம் கூடை திரளென்று சொலலப்படும் இயக்கம் நான்கினும் முதனடை மிகவும் தாழ்ந்த செல வினை உடைதீதாகலானும், திரள் மிக முடுகிய நடையினை உடைதீதாக லானும், இவைதவிர்ந்து இடைப்பட்ட வாரப்பாடல் சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் உடைதீதாகலானும், கூடைப்பாடல் சொற்செறிவும் இசைச்செறிவும் உடைதீதாகலானும் சிறப்புநோக்கி அவ்விரண்டினுள் ளும வாரப்பாடலை அளவுநிரம்ப நிறுதீத வல்லனுயென்க, எனவே கூடைப்பாடலும் அமைவதாயிற்று.

நிலம் - இடம்.

67 - 8. ஆங்கு.. .. . . எழுதீதாகவென்றது - பாடலினிடதீதுச் சொல்நீர்மைகளின் எழுதீதுக்கள் சிதையாமலே எழுதீதெழுதீதாக இசைக்கும் குழலோனென்க.

அன்றியும் ச ரி க ம ப த நி யென்பாருமுளர்.

69. வழுவின்றிசைக்கும் குழலோன்றனுமென்றது - இச்சொல்லப் பட்ட இயல்பகளை இலக்கணப்படியில் வழுவாமல் வாசிதீதுக்காட்டவல்ல வங்கியதீதானுமென்க.

அறிந்துமயலறப்பெய்துஉணர்வினனுகி அறிந்து பொருந்திவைதீது வளர்தீது ஒற்றி இயக்கி வைதீதுப் பார்தீது இசைக்கும் குழலோனென்க.

[யாழாசிரியன் அமைதி]

70 - 94 ஈரேழ் தொடுத்த புலமையோனுடன்

70 - 71 ஈரேழ் தொடுதீத .. .. வேண்டியென்றது - ஆயப் பாலையாய் நின்ற பதினுற்கோவை, கோலினிது செப்பமுடைதீதாய்ப் பெண்டிர்க்குரிய தானமுடைய பாடலியல்பொதீது அமைநத சிறப்புடைதீ தாகலான் இதிலே செம்பாலை படுமலைப்பாலை செவ்வழிப்பாலை அருமபாலை [1] கோடிப் பாலை விளரிப்பாலை மேறசெம்பாலையெனப்பட்ட ஏழுபாலையினை யும் இணை நரம்புதொடுதீது நிரம்ப நிறுதீதிக்காட்டல் காரணமாகவென்க.

72 - 8. வன்மையிற் கிடந்த..... .... சேரவென்றது.

---

[1] இதனை இக்காலதீதுக்கொடிப்பாலையென வழங்குகின்றனர்.

(பி - ம்.) † 'வழக்கெல்லாம்'

" தார பாகமுங் குரலின் பாகமும், நேர்நடு வண்கிளை கொள்ள நிற்ப, முன்னர்ப் பாகமும் பின்னர்ப் பாகமும், விளரிகுர லாகு மென்மனுர் புலவர் " என்னுஞ்சூத்திரத்தின் விதிபற்றி வட்டப்பாலையின்முடிவுதான மாய் வலிந்த நிலைமையினையுடைய தாரம்பெறற இரண்டலகில் ஓரலகை யும் இப்பாலையின் முதல்தானமாய் மெலிவினிற்கும் குரல்நரம்புபெற்ற நாலலகில் இரண்டலகையும் தாரநரம்பில் அந்தரக்கோலிலே கைக்கிளை யாக நிறுத்தத் தாரந்தான் கைக்கிளையாயிற்று. அந்த நரம்பில் ஒழிந்த ஓர் அலகையும் பண்டை விளரியிலே கூட்ட அவ்விளரி துத்த நரம்பாயிற்று. இப்படிப் பன்னிருகால் திரிக்கப் பன்னிருபாலையும் பிறக்கும்.

பன்னிருபாலையினுரு தொண்ணூற்றென்றும் பன்னிரண்டுமாய்ப் பண்கள் நூற்றுமூன்றுதற்குக் காரணமாமெனக்கொள்க.

இவ்விடத்துத் தாரநரம்பின் அந்தரக்கோலத் தாரமென்றுர், "தன் னமுந் தாரமுந் தன்வழிப் படா" என்னுஞ்சூத்திரத்தாலெனக்கொள்க.

79. ஏனை.....வழிச் சேரவென்றது - இதனைப் பெண்டிர்க்குரிய தானமாகிய பதினுற்கோவையிலே பொருந்தக்கூட்டவேண்டுமென்றவாறு கூட்டும்படி —

80 - 81. மேலது.....செம்பாலையாயதென்றது - உழைமுதற் கைக் கிளை இறுதியாக மெலிவுநான்கும் சமம ஏழும வலிவு மூன்றுமாய் உழை முதலாகச் செம்பாலையாயதெனக.

82 - 3. இறுதி யாதி ..நீங்காதென்றது - தாரமுதலாகப் பெறு முறையாய் வந்தபடியே நீங்காமலென்றவாறு.

84 - 5. படுமலை . ...திரிந்தபினென்றது - கைக்கிளைகுரலாகப் படு மலைப்பாலையும், துத்தம் குரலாகச்செவ்வழிப்பாலையும், குரல்குரலாக அரும்பாலையும் தற்கிழமை திரிந்தபின் என்க.

அரும்பாலைக்குக் குரல் நரம்பு இரட்டித்த பெற்றித்தென்க.

86 - 9. முன்னதன் .....கிடக்கையினென்றது - முன்பிற்படியே தாரம் குரலாகக் கோடிப்பாலையும், விளரி குரலாக விளரிப்பாலையும், இளி குரலாக மேறசெம்பாலையுமாய் மேற்செம்பாலை இளிநரம்பு இரட்டித்த நிலைமையினையுடைத்தாய் இப்படிச்சமைந்த பதினுற்கோவைப்பாலை நிலையிலென்றவாறு.

90 இணைநரம்பு. ...கொண்டாங்கென்றது - இப்பதினுறகோவைப் பாலைநிலையினும் பண்ணின்றநிலையினும் இரட்டித்த குரல்குரலாகிய அரும்பாலையும் இளிகுரலாகிய மேறசெம்பாலையும்போல் அல்லாதன ஐந்து பாலையும் உழைகுரலாகச் செம்பாலைக்கு உழைபெய்தும் கைக்கிளை குரலாகப் படுமலைக்குக் கைக்கிளைபெய்தும் துத்தம் குரலாகச் செவ்வழிக் குத் துத்தம்பெய்தும் தாரம் குரலாகக் கோடிப்பாலைக்குத் தாரம்பெய்தும் விளரிகுரலாக விளரிப்பாலைக்கு விளரிபெய்தும் பாடப்படுமென்றவாறு.

91 - 2. யாழ்மேற் பாலை... ..முறை மெலியவென்றது - யாழினிடத்து அரும்பாலைமுதலாயின இடமுறைமெலியவும் குழலினிடத்துக் கோடிப் பாலை முதலாயின வலமுறைமெலியவும் பாடப்படுமென்றவாறு.

93 - 4 வலிவு மெலிவும்.....உடனென்றது - இப்படியால் வலிவும் மெலிவும் சமனுமெனபபடாநின்ற தானநிலையினையுடைய இசைக்கூறு பாடுகளுக்கெல்லாம் நரப்படைவு கெடாமலும் பண்ணீர்மை முதலாயின குன்றுமலும புணர்க்கவல்லனுய் அப்புணர்ப்பிற்கு அமைந்த எழுத்துக் களால் இசைசெய்யவல்ல யாழாசிரியனுமென்றவாறு

(71) நிறுத்தல்வேண்டிப் (94) பொலியக்கோத்த புலமையோனென்க.

[அரங்கின் அமைதி]

95 - 113 எண்ணிய நூலோர் அரங்கத்து

95 - 6. எண்ணிய நூலோர்.....கொண்டென்றது - எண்ணப்பட்ட சிற்பநூலாசிரியர் வகுத்த இயல்புகளின் வழுவாத வகை அரங்குசெய் தறகு நிலக் குற்றங்கள் நீங்கினவிடத்திலே நிலம் வகுத்துக்கொண் டென்க.

மண்ணகநிலமாவது :—" தந்திரத் தரங்கிங் கியற்றுங் காலை, அற னழித்தியற்று வழகுடைத் தாகி, நிறைகுழிப் பூழி குழிநிறை வாற்றி, நாற்றமுஞ் சுவையு மதுரமு மாய்க்கனம், தோறறிய திண்மைச் சுவட துடைத்தாய், என்புமி கூர்ங்கல் களியுவ ரீனை, துன்ப நீறு துகளிவை யின்றி, ஊரகத் தாகியூமான் பூண்ட, தேரகத் தோடுந் தெருவுமுக நோக்கிக், கோடல் வேண்டு மாடரங் கதுவே " என்பது, தந்திரவழி அரங்கு இவ்வுலகத்துச் செய்யுமிடத்துத் [1]தெய்வத்தானமும் பள்ளியும் அந்தணரிருக்கையும் கூபமும் குளனும் காவுமுதலாகவுடையன நீங்கி அழியாத இயல்பினையுடைத்தாய் நிறுக்கப்பட்ட குழிப்பூழி குழிக்கொத்துக் கல்லப்பட்ட மண் நாறறமும் மதுர நாறி இரதமும் மதுரமாகித் தானும் திண்ணிதாய் என்பும் உமியும பரலும் சேர்ந்த நிலம் களித்தரை உவர்த் தரை ாலைத்தரை பொல்லாச்சாம்பல்தரை பொடித்தரை என்று சொல்லப் பட்டன ஒழிந்து ஊரின் நடுவணதாகித் தேரோடும் வீதிகளெதிர்முக மாக்கிக் கொள்ளல்வேண்டுமென்க.

நிலநதான் வன்பால் மென்பால் இடைப்பாலென்று மூன்றுவகைப் படும் அவற்றுள்,

வன்பாலாவது குழியின்மண் மிகுவது,
மென்பாலாவது குறைவது,
இடைப்பாலாவது ஒப்பு;
ாண்டு இவை பெரும்பான்மையாற் கொள்ளப்படும்.

---

[1] " ஆடலும் பாடலுங் கொட்டும பாணியும், நாடிய வரங்கு சமைக் குங் காலைத், தேவர் குழாமுஞ் செபித்த பள்ளியும, புள்ளின் சேக்கையும் புற்று நீங்கிப், போர்க்களி யானைப் புரைசா ராது, மாவின் பந்தியொடு மயங்கல் செய்யாது, செருப்புகு மிடமுஞ் சேரியு நீங்கி, நுண்மை யுணர்ந்த திண்மைத் தாகி, மதுரச் சுவைமிகூஉ மதுர நாறித், தீரா மாட்சி நிலத்தொடு பொருத்திய, இத்திறத் தாகு மரங்கினுக் கிடமே."

அதுவேயென்ற இலேசினனே துவர்ப்புப் பயமும், புளிப்பு நோயும், காழ்ப்பப் பசிநீடுதலும, கைப்புக் கேடும், உவர்ப்புக் கலக்கமும் பண்ணு மாதலான் நீக்கப்பட்டன

என்னை ? " உவர்ப்பிற கலக்கமாங் கைப்பின்வருங் கேடு, துவர்ப்பிற் பயமாஞ் சுவைகள் - அவற்றிற், புளிநோய் பசிகாழப்புப் பூங்கொடியே திதீதிப், பளிபெருகு மாவ தரங்கு " என்ருர் பரதசேனுபதியார்.

இதனுள் நாற்றமென்பன கொள்ளிலையும் செந்நெல்லும் சண்பகமும் சுரபுன்னையுமெனவிவை ஒழிந்தன தீமைப்பால.

இங்ஙனம் ஒரு வகையான் அரங்கிற்கு நிலம் வகுதீதுக்கொண் டென்க.

97 - 100. [1] புண்ணிய.. . விரலாகவென்றது - பொதியின்மலைமுத லாய புண்ணியவரைப்பக்கங்களிலே நெடிதாகி உயர வளர்ந்த மூங்கிலிற் கண்ஞெடு கண்ணிடை ஒருசாணுக வளர்ந்தது கொண்டு நூல்களிற் சொல்லுகின்றபடியே அரங்கஞ்செய்ய அளக்குங்கோல் உதீதமன்கைப் பெருவிரலில் இருபதீதுநாலுகொண்டது ஒரு கோலாக நறுக்கியென்க.

என்னை ? " ஒதீத வணுமுத லுயர்ந்துவரு கணக்கின், உதீதமன் பெருவிர லிருபதீது நாலுள, கோலே கோடல் குறியறிந் தோரே " என்ருராகலின்.

இதனுள் அணுமுதற் பெருவிர லளவு உயர்ந்துவருமாறு : அணு எட்டுக்கொண்டது தேர்தீதுகள் , தேர்தீதுகள் எட்டுக்கொண்டது இம்மி ; இம்மி எட்டுக்கொண்டது எள்ளு , எள்ளு எட்டுக்கொண்டது நெலலு , நெல்லு எடடுக்கொண்டது பெருவிரலெனக்கொள்க

உதீதமராவார் கழிய நெடுமையும் கழியக் குறுமையுமில்லோர்.

101 - 2 எழுகோல்... .. .. . உறுப்பினதாகியென்றது - இக்கோலால் எழுகோல் அகலமும் எண்கோல் நீளமும் ஒருகோற குறட்டுயரமும உடையதாயென்க

என்னை ? " அக்கோ லேழகன் றெட்டு நீண்டும், ஒப்பா லுயர்வு மொரு கோ லாகும், நற்கோல் வேந்த னயக்குறு வாயில, முக்கோ ருறு முயரவு முரிதீதே " என்ருர் செயிற்றியனுர் , " அக்கோ லொருகோ லளவுறக் கல்வி, மிக்க கம்மியர் வடகலை விதிமுறைக், கூறின ரன்றியுங் குறிவகைக் கேறறன, ஏற்கச் செய்க வியல்புணர்ந் தோரே " எனக்கூறினுருமுளர்

103 - 6. உதீதரப் பலகை.. ..... அரங்கிலென்றது - தூணதீதுக்கு மீது வைதீத உதீதரப்பலகைக்கும அரங்கினிடதீது அகலதீதுக்கிட்ட பலகைக்கும் இடைநின்ற நிலம் நான்கு கோலாக உயரங்கொண்டு இதீ தன்மைய வாய அளவுக்குப் பொருந்த வகுதீத வாயில் இரண்டினையுடைதீ தாகச் செய்யப்பட்ட அரங்கினிடதீதென்க.

---

[1] " அரங்கி னுயரமு மகலமு நீளமும், பொருந்த நாடி யுரைக்குங் காலைப், பெருந்தண் மால்வரைச் சிறுகழை கண்ணில், கண்ணிடை யொரு சாண் வளர்ந்தது கொண்டே, இருபதீது நால்விரற் கோலள வதனுல், எழுகோ லகலதீ தெண்கோ னீளதீ, தொருகோ லுயரதீ துறுப்பின தாகி, உதீதரப் பலகையோ டரங்கின் பலகை, வைதீத விடைநில நாறகோ லாகப், பூதரை யெழுதி மேனிலை வைதீது, நந்தி யென்னுந் தெய்வமு

105. வாயிலிரண்டென்றது - அரங்கிற்கு உட்புகவும் புறப்படவும் சமைத்த வாயிலெனக்கொள்க.

'ஏற்ற' என்றதனுல் கரந்துபோக்கிடனும், கண்ணுளர் குடிஞைப் பள்ளியும், அரங்கமும, அதனெதிர் மன்னர் மாந்தரோடிருக்கும் அவை யரங்கமும், இவறறினேச்சூழ்ந்த புவிநிறைமாந்தர் பொருந்திய கோட்டி யும் முதலாயின கொள்க.

106. தோற்றியவரங்கென்றது - இப்படியாகச் சமைக்கப்பட்டு நூல் சொல்லுகின்றபடியெல்லாம் தோற்றியவரங்கென்க.

106 - 7. தொழுதனரேத்த..... .. . .மேனிலைவைதீ தென்றது— அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்று சொல்லப்பட்ட [1] நால்வகைவரு ணப்பூதரையும் எழுதி மேனிலதீதே யாவரும் புகழ்ந்து வணங்க வைதீ தென்க.

என்னே? "கூறிய †வுறுப்பிற் குறியொடு புணர்ந்தாங், காடுநர்க் கியற்று மரங்கினெற்றிமிசை, வழுவில் பூத நான்கு முறைப்பட, எழுதின ரியற்ற லியல்புணர்ந் தோரே" (சீவக 672, ந. மேற்) என்ருராகலின்.

இப்பூதநான்கின் உண்டியும் அணியும் ஆடையும் மாலையும் சாந்த மும் பொழுதும் செயலுமுதலியவெல்லாம் **அழற்படுகாதைக்கண்ணே விரித்துக்கூறுதும்**

108. தூணிழற் . ..எடுத்தாங்கென்றது - தூண்களின் நிழல் நாயகப் பதியின்கண்ணும் அவையின்கண்ணும் படாதபடி மாட்சிமைப்பட்ட நிலவிளக்கு நிறுத்தியென்க.

என்னே? "விளக்கியல் வனப்பும்" என்ரு ராகலின்.

109 - 10. ஒருமுகவெழினியும்... ....வகுத்தாங்கென்றது - இடத்தூணிலையிடத்தே உருவுதிரையாக ஒருமுகவெழினியும் இரண்டு வலத்தூணிடத்தும் உருவுதிரையாகப் பொருமுகவெழினியும், மேற் கட்டுத்திரையாகக் கரந்துவரலெழினியும் செயற்பாட்டுடனே வகுத் தென்க.

மேற்கட்டுத்திரையாய்நிற்பது ஆகாயசாரிகளாய்த் தோன்றுவார்க் கெனக் கொள்க, என்னே? "முன்னிய வெழினிதான் மூன்று வகைப் படும்" என்ருர் **மதிவாணனுர்**, "அரிதரங்கிற, செய்தெழினி மூன் றமைத்துச் சித்திரத்தாற் பூதரையும், எய்த வெழுதி யியற்று" என்ருர் **பரதசேனுபதியாரும்.**

111. ஓவிய விதானத்தென்றது - சித்திரவிதானத்தையுமுடைத்தா யென்க.

மமைத்துத், தூணிழற புறப்பட மாண்விளக் கெடுத்து.. .... கோவும் யானையுங் குரங்கும பிச்சனுமு, பாவையும் பாங்குடைப் புருடா மிருகமும, யாவையு மெழுதி யிந்நிலம் விளங்கப், பாவையர்க் கியற்றுவ தரங்கெனப் படுமே" என்ருர் **சுத்தானந்தப் பிரகாசத்திலும்.**

[1] நால்வகைவருணப்பூதங்கள் 1. வச்சிரதேகன், 2. வச்சிரதந்தன், 3. வருணன், 4. இரதிதகேசுவரன். (பி - ம்.) † 'வரங்கிற்'

111 - 2. உரைபெறு..... .. ..நாற்றியென்றது - சந்திரன் குரு அங்காரகனென்னும் வெண்ணீர்மை பொன்னீர்மை செந்நீர்மையென்னும் புகழ்மையைத் தமக்குரிமையாகப்பெற்ற முத்துமாலைகளாற் †சரியும் தூக்கும தாமமுமாக நாற்றியென்க.

113 விருந்துபட .. ..அரங்கத்தென்றது - புதுமையுடைத்தாகச் சமைத்த அரிய தொழிலையுடைய அரங்கின்கண் என்க.

வகுத்தனர்கொண்டு வைத்து எடுத்து வகுத்து நாற்றிக்கிடந்த அரங்கமென்க.

[தலைக்கோல் அமைதி]

114 - 28 பேரிசை மன்னர் . வைத்தாங்கு

114 - 5. பேரிசை மன்னர்.....கொண்டென்றது - பெரிய புகழையுடைய அரசர்பொருதுடைந்து புறங்கொடுத்தவழிப்பெற்ற அழகிய இயல்பினையுடைய வெண்கொற்றக் குடைக்காம்பைத் தலைக்கோலாகக்கொண்டென்க.

இனி மாற்றுர் எயிற்புறத்து மிளைக்கண் வெட்டிக்கொண்ட மூங்கிலென்றுமாம்.

இது கூறிற்று, வேத்தியலும் பொதுவியலுமாகலான்.

இவற்றுட் பொதுவியற்கு மலையின் மூங்கிலுமாம்.

116 - 7. கண்ணிடை.. .. .. போக்கியென்றது - கண் தோறும் நவமணிகளாற்கட்டி இடைநிலங்களைச் சாம்பூநதமென்னும் பொற்றகட்டாற் செறிய மலக்கமாகக் கட்டியென்க.

மலக்கம் - மாறு.

என்னை? "புண்ணியமால் வெற்பிற் பொருந்துங் கழைகொண்டு, கண்ணிடைக் கண்சாண் கனஞ்சாரும் - எண்ணிய, நீளமெழு சாண் கொண்டு நீராட்டி நன்மைபுனை, நாளிற் றலைக்கோல நாட்டு", "ஆவதகத்தியனுர் சாபத்தா னுன்மூங்கில்" என்றுர் **பரதசேனுபதியார்.**

118 - 20. காவல் வெண்குடை.. .. ...தலைக்கோலென்றது - அரசன் கோயிலிலே காப்பமைத்திருத்தி இந்திரன்மகன் சயந்தனுக நினைத்து மந்திர விதியாலே பூசித்து வழிபடும் இத்தலைக்கோலையென்க.

சயந்தனுதல் முன்னர் (3 . 1-7, உரை)க் கூறிப்போந்தாம்.

121 - 2. புண்ணிய நன்னீர்.....மாலையணிந்தென்றது - நாடகக் கணிகை தலைக்கோல் கொள்ளும் ஞான்று புண்ணிய நதிகளின் நீரைப் பொறகுடத்திலே முகந்துவந்து இத்தலைக்கோல நீராட்டிப் பின்பு மாலைகளுஞ் சூட்டியென்க.

முன்கூறிப்போந்த ஆடலாசிரியன் முதலாயினேர் அரங்கத்தின் கண்ணே இத்தலைக்கோல வைத்துப் பொற்குடத்தால் நீராட்டியபின் மாலைசூட்டியென இயைக்க.

(பி - ம்.) † 'சல்லியும்'

123. நலந்தருநாளாலென்றது - இதற்குப் பொருந்திய நல்ல நாளினுலென்க.

அவையாவன —பூராடம் கார்த்திகை பூரம் பரணி இரேவதி திருவாதிரை அவிட்டம் சித்திரை விசாகம மகம் எனவிவை.

நாளென்னுது 'நலந்தருநாள்' என்ற இலேசினுல் இராசி முதலியனவும் கொள்க.

இராசிகளாவன :—இடபம் சிங்கம் துலாம் கற்கடகம் விருச்சிகம் மிதுனம் எனவிவை.

என்னை? "பூராடங் கார்த்திகை பூரம பரணிகலம, சீரா திரையவிட்டஞ் சித்திரையோ - டாருமுற, மாசி யிடப மரிதுலை வான்கடகம், பேசிய தேண் மிதுனம் பேசு" என்ருர் மதிவாணனுரும்.

நாளால் நீராட்டியென முன்னுஞ்சேர்க்க.

123 - 4. பொலம்பூண்... .. ..கொண்டென்றது - பொன்னுற் செய்த பூணையும் பட்டத்தினையுமுடைய பட்டவருத்தனத்தின் கையிலே வாழ்த்துடனே கொடுத்தென்க.

125 - 8. முரசெழுந் தியம்ப..... . .. ..வைத்தாங்கென்றது - வீர முரசுமுதலாய மும்முரசுகளும எழுந்து முழங்க அவையேயன்றிப் பல வாச்சியங்களும் முழுங்க அரசனும் அமாத்தியர் புரோகிதர் சேனபதித் தொடக்கத்தாருங்கூட வீதியின்கண் நின்ற தேரினை இந்த யானையோடும் உடன்கொண்டு வலஞ்செய்து தேர்மிசைநின்ற கவியின் கையிலே இத் தலைக்கோலைக்கொடுப்ப ஊரை வலமாக வந்து அரங்கத்தின்கட்புகுந்து தலைக்கோல எதிர்முகமாக வைத்தபின் என்றவாறு.

என்னை? "பிணியுங் கோளு நீங்கிய நாளால், அணியுங் கவினு மாசற வியற்றித், தீதுதீர் மரபிற் றீர்த்த நீரான், மாசது தீர மண்ணுநீ ராட்டித், தொடலையு மாலையும படலையுஞ் சூட்டிப், பிண்ட முண்ணும் பெருங்களிறறுத் தடக்கைமிசைக், கொண்டு சென்றுறீஇக் கொடியெடுத் தார்த்தது, முரசு முருடு முன்முன் முழங்க, அரசு முதலான வைம்பெருங் குழுவும்,தேர்வலஞ் செய்து கவிகைக் கொடுப்ப, ஊர்வலஞ் செய்து புகுந்த பின்றைத், தலைக்கோல் கோட றக்க தென்ப" என்ருர் செயிற்றியனுர்.

[அரங்கிற்புகுந்து ஆடுகின்றவியல்பு]

129 - 75. இயல்பினன் வழாஅ மனையகமறந்தென்.

129. இயல்பினன்..... ...முறைமையினென்றது - அரசன் முதலியோர் யாவரும் வரிசைக்கேற்ற இருக்கைமுறைமைகளிலே இருந்த பின்ன ரென்க.

130. குயிலுவ .....நிற்பவென்றது - குயிலுவக்கருவியாளர் தாம் நிற்கக்கடவ முறைமைகளிலே நிற்கவென்க.

முறைமையாவது .—"ஆடிட முக்கோ லாட்டுவார்க் கொருகோல், பாடுநர்க் கொருகோ லந்தர மொருகோல், குயிலுவர் நிலையிட மொரு கோல்" என்று நூலிற் கூறின முறைமை யென்க.

குயிலுவராவார் - இடக்கை முதலிய கருவியாளர்

131 - 2. வலக்கான்.. .....பொருந்தியென்றது - நாடகக் கணிகையாகிய அரங்கேறுகின்ற மாதவி அரங்கத்திலே வலக்கால் முற்பட விட்டேறிப் பொருமுகவெழினிக்கு நிலையிடஞன வலப்பக்கத்தூணிடத்தே சேர்தல் வழக்கென்னுமிடத்தாலே சேர்ந்தென்றவாறு.

133 - 4. இந்நெறி வகையால்... .. ..மகளிரு மென்றது - மாதவி வந்தேறி நின்றபடியே இடத்தூண் நிலையிடமாகிய ஒரு முகவெழினியிடம் பற்றிய பழைய நெறியியற்கையையுடைய தோரிய மடந்தையருமென்க.

தோரிய மடந்தையராவார் - ஆடிமுதிர்ந்தவர், "இந்நெறி வகையாலிடத்தூண் சேர்வோள், தொன்னெறி மரபிற் ரோரிய மகளே" எனவும், "தலைக்கோ லரிவை குணதிதொடு பொருந்தி, நலத்தகு பாடலு மாடலு மிக்கோள், †சொலப்படு கோதைத் தோரிய மகளே" எனவும் சொன்னராகலின்.

135 - 6 சீரியல்.....பாடவென்றது - நன்மையுண்டாகவும் தீமை நீங்கவும் வேண்டித் தெய்வப்பாடல் இரண்டினையும பாடவென்றவாறு.

இனிச் சீரியல்பொலிய நீரல நீங்கவென்பதற்குத் தாளவியல்பு பொலிவு பெற அவதாளம நீங்கவென்றுமாம்.

வாரமிரண்டாவன. ஒரொற்றுவாரம், ாரொற்றுவாரமென்னும் செய்யுள்.

அவை தாளத்து ஒருமாத்திரையும இரண்டுமாத்திரையும் பெற்று வரும்.

137 - 8. பாடியவாரத்து .... கருவிகளெல்லாமென்றது - தெய்வப் பாடலின் இறுதியிலே நின்று கூடி இசையாநிற்கும் கருவிகளெல்லாமென்றவாறு.

இக்கருவிகள் எவ்வண்ணங்கூடியிசைத்தனவோவெனின்,—

139. குழல்வழிநின்றது யாழேயென்றது - வங்கியத்தின் வழியே நின்றது யாழ்ப்பாடலென்றவாறு.

எனவே, மிடற்றுவழியது யாழாகலான் மிடற்றுவழிப்பாடலும் குழல் வழித்தெனக்கொள்க.

139 - 40. யாழ்வழித்தண்ணுமை நின்றது தகவே யென்றது - யாழ்ப் பாடலின்வழியே அதற்குத் தகத் தண்ணுமையாகிய மத்தளம் நின்றதென்க.

140 - 41 தண்ணுமை.....முழவே யென்றது - மத்தளக்கருவியின் பின்வழியே குடமுழா நின்றதென்க.

141 - 2. முழவொடு .....ஆமந் திரிகையென்றது - முழவொடுகூடி நின்று வாச்சியக்கூறுகளை அமைத்தது ஆமந்திரிகை யென்னுங்கருவி யென்றவாறு.

(பி - ம்.) † 'இயற்படு'

ஆமந்திரிகை - இடக்கை. நின்றிசைத்தது கருவியென்னுது ஓசை யென்க. அஃதேல் மிடற்றுப்பாடல் சொல்லிற்றிலரெனின், வாரப் பாடல் பாடிய பின்னரெனவே மிடற்றுப்பாடலும் அடங்கும்.

142. ஆமந்திரிகையோடந்தரமின்றி யென்றது - இவ்வாமந்திரிகை யோடே முன்சொன்ன குயிலுவக்கருவிகள் அனைத்தும் பருந்தும் நிழலும் போல ஒன்றுய் நிற்பவென்றவாறு.

144 கொட்டு... .ஆகவென்றது - ஒரு தாளத்திற்கு இரண்டு பற்றுக வென்க.

145. கட்டிய ....போக்கியென்றது - பஞ்ச தாளப் பிரபந்தமாகக் கட்டப்பட்ட தேசியொத்தை ஒரு தாளத்திற்கு இரண்டு பற்றுகப் பதித்தும் தீர்வு ஒன்றுமாகப் பதிஞெரு பற்றுலே தேசிக்கூத்தையாடி முடித்தென்க.

146 வந்த ..வழாமலென்றது - இப்படிச்செய்கை நாடக நூல் களின் அமைந்த முறைமையாகலான் அமமுறைமை வழுவாமலென்க.

147. அந்தரக் கொட்டுட னடங்கிய பின்னரென்றது .

இதனை அந்தரக்கொடடென்றும், முகமென்றும், ஒத்தென்றும் கூறுப இந்த ஒத்து ஆடின பின்னரல்லது உருக்காடடுதல் வழக்கலல வென்ப , என்னை? "முகமா டுதறிரி யோகப் பொருடடே" என்ருராகலின்.

148-9 மீத்திறம் படாமை. ... பண்மேலென்றது - மங்கலப்பண் ணுய் நரப்படைவுமுடைத்தாயிருக்கின்ற பாலைப்பண்ணை அளவுகோடாத படி ஆளத்தியிலேவைத்து அதன்மேலேயென்க

150 நான்கிஞெரீஇய நன்கனமறிந்தென்றது - மங்கலச்சொல்லினை யுடைத்தாய் நாலுறுப்பும் குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியுமறிந்து பாட்டும கொட்டும கூத்தும நிகழ்த்தியென்க.

நாலுறுப்பாவன —உக்கிரம், துருவை, ஆபோகம், பிரகலையென் பன ாண்டு நாலுறுப்புக்களும் குறைபாடில்லாத உருவெனவேண்டியது, [1] மூன்றுறுப்பாலே வருவனவுமுளவாதலின் அவை இரண்டாமடியே ஈறறடியாகப் பாடிமுடிவன. அவை மங்கலத்துக்குப் பொருந்தாவெனக் கொள்க.

151. மூன்றளந்தொன்று கொட்டியதனையென்றது - அதனை மூன் ருத்துடைய மட்டதாளத்திலே எடுத்து ஓரொத்துடைய ஏகதாளத்திலே முடித்தென்க.

152. ஐதுமண்டிலத்தாலென்றது - அழகிய மண்டில நிலையாலென்க.

தேசிக்கூத்தெல்லாம் மண்டில நிலையாதலின், ஐதுமண்டிலத்தா லென்ருர். என்னை? "கொண்ட தேசிப் பகுதி யெல்லாம், மண்டில நிலை யின் வருதக வுடைத்தே" என்ருராகலின்.

கூடைபோக்கியென்றது - தேசிக்கு ஒற்றித்தொத்தலும் இரட்டித் தொத்தலுமேயாகலின் அவற்றை ஆடி முடித்தெனக.

---

[1] கீத வடிவுகள் மூன்றென்பர் சுத்தானந்தப்பிரகாசமுடையார்; மூன்ருவன . உக்கிரம, துருவை, ஆபோகமென்பன. துருவையென்றது துருமையெனவும் ஆபோகமென்றது ஆயோகமெனவும் பிரதிகளில் வேறு பட்டிருக்கின்றன.

இவைகளல்லது இரட்டிக்கிரட்டி வரப்பெருதென்க.

153. வந்தவாரம் வழிமயங்கியபின்றையென்றது - முதனடையினும் வாரத்தினும் தேசிக்கூதீதெல்லாம் ஆடி முடிதீதென்க.

முடிக்கை - பண்மாறு.

இனி மார்க்கம் கூறுகின்றது :—

154. ஆறு .....போக்கியென்றது - பஞ்சதாளப் பிரபந்தமாகக் கட்டப் பட்ட வடுகிலொதீதையும் தேசியிலொதீதைக் காட்டினுற்போல இரட்டிக் கிரடடியாக ஆடியென்க

155 - 6. கூறிய வைந்தின் .. பின்றையென்பது - சொல்லிப்போந்த தேசியைப்போல வடுகும் மட்டதாளமுதலாக ஏகதாளமீருக வைசாக நிலையிலே ஆடி முடிதீத பின்னரென்க.

என்னை ? " வைசாக நிலையே வடுகிற்கும் வரையார் " என்ருராகலின்.

157. பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுதீதென என்றது - பொன்னுன் இயன்றதோர் பூங்கொடி கூதீது நடிதீதாற்போல என்றவாறு.

158 - 9. நாட்டிய நன்னூல்.....ஆதலினென்றது - தாண்டவம் நிருதீ தம் நாட்டியமென்னும மூன்று கூறுபாட்டினும் நாட்டியமென்றது புற நடதீதையாகலின், அதனை நூல்களிற சொன்ன முறைமை வழுவாமல் அவிநயதீதுப் பாவகம் தோன்ற விலக்குறுப்புப் பதினுலின் நெறி வழுவா மல் ஆடிக் காட்டினுளாதலானென்றவாறு.

அன்றி, நாடடியநன்னூல்... ..ஆதலினென்றதற்கு இக்கதையிற கூறிய முதீதமிழ் வகையையும் காட்டினுளாதலினென்றுமாம.

159 - 60. காவல் வேந்தன்... . வழாமையென்றது - அரசன், இம் மாதவியுடைய கூதீதுக்கும் பாட்டுக்கும் அழகுக்குமேற்ற முறைமை யினுல் ஒன்றும் வழுவாமலென்றவாறு.

என்சொல்லியவாருமோவெனின்,—நாடகமகள் அரங்கேறக்கண்ட அரசன் அவள்மேற் காமக்குறிப்புடையனுதல் இயல்பு. அங்ஙனம் மாதவி யாடலி பாடல் அழகென்னும இவை முதலிய கண்களிப்பக்கண்டும் செவி களிப்பக் கேட்டும் நெஞ்சம அழிந்து காமக்குறிப்பு மீதாரவும் நாம் இவளை வரையின் நவை பிறக்குமென்பது கருதி வரையாஞயினு னென்பதாம்

இலைப்பூங்கோதையைத் தலைக்கோற்கு அடையாக்கினும் அமையும். அன்றி, இலைப்பூங்கோதை - அரசனுடைய மாலை , அதனுல் தன்கூதீதும் பாட்டுமென்னும் இவை முதலியவற்றின் இயல்பின் ஒன்றும் நீங்காம லென்றுமாம். இயல்பினின் - இயல்பினுல்.

161 தலைக்கோலெய்தியென்றது - தன் வரிசைக்குதீ தக்கபடியே தலைக்கோற் பெயர் பெற்றென்றவாறு.

தலையரங்கேறியென்றது - முன்னரங்கு முதலிய எல்லா முதன்மை யும் பெறுவதற்குக் காரணமாகிய தலையரங்கேறியென்றவாறு.

162 - 3. விதிமுறை . பெற்றனளென்றது - இந்நாடகக் கணிகை யர்க்குதீ தலைவரிசை ஆயிரதீதெண்கழஞ்சு பொன் பரிசம்பெறுகை நூல் வழக்காதலின் இவளும் அவ்வாயிரதீதெண்கழஞ்சுபொன் பரிசம்பெறரு ளென்றவாறு.

என்னை ? "முட்டில் பாணரு மாடியன் மகளிரும், எட்டொடு புணர்ந்த வா யிரம்பொன் பெறுப " என்ருராகலின்.

ஒருமுறையாகப் பெற்றனள் - ஒரு நாளைக்குப் பரிசமாகவென்று அரசனுற் பெற்றனளென்க.

பெறுகை - நினைப்பிடுகையுமாம். ஆயிரம் பரிசத்துக்கும் எண் கழஞ்சு மெய்ப்போகத்துக்குமாக நிச்சயித்தென்க.

163. அதுவேயென்றது - அன்று தொடங்கி அதுவே பரிசமான தென்க.

164. நூறுபதி தடுக்கி எட்டுக்கடை நிறுத்தவென்றது - நூற்றைப் பதின்மடங்காக அடுக்கி அதன் கடைக்கண்ணே எட்டை நிறுத்தின என்றவாறு.

165 - 9 வீறுயர் பசும்பொன் .....நிறுத்தவென்றது - வீறுபெற் றுயர்ந்த பசும்பொன்னை விலையாகப் பெறுவது இம்மாலை, இம்மாலை பெறற பொன்தந்து இதனை வாங்கிச்சூடுநர் மாதவிக்கு மணமகனுதல் அமையுமென்று சொல்லி மான்போன்ற நோக்கினையுடையாளோர்கூனி கைக் கொடுத்து நகரியிற் பெருந்தெருவிலே விலைக்கு விற்பாரைப்போல்வ தொரு பண்பினுல் நிறுத்தவென்றவாறு.

இவளுக்குப் பரிசமென்னுது மாலைக்குப் பரிசமென்று மிகுத்துக் கூறினர் வீறுயர் பசுமபொன் - மாற்றுன் உயர்ச்சிபெற்ற பசியபொன்; ஆவது கிளிச்சிறை மாலை - அரசன்பாறபெற்ற பசுமபொன்மாலை. இது படிக்கட்டளை

170 - 72. மாமலர் நெடுங்கண்.. மணமனைபுக்கென்றது - திருமல ரென்று சொல்லப்பட்ட தாமரைமலர் போன்ற கண்ணையுடைய மாதவி யுடைய பரிசமாலையைக் கோவலனெனப்படும வாணிகன் வாங்கிக் கூனி யுடனே அவள் மனையிற்சென்று புக்கென்றவாறு

வாங்கிப் புக்கென இயைக்க.

172 - 4. மாதவி தன்னோடு . ஆயினனென்றது - இங்ஙனம் புக்க கோவலன் மாதவிதன்னுடன் மணநத அப்பொழுதே அயர்ந்தனனுய் மயங்கி அவளை நீங்குதல் கூடாத விருப்பினையுடையனுயினனென்க.

வைகல் - ாண்டு ஒருபொழுது விடுதலறியா - விடாத, ஒரு சொல்.

175. வடுநீங்கு சிறப்பிறறன் மனையக மறந்தென்றது - குற்றமற்ற கற்புச் சிறப்பினையுடைய மனைவியையும மனையையும் மறநதென்க.

ஆடல் முதலியன காட்டல் வேண்டி ஆடலோனும் இசையோனும் இயற்புலவனும் தண்ணுமையோனும் குழலோனும யாழோனுங்கூடி வகுத் தனர் கொண்டு தொழுதனரேத்த எழுதி வைத்து எடுத்து வகுத்து நாற் றிக் கிடந்த அரங்கத்துக் கொண்டு ஒழுக்கிப் போக்கி ஆகெனச் செய்து ஏந்தி அணிந்து கொண்டு இயம்ப ஆர்ப்பச் செய்து கொடுப்ப வைத்தபின் நிற்ப ஏறிப் பொருந்திச் சேர்ந்தமகளிரும் பொலிய நீங்கப் பாட இசைக் கும், கருவிகளெல்லாம் நின்றது, நின்றது, நின்றது, நின்றிசைத்தது; பதினென்று போக்கி அம்முறைபோக்கி வகுத்தனைக் கடைப்பிடித்துக் காட்டினளாதலின், எய்தி ஏறிப்பெற்றனள், பெறறு நிறுத்தக் கோவலன் வாங்கி மனைபுக்கு அயர்ந்து மயங்கி மறந்து விருப்பினனுயினனென்க.

பா, நிலைமண்டிலம்

(ரு) அரங்கேற்று காதை முற்றிற்று

நான்காவது

அந்திமாலைச் சிறப்புச்செய்காதை

விரிகதிர் பரப்பி யுலகமுழு தாண்ட
ஒருதனித் திகிரி யுரவோற் காணேன்
அங்கண் வானத் தணிநிலா விரிக்கும்
திங்களஞ் செல்வன் †யாண்டுளன் கொல்லெனத்
திசைமுகம் ‡பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீ ராடை யிருநில மடந்தை
அரைசுகெடுத் தலம்வரு மல்லற் காலைக்
கறைகெழு குடிகள் கைதலை வைப்ப
அறைபோகு குடிகளொ டொருதிறம் பற்றி
வலம்படு தானை மன்ன ரில்வழிப்
புலம்பட விறுத்த விருந்தின் மன்னரின்
தாழ்துணை $துறந்தோர் தனித்துய ரெய்தக்
§காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்தக்

---

2. திகிரி - தேராழி.

5 - 6. திசைமுகம் - திசையாகிய முகம். மலர்க்கண் - மலராகிய கண் ; கண்ணீர் - கள்ளாகிய நீர். பனித்தென்றார், மாலைக்காலத்துப் பனியு முண்டாகலான்.

8. அரசு - தன்கொழுநன், என்றது ஆதித்தனை. 9. கறை - கடமை.

10 - 13 அறைபோகு குடிகள் - கீழற்றுப்போன குடிகள். விருந்தின் மன்னர் - வேறறரசர், இன் போல. தாழ்தல் - தங்குதல்.

கறைகெழுகுடிகள் கண்ணகி முதலான தாழ்துணை துறந்தோர்க்கு உவமை, விருந்தின் மன்னர் மாதவி முதலான காதலர்ப்புணர்ந்தோர்க்கு உவமை.

அடி, 8. 27 · 132, புறநா. 174 . 6, மணி. 5 . 36.

10. அறைபோதல் பெருங் 1. 56 62, சீவக. 1142.

14. கலித். 118 12

(பி - ம்.) † 'யாங்குளன்கொல்' ‡ 'பயந்து' $ 'யிழந்தோர்' § 'காதலிற் புணர்ந்தோர் களிமகிழ் பெய்தக்'

15 குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத
அறுகாற் குறும்பெறிந் தரும்புபொதி வாசம்
சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற
எல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப
20 மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென
இளைய ராயினும் பகையரசு கடியும்
செருமாண் டென்னர் குலமுத லாகலின்
அந்தி வானத்து வெண் † பிறை தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்பெறிந் தோட்டிப்

15 - 6. குழல்வளர் முல்லை ..... . ஊத - கோவலரூதும் குழலிலும் வளர்கின்ற முலலையிலும் கோவலரும தும்பியும் வாய்வைத்து ஊத, இது நிரல் நிறை, (பா) அன்றிக் கோவலர் குழலினுண்டாகிய முல்லைப் பண்ணை பூவிலே தும்பி ஊதவென்றுமாம

17 - 20 அறுகால் - ஆறு காலையுடைய வண்டு குறுமபென்றார், தென்றல் தளிர்ப்பித்தும பூப்பித்துஞ செயயத் தான் நடுவே புகுந்து உண்டலான் சிறுகாற செல்வன் - மந்தமாருதமாகிய செலவன் இறுதி தென - இறுத்ததாக

8 - 20. அல்லற் காலையிலே பிரிந்தோர் துயரெயதப் புணர்ந்தோர் மகிழ்வெய்ததி தும்பி ஊத வாசதிதைச் செலவன் தூற்ற மகளிர் விளக் கெடுப்ப விருந்தின் மன்னரைப்போல மாலை வந்திறுதிததென்க.

24. மாலையைக் குறுமபென்றார், [1] இடைநின்ற காலம்பார்த்து வருத லான்.

26. மீனரசு - விண்மீனின் அரசு, அரசனுல் ஆளப்படும் இடமும் அரசெனப்படும. வெள்ளிவிளக்கம - வெண்மையாகிய ஒளி, நிலா

15 - 6 "கோவலர் முல்லைக் குழன்மேற கொள்ள" (மணி. 5 . 136), பரி. 10 . 120.

அடி, 18 சிறுகாற் செல்வன் மணி. 19 101 19-20, குறுந். 398 : 3-5.

21 - 2. "இளைய தாயினுங் கிளையரா வெறியு, மருநரை யுருமிற பொருநரைப் பொருஅச், செருமாண் பஞ்சவர்" (புறநா. 58 : 6-8). 22. தென்னர் குலமுதல்வன் . சிலப். 13 18, 27 138.

[1] கலித். 118 8. (பி - ம்.) † 'பிறைதீ தோன்றிப்'

(மேற்.) 15-6. "'குழல்வளர் . . ஊத' என்புழிக் குழல்வளர் முல்லையென்றுகூறியபொழுதே ஆயரூதும் குழலிலே எழுந்த முலலையென் னும் பண்ணையும், மயிரிலே கிடந்த முல்லையென்னும பூவையும் ஒரு காலதீதே புலப்படுதீதி இரண்டறகும பிரிவிலவாய நின்றவாறு காண்க. இஃது ஒரு சொல் ஒருகாற கூறுதறகண் இரண்டு பொருளை உணர்தீதுதல் வழுவேனும் அமைகவென அமைதீதார், இதனை உவமவியலுள், 'ஒரீஇக் கூறலும்' என்னும் சூதீதிரதீதுச் செய்யுட்கு இலக்கணமாகக் கூறுமாறும் உணர்க இங்ஙனம் சான்றோர் செய்யுட்களுட் பலவிடதீதும வருமாறு ணர்க" (தொல். எச்ச. 64, ந), "குழல்வளர்.. ...ஊத . இது சொல் வேறுபடாது பொருள் வேறுபட்டது" (இ. கொ. 124, உரை.)

பான்மையிற் றிரியாது பாற்கதிர் பரப்பி
மீனர சாண்ட வெள்ளி விளக்கத்
தில்வளர் முல்லையொடு மல்லிகை † யவிழ்ந்த
பல்பூஞ் சேக்கைப் பள்ளியுட் பொலிந்து
செந்துகிர்க் கோவை சென்றேந் தல்குல்
‡ அந்துகின் மேகலை யசைந்தன வருந்த
நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியுங் ¶ காதலற் களித்தாங்
கார்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
கோலங் கொண்ட மாதவி யன்றியும்
குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னெடு
குணதிசை மருங்கிற் காரகி றுறந்து
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தன மறுகத்
தாமரைக் கொழு $ முறித் தாதுபடு செழுமலர்க்

(23) பிறை தோன்றி (26) மீனரசாளுதலாலுண்டாகிய விளக்கம, பிறை, மாலைக்குறும்போட்டிக் கதிர்பரப்பிச் சநதிரன் நாட்டை யாண்ட விளக்கத்திலே யென்க.

28. (பா) சேர்க்கைப்பளளி - சேருமிடம.

30. துகின்மேகலை - புடைவைமேற சூழ்நத மேகலை

33. கோவலறகு எதிரி - கோவலனை எதிரேறறு, எனவே முயக்கம கூறியது.

34. கோலங்கோடல்-முயக்கத்தாற் குலைநத ஒப்பனையைத் திருத்தல

(26) வெளளி விளக்கத்து (31) நிலாமுறறத்துப் (28) பொலிநது (30) அசைந்தன வருநதக் (33) கோவலறகெதிர்தலாற (34) கோலங்கொண்ட மாதவியென்க

35 - 6 வெள்ளயிர் - புகைக்கும கண்டு சருக்கரை, கண்டு சருக்கரை யோடு அகிலைப்புகைத்தல் மரபு.

37 வான்கேழ் வடடம் - அழகு கெழுமிய சிலாவட்டம்.

38 மறுக - தேய்த்துத் திமிர.

அடி, 27. பெருங். 1. 33 . 73. அடி, 28. சிலப். 13 : 120.

31. "நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் முறறத்து" (நெடுநல். 95); "வெண்ணிலவின் பயன்றுயத்தும" (பட்டினப். 114). 35-6. நெடுநல். 56-7.

37. நெடுநல். 51-2, "வடவரை தந்த வான்கேழ் வட்டம" (அகநா. 340 : 16)

(பி - ம்.) † 'மலர்ந்த' ‡ 'ஐந்துகின்' ¶ 'காதலர்க்களித்தாஅங்கு' $ 'முறிதாது'

காமரு குவளைக் கழுநீர் மாமலர்ப்
பைந்தளிர்ப் படலை பரூஉக்கா ழாரம்
சுந்தரச் சுண்ணத் துகளொடு மலைஇச்
சிந்துபு பரிந்த செழும்பூஞ் சேக்கை
மந்தமா ருதத்து மயங்கினர் மலிந்தாங்
காவியங் கொழுந ரகலத் தொடுங்கிக்
காவியங் கண்ணுற் களித்துயி லெய்த
அஞ்செஞ் சீறடி †யணிசிலம் பொழிய
மென்றுகி லல்குன் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்
மங்கல வணியிற் ‡பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகஞ் சிறுவியர்ப் பிரியச்
செங்கய னெடுங்க ணஞ்சன மறப்பப்
¶ பவள வாணுத றிலக மிழப்பத்
தவள வாணகை கோவல னிழப்ப
மையிருங் கூந்த னெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி யன்றியும்
$ காதலர்ப் பிரிந்த மாதர் நோதக
ஊதுலைக் குருகி னுயிர்த்தன ரொடுங்கி

39 - 41. தாமரைக் கொழுமுறியினையும் அதன் மலரினையும் குவளை யையும் கழுநீர் மலரினையுமுடைய படலைமாலை.

இவ்வகை விரவித்தொடுத்த மாலைக்குப் படலைமாலையென்று பெயர்.

41 - 3 படலை ஆரம் இவை சிந்தி வேறுபட்ட. சுந்தரம் - அழகு.

(34) மாதவியன்றியும் (46) (பா) காவியங்கண்ணுர் (36) அகிற்புகை துறந்து (44) மலிந்து மயங்கிக் (46) களித்துயிலெயதவென்க.

47. சீறடியைச் சிலம்பொழிய. பிறவறறிற்கும் இவ்வாறுரைக்க.

50 - 52. மங்கலவணி - இயற்கையழகு. குழையைத் துறந்து வடிந்து தாழ்ந்த காது (பா) வியர்ப்பு இரிய - கூடடமில்லாமையின் வியர்வு நீங்க.

57. கையறு நெஞ்சம் - செயலறவினையுடைய நினைவு.

(47) சிலம்பு முதலியன (48) நீங்க (56) நெய்யணி மறப்பச் (57) செய லறவையுடையளான கண்ணகியென்க.

58. காதலர்ப் பிரிந்த மாதர் - தங்கள் கொழுநரைப்பிரிந்த மகளிர். நோதக - கண்டார்க்கு நோவுதக.

---

41. பைந்தளிர்ப்படலை பெருங். 3 27 . 14.

42. சுந்தரச்சுண்ணம் : 5 · 155.

50. 2 : 63 - 4.

59. ஊதுலைக்குருகின் உயிர்த்தீதல் சிலப். 18 : 14, 22 . 152 , மணி. 2 · 49.

(பி - ம்.) † 'அணிச்சிலம்' ‡ 'பிறிதணி யணியாள்' ¶ 'அளக வாணு தல்' $ 'காதலிற்'

வேனிற் பள்ளி மேவாது கழிந்து
கூதிர்ப் பள்ளிக் குறுங்க ணடைத்து
மலயத் தாரமு மணிமுத் தாரமும்
அலர்முலை யாகத் தடையாது வருந்தத்
தாழிக் குவளையொடு தண்செங் கழுநீர்
வீழ்பூஞ் சேக்கை மேவாது கழியத்
துணைபுண ரன்னத் தூவியிற் †செறித்த
இணையணை மேம்படத் திருந்துதுயில் பெருஅ
துடைப்பெருங் கொழுநரொ டூடற் காலத்
திடைக்குமி ழெறிந்து கடைக்குழை யோட்டிக்
கலங்கா வுள்ளங் கலங்கக் கடைசிவந்து
விலங்கிநிமிர் நெடுங்கண் புலம்புமுத் துறைப்ப
அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை
ஆம்ப னறுந் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்த் தண்ணறற் கூந்தற்

---

61. அடைதீது - அடைப்ப

66. துணைபுணரன்னதீ தூவியினென்றார் : "பலவன்னதீதூவி போலே" என்றமையால். அநத அணைக்கிட்ட பஞ்சின்மென்மைக்கு...

68. தங்களையுடைய கொழுநரோடு ஊடுதலையுடைய காலதீது.

70. கலங்கா உள்ளம் கலங்க - அவர் கலங்கா உள்ளம் அணையிலே கலங்க.

71. புலம்பு - தனிமை. முதீது - கண்ணீர்தீதுளி.

(57) கண்ணகியன்றியும் (58) பிரிந்த மாதர் (67) இணையணைமேம்படதீ திருந்து துயில்பெறுது (68) முன்பு ஊடினகாலதீது (71) விலங்கி நிமிர்ந்த நெடுங்கண் இப்பிரிந்தகாலதீதுப் புலம்பாலுண்டாகிய முதீது உறைப்ப வென்க.

71. விலங்கு பாடமாயின், பக்கமென்க.

72 - 4. அன்னமாகிய மென்னடையையும், ஆம்பல் நாறும் நறு விரையையும் தாமரையாகிய செவ்வாயையும், அறலாகிய கூந்தலையு முடைய பொய்கையாகிய பெண்.

---

66 "துணைபுண ரன்னதீதின் றூவிமெல் லணையசைஇ" (கலித். 72 2), நெடுநல். 132 அடி, 71 முல்லை. 23. அடி, 72-3 குறுந். 300 . 2.

(மேற்) 73-4. "ஆம்பனறுந் ... செவ்வாய் என்புழி, 'தேம் பொதி நறுவிரை யாம்பனறுந் தாமரைச் செவ்வாய்' என இளங்கோ வடிகள் பாடிய அந்திமாலைச் சிறப்புச் செய்காதையினும் கண்டவை யென்றுணர்க" (மாறன். 104, உரை.)

(பி - ம்.) † 'சிறந்த'

பாண்வாய் வண்டு நோதிறம் பாடக்
† காண்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்
புள்வாய் முரசமொடு பொறிமயிர் வாரணத்து
முள்வாய்ச் சங்க ‡முறைமுறை யார்ப்ப
உரவுநீர்ப் பரப்பி னூர்துயி லெடுப்பி
இரவுத் தலைப்பெயரும் வைகறை காறும்
அரையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்
விரைமலர் வாளியொடு கருப்புவில் லேந்தி
மகர வெல்கொடி மைந்தன் றிரிதர
நகரங் காவ னனிசிறந் ததுவென்

75 - 8. வண்டாகிய பள்ளியுணர்த்துவான் புறநீர்மையென்கின்ற பண்ணைப் பாட, குவளை கண்மலர்போல விழிப்ப. புள்வாயாகிய முரசம். முள்வாய் - கூர்த்த வாய்.

79 உரவு நீர்ப்பரப்பின் ஊர் - கடறபரப்பை ஒத்த ஊர் துயி லெடுப்பியென்றார், பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்கும் துயிலாமை காமனுல் வருதலால்.

80. இரவுத்தலை . தகரவொறறு விகாரம், தலை - இடம், இராதி திரியில்.

81. பகுக்கப்படுதலின், பகல். **மதுரைக்காஞ்சியில்,** "மற்றை யாமம். பகலுறக் கழிப்பி" (653) என்பதுமது, (பா) பகலுந்துஞ்சான் - எல்லாருந் துஞ்சும அரையிருள் யாமத்தும் ஒருமாத்திரைப் பொழுதும் துஞ்சாமல்

75 - 80 வண்டுபாடக் குவளைவிழிப்ப இரவுபோம் வைகறையென்க.

81 - 3 இரவும் பகலுந் துஞ்சான் மைந்தன் திரிதரவென்க.

(34) மாதவியன்றியும் (46) காவியங்கண்ணூர் களிதீதுயிலெய்தவும் (57) கண்ணகியன்றியும (58) பிரிந்தமாதர் (59) உயிர்தீது ஒடுங்கிக் (60) கழிந்து (61) குறுங்கண் அடைதீது (62-3) ஆரம் முலைக்கண் அடையாது வருந்தக் (64) கழுநீர் (65) சேக்கையிலே மேவாதுகழியக் (67) கண்டுயில் பெருமல் (71) உறைப்ப (75) வண்டுபாடக் (76) குவளை விழிப்ப (78) ஆர்ப்ப (80) இரவுபோம் வைகறையளவும் (81) யாமத்தும் பகலும் துஞ் சாஞகி (83) மகரக்கொடி மைந்தன் (82) வாளியொடு வில்லேயேந்திதீ (83) திரிதலானே (84) நகர் காவல் சிறந்ததென்க

அடி, 75. நோதிறம் · பரி. 13, 14, 15, 16, 17 · இவற்றின் பண்.
77-8. சிலப். 6 : 115-6. 81. புறநா 189 . 3
(பி - ம்.) † 'காமரு குவளை' ‡ 'முறையெழுந் தார்ப்ப'

1 - 2 விரிகதிர் பரப்பி காணேன்

(இ - ள்) விரிந்த கதிர்களைப் பரப்பித் தொக்க உலகமனைத்தையும் ஒரு திகிரியாலுண்ட விளிவில்லாதோனை ாண்டுக் காண்கின்றிலே னென்க.

கதிர் - ஆரும, கிரணமும். முழுதுமென்னும் முற்றும்மை தொக்கது. ஒரு தனித்திகிரி-ஒப்பறற ஒற்றைத் தேராழி, சக்கரமுமாயிற்று, சிலேடை. இவன் ஓராழியான் ஏழுலகையுமாண்டானென்பது தோன்றத் தேராழி யைத் திகிரியென்றார் ஆண்ட திகிரியையுடைய உரவோனெனினும் அமையும்.

3 - 4 அங்கண் வானத்து கொல்லென

(இ - ள்) அழகிய இடத்தையுடைய வானின்கண் நல்ல நிலாவை விரிக்கும் திங்களாகிய செல்வன் எவ்விடத்துள்ளானேதானென்றென்க.

அத்து. ஏழனுருபின்கண்வந்த சாரியை. நிலா-ஒளி. அம புறனடை யாற் (தொல். புள்ளிமயங். 110) கொள்க. இது பண்புத்தொகைக்கண் வந்தது. [1] திங்களஞ்செல்வன் "காலமுலகம்" (தொல். கிளவி. 58) என்னுஞ் சூத்திரத்துள், ஞாயிறு திங்களென்பன உயர்திணை மேலனவாய்ப் பால்பிரிந்திசையாவெனவும், "நின்றுங் கிசைத்த லிவணி யல் பின்று" (தொல் கிளவி. 59) எனவே நின்ற முறைமையானே ஈறு பெற்று நின்று உயர்திணையாயிசைத்தல் இவணியல்பின்றெனவும் கூறிய ஆசிரியர், "இசைத்தலு முரிய வேறிடத் தான" (தொல். கிளவி. 60) எனக் காலமுதலாகிய சொல் உயர்திணையாயிசைத்தலுமுரிய, ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்டவழியென்றாராகலின், இதுவும் ாறு திரிந்து திங்களஞ்செல்வனென்றுயிற்றென்க. மேலும் இவ்வாறு வருவன வற்றிற்கும் இதுவே விதியென்க. கொல் : ஐயம்.

5 - 8. திசைமுகம் பசந்து அல்லற் காலை

(இ - ள்.) கடலை ஆடையாகவுடைய பெரிய நிலமடந்தை தன்கொழு நனைக்காணுது திசையாகிய தன்முகம் நான்கும் பசப்பூரப்பட்டு மலர்க் கண்கள் நீர்வார மெய்ம்முழுதும் பனித்து நெஞ்சம் சுழல்கின்ற இடுக் கட்பொழுதிலென்க.

திசைமுகம் - திக்காகிய முகம். பசந்து - பொன்னிறங்கொண்டு. முழு மெயும் - மெய்முழுதுமென்று மாறுக பனித்து - நடுங்கி, பனிகொண்டு; பனியென்பதொரு நோயுமுண்டு, அது குடநாட்டு வழக்கு, பனி பெய்யப் பட்டு என்றபடி, அக்காலத்துப் பனிபெய்யுமாகலின். அரசு - தன்கொழுந னுகிய பகலோன், அரசென்பதனை. "குடிமையாண்மை" (தொல். கிளவி. 57) என்னுஞ் சூத்திரத்து நிலையினவாயினும் என்பதனுன் முடிக்க. கெடுத்து - காணப்பெறுது; "எறகெடுத்திரங்கி" (மணி. 5. 36) என்றாற் போல. அலம்வரும் - சுழலும். அல்லற்காலை - இடுக்கட்பொழுதில். பசந்

[1] சிலப். 8 : 59, உரை.

தென்ருர், மாலைக்காலத்துப் பரந்த பச்சைவெயிலை, "செல்சுடரிப் பசு வெயிற்ருேன்றி யன்ன" (411) என்ருர் **மதுரைக்காஞ்சியினும்.** இக் காலத்து இதனைக் காடுகிழாள் வெயிலென்ப. செமமலர்க்கண்கண் முழு நீர் வார என்பதற்குச் செமமலரிடமெல்லாம கள்ளாகிய நீர்முழுதும் வார வெனவும், சிவந்த மலர்போலும் கண்கள் இரண்டும் நீர்வாரவெனவும் சிலேடைப் பொருண்மை காண்க.

9 - 12. கறைகெழு குடிகள் மன்னரின்

(இ - ள்) தம்பெயருக்கு வருமிறையையறிந்து பொருந்தியிறுக்கும் இறைக்குடிகள் துயரமுற அங்ஙனமிருது குறும்புசெய்யும வில்லேருழ வரை ஒரு தலையாகப்பறறி வெற்றிபொருந்திய தானைமன்னர் இல்லாத இடமறிந்து அவர் நிலமெல்லாம கெடும்படி புதிதாக வந்துவிட்ட குறுநில மன்னரைப் போலவென்க.

கறை - கடமை, "கறைபன் னீராண் டுடன்விடுமின்" (306)என்ருர் சிந்தாமணியினும் கெழு, "முடிகெழுவேந்தர்" (பதிகம், 61) என்பத னுள் முடித்தாம. துயருறுதலென்னும் பொருணிகழ்ச்சியைத் தலைமேற் கைவைக்க வென்னும தொழினிகழச்சியாற கூறினுர், "கையால் வயிற துக்குவார்" (சீவக. 295) என்ருறபோல அறைபோதல் - கீழறுத்தல். ஒடு ஐ வலம - வெறறி. இல்வழி - இலலாத காலத்தே, இடபபொருள் காலத்தோடு மயஙகிறறு புலம - அவர் நிலம இறுத்த - வந்துவிட்ட; "சேனையிறுத்தவாய போல" (கலித் 108 1) என்ருராகலின். விருந்து - புதுமை

13 - 20 தாழ்துணை துறந்தோர் மாலைவந்திறுத்தென

(இ - ள்.) தம்மனத்தில் தங்கிய கொழுநர் தம்மைப் பிரிந்திருக்கின்ற மகளிர் கறைகெழு குடிகளைப்போல ஒடுங்கித் துயரமுறத் தம காதலரைப் புணர்ந்திருக்கின்ற மகளிர் அறைபோகு குடிகளைபபோலத் தருக்கி மகிழ்நது இன்பமுறக் குழலிலே வளர்கின்ற முலலையென்னும பண்ணிலே கோவலரும குழலிலே வளர்கின்ற முல்லைமலரிலே தும்பியும வாய்வைத் தூத அருமபுகள உளளடக்கிய வாசத்தை இடையிடையே புக்கு வண்டு கள் உண்ணுதபடி கடிந்தோட்டித் தென்றலஞசெல்வன அதனை மறுகெல் லாந்தூற்ற ஒளிவளையுடைய மகளிர் இருவகை விளக்குமெடுப்ப வள மிக்க மூதூர்க் கண்ணே விருந்தின் மன்னரைப்போல மாலையென்னுங் குறும்பு வந்துவிட்டதாகவென்க.

தாழ்தல் - தங்குதல். துணை - தோட்டுணையென்றுமாம். களிமகிழ்வு : வினைதீதொகை. குழல் - ஊதுங்குழலும, மயிரும, முல்லை - மலரும், பண் ணும். முல்லையில், சாரியைநிற்ப உருபு தொகதது. தும்பி - வண்டில் ஒரு சாதி. ஊதுதல் கோவலர்க்கும தும்பிக்கும பொது. ஊதுங்குழலினும் முல்லையினும் கோவலரோடு தும்பி வாய்வைத்து ஊதவெனினும் அமை யும், இது நிரனிறை எல் - ஒளி. மல்லல் - வளன். அறுகாலைக் குறும் பென்ருர், தென்றல் தளிர்ப்பித்தும் பூப்பித்துஞசெயய அவற்றைத் தான் புகுந்துண்டலான் சிறுகாற்செல்வனென்றதை முற்கூறியவாறருன் (3–4, உரை) முடிக்க.

அல்லற்காலே விருந்தின்மன்னரில் தனித்துயரெய்தக் களிமகிழ் வெய்த வாய்வைத்தூத மறுகிற்றூற்ற மணிவிளக்கெடுப்ப மாலே வந்திறுத் தெனவென்க.

21-6. இளைய ராயினும் வெள்ளி விளக்கத்து

(இ-ள்) தாம் பிராயத்தான் இளையராயினும் பகைவேந்தரை முற்றக் கடியவல்ல செருவின்மேமபட்ட தென்னர் குலத்திலே முதறறேன் றுதலாலே அந்திப்பொழுதே செவ்வானினிடத்தே வெண்பிறை, தான் தோன்றி வருத்ததத்தைத் தரும மாலேயாகிய குறும்பை எறிந்து ஓட்டி அரசியலில் தப்பாது தனது வெள்ளிய கதிராகிய புகழைப்பரப்பிச் சந் திரன் நாட்டையாண்ட வெண்மையையுடைய விளக்கத்திலேயென்க.

தென்னர் குலமுதலாதலினென்பதற்குத் தென்னர் குலத்திறகு முத லாகையாலேயெனினும் அமையும் சோமகுலத்தென்னரென்னுது தென் னர்குலச் சோமனென்றார், அவன், அளியினெத்து வலியினும் தெறலி னும் ஒவ்வாமையானும் குறைவும் நிறைவும் மறுவுமுடைமையானும் இவர்க்கு அவை இன்மையானும் உயர்ச்சிநோக்கி. பிறை [1] தென்னர்குல மாதலின், வளவர் குலத்து இரவியாண்ட நிலமழிய வந்துவிட்ட மாலேக் குறும்பை எறிந்து ஓட்டி ஆண்டதென்க, அன்றி ஓட்டித் தான் மீனிராச் சியத்தை ஆண்டதெனினும் அமையும். அந்தி - மாலேப் பின்பொழுது வாளாது வானத்துப்பிறையென்னுது வெண்பிறையெனப் பண்படுத்த மையான், [2] எடுத்தமொழி இனஞ்செப்பிச் செவ்வானத்து வெண்பிறை தோன்றிய தென்பதாயிற்று. புன்கண் - வருத்தம். மாலேயைக் குறும் பென்றார், இடைநின்ற காலத்துப் புகுந்து வருத்துதலின். குறும்பெறிந் தோட்டி - குறும்பை அறுத்தோட்டி. பான்மையிற்றிரியாது-அரசியலின் வழாது. பாற்கதிர் - பால்போலுங்கதிர், அதற்குப் புகழெனவும் ஒரு பொருள் தோன்றும் மீனரசு - சந்திரன்; உடுபதியென்பவாதலின். அன்றி மீன் இராச்சியமெனினுமமையும்.

27-34 இல்வளர் முல்லேயொடு மாதவி யன்றியும்

(இ-ள்) முல்லேயொடு மல்லிகையும் ஒழிந்த தாழிக்குவளே முதலிய பல பூவும அவிழ்ந்த பள்ளியிடத்தே பொலிவுபெறறு அழகேந்திய அல் குல் தன்னிடத்தில் துகில்செல்லப்பட்டுச் செந்துகிர்க்கோவையாகிய மேகலே அசைந்தனவாய் இரங்காநிறக நிலாவினது பயனேக்கொள்ளு தற்குக் காரணமாகிய உயர்ந்த நிலாமுற்றத்தின்கண்ணே தன் காதல னுக்கு ஒருகாற் கலவியையும் மறுகாற் புலவியையும மாறியளித்து அவ் விடத்து ஆர்வமிக்க நெஞ்சத்தோடு கோவலனே எதிரேற்று முயங்கி அம்

[1] "சேர்நதார் புறங்கண்டு செந்நிலத் தன்றுதிண் டேர்மறித்துப், பேர்ந்தான் றனது குலமுத லாய பிறைக்கொழுந்தே" (இறை 41, உரை, மேற்.) [2] தொல். கிளவி. 61.

மூயக்கத்தால் முன்குலைந்த ஒப்பனையைப் பின்னும் வேட்கை விளக்குங் கோலமாகத் திருத்திய மாதவியன்றியுமென்க.

இலவளர் - மனைவளர், ஒடு எண்ணெடு சேக்கைப்பள்ளி - சேரும் சயனம துகிர்க்கோவை - பவளக்கோவை துகின்மேகலை - துகின்மேற சூழ்நத மேகலையென்பாருமுளர் அசைந்தன வருநத நிலவுப்பயன் கொள்ளுமென இடக்கரடக்கிக்கூறினர் எதிரியெனவே மூயக்கம் கூறினர். இனி, சென்று அகன்றெனச் செல்லுதலை அகறலாக்கி, அகனறேந்தல்குலிடத்துதி துகின்மேற சூழ்ந்த மேகலை அசைந்தனவாய் இரங்கவெனினுமமையும. மேகலை - பவளக்கோவை எடடினுற்செய்தது; [1] "எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவை" என்ருராகலின், "தவழும புதலவரை யொருகையாற் றழீஇப், பவழஞ் சேர்நத பல்காழல்குலர்" (பெருங் 1 43 145-6) எனருர் கதையினும்

விளக்கத்திலே பொலிந்து அளிதது எதிரிக் கோலங்கொண்ட மாதவியென்க.

அவிழ்ந்த பூஞ்சேக்கையெனவே செவ்வியும், பொலிந்தெனவே அழகும் இளமையுங்கூறிற்று.

35 - 6 குடதிசை மருங்கின் காரகி றுறந்து

(இ - ள்) மேற்றிசையிடதீதுண்டான வளமுறியோடே கீழ்த்திசையிடதீது உண்டான அகில் முதலியவறருற புகைக்கும் புகையைதீதுறந்தென்க.

குடதிசை அயிர் - யவனதேசதீது அயிர், அயிர் - கண்டுசருக்கரை. குணதிசையகில், காரகில். குடதிசை, குணதிசை, வெள்ளயிர், காரகி லென்பனவறறுட் செயயுளின்பமும அலங்காரமும் உணர்க. அகிலென்றது ஆகுபெயராற புகையை, "இருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்ப" (56) என்ருர் நெடுநல்வாடையினும். புகையுறுப்பு ஆறுள வாகவும் தலைமைபறறி இவ்விரண்டினையும் கூறினர்.

37 - 8 வடமலைப் பிறந்த சந்தனமறுக.

(இ - ள்) வடதிசைக்கண்ணதாகிய இமயமலைக்கட்பிறந்த சிலாவட்டதீதிலே தென்றிசைக்கண்ணதாகிய பொதியமலையிற்பிறந்த சந்தனம் சுழல வென்க.

வான்கேழ்வட்டம் - மிக்க ஒளியையுடைய சிலாவட்டம்; "வடவரை தந்த வான்கேழ் வட்டம்" (51) என்ருர், † நெடுநல்வாடையிலும். மறுக - சுழல, அரைக்கவென்றபடி அகிறுறந்து சந்தனமறுகவென்க. இவற்றின் விரோதமு முணர்க.

39 - 46. தாமரைக் கொழுமுறி களித்துயி லெய்த

(இ - ள்) தாமரைக் கொழுமுறியினையும், அதன் மலரினையும், குவளையையும், கழுநீர்மலரினையும, பச்சிலையுடனே கலந்து தொடுதீத படலைமாலையுடனே கோவையுறற பருமுதீதமும் நிறதீத சுண்ணதீதோடு சிந்திக் கலந்துகிடந்த வளவிய பூஞ்சேக்கையிடதீது அங்ஙனமபுணர்ந்த

---

[1] "எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவை, பண்கொள் கலாபம் பதினறு - கண்கொள், பருமம் பதினெட்டு முப்பதீ திரண்டு, விரிசிகை யென்றுணரற் பாற்று." (பி - ம்.) † 'பெருங்குறிஞ்சியிலும்'

உபகரணப்புணர்ச்சி யிறுதியில் மயங்கிய மகளிர் தென்றலால் மயக்கம் தீர்ந்து தம் காதன்மிகுதியால் மயங்கித் தமது ஆவிபோலுங் கொழுநர் மார்பிடத்தே காவிபோலும் கண்மலர்களைப் பொருந்தவைத்து இன்பக் களியான அனந்தல கூடவென்க

கொழுமுறி - இளநதளிர் காமம் வருமென்பது விகாரத்தாற் காமரு வெனநின்று கண்டார்க்கு விருப்பம் வருமென்பதாயிற்று, காண்வரு பாடமாயிற் காட்சி வருமென்க. குவளை - நீலோற்பலம். மா - நிறம் பைந்தளிர் - பச்சிலை. படலை - இலைதொடை. பரூஉக்காழாரம் - பருமுத்துவடம். சுந்தரம் - நிறம். அளைஇ - கலந்து. சிந்துபு அளைஇயென மாறுக. மயங்கினர் மலிந்து - மயங்கினராய்க் காதன்மிக்கெனினுமமையும். ஆங்கு - அங்ஙனம். களிதுயில் - இன்பதுயில்.

47 - 57 அஞ்செஞ் சீறடி கண்ணகி யன்றியும்

(இ - ள்) சீறடி தன்னையணியுஞ் சிறப்பைச் சிலம்பு பெருதொழிய, அல்குல் தன்னையணியுஞ் சிறப்பை மேகலை பெருது நீங்க, முகம் தன்னையணியும் சிறப்பைச் சிறுவியர் பெருது பிரிய, சிவந்து நெடிதான கயல் போலுங்கண் தன்னையணியுஞ் சிறப்பை அஞ்சனம் பெருது மறப்ப, நுதல தன்னையணியுஞ் சிறப்பைத் திலகம் பெருமலிழப்ப, தன்னைக் கூடி ஞற்பெறுந் தவளவாணகையைக் கோவலன் பெருது இழப்ப, தன்னை அணிந்தாற்பெறுங் கூந்தலின் மணத்தைப் புழுகுநெய் பெருது மறப்ப, இவை இங்ஙனமாம்படி தான் எழுதாளாய் மகிழாளாய்க் காதினளாய்க் கையற்ற நெஞ்சத்தையுடையளாகிய கண்ணகியன்றியுமென்க.

துகில் அல்குற்கு அடை, "துப்புறழ் தொண்டைச் செவ்வாய்" (சீவக 107) போல நின்றது. மேகலை - எண்கோவை. கொங்கைமுன்றில் - முலைமுற்றம. மங்கலவணியிற் பிறிதணி - மங்கலவணியின் வேறான அணி கொடுமை - வளவு. வடிந்து வீழ்காதினளென்பது [1] அணியாமையினும் பிறந்த அழகு கூறிற்று வியர் பிரிய விகாரம்; அன்றி வியர்ப்பு இரியவெனினுமமையும். இரிதல் - நீங்குதல். நெய் - புழுகுநெய். ஒழிய நீங்கப் பிரிய மறப்ப இழப்ப என்பன பரியாய வாய் பாட்டான் வந்து இழப்பவென்னும் பொருளவாயின. இவ்வினையெச்சங்களை எழுதாள் மகிழாள் காதினளென்னும் வினைப்பெயரான் முடித்து இப்பெயர்கட்குப் பண்பொட்டு விரித்து இவற்றைக் கையற்றவென்னும் பெயரெச்சத்தோடு முடித்து இப்பெயரெச்சத்தை நெஞ்சென்னும் பெயரோடு முடித்து இதனையுடைய கண்ணகி யென்க இனித்தவளவாணகை கோவலனிழப்ப வென்றதனால் அவன் பிரியவென்பதாம, ஆகவே இவ்வுறுப்புக்கள் அவன் பிரிவுக்கு உடம்பட்டனவென்று முனிந்து ஒழிய நீங்கப் பிரிய மறப்ப இழப்ப இவற்றோடு குழையையும் துறந்த காதினள் எழுதாள் மகிழாளாதலான் இவையும் பயனிழப்பத் தானும் அழகும் இன்பமுமிழத்தலாற் கையற்ற நெஞ்சினையுடைய கண்ணகி

[1] கும்ப. 6. 13 . 18.

யென உரைப்பினுமமையும் ; " அருங்கல .....அதுக்கினுள் " (1372) என வும், " மஞ்சுசூழ்.....சீறினுள் " (1373) எனவும் சிந்தாமணியினும் கூறினராகலின்.

58 - 71. காதலர்ப் பிரிந்த புலம்புமுத்துறைப்ப

(இ - ள்) அங்ஙனம் கையற்ற கண்ணகியே யன்றியும், தம் காதலரைப் பிரிந்த மாதர் பிரிவால் துன்பமுறுதலானே ஊதுகின்ற துருத்தியின் உலைமூக்குப்போல அழலெழ உயிர்த்தனராயச் செருக் கடங்கி இவ்விளவேனிறகாலத்திற்கு அமைந்த நிலா முறறத்தில் மேவா தொழிந்து கூதிர்க்காலத்திறகு அமைநத இடைநிலத்து ஒடுங்கி ஆண்டுத் தென்றலும நிலவும புகாமற சாளரக் கண்களையடைத்துச் சந்தனமும முத்தும ஆகத்துமுலையில் அடையப்பெறுது வருந்தக் குவளை செங்கழுநீர் முதலிய குளிர்ந்த மலர்கள் தாம் விரும்பிய பூஞ் சேக்கையிற பள்ளித்தாமமாய மேவப்பெறுமல வருந்தத் தன் சேவலோடு புணர்நத அன்னப்பேடை அப்புணர்ச்சியான் உருகியுதிர்த்த வயிறறின் மயிர் எஃகிப்பெய்த பல்வகையணைமீதே மேன்மைபெறத் தம் கொழுநர் அகலத்தே துயிலும் களித்துயிலைப் பெருமல் அவரோடு முன்பு ஊடிய காலத்து இடைநின்ற குமிழையெறிந்து கடைநின்ற குழையைத் துரந்து [1] பெருமையும உரனுமுடைமையாற கலங்காத நெஞ்சமும கலங்குமபடி கடைசிவந்து குறுக்கிடடுப் பிறழும் நெடிய கண்கள் அங்ஙனம் பிறழ்ந்து உவகை முத்தைச் சிநதாது புலமபுமுத்தைச் சிநதவென்க.

நோதக - கண்டார்க்கு நோவுதக ஊதுலைக்குருகு - துருத்தி ; வெளிப்படை. அலர்தல் - பரத்தல ஆகத்துமுலையென்க, முலையாக முமாம். கழியவென்பது ாண்டு வருந்தவென்பதாயிறறு துணை - சேவல். தூவி - மயிர் இணையணை - பலவான அணை, " ஐந்துமூன் றடுத்த " (சீவக. 838) என்ருராகலின். திருந்து துயில் - முற்கூறிய களித்துயில் உடைப்பெருங் கொழுநர் - தங்களையுடைய பெரிய கொழுநர். ஊடறகாலத்து - முன் ஊடுங்காலங்களில கலங்காவுள்ளம் - பெருமை யும் உரனுமுடையவுள்ளம். விலங்கிநிமிர் - குறுக்கிடடுப்பிறழும் நிமிர் நெடுங்கண் விணைதிதொகை. புலம்புமுத்து - துன்பக்கண்ணீர், உவ கைக் கண்ணீருமுண்டாகலின், புலம்பு - தனிமையுமாம் உறைப்ப - உகுப்ப.

கண்ணகியன்றியும் மாதர ஒடுங்கிக் கழிந்து அடைத்து வருந்தக் கழியப்பெறுது முத்துறைப்பவென்க

72 - 6 அன்னமென்னடை மலர் விழிப்ப

(இ - ள்) அன்னமாகிய மென்னடையினையும் தேம்பொதி நறுவிரை ஆம்பனறும் தாமரையாகிய வாயினையும் தண்ணறலாகிய கூந்தலினை யுமுடைய பொயகையென்பாள், பாண்தன்மையைத் தமமிடத்தேயுடைய வண்டுகளாகிய பள்ளியுணர்த்துவார் புறநீர்மையென்னும திறத்தாற் பள்ளியெழுச்சிபாட, அழகுவரும் குவளையாகிய கண்மலர்விழிப்பவென்க.

[1] தொல். களவு. 7.

ஆம்பல். வாய்க்கு அடை; "துப்புறழ் தொண்டைச்செவ்வாய்" (சீவக. 107) போல, பண்ணுமாம். நாறும் - தோன்றும்; "அருமணி மரகதத் தங்க ணூறிய" (183) எனச் சிந்தாமணியினும், "மரகத மணிக்கயத் தங்க ணூறிய, அழனிறப் பொன்னித ழாயிரம் விரிதீது" எனக் கதையினும் கூறினராகலின். தேம் - இனிமையும், தேனும். நறுவிரை - நல்லமணம். பாண் - பாண்சாதி. நோதிறம் - நொந்த திறம், ஆவது புறநீர்மை அது பாலைப்பண்ணின் திறம் ஐந்துள் ஒன்றென்க, என்னை? "தக்கராக நோதிறங் காந்தார பஞ்சமமே, துக்கங் கழிசோம ராகமே - மிக்கதிறற், காந்தார மென்றைந்தும் பாலைத் திறமென்ருர், பூந்தா ரகத்தியனுர் போந்து" என்பவாகலின்.

குவளைக்கண்மலர் - குவளையாகிய கள்ளையுடைய மலர், குவளைக் கண்மலருமாயிற்று. விழிதீதல் - மலர்தலும், கண்விழிதீதலுமாயிற்று

இனிதீ தேம்பொதி நறுவிரைதீதாமரையாகிய ஆம்பல் நாறும் செவ் வாயெனினும அமையும்.

இனிப் பெண்பாலாதலிற் பண்தோறறும் வாயென வாய்க்கு அடை யாக்கலுமொன்று. பாணைப் பாட்டாக்கி வண்டின்வாய்க்கு அடையாக் கினும் அமையும்.

பாட விழிப்பவென இயையும அன்னமென்றதுமுதல் விழிப்பவென் னுந்துணையும கூறிய இவை **உருவகமென்னும** அலங்காரமென் றுணர்க.

77 - 84 புள்வாய் முரசமொடு நனிசிறந்தது

(இ - ள்.) பொய்கை கண்மலர்விழிப்பப் புள்ளொலியாகிய முர சுடனே கோழியும் சங்கமும் முறைமுறையார்ப்பக் கடல்போலும் பரப் பையும் ஒலியையுமுடைய ஊரைத் துயிலெழுப்பி அல்லறகாலை வந்து புக்க இருள் இவ்விடத்துநின்று நீங்கும் வைகறையாமமளவும் முன் சென்ற அரையிருளினும ஓர் யாமத்தினும அரையாமத்தினும் ஒருகணப் பொழுதும் துஞ்சாராம்படி காமன் ஏந்திதீ திரிதருதலானே இந்நகரம் மிகவும காவல் சிறந்ததென்க.

"நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்" (189. 3) என்ருர் புறத்தினும், "கைச்சிலை கணையோ டேநதிக் காமனிக் கடையைக் காப் பான்" (290) என்ருர் சிந்தாமணியினும்.

முள்வாய் - கூர்தீத வாய் முறைமுறையார்ப்ப - ததீதம் இனமரபி னுர்ப்ப, இன். உவம உருபு [1] "துயிலெடை" என்பவாகலின், எடுப்பியென்ருர், பிரிந்தார்க்கும புணர்ந்தார்க்கும் துயிலின்மை காம னுல் வருதலின். இரவு தலைப்பெயருமென்பதனை இரவுதீதலையென்ருர், "கிளந்தவல்ல" (தொல் குற்றியலுகரப். 78) என்னுமதிகாரப்புறன

[1] "சூத ரேதீதிய துயிலெடை நிலையும" (தொல். புறதீ 36), "பயில்பூம் பள்ளித் துயிலெடை மாக்கள்" (பெருங். 4. 5 : 81.)

டையால் " தடவுத்திரை " போல வல்லெழுத்துப்பெற்றது. தலை - இடம். பெயரும் - நீங்கும். காறும் - அளவும். அரையிருள் - இரண்டாம் யாமம், யாமம் - ஓர் யாமம்; அரையிருள்யாமம்: உம்மைத்தொகை; இருபெயர்க்கண் வந்தது பகல் - அரையாமம்; " மற்றை யாமம் பக லுறக் கழிப்பி " (653) என்றார் மதுரைக்காஞ்சியுள்ளும்; பகுத்தலிற் பகலாயிற்று. நனி - மிகுதி.

ஆர்ப்ப எடுப்பித் தலைப்பெயரும் வைகறைகாறும் துஞ்சாராம்படி காமன் ஏந்தித் திரிதருதலான் நகரம் காவல் மிகச் சிறந்ததென்க.

இனித் துஞ்சானென்று பாடமோதி, [1] காமன் துஞ்சாஞுய்த் திரிதரு தலின், நகரம் காவல் சிறந்ததெனினும் அமையும்.

என் : அசை.

இது முதல் நடு இறுதி அளவடியான் முடிதலின், நிலைமண்டில ஆசிரியப்பா.

வெண்பா

கூடினுர் பானிழலாய்க் கூடார்பால் †வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோற் காட்டிற்றே—கூடிய
மாதவிக்குங் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்குங் கங்குற் பொழுது

(ச) அந்திமாலைச் சிறப்புச்செய்காதை முற்றிற்று

---

[1] " பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு, காமன் றிரியுங் கருவூரா " (சிலப் 5 49, அடியார் மேற்.)

(பி - ம்) † ' வெய்தாய்த்தங், காவலன் '

ஐந்தாவது
இந்திரவிழவூரெடுத்த காதை

அலைநீ ராடை மலைமுலை யாகத்
தாரப் பேரியாற்று மாரிக் கூந்தற்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதையிருட் படாஅம் போக நீக்கி
உதைய மால்வரை யுச்சித் தோன்றி
உலகுவிளங் கவிரொளி மலர்கதிர் பரப்பி
வேயா மாடமும் வியன்கல விருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்

1 - 2. மலையாகிய முலையையுடைய ஆகத்துப் பேரியாறுகிய ஆரம். (1) நீரை ஆடையாகவும், மலையை முலையாகவும் (2) யாற்றை ஆர மாகவும், மாரியைக் கூந்தலாகவுமுடைய (3) மண்ணகமடந்தையுடைய (4) இருளாகிய படாதிதை நீக்கியென்க.

6 உலகு விளங்குதற்குக் காரணமான ஒளி - ஆதித்தன், கதிரைப் பரப்ப.

7. வேயாமாடம் - தட்டோடிட்டுச் சாந்துவாரப்பட்டன, நிலா முற்றமுமாம். கலவிருக்கை - பண்டசாலை.

8. மான்கட்காலதர் - மான்கண்போன்ற சாளரம்.

9. கயவாய் - புகார் 10. யவனர் - சோனகர்.

11. புலம்பெயர் மாக்கள் - கடலோடிகள்

12 இலங்குநீர்வரைப்பு - அவர்களிருக்கும் அலைவாய்க்கரை.

அடி, 1–2. "மணிமலைப் பணைதீதோண் மாநில மடந்தை, அணி முலைத் துயல்வரூஉ மாரம் போலச், செல்புன லுழந்த சேய்வரற் கான் யாற்று" (சிறுபாண் 1–3), கலித். 28 5.

7–58. இவ்வடிகள் மணி 28 . 29 - 68-ஆம் அடிகளின் கருதீதை ஒதீதுள்ளன.

11. பல்வேறு நாட்டினர் : 6 . 130, மணி 1 16, பெருங். 1. 57 : 65 ; சீவக. 93.

(மேற்.) 8. சீவக. 2291, ந.

வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையு மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினு மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்
தூசுந் துகிரு மாரமு மகிலும்
மாசறு முத்து மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்துகடை யறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணுடை யாட்டியர்
மீன்விலைப் †பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் ‡மைந்நிண விலைஞரோ
டோசுநர் செறிந்த வூன்மலி யிருக்கையும்

13. வண்ணம் - தொய்யிலெழுதுவன.

14. புகை - மயிருக்குப் புகைக்கும அகின்முதலாயின. அவை யாவன.—"அஞ்சனக் கட்டி யரியாசம பச்சிலை, ஆர மகிலுறுப்போ ரைந்து"

விரையாவன —"கொட்டந் துருக்கந் தகர மகிலாரம், ஒட்டிய வைந் தும் விரை"

17. காருகர் - நெய்வோர், அச்சுக்கட்டிகள் முதலாயினேருமாம்.

20. அருங்கலம் - ஆபரணம. வெறுக்கை - அத்தம அளந்துகடை யறியா - இவ்வளவென முடிவறியாத

21. வளம் தலைமயங்கிய - பலவளங்களும் தலைமயங்கிய.

22. பகுதிப்பண்டமொடு - இங்ஙனஞ்சொன்ன பல பண்டங் களுடனே

23. கூலம் - கருஞ்சரக்கு. கூலவீதி - அங்காடி

24. காழியர் - பிடடுவிறபார், வண்ணருமாம். கூவியர் - அப்பம் சுடுவார்.

26 பாசவர் - வெற்றிலை கட்டுவோர், சூட்டிறைச்சி விற்பாருமாம். வாசவர் - பஞ்சவாசம் விறபோர், அவை —"நக்கோலந் தீமபூதி தகை சா லிலவங்கம், கப்பூரஞ் சாதியோ டைந்து"

மைந்நிண விலைஞர் - ஆட்டுவாணிகர

27. ஓசுநர் - பரவர், மீகாமர், எண்ணெய்விற்பாருமாம்.

24. இவ்வடிமுதலியவறறுடன் "பன்மீன்விலைஞர்" (மணி. 28 . 31) என்பது முதலியவறறை ஒப்பிடுக.

(பி - ம்.) †'பரவர்' ‡'பன்னிண விலைஞர்', 'பைந்நிண விலைஞர்'

கஞ்ச காரருஞ் செம்புசெய் குநரும்
மரங்கொஃ றச்சருங் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரு நன்கலந் தருநரும்
துன்ன காரருந் தோலின் றுன்னரும்
கிழியினுங் கிடையினுந் †தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினுங் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமும்
கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகு மறையோ ரிருக்கையும்

28. கஞ்சகாரர் - வெண்கலமவிறபார், கன்னர். (பா) செம்புசெய்ஞ்ஞர் - செம்பு கொட்டுவார்.

29. கருங்கை - வலியையுடைய கை

30. கண்ணுள்வினைஞர் - சித்திரகாரிகள். மண்ணீட்டாளர் - சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவார், மண் - சுதை, "மண்ணேடியைந்த மரத்தனையர்" (குறள், 576) என்றாராகலின், குயவருமாம்.

31. (பா) பொன்செய்புலவர் - உருக்குத் தட்டார், அரிப்பாருமாம். நன்கலம் தருநர் - இரத்தினப்பணித்தட்டார்.

32. துன்னகாரர் - பாணர். தோலின்றுன்னர் - செம்மார்.

33. கிழி - சீலை. கிடை - கிடேச்சு.

34. பழுதில்செய்வினைப் பால்கெழுமாக்கள் - இவையிற்றுற் பொய்க் கொண்டை முதலியன செய்பவர்.

36 வழித்திறம் - பண்வழிப்பிறக்குந்திறம்.

37 பெரும்பாண் - குழலர் முதலோர்

38 - 9 (பா) சிறுகுறு பாக்கமும - இங்ஙனங்கூறின இவர் ஒழிந்த பிறதொழில்களையுடையவர்களோடும் விளங்கிய மருவூர்ப் பாக்கமுமென்க.

40. கோவியன்வீதி - செண்டுவெளிப்புறத்தெரு, இராசமார்க்கமெனினுமாம்.

41 - 2 வாணிகர் மாடமறுகு - வணிகர் குடியிருப்பு. மறையோ ரிருக்கை - பஞ்சக்கிராமிகளிருப்பு

அடி, 29. கருங்கைக்கொல்லர் புறநா. 21 7. 30. மண்ணீடு. மணி. 6. 47.

37 பெரும்பாணிருக்கை. மதுரைக். 342. 40-41, மணி. 4 : 37-8.

(பி - ம்.) † 'கழிபல பெருக்கி'

வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதருங் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையும்
திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொ
டணிவஃ போழுந ரகன்பெரு வீதியும்
சூதர் மாகதர் †வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகைய ராடற் கூத்தியர்
பூவிலை மடந்தைய ரேவற் சிலதியர்
பயிருழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையும்
கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தே ரூருநர் கடுங்கண் மறவர்
இருந்துபுறஞ் சுற்றிய பெரும்பா யிருக்கையும்

44. ஆயுள்வேதர் - கோயிலார் காலக்கணிதர் - கணியர், காலதீதை எண்ணியிடுவார்

46. திருமணிகுயிற்றுநர் - முத்துக்கோப்பார், வேகடிகளுமாம்.

47. வஃபோழுநர - சங்கறுப்பார்.

48. சூதர் - கைவாரிகள், நின்றேத்துவார். மாகதர் - இருந்தேத்துவார், பட்டுக்கள். வேதாளிகர் - வைதாளியாடுவார்

49. நாழிகைக்கணக்கர் - கடிகையார் கண்ணுளர் - சாந்திக்கூதீதர்.

50 காவறகணிகையர் - இராக்கடைவேசையர் ஆடற்கூதீதியர் - அகக் கூதீது முதலியன ஆடுவார்.

51 பூவிலைமடந்தையர் - பரிசங்கொள்வார் ஏவற்சிலதியர் - குற் றேவன்மகளிர்.

52. குயிலுவர் - தோற்கருவி துளைக்கருவி நரப்புக்கருவி உருக்குக் கருவியாளர். பன்முறைக்கருவியர் - படைக்கும் விழவுக்கும் கொட்டுவார்.

53. நகைவேழம்பர் - சாரமாணிகள்

54. பரிகடவுநர் - அசுவவாரியர், பண்ணுவாருமாம் களிற்றின் பாகர் - யானைப்பாகர்.

55. தேரூருநர் - தேர்ப்பாகர். மறவர் - வீரர்

56. பாயிருக்கை - பரந்தவிருப்பு.

அடி, 44. காலக்கணிதர் மணி. 2 . 29. 48 : மதுரைக் 670-71. 49. நாழிகைக் கணக்கர் . முல்லை அடி, 55-8, மணி. 7 · 65, பெருங். 1. 57 . 77-9.

50. காவற்கணிகை மணி. 22 . 30 51. பூவிலை . மணி. 24 . 19. (மேற்.) 51 : சீவக. 2725, ந. (பி - ம்.) †'வேதா ளியரொடு'

பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமும்
இருபெரு வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியி †னிடைநில மாகிய
கடைகால் யாத்த மிடைமரச் ‡சோலைக்
கொடுப்போ ரோதையுங் கொள்வோ ரோதையும்
நடுக்கின் றி நிலைஇய நாளங் காடியிற்
சித்திரைச சித்திரைத் திங்கள் சேர்ந்தென
வெற்றிவேன் மன்னற் குற்றதை யொழிக்கெனத்
தேவர் கோமா னேவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகைப்
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து

57. இவறறையுடைய பீடுகெழுசிறப்பிற பெரியோரென்க

57 - 8. பெருமையையுடைய பெரியோர் திரண்ட பாடலமைந்த சிறப்பிற படடினப்பாக்கமுமென்க

59 - 60 மருவூர்ப்பாக்கமும படடினப்பாக்கமுமென இருகைகைத் தாகிய ஊரின நடுவிடதீதை முனையிடமபோலவென்றது அவறறிறகு இடைநிலம் வெளிப்பட்டுப் பொதுப்படக் கிடதீதல் கருதி

61. கடை கால்யாதீத - கடை ஒழுங்காக யாதீத மிடைமரச் சோலை - மரம் நெருங்கின சோலை

61 - 3. கடைகளை மரதீதடியிலே கட்டப்பட்ட மரச்சோலையையுடைய நாளங்காடியென்க

64. (பா) சித்திரைச்சித்திரைத் திங்கள் சிறந்தென - சித்திரை மாததீதுச் சித்திரைநாள் சிறந்ததென்கையால், சித்திராபூரணையென்க.

65 உறறதை - இடையூற்றை

67. பூதத்துக்கடை - பூதவாசல பீடிகை - பலிபீடிகை.

68 புழுக்கல் - அவரை துவரை முதலியன. நோலை - எள் ளுருண்டை. விழுக்குடைமடை - மாங்கிசத்துடனே விரவினசோறு.

69 பொங்கல் - கள்ளு.

அடி, 58 . பட்டினப் 218
65. வெறறி...ஒழிக்கென . சிலப். 5 : 79.
68 - 9 : சிலப். 12 37-8, பு. வெ. 40.
(மேற்.) 64. 'சித்திரைத்திங்கள்' நன். 175, மயிலை.
(பி - ம்.) † 'னிடைநிலத் தாக' ‡ 'சோலையுள்'

துணங்கையர் குரவைய ரணங்கெழுந் தாடிப்
பெருநில மன்ன னிருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
மாதர்க் கோலத்து வலவையி னுரைக்கும்
மூதிற் பெண்டி ரோதையிற் பெயர
மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப்பலி பீடிகை
வெந்திறன் மன்னற் குற்றதை யொழிக்கெனப்
பலிக்கொடை புரிந்தோர வலிக்குவரம் பாகெனக்
கல்லுமிழ் கவணினர் கழிப்பிணிக் கறைத்தோற்
பல்வேற் பரப்பினர் மெய்யுறத் தீண்டி
ஆர்த்துக் களங்கொண்டோ ராரம ரழுவத்துச்
சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை

70. துணங்கை - சிங்கி, என்னை? "பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கதி, தொடக்கிய நடையது துணங்கை யாகும்." குரவை - கைகோதீ தாடுதல், "குரவைக் கூதீதே கைகோதீ தாடல." அணங்கெழுந்தாடி - தெய்வமேறியாடி.

71 - 3. (பா) நிலமடங்கலும் பசியும் பிணியும் பகையும் நீங்கி மன்ன னுக்கு வசியும் வளனும் சுரக்கவெனவாழ்த்தி வசி - வசீகரம்.

74. மாதர்க்கோலம் - எல்லாரும் காதலிக்கப்பட்ட ஒப்பனை வலவை யின் - சமதீதால், [1] நாணிலிகள்போல வென்றுமாம்.

75 மூதிறபெண்டிர் - மறக்குடிமகளிர் ஓதையின் - ஆரவாரதீ துடனே. பெயர - அவர் பலியிட்டுப் போனவளவிலே.

(6) அவிரொளிகதிர்பரப்பாநிறபப் (68) புழுக்கல் முதலாயினவற்றைப் (67) பீடிகையிலே (69) சொரிநது (71) நிலமடங்கலும் (72) பசியும பிணி யும் பகையுநீங்கி (71) மன்னனுக்கு (73) வசியும் வளனும் சுரக்கவெனப் (75) பெண்டிர் நின்று (73) வாழ்தீதிப் (75) பெயர வென்க

76 - 9. வீரரும் மாக்களும் ஒருவரினெருவர் முற்படப்போய் முழுப் பலி பீடிகையிற்பலிகொடுதீது ஒழிப்பாயாகவென்று பூததீதுக்குச்சொல்லி.

80. வலிக்குவரம்பாகெனல்-வலிக்கு எல்லையாகென வஞ்சினங்கூறல்.

81. கறைதீதோல் - கருங்கடகு.

82. பல்வேறபரப்பு - பலவேலையுமுடைய பரப்பு.

83. களங்கொண்டோர் - வென்றேர். அழுவம் - பரப்பு.

84 - 6. சூர்தீது..... . வைதீது - அச்சதீதைச்செய்து கடை சிவந்த கண்ணினையுடைய தலையை அறுதீது நறபலிபீடிகையிலே வைதீ தென்க.

அடி, 72 - 3 . மணி. 1 · 70 - 71 , பெருங் 5 7 46.

81. கழிப்பிணிக்கறைதீதோல் அகநா. 24 . 14, 67 · 13.

84. சுடுநோக்கு : சீவக. 807.

[1] நாலடி. 268.

வெற்றி வேந்தன் கொற்றங் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்
குயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து
மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி
இருநில மருங்கிற் பொருநரைப் பெருஅச்
செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணுர்ப் பெறுகவிம்
மண்ணக †மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணிய திசைமுகம் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகை ‡விலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ¶யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னுட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னுட்டு வாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் ரூரண வாயிலும்

இனி அரசன் செய்தி கூறுகின்றது —

94. புண்ணியதிசை - வடக்கு.

95. நசைபிறக்கொழிய - என்னினைவு மேற்போகாது பின்னிட் டொழிய.

96. பகை விலக்கியது - பகையாய்த் தடுத்தது.

98. கொடுவரியொறறி - புலியைப் பொறித்து. பெயர்வோற்கு - மீள்வோனுக்கு.

100. இறைகொடுத்த - திறையாகக்கொடுத்த. பந்தர் - முத்தின் பந்தர்.

102. பகைபுறத்து - பகையிடத்து; புறம் - இடம், பகைப்புறமென் பதனைப் பகைபுறமென்றது விகாரம். கொடுத்த - முன்பகையாய்ப் பின் திறையிட்ட. பட்டிமண்டபம் - ஓலக்கமண்டபம்.

103. உவந்தனன்கொடுத்த - $ மித்திரனுய்க்கொடுத்த

104. தோரணவாயில் - தோரணத்தையுடைய வாசல்.

அடி, 87. உயிர்ப்பலி **மணி.** 6 50 அடி, 88. மயிர்க்கண் முரசம் · **புறநா.** 63 7. அடி, 89-94 . **மணி.** 1 . 39 அடி, 90 திருமாவளவன் : **பட்டினப்** 299. அடி, 102 . பட்டிமண்டபம் **மணி.** 1 61.

(பி - ம்.) † 'வரைப்பினென்' ‡ 'விலங்கியதிப்' ¶ 'யெழுதிக்', 'யேற்றிக்' $ 'மித்துருவாய்க்'

105 பொன்னினு மணியினும் புனைந்தன வாயினும்
நுண்விளைக் கம்மியர் காணு மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின விவைதாம்
ஒருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்தும்
110 அரும்பெறன் மரபின் மண்டப மன்றியும்
வம்ப மாக்க டம்பெயர் †பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பல்பொதிக்
கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலு ‡மொரீஇய வாகிக்
115 கட்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்த லீயா
துள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்
கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
அழுகுமெய் யாளரு முழுகின ராடிப்

105 - 9. இவைதாம் பொன்னுனும் மணியானும் செய்யப்பட்டன வாயினும் கம்மியராற் காணப்படாதன, இவர்களுடைய முன்னோர் செய்த உதவிக்குப் பிரதியுபகாரமாக மயன் நிருமித்துக் கொடுத்தன, இவை தனித்தனி இத்தன்மையவாயினும தம்மிற்புணர்ந்து ஏதீதப்படுமென்க.

110. அன்றியும - இங்ஙனம சொல்லப்படும் மூன்றிடமன்றியும்.

111. வமபமாக்கள் - புதியோர். தமபெயர் பொறித்த - தமது பெய ரெழுதிய

112 கண் - அவ்விடத்து. எழுதீதுப்படுத்த - இன்னரது பொதியென எழுதி இலச்சினையிட்ட.

112 - 3. பொதியினையுடைய கடைமுகத்து வாயிலும் கருந்தாழாகிய காவலும்.

114. உடையோர்காவல் - இவற்றையுடையோர்காவல் ஒரீஇயவாகி - நீங்கினவாகி.

115. கட்போர் - களவுகாண்போர். 117. பனிக்கும் - நடுக்கும்.

111 - 7. புதியோர் தம்முடைய பெயர்பொறித்த தனதீதைக் களவு கொள்ளுவோர் உண்டானுல் எடுத்த தனதீதைதீ தங்கள் தலையிலே வைத் துச்சுழன்று திரிகிறதன்றிக் கொண்டுபோகக் கொடாமையான் நினைத்த கள்ளரை நடுக்கும் வெள்ளிடை மன்றமென்க.

அடி, 111 மணி 3 · 126, பெருங் 1 35 20. அடி, 117. வெள் ளிடைமன்றம் மணி 6 91. அடி, 118 கூனும் குறளும் . 27 214; புறநா. 28 2, மணி 12 . 97.

(பி - ம்.) † 'பொறித்துக்' ‡ 'மொரீஇய தாகிக்'

பழுதில் காடசி நன்னிறம் பெற்று
வலஞ்செயாக் கழியு மிலஞ்சி மன்றமும்
வஞ்ச முண்டு மயற்பகை யுற்றோர்
நஞ்ச முண்டு நடுங்குதுய ருற்றோர்
அழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்
கழல்கட் கூளிக் கடுநவைப் பட்டோர்
சுழல வந்து தொழுத்துயர் நீங்கும்
நிழல்கா னெடுங்க னின்ற மன்றமும்
தவமறைந் தொழுகுந் தன்மை யிலாளர்
அவமறைந் தொழுகு †மலவற் பெண்டிர்
அறைபோ கமைசசர் பிறர்மனை நயப்போர்
‡பொய்க்கரி யாளர் புறங்கூற் றுளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காத நான்குங் கடுங்குர லெடுப்பிப்

121. இலஞ்சி - மடு.

118 - 21. கூனர் குறளர் ஊமர் செவிடர் வியாதியாளர் முழுகிவலஞ் செய்ய நன்னிறம்பெறும் இலஞ்சிமன்றமென்க.

122. வஞ்சமுண்டு - வஞ்சனைப்பட்டு. மயற்பகையுற்றோர் - மயக்க மாகிய பகையையுற்றோர்

124. அழுந்தினர் - அழுந்தப்பட்டோர். 127 நிழல் - ஒளி.

122 - 7. வஞ்சமுண்டு மயக்கமும் துயருமுற்று அழுந்திப் பட்டோர் சூழ்ந்து வணங்க நீங்கும ஒளிகாலப்பட்ட கல்லுநின்றமன்றமென்க.

128. தவமறைநதொழுகல் - தவத்திலே மறைந்து தவமின்றி ஒழு குதல்.

129. அவமறைந்தொழுகும் (பா) அலவைப்பெண்டிர் - மறைந்து அவமேயொழுகும் அலவைப்பெண்டிர்

130. அறைபோகமைச்சர் - கீழறுக்கும் அமைச்சர். பிறர்மனை நயப் போர் - பிறர்மனைவியை விரும்பினோர்.

131. பொய்க்கரியாளர் - பொய்ச்சாட்சிக்காரர். புறங்கூற்றுளர் - புறங்கூறுவோர்.

132. பாசத்துக்கை - பாசத்திடத்து.

133. காதநான்கும் - ஊர்சூழ்ந்த நாற்காதவட்டகையும்.

அடி, 122. மயற்பகை , மணி. 23 · 41. அடி, 124 . மணி. 23 : 69.
(பி - ம்.) † ‘மவலப் பெண்டிர்’ ‡ ‘பொய்க்கரி மாக்கள்’

பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்
அரைசுகோல் கோடினு மறங்கூ றவையத்
துரைநூல் கோடி யொருதிறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவைநீ ருகுத்துப்
பாவை நின்றழூஉம் பாவை மன்றமும்
மெய்வகை யுணர்ந்த விழுமியோ ரேத்தும்
ஐவகை மன்றத்து மரும்பலி யுறீஇ
வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்
கால்கோள் விழவின் கடைநிலை சாற்றித்
தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து

---

134. பூதசதுக்கம் - பூதம திரிகின்ற நாற்சந்தி.

128 - 34. தன்மையிலாளர்முதல் ஆறுவகையாகிய இவர்களைப் பாசதீதில் அகப்படுத்திப் பூதம் புடைத்துண்ணும சதுக்கமென்க.

136. ஒருதிறம - ஒருபக்கம்.

137. நாவொடு நவிலாது - நாவினால் உரையாமல். நவை - குற்றம். குறறதீதுக்காகக் கண்ணீருகுக்கையால் நவைநீரென்றார்; நவநீரென்று பாடமோதிப் புதிய நீரென்பாருமுளர்.

135 - 8. கோல்கோடினும் உரைநூல்கோடி வாரம்பற்றினும் வாய் திறந்துசொல்லாமல் அழுதுகாட்டும் பாவையையுடைய மன்றமென்க.

117 - 40 இவ்வைந்தும மன்றத்திலும பலியிட்டென்க.

84 - 140. பீடதிதிலே தலையை வைத்து முரசு முழக்கி மண்டபமுத லியவற்றிலும் மன்றங்களிலும பலியிடடென்க.

141 வச்சிரக்கோட்டம் - வச்சிராயுதம் இருக்குங்கோயில், இவ்விடத திருக்கிற முரசு

142. கச்சை - கீழ்வயிற்றுக்கச்சை பிடர்த்தலை - பிடராகிய தலை.

143 களிற்றரசு வயங்கிய கோட்டம - ஐராபதம் நிற்குங்கோயில்.

145. தருநிலைக்கோட்டம் - கற்பகம் நிற்குங்கோயில்.

141 - 6 வச்சிரக்கோடடதிதிலிருந்த முரசை ஐராபதம் நிற்குங்கோட் டதிதிலே கொண்டுவந்து யானையிலேயேறறி விழவின் முதலும் முடிவும் அறிவித்துக் கற்பகம் நிற்குங் கோயிலிலிருந்த கொடியை வானிலே செல்லவெடுதெனக

அடி, 134 "பூதமுண்டது புடைத்துண்ணும்" (சூளா. சுயம் 43); "பூதம்புடைத்தது" (தொல் கிளவி. 58, இளம்., சே ந) பூதசதுக் கம் மணி. 20 29. அடி, 135. அறங்கூறவையம் · மதுரைக் 492. 140. ஐவகை மன்றம். சிலப். 6. 17. 142 தக்க 180.

141 - 2 மு. மணி. 1 27-8. 144. கால்கோள்விழவு மணி. 1. 26.

மரகத மணியொடு வயிரங் குயிற்றிப்
பவளத் திரள்காற் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைமுகத் தியாங்கணும்
கிம்புரிப் பகுவாய்க் கிளர்முத் தொழுக்கத்து
மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரண நிலைஇய தோமறு பசும்பொற்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப் பசும்பொற் படாகை
தூமயிர்க் கவரி சுந்தரச் சுண்ணத்து
மேவிய கொள்கை வீதியிற் செறிந்தாங்
கைம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
அரச குமரரும் பரத குமரரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் ரொகுதியர்
இவர்பரித் தேரின ரியைந்தொருங் கீண்டி
அரைசுமேம் படஇய வகனிலை மருங்கில்

147 (பா) குயிறறிய - செய்த. 148 காலையுடைய.

147 - 8. மரகதமணியொடு வயிரத்தைக் குயிற்றிய திண்ணை

150. கிம்புரிப்பகுவாய் - மகரவாய். கிளர்முத்து - அதன் வாயினின்றும் புறப்படட முத்து

151. மங்கலம - அட்டமங்கலம, "செங்கய லிரட்டைதிரு வார்சுடர்க ணுடி, பொங்குகொடி வார்முரசந் தோட்டிபுணர் கும்பம், மங்கலங்க ளெட்டும்" (சீவக. 2487)

147 - 56. 'மரகதமணியொடு' என்றது முதலாக 'மேவிய கொள்கை' என்றது ாருக வீதிக்குச் சிறப்பு.

149 - 56 கடைமுகமெல்லாம், கிம்புரிப்பகுவாயினினறும் புறப்பட்ட தாகப் பண்ணின முத்தொழுக்கத்தினையுடைய தோரணம் நிலைபெற்ற பொற்குமபம் பாலிகை விளக்குப் படாகை கவரி சுண்ணம இவற்றை யுடைய வீதியென்க, சினையின்தொழில் முதனமேல் ஏறிறறு

157. ஐம்பெருங்குழுவுமெண்பேராயமும -"சாந்துபூக் கச்சாடை பாக்கிலை கஞ்சுகநெய், ஆய்ந்த விவரெண்ம ராயதாார - வேந்தர்க்கு, மாசனம பார்ப்பார் மருதீதர் வாழ்நிமிதீத ரோடமைச்சர், ஆசி லவைக் களதீதா ரைந்து"

148 மணி 18 45 154 பாவை விளக்கு மணி. 1 45 பெருங். 1. 38 7

155. சுந்தரச்சுண்ணம். 4 42, மணி. 2 23.

157 மு மணி 1.17, பெருங். 2 5·6. (மேற்.) 157 தொல். கிளவி. 57, ந.

உரைசான் மன்னன் கொற்றங் கொள்கென
மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்
ஆயிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட
தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணக மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டிப்
பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
†மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபிற் றீமுறை யொருபால்
நால்வகைத் தேவரு மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்
அறவோர் பள்ளியு மறனெம் படையும்

168 ஆட்டி - ஆட்ட.

(161) அகநிலைமருங்கில் தம்மரசனை மேம்படுத்தற்கு (160) ஈண்டி (162) வேந்தன் கொற்றங்கொள்வானெனவென வாழ்த்தி (164) அரசுதலைக் கொண்ட (166) குடதிசினீரை (156) இவ்வீதியிலே அடையச்சென்றிந்து (142) ஏறறிச் (144) சாற்றி (146) எடுத்துப் (159) புரவியர் களிற்றின் தொகுதியர் (160) தேரினராய் (158) அரச குமரரும் வணிக குமரரும் (168) ஆட்டவென்க.

169 பெரியோன் - மகாதேவன்.

171. வால்வளை மேனி வாலியோன் - பலதேவன்

175. தீ முறை - ஓமம்.

169 - 75 இக்கோயில்களிலே ஓமம் செய்யாநிற்க. ஒருபால் - ஒரு பக்கம்.

176 நால்வகைத் தேவர் - வசுக்கள், திவாகரர், உருத்திரர், மருத் துவர், ஆதியங்கடவுளர்.

179 அறவோர் பள்ளி - அருகர்தானம் அறனெம்படை - தருமம் பாதுகாக்கிறவிடம்.

அடி, 169 சிலப். 14 7 169-72. புறநா. 56. 1-10, இன்னு. 1. 172 பெரும்பாண் 402, புறநா 58 15. 176 : முருகு. 167. 179. அறவோர் பள்ளி : மணி. 18. 8, 20. 6

(பி - ம்.) † 'மாமறை'

புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
†திறவோ ருரைக்குஞ் செயல்சிறந் தொருபால்
கொடித்தேர் வேந்தனெடு கூடா மன்னர்
அடித்தலை நீக்க வருள்சிறந் தொருபால்
கண்ணு ளாளர் கருவிக் குயிலுவர்
பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணரொ
டெண்ணருஞ் சிறப்பி னிசைசிறந் தொருபால்
முழவுக்கண் டுயிலாது முடுக்கரும் வீதியும்
விழவுக்களி சிறந்த வியலு ளாங்கண்
காதற் கொழுநனைப் பிரிந்தல ரெய்தா
மாதர்க் கொடுங்குழை மாதவி தன்னை
டில்வளர் முல்லை மல்லிகை மயிலை
தாழிக் குவளை ‡ சூழ்செங் கழுநீர்
பயில்பூங் கோதைப் பிணையலிற் பொலிந்து

---

180. புறநிலைக்கோட்டம் - புறம்புள்ள திருக்கோயில்.

179 - 80. (பா) அறவோர் பள்ளியிடத்து அறமகாத்தலையும், சதிதிர முதலான சாலைகளிலே புண்ணிய தானங்களையும் நல்லோர் உரைக்கும் செயல் சிறந்தது ஒரு பக்கமென்றுமாம்.

185. பாடறபாணர் - புணர்க்கும் பாணர்.

186. இசை சிறந்தொருபக்கம்.

178 - 88. சிறக்க விழுநீராட்ட விழவுக்களிசிறந்த வியலுளெனக் கூட்டுக. சிறக்கவென அடையதி திரிக்க.

188. வியலுள் ஆங்கண் - அகன்ற ஊரிடத்து.

(189) 'காதற் கொழுநனை' என்றது முதல் (199) 'நன்மொழி தலைத்து' என்றது இறுதியாகக் கோவலனெடு மாருததீதுக்கு ஒதீத பண்பு.

189 - 90. காதற்கொழுநனை.....மாதவியென்றது சிலேடை; காத லிக்கப்பட்ட தன் கொழுநனைப் பிரிந்து வேறுபட்டு அலருறுத அழகிய வளைந்த மகரக்குழையையுடைய மாதவியென்றும், எல்லாரும் காதலிக் கும் கொழுவிய நனையாந்தன்மையைவிட்டு முதிர்ந்து அலராகாத வளைந்த தளிரையுடைய குருக்கத்தி யென்றும் சொல்லுக.

மாதவி - குருக்கத்தி. கண்ணகி பிரிந்து அலரெய்தலாற் பிரிந்து அலரெய்தா மாதவியென்றார். குருக்கத்தி அலருறுமை செவ்வியழியாமை.

191 - 3. முல்லை, மல்லிகை, மயிலை, குவளை, கழுநீர் இவை பயின்ற கோதையாகிய பிணையல்.

அடி, 192. தாழிக்குவளை : பெருங். 3. 5 . 87 ; சீவக. 833.

(பி - ம்.) †' துறவோ ' ‡ ' தண்செங்கழுநீர் '

காமக் களிமகிழ் வெய்திக் காமர்
பூம்பொதி நறுவிரைப் பொழிலாட் டமர்ந்து
நாண்மகி ழிருக்கை நாளங் காடியிற்
பூமலி கானத்துப் புதுமணம் புக்குப்
புகையுஞ் சாந்தும் புலராது சிறந்து
நகையா டாயத்து நன்மொழி தியூத்துக்
குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபிற் கோவலன் போல
இளிவாய் வண்டிஞெ டின்னிள வேனிலொடு
மலய மாருதந் திரிதரு மறுகில்
கருமுகில் சுமந்து குறுமுய லொழித்தாங்
கிருகருங் கயலோ டிடைக்குமி ழெழுதி
அங்கண் வானத் தரவுப்பகை யஞ்சித்
திங்களு மீண்டுத் திரிதலு முண்டுகொல்
நீர்வாய் திங்க ணீணிலத் தமுதின்
சீர்வாய் துவலைத் திருநீர் மாந்தி
மீனேற்றுக் கொடியோன் மெய்பெற வளர்த்த
வான வல்லி வருதலு முண்டுகொல்
இருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்
திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாமென
எரிநிறத் திலவமு முல்லையு மன்றியும்

---

197. பூவின் மிகுதிபற்றிக் கானமென்றார்.

195 - 7. பொழில்விளையாட்டு விரும்பி நாடோறும் மகிழ்ந்திருக்கும் இருப்பையுடைய நாளங்காடியிற பூ விற்குமிடங்களிற செவ்விமணத்திலே புக்கு.

198. புலராது - புலராமை 199. ஆயத்து - ஆயத்தோடே.

200. பரத்தர் - தூர்த்தர்.

188 - 203. வியலுளாங்கண் மாதவிதன்ஞெடு பொலிந்து எய்தி அமர்ந்து புக்குச் சிறந்து திூதித்துப் பரத்தரொடு பாணரொடு திரிதரும் கோவலன்போல மாருதம் திரிதரும் மறுகென்க.

210. மெய் - வடிவு.

208 - 10. திங்களாகிய நிலத்திலே அமுதம் மாந்தி மெய்பெறவென்க.

213. ஆமென - ஆமெனக்கருதி.

212 - 3. இப்பதியிலே திருமகள் புகுந்த காரணம் மன்னனுக்கு வளம் காட்டவென்க. 214. அன்றி - இவையேயன்றி.

அடி, 210. மீனேற்றுக் கொடியோன் சீவக. 6.

214. எரிநிற இலவம் : கலித். 33 : 10

கருநெடுங் குவளையுங் குமிழும் பூத்தாங்
குள்வரிக் கோலத் துறுதுணை தேடிக்
கள்ளக் கமலந் திரிதலு முண்டுகொல்
மன்னவன் செங்கோன் மறுத்த லஞ்சிப்
பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம்
ஆண்மையிற் றிரிந்துத னருந்தொழி றிரியாது
நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டிப்
பண்மொழி நரம்பிற் றிவவியாழ் மிழற்றிப்
பெண்மையிற் றிரியும் பெற்றியு முண்டென
உருவி லாள னொருபெருஞ் சேனை
இகலம ராட்டி யெதிர்நின்று விலக்கியவர்
எழுதுவரி கோல முழுமெயு முறீஇ
விருந்தொடு புக்க பெருந்தோட் கணவரொ
டுடனுறைவு மரீஇ யொழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின் மனையுறை மகளிர்
மாதர்வாண் முகத்து மணித்தோட்டுக் குவளைப்
போதுபுறங் கொடுத்துப் போகிய செங்கடை
விருந்திற் றீர்ந்தில தாயின் யாவதும்

---

216 - 7 உளவரிக்கோலம் - கிருதீதிரிமவேடம கோலதீது - கோலத் தோடே. உறுதுணை - திருமகள். தாமரையானது தன் வடிவொழிய வேறொரு வடிவு கொள்ளுதல்.

222. பண்மொழி நரமபின் - பண்ணைச் சொல்லுகின்ற யாழ்நரம்பு போல.

223. உண்டுகொலென வேறொரிடைச்சொல் வருவிக்க.

224 - 5. (பா) ஒரு பெருஞசேனை.. . .....விலங்கி - பரதீதையரை மாறுபட்ட பூசறகண்ணே அலைத்து எதிரே நின்று தடுத்து.

அன்றியும், விலங்கி - விலக்கி, புலவியாலே கூடாத மகளிரைப் போகாமல் எதிரே நின்று தடுத்து இங்ஙனம் புகழ்ந்து புலவியைத் தீர்த் தென்றுமாம்.

225 - 6 (பா) அவரெழுது வரிக்கோலம் - தொய்யில் முழுமெய்யும் உறுத்தியென்க. முழுமெய்யுமுறுத்தியென்றது புணர்ந்தென்பதாயிற்று.

230 - 31. குவளைப்போது தான் தோறறுப்போகிய.

232. யாவதும - சிறிதும.

அடி 219-23. கூற்றம் பெண்மையுருவொடு திரிதல் . 7 10, அடிக்., சீவக 2450.

226 · சீவக. 116.

229 · பெரும்பாண். 302-3 , கலித். 1 . 21.

மருந்துந் தருங்கொலிம் மாநில வரைப்பெனக்
கையற்று நடுங்கு நல்வினை நடுநாள்
உள்ளக நறுந்தா துறைப்ப மீதழிந்து
கள்ளுக நடுங்குங் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணு மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன
எண்ணுமுறை யிடத்தினும் வலத்தினுந் துடித்தன
விண்ணவர் கோமான் விழவுநா ளகத்தென்

233 மாநிலவரைப்பு - பூமியிலுளளார். 234. நல்வினை - விழா.

(203) மறுகிடதீதுதீ (207) திங்களுமுண்டோ, (211) வல்லிவருதலு முண்டோ, (217) கமலந் திரிதலுமுண்டோ, (223) பெறறியுமுண்டோ வெனச்சொல்லிச் (224) சேனையாகிய பரதீதையரிடதீதுப் போகாமல் (225) (பா) விலங்கிப் பின்பு தம்மனைகளிலே புக்கு (226) (பா) எழுதுவரிக் கோலதீதைதீ தம மேனிமுழுவதுமை உறுவிதீதுப் பின்பு (228) ஒழுக்கொடு புணர்நத (229) மனையுறைமகளிர் (228) (பா) உடனுறைவு மருவுதறகு (227) விருந்தொடுபுக்க கணவர் (234) கையறறு நடுங்கும் நடுநாளென்க

235 (பா) நறுந்தாது எறிப்ப - தாது ஒளிவிட.

237 - 9. கருங்கணென்றது, கண்ணகிக்குப் புணர்ச்சியில்லாமை யால், நிறைகரந்து துன்பதீதாற கண்கள் நீர் உகுதீதன, செங்கணென் றுரைதீதது, மாதவிக்குப் புணர்ச்சி விதுமபலால, அகதீது நிறைகரந் தொளிதீது இன்பதீதாற கண்கள் நீர் உகுதீதன கண்ணகிக்கு நிறை கரதீதல் - கறபாற பரிகாரப்படடதாதல், ஆறறுமை மிகுதி கூறிறறு. மாதவிக்கு... நிறுதீதலீலக்கரந்து காமதீதாலே நீர் உகுதீதன. கண்ண கிக்கு அழுகைக்கண்ணீர, மாதவிக்கு உவகைக்கண்ணீர், எண்ணுமுறை- எண்ணின அடைவே பின்பு கண்ணகிக்குக் கூட்டமுண்டாகையால் இடக்கண் துடிதீதன, மாதவிக்குப் பின்பு பிரிவுண்டாகையால வலக்கண் துடிதீதன.

1 - 6 அலைநீ ராடை மலர்கதிர் பரப்பி

(இ - ள்.) கடலாகிய ஆடையினையும் மலையாகிய முலையினையும் அம் முலையாகத்துப் பெரிய யாறுகிய ஆரத்தினையும் மாரியாகிய கூந்தலினையு முடைய இடமகன்ற பரப்பினையுடைய [1]அரசுகெடுத்து அலம்வரும் நில மடந்தை அல்லற்காலைப் பசந்து வாரப் பனித்துப் போர்த்த இருளாகிய படாதீதைத் தன் கதிர்க்கைகளால் நீக்கி அவிரொளி உதயமால்வரை யுச்சிக்கடடோன்றி விரிந்த கதிர்களைப் பரப்பவென்க.

மலை - பொதியிலும், இமயமும். இவற்றைச் சாதியொருமையாற்கூறி னார், "பொதியிலு மிமயமும் புணர்முலை யாக" என்றார் கதையினும். ஆரப்பேரியாற்று. பேர்யாற்றுரமெனப் பாடமாற்றுக, ஆரம் - முத்து வடம். மாரி - முகில். அகன்பரப்பு விசேதிதொகை. புதைத்தல் - போர்த்தல்; மலைநாட்டு வழக்கு போக - அகல உலகு விளங்கவிரொளி - உலகு விளங்குதற்குக் காரணமாகத் தான் விளங்குமொளி, ஆவது ஞாயிறு. மலர்தல் - விரிதல். பரப்பி. பரப்பவெனத்திரிக்க. வாளாது மண்மடந்தை யென்னாது கண்ணகன் பரப்பின் மண்ணகமடந்தை யென்று மிகுத்துக் கூறினார், அத்தன்மையாளைப் போர்த்த நீலப்படாதீ தைத் தன் தேசினால் நீக்கிய ஒளியெனறகு எனவே செம்பியன் மரபுயர்ச்சி கூறியவாறுயிற்று

படாதீதை நீக்கித் தோன்றிப் பரப்பவென்க

7. வேயாமாடமும்—(இ - ள்.) நிலாமுற்றமும்,

வியன்கல விருக்கையும்

(இ - ள்.) வேற்றுமைப்பட்ட அணிகலம்பெய்த சரக்கறையும்,

வியல் - மிகுதியுமாம்.

8. மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்

(இ - ள்.) மானின் கண்போலக் கோணஞ்செய்த சாளரங்களையுடைய மாளிகை யிடங்களும்,

காலதர் - சாளரம்.

9 - 10. கயவாய் மருங்கில் யவனரிருக்கையும்

(இ - ள்.) புகார்முகப் பக்கங்களில் தம்மைக் காண்போர் கண்களை மேற்போகவிடாமல் தடுக்கும் பயன் தொலைதலையறியாத மிலேச்சர் இருக்கு மிடங்களும்,

11 - 2 கலந்தரு திருவின் இலங்குநீர் வரைப்பும்

(இ - ள்.) மரக்கலந்தரும் செல்வப்பொருட்டால் தாம் பிறந்த நிலத்தை விடடுப்போந்த பரதேசிகள் பலரும் ஒரு நிலத்தாரைப்போலக் கலந்து செறிந்திருக்கும் அலைவாய்க்கரையிருப்பும்,

13 வண்ணமும்—(இ - ள்.) தொய்யிறகுழம்பு முதலியவும், எழுதுவண்ணமுமாம்.

---

[1] சிலப். 4 : 8, முதலியன.

சுண்ணமும்—(இ - ள்) பூசுசுண்ணமும்,

தண்ணறுஞ் சாந்தமும்—(இ - ள்.) குளிர்ந்த நறிய பசுங் கூட்டும்,

14 பூவும்—(இ - ள்) விடுபூதீ தொடைப்பூக் கட்டுப்பூவென்னும் மூவகைப் பூவகையும்,

புகையும்—(இ - ள்.) புகையுறுப்பும்,

ஆவன, [1] "நேர்கட்டி செந்தே னிரியாசம் பச்சிலை, ஆர மகிலுறுப்போ டாறு" என இவை.

மேவிய விரையும்—(இ - ள்.) தம்மிற்பொருந்திய விரையும்,

ஆவன "கொட்டந் துருக்கந் தகர மகிலாரம், ஒட்டிய வைந்தும் விரை" (பிங்கலந்தை, ஐயர்வகை, 78) என இவை.

15 பகர்வனர் திரிதரு நகர வீதியும்

(இ - ள்) இவற்றை விறபவராய்த் திரிதருதலைச் செய்யும் நகரதீ தெருவு மென்க.

மாடமும், இருக்கையும், இடங்களும், இருக்கையும், வரைப்பும், வண்ணமுதல் விரையீருவுள்ளனவறறை விறபவராய்தீ திரிதருதலைச்செய் யும் நகரதீ தெருவுமென்க.

16 - 7. பட்டினு மயிரினும் காருக ரிருக்கையும்

(இ - ள்) பட்டுநூலானும் எலிமயிரானும் பருதீதிநூலானும் நுண் ணிய தொழில்களை ஊசியாற் பிணிக்கும் பட்டுச்சாலியர் இருக்குமிடங் களும்,

† அச்சுக்கட்டிகளென்பாருமூளர். காருகதீதொழில் இருவகைதீது, "பருதீதிநூல் பட்டுநூ லமைதீதாடை யாக்கலும், சுமதீதலும் ‡பிறவுங் காருக வினைதீதொழில்" (திவாகரம், 12-ஆவது) என்ரு ராகலின் இவற்றுள் ாண்டுக் கூறியோர் முன்னேயோர்.

18 - 21. தூசுந்துகிரும் நனந்தலை மறுகும்

(இ - ள்) பட்டும் பவளமும் சந்தனமும் அகிலும் குற்றமற்ற முதீதும் ஒழிந்த மணிகளும் பொன்னுமாகிய இவறறைப் பொறபணியோடே இலக் கங்காண்போர் ஓரெண்ணினும எண்ணிக் கரைகாணவரிய வளம் தம் மிடந்தோறும் மயங்கப்பட்டனவறறையுடைய இடமகன்ற மறுகுகளும்,

22 - 3. பால்வகை தெரிந்த கூல வீதியும்

(இ - ள்) பகுதி வேறுபடதீதெரிந்த முதிரை முதலிய பண்டதீதோடு எண்வகைக்கூலமும் குவிதீதுவிற்கும் கூலக்கடைதீதெருவும்,

[1] "நேர்கட்டி செந்தே னிரியாசங் கப்பூரம், ஆர மகிலுறுப்போ ரைந்து" (சீவக. 534, ந.)

(பி - ம்.) † 'அச்சுக்கொட்டிகள்' ‡ 'அகழ்தலுங்'

[1] எண்வகைக்கூலமாவன. "நெல்லுப் புல்லு வரகுதினை சாமை, இறுங்கு †தோரையொடு கழைவிளை நெல்லே" எனவிவை. இனிக் கூலம் பதினெண்வகைத்தென்பர் கூத்தநூலாசிரியர், என்னை? [2] "பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக" என்றாராகலின், பலசரக்கென்பாருமுளர்.

24. காழியர்—(இ - ள்) பிடடுவாணிகரும்,

வண்ணருமாம், "காழியர், கௌவைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழிய" (89 7-8) என்றார் அகப்பாட்டினும்

கூவியர்—(இ - ள்.) அப்பவாணிகருமம்,

"காரகற் கூவியர் பாகொடு பிடித்த" (377) என்றார் பெரும்பாணற்றினும்

கண்ணெடை யாட்டியர்

(இ - ள்.) கள்விலைவிற்கும வலைச்சியரும்,

நொடை - விலை, "மீனெடுத்து நெறகுவைஇ" (343) என்றார் புறப்பாட்டினும்.

25 மீன்விலைப் பரதவர்

(இ - ள்.) மீன்விலையையுடைய பட்டினவரும்,

வெள்ளுப்புப் பகருநர்—(இ - ள்.) உமணரும் உமட்டியரும், அளவருமாம்.

26. பாசவர்—(இ - ள்) [3] இலையமுது இடுவாரும்,

அன்றிக் கயிறுதிரித்து விறபாருமாம, பச்சிறைச்சி சூட்டிறைச்சி விறபாருமாம்.

வாசவர்—(இ - ள்.) பஞ்சவாசம விறபாரும்,

அவை, "தக்கோலந் தீமபூத் தகைசா லிலவங்கம், கப்பூரஞ் சாதியோடைந்து" எனவிவை.

26 - 7 மைந்நிண விலைஞரோடு இருக்கையும்

(இ - ள.) ஆடடுவாணிகருடனே பரவருஞ செறிநத ஊன் மிக்க இருப்பிடங்களுமம,

ஓசுநர் - எண்ணெய் வாணிகருமென்ப

28 கஞ்சகாரரும்—(இ - ள்) வெண்கலக் கன்னரும்,

செம்புசெய்குநரும்—(இ - ள்.) செம்புகொட்டிகளுமம,

29 மரங்கொஃறச்சரும்—(இ - ள்) மரத்தைவெட்டுந் தச்சருமம,

கொல்லல் - வெட்டல்

கருங்கைக்கொல்லரும்

(இ - ள.) வலிய கையையுடைய கொல்லரும்,

---

[1] சிலப். பதி 88-9, அடியார்.
[2] சிலப். 6 35-6, அடியார், மதிவாணர் நாடகத்தமிழ்நூல்.
[3] இலையமுது - வெறறிலை
(பி - ம்) † 'தோரை யிராகியெண் கூலம்'

கருங்கை இருவகைத்து, என்னை? "கொன்றுவாழ் தொழிலினும் வன்பணித் தொழிலினும, கன்றிய தொழிற்கை கருங்கை யெனப்படும்" (திவாகரம்) என்றாராகலின். ாண்டு வலிய கையையுடைய கொல்லரு மென்பதாயிறறு.

30 [1] கண்ணுள் வினைஞரும்—(இ - ள்) சித்திரகாரிகளும், மண்ணீட்டாளரும்—((இ - ள்) சிறபாசாரிகளும்,

அன்றிச் சுதையாற பாவையுள்ளிடடன பண்ணுவாரென்றுமாம், குய வருமென்ப மண் - ாண்டுச் சுதை, "மண்ணே டியைந்த மரபினையர்" (குறள், 576) என்றாராகலின்

31 பொன்செய் கொல்லரும்—(இ-ள்) உருக்குத்தட்டாரும், நன்கலந் தருநரும்—(இ - ள.) இரத்தினப்பணித் தடடாரும,

32 துன்ன காரரும்—(இ - ள்.) [2]சிப்பியரும்,

தோலின் றுன்னரும்—(இ - ள்.) உறைகாரரும,

பறம்பர் முதலாயினருமாம்.

33 - 4 கிழியினுங் கிடையினும் பால்கெழு மாக்களும்

(இ - ள்) கிழி கிடையென்பவற்றுற் புட்பம வாடாமாலை பொய்க் கொண்டை முதலிய உருப்பிறக்குந தொழில்களை மிகுத்துக்காடடிக் குறற மறற கைத்தொழிலால் வேறுபடட இயலபையுடையோரும்,

கிழி - சீரை. கிடை - கிடேச்சு

இனி, கிழியாற் படிமை படம முதலியவும், கிடையால் விலங்கு பறவை பூ பூங்கொத்து முதலியவும அமைப்போருமாம.

35 - 7 குழலினும் யாழினும் இருக்கையும்,

(இ - ள்.) தூளைக்கருவியானும நரபபுக்கருவியானும குரல முதலா யுள்ள ஏழிசையினும் சரிகமபதநி யென்னும ஏழெழுத்தினையும மூவகை வங்கியத்தினும நால்வகையாழினும் பிறக்கும பண்களுக்கு இன்றியமை யாத [3] மூவேழுதிறத்தையும் குறறமின்றுக இசைத்துக் காட்டவல்ல பெறுதறகு அரிய இசைமரபையறிநத குழலர் பாணர் முதலாய பெரிய இசைக்காரர் இருக்குமிடங்களுமென்க.

உமமையால் எழுத்துக்களும் கொள்ளப்பட்டன.

38 - 9 சிறுகுறுங் கைவினை பாக்கமும்

(இ - ள்) ஒழுக்கத்திற சிறியராயச் சிறுதொழிலைப் பிறர்க்குச்செய்து அதனான்வரும் பொருளையுண்ணும் கைவினையாளரோடே முறகூறிய யவனர் முதல் பெரும்பாணீருயுள்ளாரோடு குற்றமின்றி விளங்கும மரு வூர்ப்பாக்கமுமென்க

[1] 'கண்ணுள்வினைஞர் - சித்திரகாரிகள், நோக்கினர் கண்ணிடத்தே தந்தொழிலை நிறுத்துவோர்' (மதுரைக் 518, ந.) [2] தையறகாரர்

[3] பெருங். 1. 37 . 116

40. கோவியன் வீதியும்—(இ - ள்.) இராசப்பெருந்தெருவும், செண்டுவெளிப்புறதீதெருவென்பாருமுளர்.

கொடித்தேர் வீதியும்—(இ - ள்) கொடியணிந்த தேரோடும் விழா வீதியும்,

41. பீடிகைத் தெருவும்—(இ - ள்.) கடைதீதெருவும்,

41 - 2. [1]பெருங்குடி வாணிகர் மாட மறுகும்

(இ - ள்.) பெரிய குடிப்பிறப்பையுடைய வாணிகரது மாடமாளி கைதீ தெருவுமம,

42. மறையோ ரிருக்கையும்—(இ - ள்.) பஞ்சக்கிராமிகள் இருக்குமிடமும,

43 - 5 வீழ்குடி யுழவரொடு இருக்கையும்

(இ - ள்) உழவின்மேல் விருமபும் குடிகளோடும் உழவரோடும் மருதீதுவநூலோரும் சோதிடநூலோரும வேறு வேறு வகைப்படதீ தெரிந்த பல முறைமையோடிருக்கும் இருப்பிடங்களும்,

வீழ்குடி - காணியாளர், "பகடு புறந்தருநர் பார மோம்பிக், குடி புறந்தருகுவை யாயின்" (புறநா 35) என்ருர் பிறரும, யாவரும் விரும் புங்குடி யென்றுமாம. "உழுதுண்டு ..செல்பவர்" (குறள், 1033) என் பதனுற் கொள்க, குடியொடும உழவரொடு மென்க. அன்றி உழவில் விரும்புங்குடி யெனவுமாம், "உழவின்கட் காமுற்று வாழ்தல்" (திரி. 42) என்ருராகலின், வேளாண் [2]சாமந்த ரென்பாருமுளர்.

46. திருமணி குயிற்றுநர்—(இ - ள்) முதீதுக்கோப்பாரும், [வரிசையான] வேகடிகளுமாம.

46 - 7 சிறந்த கொள்கையொடு அகன்பெரு வீதியும்

(இ - ள்) தமக்குச் சிறந்த கோட்பாட்டால் அழகிய வளைகளையறுப் பாரும் வாழ்கின்ற அகன்ற பெரிய வீதியும்,

வளைபோழுநர் என்றது சங்கறுப்பாரை அணிவளை : விளைதீ தொகையுமாம்

வீழ்குடிமுதல் போழுநரீருயுள்ளவர் மிக்க செருக்கோடிருக்கும் வீதியு மெனினும் அமையும்.

48. சூதர்—(இ - ள்.) நின்றேதீதுவார்,

மாகதர்—(இ - ள்.) இருந்தேதீதுவார்,

வேதாளிகரொடு—(இ - ள்.) வைதாளியாடுவாரென்று சொல் லப்பட்ட இவரோடே,

[மிட்டையகண்டருமென்ப]

---

[1] 2 : 76. [2] சாமந்தர் - சிற்றரசர்.

49. நாழிகைக் கணக்கர்—(இ - ள்.) [1] கடிகையார், அவர் அரசனுக்குச் சென்றநாழிகைக்குக் கவிசொல்லுவார், "பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு, காமன் றிரியுங் கருவூரா - யாமங்கள், ஒன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையும், ஒன்றுபோ யொன்றுபோ யொன்று" என, நாழிகை வட்டிலிடுவாருமென்ப, "சூதர் வாழ்தீத மாகதர் நுவல, வேதா ளிக ரொடு நாழிகை யிசைப்ப" (மதுரைக். 670-71) என்றுர் பிறரும்.

நலம்பெறு கண்ணுளர்—(இ - ள்) தாம்கொண்ட கோலத்தா னும் கூத்தானும் நலம்பெறும் சாந்திக்கூத்தர்

என்னை? "வாசிகை வைத்து மணிதீதோ டணியணிந்து, மூசிய சுண்ண முகத்தெழுதித் - தேசுடனே, ஏந்துசுடர் வாள்பிடித்திட் டீசனுக் குங் காளிக்கும், சாந்திக்கூத் தாடத் தகும்" என்பதனானிக, மதங்க ரென்பாருமுளர்.

50. காவற்கணிகையர்—(இ - ள்.) களத்தாடுங் கூத்திகள், † இராக்கடைப் பெண்டுகளென்பாரு முளர்.

ஆடற்கூத்தியர்—(இ - ள்.) அகக்கூத்தாடும் பதியிலார்,

51. பூவிலை மடந்தையர்—(இ - ள்.) அற்றைப்பரிசங்கொள் வார்.

ஏவற்சிலதியர்—(இ - ள்.) மடைப்பள்ளியாரடியார்,

52. பயிறெழிற் குயிலுவர்—(இ - ள்.) தோற்கருவி இசைப் பார்,

பன்முறைக் கருவியர்—(இ - ள்.) படைக்கும் உற்சவத்துக் கும் கொட்டுவார்,

யாழ்முதலாகிய நரப்புக்கருவிகளையுடையாருமென்ப.

53. நகைவேழம்பரொடு—(இ - ள்) [2]சாரமாணிகளோடே] சிரிக்கும் பரியாசகருடனுமென்ப.

வகைதெரி யிருக்கையும்—(இ - ள்.) சூதர்முதல் வேழம்ப ரீருக எண்ணப்பட்ட இவர்கள் ததீதம் இனத்தின் வகைதெரிந்த இருப் பிடங்களுமென்க.

54. கடும்பரி கடவுநர்—(இ - ள்.) கடிய பரிகளைக் கடவுவா ராகிய ‡ அச்சுவவாரியர்,

களிற்றின் பாகர்—(இ - ள்.) யானைப்பாகர்,

இன் - சாரியை.

55. நெடுந்தே ரூருநர்—(இ - ள்.) தேர்ப்பாகர்,

---

[1] "கடிகையர் கவிதையோதை" (கம்ப. எழுச்சி. 79) [2]தக்க. 548, உரை. (பி - ம்.) † 'இராக்கிடை' ‡ 'அச்சுவவாதியர்'

கடுங்கண் மறவர்—(இ - ள்.) சினக்கண்ணையுடைய காலாட் படைத்தலைவர்,

கடுமை - சினம். இனி முன்னர்க்கூறிய முப்படைக்கும் தறுகண் மையையுடைய வீரரென்றுமாம்.

56 இருந்துபுறஞ் சுற்றிய பெரும்பா யிருக்கையும்

(இ - ள்.) என்று கூறப்பட்ட வீரர்கள் அரசன் கோயிலைச் சூழ விருக்கும் பெரிய பரந்த இருப்புக்களுமென்க.

57 - 8 பீடுகெழு சிறப்பின் பாக்கமும்

(இ - ள்) கோவியன் வீதி முதலாக இருக்கையிறுதியாக இருப் பிடங்களையுடைய பெருமையமைந்த சிறப்பினையுடைய¹ பெரியோர் திரண்ட பாடலமைந்த சிறப்பினையுடைய பட்டினப்பாக்கமுமென்க.

59 - 67 இருபெரு வேந்தர் கடைகெழு பீடிகை

இதில், (64) "சித்திரைச் சித்திரைத் திங்கள் † சேர்ந்தென" என்ப தனைப் புழுக்கன் முதலிய சொரிந்தென்பதனோடு முடிக்க

(இ - ள்) பெரியவேந்தரிருவர் போர்குறித்து வந்துவிட்ட பாசறை யிருப்புக்கு நடுப்பட்டநிலம் போர்க்களமானதுபோல முறைகூறிய மருவூர்ப் பாக்கமும் பட்டினப்பாக்கமுமென இரண்டுகூறுபட்ட ஊர்க்கு நடுப்பட்ட பொதுநிலமாகிய நாளங்காடி, அஃது எதிதன்மையதாகிய நாளங்காடி யெனின், நிரைபடச்செறிந்த சோலையின் மரங்களிற் கால்களே தூண் ஆக கட்டப்பட்ட கடைகளையுடைய கொடுப்போர் கொள்வோரோதை இடையறாது நிலைபெற்ற நாளங்காடியென்க. அந்நாளங்காடித்தெருவின் கண்ணே பூதத்து வாயிற் பீடிகையென்க அஃது எதிதனமையதாகிய பூதமெனின், வெற்றிபொருந்திய வேலையுடைய முசுகுந்தனென்னும் மன்னனுக்கு வரும் இடையூற்றை ஒழிப்பாயெனத் தேவர்கோன் ஏவுத லானே அதிதேவருலகினின்றும் போந்து அந்நாண்முதலாகப் பலி கொண்டுபோதும் [1] பூதமென்க அப்பூதத்து நாளங்காடிக்கட் பலிபீடிகை யிடத்தேயென்க.

அல்லங்காடியுமுண்டாதலின், இதனை நாளங்காடியென்றார்.

68 - 75. புழுக்கலு நோலையும் ஓதையிற் பெயர

(இ - ள்) சித்திரை மாதத்துச் சித்திரைநாளிலே நிறைமதி சேர்ந்த தாக அந்நாளிலே நாணிலிகளைப்போல வாய்சோர்ந்துரைக்கும் மாதர்க் கோலத்து மறக்குடிப்பெண்டிர் அப்பீடிகைக்கண்ணே புழுக்கல்முதலிய வற்றை உகுத்து எமமன்னனுடைய நிலமுழுதும் பசிமுதலியன நீங்கி வசிமுதலியன சுரக்கவெனவாழ்த்தித் துணங்கையராய்க் குரவையராய் அணங்கெழுந்தாடிக் கொக்கரிப்போடே பெயரவென்க.

---

[1] சிலப். 6 : 7–13.

(பி - ம்.) † 'சேர்ந்தென வந்நாள்'

புழுக்கல் - முதிரைப்பண்டம், அவரை துவரை முதலியன, "புழுக் குவ புழுக்கல்" என்ருராகலின். நோலை - † எட்கசிவு. விழுக்குடை மடை - நிணச்சோறு, பொங்கல் - கள்ளு, பொங்கறசோறுமென்ப. துணங்கை - துணங்கைக்கூத்து; என்னை? "முடக்கிய விருகை பழுப் புடை யொற்றித் - துடக்கிய நடையது துணங்கை யாகும்" (திவா 9) என்ருராகலின். இதனைச் சிங்கியென்பாருமுளர். குரவை - கைகோத் தாடுங்கூத்து அணங்கெழுந்தாடி - தேவர் ஏறியாடி. பகை - உட் பகை. வசி - மழை "வசிதீதொழி லுதவ மாதிரங் கொழுப்ப" (மணி. 14. 57) என்ருர் பிறரும், வசியமுமாம். மாதர்க்கோலம் - கண்டு எவ ருங் காதலிக்கப்படும் ஒப்பனை வலவையின் - நாணிலிகளைப்போல; "வலவைக ளல்லாதார்" (நாலடி. 268) என்ருர் பிறரும், வல்லபதீதா லென்பாருமுளர். மூதிறபெண்டிர் - மறக்குடிமகளிர்

சேர்ந்ததாக அந்நாள் ஒளி கதிர் பரப்பாநிற்பப் புழுக்கல் முதலியன பீடிகையிலே சொரிந்து பெண்டிர் வாழ்த்தி ஆடிப் பெயரவென்க.

இவர் அரசன் கோயில் அகப்பரிசார மகளிர்.

76 - 88. மருவூர் மருங்கின் வான்பலி யூட்டி

(இ - ள்.) அந்த முசுகுந்தன் இருவகைப் பாக்கதீதோரும் அக் காலதீதுப் பூததீதிறகுப் பலிகொடுப்பதறகு முன்பினென்று தந்தமில் முநதுகூற வலியவுரவோர் நெருங்கிச்சென்று தம்மைதீ தாமேயிடும் பலியை உண்ணும் பீடிகையிலே மன்னறகு உறறதை ஒழிப்பாயாகெனப் பூததீதிறகுச் சொலலிப் பலிகொடுதீதலைப் புரிநதோர் அப்பலிக்கும் வலிக்கும் வரம்பாகக் கடவரென அவ்வரசன் குழுவும் ஆயமும் அக் காலதீதே நிருமிதீதலாலே இக்காலதீது வீரரும் மாக்களும் கவணின ராய்தீ தோலோடு வேறபரப்பினராய அமர்க்களப்பரப்பிலே உடற்கரிதீது ஆரதீதுக் களங்கொண்ட வீரர் பார்தீதோரை அச்சமுறுதீதுக் கடை சிவநத சுடுங்கொள்ளிபோலும் பார்வையையுடைய தமது பசுந்தலை வேந்தன் கொற்றங்கொள்கெனப் பேசுமபடி அரிந்து ஒப்பிதீதுப் பீடிகை யிலே வைதீத அப்பொழுதே அக்குறையுடல்கள தமக்கு வாயின்மை யின் ததீதந்தோளிற பூண்ட மயிர்க்கண் முரசின் வாயால் உயிர்க்கடன் தந்தோம், கொண்மினென்று நின்று பலியூட்டியென்க.

கழி - ஊன் பிணி - பிணிதீதல் கறை - கறுப்பு தோல் - பரிசை, "மழையென மருளும பஃறேல், (புறநா 17 34) என்ருராகலின், கருங்கடகென்பாருமுளர் மெய்யுறதீதீண்டி - உடறகரிதீது. அழுவம் - பரப்பு. சூர்தீது - அச்சமுறுதீது, என்றது, "நீண்டபலி பீடதீதி லறுதீது வைதீத நெறிக்குஞ்சிதீ தலையைதீதன் னினமென் றெண்ணி, ஆண்டலைப்புள் ளருகணைநது பார்க்கு மாலோ வணைதலுமச் சிரமச்ச முறுதீது மாலோ" (கலிங்க கோயில். 16) என்ருறபோல்வரும [விருதீ திச் செய்யுள்], சுழன்றென்பாருமுளர். சுடுநோக்கு - சுடுவதுபோலும்

(பி - ம்.) † 'எட்கசி'

நோக்கு, என்றது கொள்ளிக்கண்; "கண்ணுட் டியாற் சுட்டுநீ ருக்கி" (சீவக. 807) என்ருர் பிறரும் கருந்தலே - பசுந்தலே நலங்கொளவைதீ தென்றது - தமது அரிந்த தலேயிற குலேந்த மயிரையும் கோதி முடிதீ துக் குருதித்திலததீதையும நுதலிலே அணிநதுவைதீதென்றவாறு, என்னே? "மோடி முனறலேயை வைப்ப ரேமுடி குலேந்த குஞ்சியை முடிப்பரே, ஆடி நின்றுகுரு திப்பு துத்திலத மமமு கத்தினி லமைப்பரே" என்பது (கவிச் சக்கரவர்த்தி) உருமு - இடி. மயிர்க்கண் முரசு - புலி யைபபொருது கொன்றுநின்று சிலேதீதுக் கோட்டுமண்கொண்ட ஏறு இறந்துழி அதன் உரிவையை மயிர்சீவாமற் போர்த்த முரசு, என்னே? "புனேமருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற, கனேகுர லுருமுச் சீறறக் கதழ்விடை யுரிவை போர்தீத, துனேகுரன் முரசதீ தானேதீ தோன்றலீ தமமி னென்ருள், நனேமல ரலங்கற் கண்ணி நந்த னுந் தொழுது சேர்நதான்" (சீவக. 2899) எனவும, "கொல்லேற்றுப் பசுந்தோல் சீவாது போர்தீத, மயிர்க்கண் முரச மோவில கறுக" (மதுரைக். 732-3) எனவும சொன்னுர் பிறரும முரசொடுவான்பலி யூட்டி - முரசதீதால் உயிர்ப்பலியூடடி, என்றது "அடிக்கழுதீதி னுடன் சிரதீதை யரிவ ராலோ வரிந்தசிர மணங்கினகைக் கொடுப்ப ராலோ, கொடுதீதசிரங் கொறறவையைதீ துதிக்கு மாலோ குறையுடலங் குமபிட்டு நிற்கு மாலோ" (கலிங்க. கோயில. 15) எனவும, "மண்ணி ஞளற வறுதீத தங்கடலே வைதீத பீடிகை வலங்கொள, விண்ணி ஞயகிதன் யாக சாலேதொறு மீள வுஞ்சிலர் மிறைப்பரே" எனவும் வரும், இவறறுற சொல்லியவை அவிப்பலியென்னும் புறப்பொருட் பகுதியும் (பு. வெ. வாகை. 30) காப்பியதீதுக்கு அங்கமான நவச்சுவையுள் வீரச்சுவையவி நயமுமென்க.

வரமபாகெனக் கவணினர் பரப்பினராய்தீ தீண்டிக் கொண்டோர் கருந்தலே கொள்கென வைதீது ஊட்டவென வினேமுடிக்க.

ஊட்டவெனதீதிரிக்க

இனி, முன்னுட் கரிகாலன் செய்த செயல் கூறுவார்.—

89 - 94. இருநில மருங்கில் போகிய வந்நாள்

(இ - ள்) தமிழ்நாட்டெல்லேயுள் தன்னேடு எதிர்தீதுப் பொரும் அரசரை இரண்டு திசையினும பெருத கரிகாலன் போரிலே பேராசை யுடையவனுதலின், வடதிசை பெருந்திசையாதலிற பகை பெறலாமெனக் கருதி ஆண்டுச் சேறறகு விரும்பி வாளும் குடையும் முரசும நாளொடு பெயர்தீது என் வலிகெழுதோள் இதீதிசையிலாயினும் நண்ணரைப் பெறுவதாகவேண்டுமென்று தான் வழிபடு தெய்வதீதை மனதீதான் வணங்கி அவ்வடதிசையை நோக்கிப் போகிய அந்நாளிலென்க.

பொருநரை இருநிலமருங்கிற் பெரு வளவன் பெயர்தீதுப் பெறுக என்தோளெனப் போகிய அந்நாளிலென்க

இருநிலமருங்கினென்றது - இவன் ஆளும் நிலவெல்லேப்புறதீ தென்பதாயிற்று, ஆகவே மேற்கும் தெற்குமெனக்கொள்க, என்றது சேர பாண்டியருடைய நாடுகளை.

இனி இருநிலமருங்கிலென்றதற்குத் தமிழ்ப்பூமி இருகூற்றிலெனினும் அமையும. வாளும குடையும் முரசும் பெயர்தீதல் - வாணுட்கோள், குடைநாட்கோள், முரசுநாடகோளெனபன, இவை நாட்கொண்டு பெயர்தீதல். இவற்றுள் வாணுடகோடல் —"செறருர்மேற் செலவமரநது, கொறறவா ணுடகொண் டனறு", வரலாறு "அறிந்தவ ராய்ந்தநா ளாழிதீதேர் மன்னன், எறிந்திலங் கொள்வா ளியக்கம - அறிநதிகலிப், பின்பகலே யன்றியும் பேணு ரகநாடடு, நன்பகலுங் கூகை நகும்" (பு வெ. வஞ்சி. 4) குடைநாடகோடலென்றது — "பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெருமபுலவர் புகழ்பாடக், கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று", வரலாறு : "முன்னர் முரசிரங்க மூரிக் கடறருனை, துன்னருந் துப்பிற் றெழுதெழா-மன்னர், உடைநா ளுலந் தனவா லோதநீர் வேலிக், குடைநா ளிறைவன் கொள" (பு. வெ. வஞ்சி. 3). முரசுநாடகோடலென்றது .—"மாசற விசித்த . ாங்கிது செயலே" (புறநா 50). பிறவும் வநத வழிக்காண்க மண்ணக மருங்கின் - இந்நிலவெல்லையுள். புண்ணியதிசை - வடதிசை முகம - இடம்.

95-8 அசைவி லூக்கத்து பெயர்வோற்கு

(இ - ள்) அங்ஙனம் பொருவாரைப் பெறவேண்டி வடதிசை நோக்கிப் போகின்ற நாளிலே இமையவர் உறையும் இமயமலை பகையாகக் குறுக்கிட்டு விலக்கிறருகலின், மனஞ்சலித்து மீளுகின்றவன், மடிதலின்றி மேலும் செல்ல முயலும் என்னுசை பின்னிடடொழிய இம்மலை எனக்குப் பகையாகக் குறுக்கிடடு விலக்கிறறென முனிந்து அதன் பிடரிடதீதே தனது புலியைப் பொறிதீதுதீ தான் வேட்டது பெருத கோடபாட்டால் மீளகின்ற கரிகாலற்கென்க.

அசைவு - மடிதல். ஊக்கம் - மனவெழுச்சியும முயற்சியுமாம். பிறக்கு · பிருதக்கென்னும் வடமொழிச்சிதைவென்க, வேருகவென்ற படி. பிடர் - புறக்கழுதீது. தலை - இடம் ஒற்றி - பொறிதீது பிடர்தீ தலையொறறியென்றது - தன்னேடு எதிர்தீது விலக்குதலின் அதனைப் புறங்காண்டற்கும் அதன் வடபாலும் தனது ஆணை சேறறகும் சாதீதன தருளால் தான் பெற்ற செண்டினுலே அதனை அடித்துதீ திரிதீதுப் பொறிதீது மறிதீது நிறுதீதானெனவுணர்க, என்னை? [1] "செண்டு கொண்டு கரிகாலனெரு காலி லிமையச் சிமையமால்வரை திரிதீதருளி மீள வதனைப், பண்டு நின்றபடி நிறகவிது வென்று முதுகிற பாய்பு லிப்பொறி குறிதீதது மறிதீத பொழுதே" எனவும், "கச்சி வளைக்கைச்சி காமக்கோட டங்காவல, மெச்சி யினிதிருக்கு மெயச்சாதீதன - கைச் செண்டு, கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளதீதான், செம்பொற் கிரிதிரிதீத செண்டு" எனவும் கூறினராகலின்.

[1] கலிங்க. இராச 1, "இலங்கு வேறகரி காறபெரு வளதீ தோன், வனறிறறபுலி யிமயமால் வரைமேல் வைக்க வேகுவோன்" (பெரிய. திருக்குறிப்பு. 85)

99–100 மாநீர் வேலி ...பந்தரும்

(இ - ள்) கடலே அரணாகவுடைய வச்சிரநாட்டுக்கோன் தான் இடக்கடவ முறைமையில் திறையாகவிட்ட அவனது முத்தின் பந்தரும்,

வேலி - அரண். வச்சிரநாடு - [1]†சோணக்கரை. இறை - திறை. கொற்றப்பந்தர் - அவன்றனக்குக் கொற்றத்தான் வந்த பந்தர், அது மேற் கூறுப அன்றி, அக்கொற்றவன் முன்னர் நிற்கும் பந்தரெனினும் அமையும். இவன் உதாசீனன்.

101–102 மகதநன் னாட்டு . பட்டிமண் டபமும்

(இ - ள்) வாட்போர் வாய்ப்புடையனாகிய மகதவேந்தன் பகையாற் பொருது தாங்கமாட்டாது அப்பகையிடத்துத் தரப்பட்ட பட்டிமண்டபமும

[2]பட்டிமண்டபம் - விதியாமண்டபம்; ஓலக்கமண்டபமுமென்ப. புறம் - இடம். இவன் சதுக்குரு

103-4 அவந்தி வேந்தன் வாயிலும்

(இ - ள்) அவந்திநாட்டு வேந்தன் உவந்தனனாய்க் கொடுத்த மிகவுயர்ந்த தொழின்மரபையுடைய வாயிறோரணமும,

அவந்தி - உஞ்சை தொழின்மரபு "குலப்புடைவை" என்றுற் போல நின்றது இவன் மித்திரன்

105-10. பொன்னினு மணியினும் மண்டபம்

(இ - ள்) இப்பந்தரும் மண்டபமும் தோரணமுமென்னும இவை பொன்னானும் மணியானும செய்யப்பட்டனவாயினும நுண்ணிய தொழிலே வல்ல கம்மியராற பண்ணப்படாதன, ஆயின் இவை யாராற் பண்ணப்பட்டனவெனின், இவற்றை அக்காலத்துக் கொடுத்த அமைச்சுருடைய தொலோர் ஒரோர்காலத்து ஒரோ விடத்துச் செய்த உதவிக்குக் கைமாறாக மயனால் நிருமித்துக்கொடுக்கப்பட்டன. இவை ஒன்றற கொன்று சேய்நாட்டனவாயக் கூடப்படாதன, இவ்வகையான ஒரு நாட்டு ஓரிடத்தே கூடுதலானும மயன நிருமித்தலானும பெரியோரால ஏத்தப்படும இந்த [3]மண்டபத்தும,

காண்டல் - பணிதல், "கோயில் குளங்காண்" எனற்றபோல நின்றது

[1]சோணை - ஒர யாறு.

[2]"பட்டி மண்டப மேற்றினை யேற்றினை" (திருவா சதகம் 49), "ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள, படடிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின்" (மணி. 1 60-61), "பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" (கம்ப. நகர 62)

[3]இவற்றை உட்கொண்டே "வச்சிர மவந்தி மகதமொடு குழீஇய, சித்திர மண்டபம" (28 86-7) என்பர் மேல்

(பி - ம்.) †'சோணக்கரை'

110 அன்றியும்—(இ - ள்) இதுவொழிந்தும்,

111 - 7 வம்ப மாக்கள் வெள்ளிடை மன்றமும்

(இ - ள்) அளவும் நிறையும் எண்ணுமாகிய இலக்கங்கள் தம்மிடத்து இடப்பட்ட பெயர்பொறித்த பொதிகள் பண்டசாலைவாயிலையும் பற்றுயத்துக் கருந்தாழாகிய காவலையும் உடையோர் காத்திருக்கும் காவலையும விடப்பட்ட வாகலான் இந்நகர்க்குப் புதியமாக்கள் சிலர் கட்போருளராயின் அவர் கழுத்துக்கடுக்கப் பொதியை வைத்து ஊரைச் சூழ்விப்பினல்லாது அவர்க்கே அவறறைக் கொடுத்து விடாதாதலாற் களவென்பதனை மனத்தாற் கனவில் நினைப்பினும் நினைப்போரை நடுங்குவிக்கும் வெளியான இடத்தையுடைய மன்றமுமென்க.

எண்ணெழுத்துப்படுத்தவென்க எண் - இலக்கம பல பண்டங்களை யும் பொதிந்தனவற்றைப் பொதியென்றது ஆகுபெயர் வமபமாக்கள் கட்போர் உளராயினென்றார், இந்நாட்டு இவ்வூரில் வாழ்வோரெல்லாம் செல்வராதலாற செய்யாரெனவும் புறநாட்டிற சிலர் இம்மன்றின் தன்மையையறியாது களவு செய்யக் கருதுவரெனவும் புலப்படுத்தறகு. தலையேற்றியென்பகறகுத் தாம் காம் தலைமேல் ஏறறிக்கொண்டெனினும் அமையும் பொதிகள் ஒரீஇயவாகலான உளரெனின் அவரைக்கொட்பினல்லது ாயாது பனிக்குமன்றமென்க பனிக்குமன்றமென இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது வம்பமாக்களாகிய உடையோரெனினும் அமையும்

118 - 21. கூனுங் குறளும் மன்றமும்

(இ - ள்) கூனர்முதலாயுள்ளோரும் தொழுநோயால் அழுகுமெய்யையுடையோருமப புக்குமுழுகினவளவிலே பழுதில்லாத தோறறத்தையுடைய நலல நிறம் பெறுகையிறலே தன்னை வலஞ்செய்து தொழுது ஆடி நீங்கும் பொய்கையையுடைய மன்றமுமென்க.

பெற்று வலஞ்செய்து ஆடிக் கழியுமென்க முழுகினராடியென இரு பெயரொட்டாக்கினும் அமையும் இலஞசியை மகிழென்பார்க்குக் காவிரியில் நீராடிவந்து மகிழைச் சூழந்தென்ன வேண்டுதலின், மகிழினும் மன்றினும் பயமின்றுமாதலின், அங்ஙனங்கூறல் பொருத்தமின்றென்றெழுக்க.

122 - 7 வஞ்ச முண்டு மன்றமும்

(இ - ள்.) வஞ்சனையாற் சிலர் மருந்தூட்டஉண்டு பித்தேறினரும், நஞ்சையுண்டு நடுங்கு துயரமுற்றோரும், அழலும விடத்தையுடைய அரவின் வாயிற்கூர்த்த எயிறழந்தக் கடியுண்டாரும், [1] பிதுங்கின கண்ணையுடைய பேய்பிடிக்கப்பட்டாருமென்னும் இவர்கள் ஒருகாற் சூழ்வந்து தொழ அதனுடனே அத்துயர்கள் நீங்குதற்குக் காரணமாகிய ஒளியைக் காலவதொரு நெடிய கல் நாட்டி நிற்கும் மன்றமுமென்க.

---

[1] "கழல்கண்" (முருகு. 49, ந.)

மயறபகை - மயலாகிய பகை. ஆர் - கூர்மை. கழல்கட்கூளி விகார மாக்கிப் [1]பச்சைக்கழல்போலும் கண்ணையுடைய கூளியெனினும் அமை யும, கூளி - பூதமுமென்ப நிழல - ஒளி, "நிழன்மணி" (சீவக 321) என்றுறபோல.

128 - 34 தவமறைந் தொழுகும் பூத சதுக்கமும்

(இ - ள்) தம்மைப் பிறர் நம்புவதறகுத் தவவேடத்தில் மறைந்து நினறு அத்தவத்திறகு இழுகுகானவறறினகண் ஒழுகும பொயவேடத் தாரும், தமமைத் தம் கணவர் நமபுதறகுப பொயயொழுக்கத்தின் மறைந்து நின்று வசீகரிப்பின் ஒழுகும அலவறபெண்டிரும், தம படை குடி முதலிய ஐநதினைடு உயிருறுப்புரிமைக்குத் தமமைத்தேறியளித்த அரசரைக் கீழறை எண்ணும அமைச்சரும, தமது மனைவியர் தனிப்பத் தனித்த பிறர் மனையரை விரும்பும துச்சாரிகளும், தமது நெஞ்சறி பொருளை வஞ்சித்துப பொயசசான்றேறுவாரும், சிறப்புச்செயதுழி உழைநின்று புகழ்ந்து அவர் புறக்கொடையிற பழிதூற்றுவாருமாகிய இவர்களே என் கையிறகொண்ட இப்பாசதீதிடதது அகப்படும்பெயரென அவ்வூர் நாற்காதவெல்லையும கேட்குமபடி தனது கடிய குரலாலுணர்தீதிப் பின் அங்ஙனஞ் செய்வாரைப் பாசம கட்டிவர நிலத்திற் புடைத்துண் ணும் பூதம் நிறறலான் அப்பெயரபெறற பூத சதுக்கமும,

சதுக்கம் - நாறசந்தி. தன்மை - தவதீதோடொறறுமைப்படுந் தன்மை, அதனையில்லாமையாவது கூடாவொழுக்கம் அலவல் விகா ரம். அறைபோதல் - கீழறுதீதல். பொய்க்கரி - பொய்ச்சான்று. கை - இடம. காத நான்குமென முறறும்மைகொடுதீதலானே ஊர் [2]நாற்காத வட்டகையென்பதுணர்க குரலெடுப்பி - குரலாலுணர்தீதி, "துயி லெடுப்பி" (4 79) என்றுற்போல நின்றது

135 - 8. அரைசுகோல் கோடினும்...பாவை மன்றமும்

(இ - ள்.) அரசனுடைய செங்கோல் சிறிதுகோடிற்றுயினும் தரும நூன்முறைமையின் அறஙகூறும தருமாசனத்தார் உரைக்கும் நடுவு நிலைமை கோடி ஒருமருஙகு பறறினும் நாவாறகூறுது நீருகுதீதுக் கண் ணுறக்கூறும பாவை நிறறலான் அப்பெயர்பெற்ற பாவைமன்றமும,

அறங்கூறவையம - தருமாசனத்தார் வழக்குரைக்கும் இடம். நா வொடு - நாவால்

139 - 40. மெய்வகை .. பலி யுறீஇ

(இ - ள்) முற்கூறப்பட்டனவாகிய வெள்ளிடைமன்றமுதற் பாவை மன்றம் ாருவுள்ள உண்மைதீ திறதீதையுணர்ந்த சீரியோரால் ஏதீதப் படும் ஐவகைப்பட்ட மன்றதீதும் அருமபலியுறீஇ என்க.

ஒளி உச்சிதீதோன்றிப் பரப்பச் சொரிந்து ஆடிப் பெயர வைதீது ஊட்ட மண்டபமன்றியும் மன்றதீதும் பலியிடடென்க

---

[1] கழற்கண் : சூளா. அரசியல். 299. [2] சீவக. 2544.

அன்றியுமென்ற உம்மையும் மன்றத்துமென்ற உம்மையும் இறநதது தழீஇயவெச்சவுமமையாகலானும அருமபலியென்றமையானும் இவையும் அப்பலியானமை யுணர்க.

141 - 4. வச்சிரக் கோட்டத்து.. கடைநிலை சாற்றி

(இ - ள்) [1] வச்சிரக்கோட்டத்திலிருக்கும் முரசையெடுத்துக் கச்சை யணிநத யானையினது பிடரிடத்தேயேறறி என்றும் நிலைய வெள்ளிய ஐராவதம நிறகுங்கோயிலிலே சென்று விழவின் முதலும முடிவும் சாறறி யென்க

மணமுரசு - விழாமுரசு, மண்ணெனறேதி மார்ச்சனை யென்பாரும் உளர் கசசை - கீழ வயிறறிற் கசசை. தலை - இடம வயங்குதல் - விளங்குதல் கால்கோள் விழவின் கடைநிலை சாறறி - விழவின் தொடக்கமும முடிவும அறிவித்து களிறறரசிற்குச சாறறி, அஃது இந்திரனைக் கொணர்நறகு

எடுத்து ஏறறிச சாறறியென்க எடுத்து என ஒரு சொல வருவிக்க.

145 - 6 தங்கிய கொள்கை எடுத்து

(இ - ள்) பூமியில் தங்கிய முறையையுடைய தருக்கோட்டத்தின் முன்னர் அட்டமங்கலத்தோடு ஐராவதம எழுதிய கொடியைத் துறக்கத்தே செல்லவிடுத்தென்க

இந்திரன் தங்கிய செருக்கையுடைய தருவெனினும அமையும

147 - 56 மரகத மணியொடு வீதியில்

(இ - ள்) மரகதம் வயிரமெனனும இவறறைப் புருவம்பிறக்க ஆயப்பலகையாகப் படுத்து அதனமீதே செமபவளத் தூண்களை நிரைத்த பைமபொறறிணைகளையுடைய மாளிகை வாயிலிடந்தோறும் கிமபுரி செறித்த கொமபினையும அங்காநத வாயாறகான்ற முத்தொழுங் கையும அடடமங்கலங்களையும பொறித்த வாசிகைவடிவாக வளையச் செய்த மகர தோரணங்கள் நிலைபெற நிறுத்தின வீதி, பசிய பொன்னுறை செயத நிறைகுடமும் பாலிகையும விளக்கும கொடியும கவரியும ஒழிந் தனவும சுண்ணத்தோடே மேவிய வீதியிலென்க.

குயிறறுதல் - அழுத்துதல். முகம் - இடம. கிம்புரி - கொமபிலணி யும பணி சிளரமுத்து - பருமுத்து. ஒளிகிளரு முதலெனினும அமை யும கிளை பாடமாயின், கொத்தாகத் தோன்றும முத்தெனக வாசி கைத் தோரணம, உவமைத்தொகை. தோம் - ாண்டு ஓடடம் குயிற றிய பாடமாயின, வயிரங் குயிறறிய காலையுடைய வேதிகையென்க

அவ்வேதிகையையுடைய மாளிகைக் கடைமுகத்தியாங்கணும் தோரண நிலைபெறற மேவியகொள்கை வீதியென்க

156 செறிந்து—(இ - ள்) அவ்வீதியிலே நிறைந்து

ஆங்கு—(இ - ள்) அங்ஙனம் பலியிட்ட அப்பொழுதே,

[1] 141-2 . மணி. 1 . 27-8.

157 - 60 ஐம்பெருங் குழுவும் . ஒருங்கீண்டி

(இ - ள்) ஐம்பெருங்குழுவும ஆயமும செறிநது வீதிக்கண்ணே புரவியர் களிறறினர் தேரினரான அரசகுமரரும பரதகுமரரும் தம்மிற் பொருந்தி ஒன்றுபடத் திரண்டென்க

ஐமபெருங்குழு .—"அமைசசர புரோகிதர் சேனை பதியர், தவாதி தொழிற றூதுவர சாரண ரென்றிவர், பாரத்திபர்க் கைமபெருங் குழு வெனப் படுமே" எனுமிவர்.

எண்பேராயம —"கரணத் தியலவர் கரும காரர், கனகச் சுற்றங் கடைகாப பாளர், நகர மாநகர நளிபடைத் தலைவர, யானை வீர ரிவுளி மறவர, இனைய ரெண்பே ராய மென்ப" எனுமிவர் இனி, "சாந்துபூ ... அவைக்களத்தாரைநது" (157, உரை) எனக் காடடுவர அரும்பத வுரையாசிரியர் பரதர் - வணிகர். கவர்பரி - பகுத்துவிரையும் செலவு. இவர்தல - தேரைக் கொண்டெழுதல.

161 - 8 அரைசுமேம் படஇய விழுநீ ராட்டி

(இ - ள்) மிகபபெரிய ஞாலத்தின்கண்ணே தமதான அரசியல் மேமபடுவான்வேண்டி மன்னுயிர சாககும ஆயிரத்தோரெடடரசு தலை யிற சுமப்பித்துக்கொண்ட காவிரியிற பூவின்தாது மலிநத பெரிய சங்க மத்துறையிற குளிர்நத நறிய தீர்த்தநீரை, மணணகமும வானகமு மருள வியபப எமமனனன கொறறங் கொளவானுகவெனச் சொலலிப் பொறகுடத்தேநதி விண்ணவர தலைவனை இநநகரிடத்தே சிறப்புடைத் தாமபடி முறகூறிய அரசகுமரரும பரதகுமரரும மஞ்சனமாடடவெனக.

ஆட்டாநிறபவெனத்திரிக்க அகநிலை - ஊர உரை - புகழ் சால் - அமைதி மன் - ஆக்கத்தின் வநதது பொற்குடம - அபிடேக கலசம் மண்ணகமருள - மண்ணகம் விண்ணகமாய மாறுட, அனறி மண்ணி னுள்ளோர் † இப்படியே அவ்விண்ணகமிருபபதென ஒபபுக்காணவென்க. வானகம வியபப - வானகத்துளளோர தம குறக்கத்தினும ாது சிறப் புடைத்தெனறு வியக்க. இனி மருள மருளுதலாலெனக்கூறி இருதிறத் தோரும் ஐயுறறுத் தெளிநது வியப்பவென்றலுமொன்று விண்ணவர் தலைவன் - ாண்டு அவன் வச்சிரம. மானதத்தால நீராட்டியென்னவு மாம. அரசு மேமபடஇய அகநிலையென நின்றவாறே ஏனை நகர்கட்கு அரசாய் மேமபடட நகரென உரைப்பினும் அமையும.

ஏற்றிச சாற்றி எடுத்துச் செறிந்து ாண்டி ஏந்தி ஆட்டவென்க.

169 [1] பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்

(இ - ள்.) என்றும பிறவாத யாக்கையையுடைய இறைவன் கோயிலும,

[1] 169-78 "நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப், பதிவாழ் சதுக்கத்துதி தெய்வ மீருக, வேறுவேறு சிறபபின் வேறுவேறு செய்வினை, ஆறறி மரபி னறிந்தோர் செய்யுமின்" (மணி. 1 54-7)

(பி - ம்) † 'இப்படியோ'

இனி யாக்கையிற் பிறவாப் பெரியோனெனினுமமையும், என்றது அரூபியென்றபடி.

170 அறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்

(இ - ள்) ஆறுமுகத்தையும் செயய நிறத்தையுமுடைய முருக வேள் கோயிலும்,

"மூன்று மாறு நெடுமுதல் குறுகும்" (தொல் குற்றியலுகரப் 35) என்பதனால அறுமுகமாயிறறு.

171 வால்வளை மேனி வாலியோன் கோயிலும்

(இ - ள்) வெளளிய வளைபோலும நிறத்தையுடைய வெள்ளை மூர்த்தி கோயிலும,

என்றது பலதேவரை, "வலியொதீதீயே வாலியோனை" (புறநா. 56 12) எனருர் பிறரும

172 நீலமேனி நெடியோன் கோயிலும்

(இ - ள்) நீலமணிபோலும நிறத்தையுடைய நெடியமால் கோயிலும், மேனியெனருர், ஆகுபெயரால நிறத்தை

173 மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்

(இ - ள) முத்தமாலையணிநத வெண்கொறறக் குடையையுடைய வாசவன் கோயிலும,

செவவேள, வாலியோன், நீலமேனியோனென்பவறறுள் தொடரீ நிலை இனபமும அலஙகாரச சுவையும உணர்க.

174 - 5 மாமுது முதல்வன் தீமுறை யொருபால்

(இ - ள) மிக்க முதுமையையுடைய முதலவனுகிய வேதாவி னுடைய வாயமையில தபபாத நாலாகிய வேதஙகள சொன்ன நெறி ஓமஙகள நடநதன ஒரு பக்கமென்க.

176 - 8 நால்வகைத் தேவரும் சாறுசிறந் தொருபால்

(இ - ள்) நால்வகைபபடட தேவரும பதினெண்வகைப்பட்ட கணங்களுமென வேறறுமைபபடத் தெரிநது வகுக்கபபடட தோறறதீதை யுடைய கடவுளரது விழவு சிறக்க ஒருபக்கமெனக

நால்வகைத் தேவராவார - மூப்பத்துமூவர், அவர் வசுக்களெண் மரும, திவாகரர் பன்னிருவரும, உருத்திரர பதிஞெருவரும், மருத்துவர் இருவருமெனவிவர்.

மூவாறு கணங்களாவார் - "கின்னரர் கிமபுருடர் விச்சா தரர் கருடர, பொன்னமர் பூதர் புகழியக்கர் - மன்னும, உரகர் சுரர்சா ரணர் முனிவர் மேலாம, பரகதியோர் சித்தர் பலர்", "காநதருவர் தாரகைகள் காணுப் பசாசகணம, ஏந்துபுகழ மேய விராக்கதரோ - டாய்ந்ததிறற், போகா வியலபுடைய போகபூமி யோருடனே, ஆகாச வாசிகளா வார்" எனவிவர், ஆகாசர் நாகர் சித்தர் காந்தருவர் விஞ்சையர் பசாசர் தாரகை போகபூமியோர கிமபுருடர் சுரர் அசுரர் பூதம் முனி தேவர் கருடர் இராக்கதர இயக்கர் சாரணர் எனவுங் கொள்க.

179 - 81 அறவோர் பள்ளியும் .செயல்சிறந் தொரு பால்

(இ - ள்) அறவோர்பள்ளிமுதலிய எல்லாவற்றிலும் தருமம் போதித்தலும பராணம்படித்தலும பிறவுமாகிய செய்கைகள் மிக ஒரு பக்கமென்க

அறவோர்பள்ளி - அருகர்பள்ளி, புத்தர்பள்ளி. அறனேம்படை - தருமம போதிக்குமிடம பறநிலைக்கோட்டத்து - புறம்புள்ள ஸ்ரீகோயி லுடனே புண்ணியத்தானமும - மறறுமுள்ள புண்ணியத்தானங்களும. திறவோர் உரைக்குஞ்செயல் - புராணம.

182 - 3 கொடித்தேர் ஒருபால்

(இ - ள்) கூடாமனனரொடு ஏனையோரும் அடித்தலை நீக்குதற்குக் கொடித்தேர்வேந்தன அருள் சிறக்க ஒருபக்கம,

ஒடுவை அசையாக்கினும் அமையும

184 - 6 கண்ணு ளாளர் இசைசிறந் தொருபால்

கண்ணுளாளர் - மதங்கர், ஆவார் பெருமபாணர், குழலருமென்ப. கருவிக்குயிலுவர் - தோறகருவி வாசிப்பார் பண்ணியாழ்ப்புலவர - கடடப்படட யாழவாசிக்கவலல அறிஞர

(இ - ள்) குழலும் தோலும் நரமபும் கண்டமுமென்னும் இவற்றை இசைக்கவல்ல இவர்களாலே அளந்தறிதல் அரிய சிறப்பையுடைய இசைகள மிக ஒரு பக்கமென்க

இவறறையெல்லாம சிறக்கவெனத் திரித்துக்கொள்க.

187 - 8 முழவுக்கண் ஆங்கண்

(இ - ள்) கங்குலும் பகலும் இங்ஙனம் நடக்கலான், முழவின் கண்கள் அடங்குதலின்றிக் குறுநதெருக்களும் நெடுந்தேரவீதிகளும் விழவாற் களிப்பு மிக்க அகன்ற ஊரிடதெனக.

சிறக்க நீராட்டக் களிசிறநத வியலுள் என்க.

"காதறகொழுநனை" (189) எனபதுமுதல் "மறுகில்" (203) என்னுந் துணையும சிலேடை

189 - 90 காதற் கொழுநனை மாதவி தன்னெடு

(இ - ள்) மாதவி மேற சொலலுமிடத்துத் தான காதலிக்கபபடட கொழுநனைப்பிரிந்து வேறுபாடடால அலர் உறுத அழகிய வளநத மகரக்குழையையுடைய மாதவியென்றும, குருக்கத்திமேற சொலலு மிடத்து எல்லாரும காதலிக்குங் கொழுவிய நனையாநதன்மையை விடடு முதிரநது அலராகாத வளநத அழகிய தளிரையுடைய மாதவியென்றும பிரிக்க

நனை - அரும்பு கண்ணகி பிரிந்து அலரையெய்துதலால் அல ரெய்தாத மாதவி யென்றார். குருக்கத்தியை அலரெயதாவெனறார, செவ்வியழியாமை பறறி.

191 - 5. இல்வளர் முல்லை . பொழிலாட் டமர்ந்து

(இ - ள்) முறகூறியமாதவியுடனே முல்லைமுதல் கழுநீர ாருயுள்ள பூப்பயின்ற பிணையலாலே பொலிவுபெறறுக் காமத்தாறகளித்து மகிழ்ச்சி

எய்தி அழகிய நறிய விரைபடு பூம்பொழிலில் விளையாட்டை விரும்பி யென்க.

இல்வளர்தலை முல்லைமுதல் மூன்றுக்கும் ஏற்றுக. மயிலை - இருவாடசி. சூழ்தல் வண்டின் தொழில் இதனை விரித்து எங்கும் ஒடடுக. கோதையாகிய பிணையலெனப பண்பொடடு விரிக்க, ஒழுங்கு மாம, 'கோதையருவி' (சீவக 525) போல. பூமபொதி நறுவிரைப பொழில் - நறியவிரையைப் பொதிநத பூவையுடைய பொழில், விகாரம். ஆடடு - விளையாடடு, ஆவது புணரச்சி

196 - 7. நாண்மகி ழிருக்கை . புதுமணம் புக்கு

(இ - ள்.) நாள்தோறும மகிழ்நதிருக்கும் இருப்பையுடைய நாளங் காடியிற பூவிறகும இடஙகளிற பலபூமணமாகிய புதியமணத்தின உள் புக்கு.

பூவிற்கும இடங்களைப் பூவின்மிகுதியாற் கானமென்றார்.

198 - 9. புகையும் நன்மொழி தினைத்து

(இ - ள்) அகிறபுகை சாந்தென்னும் இவறறின் செவ்வி வாய்ப்பு மிக்கு நகைதீது விளையாடடும திரளோடே காமக்குறிப்பாகிய மகிழ்சசி மொழியிலே இடைவிடாது பயினறெனக

புலராது - புலராமல், செவ்விமாறுமல் என்றபடி. தினைதீதல் - ஒரு தொழிலை இடைவிடாது பயிறல, "தினைதீதவர பருகிய" (சீவக 50) என்றார பிறரும.

200 - 203. குரல்வாய் திரிதரு மறுகில்

(இ - ள்) குரலென்னும இசையைப்பாடடும வாயையுடைய பாணரோ டும் பரதீதரோடும திரிகின்ற ஒழுக்கதீதையுடைய கோவலனைப் போல் இளி யெனனும இசையைப பாடடும் வாயையுடைய வண்டிஞைடும் இள வேனிலோடும இநநகரிடதீது மந்தமாருதம உலாவுதலைச் செயயும் மறுகிடதீதென்க

குரலுக்கு இளிகூறினார், கிளையாதல் நோக்கி †பரதீதர் - கழி காமுகர் திரிதருதல் - உலாதீதுதல

மாதவி தன்னெடும பயில்பூமபிணையலாற் பொலிந்து எய்தி அமர்நது புக்குச சிறநது தினைதீதப் பாணரொடும பரதீதரொடும திரி கின்ற ஒழுக்கதீதையுடைய கோவலனைபபோல வண்டிஞெடும இளவேனி லொடும மாருதம திரிதரு மறுகிலெனக

இச்செயதென்னும வினையெச்சஙகளைதீ திரிதருமென்னும் வினை யொடு முடிதீது அச்செய்யுமென்னும பெயரெச்சதீதையும கோவலனென னும பெயரொடு முடிதீது அவனைபபோலதீ திரிதருமெனக

பாணரக்கு வண்டும், பரதீதர்கரு வேனிலும, கோவலரக்கு மாருத மும் உவமம்.

இனி வீதிவருணனை கூறுவார்

204 - 7. கருமுகில் சுமந்து உண்டுகொல்

(இ - ள்) அழகிய வானதீதிடதீதே திரியும அரவாகிய பகை செறு மென்றஞ்சி ஆண்டுதீ திரியாமல் ஒரு பெரிய முகிலைச் சுமநது சிறிய

(பி - ம்.) † 'பரதர் - பழிகாமுகர்'

முயலை யொழித்து இருமருங்கினும் இரண்டு கருங்கயலினையும் இடையே ஒரு குமிழமலரையுமெழுதி இங்ஙனம் உள்வரிக்கோலம (8 89, அடியார்) கொண்டு திங்களும இநநிலத்தே திரிதருகின்றது கொலலோவெனவும், உமமை சிறப்பு கருமை - பெருமை.

208 - 11 நீர்வாய் திங்கள் உண்டுகொல்

(இ - ள்) காமன்ருன், முன்பு இறைவன் நுதல்விழியான் இழந்த மெய்பெறுதறகாக ாரம வாயப்புப்பெறற திங்களாகிய பெரிய நிலத்தே சீர்மை வாயப்புப்பெறற குவலையையுடைய அமிர்தகலையினீரை மாந்தி வளர வளர்த்த வானவலலி இநநிலத்தே வருதலுமுண்டாயிறரே தானெனவும்,

வளரவென ஒரு சொல் வருவிக்க மாந்தி மெய்பெறவெனினும் அமையும். இதனை வானவலலி என்ருர், காமவலலியும உண்மைதோன்ற, வானவல்லி-மினலுக்கொடி. உமமை சிறபபு

212 - 7. இருநில மன்னற்கு உண்டுகொல்

(இ - ள்) வளதீதையுடைய இபபதியிடதீதே திருமகள் வந்து புகுதறகுக் காரணம மிக்க நிலதீதையுடைய கரிகாலற்குத் தனது வளங காடடவா யிருநதது தப்பாதெனக கருதி எரிபோலும நிறதீதையுடைய தோர் இலவ மலரையும பல முல்லை முகையையும ஒழிநதும இரணடு கரிய பெரிய குவளை மலரையும ஒரு குமிழமலரையும பூதீது இஙஙனங் கொண்ட உளவரிக் கோலதீதோடு தனது அன்பு மிக்க துணையைத் தேடிக்கமலம திரிதலும உண்டாயிறரேதானெனவும்,

களளக்கமலமென்ருர், உருமாறிதிரிதலின, கள்ளையுடைய அக் கமலமெனபது இயலபு ஆங்கு - பூதீத அபபோதே. வளம - செல்வ மும அழகும.

218 - 23 மன்னவன் பெற்றியு முண்டென

இதறகுக் கொல்லென்னும இடைசசொல் வருவிக்க

(இ - ள) முன்பு ஓடியொளிதீத பகுவாய்க் கூறறம தான் ஆணுரு வோடு திரிநது பல்லுயிரைப் பருகின் அரசன் செஙகோல மறுதீநதா மென்று அதறகு அஞசி மறைநதுநின்று பருகவேண்டிக் கடுதீதமுகமும் இடிதீத குரலுமொழிதீது வாணகை முகமும யாழிசை மொழியுங் கொண்டு, நகைதீது மிழறறிப் பெண்ணுருவோடு இநத வீதியில திரியுந் தன்மையும உண்டாயிறரேதானெனவும,

பருகுங்கூற்றம - பலவுயிரையும ஒருவாயிற பருகுங்கூற்றம , பகு வாய - அங்ஙன் பருகுங்கால் அங்காக்கும் வாய தன் அருநதொழில் திரியாது ஆண்மையில திரிந்து பெண்மையில் திரியுமெனினும் அமையும். இதன் கருதீது —கூறறம தன் கொலைதீதொழில் கெடாமல் ஆணுருக் கெடப் பெண்ணுருவால திரியுமென்றபடி அருந்தொழில் - கொலைதீ தொழில். நாணுடைக் கோலதீது நகைமுகங் கோட்டியென்றது—ஒருரு வைக் கோடடுவார்க்கு நாணுடைமை கோட்டல அரிதாகலின், முதலில் அதனைக்கோட்டிப் பின்பு அதனோடு நகைமுகதீதையும் கோட்டி யென்ப தாயிற்று.

கூற்றம் அஞ்சிதீ திரியாமற் கோட்டி மிழற்றிப் பெண்மையில் திரியும் பெற்றியென்க.

மாருதம திரிதருமறுகில் திங்களும் வல்லியும் கமலமும் கூற்றமும் திரிதலுமுண்டுகொல் வருதலுமுண்டுகொல? திரிதலுமுண்டுகொல்? பெறறியுமுண்டுகொலெனக் கூறியெனக.

இது, திங்கள் முதலியவற்றைப் பொதுமகளிர் உறுப்போடும் தொழி லோடும உறுவிதீதுக் காமுகர் புகழ்ந்து கூறுதலெனக்கொள்க.

224 - 34 உருவி லாளன் நடுநாள்

(இ - ள்) காமனுடைய ஒப்பிலாத பெரிய சேனையாகிய பொதுமகளிர் ஊடலானுகிய மாறுபட்ட அமரை இங்ஙனம புகழநது சொலலி வென்று அவர் போகாமல் எதிர நின்று விலகிப் புணர்தலின் அவருடைய முலை முதலியவறறில் எழுதிய தொய்யில முதலிய பதீதிக்கீறறுதீ தமதுமார்ப முழுவதும உறுதலானே விருநதொடுபுக்க கணவரோடே உடனுறைதலை மருவி வழிபாடடோடும பொருநதிப்புணர்ந்த அருநததிபோலும கறபை யுடைய இலலறமகளிரை அபபெருந்தோடகணவரே 'இமமாதருடைய ஒளிபொருந்திய முகதீது நீலமணிபோலும இதழையுடைய குவளைப் போதுகள புறங்கொடுதீதுப் போதறகுக் காரணமாகிய கரிய கண்களின் கடைச சிவபபு அவவிருநதால தீரநததிலலையாயின் இப்பெரிய நில வெலலை இதறகு ஒரு மருநதையும தரவறறே' வெனதீ தமது நெஞ் சொடுகூறிச செயலறறுநடுஙகும விழா நடுநாளிலென்க.

இகலமராட்டி - மாறுபடட அமரைச்சயிதீது, ஆடு - வென்றி; என் றது புலவியாலே கூடாதமகளிரை இங்ஙனம புகழ்ந்து புலவியைதீ தீர்தீ தென்றபடி எதிர் நினறு விலக்கி - போகபபுக்கவரகளைப் போகாமல விலக்கி, வரிகோலம விளைதீதொகை முழுமெயயும - மார்பமுழுதும; "முழுமெய்யும புண்களுறறுரக்கு" (சீவக 819) எனறுர் பிறரும உறீஇ- உறுவிதீது, புணரநதெனறபடி தீர்நதிலது விகாரம யாவதும் - சிறி தும, உமமை சிறபபு மருநதுந தருங்கொல் இமமாநில வரைபபெனதீ தருதலை வரைப்புக்கேறறுக. வரைப்பென்றுர வரைப்பிலுள்ளாரை. நலவிளை - விழா.

ஆடடி விலக்கி உறீஇப் புக்க கணவர் நடுங்கும நாளென்க

நிலவரைப்புதீ தருங்கொலென்றுர், சல்லியகரணி சந்தானகரணி சமனியகரணி மிருதசஞ்சீவினி யென்னும இவை முதலிய மருந்துகளைதீ தரும நிலவரைபபு இவவூடல் முதலியவறறிறகு மருந்து தரமாடடாதென் றறகு.

இனி, திங்கள் வானவல்லி முதலியவறறைக கூறுதலைக் கண்டோர் கூற்றுக்கி அவர் அங்ஙனஙகூற அக்காமன் சேனையாகிய மகளிர் மாறு படடுதீ தம் உறுப்புக்களால் அமரைச்செயவிதீது வீதியிறபோவாரைப் போகாமல் தடுதீதலின் அவருடைய முலையிலெழுதிய தொயயிலுறுதலின் விருநதொடு புக்கவெனிறமை அமையும. இனி, இமமகளிர்நெருங்குத லாலே மாந்தர் மார்பால்தள்ளிப் பெயர்கின்றவர் தம் மார்பிற பொறிதீதலா லெனவுமாம. இஃது, "உறுதீதலு மொனறலும்" என்னும் ஆலிங்கன விகற்பம, "பூசுசாந் தொருவர் பூசிறறெழுவர்த மகலம் பூசி, மாசன மிடம்பெறுது வண்கடை மலிநத தன்றே" (சீவக 116) என்றுர் பிறரும. உடனுறைவு மரீஇயெனவே ஊடல் தீர்தலும் ஒழுக்கொடு புணர்ந்த வெனவே காட்டிற்றுஞ் செய்து கதம்படாராதலிற புலவி துனியிற் செல்லாது ஊடலுணர்ந்தமையும விளங்கி நின்றன.

235 - 40. உள்ளக நறுந்தாது விழவுநா ளகத்தென்

(இ - ள்) [1]இந்திரனுடைய விழாநாளகத்து உள்ளுள்ள நறிய தாதுகள் மதுவையூறிப் பிலிறறுதலால் அகநிறைந்து மீது அழியப்பொழிய நின்று நடுங்கும் கழுநீரினப்போலக் கண்ணகியுடைய கருங்கண்ணும் மாதவியுடைய செங்கண்ணும உண்ணிறை கரத்தலானே இதயத்தை யொளித்து நீரையுகுத்தன, அவையே முன எண்ணிய முறையே இடமும் வலமும துடித்தனவென்க.

அழிந்து அழிய

'தாதெறிப்ப' என்று பாடமோதித் தாது ஒளிவிடவெனப் பொருள் உரைப்பாருமுளர் கழுநீர்போலவென்றது, ஊறி நிறைநது இதழினின் றும வழிந்து சிநதுதலின் நடுங்குமென்றார், மலகிநின்று அலைநது சிந்து மாகலின் கருங்கண் செங்கணென்றார், இருவரக்கும கூடடமினமையும் உண்மையு முணர்த்தறகு இடத்தினும வலத்தினுந துடித்தனவென்றார். மேல் இருவர்க்கும கூடடமும பிரிவும் உணர்த்தறகு. விழவுநாளகத் தென்றார், தீர்த்தத்தின் முன்னுளென்பது உணரத்தறகு.

(3) மடந்தை (4) போர்த்த படாதீதைப் போகநீக்கி (6) ஒளி (5) உச்சித் தோன்றிப் (6) பரப்பச் (69) சொரிநது (70) ஆடிப் (75) பெயர (86) நலங்கொளவைத்து (88) ஊட்ட (110) மண்டபமன்றியும (140) மன்றத்தும பலியுறீஇ (142) ஏறறிச் (144) சாறறி (146) எடுத்து (160) ஈண்டிக் (162) கொள்கென (168) ஆட்டக் (188) களிசிறநத வியலுளாங்கண் (203) திரிதருமறுகில் (223) உண்டுகொலென்று (224) சேனை (225) ஆட்டிவிலக்கி (226) உறீஇப் (227) புக்க கணவர் (234) நடுங்குநாள் (238) உகுத்தன வாகிய (237) கருங்கண்ணும் செங்கண்ணும (240) விழாநாளகத்து (239) இடத்தினும வலத்தினும் துடித்தனவென விணமுடிக்க

இஃது எல்லாவடியும் அளவடியாய் வந்துமுடிதலின, **நிலைமண்டில ஆசிரியபபா**

[1] பண்டைக்காலத்தில தன்னகரத்து விழாக்கொண்டருள வேண்டு மென்றிரந்த ஒரு சோழன வேண்டுகோளுக்கு இந்திரன் உடன்பட்டா னென்பதும், அது தொடங்கி இவ்விநதிரவிழா இக்காவிரிப்பூமபடினதீது நடைபெறறு வருகின்றதெனபதும **மணிமேகலை** விடாவறை காதையால் விளங்குகின்றன இந்திரவிழா உண்டென்பதை வான்மீகி, காளிதாசர் முதலியோர ததீதம் நூலகளிற குறிப்பித்திருககினறனர் நச்சிணூர்க்கினி யரும், "மருத நிலதீகிறகுதீ தெயவமாக 'ஆடலும பாடலும ஊடலும் உணரதலும' உள்ளிடட னெபவிளையாட்டு இனிதினுகரும் இமையோர்க் கும இன்குரலெழிலிக்கும இறைவனகிய இந்திரனை ஆண்டையோர் விழவு செய்து அழைத்தலின், அவன் வெளிபபடுமென்றர, அது 'வையைப் புதுப்புனலாடதீ தவிர்ந்தமை, தெய்வதீதிற றேறறிதீ தெளிக்கு' என இந்திரனைதீ தெய்வமென்றதனாலும இநதிரவிழவூரெடுத்த காதையானு முணர்க" என்று எழுதியிருக்கின்றனர, தொல். அகதீ 5, உரை.

(இ) இந்திரவிழவூரெடுத்த காதை முற்றிற்று.

ஆருவது

கடலாடு காதை

வெள்ளி மால்வரை வியன்பெருஞ் சேடிக்
கள்ளவிழ் பூம்பொழிற் காமக் கடவுட்குக்
கருங்கய னெடுங்கட் காதலி தன்னெடு
விருந்தாட் டயருமோர் விஞ்சை வீரன்
தென்றிசை மருங்கினேர் செழும்பதி தன்னுள்
இந்திர விழவுகொண் டெடுக்குநா ளிதுவெனக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிக்
கொடுவரி யூக்கத்துக் †கோநகர் காத்த
தொடுகழன் மன்னற்குத் தொலைந்தன ராகி
நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்
திருந்துவே லண்ணற்குத் தேவ னேவ

1. வியன்பெருஞ்சேடி - அகன்று உயர்ந்த வடசேடி.
2. காமக்கடவுள் - காமதேவன்.
4. (பா) விருந்தாட்டமரும்-விழாக்கொண்டாடிப்போதும். விஞ்சை வீரன் - விச்சாதரவீரன்.
5 செழும்பதி - காவிரிப்பூம்பட்டினம்
6. கொண்டு - கருதி.
8. கொடுவரி யூக்கதீது - புலிவலியால். கோநகர் - அமராபதி.
9 (பா) அண்ணல - சோழன்.
7 - 9. அவுணர் தொலைந்தனராகி.
10. இவனெஞ்சு இருண்டுமயங்க. நிகர்தீது - தம்மிலொதீது.
11. வஞ்சம் - இருளாக வரவிடட வஞ்சம, என்பது அந்தகாரதீதைப் பண்ணி வருவதோராயுதம ; தாமசாதீதிரம். அவன்மேல் அசுரர் விட்ட வஞ்சதீதை மாறறின பூதமென்க.
12. திருந்துவேலண்ணறகு - சோழன்பொருட்டாக.

அடி, 1 மணி. 17 . 21 1-34 பெருங் 5. 9 9-11.

அடி, 7 - 13 சிலப். 5 65 - 7 , "கொடிதீதேர்த் தானைக் கொறற வன் றுயரம், விடுதீத பூதம்" (மணி. 1 . 19 - 20)

(பி - ம்) † 'கோனகர்'

இருந்துபலி யுண்ணு மிடனுங் காண்கும்
அமரா பதிகாத் தமரனிற் பெற்றுத்
தமரிற் †றந்து தகைசால் பிறப்பிற்
பொய்வகை யின்றிப் பூமியிற் புணர்த்த
ஐவகை மன்றத் தமைதியுங் காண்குதும்
நாரதன் வீணை நயந்தெரி பாடலும்
தோரிய மடந்தை வாரம் பாடலும்
ஆயிரங் கண்ணோன் செவியக நிறைய
நாடக முருப்பசி நல்கா ளாகி
மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
தங்குக விவளெனச் ‡சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதற் ரோன்றிய
அங்கர வல்கு லாடலுங் காண்குதும்
துவரிதழ்ச் செவ்வாய்த் துடியிடை யோயே

13. இருந்துபலியுண்ணுமிடனும் காண்போமென்க

14. அமராபதிகாத்து - தேவலோகத்தைக்காத்து. அமரனிற் பெற்று - அமரனிடத்திலே பெறறு.

15 தமரிற்றந்து - சோழன் மரபினுள்ளாரால் தரப்பட்டு.

17 ஐவகைமன்றத்தமைதி - ஐநது வகைப்பட்ட மன்றத்தின் சிறப்பு.

அமராபதிக்கு அசுரரால் வந்த இடர் நீக்கி இந்திரனுலே பெற்று இவன் மரபினுள்ளோரால் தரப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திலே பெற வைத்த ஐவகை மனறமும் காண்போமெனக.

18 நாரதன்வீணை - நாரதமுனிவீணை. நயந்தெரி பாடலும்-நயம் தெரியப்பட்ட பாடலும்

19 தோரியமடந்தை - பற்றுப்பாடுவாள்.

20 ஆயிரங்கண்ணோன் - இந்திரன். செவியகநிறைய - செவி யிடம நிறையுமபடி

21 நாடக முருப்பசி நல்காளாகி - நாடகமாடும் உருப்பசி பாடி ஆடலை விருமபாளாதலால்

22-3 அதற்குகாரணமான சபாநதனிடத்தே புகுஞ்சாபத்தால் வீணை சாபமபட்டு அமபணமாயதென்க, வீணை மங்கலமிழப்பச் சாபம் பட்டென்றுமாம்.

24. அவள்வழி வநதமையின், 'இவள் பெயரும் மாதவியாயிற் றென்க.

(பி - ம்) †'றந்த' ‡'சாப மேறற'

அமரர் தலைவனை வணங்குதும் யாமெனச்
சிமையத் திமையமுஞ் செழுநீர்க் கங்கையும்
உஞ்சையம் பதியும் விஞ்சத் தடவியும்
வேங்கட மலையுந் தாங்கா விளையுட்
காவிரி நாடுங் † காட்டிப் பின்னரப்
பூவிரி படப்பைப் புகார்மருங் கெய்திச்
சொல்லிய ‡ முறைமையிற் ரெழுதனன் காட்டி
மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன்
மாயோன் பாணியும் வருணப் பூதர்
நால்வகைப் பாணியு நலம்பெறு கொள்கை
வாணூர் மதியமும் ¶ பாடிப் பினனர்ச்
சீரியல் பொலிய நீரல நீங்கப்
பாரதி யாடிய பாரதி யரங்கத்துத்
திரபுர மெரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம் பேவல் கேட்ப
உமையவ ளொருதிற ஞக வோங்கிய
இமையவ ஞடிய கொடுகொட்டி யாடலும்
தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பாண்ட ரங்கமும்
கஞ்சன் வஞ்சங் கடத்தற் காக

27. இங்குப் பூசைகொள்ளுகின்ற இநதிரனவணங்குதுமென்று.

30 தாங்காவிளையுள - நிலமபொருத விளைசசல்

33 தொழுதனன்காடடி - இநதிரனைததொழுது பின்றைக்காட்டி.

35. மாயோன்பாணி - திருமாலைப்பாடும தேவபாணி வருணப் பூதர் - நாலவகை வருணத்துப்பூதர்.

37 வாணூர்மதியம - சநதிரனைப் பாடும் தேவபாணி. பாடி - இம் மூவகைப் பாணியும பாடி

38 சீரி பலபொலிய - தாளவியலபு பொலிவுபெற நீரலநீங்க - நீரலலாதன நீங்க, நீரலலாதன - அவதாளம

39 பாரதி - பைரவி. அரங்கம - சுடுகாடு இவளாடுதலாற பாரதி யரங்கென்று சுடுகாடடுக்குப் பேராயிறறு.

40 திரிபுரமெரியத் தேவரவேண்டுதலால

41 ஏவல்கேட்ப - சூடடவளவிலே 42 ஒரு திறனுக - ஒரு பக்கமாக

44 தேர்முன் - தேரிடம தேர்தீதட்டே அரங்கமாக.

அடி, 29 பெருங் 5 3 52 அடி, 40 புறநா. 55 1-4. அடி, 43 கலித். கடவுள் 5-6

(பி - ம்) † 'காடடிய' ‡ 'முறையிற்' ¶ 'பாடிய பின்றைச்'

அஞ்சன வண்ண னுடிய வாடலுள்
அல்லியத் தொகுதியு †மவுணற் கடந்த
மலலி னுடலு மாக்கட னடுவண்
நீர்த்திரை யரங்கத்து நிகர்ததுமுன் னின்ற
சூரத்திறங் கடந்தோ னுடிய துடியும்
படைவீழ்த் தவுணர் பையு ளெய்தக்
குடைவீழ்த் தவர்மு னுடிய குடையும்
வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீணில மளந்தோ னுடிய குடமும்
ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காம னுடிய பேடி யாடலும்
காய்சின வவுணர் கடுந்தொழில் ‡பொருஅள்
மாயவ ளாடிய மரக்கா லாடலும்
செருவெங் கோல மவுணர் நீங்கத்
திருவின் செய்யோ ளாடிய பாவையும்
வயலுழை நின்று வடக்கு வாயிலுள்
அயிராணி மடந்தை யாடிய கடையமும்
அவரவ ரணியுட னவரவர் கொள்கையின்
நிலையும் படிதமு நீங்கா மரபிற்

47. அஞ்சனவண்ணன் ஆடியவாடல் பதிதுள்.

48. அல்லியத்தொகுதி - அல்லியவாடல்; யானையை மருப்பொசித்தாடல்.

53. குடைவீழ்த்தது - குடையைத் தாழ்த்தது.

54 - 5 உலோகங்களாலும் மண்ணுலும குடங்கொண்டு வாசு தேவனுடினது.

58 - 9. அவுணர் பாம்பும் தேளும்விடத் துர்க்கை மரக்காலின்மேல் நின்றுடினுள்.

60 - 61. திருமகள், செருக்கோலம் அவுணர்நீங்கப் பாவையாக ஆடியது.

62 - 3 ¶ வாணபுரத்து வடக்குவாயிலிடத்து நின்று கடைசியர் வடிவுகொண்டு அயிராணியாடிய கடையமும.

"கடையமயி பதினேர்கூத்து" (3 14, அடியார்) இவை நிலை நின்றுடல, பதம வீழ்நதாடலென இருவகைய. அவை. "அலலியம ..... ஆறு", "துடி ஐநது"

அடி, 54 - 5 . மணி. 3 123 - 4 அடி, 56 . மணி. 3 124 - 5 அடி, 61 மணி. 5 . 4.

(பி - ம்) †'மவுணரைக் கடந்தோன்' ‡'பொருஅ, மாயவள்' ¶'வாணுபுரத்து'

பதிஞ்ஞே ராடலும் பாட்டின் பகுதியும்
விதிமாண் கொள்கையின் விளங்கக் காணுய்
தாதவிழ் பூம்பொழி லிருந்தியான் கூறிய
மாதவி மரபின் மாதவி யிவளெனக்
காதலிக் குரைத்துக் கண்டுமகிழ் வெய்திய
மேதகு சிறப்பின் விஞ்சைய †னன்றியும்
அந்தரத் துள்ளோ ரறியா மரபின்
வந்து காண்குறூஉம் வானவன் விழவும்
ஆடலுங் கோலமு மணியுங் ‡கடைக்கொள
ஊடற் கோலமோ டிருந்தோ னுவப்பப்
பத்துத் துவரினு மைந்து விரையினும்
முப்பத் திருவகை யோமா லிகையினும்

72. அந்தரத்துள்ளோர் - தேவர்கள்.

72-3. அறியாமரபின் . . விழவு - பிறர் அறியாமல் வந்துகாணும் விழவு

(4) விஞ்சைவீரன், தெய்வயாக்கையை மறைத்துவந்து (27) வணங்குது நாமெனச் சொல்லிக் (31) காட்டிப் பின்னர்ப் (32) புகா ரெய்தி (34) விழாக்காண்போன் இவறறைக் (67) காணுயெனறு (70) காதலிக்குரைத்துக் கண்டு மகிழ்வெய்திய (71) விஞ்சையனென்க.

(38) நீரலநீங்க (64) அவரவரணியுடனுடிய (65) நிலையும படிதமும் நீங்கா மரபினையுடைய (66) பதிஞ்ஞேராடலுமெனக் கூடடுக.

74 (பா) ஆடறகோலம் - மாதவி பதிஞ்ஞேராடலுக்கும் கொண்ட கோலம அணி - ஆடுங்காலத்துப் பிறக்குமணி, பாவரசம். கடைக் கொள - முடிநதவளவிலே

75. ஊடறகோலமோடிருந்தோன் - கோவலன். அவனூடதற்குக் காரணம் திருநாள் முடிதலான் வந்த வெறுப்பு, இவள் ஆடலிற காலநீட்டிதீதலாலும பலரும இவஈப்பறறிப் பார்தீதலிற பொருமையாலும் வநதவெறுப்புமாம் உவப்ப - அவனூடல் தீர்நது உவகையெயதுமபடி.

76 பதீதுதீதுவராவன '—''பூவநதி திரிபலை புணர்செங கருங் காலி, .. . துவரே'', [1] ''மாந்தளிர் முப்பழஞ் சீர்தீத முதீதக்காசு'' எனவுங கொளக ஐநதுவிரையாவன —''நறுமபிசு ருகண நற் கொடட மாஞ்சி, [2] வெறுங்கண்டில வெண்ணெய விரை'', ''கொட்டம .. விரை'' எனவும கொளக

77 முப்பதீதிருவகை ஓமாலிகையாவன —இலவங்கம் பச்சிலை.. நண்ணு மரதீதை நறுமபிசின - எண்ணும, குடசம் வசுவாசி தீமபூ . .. சண்பக முகையோ, டெணணுன்கு மோமா லிகை''

அடி, 72 மணி 1 15 76-9 பரி 89-91 77 . பெருங் 1. 41 127 [1] ''நாறபான் மரநாவன் மாந்தளிர் முப்பழஞ், சீர்முதீதக் காசுதுவர்''

[2] கண்டில் வெண்ணெய் - ஓமாலிகையில் ஒன்று, கும்ப பால. ஆற்றுப். 13

(பி - ம்) †'னன்றி, யந்தரம' ‡'கடைகொள'

†ஊறின நன்னீ ருரைத்தநெய் வாசம்
நாறிருங் கூந்த னலம்பெற வாட்டிப்
புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி
அலதக மூட்டிய வஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விர னல்லணி செறீஇப்
பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை
அரியகங் காலுக் ‡கமைவுற வணிந்து
குறங்கு செறிதிரள் ¶குறங்கினிற் செறித்துப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறங்கிளர் பூந்துகி னீர்மையி னுடீஇக்
காமர் கண்டிகை தன்னெடு பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக் கணிந்து
மத்தக மணியொடு வயிரங் $கட்டிய
சித்திரச் சூடகஞ் செம்பொற் கைவளை

78 உரைத்த - தேயத்த. நெயவாசம - புழுகுநெய்.
இவற்றின் (78) ஊறிய நீராலே (79) ஆட்டியென்க.
80. புகையிற .. கூந்தலை - அகிறபுகையால உலர்த்திய கூந்தலை.
82. அலதகம் - செம்பஞ்சி, அரத்தமெனவுமாம்
83 மெல்விரனல்லணி - கான்மோதிரம
84. பரியகம் - காற்சவடி. நூபுரம் - சிலம்பு.
85. அரியகம் - பாதசாலம்.
86. (பா) குறங்குசெறியணி - கவான்செறியாபரணம.
87. முத்திரை - அரையின் முத்துவடம, பிறங்கிய முத்து - பெரிய முத்து.
87-8. முப்பத்திரண்டு வடத்திறைச்செய்த விரிசிகையென்கின்ற மேகலையைப் பூந்துகிலுள்ளுடுத்து, உடுத்தல - சூழுதல பெரிய முத்து வடம முப்பத்திரண்டையுடைய அரையிலே பூநதுகிலை யுடுத்தெனறுமாம
89-90 காமர் கண்டிகை . தோள்வளையென்றது - கழுத்து வடத்தின்பின் தாலிக்கு இரண்டு பக்கமும பகுத்துப்போநது வாகுவலயத்தோடு தொடக்கிக் கிடப்பதோர ஆபரணம, காமரசண்டிகையுடனே மணிநெருங்கின தோள்வளையைத் தோளுக்கணிந்தெனறுமாம.
91. மத்தகமணி - உச்சியிலே வைத்த மாணிக்கம, மத்தகத்தையுடைய சூடகத்துச்சியிலேயுள்ள மணியொடு வயிரங்கட்டுதலுமாம்
92 கைவளை - சந்துக்காரை.

(மேற்) 84-5 நன். மயிலை 450. அடி, 86 குறங்குசெறி சீவக. 174, ந.

(பி - ம்) †'ஊறிய' ‡'கமைவர' ¶'குரங்கினுக் கமைத்துப்' $'குயிறறிய'

பரியகம் வால்வளை பவழப் †பல்வளை
அரிமயிர் முன்கைக் கமைவுற வணிந்து
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத் தாள்செறி
காந்தண் மெல்விரல் கரப்ப வணிந்து
சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினை
அங்கழுத் தகவயி ணுரமோ டணிந்து
‡கயிற்கடை யொழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற ¶மறைத்தாங்
கிந்திர நீலத் திடையிடை $திரண்ட
சந்திர பாணி §தகைபெறு கடிப்பிணை
அங்கா தகவயி னழகுற வணிந்து
தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி

93. பரியகம் [=பாசித்தாமணி], கைச்சரியுமாம. வால்வளை - சங்க வளை. இதுவும் ஒரோவொன்றிடுவார்கள் பவழப் பல்வளை - கடகவளை.

95. வாளைப்பகுவாய மோதிரம் - முடக்கு மோதிரம.

96. கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம் - செங்கேழ் மணியையுடைய மோதிரம், அவை இரத்தினங்கடடினஅடுக்காழி. முன்னிற்கேழ் மோதிரத்திறகேறறுக

97 வாங்குவில்வயிரம் - நுடங்கின ஒளியையுடைய வயிரம். மரகதத் தாள்செறி - மரகததீதையுடைய தாள்செறி இவை மரகத நாயகமாகிய வட்டப்பூ.

98 விரல்கரப்ப - விரல்மறைய.

99. சங்கிலி - வீரச் சங்கிலி. (பா) நுழைவினை நுண்ஞாண் - நுண்ணிய தொழிலையுடைய ஞாண்

101 - 2 கயிறகடையொழுகிய கோவை - கழுத்தாபரணங்களிற் கொக்கிவாய் முத்தாரமாகச் செயது அதிலே நவரத்தினங்களைக் கோத்து முதுகு மறையவிடும் பின்தாலி.

103 - 4 இந்திரநீலக் கடிப்பிணை - நீலக்குதம்பை. இடையிடை திரண்ட சந்திரபாணியென்னும் நாமவேறுபாடடையுடைய வயிரமுழுதும் கட்டின கடிப்பிணை, இவை இரண்டும இரண்டு காதில் அணிவன.

106 தெய்வவுத்தி - சீதேவி

அடி, 95-6 நெடுநல் 143-4 அடி, 96 "சுருவேறெழுதிய மோதிரந் தொட்டாள்" (கலித் 84 . 23)

97 . "மரகதமணித் தாள்செறிந்த மணிக்காந்தண் மெல்விரல்கள்" (7 . 1)

101 · மணி 3 135-6. 102 "சிறுபுறம் புதைப்ப" (மணி 2 . 51) அடி, 106 . முருகு. 23, கலித். 96, ந.

(பி - ம்.) †'பல்வடம்' ‡'கயிற்படை' ¶'மறைஇ, யிந்திர' $'சிறந்த' §'தகைமணிக்'

தொய்யகம் புல்லகந் †தொடர்ந்த தலைக்கணி
மையீ ரோதிக்கு மாண்புற வணிந்து
கூடலு மூடலுங் கோவலற் களித்துப்
பாடமை சேக்கைப் பள்ளியு ளிருந்தோள்
உருகெழு மூதூ ருவவுத்தலை வந்தெனப்
பெருநீர் போகு மிரியன் மாக்களொடு
மடலவிழ் கானற் கடல்விளை யாட்டுக்
காண்டல் விருப்பொடு வேண்டின ளாகிப்
பொய்கைத் தாமரைப் புள்வாய் புலம்ப
வைகறை யாமம் வாரணங் காட்ட
வெள்ளி விளக்க நள்ளிருள் கடியத்
தாரணி மார்பனெடு பேரணி யணிந்து
வான வண்கையன் அத்திரி யேற
மானமர் நோக்கியும் வைய மேறிக்
கோடிபல வடுக்கிய கொழுநிதிக் குப்பை
‡மாடமலி மறுகிற் பீடிகைத் தெருவின்
மலரணி விளக்கத்து மணிவிளக் கெடுத்தாங்
கலர்கொடி யறுகு நெல்லும் வீசி
மங்கலத் தாசியர் தங்கல னெலிப்ப
இருபுடை மருங்கினுந் திரிவனர் பெயரும்

107. தொய்யகம் - தலைப்பாளை. புலலகம் - தெனபலலி வடபல்லி. தொடர்ந்த தலைக்கணி - இவை முதலிய தொடர்ந்த தலைக்கணிகளை.

108. மாண்புறவணிந்து - அழகுபெற அணிந்து.

111. உவவுத்தலை - உவவுக்காலம், ஏழாவது இடப்பொருள் காலத் துடன் மயங்கும.

112. பெருநீர்போகும் ஏழாவது இரண்டாவதுடனே மயங்கிற்று. பெருநீர் - கடல. இரியன்மாக்கள் - தீர்த்தமாட விரைந்து போகும் பொழுது விளையாடு சனம்.

113. விளையாட்டு - பிறர்விளையாடல். 115. புள்வாயொலிப்ப.

116. யாமம் - யாமத்தை. 117. வெள்ளியெழுந்த விளக்கம்.

119. வண்கையன் - கோவலன். அத்திரி - கோவேறுகழுதை; அஃதா வது குதிரையில் ஒரு சாதி.

120. வையம் - தேர், [1]கொல்லாவண்டியுமாம், கூடாரப்பண்டியு மாம்.

123. மலரணிதல் (பா) அகல் விளங்கியவிடத்திலே.

124. வீசி - தூவி.

அடி, 107 கலித் 97 13, ந. அடி, 110 சேக்கைப்பள்ளி. 4 : 28.
[1] 'கோலார் வண்டி' என்பது மலைநாட்டு வழக்கு.
(பி - ம்.) † 'தொடருந்' ‡ 'மாட மறுகிற்'

திருமக ளிருக்கை செவ்வனங் கழிந்து
மகர வாரி வளந்தந் தோங்கிய
நகர வீதி †நடுவட் போகிக்
கலந்தரு திருவிற் புலம்பெயர் ‡மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி மருங்குசென் றெய்தி
¶வண்ணமுஞ் சாந்து மலருஞ் சுண்ணமும்
$பண்ணியப் பகுதியும் பகர்வோர் விளக்கமும்
செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமும்
காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்
கூவியர் காரகற் குடக்கால் விளக்கமும்
நொடைநவின் மகடூஉக் கடைகெழு விளக்கமும்
இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும்
§இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்
விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமும்
மொழிபெயர் தேத்தோ ரொழியா விளக்கமும்

127 திருமகளிருக்கை - சீதேவி குடியிருப்பான பீடிகைத் தெரு வென்க. இவை படடினப்பாக்கம

129. நகரவீதி - மருவூரப் பாக்கவீதி

132 கொடியெடுத்து நுவலும் - இன்னவுளவென்று கொடிக்கட்டி யெடுத்துச் சரக்குகளது நன்மையை அறிவிக்கும்.

133 மாலைச்சேரி - ஒழுங்குபடட பரதேசிகள் இருப்பு.

137. காழியர - பிடடுவாணிகர். ஊழுறுதல் - குடைதல்.

138. (பா) கூவியர் காரகற குடைகால விளக்கு - அப்பவாணிகர் காரகலொன்றத் தண்டைக் கடைந்திடட விளக்கு

139. நொடைநவில் கடை - பல பண்டமும் விறபார்கடை.

140. [பாரடைவலையுமாம]

141. கலங்கரைவிளக்கம - திக்குக்குறி காட்டிக் கலத்தை அழைக்கிற விளக்கம்.

143. (பா) மொழிபெயர் தேஎத்தோர் - பரதேசிகள். ஒழியாவிளக்கு - விடிவிளக்கு.

அடி, 127 பெருங். 3. 8 34, மணி 3 81, 11 : 6 அடி, 128 · 'வாரிவளம்' (குறள், 14). அடி, 130 சிலப் 5 11 அடி, 141. "இர வின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி, உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந், துறை" (பெரும்பாண். 349-51). அடி, 132 பெருங். 1. 35 152. அடி, 143 மணி 1 16.

(பி - ம்) †'நடுவுட்' ‡'மாக்கள், கலந்திருந் துறையும் விலங்குநீர் வரைப்பின், வேலை' ¶'வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்த மும்' $'பண்ணியத் தொகுதியும்' §'விலங்குநீர்'

கழிபெரும் பண்டங் காவலர் †விளக்கமும்
எண்ணுவரம் பறியா வியைந்தொருங் கீண்டி
இடிக்கலப் பன்ன வீரயிர் மருங்கிற்
கடிப்பகை காணுங் ‡காட்சிய தாகிய
விரைமலர்த் தாமரை ¶வீங்குநீர்ப் பரப்பின்
மருத வேலியின் மாண்புறத் தோன்றும்
கைதை வேலி நெய்தலங் கானற்
பொய்த லாயமொடு பூங்கொடி பொருந்தி
நிரைநிரை $யெடுத்த புரைதீர் காட்சிய
மலைப்பஃ றுரமுங் கடற்பஃ றுரமும்
வளந்தலை மயங்கிய துளங்குகல விருக்கை
அரசிளங் குமரரு முரிமைச் சுற்றமும்
பரத குமரரும் பல்வே றுயமும்
ஆடுகள மகளிரும் பாடுகள மகளிரும்
தோடுகொண் மருங்கிற் §சூழ்தர லெழினியும்
விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்

---

145. எண்ணு வரம்பறியா - அளவறியா.

146. இடிக்கலப்பு - மாவைதீதம்மிறகலதீதல். அயிர் - நுண்மணல்.

147. சிறுகடுகு காணுங் காட்சியையுடையதாகி.

135 - 50. விளக்கங்களீண்டி நுண்மணலில் வீழ்ந்த வெண்சிறு கடுகைப் பலரும் காணும் காட்சியதாக, இதனுலே தாமரை பூதீத மருத நிலம்போலதீ தோன்றும் நெய்தனிலம, கைதை வேலியையுடைய நெய் தலங்கானல், விளக்குக்களீண்டிக் கடிப்பகைகாணும் காடசியையுடைதீ தாய் மருதவேலிபோலதீ தோன்றுமென்ற இஃது இடதீது நிகழ்பொருளின் வினையை இடதீதிலேயேற்றிறறு.

151. பொய்தல் - விளையாட்டு.

150 - 51. விளையாட்டாயதீதுடனே சென்று கானலைப் பொருந்தி.

152. (பா) நிரை தலை யெடுதீத - நிரையாக இடதீதிற்குவிதீத.

153. தாரம - பலபண்டம்.

(152) நிரையாகக் குவிதீத (153) மலைவளமும் அலைவளமுமென்க.

154. துளங்குகலவிருக்கை - கலம் அசைகிற இருக்கை.

158. தோடுகொண் மருங்கு - தொகுதலையுடைய கடற்பக்கம்.

அடி, 159-60 · "கழாஅர் முன்றுறைக், கலிகொள் சுற்றமொடு கரிகால் காணதீ, தண்பதங்கொண்டு" (அகநா. 376 4 - 6.)

(பி - ம்) † 'விளக்கமு, நுண்வினைக் கம்மியர் செய்வினை விளக்கமு, மெண்ணு' ‡ 'காட்சிய தாகி' ¶ 'விளங்குநீர்ப்' $ 'யடுதீத' § 'சூழ்கா'

160 தண்பதங் கொள்ளுந் தலைநாட் போல
வேறுவேறு கோலத்துத் வேறுவேறு கம்பலை
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றிக்
கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்
றிடங்கெட வீண்டிய நால்வகை வருணத்
165 தடங்காக் கம்பலை யுடங்கியைந் தொலிப்பக்
கடற்புலவு கடிந்த மடற்பூந் தாழைச்
சிறைசெய் வேலி †யகவயி னுங்கோர்
புன்னை நீழற் புதுமணற் ‡பரப்பில்
ஓவிய வெழினி சூழவுடன் போக்கி
170 விதானித்துப் படுத்த வெண்கா லமளிமிசை
வருந்துபு நின்ற வசந்த மாலைகைத்
திருந்துகோ னல்லியாழ் செவ்வனம் வாங்கிக்
கோவலன் றன்னெடுங் கொள்கையி னிருந்தனள்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென்.

160 தண்பதங்கொள்ளும - புதுப்புனலாடும்.

158 - 65 எழினிக்கண் உண்டாகிய வேறுவேறு கம்பலையானது வீறு பெறத்தோன்றி அடங்காக் கம்பலையோடு கூடி ஒலியாநிறகவென்க.

163 கடற்கரையை மெலிவிக்குமென்க.

169 ஓவியவெழினி - சித்திரப்பணி யெழுதின திரை; ஆவது ¶மசகாரி.

171. வருந்துபுநின்ற - வழிவந்ததனல் வருந்திநின்ற. வசந்தமாலை-மாதவியின் சேடி.

172. செவ்வனம் [—[1] வாதசெபம்.]

(75) ஊடற கோலமோடிருந்தவனுவப்பக் (109) கூடலும் ஊடலு மளிதீதுப் (110) பள்ளியுளிருந்தோள் (111) உவவுத்தலைவந்ததாகக் (113) கடல் விளையாடல் (114) காண்டல்வேண்டி (118) அணிந்து (120) வையமேறித் (122) தெருவினைக் (127) கழிந்து (129) நடுவட்போகி (133) எய்திக் (150) கானலில் (151) ஆயமொடுபொருந்திப் பின் (168) மணறபரப்பிலே (170) அமளிமீதே (172) யாழ்வாங்கிக் (173) கோவலன் றன்னேடிருந்தாளெனக் கூட்டுக.

அடி, 160 "தண்பதங்கொள்விழவர்" (7 . 4) அடி, 162 முருகு. 283, புறநா. 22 அடி, 169 பெருங். 4 14 3.

[1] வாதசெபம - காறறுவேகம

(பி - ம்) † 'யகவயிற் பூதீத' ‡ 'பரப்பி, யோவிய' ¶ 'மசகரி'

1 - 4 வெள்ளி மால்வரை . . விஞ்சை வீரன்

(இ - ள்) வெள்ளியம்பெருமலைக்கண் அகன்றுயர்ந்த வடசேடிக் கண்ணே மதுவொழுக மலர்கின்ற பூக்களையுடையதோர் பொழிலிடத்தே கரிய கயல்போலும நெடிய கண்களையுடைய தனது காதலியுடனே யிருந்து காமக்கடவுட்கு விழவை விரும்பிச்செய்வானேர் விச்சாதர வீர னென்க

வியன்பெருஞ்சேடி - அகன்றுயர்ந்த வடசேடி. அவிழ்பூ வினைத் தொகை. காமக்கடவுள - காமதேவன். விருந்தாட்டு - நித்தல்விழா வன்றி யாண்டுதோறும விருமபும விழவு.

காதலி தன்னொடு அயருமென்க.

5 - 6 தென்றிசை நாளிதுவென

(இ - ள்) வீரன், பங்குனித் திங்கள் இருபத்தொன்பதிற் சித்திரை நாளிலே அவ்விழாமுடிதலின, தென்றிசைபபக்கத்து ஒரு வளவிய நக ரிடத்து இநதிரவிழவிறகுக் காலகொணடு கொடியெடுக்குமநாள மேலை மாதத்து இநதச் சித்திரை காணெனச் சொல்லியென்க

இதுவெனச் சுடடினன், அனறும சித்திரையாகலின். ஈண்டுத் திங்க ளும திதியுங கூறியது எனனெனினின, கோவலனும மனைவியும ஊரி னின்றும போந்த திங்களும திதியும வாரமும நாளும வழிசெலவும் ஒழிவும, மதுரையிற செனறு புக்கு இவன் இறநதுபடட திங்கள் முதலா யுளளவறறோடு மாறுகொளளாது முடிதறகெனக்கொளக. அது யாண்டு மோவெனின **வேனிறகாதையினும நாடுகாண்காதையினும காடு காண்காதை கட்டுரைகாதை** யெனனும இவறறுள்ளுமெனக் கொள்க

7 - 13 கடுவிசை யவுணர் இடனுங் காண்கும்

(இ - ள்) மிக்க வேகத்தினையுடைய அசுரர் கூட்டமாகவந்து நெருங்கி இநதிரனது நகரைககாத்த புலிபோன்ற வலியையுடைய முசுகுந்தனுக்குத் தோறறுப் பின்பு தமமில் ஒத்துக்கூடி அமமுசுகுந் தனது நெஞசமும இருள் கூருமபடி பிரயோகித்த அத்திரத்தைப போக் கிய பெரிய பூதத்தை அவ்வண்ணல்பொருடடு இந்திரன் ஏவப்போந்து அப்புகாரிலிருந்து அது பலியுண்ணும் நாளங்காடியிடமும காண்பே மென்றுனென்க

இதனை, "முன்னுளிந்திரன் . . .,காவ லழித்துச் சேவல்கொண் டெழுந்த, வேடகை யழுத மீடக வெழுவோன், இந்நகர் காப்போர் யாரென நினைதலும, நேரிய னெழுந்து நீவரு காறும், தார்கெழு மாரப தாங்கலென் கடனென, உவந்தனன கேடடுப் புகழந்தவிப் பூதம, நின் வழி யாகென நிறீஇப்பெயர்வுழிக், கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிப், பொருதுபோர் தொலைநதன ராகிப பெரிதழிந, தாழந்த நெஞ சிற சூழ்ந்தனர் நினைதீது, வஞச மன்றிது வஞசதீ தலலது, வேற லரி தெனதீ தேறினர தேறி, வளைதீதுத் தொடுதீத வல்வா யமபின், அயின் முகங கான்ற வாரிருள வெயிலோன, இருகணும புதையப் பாய்தலி னெருகணும, நெஞ்சங் காணு நிறப நின்ற, வஞ்சம் பெயரீத மாபெரும் பூதம்" என்பதனைனுமுணர்க.

என்சொல்லியவாறேவெனின், அங்ஙனம் விட்ட அம்பு கண்ணையும் மனத்தையும் புதைத்தலாற் போர்த்தொழிலொழிந்து நின்ற முசுகுந் தற்கு அவ்விருளுடைதறகுக் காரணமாயதோர் மந்திரத்தையருள அதனுன் வஞ்சம் கடிந்து அவுணரைக் கொன்றுகுவித்து நின்றுனைக் கண்ட இந்திரன் அவரை எங்ஙனம் கொன்று குவித்தாயென்றறகு அவன் இப்பூதத்தின் செயலெனக்கேடட இந்திரன் அப்பூதத்தை அவன் பொருட்டு மெய்காவலாக ஏவுதலின் ஆங்கு நின்றும் போந்து ாங்குப் புகாரினுள இருந்து பலியுண்ணும் நாளங்காடியிடமும் காண்பே மென்பதாம்

ஏவப் போந்தென ஒருசொல் வருவிக்க.

கொடுவரி - புலி. ஊக்கம - வலி. கோநகர் - அமராவதி. மன்னன் - முசுகுநதன். நெஞ்சிருள்கூர - உளளக்கண்ணையும் அவ்விருள் மறைப்ப, சிறப்புமமை தொக்கது. நிகரத்து - தமமிலொத்துக்கூடி. வஞசம - தாமதாத்திரம, ஆவது அநதகாரத்தைப் பண்ணுவதோர் அமபு பெயரத்த - போக்கின பூதம - பூததீதை. அணணறகு - அண்ணல்பொருடடு. தேவன் - இந்திரன்.

தேவர் பாடமாயின் ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியென்க. காண்கும உளப்பாடடுத்தனமை உம ககரமூர்ந்துவநதது.

கணங்கொண்டு ாண்டித் தொலைந்தனராகி நிகரத்துவிடட வஞ்ச மென்க.

14 - 7 அமராபதி . காண்குதும்

(இ - ள்.) முன் அசுரரால் வநத இடர்நீங்க அமராவதியைக் காக்கலான் அவ்விநதிரனுறபெறறு இவன் மரபிலுளளாராலே கொண்டு வந்து பொய்க்கும பகுதியின்றிப பூமியிலே நிலைபெறவைதத அழகுமிக்க சிறபபினையுடைய ஐநதுவகைப்படட மனறங்களின் பெருமையையும் காண்பேமென்றுனென்க.

அமரனின் - அமரனுலே தமர் - முசுகுந்தன் முன்னேர், அன்றிக் கரிகாலன் மரபிலுளளாரெனினும அமையும பொயவகையினறி - இம மன்றிறகு ஆண்டுள்ள செயகை ாண்டும பொய்த்தலின்றி. புணர்தீத - அங்ஙனம கொடுதீத இநதிரன்காலமனறிப பின்னுளள காலங்களும் புணருமபடி செயத. ஐவகைமன்றம் - முன்னர் இநதிரவிழவூரெடுதீத காதையிற கூறிய மன்றஙகள். அமைதி - பெருமை.

18 - 25. நாரதன் வீணை ஆடலும் காண்குதும்

(இ - ள்) யாழாசிரியனுகிய நாரதமுனிவன் யாழின் ஏழிசையின்ப மும் தெரியப்பாடடும பாடலையும, தோரியமடநதை வாரம்பாடலையும், நாடகத்தினையும உருப்பசி இநதிரனுடைய செவியாரப்பாடிக் கண்ணுர ஆடுதலும விருமபாளாதலான் வீணை மங்கலமிழக்க, மண்மிசைத் தங்குக, இவள் மண்ணிறபோய்ப் பிறக்கவெனச் சபித்தலின் அதனைப் பெற்றுவந்து பிறநத மங்கையாகிய மாதவி வழியிறறேன்றிய அரவு போலும அல்குலையுடைய மாதவியுடைய ஆடலையும அவ்விடதீதுக் காண்பேமென்றுனென்க.

தோரிய மடந்தையென்பாள் - ஆடிமுதிர்ந்தாற் பின்பு ஆடன்மகளிர் காலிற்கு ஒறறறுதீதுப்பாடுமவள், என்னை ? ‘‘ இந்நெறி வகையால்.....

தோரிய மகளே'' எனவும், ''தலைக்கோ லரிவை.....தோரிய மகளே'' (3 . 133-4, அடியார்.) எனவும கூறியவாற்றுன் அறிக வாரம் - ஒரொற்று வாரமு மீரொற்றுவாரமுமென்னும் செய்யுள். அவை தாளத்து ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் பெற்றுவரும்.

உருப்பசியின் சாபவரலாறு என்னையோவெனின், [1] ''வயந்த மாமலை நயந்த முனிவரன், எய்திய வவையி னிமையவர் வணங்க, இருந்த விந்திரன் றிருந்திழை யுருப்பசி, ஆட னிகழ்க பாடலோ டீங்கென, [2] ஓவியச் சேனன் மேவின னெழுந்து, கோலமுங் கோப்பு நூலொடு புணர்ந்த, இசையு நடமு மிசையத் திருத்திக், கரந்துவர லெழினியொடு புகுந்தவன் பாடலிற், பொருமுக வெழினியிற் புறந்திகழ் தோறறம், யாவரும விழையும பாவனை யாகலின், நயந்த காதற சயந்தன் முகத்தில், நோக்கெதிர் நோக்கிய பூக்கமழ கோதை, நாடிய வேடகையி னுட னெகிழப், பாடன் முதலிய பல்வகைக் கருவிகள், எல்லா நெகிழதலி னெல்லா முனிவரன், ஒருதலை யின்றி யிருவர் நெஞ்சினும, காமக் குறிப்புக் கண்டனன் வெகுண்டு, சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை, மாணு விறலோய் வேணு வாகென, விடட சாபம் படட சயநதன், † சாப விடையரு டவதீதோய நீயென, மேவினன் பணிநது மேதக வுரைப்ப, ஓடிய சாபத் துருப்பசி தலைக்கடடும, காலைக் கழையு நீயே யாகி, மலைய மால் வரையின வந்துகண் ணுறறுத், தலையரங் கேறிச் சார்தி யென்றவன், கலக நாரதன் கைக்கொள் வீணை, அலகி லம்பண மாகெனச் சபித்துத், தந்திரி யுவப்பத் தந்திரி நாரிற், பண்ணிய வீணை மண்மிசைப் பாடி, ணண்டு வருகெனப் பூண்ட சாபம, இட்டவக் குறுமுனி யாங்கே, விட்டன னென்ப வேந்தவை யகதிதென்'' என்பதனுனறிக.

இதனுற் சொல்லியது நாரதன் கலகப்பிரியனுதலால் தனது யாழைப் பகை நரமபுபட இசைத்தலின், தான் இங்ஙனமிசைத்தறகுக் காரணமின்றுகவும இவள கலங்கினமை தான் நமக்கறிவித்து நமமால் இவளை முனிவிப்பான் வேண்டி நமமை மதியானுயினுனென அவளொடும் சாபமிடுகின்றவன் வீணை மங்கலமிழக்க, மண்மிசைத் தங்குக, இவள் மண்ணிறபோய்ப் பிறக்க வெனச் சாபம் இட்டானென்பது. வீணை மண்மிசைத் தங்குகவெனவே இவளை நீங்காவரதத்தின் வநததாகலான் இவனும மண்மிசைத்தங்குக வென்பதாயிறறு, எனவே இவன் மண்ணிற் பிறவானுதல் உணர்க

இவவீணையை உருப்பசி கையில் வீணையென்பாருமூளர் அது பொருத்தமின்று. அங்ஙனம இவள் மண்மிசைப் பிறக்கவெனச் சபித்தலின் அதனைப்பெறறு வந்துபிறந்த மங்கையாகிய மாதவிவழிப்பெயராம் அவ்வழியிறறேன்றிய அரவுபோலுமல்குலையுடைய மாதவியுடைய

[1] வயந்தமாமலை - பொதியின்மலை, வயந்தம் - தென்றல். [2] ஓவியச் சேனன் - சித்திரசேனனென்னும் கநதருவன்.

(பி - ம்.) † 'சாபவிடை யெமக்கரு டவதீதோ யென்று'

ஆடலையும் அவ்விடத் துக் காண்பேமென்றுனென்க. ாண்டுச் சயந்தன் சாபமும விடையும கூறுதது, அரங்கேற்றுகாதைக்கண், "இந்திர சிறுவனெடு, தலைக்கோறருனதீதுச் சாப நீங்கிய" (2-3) என்றுராகலின் எனக்கொள்க இனி வீணையைச் சாரீரவீணையாக்கி மங்கலமிழப்ப என்பதற்கு இவள் இக்கடவுள்யாக்கையொழிந்து மக்கள் யாக்கையில் தங்குகவெனச் சபித்தானென்பதும் கொள்க. இனி உருப்பசிக்குச் சயந்தனமேறசென்ற காதன்மை புதல்வர் மேற்செல்லும் கண்ணேட்ட மென்பார்க்கு அங்ஙனம புதல்வரைநோக்கி மகிழவார்க்கு அன்பு சிறதீத லொழிந்து நிலைகலங்கி ஆடல் பாடல் நெகிழதலும் மூன்றுகாலமும் உணர்ந்த முனிவன் அதனை அறியாது சபித்தானென்றலும் பொருந்தா மையின் அங்ஙனம உரைதீதல் குறறமென்க. மண்மிசைத் தங்குக வென்றதை வீணைக்கும் ஏறறுக.

26 - 7. துவரிதழ் . வணங்குதும் யாமென

(இ - ள்) (1) வடசேடியிற் (2) பொழிறகண் கடவுட்குக் (3) காரிகை யோடு (4) விருந்தாடடயரும் வீரன் (6) இதுவெனக்கூறி (13) இடனுங் காண்குதும, (17) அமைதியுங் காண்குதும, (25) ஆடலுங்காண்குது மாதலால, துடியிடையாய! யாமும் தலைவனை வணங்குவோம், வருவா யாக வெனச் சொன்ன அபபொழுதேயென்க.

துவர் - செமமைநிறம. ஓய, "ஆயென கிளவியு மவறறெடு கொள் ளும" (தொல் விளை 15) என்பதனுன் முடிந்ததாம். ஏகாரம இசை நிறை யாமுமென்னும உமமை தொக்கது. இனி எனவென்பதனை "எனவெனெச்சம் வினையொடு முடிமே" (தொல். எச்ச. 42) என்பத னுன், என்று சொலலிப் போநதெனச் சொல்லெச்சமாக்கி முடிப்பினும் அமையும்.

28 - 34 சிமையத் திமையமும் விழாக் காண்போன்

(இ - ள்) அவன், கொடுமுடியையுடைய இமயமலையையும வளவிய நீரையுடைய கஙகையாறறினையும அவந்தியென்னும பதியினையும விந்த மலைசூழந்த அடவியினையும் வேங்கடமென்னும மலையினையும் நிலம் பொருத விளையுளினையுடைய காவிரி நாடடினையும் தன்காதலிக்கு இஃது இன்னது இஃது இன்னதென்று காடடி ஆண்டாண்டுள்ள பயன நுகரீ தறகு வேண்டு நாள்தங்கிப் பின்பு சிலநாளிற படப்பையையுடைய புகா ரெனனும நகரிடத்தே வந்து முன்பு சொன்ன முறைமையால் இடனும் அமைதியும இவையென்று தொழுதனனுய்த் தன் காதலிக்குக் காட்டி வளவிய தேவரும் மகிழும் மூதூர்க்கண் நடக்கின்ற விழவைத் தானும் காண்கின்றவனென்க.

சிமையம் - உச்சி. அடவி - காடு. தாங்கா விளையுள் - நிலம் பொருத விளைதீதல், "வேலி யாயிரம் விளையுட் டாக" (பொருந 246-7) என்றுராகலின். விளைதீதலென்பது விளையுளென மருவிறறு, புலிப் பாய்தீதுள், தேரைப்பாய்தீதுளென்பனபோல். படப்பை - தோட்டக்

கூறு. புகார் : ஆகுபெயர். மணிவிழாப் பாடமாயின், அழகிய விழாவென்க. காண்போன் : தொழிறபெயர்.

35. மாயோன் பாணியும்—(இ - ள்.) திருமாலைப் பரவுந் தேவபாணியும்,

இனிப் பதினேராடல் கூறுவான் எடுத்துக் கொண்டார், அவற்றுள், கொடுகொடடியென்பது இதிதன்மைதிதென்கின்றது.

மாயோன் - திருமால். பாணி - தேவபாணி. பாணியென்றது - பாட்டு அது தேவர்ப்பராவுதலாயிறறு, என்னை? "ஏனை யொன்றே, தேவர்ப்பராவுதன் முன்னிலைக் கண்ணே" (தொல் செய். 138) என்ருராகலின் அது முதிதமிழ்க்கும பொது அஃது இயற்றமிழில் வருங்காற் கொச்சகவொரு போகாய் வரும் வருமவழியும் பெருநதேவபாணி, சிறுதேவபாணியென இருவகைதிதாய் வருமெ என்னை? "கூறிய வுறுப்பிற குறைபாடின்றித், தேறிய விரண்டு தேவ பாணியும்" என்ருராகலின். அங்ஙனம வரும் தரவினை நிலையெனவடக்கி முகதிதிற்படுந் தரவினை முகநிலையெனவும், இடைநிறபனவற்றை இடைநிலையெனவும, இறுதியினிற்பனவறறை முரி நிலையெனவும பரவுதற் பொருண்மையாற் பெயர் கொடுத்தார [1] **செய்யுளியலின்** கண்ணுமெனக் கொள்க.

இனி, இசைத் தமிழில் வருங்கால், முகநிலை கொச்சகம் முரியென்ப ஒரு சாராசிரியர் அன்றி இசைப்பா, இசை யளவுபாவென்னும இரு பகுதியுள் இஃது இசைபபாவின் பகுதியென்ப அது பதிதுவகைப்படும் செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முதிதகம், பெருவண்ணம, ஆறறுவரி, காலல்வரி, விரிமுரண், தலைபோகுமண்டில மென என்னை? "செந்துறை வெண்டுறை தேவபா ணியயிரண்டும, வந்தன முதிதகமே வண்ணமே - கந்தருவதி, தாற்றுவரி கானல் விரி முரண் மண்டிலமாதி, தோற்று மிசையிசைப்பாச் சுட்டு" என்ருர் **இசைநுணுக்கமுடைய சிகண்டியாரென்க**

இன்னும சுதிதம் சாளகம் தமிழென்னும் சாதியோசைகள் மூன்றினுடனும் [2] கிரியைகளுடனும் பொருந்தும இசைப்பாக்கள் ஒன்பது வகையென்ப, அவை —சிந்து, திரிபதை, சவலை, சமபாதவிருதிதம, செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணமெனவிவை என்னை? "செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை, தப்பொன்று மில்லாச் சமபாதம் - மெயப்படியும், செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப, பைநதொடியா யின்னிசையின் பா" என்ருர் **பஞ்சமரபுடைய அறிவனு**ரென்னுமாசிரியரென்க

இனி, நாடகத் தமிழில் தேவபாணிவருங்காற் பெருந்தேவபாணி பலதேவரையும், சிறுதேவபாணி வருணப்பூதரையும் மூவடிமுக்கால் வெண்பாவால் துதிக்கின்றுழி, அவரணியும் தாரும் ஆடையும் நிறனும் கொடியும் துகிதிது அவராற பெறவேண்டுவனவும் துதிக்கப்படும்; என்னை? "திருவள ரரங்கிற சென்றினி தேறிப், பரவுந் தேவரைப் பரவுங் காலை, மணிகிகழ் நெடிமுடி மாணிபதி திரனை, அணிதிகழ் பளிங்கி ஞெளியினை யென்றும, கருந்தா துடுத்த கடவுளை யென்றும, இரும்பனைத் தனிக்கொடி யேந்தினை யென்றும், கொடுவாய் நாஞ்சிற்

[1] தொல். செய். 132, பேர். [2] கிரியை - தாளக்கிரியை; படுதிதல் முதலியன

படையோ யென்றும, கடிமலர் பிணைந்த கண்ணியை யென்றும், சேவடி போறறிச சிலபல வாயினும், மூவடி முக்கால் வெள்ளையின் மொழிப" என்ருர் மதிவாணனரென்க இவை ாண்டுரைப்பிற பெருகும். பிறவும் வந்தவழிக் காண்க.

இனி, முறகூறிய பதிஞ்ரோடற்கும் முகநிலையாகிய தேவபாணி மாயோன்பாணி. அது வருமாறு "மலர்மிசைத் திருவினை வலத்தினி லமைத்தவன் மறிதிரைக் கடலினை மதித்திட வடைத்தவன், இலகொளித் தடவரை கரத்தினி லெடுத்தவ னினநிரைத் தொகைகழை யிசைத்தலி லழைத்தவன், முலையுணத் தருமவ ணலத்தினை முடித்தவன் முடிகள்பத் துடையவ னுரத்தினை யறுத்தவன, உலகனைத் தையுமொரு பதத்தினி லொடுக்கின ஞெளிமலர்க் கழறரு வதற்கினி யழைத்துமே". இஃது எண்சீரான்வந்த கொச்சகவொருபோகு. பண் - கௌசிகம தாளம் இரண்டொத்துடைத்தடாரம சிறுதேவபாணி ாண்டுக் கூறிற்றிலரெனி னும் இனமபடடு வருதலிற கூறல்வேண்டுவதாயிறறு. அதுவருமாறு : "வண்ணமலரச் சரங்கோத்து மதனவேண் மிகவெயக், கண்ணள வோர் புலனல்லாக் கனல்விழியா லெரித்தனையால, எண்ணிறந்த தேவர் களு மிருடிகளு மெழுந்தோட, ஒண்ணுதலாள் பாகங்கொண் டொரு தனியே யிருநததனையே" என்பது.

இதனுள் இறைவனை முறகூருது மாயோனை முற்கூறிய தென்னையோவெனின், மாயோன் காவறகடவுளாய் அருளை அருத்தலா னென்க

35-6 வருணப் பூதர் நால்வகைப் பாணியும்— (இ - ள்) வருணப்பூதர் நால்வரையும் பரவும் நால்வகைத் தேவபாணியு மென்றவாறு.

அவை வருமாறு "அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக, வேந்தன வேள்வியோ டியாண்டுபல வாழக, வாணிக ரிருநெறி நீணிதி தழைக்க, [1]பதிணெண் கூலமு முழுவரக்கு மிகுக, அரங்கியற் கூதிது நிரம்பிவினை முடிக, வாழ்க நெடுமுடி கூர்கவென் வாய்ச்சொலென், றிப்படிப் பலிகொடுத் திறைவனிற ருெக்குச், செப்பட வமைதிதுச் செழும்புகைகாட்டிச், சேவடி தேவரை யேத்திப பூதரை, மூவடி முக்கால் வெண்பா மொழிந்து, செவியிழக் குறமை வேந்தனை யேத்திக், கவியொழுக் கத்து நின்றுழி வேந்தன், கொடுப்பன கொடுப்ப வடுக்கு மென்ப" என்ருர் மதிவாணனரென்க.

36-7 நலம்பெறு பின்னர்—(இ - ள்) பல்லுயிர்களும் தன்கலையால் நன்மைபெறுந் தன்மையையுடைய வானின் ஊர்ந்து செல்லும் மதியமும பாடியென்க.

எனவே சநதிரனைப்பாடும் தேவபாணியென்பதாயிற்று. ஆதிதனை முற்கூருதது இறைவனை முறகூறியவாற்றற கொள்க இதறகுச் செய்யுள "குரைகடன் மதிக்கு மதலையை குறுமுய லொளிக்கு மரணினை, இரவிரு ளகறறு நிலவினை யிறையவன் முடிதீத வணியினை, கரியவன் மனதீதி [2]னுதிதனை கயிரவ மலர்தீது மவுணனை, பரவுநர் தமக்கு நினதிரு பதமலர் தபுக்க வினையையே" எனவரும், பண்ணும் தாள மும் முற்கூறியன.

---

[1] 5 22-3, அடியார். மேற் [2] உதிதன் - தோன்றியவன், சீவக. 23, ந.

38 சீரியல் பொலிய நீரல நீங்க—(இ - ள்.) அவதாளம் நீங்கத் தாள இயல்பு பொலிவுபெறவென்றவாறு.

இதனை நீரலநீங்கச் சீரியல் பொலியவென மாறுக. அன்றி அவ தாளம் நீங்குதலால் தாளவியல்பு பொலிவுபெருநிற்கவெனவுமாம். இவற்றை மேல் மாதவிக்கு அடையாக்கி முடிக்க

இனி, பதினேராடல் கூறுவார்'—அவை இருவகைப்படும்' [1]"அல் லியங்கொட்டி . .. ஆறு", [2]" துடிகடையம்.. .. ஐந்து" என்பவாகலின்.

39-43. பாரதியாடிய கொடுகொட்டி யாடலும்

பாரதி - பைரவி; அவளரங்கம் - சுடுகாடு, அவளாடுதலாற் பெற்ற பெயர்.

(இ - ள்) தேவர் புரமெரியவேண்டுதலால் வடவையெரியைத் தலை யிலேயுடைய பெரியவம்பு ஏவல்கேட்டவளவிலே அப்புரத்தில் அவுணர் வெந்து விழுந்த வெண்பலிக்குவையாகிய பாரதியரங்கத்திலே உமைய வள் ஒருகூற்றினளாய் நின்று பாணி தூக்குச் சீரென்னும் தாளங்களைச் செலுத்தத் தேவர் யாவரினுமுயர்ந்த இறைவன் சயானந்ததாற் கைகொட்டி நின்று ஆடிய கொடுகொட்டியென்னுமாடலும்.

முகம் - தலை பேரம்பு - பரமபுருடன் ஏவல்கேட்ப - சுட்டவளவிலே. திரிபுரம் தீமடுத்தெரியகண்டு இரங்காது கைகொட்டிநின்று ஆடுதலிற் கொடுமையுடைத்தாதல்நோக்கிக் [3]கொடுகொட்டியென்று பெயர் கூறினர்.

[4]" கொட்டி.. ..... நான்காமெனல"

44-5. தேர்முனின்ற பாண்டரங்கமும்

(இ - ள்) வானேராகிய தேரில் நான்மறைக் கடும்பரிபூட்டி நெடும் புறமறைத்து வார்துகின்முடித்துக் கூர்முட்பிடித்துதீ தேர்முனின்ற திசைமுகன் காணும்படி பாரதிவடிவாய இறைவன் வெண்ணீறறை அணிந்தாடிய பாண்டரங்கக்கூத்தும்

'நின்று' பாடமாயிற காண நின்றுடியவென்க, [5]" பாண்டரங்கம்... ஆருமெனல்".

46-8. கஞ்சன் தொகுதியும்

(இ - ள்) அஞ்சனவண்ணன் ஆடிய ஆடல்பதிதுள், கஞ்சன்வஞ் சத்தின் வந்த யானையின்கோட்டை ஒசித்தற்கு நின்றுடிய அல்லியத் தொகுதியென்னும் கூத்தும,

---

[1], [2], [4], [5], 3 14-5, அடியார். மேற

[3] கொடுங்கொட்டி கொடுகொட்டியென விகாரமாயிற்றென்பர் நச்சி னர்க்கினியர்; கலித். கடவுள்

தொகுதியென்றுர் முகம் மார்பு கை கால்களின் வட்டணை அவிநய முதலியன இருந்தும தொழில் செய்யாது நிற்றலின், "ஆடலின்றி நிற் பவையெல்லா, மாயோ னுடும் வைணவ நிலையே" என்றுர், அல்லியமென் பதனை அலிப்பேடென்பாருமுளர், [1] "அல்லியம் . ... ..ஆறுமெனல்"

48 - 9 அவுணற் கடந்த மல்லி னுடலும்

(இ - ள்) வாணனுகிய அவுணனை வேறறகு மலலனுய்ச் சேர்ந்தா ரிற்சென்று அறைகூவி உடற்கரித்தெழுந்து அவனைச் சேர்ந்தவளவிலே சடங்காகப்பிடித்து உயிர்போக நெரித்துத் தொலைத்த மல்லாடலும்,

அவுணற்கடந்த - அவுணனெண்ணத்தைக் கடந்த, [2] "நெடியவன்... ஐந்தாம"

49 - 51. மாக்கட னடுவண் ஆடிய துடியும்

(இ - ள்) கரிய கடலினடுவுநின்ற சூரனது வேற்றுருவாகிய வஞ் சத்தையறிந்து அவன் போரைக்கடந்த முருகன் அக்கடனடுவண் திரையே அரங்கமாக நின்று துடிகொட்டி யாடிய துடிக்கூத்தும்,

நிகர்த்தது - நேரொத்து, [3] "துடியாடல் . ஐந்தாம்"

52 - 3 படைவீழ்த் தவுணர் ஆடிய குடையும்

(இ - ள்) அவுணர் தாம் போர் செயதற்கு எடுத்த படைக்கலங் களைப் போரிறகு ஆற்றது போகட்டு வருத்தமுறறவளவிலே முறகூறிய முருகன் தன் குடையை முனனே சாயத்து அதுவே ஒருமுகவெழினியாக நின்றுடிய குடைக்கூத்தும்,

பையுளெய்த ஆடியவெனவியையும், [4] "அறுமுகத்தோன். எனல்."

54 - 5 வாணன் பேரூர் ஆடிய குடமும்

(இ - ள்) காமன் மகன் அநிருத்தனைத் தன்மகன் உழை காரண மாக வாணன சிறை வைத்தலின், அவனுடைய சோவென்னும நகர வீதியிற சென்று நிலங்கடநத நீனிறவண்ணன் குடங்கொண்டாடிய குடக்கூத்தும,

இது பஞ்சலோகங்களாலும் மண்ணுலும் குடங்கொண்டாடினது; [5] "குடத்தாடல் ஆய்ந்தது" இது விநோதக்கூத்து ஆறினுளொன் றென்றுணர்க, என்னை? "பரவிய சாநகி யன்றியும் பரதம், விரவிய விநோதம விரிக்குங் காலைக், குரவை கலிநடங் குடக்கூத் தொன்றிய, கரண நோக்குத் தோறபா வைக்கூத், தென்றிவை யாறு நகைத்திறச் சுவையும், வென்றியும் விநோதக் கூத்தென விசைப்ப" என்றுராகலின.

56 - 7. ஆண்மை பேடி யாடலும்

(இ - ள்) ஆண்மைத் தன்மையிறறிரிந்த பெண்மைக் கோலத் தோடு காமன் ஆடிய பேடெனனுமாடலும்,

---

[1], [2], [3], [4], [5] 3 . 14, அடியார். மேற்.

ஆண்மைத்தன்மையிற நிரிதலாவது விகாரமும ம வீரியமும் நுகரும் பெற்றியும் பத்தியும் பிறவுமின்ருதல், ஆண்மை திரிந்தவென்பதனுல் தாடியும் பெண்மைக் கோலத்தென்பதனுல் முலை முதலிய பெண்ணுறுப் புப் பலவுமுடையது ஆண்பேடென்று பெயர்பெறுமெனக்கொள்க; என்னை? "சுரியற் முடி மருள்படு பூங்குழற், பவளச் செவ்வாய்த் தவள வொண்ணகை, ஒளளரி நெடுங்கண் வெளளிவெண் டோட்டுக், கருங் கொடிப் புருவத்து மருங்குவலை பிறைநுதற, காந்தளஞ் செங்கை யேந் திள வனமுலை, அகன்ற வல்கு லந்நுண் மருங்குல், இகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து, வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோன் மகன்முன் னுடிய, பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும" (மணி. 3 116 25) என்ருராகலின்.

இது தனதுமகன் அநிருத்தனைச் சிறைமீட்டுக் காமன் சோநகரத் தாடியது, [1] "காமன தாடல் ... நான்கு"

58 - 9. காய்சினவவுணர் [2]மரக்காலாடலும்

(இ - ள்) காயும் சினத்தையுடைய அவுணர் வஞ்சத்தாற் செய்யும் கொடுந்தொழிலைப் பொருளாய் மாயோளால் ஆடப்பட்ட மரக்காலென் னும் பெயரையுடைய ஆடலும்,

மாயவள் - துர்க்கை அவுணர் உண்மைப்போரான் வேறலாற்ருது வஞ்சத்தான் வேறல்கருதிப் பாமபு தேள முதலியவாயப் புகுதலை யுணர்ந்து அவள் அவறறை உழக்கிக் கலைதறகு மரக்கால்கொண்டு ஆடு தலின், மரக்காலாடலாயிறறு, [3] "மாயவ ளாடல் ...நான்கு"

60 - 61 செருவெங் கோலம் ஆடிய பாவையும்

(இ - ள்) அவுணர் வெவவிய போர்செயதற்குச் சமைந்த போர்க் கோலத்தோடு மோகித்து வீழும்படி கொலலிபபாவைவடிவாயச் செய்யோ ளாகிய திருமகளால ஆடப்படட பாவையெனனுமாடலும,

கோலநீங்கவென்ருர், அதறகேற்பப் பொராது அஞ்சி அவிதலின், [4] "பாவை.. ... . யொன்று"

62 - 3 வயலுழை ஆடிய கடையமும்

(இ - ள்.) வாணனுடைய முறகூறிய பெரியநகரின் வடக்குவாயிற் கண் உளதாகிய வயலிடத்தேநின்று அயிராணியென்னுமடந்தை ஆடிய கடைய மென்னுமாடலும,

அயிராணி - இந்திராணி கடையம் - கடைசிக்கூத்து, [5] "கடையம் .. ஆறு"

64 - 71 அவரவ ரணியுடன் விஞ்சையன் றியும்

(இ - ள்) அஙஙனங் கூறப்படட அவரவருடைய அணிகளுடன் அவ ரவருடைய கொள்கையாற் பொருந்தி நினருடலும் வீழ்ந்தாடலுமாகிய அவரவரை நீங்காத மரபினையுடைய பதினெருவகைபபடட ஆடலும்

---

[1], [3], [4], [5], 3 14, அடியார். மேற. [2] "மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கான்மேல் வாளமலை யாடும போலும்" (12. 'ஆயபொன்') என்பர்.

அவ்வாடல்கடகேற்ற பாடல்களின் வேறுபாடும் அவற்றிற்கு விதிதீத மாட்சிமைப் பாட்டோடு அவற்றைப் புலப்படக் காண்பாயாக, அனறு கள்ளவிழ்பூம பொழிற்கண்ணேயிருந்து நின்னேடு யான் கூறப்பட்ட மாதவி மரபின் வந்த மாதவி இவள்காணென்று தன் காதலிக்குச் சொல்லித் தானும் கண்டு மகிழ்ச்சிமிக்க மேமபாடுதக்க மரபினையுடைய விஞ்சையனும, அவனன்றியும்,

72 - 5 அந்தரத்துள்ளோர் இருந்தோனுவப்ப

(இ - ள்) சுவர்க்கத்திலுள்ளாராகிய தேவரெல்லாம உள்வரி கொண்டு வந்து காணப்படும இந்திரவிழவும் மாதவியாடலும் அவ் வாடற்குச் சமைந்த கோலமும் ஆடுதலாறபிறந்த அழகும முடிதலின் அதனுற்பிறதீத வெறுப்போடிருந்த கோவலன் உவக்கும்படி,

அந்தரதீதுள்ளோர் - விச்சாதரருமாம் மானிடர் தம்மைக்காண்டல் பொருமையின் அறியாமரபினென்றுர் இனி, இவளாடலும் கோலமும் தனது [1] "அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி" கூளக் கைக்கொண்டு விடுதலாலே பிறர்க்கும் இவ்வாருமென்னும் வெறுப்போடிருந்தானெனி னும அமையும். ஊடலோடென்னுது கோலமோடென்றுர், மனதீதில் நிகழ்ந்த ஊடலை முகம காட்டுதலின்.

76 - 9. பத்துத் துவரினும் நலம்பெற வாட்டி

(இ - ள்) வாசநெய்யுரைதீத மணங்கமழும் கரிய கூந்தலைப் பதீது வகைப்பட்ட துவரினனும ஐந்துவகைப்பட்ட விரையினனும் முப்பதீ திருவகைத்தாகிய ஓமாலிகையானும ஊறிக் காயப்படட நன்னீராலே நிறம் பெறவாடடியென்க.

இருமை - கருமை. பதீதுதீதுவராவன —" பூவந்தி திரிபலை புணர் கருங்காலி, நாவ லோடு நாறபான் மரமே" ஐநதுவிரையாவன — [2] "கொட்டந் விரை." முப்பதீதிருவகை ஓமாலிகையாவன — "இலவங்கம் பசசிலை கச்சோல மேலம், குலவிய நாகணங் கொட்டம் - நிலவிய, நாக மதாவரிசி தக்கோல நன்னரி, வேகமில் வெண்கோட்ட மேவுசீர் - போகாத, கதீதூரி வேரி யிலாமிச்சங் கண்டில்வெண்ணெய், ஒதீதகடு நெல்லி யுயர்தான்றி - துதீதமொடு, வண்ணக்கச் சோல மரே ணுக மாஞ்சியுடன், எண்ணுஞ் சயிலேக மின்புழுகு கண்ணுநறும், புன்னை நறுந தாது புலியுகிர் பூஞ்சரளம், பின்னி தமாலம் பெருவகுளம் - பன்னுமு, பதுமுக நுண்ணேலம் பைங்கொடு வேரி, கதிர்நகையா யோமாலி கை" என்னுமிவையெனக்கொள்க, என்னை? "ஓரை விரை யினு மீரைந் துவரினும், ஆறைந்தின் மெலிரண் டோமா லிகையினும், நாறைங் கதுப்பி னைமு நன்குரை இ, ஊறின நன்னீ ருவந்தனளாட்டி" என்ருராகலின்.

80 - 81 புகையிற் புலர்த்திய சேறாட்டி

(இ - ள்) அங்ஙனமாகிய நீராளாட்டிப் பொலிவினையுடைய புகை யிற் புலர்தீதிய கூந்தலை ஐந்து வகைபெற வகுதீத வகைதோறும் மான் மததீதின் கொழுவிய சேற்றை ஊட்டியென்க.

---

[1] இறை 2, உரை, நன். மயிலை. 451, தக்க. 14, உரை. [2] 5 : 14, அரும்பத. மேற்

மான்மதச்சேறு - கத்தூரிக் குழம்பு, சவாதுமாம்.

82 - 3 அலத்தக மூட்டிய நல்லணி செறீஇ

(இ - ள்) செம்பஞ்செழுதிய அழகிய சிவந்த சீறடிக்கேற்ற நலத் தகும் மெல்லிய விரலிடத்தே செறிக்கப்படும் நல்லணிகளைச் செறித்து,

விரலணி - மகரவாய்மோதிரம், பீலி, கான்மோதிர முதலியன

84 - 5. பரியகம் அணிந்து

(இ - ள்) பாதசாலமும் சிலம்பும் பாடகமும் சதங்கையும காறசரியு மென்னும் இவற்றைக் காலுக்குப் பொருத்தமுறும்படி அணிந்தென்க

பரியகமாவது. "பொன்னிதழ் பொதிந்த பன்னிற மணிவடம், பின்னிய தொடரிற் பெருவிரன் மோதிரம், தன்னெடு தொடக்கித் தமனி யச் சிலம்பின், புறவாய் சூழ்ந்து புணரவைப் பதுவே" என்னை? "அவ் வாய் மகரத் தணிகிளர் மோதிரம், பைவாய பசுமபொற பரியக நூபுரம், மொய்ம்மணி நாவின் முல்லையங் கிண்கிணி, கௌவிய வேனவுங காலுக் கணிந்தாள்" என்றார்.

86 குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்து

(இ - ள்) குறங்குசெறியென்னும் பணியைத் திரண்ட குறங் கிடத்தே செறித்தென்க.

குறங்குசெறி - கவான் ஆபரணம்

87 - 8. பிறங்கிய உடீஇ

(இ - ள.) பருமுத்தக்கோவை முப்பத்திரண்டாற்செய்த விரிசிகை யென்னுங்கலையை நீலநிறங்கிளரும் பூதிதொழிலையுடைய நீலச் சாதரு டையின் மீதே உடுத்தென்க.

என்னை? "குறங்கு செறியொடு கொய்யலங் காரம், நிறங்கிளர் பூந் துகி னீர்மையி னுடீஇப், பிறங்கிய முத்தரை முப்பதி திருகாழ், அறிந்த தமைவர வல்குற கணிந்தாள்" என்றார்

89 - 90 காமர் கண்டிகை அணிந்து

(இ - ள்) காமஞ்செய்யும் மாணிக்க வளையுடன் நீங்காமற் பொற் றொடராற் பிணித்த முத்தவளையைத் தோளுக்கு அணிந்தென்க

காமம் காமரென விகாரம். முத்து - முத்து என்னை? "ஆய் மணி கட்டி யமைந்தவிலைச் செய்கைக், காமர் கண்டிகைக் கண்டிரண் முத்திடைக், காமர்பொற் பாசங் கொளுத்திக் கவின்பெற, வேய்மருண் மென்றோள் விளங்க வணிந்தாள்" என்றார்

91 - 4 மத்தக மணியொடு அணிந்து

(இ - ள்.) முகப்பிற்கட்டிய மாணிக்கத்தோடே பத்திகளில் வயிரங் கள் அழுத்தப்பட்ட சித்திரத் தொழிலையுடைய சூடகமும் செம்பொன்னுற் செய்த வளையும் நவரத்தினவளையும் சங்கவளையும் பவழவளைகளும் என்னுமிவற்றை ஐதான மயிரையுடைய முன்கைக்குப் பொருத்தமுற அணிந்தென்க.

பரியகம் - சரியுமாம். வால்வளை - வெள்ளிவளையுமாம். பவழப்பல் வளை - கைவடமுமாம். என்னை? "புரைதபு சிதீதிரப் பொன்வளை போக்கில், எரியவிர் பொன்மணி யெல்லென் கடகம, பரியகம் வால்வளை பாத்தில் பவழம், அரிமயிர் முன்கைக் கமைய வணிந்தாள்" என்ருர். அரியகை முன்கைக்கென்பதூஉம் பாடம்

95 - 8 வாளைப் பகுவாய் அணிந்து

(இ - ள்) வாளைமீனினது அங்காந்த வாயை வணங்குதலுறுவிக் கும் நெளியும் சிவந்த ஒளி உச்சமாகக் கதிராரும் மாணிக்கப்பீடமும் பக்கத்தே வளைந்து திரையும ஒளியையுடைய வயிரஞ்சூழ்ந்த மரகதக் கடைசெறியும் பிறவுமாகிய இவற்றைக் காந்தண்மலர்போலும் மெல்லிய விரல்கள் மறையும்படியணிந்து,

பகுவாய மோதிரமுமாம், ஒப்பினுகிய பெயர் கேழ்கிளர்மணி: அஃது எக்கேழெனிற செங்கேழ்கிளர்மணியென்க வாங்குவில் - வளைதீ துக்கொள்ளும ஒளி

99 - 100 சங்கிலி அணிந்து

(இ - ள்) வீரச்சங்கிலியும் நேர்ஞ்சங்கிலியும் பூணப்படுஞாணும் என்னுமிவறறேடு கைபுனையப்பட்ட தொழில்களையுடைய சவடி சரப்பளி முதலாயுள்ள பிறவறறையும் அழகிய கழுத்திடதீதே முதீதாரதீதோ டணிந்தென்க.

101 - 2 கயிற்கடை மறைத்தாங்கு

(இ - ள்.) முற்கூறிய சங்கிலிமுதல் ஆரமீருயுள்ள அணிகட்கெல் லாம் தலையொன்ருய்க் †கொக்குவாய்ப் படுகண் தொடக்கிய பன்மணிக் கோவையால் தூக்கமாகச் செய்யப்பட்ட பின்ருலியாற சிறுபுறதீதை மறைதீதென்க

கயிற்கடை - கோக்குவாய். ஒழுகிய கோவையென்க சிறுபுறம் - பிடர், "சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினை தீ, தொங்க லருதீ திதீ திருந்துங் கயிலணி, தண்கடன் முதீதின் றகையொரு காழெனக், கண்ட பிறவுங் கழுதீதுக் கணிந்தாள்" என்ருர்; ஆங்கு அசை.

103 - 5 இந்திர நீலத்து அணிந்து

(இ - ள்) முகப்பிற்கட்டின இந்திரநீலதீதிடையிடையே பயிலக் கட்டின வயிரங்களால் அழகுபெற்ற நீலக்குதம்பையை வடிந்த காதி னிடதீதே அழகு மிகும்படி அணிந்தென்க.

என்னை? "நூலவ ராய்ந்து நுவலருங் கைவினைக், கோலங் குயின்ற குணஞ்செய் கடிப்பிணை, மேலவ ராயினு மெச்சும் விறலொடு, காலமை காதிற் கவின்பெறப் பெய்தாள்" என்ருர்.

106 - 8 தெய்வ வுத்தியொடு அணிந்து

(பி - ம்.) †'கொக்கிவாய்'. இது கோக்குவாய், கோக்கிவாயென் றும் படிதீதற்கு இடமுண்டு.

(இ - ள்) சீதேவியாரென்னும் பணியுடனே வலம்புரிச்சங்கும் பூரப் பாளையும் தென்பல்லி வடபல்லியென்னுமிவையும் தம்மில் தொடர்ந்து ஒன்றுன தலைக்கோலத்தைக் கரிய பெரிய ஓதிக்கு அழகுறும்படி யணிந் தென்க.

செழுநீர் வலமபுரிக்கு அடை. என்னை? "கேழ்கிளர் தொய்யகம் வாண்முகப் புல்லகம், சூளா மணியொடு பொன்னரி மாலையும், தாழ்தரு கோதையுந் தாங்கி முடிமிசை, யாழின் கிளவி யரம்பைய ரொத்தாள்" என்றார்.

ஊடற்கோலமோடிருந்தோன் உவப்ப ஆட்டி ஊட்டிச் செறீஇ அணிந்து செறித்து உடீஇத் தோளுக்கணிநது அமைவுறவணிந்து கரப்பவணிந்து ஆரமோடணிநது சிறுபுறமறைத்து அழகுறவணிந்து மாண்புறவணிந்தென்க

109 - 10. கூடலும் இருந்தோள்

(இ - ள்.) கூடலையும பின்னர் ஊடலையும் கோவலற்களித்துப் படுக்கையமைந்த சேரும்பள்ளியிடத்தே இருந்தவளென்க.

பின்னர் ஊடலளித்தலாவது, [1]எண்ணிலகாம மெரிப்பினு மேற் செலாப் பெண்மையும் நாணும அழிந்துவந்து குறையுற்றுக் கூடுந் துணையும் நீயிர் பிரிவாற்றியிருந்தீர், அன்பிலீரென ஊடுவது. ஊடலை யளித்தல் - அதனுன் வருந்துன்பத்தை யளித்தல்.

111 - 4. உருகெழு மூதூர் வேண்டினளாகி

(இ - ள்) விழவிற்குக் கொடியெடுத்த நாண்முதல் நாலேழ்நாளும் விழவு நடந்து பிறறைஞான்று கொடியிறங்கி விழாவாற்றுப்படுத்த பிறறைஞான்று உவாத்தலை வந்ததாக மாற்றுரீக்கு உட்குதலைப் பொருந்துவிக்கும் மூதூரினின்றும கடறகரைக்கண் இடமபிடிக்க விரைநது செல்லுமாக்களோடு தானும் மடலவிழாநின்ற கைதை புன்னை முதலியவற்றையுடைய கழிக்கானல பொருந்திய கடல்விளையாட்டைக் காண்டலை விருப்பத்தோடே வேண்டினளாகியென்க.

பெருநீர் - கடல். இரியல் - விரைவு. காண்டல் - நீர்ப்போரில் வெற்றி தோல்வி காண்டல். வேண்டினள் - காண்டற்குத் தானுமபோகக் கோவ லனை வேண்டிக்கொண்டாள், எனவே அவனும உடம்பட்டமை உணர்த் திற்று.

115 - 20. பொய்கைத் தாமரை வையமேறி

(இ - ள்.) அங்ஙனம் வேண்டி அவனும் உடம்பட்டவளவிலே பொய் கைகளில் தாமரைப்பூஞ்சேக்கையில் துயில்கினற புட்கள் அச்சேக்கையை நீங்குதலான் வாய்விட்டுப் புலம்பாநிற்ப வைகறைப்பொழுதென்பதனை வாரணங்கள் அறிவிக்க வைகறைக்காலத்துச் செறிந்தவிருளை வெள்ளிய விளக்கம கடியா நிற்க அக்காலத்தே மதாணி முதலிய பேரணிகலங்களை அணிந்து முகில்போலும் வண்கையையுடைய கோவலன் இராச வாகன மாகிய அத்திரியேற அதீ தாரணி மார்பனேடு போதறகு மானின் பார்வைத் தன்மை பொருந்திய நோக்கினையுடையாளும் வையத்தின் ஏறியென்க.

[1] "எண்ணில் காம மெரிப்பினு மேற்செலாப், பெண்ணின் மிக்கது பெண்ணில தில்லையே" (சீவக. 998)

புலம்பக் காட்டக் கடியவென்னும் செயவெனெச்சங்கள் ஏற ஏறி யென்னும் வினைகொண்டு முடிந்தன. வாளாது வாரணமென்றமையால் [1] இருவகை வாரணமுங்கொள்க. அத்திரி - கோவேறு கழுதை. வையம்- † கொல்லாப்பண்டி.

121 - 7. கோடிபல வடுக்கிய செவ்வனங் கழிந்து

(இ - ள்.) கோடியென்னு மிலக்கத்தைப் பலகோடிமேல் அடுக்கப் பட்ட வளவிய நிதித்திரளையுடைய மாடங்கள்மலிந்த மறுகினையுடைய பீடிகைத் தெருவின்கண் மலரணிதறகுக் காரணமாகிய மைவிளக்கோடே மாணிக்க விளக்குக்களையும் எடுப்ப அவ்விடத்தே தாசியர் மலரையும் அறுகையும் நெல்லையும் மங்கலமாகச் சிந்தி இருமருங்கினிடத்தும் தம் கலனெலிப்பத் திரிந்து பெயர்தலைச் செய்யும் திருமகளுக்கு இருப்பிட மாகிய அவ்விடத்தை வேருகக் கழிந்தென்க.

குப்பை - குவியல் மாடம் - சரக்கறைகள். மறுகு - ஏனைத்தெரு. மணி - அழகுமாம் கொடி · அறுகுக்கு அடை. அலருமென்னும் உம்மை தொக்கது மங்கலம் - அழகுமாம். அங்காடியின் செல்வ மிகுதி கூறுவார் திருமகளிருக்கையென்றார். கழிதற்கருமையிற் கழிந் தென்றார்.

தாசியர் கலனெலிப்பத் திரிவனர் பெயருமிருக்கை யென்க.

128 - 9 மகரவாரி போகி

(இ - ள்.) கடலினது வளத்தைக் கொணர்தலான் உயர்ச்சிபெற்ற நகரத் தெருவினூடே போயென்க

கடல்வளம் - முத்தும் பவளமும் சங்கும முதலியன

130 - 33. கலந்தரு திருவின் சென்றெய்தி

(இ - ள்) மரக்கலங்கள் தந்த திருவினையுடைய தமது தேசங்களை விட்டுப் போந்த பரதேசிகள் திரைகளிட்ட வெண்மணலையுடைய அலைவா யிருப்பிற் பலவகைக் கூலமும் குவித்த மறுகில் இன்ன சரக்கு ாண்டுள தென்று கொடிகளெடுத்துச சொல்லும் ஒழுங்குபட்ட சேரிகளைப்போய் நெய்தலங்கானலை யெய்தி என்க.

வாலுகம் - வெண்மணல் வேலை விரிதிரைப்பரப்பின் வாலுகத்தை யுடைய மறுகென்க. எடுத்து நுவலும் - எடுத்தலாற் சொல்லுமென்று மாம்.

134 - 5 வண்ணமும் .. விளக்கமும்

(இ - ள்) எழுதுவண்ணமும் சாந்தும மலரும் சுண்ணமும் பண்ணி கார வருக்கங்களுமென்னும் இவற்றை விறபோர் வைத்த விளக்குக்களும்,

136 செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமும்

(இ - ள்.) திண்ணகத்தாற் செய்யுந் தொழில்களை வல்ல பணித்தட் டார் பணி பண்ணுமிடங்களில் வைத்த விளக்கங்களும்,

[1] இருவகை வாரணம் - சங்கு, கோழி (4 . 77-8.)

(பி - ம்.) † 'கோவால வண்டி'

137 காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்

(இ - ள்.) பிட்டுவாணிகர் பிட்டுவிற்றற்கு முறைமுறையாக வைத்த விளக்குக்களும்,

மோதகம் - ாண்டுப் பிட்டு.

138. கூவியர் காரகற் குடக்கால் விளக்கமும்

(இ - ள்.) காரகலியுடைய அப்பவாணிகர் குடத்தண்டில் வைத்த விளக்குக்களும்,

139. நொடைநவின் மகடூஉக் கடைகெழு விளக் கமும்

(இ - ள்.) பலபண்டமும் விற்கும மிலேச்சமகளிர் தம் கடைகளில் வைத்த விளக்குக்களுமு,

140. இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும்

(இ - ள்) இடையிடையே மீன்விறபோர் விளக்குக்களும்,

141 இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்

(இ - ள்.) பாடை வேறுபட்ட தேயத்து நிலையறியாது ஓடுங்கலங்களை அழைத்தற்கு இட்ட விளக்குக்களும்,

142 விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமும்

(இ - ள்) மீன்களைக் குறுக்கிட்டு மறித்துப் படுக்கும வலையை யுடைய பரதவர் திமிலில் வைத்த விளக்குக்களும்,

"முந்நீர் நாப்பட டிமிற்சுடர் போலச், செம்மீ னிமைக்கு மாக விசும்பின்" (புறநா. 60 1-2) என்றார் பிறரும.

143. மொழிபெயர் தேத்தோ ரொழியா விளக்கமும்

(இ - ள்.) பாடை வேறுபட்டதேயத்து மிலேச்சர் பிற துறைகளிற் போகாமற் பனைகளைக் காலாக நாட்டி அதன்மீதே மண்ணிட்டெரிக்கும் தீநாவென்னும் விளக்குக்களும்,

144. கழிபெரும் பண்டங் காவலர் விளக்கமும்

(இ - ள்) மிக்க பெரிய பண்டங்களையுடைய பண்டசாலை காப்போ ரிட்ட விளக்குக்களும்,

145 - 50. எண்ணுவரம் பறியா . நெய்தலங்கானல்

(இ - ள்.) வரம்பறியப்படாவாய இச்சொல்லப்பட்ட விளக்குக்களெல் லாம் எண்ணுதறகியைந்து ஒன்றிமிகுதலாலே இடியைக் கலநதாலொத்த மணலின்மீது இட்ட வெண்சிறுகடுகும் புலப்படக்காணுங் காட்சியை யுடையதாகிய, மிக்க நீர்ப்பரப்பில் விரைமலர்த் தாமரையை வேலியாக வுடைய மருதநிலத்தினும் அழகுறத்தோன்றும் கைதையை வேலியாக உடைய நெய்தல் நிலத்தில் கழிக்கானற் கண்ணேயென்க.

எண்ணுவரம்பு - எண்ணின் பெருமைக்கு வரம்பு. ாண்டுதல் - மிகு தல். இடி - மா, இடிக்கலப்பென்ருர், தெள்ளாத மாவை. ாரயிர் - மிக வும் நுண்ணிய மணல். வீங்குநீர்ப்பரப்பில் தாமரைவேலி மருததீதிற் ருேன்றும் கைதைவேலி நெய்தலங்கானலென்க.

151 பொய்த லாயமொடு பூங்கொடி பொருந்தி

(இ - ள்.) அங்ஙனமாகிய கானலிடதீதே தனது விஜயாட்டு மகளி ருடனே பூங்கொடிபோல்வாள் விஜயாடச் சென்று பொருந்தியென்க.

152 - 4. நிரைநிரை . கலவிருக்கை

(இ - ள்) நிரைநிரையாகக் குவிதீத குற்றமறற காட்சியையுடைய மலை தரும் பலபண்டமும் கடல் தரும பலபண்டமுமாகிய வளம் இடந் தோறும் மயங்கிக் கிடக்கின்ற கலங்கள் அசைகின்ற கடற்றுறைமுகங் களிற சோலை சூழ்நத இருப்பிடதீதே,

துளங்குதல் - அசைதல்.

155 - 8 அாசிளங் குமரரும் மருங்கில்

(இ - ள்.) அரச குமாரரும் அவருடைய உரிமைச சுறறமும் பரத குமாரரும் அவருடைய பலவேறுவகைப்படட ஆயமகளிரும ஆடன் மகளிரும பாடன் மகளிரும் தொகுதிகொண்ட இடங்கள்தோறும்,

வணிககுமரர்க்கு [1]உரிமையென்ஞதது அவர் புனலாடல் மரபன்மை யின். பரிசனமகளிரும சிலதியர் முதலாயினேருமென்பார் பல்வேருயம் என்ருர் ஆடுகளம - அரங்கு, பாடுகளம - சண்டம், இவை அடை. தோடு - தொகுதி, இதழையுடைய பொழிலிடத்தெனவுமாம்.

158 - 62 சூழ்தர லெழினியும் தோன்றி

(இ - ள்) சூழ்தருதலையுடைய எழினியும் முற்கூறிய தொகுதியும் வேறுவேறு கோலமும வேறுவேறு கம்பலையும விண்ணிலே சென்று பொரும பெரிய புகழையுடைய இக்கரிகால்வளவன் புதுப்புனல் விழவு கொண்டாடும் தலைநாட்போல இவ்விழவினிறுதிக்கண் புனலாடிடங்களும் வீறுபெறத் தோன்ருநிறகவென்க.

தோடு கம்பலையும, எழினி கோலமும் தோன்றவென எதிர் நிரனிறை, எழினிக்கோலம - உருக்கள். தோன்றி தோன்றவெனத்திரிக்க.

163 - 5 கடற்கரை ஒலிப்ப

(இ - ள்.) அவையேயன்றிக் கடலினது கரையைக் குதீதியிடிக்கும் காவேரிப் புகார்முகமெங்கும் வறிதிடமின்ருகச் சேரநெருங்கிய நாலவகை வருணதீதிலுள்ளாருடைய அடக்கப்படாத கம்பலையெல்லாங்கூடி ஓரோசையாய் நின்ரெலிப்பவென்க.

166 - 74 கடற்புலவு மாதவி தானென்

[1] உரிமை - உரிமை மகளிர்

(இ - ள்.) அங்ஙனந்தோன்ற ஒலியாநிற்ப, கடலினது புலால் நாற்றத்தைக் கெடுத்த மடல் அவிழும் பூவையுடைய கைதையாற் சிறையாகச் சூழப்பட்ட நடுவணுளவாகிய புன்னை நீழலில் அழுக்கற்ற மணல் பரந்த நிலத்தே சித்திரத் திரையை வளைத்து மேற்கட்டுங்கட்டியிடப்பட்ட வெண்கால் அமளி மிசையே, வருந்தி நின்ற வயந்தமாலை கையதாகிய நல்லயாழை வாங்கிப் பெரிய மலர்போலும் நெடுங்கண்ணையுடைய மாதவி கோவலன்றன்னெடும் சேரவிருந்தாளென்க.

வெண்கால் - மருப்புக்கால். திருந்துகோனல்யாழ் - இன்பத்தை விளைத்தறகுக் காரணமாகிய கோலையுடைய யாழ், எனவே, மேல் துன்பத்தை விளைவிக்குமென்பது கருத்து. செவ்வனம் வாங்கியென்றார். பின்னர் ஊடலோடு வாங்குதலின்

வெள்ளிமால்வரைச் சேடிக்கண் விருந்தாடடயரும் விஞ்சைவீரன் இடனுங்காண்குதும், அமைதியுங்காண்குதும், ஆடலுங்காண்குதும், வணங்குதும யாமெனக்காடடிப் பின்னர புகார்மருங்கெய்திக் காட்டிக் காண்போன், காணுய், மாதவி இவளெனவுரைத்து மகிழ்வெயதிய அவ் விஞ்சையனன்றியும் அந்தரத்துள்ளோர் வந்து காண்குறூஉம் விழவும் ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள இருந்தோன் உவப்ப ஆட்டி ஊட்டிச்செறீஇ அணிந்து செறித்து உடீஇத் தோளுக்கணிந்து அமைவுற வணிந்து கரப்ப வணிந்து ஆரமோடணிந்து சிறுபுறம மறைத்து அழகுறவணிந்து மாண்புறவணிந்து அளித்து இருந்தோள் உவவு வந்தென வேண்டினளாகிப் புலம்பக் காட்டக்கடிய அணிந்து ஏற ஏறிச் செவ்வனங் கழிந்து நடுவட்போகி மருங்கு சென்றெய்திப் பொருந்திவாங்கிக் கோவலன்றன்னெடும் மாதவி வெண்கால் அமளிமிசை இருந்தனளென வினை முடிக்க.

இது **நிலைமண்டிலவாசிரியப்பா.**

வேலை மடற்றுழை யுட்பொதிந்த வெண்டோட்டு
மாலைத் துயின்ற மணிவண்டு—காலைக்
களிநறவந் †தாதூதத் தோன்றிற்றே காமர்
தெளிநிற வெங்கதிரோன் றேர்.

(சு) கடலாடுகாதை முற்றிற்று.

(பி - ம்.) † 'தாதுதிர்ப்பதீ'

ஏழாவது

கானல்வரி



கட்டுரை

(1) சித்திரப் †படத்துட் புக்குச் செழுங் ‡கோட்டின் மலர்புனைந்து
மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்திப்
பத்தருங் கோடு மாணியு நரம்புமென்
¶றித்திறத்துக் குற்றநீங்கிய யாழ்கையிற் ரெழுதுவாங்கிப்
5 பண்ணல் பரிவட்டணை யாராய்த றைவரல்

1. சித்திரப்படம் - உறை. கோடு - யாழ்க்கோடு

2. மணமகளிர் - கலியாணமகளிர்.

முன்பிற் காதையில் "யாழ செவ்வனம் வாங்கி" (6 172) என்று வைத்து இக்காதையிலும் 'யாழ்கையிற ரெழுதுவாங்கி' என்றது கதைத் தொடர்பு அறிவித்தறகும், யாழின் அலங்காரம கூறுதறகு மென்க.

4 குற்றமாவன —[1]ஆதவ வாத பய சாயையென்பன, என்னை? சிந்தாமணியிலும, "நோய் நான்கு நீங்கி" (720) என்ரர்

இசையெழுவும் எண்வகையாவன —பண்ணல் முதலாயின, அவற் றுள் —

5-8. **பண்ணலாவது** —"வலக்கைப் பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல், விலக்கின் றிளிவழி கேடடும, இணைவழி யாராயாந திணை கொள முடிப்பது, விளைப்பரு மரபிற **பண்ண** லாகும்", "**பரிவட் டணை**யி னிலக்கணந தானே, மூவகை நடையின முடிவிற் ருகி, வலக்கை யிருவிரல் வனப்புறத் தழீஇ, இடக்கை விரலி னியைவ தாகத், தொடை யொடு தோன்றியுந் தோன்ரு தாகியும், நடையொடு தோன்று நயத்த தாகும்", "**ஆராய்த** லென்ப தமைவரக் கிளப்பிற், குரன்முத லாக விணைவழி கேட்டும், இணையி லாவழிப பயஞெடு கேடடும், தாரமு முழை யுந் தமமிற கேட்டும், குரலும் விளியுந் தம்மிற கேடடும, துத்தமும் விளரியுந் துன்னறக் கேடடும், விளரி கைக்கிளை விதியுளிக் கேடடும், தள ராதாகிய தன்மைத் தாகும்", "தைவர லென்பது சாறறுங் காலை, மையறு சிறப்பின் மனமகிழ வெய்தித், தொடையொடு படடும படாஅ

1-3 யாழின் சிறப்பு.

1 சித்திரப் படம - சித்திரமெழுதிய ஆடை, உறைக்கு ஆகு பெயர. 2 மணமகளிர் பொருந 19-20 அடி, 5-15 பாடற ரெழிலி களாவன —'யாழின்கண் வார்தல் முதலிய எடடும் பண்ணல் முதலிய எட்டும' (**குறள்**, 573, **பரிமேல்**), கலைத்தொழில்களாவன —'பண் ணல் ... குறும்போக்கென்றவெட்டும' (சீவக 657, ந)

[1] ஆதவ வாத பய சாயை - வெயில், காற்று, நீர், நிழல், யாழுக்குக் குற்றம் வருதற்குக் காரணமானவை இவை நான்காம்.

(பி - ம்.) † 'படாதீத்துட்' ‡ 'கோட்டுமலர்' ¶ 'றிதீதிறதீத குற்றம்'

கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
நண்ணிய குறும்போக் கென்று நாட்டிய
எண்வகையா லிசையெழீஇப்
பண்வகையாற் பரிவுதீர்ந்து
மரகதமணித் †தாள்செறிந்த மணிக்காந்தண் மெல்விரல்கள்
பயிர்வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் ‡ மிசைப்படர
வார்தல் வடித்த லுந்த லுறழ்தல்
சீருட னுருட்ட றெருட்ட லள்ளல்

தாகியும், நடையொடு தோன்றி யாப்புநடை யின்றி, ஓவாச செயதியின வட்டணை யொழுகிச, சீரேற றியன்று மியலா தாகியும, நீர வாகு நிறைய தென்ப", "செலவெனப் படுவதன் செயகை தானே, பாலை பண்ணே திறமே கூடமென, நால்வகை யிடத்து நயத்த தாகி, இயக்கமு நடையு மெய்திய வகைத்தாயப், பதினே ராடலும பாணியு மியல்பும, விதிநான்கு தொடர்ந்து விளங்கிச செல்வதுவே", "விளையாட் டென்பது விரிக்குங் காலைக், கிளவிய வகையி னெழுவகை யெழாலும, அளவிய தகைய தாகு மென்ப", "கையூ ழென்பது கருதுங் காலை, எவ்விடத் தானு மினபமுஞ சுவையும, செவ்விதிற றேன்றிச சிலைத்துவர லினறி, நடை நிலை திரியாது நண்ணித் தோனறி, நாறபத் தொனபது வனப்பும வண்ணமும, பாறபடத் தோன்றும பருதித் தாகும்", "துள்ளற கண்ணுங் குடக்குத் துள்ளும, தள்ளா தாகிய வுடனிலைப் புனர்ச்சி, கொளவன வெல்லாங் குறும்போக் காகும" இவை யெலலாம் ாண்டு விரித்துரைப் பிற பெருகும.

9. பண்வகையாற பரிவுதீர்நது - பண்கூறறிற குறறந்தீர்ந்து.

10-11 மரகதமணி . . போல - மரகதமணி மோதிரஙகள் செறிந்த விரல்கள் பாடுகின்ற வண்டின் கிளைகளை யொப்ப.

12-6 வார்தல வடித்தல் . செவியினுேர்தீது —வார்தலென்றது- சுட்டுவிரற்செயதொழில், வடித்தலென்றது - சுடடுவிரலும பெருவிர லுங்கூட்டி நரமபை அகமும புறமும ஆராயதல, உந்தலென்றது - நரம்புகளை உந்தி வலிவிழபட்டதும மெலிவிறபடடதும நிரல்பட்டதும் நிரலிழிபடடது மென்றறிதல், உறழதலென்றது - ஒன்றிடையிடடும் இரண்டிடையிட்டும ஆராயதல, உருட்டலெனறது - இடக்கைச் சுட்டு விரல் தானேயுருடடலும் வலக்கைச் சுடடுவிரல தானேயுருடடலும சுடடொடு பெருவிரற கூட்டியுருடடலும இருபெருவிரலும் இயைந துடனுருட்டலுமெனவரும, "தெருட்டலென்றது செப்புங் காலை, உருடடி வருவ தொன்றே மறற, ஒன்றன் பாட்டுமடை யொன்ற நோக்கின், வலலோ ராய்நத நூலே யாயினும், வலலோர்

அடி, 6. கண்ணிய - கருதிய.

அடி, 10 6 97-8. அடி 11. பயிர் - ஒலிக்கின்ற. அடி. 12. "வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்" (பொருந 23)

(பி - ம்.) † 'தாள்செறித்த' ‡ 'மிசைப்படாதது வார்தல்'

ஏருடைப் பட்டடையென விசையோர் வகுத்த
எட்டு வகையி னிசைக்கர ணத்துப்
†பட்டவகைதன் செவியினேர்த்
தேவலன் ‡பின் பாணியாதெனக்
கோவலன் கையாழ் நீட்ட வவனும்
காவிரியை நோக்கினவுங் கடற்கானல் வரிப்பாணியும்
மாதவிதன் மனமகிழ வாசித்த ரெடங்குமன்

(ஆற்றுவரி) வேறு

(2) திங்கண்மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி [சிக்

பயிறறுங் கடடுரை யாயினும, பாடடொழிந் துலகினி லொழிநத செய்கை யும், வேட்டது கொண்டு விதியுற நாடி'' எனவரும் இவை இசைத் தமிழப் பதிஞறுபடலததுட் கரணவோத்துட் காண்க

ஏவலன பின்பாணியாதெனவென்றது - இப்பொழுது இதனை வாசி யென்று விதிக்கின்றேனலலேன , வாசிக்குந்தாளமியாதென்று யான் அறியலுறுகினறேனென்பாள்போலக் கொடுதீதாளென்க , ஏவலன் தனமை யொருமை

கோவலன்கை யாழ்நீட்ட யாழைத்திருதீதித் தான் முற்படவாசி யாதே அவன் தலைமைதோனறக கொடுத்தாள

படடவகை தன செவியினேர்தீது நீட டவெனக

இனி வரிப்பாடலாவது —பண்ணும திறமும செயலும் பாணியும் ஒரு நெறியனறி மயஙகச சொலலபபட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும் பெறறுதீ தன் முதலும் இறுதியும கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்து கருதபபடட சநதியும சார்தீதும பெறறும பெருதும வரும அதுதான் தெய்வஞசுடடியும மக்கஞப் பழிச்சியும் வரும.

அவறறுள், தெயவஞ்சுடடிய வரிபபாடடு வருமாறு —''அழலணங்கு தாமரை யருளாழி யுடையகோ னடிக்கீழ்ச் சேர்நது, நிழலணங்கு முரு குயிர்தீது நிரந்தலரநது தோடேநதி நிழறறுமபோலும, நிழலணங்கு முரு குயிர்தீது நிரநதலரநது தோடேநதி நிழறறுமாயின், தொழலணங்கு மன் புடையார் சூழொளியும் வீழ்கரியுஞ சொலலா வனறே '' இது கூடைச்செய் யுள் '' கூடை யென்பது கூறுங்காலை, நான்கடி யாகி யிடையடி மடக்கி, நான்கடி யஃகி நடதீதறகு முரிதீதே '', '' வார மெனபது வகுக்குங் காலை, நடையினு மொலியினு மெழுதீதினு நோக்கிதீ, தொடையமைந் தொழுகுந் தொன்மைதீ தென்ப '' இவை அடிவரையிடடன

இனி மக்கஞச்சுட்டிய வரிப்பாட்டு வருமாறு —''திங்கண் மாலை காவேரி '' என்பதுபோல வருவது

அடி. 14 ஏர் - அழகு அடி 16. ஓர்தீது - ஆராய்ந்தறிநது. அடி 19. கானல் - கடறகரைச்சோலை

(2) மாலையையுடைய வெண்குடை. சென்னி - சோழன் , கரிகாலன். (மேற்.) 'திங்கள் . காவேரி' இது குடையையும் செங்கோலையும் புணைந்துரைதீதது (தொல். புறதீ 36, ந)

(பி - ம்.) † 'பட்டைவகை செவியோர்தீது' ‡ 'பின்பணியாகெனக்'

கங்கை தன்னைப்புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணுய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி. (க)

(3) மன்னு மாலை வெண்குடையான் வளையாச் செங்கோ லதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணுய்
மன்னு மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி. (உ)

(4) உழவ ரோதை மதகோதை யுடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்த வெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி. (ங)

(சார்த்துவரி) வேறு

(5) கரியமலர் நெடுங்கட்காரிகைமுன் கடற்றெய்வங்காட்டிக்காட்டி
அரியசூள் பொய்த்தா ரறனிலரென்றேழையம்யாங் † கறிகோமைய

(2) கயலாகிய கண்ணையுடையாய், புலவாதொழிந்தது மாதர் பெருங் கற்பு, அதனை நானறிநதேன்

(3) கன்னி - குமரி

(4) தண்பதங்கொள் விழவர்-புதுப்புனலாடுவார் வாய்காவாமழவர் - [ஏறி ஆங்குத் தானென்று] நாயகனை நெருங்கும வீரர்

இவை மூன்றும் **ஆற்றுவரி** வண்ணம் **ஒழுகுவண்ணம்**

இனி வரியாவது —முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரியென மூன்று வகைப்படும். வரிப்பாட்டுக்கு முகமாக நிற்றலின் முகமெனப் படும், என்னை ? " நிலமுத லாகிய வுலகியல் வரிக்கு, முகமாய் நிற்றலின் முகமெனப் படுமே " எனருராகலின். அமமுகமுடைவரி மூன்றடி முதலாக ஏழடியீருக வரும், " சிந்து நெடிலுஞ் சேரினும வரையார் " **முகமில்வரி** யாவது - முகமொழிநது ஏனையுறுப்புக்களான் வருவது **படைப்புவரியா** வது - எல்லாவுறுப்பும் ஒன்றனும பலவானும வெள்ளையானும் ஆசிரிய மானும் கொசசகமபெறறும் பெறுதும வேறுவேருகி .. .. வருவது.

இவறறுள, " திங்கண்மாலை " முதலாயின மூன்றும் **முகமுடைவரி** இவை கண்டன கூறிற்றுக யாழினிட்ட பாடடு. [ரென்க.

(5) பொயத்தாரென்றது முன்னிலைப் படர்க்கை, காட்டிப் பொய்த்தா

(2), (3) சோழன் கங்கையையும கன்னியையும் புணர்தலென்பது அவை பொலியும் நாடுகளை ஆளுதலைக் குறிக்கும்.

(4) தண்பதம கொள்ளல் 6 160

(5) கரியமலர் என்றது கருங்குவளையை, நீலப்போது என்பர் பின் னும் கடறறெய்வம் - வருணன். சூள் - உனைப்பிரியேன் என்று தலைவன் செய்த சதீதியம.

(மேற்) (3) 4 ' மன் மிகுதிபபொருளில் வந்தது ' (**நன்.** 431, **மயிலை**), **இ வி** 263. (5) ' இது குறின்மெல்லிசை யேந்திசை வண்ணம்' (**யா. வி.** ஒழிபு 2) ' கரியமலர் ... .காரிகைமுன்.. ... . எனச் செய் யுட்கண் பல தொகையும் விராய் வந்து ஒருசொல் நடையவாய்தீ தம்மை முடிப்பனவறறோடு முடிந்தன ' (**தொல்** எச்ச. 24, ந) (5) - (7) ' ' இம் மூன்றும் புகாரிற்றலைவியெனக் கூறியவாறு காண்க' (**தொல்.** புறத் 32, **நச்.**)

(**பி - ம்.**) † ' கறிகோவைய '

விரிகதிர் வெண்மதியு மீன்கணமுமாமென்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையுமுதீதுங்கண் †டாம்பல்பொதியவிழ்க்கும் புகாரேயெம்மூர் (க)

(6) காதல ராகிக் கழிக்கானற் கையுறைகொண் டெம்பின்வந்தார்
ஏதிலர் தாமாகி யாமிரப்ப நிற்பதையாங் ‡கறிகோமைய
மாதரார் கண்ணு மதிநிழனீ ரிணைகொண்டு மலர்ந்த நீலப்
போது ¶மறியாது வண்டூச லாடும் புகாரே யெம்மூர் (உ)

(7) மோதுமுதுதிரையான்மொதீதுண்டு போந்தசைந்தமுரல்வாய்ச்சங்கம்
மாதர் வரிமணன்மேல் வண்ட லுழுதழிப்ப மாழ்கியைய
கோதைபரிந்தசையமெல் விரலாறகொண்டோச்சுங் குவளைமாலைப்
போது §சிறங்கணிப்பப்போவார்கண் போகாப் புகாரே
[யெம்மூர் (ங)

(6) எம்பின்வந்தார் ஏதிலர் தாமாகியென முன்னிலையைப்படர்க்கை வாய்பாட்டாற் கூறினார்.

(7) பரிந்து - அறுத்து. அசையக் கொண்டோச்சுமென்க. குவளை மாலைப்போது சிதறினவை சிறங்கணித்துப் பார்த்தாற்போலக் கிடக்க அவ்வூரிலுள்ளார்கண்கள் கண்ணென்று ஐயுறற்குப் போகாத புகாரென்க. அன்றிக் கடைக்கணிக்கவென்றது - குவளையானது மாலைக்காலம் பகை யாதலால் அஞ்சிப் பார்க்கப் போவார்கண் போகாது இங்கு வாழ்வாரைச் சிறங்கணித்த கண்ணெனறு தம பேதைமையாற பார்த்து நிறறலான் நாங்களும பேதையமென்றுமாம்.

இவை மூன்றும் தோழி தலைமகன் முன்னின்று வரைவுகடாயவை; கையுறைமறையெனினும் அமையும.

இவை சார்த்துவரி·—"பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடும், சாரதீதிப் பாடிற் சார்தீதெனப் படுமே" இங்குப் பாடடுடைதீ தலைவன் சோழன். அதுதான் முகச்சார்த்து முரிச்சார்த்து கொச்சகச் சார்தீதென மூவகைப்படும அவற்றுள், முகச்சார்த்து —மூன்றடி முதல் ஆறடியீருக வரும, இடை நானகடியானும் ஐந்தடியானும வரும். முரிச்சார்த்தாவது —" முரிந்தவற .. .. ..குறறெழுதீதியலாற குறுகிய நடையாற், பெறற வடிதீதொகை மூன்று மிரண்டும, குறற மிலலெனக் கூறினர் புலவர்." கொச்சகச் சார்த்து:—கொச்சகம்போன்று முடியும்.

இவறறுள், இவை மூன்றும் முகச்சார்த்து.

(5) புரிவளை - புரிகளையுடைய சங்கு. வளையும் முதலும் முறையே மதிக்கும் விண்மீன்களுக்கும் ஆம்பல் - இரவில் மலரும் நீர்ப்பூ. பொதி - கட்டு

(6) ஏதிலர் - அயலவர். மதிநிழல் - சந்திரனது ஒளி. இணை கொண்டு மலர்ந்த நீலப்போது கண்களுக்கு. ஊசலாடும் - தடுமாறறம் கொண்டு இங்குமங்குமாகச் செல்லும.

(7) கோதை - மாலை, என்றது குவளைமாலையை. முரல்வாய் - ஒலிக்கின்ற வாயையுடைய வண்டல் - சிறு பெண்கள் மணலிற கட்டிய சிற்றில். மாலைப்போது - மாலை நேரத்தில். சிறங்கணித்தல் - கண்ணைச் சுருக்கிப் பார்த்தல் சிறிதளவு மலர்ந்த குவளைமலர்கள சிறங்கணித்த கண்களுக்கு.

இச்செய்யுளின்பின் 'கரியமலர்' (5), 'காதலராகி' (6) என்பவை சில பிரதிகளில் முறையே காணப்படடன.

(பி - ம்.) † 'டாம்பன் மலரும் புகாரே' ‡ 'கறிகோவைய' ¶ 'மறியா மல் வண்டு' § 'புறங்கணிப்ப'

(முகமில்வரி) வேறு

(8) துறைமேய்வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்ற மாய்வான்
பொறைமலிபூம்புன்னைப் †பூவுதிர்ந்து நுண்டாதுபோர்க்குங்கானல்
நிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
உறைமலியுயிர்யாநோயூர் சுணங்குமென்முலையே தீரக்கும்போலும (க)

(கானல்வரி)

(9) நிணங்கொள் ¶புலாலுணங்கனின்று புள்ளோப்புத §றலைக்கீடாகக்
கணங்கொள் வண்டார்த்துலாங் கன்னிநறுஞாழல் $கையி
மணங்கமழ் பூங்கானன் மன்னிமற் றுண்டோர் [லேந்தி
அணங்குறையு மென்ப தறியே னறிவேனே லடையேன்மன்னே. (க)

(10) வலைவாழ்நர் சேரி வலையுணங்கு முன்றின் மலர்கை யேந்தி
விலைமீனுணங்கற்பொருட்டாக வேண்டுருவங்கொண்டு
கொலைவே னெடுங்கட் கொடுங்கூற்றம் வாழ்வ [வேறூர்
தலைநீர்த்தண் கான லறியே னறிவேனே லடையேன் மன்னே (உ)

(8) மணலிலே தோய்ந்து உறைமலி - மலியுறையால் உறை உய்யா நோய - மருந்தாற போக்க முடியாத நோய் போலும . ஒப்பில் போலி.

இது குறியிடத்துச்சென்ற பாங்கன் தலைமகளது காதன்மிகுதி குறிப் பினன் அறிந்து கூறியது

இது முகமில்வரி

(9) தலைக்கீடு - ஒரு வியாஜம். இது கழற்றெதிர்மறை

(10) இதுவுமது

இவை கானல்வரி

(8) மாய்வான் - மறையுமபடி. பொறைமலி - பாரம மிக்க. தாது - மகரந்தப்பொடி உறை - மருந்து , "உறையொன்றினறிதி, தண்டா நோய்" (7 30) ஊர் - பரந்த

(3) தலைக்கீடாக - பெயரளவில் காரணமாக. கன்னி - இளமை. ஞாழல் - புலிநகக்கொன்றை மு ஒப்பு "பல்லுயிர் பருகும உண் டென" (5 219 - 23), "கன்னிநீர் ஞாழல் கமழ்பூங் கானல் யான்கண்ட, பொன்னங் கொடியை யீன்றே ரில்லை போலுமால், மன்னன் காக்கு மண் மேற் கூறறம் வரவஞசி, இன்ன தொன்று படைத்த தாயி னெவன் செய்கோ" (பழம்பாட்டு)

(மேற்) (8) 'தலைவியின் கண்ணுலுண்டாகிய நோய்க்குக் கண்ணே மருநதாம்' (திருச்சிற் 381, உரை), தலைவனை வியநதுரைத்த பாங்கன் பின்னர்ச் சிந்தித்தல் (இறை 3, உரை), பாங்கன் தலைவியை வியத்தல் (நம்பி. களவு 21), இ - வி 505, தக்க 28, உரை.

(9) 'கன்னிநறு ஞாழல்' இஃது அஃறிணையை உயர்திணை வாய் பாட்டாற கூறல்' (தொல் கிளவி 27, சே ந) மு. 'இது இயலிடங் கூறல்' (இறை. 3, உரை), இதில் இடையடி குறைநது வந்தது (தொல். செய். 156, பேர்), இதில் ற்றயலடி குறைந்து வநதது (தொல் செய். 153, ந.) , களவியற். 26, உரை

(பி - ம்) † 'பூவுதிர்நுண்' ‡ 'நிறைமலி வாண்முகத்து நீள் கயற் கண்' ¶ 'படுபுலா லுணங்கிப்புள்', 'புலாலுணங்கு முன்றினின்று' §'றலைக் கீடாக் கணங்கொள்' $ 'கையிலூன்றி'

(நிலைவரி) வேறு

(11) கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வ துவே (க)

(12) எறிவளை †ளார்ப்ப விருமருங்கு மோடும்
கறைகெழுவேற் கண்ணே கடுங்கூற்றங் காணீர்
கடுங்கூற்றங் காணீர் கடல்வாழ்நர் ‡சீறூர்க்கே
மடங்கெழுமென் சாயன் மகளா யதுவே (உ)

(13) புலவுமீன் வெள்ளுணங்கற் புள்ளோப்பிக் கண்டார்க்
¶கலவநோய் செய்யு மணங்கிதுவோ காணீர்
அணங்கிதுவோ காணீ ரடும்பமர்தண் கானற்
பிணங்குநே ரைம்பாலோர் பெண்கொண் டதுவே (ரு)

(முரிவரி) வேறு

(14) பொழிறரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
$எழுதரு மின்னிடையே யெனையிடர் §செய்தவையே (க)

(15) திரைவிரி தருதுறையே திருமணல் ††விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே

(11) காமன செயலெழுதி - பிறரை வருத்தும தொழிலெழுதி தீர்நத முகம் - பணிக்குறையறறுக் கைவிட்டமுகம ஒ வியப்பு. காணீர் - பாரீர்

(12) எறிவளை - அறுக்கும்வளை , அன்றிக் கரையிலே திரையெறிகிற வளையுமாம , வளைகள் முழங்க, இவையிறறைப்பார்த்து ஓடும கண்ணை யுடையாள் வேறகண் - வேறகண்ணையுடையாள் , ஆகுபெயர். அன்றி யும .. " நீள்கடலிடை யலவன்வழி யுழவா " என வளையாபதியினுங் கூறினர்

(13) அலவ - அலந்தலைப்பட பிணங்குமைமபால் - செறிந்த மயிர். பெண் - பெண்வடிவு

இவை மூன்றும் தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைமகன் கூறியவை.

இவை நிலைவரி , " முகமு முரியுந் தன்னெடு முடியும், நிலையை யுடையது நிலையெனப் படுமே "

(11) திமில் - படகு (13) ஐமபால் - கூந்தல் (14) முரிபுரு - வளைநத புருவம். எழுதரு - எழுதுவதற்கரிய. மின் இடை - மின்னலை யொத்த இடை.

(பி - ம்.) †' ளார்ப்ப வெம்மருங்கு மோடும் ' ‡' சீறூர் மடங்கெழு ' ¶' கலவனேய் ', ' கவலநோய் ' $' எழுதரிய மின்னிடை ' §' செய்த விவையே ' ††' விரிவிடமே விரைவிரிதருமலரே '

† மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
இருகய லிணைவிழியே யெனையிடர் ‡ செய்தவையே (உ)
(16) வளைவளர் தரு துறையே மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவ டிரியிடமே
முளைவள ரிளநகையே முழுமதி புரைமுகமே
¶ இளைய ளிணைமுலையே யெனையிடர் செய்தவையே (ஊ)

(திணைநிலைவரி) வேறு

(17) கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் னெயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் னீயும்
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பாரம்
$ இடர்புக் கிடுகு மிடையிழவல் கண்டாய் (க)
(18) கொடுங்கண் வலையா § லுயிர்கொல்வா னுந்தை
நெடுங்கண் வலையா †† லுயிர்கொல்வை மன்னீயும்
வடங்கொண் முலையான் ‡‡ மழைமின்னுப் போல
¶¶ நுடங்கி யுகுமென் னுசுப்பிழவல் கண்டாய் (உ)
(19) ஓடுந் திமில்கொண் $$ டுயிர்கொல்வர் நின்னெயர்
கோடும் புருவத §§ துயிர்கொல்வை மன்னீயும்

(14)-(16) ஏகாரம் . எண்ணேகாரம்.

இவை மூன்றும தலைமகன் பாங்கன் கேட்ப உற்றதுரைத்தவை.

இவை முரிவரி, "எடுத்த வியலு மிசையுந் தமமில், முரித்துப் பாடுதன் முரியெனப் படுமே".

(17) மிடல்புக்கு - வலியிலே புக்கு நின்று இடர்புக்கு - இடரிலே கிடந்து. இடையிழவல - இடையிழவாதேகோள், எனறது நின்தருமம் நீயுஞ் செய்கின்ற கொடுமையாலே இடை முரியவுங்கூடும, அதற்கு உட் பகையாய்த் துணைக்காரணமாகிய முலைகளுமுளவாதலால் இடையைப் பரிகரி யென்றவாறு, என் வருத்ததத்தைத்தீர் என்பதாம். இவை மூன் றற்கு மொக்கும்.

19 பீடு பிறரெவ்வம் பார்த்தல் - உனக்குப் பெருமையாவது பிற ரெவ்வம் பார்த்தல், 'பாரா' எனப் பாடமாயின், தான் பெருக்கமுறு மதனாற் பிறரெவவமும்பாராத முலையென்றும், எவ்வமுமென்னுமும்மை தொக்கது.

(15) புரிகுழல் - சுருண்ட கூந்தல்

(16) முளைவளர் இளநகை - முளைபோன்று வளரும் இளைய எயிறு, 15 . 202, மணி 4 . 100.

(18) வடம் - முத்துமாலை. நுசுப்பு - இடை.

(16) பீடு - பெருமை. எவ்வம - துன்பம.

(மேற்.) (17) மு. 'இது பொய் பாராடடல்' (தொல். களவு. 11, ந.) (19) இஃது இரந்து பின்னிலை நிறறல் (நம்பி. 127.)

17, 18, 19 ஆகிய செய்யுட்கள் மூன்றும் சாயல்வரி என்று சில மூலப் பிரதிகளில் எழுதப்பெற்றுள்ளன.

(பி - ம்) † 'மருவிரிதருகுழலே' ‡ 'செய்தவிவையே' ¶ 'இளவள ரிளமுலையே யெனையிடர் செய்தவிவையே' $ இடர்புக்குகுமின்னி டையே' § 'லுயிர்கொள்வானுந்தை' †† 'லுயிர்கொள்வை நீயும்' ‡‡ 'மறைமின்' ¶¶ 'நுடங்குமிளமென்னுசுப்பு' $$ 'டுயிர் கொள்வர்' §§ 'துயிர்கொள்வை நீயும்'

பீடும் பிறரெவ்வம் †பாராய் முலைசுமந்து
வாடுஞ் சிறுமென் மருங்கிழவல் கண்டாய் (ரு)

வேறு

(20) [1] பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய (சு)

(21) புன்னை நீழற் புலவுத் திரைவாய்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றங் கூற்றம் (டு)

(22) கள்வாய் நீலங் கையி னேந்திப்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வே லலல வெய்ய வெய்ய (சூ)

வேறு

(23) சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய்
சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய்

இவை மூன்றும புணரச்சி நீட இடந்தலைப்பாடடிற புணர்த லுறுவான் ஆறருமைக் கூறியவை.

(20) குவளையல்ல - நிறமபற்றிக் குவளை யென்னவேண்டா

(21) அனன நடப்ப - அன்னம் இந்நடையைப்பாரதீது நடக்கும் படி, அன்றி, நடைக்கு அஞ்சி ஓடவெனறுமாம் கொன - மிகுதியும் கூர்மையும் நீழனடப்பாள் கண்கள் மிகவெயய, ஆகலாற கூறறமென்க

(22) புளவாயுணங்கல் - உணங்கலிடதீதுப்புள்.

இவை மூனறும குறியிடதீதுக்கண்ட பாங்கன் சொல்லியவை, புணர்நது நீஙகுவான் விடுதீதலருமையான ஆறருஞுய்தீ தன்னெஞ்சிற் குச் சொலலியவையுமாம.

(23) விளையாட்டு விருப்பினுல் ஓடுவாளைக்கண்டு நின்னடையுட ஞெக்குமென்று சொலலுவர புலவராயினும் இவள் விளையாடடொழிநது தன்னியல். . னீயொவவாய, அதனுற சேராதேகோள்.

இது [2] காமஞ்சாலா இளமையோள்வயின் ஏமஞ்சாலா இடும்பை யெயதியோன் சொலலியது

[1] இசசெய்யுள் முதலிய மூன்றும் நிலவரியென்றும், துள்ளல்வரி யென்றும், துள்ளலோசை யென்றும் மூலமடடுமை உள்ள சில பிரதிகளில் எழுதபபெறறுள்ளன, 'பவளவுலகை' சிலப் 29 · வள்ளைப்பாட்டு.

[2] தொல் அகத்திணையியல், 50 (பி - ம்) † 'பாரமுலை'

† ஊர்திரை நீர் வேலி யுழக்கித் திரிவாள்பின்
‡ சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய் (எ)

கட்டுரை

(24) ¶ஆங்குக், கானல்வரிப்பாடலகேட்டமானெடுங்கண்மாதவியும் மன்னுமோர் குறிப்புண்டிவன் றன்னிலை மயங்கினுனெனக் $கலவியான் மகிழ்ந்தாள்போற் புலவியால் யாழ்வாங்கித் தானுமோர் ||குறிப்பினள்போற் கானல்வரிப் பாடறபாணி நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழக் கலத்தொடுபுணர்ந்தமைநத §கண்டத்தாறபாடதீதொடங்குமன்.

ஆற்றுவரி (வேறு) (க)

(25) மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்க யறகண் விழித்தொலகி நடநதவெலலா நினகணவன்
திருநது செங்கோல் வளையாமை யறிந்தேன்வாழி காவேரி (க)

(26) பூவர் சோலை ††மயிலாலப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை ‡‡யருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை ¶¶யருகசைய நடந்தவெல்லா நின்கணவன்
நாம வேலின் றிறங்கண்டே யறிந்தேன் வாழி காவேரி (உ)

(27) வாழி யவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி
ஊழி யுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி

---

(17) - (23) இவையேழும **திணை நிலை**வரி

(24) ஆங்கு - அவ்விடத்து.

கோவலன் வாசித்த உருக்கள் களவில் தலைமகன் கூறறுதலால் இவன் தன்மேல் அனபிலனென உட்கொண்டு புலந்து அது தோன்றுமல் மனமகிழநதாள போலத் தன்பக்கல் வேறு குறிப்பிலளாயினும வேறு குறிப்புடையாள் போல இவனுக்குத் தோன்றத் தானும் கானல்வரிப் பாணி பாடதீதொடங்கினுளெனக கலம - யாழ் கண்டம - மிடறு

(25) ஒல்கி - பெண்மையாலேயொதுங்கி வளையாமையேயெனத் தேற்றேகாரம் வருவிக்க, மறறைய ஏகாரஙகளும் (26 - 7) இனனவெனக் கொள்க அதனை யறிந்தேனென்க.

(26) வேலின் திறங்கண்டென்றது, பிறரால் வருதீதம் இல்லையென்ற வாறு

(27) பகல்வெய்யோனென்றது, சூரிய வஙகிசதீதவஞதலால், நடுவை விரும்புவானென்றுமாம இவை மூன்றும் **ஆற்றுவரி.**

---

23. ஊர்திரை நீர்வேலி - கடல்

25 - 7 இவறறை 7 . 2-4 கவிகளோடு ஒப்பு நோக்குக.

(பி - ம்) † 'ஊர்திரைநீ ரோத முழக்கி' ‡ 'செனமட' ¶ 'ஆங்குதீ திணைநிலைவரிக் கானல் வரிப்பாணிகேடடு' $ 'கலவியாழின்' ‖ 'குறிப் பினளாய்க்கானல் வரிப்பாடறபால' § 'கண்டதீதாள் பாடுமன்' †† 'மயி லாடப் புரிந்து குழல்க ளிசைபாட' ‡‡ 'யருகலைய' ¶¶ 'யருகாட'

ஊழி யுய்க்கும் பேருதவி †யொழியாதொழுக லுயிரோம்பும்
ஆழி யாள்வான் பகல்வெய்யோ னருளே வாழி காவேரி (ங)

(சார்த்துவரி) வேறு

(28) தீங்கதிர் வாண்முகத்தாள்செவ்வாய் மணிமுறுவலொவ்வாவேனும்
வாங்குநீர் முத்தென்றுவைகலுமான் மகன்போல்வருதிரைய
வீங்கோதநதந்து ‡ விளங்கொளியவெண்முத்தம் விரைசூழ்கானற்
பூங்கோதை கொண்டுவிலைஞர்போன் மீளுமபுகாரேயெமமூர் (க)

(29) மறையின்மணந்தாரை வன்பரதர்பாக்கத்து மடவார்செங்கை
இறைவளைகடூறறுவதை ¶ யேழையமெங்ஙனம் யாங்கறிகோமைய
நிறைமதியுமீனுமென வன்னநீள்புன்னை யரும்பிப்பூத்த
பொறைமலிபூங் §கொமபேறவண்டாமபலூதும் புகாரேயெம்மூர (உ)

(30) உண்டாரைவென்னருவுஞ்ஞெளியாப் பாக்கத்துளுறையொன்றின்றிதீ
தண்டாநோய் மாதர்தலைத்தருதி $ யென்பதியாங்கறிகோமைய
வண்டாறிரையழிப்பக்கையான்மணன் முகநதுமதிமேனீண்ட
புண்டோய்வே னீர்மல்க மாதர் கடறூர்க்கும புகாரே யெமமூர் (ங)

(28) மணிமுறுவல் - நல்ல முறுவல் செவ்வாய்முறுவலை ஒவ்வா வேனும் வாங்கும - கொள்ளும் மான்மகன் போல் - மயங்கின மகன் போல, காமன்போலென்பாருமுளர் வீங்கோதம வெண்முத்ததீதை தந்து பூங்கோதையைக் கொண்டு, ஓதம் எழுவாய்.

இது கையுறைமறை

(29) மறையின் மணந்தாரை - அப்படி மணந்த மடவாரை. அன்னம அரும்பிப்பூத்த புன்னையிலே ஏறியிருக்க நிறைமதியும் மீனு மெனக்கருதி ஆமபல் மலருமென்க வண்டு ஊதுமெனவே மலர்தல் பெறறும இஙஙனம கூறிறறு, மதிகண்டு ஆமபல் மலருமாதலால்; "உடைதிரை முத்தஞ் சிந்த வோசனிக் கின்ற வன்னம்.. .....ஆம்பல்" (சீவக. 2652) என்றுர் பிறரும

மதியும் மீனுமென்று கண்டார் கருதப் புன்னையிலே அன்ன மேறிறருக வண்டு ஆமபலை யூதுமென்க.

(30) உண்டாரை வெல் நரு - உண்டவர்களைக் கடுமை செய்யும் நரு. ஞெளியா - உண்டவூணமறையாத [இன்றியொளியாத],

இவை யிரண்டும தோழியிற் கூடடங்கூடிப் பின்புவாரா வரைவ லென்றுறகுத் தோழி கூறியவை. இவை மூன்றும் சார்த்துவரி

(28) - (30) இவறறை 7 . 5-7 கவிகளோடு ஒப்பு நோக்குக

(29) அன்னமும் புன்னைமலரும் மதிக்கும் விண்மீன்களுக்கும்.

(30) "உண்டாரை. . ஒளியா" (குறள், 928), கலித் 115 : 1 - 2. வண்டால் வண்டல் - சிறறில், நீடடல் விகாரம.

(பி - ம்) † 'யொழியா தொழித லுலகோமபும' ‡ 'விளங்கொளிர்' ¶ 'யேழையரெங்ஙனம யாங்கறிகோவைய' § 'கொமபேறி' $ 'யென்பதை யாங்கறிகோவைய'

(திணைநிலைவரி) வேறு

(31) புணர்துணையோ டாடும் பொறியலவ னேக்கி
இணர்ததையும் பூங்கான லென்னையு நோக்கி
உணர்வொழியப் போன வொலிதிரைநீர்ச் சேர்ப்பன்
† வணர்சுரி யைம்பாலோய் வண்ணா முணரேனுல் (க)

(32) தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்றேரும்
எம்மை நினையாது ‡ விட்டாரோ விட்டகல்க
அம்மெ னினைர வடும்புகா ளன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால் (உ)

(33) புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோல்
துன்ப முழுவாய் துயிலப் பெறுதியால்
¶ இன்களவாய நெய்தானீ யெய்துங் கனவினுள்
வன்கணூர் கானல் வரக்கண் டறிதியோ (ஊ)

(31) ஆடும - விளையாடும உணர்வொழிய - உணர்வு தன்னைவிட சேர்ப்பன் வண்ணம்

இஃது அறியேனென்று வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தது.

(32) விடடாரோ ஓகாரம ஒழியிசை தண்ணளியும தாமும தேரு மெனப் பின்பு சில சொல்லபபுக்கு அதனைக் காதனமிகுதியாற கலஙகி விட்டாரென்றுள். உயர்திணையையும அஃறிணையையுமெண்ணி உயர் திணையான் முடித்தார் தண்ணளியும தேரும் விடுக, அவற்றிற்கு எனன உறவுண்டு மறக்கமாடடேமென்றது ஒரு சொல

(33) துயிலல - மொடடித்தல். இன்களவாய நெயதாலென்றுள், தன் கண் துயிலாது வருந்த அது கவற்சியின்றித் துயிறலின் களளுண்டு மயங்கினுயாதலாற கேடடும சொல்லமாட்டாயாயினும். எய்துங் கனவி னுளென்றுள், உறங்குவாரக்குக் கனவுமுண்டென்று.

(31) இணர்-பூங்கொத்துக்களையுடைய இணர்ததைகானல் **கலித்.** 69 : 16 வணர்சுரி ஐமபால் **குறுந்** 82 1. **மு.** ஒப்பு **திருச்சிற்.** 84; "பாடுஞ் சிறை . . நெடுந்தகையே" (**இறை.** 11, உரை.)

(32) நமமை.. மாடடோம **குறுந்.** 200 . 4.

(33) புன்கண் - துன்பம். வன்கணூர் - கொடியவர். கள்வாய் நெய்தல் : **குறுந்.** 296 4.

(**மேற்**) 32 3 'இது கேளாதனவற்றைக் கேட்பனபோலக் கூறி யது' (**தொல்** செய், 200, ந) **மு** 'இது வன்மொழியாற கூறல்' (**தொல்.** களவு. 23, **இளம்** ந.), **இறை.** 10, உரை. 'தலைமைப் பொருளையும் தலைமையில் பொருளையும் எண்ணித் தலைமைப்பொருள் வினையால முடித்தல் (**தொல்.** கிளவி. 51, சே.), **பிர.** 16, உரை, **இ. வி.** 298, உரை.

(33) 'இது குறிபிழைத்துழிந் தன்வயின் உரிமையும் தலைவன்வயிற் பரதீதைமையுமபடக் கூறியது' (**தொல்.** களவு. 16. ந.), **இறை.** 30, உரை, **நம்பி.** 164.

(**பி - ம்.**) † 'வணரொலியைம்பாலாய்' ‡ 'விட்டனரே' ¶ இன்கண் வாய்'

(34) †புள்ளியன்மான் றேராழி போன வழியெல்லாம்
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றென்செய்கோ
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றெம்மோடீங்
குள்ளாரோ டுள்ளா ‡யுணராய்மற் றென்செய்கோ (ச)

(35) நேர்ந்தநங் காதலர் ¶நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய வூர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடு மன்னமே
ஈர்ந்தண் டுறையே யிதுதகா தென்னீரே (ரு)

(36) நேர்ந்தநங் காதலர் ¶நேமி நெடுநதிண்டேர்
ஊர்ந்த வழிசிதைய வூர்நதாய்வாழி கடலோதம்
ஊர்ந்த வழிசிதைய வூர்நதாய்மற் றெம்மொடு
தீர்ந்தாய்போற் றீரநதிலையால் வாழி கடலோதம் (சு)

(மயங்குதிணை நிலைவரி) வேறு

(37) நன்னித்திலத்தின் பூணணிநது $நலஞ்சார்பவளக் கலையுடுத்துச்
செந்நெற்பழனக் கழனிதொறுந திரையுலாவு கடற்சேர்ப்ப
புன்னைப்பொதுமபர் மகரத்திண் கொடியோனெய்த புதுப்புண்கள்
என்னைக்காண வகைமறைத்தா §லன்னைகாணி னென்செயகோ (க)

---

(34) புள்ளின் இயல்பையுடைய குதிரை, இது மாவின் கடுமை கூறிறறு, "புளளியற கலிமா வுடைமை யான" (தொல் கறபு. 53) என் ருர் பிறரும ாங்குளளார் - அயலாராகிய அலர்தூறறுவார், என்மனம் விட்டுப்போகாத தலைவரென்றுமாம உள்ளாய்-அவர் கூறறிலே நிற்கின்ரு யாதலால் என் நோயறியாய, என் செயவேனென்ருள் ஓகாரம ாறறசை.

(35) நேர்நத - நமமோடு பொருந்தின. ஓதங்கள் ஊராநின்றன

(36) தீர்ந்தாயபோல் தீர்ந்திலை - உறவுபோலிருந்து உறவாயிறறிலை; காரியத்தால் வேறுபடடாய

இவ்வைந்தும் காமமிக்க கழிபடர்கிளவி
இவை திணை நிலைவரி

(37) புதுப்புண் என்றது, தலைவி மேன்மேல் வருந்துகின்ற வருத்தத்தை என்செயகு - என்செயவேன்

---

(34) தலைவன் தன்னைவிடடு விரைவில நீங்கினமை கருதி, புளளியல் மான் தேர் என்ருர் இச் செயயுள் 'நேர்நத நம் காதலர்' என்னும் முதற் குறிப்பையுடைய இரண்டு செய்யுட்களுக்கும பின்னர்ச் சில பிரதி களிற காணப்படுகின்றது

(35) நேமி - தேருருளை.

(37) நித்திலம் - முத்து மகரத்திண்கொடியோன் - மன்மதன்.

(மேற்) 34. மு 'இது கேளாதனவற்றைக் கேட்பனபோல் கூறி யது, இதனுள் கடலும் கானலும புள்ளும் மானும் கூறப்பட்டது' (தொல் செய் 200, இளம் ந)

(36) இறை 7, உரை.

(பி - ம்) † 'புள்ளிமான்றேர்' ‡ 'யுணர்ந்தாய்' ¶ 'நேமியொடுந் திண்டேர்' $ 'நலஞ்சால்' § 'லன்னைகாண்கிலென்'

(38) வாரித்தரள நகைசெய்து வண்செம்பவள வாய்மலர்ந்து
சேரிப்பரதர் வலைமுன்றிற் றிரையுலாவு கடற்சேர்ப்ப
மாரிப்பீரத் தலர்வண்ண மடவாள்கொள்ளக் கடவுள்வரைந்
†தாரிக்கொடுமை செயதாரென் றன்னையறியினென்செய்கோ. (உ)

(39) புலவுறறிரங்கியது நீங்கப்பொழிறறண்டலையிறபுகுந்துதிரந்த
கலவைச்செம்மன் மணங்கமழத் திரையுலாவு கடறசேர்ப்ப
பலவுற ‡ருருநோய் துணியாத படர்நோயமடவா டனியுழப்ப
அலவுறறிரங்கி யறியாநோ யன்னையறியி னென்செய்கோ. (ங)

வேறு

(40) இளையிருள் பரந்ததுவே யெற்செய்வான் மறைந்தனனே
களைவரும் புலம்புநீர ¶கண்பொழீஇ யுகுத்தனவே
தளையவிழ் மலர்க்குழலாய் தணந்தார்நாட் டுளதாங்கொல்
வளைநெகிழ வெரிசிந்தி வந்தவிம் மருண்மாலை (ச)

(41) கதிரவன் மறைந்தனனே காரிருள் பரந்ததுவே
எதிர்மலர் $புரையுண்க ணெவவநீ ருகுததனவே
புதுமதி புரைமுகத்தாய் § போனர்நாட் டுளதாங்கொல்
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தவிம் மருண்மாலை (ஞ)

(38) வாரிதீதரளம் - கடல்முதீது கடவுள் வரைந்து - கடவுளரைவழி பட்டு அறியின் - ஆராயநதறியின்

(39) புலவுறறிரங்கியது - புலால்நாற்றமுறறு வருந்தியது, துனியால் இரங்குதலுமாம நீங்க - புலால்நாறறம நீங்க கலவை - பலவுங் கலந் தது. செமமல் - பழமபூ. பலவுறறு - பல நோயிலே பொருநதி பல துன்பங்களுமுறுதலால், ஒரு நோயிறறுணியவொணணுத நினைவை யுடைய நோயை மடவாள் தானேயறிநது அனுபவிக்க, படர - நினைவு. அலவுறுதலும இரங்கலும் ஒருவர் அறியப்படாத நோயை. அன்னையறி யாத நோய. நோய் காரணமாக அலவுறறெனக.

இவை மூன்றும அலரறிவுறீஇ வரைவுகடாவியவை.

(40) இளையிருள் - இளையவிருள், விகாரம், களைதறகரிய வருதீததீ தால் வநத நீர்.

(41) எதிர்மலர் - செவ்விமலர், எதிர்தீதுப் பிணைதீத மலரென்று மாம், தோறறுகின்ற மலரெனறுமாம்.

(38) பசலைக்குப் பீர்க்கமலர் . நற். 197 . 1-2, குறுந். 98 5.

(40) தலைவனைப் பிரிநத தலைவிக்குதீ துன்பம தருதலானும, செவ்வா னதீதைக் காட்டுதலானும் மாலைக்காலதீதை எரிசிநதி வந்ததென்ருர்; "தீதீதுழைஇவந்த . . மாலை" (7 51)

(பி - ம்) † 'தாரிக்கொடுநோயசெயதார்' ‡ 'ருருநீர்' ¶ 'கண் பொழி' $ 'புரையுங்கண்' § 'புணர்ந்தார் நாட்'

(42) பறவைபாட் டடங்கினவே †பகல்செய்வான் மறைந்தன
நிறைநிலா நோய்கூர நெடுங்கணீ ருகுத்தனவே [னே
துறுமல ரவிழ்குழலாய் துறந்தார்நாட் டுளதாங்கொல்
மறவையா யென்னுயிர்மேல் வந்தவிம் மருண்மாலை (சு)

(சாயல்வரி) வேறு

(43) கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்த லழித்துப் போனு ரொருவர்
பொய்த லழித்துப் போனு ரவர்நம்
மையன் மனம்விட் டகல்வா ரல்லர் (க)

(44) கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்ரு ரொருவர்
நீநல் கென்றே நின்ரு ரவர்நம்
மானேர் நோக்க மறப்பா ரல்லர (உ)

(45) அன்னந் துணையோ டாடக் கண்டு
‡நென்ன னெக்கி நின்ரு ரொருவர்
‡நென்ன னெக்கி நின்ரு ரவரநம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர் (ங)

(முகமில்வரி) வேறு

(46) அடையல் குருகே யடையலெங் கானல்
அடையல் குருகே யடையலெங் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற் குறுநோ யுரையாய்
அடையல் குருகே யடையலெங் கானல் (க)

---

(42) பாடடடங்கின - ஒலிதீதல அடங்கின நிறைநிலா - நிறுதீதல் நில்லாவாய் நோய்கூர - நோயுண்டாகாநிறக. மறவை - மறதீதை யுடைதீதாய்

இவை மூன்றும பொழுதுகண்டு ஆறருளாகிய தலைமகள் தோழிக்கு உரைதீதவை.

இவை ஆறும் **மயங்குதிணை நிலை வரி.**

(43) பொயதலழிதீது - விளையாட்டை மறப்பிதீது, **நற்றிணைப்** பாட்டில் "சேர்ப்பே ரீரளை யலவற பார்க்கும், சிறுவிளை யாடலு மழுங்கி, நினைக்குறு பெருந்துயர மாகிய நோயே" (123 10 - 12) எனருற் போல

(44) என்றேநிறகை - என்று சொல்லியே நிறகை நம்பார்வையென் ருள், வேறறுமையின்மையால மானேரநோகக்ம-மானையொதீதபார்வை.

(45) பொனனேர் சுணங்கின்-பொன் தோறறுகின்ற சுணங்குபோல.

இவை மூனறும் மெலிதாகச்சொல்லிக் குறைநயப்பிதீதல், ஆறறு விதீதறபொருடடுதீ தோழி இயறபழிக்கதீ தலைமகள இயறபடமொழிந் ததூஉமாம

இவை மூன்றும **சாயல்வரி**

(46) நோயுரையாயெனறது முறறு ஆதலால், எமகானலில் வந்தடையாதே கோள் என்ருள். இது காமமிக்க கழிபடர்கிளவி.

---

(42) சூரியன் மறையப் பறவையொலி அடஙகல் **கலித்** 121 . 4. மறவை **புறநா** 44. (43) கைதை - தாழை

(பி - ம்) † 'பகறசெயவான்' ‡ 'நின்னேர்நோக்கி நின்ரு'

(கட்டுரை) வேறு

(47) ஆங்கனம் பாடிய வாயிழை பின்னரும்
காந்தண் மெல்விரற் கைக்கிளை சேர்குரல்
தீந்தொடைச செவ்வழிப் பாலை யிசையெழீஇப்
பாங்கினிற் பாடியோர் பண்ணுப் பெயர்த்தாள் (க)

(முகமில்வரி) வேறு

(48) நுளையர் விளரி நொடிதருந்தீம் பாலை
இளிகிளையிற் கொள்ள விறுத்தாயான் மாலை
இளிகிளையிற் கொள்ள விறுத்தாய்மன் னீயேற்
கொளவல்லா யென்னுவி கொள்வாழி மாலை (க)

(49) பிரிந்தார் பரிந்துரைத்த பேரருளி னீழல்
இருந்தேங்கி வாழ்வா ருயிர்ப்புறத்தாய் மாலை
உயிர்ப்புறத்தாய் நீயாகி லுள்ளாற்ரு வேந்தன்
எயிற்புறத்து வேந்தனே டென்னுதி மாலை (உ)

(50) † பையுணேய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை
மாலைநீ யாயின் மணந்தா ரவராயின்
‡ ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை (ரு)

---

(47) ஆங்கனம பாடிய - அவன் பாடினுறபோலப் பாடிய மெல் விரல் - மெல்விரலாலே. பண்ணு - பண்ணை.

(48) விளரியென்ருர், விளரி இரங்கினுர் பாடும பண்ணுதலால், இது, "விளரிப்பண் கண்ணினுர் பாணர்" (பு வெ 137) என்று வந் ததுபோலும, நெயதறகு இரங்கலும இரங்கனிமித்தமும உரிப்பொருள். விளரி நொடிதரும பாலை - விளரிப்பாலை, நொடிதருதல் - சொலலுதல். இளி கிளையிறகோடல் நின்ற நரம்பிறகு ஆரு நரமபு பகை, அது கூட மென்னுங் குற்றம், இளிமுதலாகக் கைக்கிளையாருவதாம, இளிக்குக் கைக்கிளை பகையென்றது, தங்கண் மயக்கத்தாலே பகை நரம்பிலே கைசென்று தடவ. கொளவல்லாய் - கொள்ளுதலை வல்லாய் நீ

(49) ஏங்கி - வருநதி. உயிரப்புறத்தாய - உயிரைச சூழ்ந்தாய். உள்ளாறரு வேந்தன் - நொச்சியான். எயிறபுறத்து வேந்தன் - உழிஞை யான் வேந்தனேடு - வேநதறகு.

(50) இவ்வையத்துள்ளார் கணபுதைப்ப. நீயென்றதும, அவரென் றதும், கொடுமை குறித்து ஞாலம் நல்கூர்ந்ததென்ருள், தன்னேய் எல்லாரக்கும ஒக்குமாகத் தனக்குத் தோறறுதலால், 'தான் சாக உலகு கவிழும' எனனும பழமொழிபோல.

இவை மூன்றும் மாலைப்பொழுது கண்டு தலைவி கூறியவை.

(பி - ம்.) † 'பைதனேய்' ‡ 'ஞாலமே'

வேறு

(51) தீத்துழைஇ வந்தவிச் செல்லன் மருண்மாலை
† தூக்காது துணிந்தவித் துயரெஞ்சு கிளவியாற்
பூக்கமழ் கானலிற் ‡ பொய்சூள பொறுக்கென்று
மாக்கடற் றெயவநின் மலரடி வணங்குதும் (ச)

(கட்டுரை)

(52) எனக்கேட்டு,
கானல்வரியான்பாடத் தானென் றின்மேன் மனம்வைத்து
மாயப்பொய் பலகூட்டு மாயத்தாள் பாடினளென
§ யாழிசைமேல் வைத்துத்த னூழ்வினைவந் துருத்ததாகலின்
உவவுறறதிங்கண முகத்தாலக் கவவுக்கைஞெகிழநதனளையப்
பொழுதீங்குக் கழிநததாகலி னெழுதுமென் றுடனெழா
தேவலாள ருடன்சூழ்தரக் கோவலன்ருன் போனபின்னர்த்
தாதவிழ் மலர்சசோலை யோதையாய்த் $ தொலியவித்துக்
கையற்ற நெஞ்சினளாய் வையத்தி னுள்புக்குக்
காதலனுடனன் றியே ¶ மாதவிதன் மனைபுக்காள்
ஆங்கு,
மாயிரு ஞாலத் தரசு தலைவணக்கும்
சூழி யானைச சுடர்வாட் செம்பியன்
மாலை வெண்குடை கவிப்ப
ஆழி மால்வரை || யகவையா வெனவே (க)

---

(51) மாலை - மாலையை தூக்காது - நமமை வருத்துமென்றுகரு தாது துணிந்தவிதீ துயரெஞ்சு கிளவியால - துணிதறகுக் காரணமான நலல வார்த்தையோடே, ஆவது நினனிற பிரியேனென்றல. இது, வரைவு நீடடிதீத விடதீதுதீ தலைமகன சிறைப்புறதீதானைக் கூறியது. இது, **கொச்சகம்** முகநிலை முரிகளாறபயநத வேறுபடு பொருண்மை யெல்லாம தன்னகதீதடக்கி ஒரு நெறிபபடுதீதலாற கொச்சகமெனப் படும் அது வெள்ளையானும, அகவலானும முடியும.

இவை **முகமில்வரி.**

(52) என்றிவள் பாடக்கேட்டு[ச் சொல்வான்] —நான் கானல்வரி பாடதீ தான் அப்படிப் பாடாதே என்னை யொழியப் பிறிதொரு பொருண் மேல் மனம வைதீது, மாயளு செயவாளாகலின், இப்படிப் பாடினளென்று.

ஆங்கு அசை ஆழிமால்வரை - சக்கரவாளம, இஃது உள்ளே யகப்படுமபடி கவிப்பவென்று புக்காளென்க

(எ) **கானல்வரி முற்றிற்று**

---

(52) உவவு உறற திங்கள் - பௌர்ணமிசசந்திரன. கவவுக்கை **கலித்** 33 8 வையம - கொல்லாப்பண்டி மாயப்பொய **"மாயப் பொய்ம்மொழி"** (**அகநா** 6) மாதவிக்கு அவன்மேல இருக்கும் அன்பு மிகுதியைக் காட்டக் காதலன் என்றுர

(பி - ம்) † 'தூக்கா யதுதுணிந்த துயரெஞ்சு' ‡ 'பொய்ச்சூ ளறுக்கென' § 'யாழ்மேல் வைதீதுதீ' $ 'தொலியவிதீத' ¶ 'மாதவி தன் மனைபுக்கனள், மாயிரு' || 'யகவயினுங்கென'

எட்டாவது

வேனிற் காதை

நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு
மாட மதுரையும் பீடா ருறந்தையும்
கலிகெழு வஞ்சியு மொலிபுனற் புகாரும்
அரைசுவீற் றிருந்த வுரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
† இன்னிள வேனில் வந்தன னிவணென
வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த
இளங்காற் றூத னிசைத்தன னுதலின்
மகர வெல்கொடி மைந்தன் சேனை
புகரறு கோலங் கொள்ளுமென் பதுபோற்
கொடிமிடை சோலைக் குயிலோ னென்னும்
படையுள் படுவோன் ‡ பணிமொழி கூற
மடலவிழ் கானற் கடல்விளை யாட்டினுட்
கோவல னூடக் கூடா தேகிய
மாமலர் நெடுங்கண் மாதவி விரும்பி
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளி யேறி மாணிழை

---

1. நெடியோன் குன்றம் - வேங்கடமலை தொடியோள் பௌவம் - குமரிக் கடல.

1 - 2 இவை தமிழை எல்லைப்படுத்தின நாடு

3 - 6 நகரம நான்கினுமாக வீற்றிருந்த மன்னனுகிய மாரன்

7. வேனில் - வேனிலரசன், அஃறிணை உயரதிணையாகக் கூறிறறு

9 இளங்காறருகிய தூதன, குயிலோனுக்கு இசைத்தனன்

10. காமன்சேனை - மகளிர்.

12 கொடி - படரகொடி குயிலோன், உயரத்துக் கூறிறறு

13. படையுள்படுவோன - காமன படைச சிறுபிள்ளை, படைக் கிழவன் சிறுக்கன், காளமூதி. பணிமொழி - மாருததூதன் பணித்த மொழி.

அடி, 5 சிலப். 2 1 உரைசால் சிறப்பு கலித் 98 . 27.

7. இன்னிளவேனில் 8, 57 13 சூளா கல்யாணச் 20.

(மேற்) 7. பிர. 46, உரை

(பி - ம்) † 'இன்னிள வேனில் வந்த திவணென, வந்தன ஞை' ‡ 'பண்மொழி'

†தென்கடன் முத்துந் தென்மலைச் சந்தும்
தன்கட னிறுக்குந் தன்மைய ‡வாதலிற்
கொங்கை முன்றிற் குங்கும வளாகத்து
மையறு சிறப்பிற் கையுறை யேந்தி
அதிரா மரபின் யாழ்கை வாங்கி
மதுர கீதம் பாடினண் மயங்கி
ஒன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தி
நன்பா லமைந்த விருக்கைய ளாகி

---

19 - 20. தன்கடனிறுக்குந் தன்மையவாதலால் - முத்தும சநதும் வேனிறகாலத்துப் பூண்பனவும பூசுவனவுமாய்ப் பயன்படச் செயதல்.

21. முன்பு குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்ட கொங்கை முன்றி லாகிய பரபபு, முலைக்கு முறறம, மாரபெனினும ஒக்கும.

21 - 2 (7) வேனிலரசனுக்குக் கையுறையாக வளாகத்தேநதி; பூண்டும் - பூசியுமென்றபடி, கையுறை - பாகுடம

23 பினபு அதிராமரபின் யாழ கை வாஙகினளென்க, அதிர்தல் - துளங்குதல், அதிராமரபு - கோவை கலங்காத முறைமை

24 மதுரகீதம பாடினள் - மிடறறுக் கருவியாலே முநதுறப்பாடிப் பின்பு யாழ்க்கருவியோடு பாடதீ தொடஙகினளென்க.

மதுரகீதம பாடினண மயஙகி - தாரஙகுரலான மேறசெமபாலையென் னுமபண்ணைக் கண்டதீதாற்பாடி மயங்கி அபபண்ணையே யாழினும் பாடினளென்றவாறு

இதனுறை போநத பொருள் —நிலம் கலம கண்டமென்னும நெறி மூன்றினும், "கண்ட மல்லது நிரமபக் காட்டக், கருவிக் கின்பங் கொடுப் பதுமது பொருவரு நிலத்தைப் புணரப்ப ததுவே" என்னுஞ சொல் லகத்தியச் சூத்திரத்தானும முறபடக் கண்டத்தாலே பாடியெனவும் செமபாலைப்பண்ணை யாழினும பாடினளெனவும கொளக.

25 ஒன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தியாவது - இருபதீ தொரு கோவை முதலாக நானுற கோவை யீறுகக் கிடநத கோவைகளுள் ஒன்பான கோவையில மேறசெமபாலை தாரமுதலென்பது, 'தலையின தாரஞ செயயுந்தாரம்' எனபதனுறை பெறறும ஒன்பான்கோவை. "தொண்டுபடு திவவின் முண்டக நலயாழ" என ஆசிரியமாலையுள் ளுங் கண்டுகொள்க

25 - 6 ஒன்பான்.... ...விருக்கைய ளாகி. "ஆதிப்பா .....ஒன்

அடி, 19 பட் 189
அடி, 25 பெருங். 2 7 40. அடி, 26 பெருங். 4. 3 106
(மேற்) அடி, 19. தஞ்சை. 93, உரை.
(பி - ம்.) † 'தெண்கடன்' ‡ 'வாகலிற'

†வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி
இடக்கை நால்விரன் மாடகந் தழீஇச்
செம்பகை யார்ப்பே ‡கூட மதிர்வே
வெம்பகை நீக்கும் விராகுளி யறிந்து
பிழையா மரபி னீரேழ் ¶கோவையை
உழைமுதற் கைக்கிளை யிறுவாய் கட்டி
இணைகிளை பகைநட் பென்றிந் நான்கின்
இசைபுணர் குறிநிலை யெய்த நோக்கிக்

பான் விருத்தி" அவறறுள, தலைக்கண் விருத்தியாவது - "முதற்க ணெதிர் தோறறமும்" யாழ்வாசித்தறகுச சூத்திரம.—"நலலிசை மடந்தை. வினைய மாடடுதல் கடனே" எனபது, வினயம - தேவபாணி.

27 - 8 வலக்கையைப் பதாகையாகக் கோடடின்மிசை வைத்து இடக்கை நால்விரலளவால மாடகத்தைத் தழுவியென்றவாறு

பதாகையாவது - "பெருவிரல் குஞ்சித் தேனைய நான்கும, நிரலே நிமிர்த்தல் பதாகை யாகும"

"மாடக மென்பது வகுக்குங் காலைக், கருவிளங காழ்ப்பினை நால் விரல் கொண்டு, திருவியல் பாலிகை வடிவாக் கடைந்து, சதுர மூன்றுகத் துளையிடற் குரித்தே"

29 - 30 செம்பகை. ...அறிந்து இப்பகை நரமபுள் படாமல் வாசிக் கும் முறைமையையறிநது இவறறுள், செம்பகை நரமபிறகலப்பு, ஆர்ப்பு - நரம்பின் முழக்கம, கூடம் - பகைநரமபு, அதிரவு - கமபித்தல்.

31 - 2. பிழையாமரபின் .. . கட்டியென்றது - உழைமுதலாகக் கைக் கிளையிருகப் பண்ணியென்றவாறு இளி விளரி தாரம குரல துத்தம் கைக் கிளை உழையென்று முறையே ஏழுநரமபியன்ற பின்னர், "கண்ணிய கீழ்மூன் ருகி மேலும, நண்ணல் வேண்டு மீரிரண்டு நரமபே" "குரலே துத்த மிளியிவை நான்கும, விளரி கைககிளை முமமூன் ருகித், தளராதீ தார முழையிவை யிரிரண், டெனவெழு மென்ப வறிந்திசி னோரே"

33 - 4 இணைகிளை .... நோக்கியென்றது இணை - இரண்டு நரம்பு, "இணையெனப் அளவினென்ப" கிளை - ஐந்தாநரம்பு, "கிளை யெனப்படுவ . .. ...ஆகுமென்ப" பகையென்றது - ஆறும மூன்றும, "நின்ற . .. கூடமாகும" கூடமெனினும பகையெனினுமொக்கும். நட் பென்றது - நாலாம் நரமபு. இங்ஙனம இசை புணருங குறிநிலை எய்த நோக்கியென்க.

அடி, 28 சீவக. 722, ந.

(பி - ம்) †'வலக்கைபதாகை' ‡'யதிர்வேகூடம்' ¶'கோவையு, முழைமுதற் கைக்கிளை யீரேழ் காட்டி,யிணை'.

குரல்வா யிளிவாய்க் †கேட்டன ளன்றியும்
வரன்முறை மருங்கி ‡னந்தினு மேழினும்
உழைமுத லாகவு முழையீ ருகவும்
குரன்முத லாகவுங் குரலீ ருகவும
அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியன் மருதமும் பெருகியன் மருதமும்
நால்வகைச சாதியு நலம்பெற நோக்கி

35 குரல்வாய் . கேட்டனள் குரன்முதலாகவெடுத்து இளி குரலாக வாசித்தாள்

கேடடனள் - செவியாலே அளந்தாள்.

(36) வரன்முறைமருங்கிற (35) கேட்டனளென்க.

36 வரன்முறையாவது - முனகூறினவகையே ஐந்தாநரம்பா முறைமையின், இளி குரலாக ஏழுநரமபும வாசித்தாளென்க

38 குரல் குரலாகவும குரல தாரமாகவும் வாசித்தாளென்றவாறு.

39 - 41 அகநிலை மருதமும் நோக்கியென்றது —

அகநிலைமருதமாவது "ஒத்த கிழமை யுயர்குரன மருதம், துத்த மும விளரியுங குறைவுபெற னிறையே" இதன்பாடடு —"ஊர்க திண்டே ரூரதற கினனே, நேர்க பாக நீயா வண்ணம" நரமபுக்கு மாத்திரை பதினறு

"புறநிலை மருதங் குரலுழை கிழமை, துத்தங் கைக்கிளை குரலா மேனைதீ, தாரம் விளரி யிளிநிறை வாகும" இதன் பாடடு —"அங்கட் பொயகை யூரன கேண்மை, திங்க ளோரநா ளாகுந் தோழி" நரம்பு பதினறு

"அருகியன் மருதங் குரல்கிழமை கைக்கிளை, விளரி யிளிகுர னிறையா மேனைதீ, துத்தந் தார மிளியிவை நிறையே" இதன் பாடடு —"வநதா னூரன மென்ரோள் வளைய, கன்ரய போது காணுய் தோழி" நரமபு பதினறு.

"பெருகியன் மருதம் பேணுங் காலை, அகநிலைக் குரிய நரம்பின திரட்டி, [1] நிறைகுறை கிழமை பெறுமென மொழிப" இதன பாடடு — "மலலூர் .. . நோவ வெமமுன், சொல்லற பாண சொலலுங காலை, எல்லி வநத நங்கைக் கெல்லாம, சொல்லுங் காலைச் சொலலு நீயே." நரம்பு முப்பத்திரண்டு. "மன்னு மளிகண் மலர்தேடி மதுவை யுண்டு வரைதோறும, பன்னு சார லவையெங்கும பறறி யார்க்கும் வகையே போல, முன்ன மோசை பலவாகி முழுதும் வேரய மிடரென்ரய்தீ, தென்ன வென்னு மிசைவளரதீதுப் பண்ணு மாறு தேன்போல"

அகநிலை மருததீதுக்கு நரமபணியுமபடி —உழை இளி விளரி உழை கைக்கிளை குரல் உழை குரல் தாரம் இளி தாரம் துத்தம் இளி உழை இவை உரைப்பிற் பெருகும

[1] பரி. 17 . 18.

(பி - ம்) † 'கொண்டனள்' ‡ 'னந்தினுமெட்டினுங்குரல் குர லாகவும்

மூவகை †யியக்கமு முறையுளிக் கழிப்பித்
திறத்து வழிப்படூஉந் ‡தெள்ளிசைக் கரணத்துப்
புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கிச்

தாரத்துட்டோன்றும் உழை, உழையிற் குரல் பிறக்கும், குரலுள் இளி பிறக்கும, இளியுள் துத்தம் பிறக்கும, துத்தத்துள் விளரிபிறக்கும், விளரியுட் கைக்கிளை பிறக்கும. "தாரத்துட்டோன்று ..தோன்றும் பிறப்பு."

42 மூவகை .. கழிப்பி யென்றது —மூவகையியக்கமாவன - வலிவு மெலிவு சமம், . "சமமெனப் படுவது தேசிக்கு வருமே"

44. புறத்தொரு .. மயங்கியென்றது - புறநிலை மருதப்பண்ணில் மயங்கியென்றவாறு அன்றியும, திறத்துள் புறநீர்மையில் மயங்கியென்றுரைப்பாருமுளர்.

43 - 4 திறப்பண் பாடுகின்ற ஏல்வை அப்பண்ணுக்கு அடைத்த பாட்டின் புறத்தொருபாணியென்பது - நால்வகைச் சாதியாகிய பெரும் பண்களையாக்கி அதன்வழிப்பிரிந்த திறப்பண்பாடுகின்ற அளவிலே பிரிவின்கண் வேனிற பாணி பாட நிழ்ந்தாள, பொழுதுகண்டு கலங்கி ஞாதலாலே காலப்பண்ணுக்கு அமைத்த பாட்டுமொழிய வேறு சில விரவினவென்க.

முறபட மிடற்றிற பாடிய பண்ணே யாழின்மேல் வைப்பதாகலின், ாண்டு மிடறறுப் பாடல் சொலலிறறிலர், அது "பருந்து மதனிழலும் பாட்டு மெழாலும்" (சீவக 730) என்பதனுறை கொள்க

(7) வேனிற்காலம் வந்தது, (10) காமனுக்குப் பரிகரமாயுள்ளோர் (11) போர்க்கோலங் கொளளுமென்று காமனுக்குப் படையழைக்குங (12) குயிலோனென்னும் (13) படைசசிறுக்கன் கூறக் (14) கானலநதண்டு றைக்கண் கடலாடப்போயிருந்துழிக் (15) கோவலனூடப் பிரிவாளாய்தீ தன்மனையின்கணிருந்த (16) மாதவியும் விருமபி (17) மாளிகையின் (18) வேனில் கொண்டாடும பஞ்சரத்தினிருந்து (19) முதீதையும சநதனதீ தையும (21) வளாகத்துக் (22) கையுறையாகவேந்தி (23) இயல்பின் வழாத யாழை வாங்கி[தீ தொழுது கைக்கொண்டு] வேனிற காலத்துக்கு அடைத்த பண்ணை (42) இயக்கி (24) மிடறறிஞற்பாடுதலும் (44) பண் முறைமை கெட மயங்கினளென்று கூடடுக.

இனி (27) 'வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி' என்பது முதலாக (44) 'புறத்தொரு பாணியிற பூங்கொடி மயஙகி' என்பதீருக முன்னர்ப் பாடிய ஒன்பான் கோவையின் மேற்செம்பாலைப் பண் ணிைழிநது பதிஞற கோவையாகிய சகோடயாழை வாங்கி வலக் கையைப் பதாகையாக்கி அக்கையால் கோடு அசையாதபடி பிடிதீது இடக்கை நாலுவிரலும மாடகதீதை யுறப்பிடிதீதுச் செம்பகை யும ஆர்ப்பும கூடமும் அதிர்வுமாகிய பகைநீங்க முறைமையிற பிழை யாத நரம்பினுறை பதினலு நரம்பினையும உழைமுதற கைக்கிளையிறுவா யாக "மெலிவிற் கெல்லை மந்தக் குரலே" என்பதனுன் உழை

(பி - ம்.) † 'யியக்கிமுறை' ‡ 'தென்றிசைக்காணத்து'

சண்பக மாதவி தமாலங் கருமுகை
வெண்பூ மல்லிகை †வேரொடு மிடைந்த
அஞ்செங் கழுநீ ராயிதழ்க் கத்திகை
எதிர்பூஞ் செவ்வி ‡யிடைநிலத் தியாத்த
முதிர்பூந் தாழை முடங்கல்வெண் டோட்டு
விரைமலர் வாளியின வியனில மாண்ட
ஒருதனிச் செங்கோ லொருமக ஞூணையின்
ஒருமுக ¶மன்றி யுலகுதொழு திறைஞ்சும்
திருமுகம் போக்குஞ் செவ்விய ளாகி
$அலத்தகக் கொழுஞ்சே றஞ இ ||யயலது
பித்திகைக் கொழுமுகை யாணி கைக்கொண்டு
மன்னுயி ரெல்லா §மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனி லிளவர சாளன்
‡‡அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய

குரலான மந்தமுமம, "வலிவிற் கெலஅல வன்கைக் கிஞயே" என் பதனுற கைக்கிஞயிறுவாயான வலிவும இணைகிஞ பகை நடபின வழி களிலே பொருந்தப்பார்தீதுக் குரல் நரமபினையும் யாழிற்கு அகப்பட்ட நரமபாகிய இளி நரமபையும முறபட ஆராயநது இசையோர்தீது அதன் முறையே அல்லாத நரமபுகஞையும ஆராயநது இசையோரதீதுதீ தீதின் மையறிந்து உழை முதலாகவும உழையீருகவுமென மநதமுதலாகவும் மநதமீருகவும குரல் நரமபு மநதமானபோது குரல நரமபே முதலு முடிவுமாகவும் அகநிஅல மருதமும புறநிஅல மருதமும அருகியன் மருத மும பெருகியன் மருதமுமென நால்வகைச சாதிப் பெருமபண்கள் (பா) விஞநிலம பெற வலிவு மெலிவு சமமெனனும மூவகை இயக்கும முறை மையிலே ஆராயந்து பாடிப் பின்னர் மாதீதிரை குறைநததிற பண்ணைப் பாடு மேலவைக்கண் அபபண்ணை இனிதாகப்பாடி நெகிழ்வுறற மனதீ தினளாய் அயரநதாளெனவுமாம

45 தமாலம் - பச்சிஅல

47 கத்திகை - தொடைவிசேடம்

48 இடைநிலம - தொடைநடு

47-5. கத்திகையாகிய பூஞசெவ்வியில் இடையிடையிற் கட்டிதீ தொடுத்த தாழைதீதோட்டிலே

52 ஒருமுகமன்றி - ஒருதிக்கின்றி

52-3. உலகெலாந தொழும திருமுகமென்றது, காமஞணை யாதலால்

54. அலதீதகம் - அரதீதகம், சாதிலிங்கம். சேறு - குங்குமமும் அகிலும் தேய்தீத குழமபு

54-5 அதீதோடடுக்கு அயலதான பித்திகைமுகையதனை எழுதீ தாணியாகக் கொண்டு.

57 இளவரசாளன் - நெறிப்பட்டுச் செய்யாத ஒருவன்.

(பி - ம்) † 'விரியலொடு' ‡ 'யிடைநிலைத' ¶ 'மன்றியுமுலகு' $ 'அதீதகக்' || 'யல்லது' § 'மகிழ்துணைப் புணர்க்கும்' ‡‡ 'அந்தியம் போதகதீ'

திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்க டந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியி னல்லுயிர் கோடல்
இறும்பூ தன்றிஃ தறிந்தீ மின்னென
எண்ணெண் கலையு மிசைந்துடன் போகப்
பண்ணுந் திறனும் புறங்கூறு நாவில்
தளைவா யவிழ்ந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின் விரித்துரை யெழுதிப்
பசந்த மேனியள் படருறு மாலையின்
†வசந்த மாலையை வருகெனக் கூஉயத்
தூமலர் மாலையிற் றுணிபொரு ளெல்லாம்
‡கோவலற் களிதுக் கொணர்க வீங்கென
மாலை வாங்கிய ¶வேலரி நெடுங்கண்
கூல மறுகிற் கோவலற் களிப்பத்
திலகமு மளகமுஞ் சிறுகருஞ் சிலையும்
$குவளையுங் குமிழுங் கொவ்வையுங் கொண்ட
மாதர வாண்முகத்து மதைஇய நோக்கமொடு

---

59. செவ்வியனலலன் - கோடடமுடையான.
60 பொழுதிடைப்படுத்தல - கூடியிருக்கிற இல்லிலே புணர்ந்து ஊடல முதலாயினவறருன விடடிருத்தல
61. தணத்தல - நாடிடையிடடும காடிடையிட்டும் நீங்குதல
62 (பா) நறுமபூ வாளி நலலுயிர கோடல் —நறுமபூவாளி . எழு வாய்.
63. அறிநதீமின் - அறிமின்.
65 இவையிறறைப்பழிக்கும
66 தளைவாயவிழந்த - தளை கடடவிழ்ந்து குலைந்த , என்றது தன் வரைத்தன்ருதல்.
66-7 காமத்தையுடைய மழலை , விளையா மழலை - வெளிப்படா மழலை முறறு மழலையோடெழுதலாவது பேசிய பேசியெழுதுகை
(49) தாழைபபூந்தோடடிற (55) பித்திகைமுகையை எழுத்தாணி யாகக் கொண்டு (67) எழுதினுளென்க
68. படருறுமாலை - நினைவுகூரும் மாலைப்பொழுது.
69. வசநதமாலை சேடி
67-71 இத்தன்மையளாய் ஊடல தவிர்ந்து, கோவலனுக்கு ஓலை யும் தூதும விடுத்தாளெனக
72. நெடுங்கண் - வசந்தமாலை.

அடி, 67 . மணி 4 99 , கலித். 81 2.
அடி, 68 குறுந் 195 6. அடி, 76 குறுந் 286 . 5.
(பி - ம்) †‘வயந்த மாலை வருகெனக்’ ‡‘கோவலர்க் குணர்த்திக் கொணர்க’ ¶‘வேலெறி’ $‘குழையுங குமிழும்’

காதலிற் ரேன்றிய கண்கூடு வரியும்
புயல்சுமந்து †வருந்திப் பொழிகதிர் மதியத்துக்
கயலுலாய்த் திரிதருங் காமர் செவ்வியிற்
பாகுபொதி பவளந் திறந்துநிலா வுதவிய
நாகிள முத்தி னகைநலங் காட்டி
வருகென வந்து போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்
அந்தி மாலை வந்ததற் கிரங்கிச்
சிந்தைநோய் கூருமென் சிறுமை நோக்கிக்
கிளிபுரை கிளவியு மடவன நடையும்
களிமயிற் சாயலுங் கரந்தன ளாகிச்
செருவே னெடுங்கட் சிலதியர் கோலத்
தொருதனி வந்த வுள்வரி யாடலும்
சிலம்புவாய புலம்பவு மேகலை யார்ப்பவும்
‡கலம்பெரு நுசுப்பினள் காத னேக்கமொடு
திறதது வேரு யவென் சிறுமை ¶நோக்கியும்
புறத்துறின ருடிய புன்புற வரியும்
கோதையுங் குழலுந் தாதுசே ரளகமும்
ஒருகாழ் $முகதமுந் திருமுலைத் தடமும்
மின்னிடை §வருத்த நன்னுத ரேன்றிச்
சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி யுய்ப்பப்

---

77. கண்கூடுவரி - பிரதமதேசத்தில் நடித்த நடிப்பு, இஃது ஒருவர் கூடடவன்றித் தானே வந்து நிறகும நிலைமை.

82 - 3 அழைக்கவந்து போகச்சொலலிப் போகிய நடம், பல்காலும் வந்து காணுமபடி நடித்த நடம்.

85 - 9 வருத்தமறிந்து தன்வடிவு கரந்து சிலதியர் வடிவுடன் தமர் அறியாமல வநது நடித்த நடிபபு. உளவரி - வடிவுமறைத்தல்.

92. திறத்துவேருகிய சிறுமை . இவள் நீக்கத்து ஆறருமை கூறின தென்க.

93. புறவரி - இவனுடன் அணையாது வாயிறபுறம்பே நின்ருடிய நடிப்பு

96 தோன்றி - வந்தணுகாதே புறவாயிலிலே நின்று.

97. சிறுகுறுந்தொழிலியர் - சிலதியர். மறுமொழியுயப்ப - மறுமாறறம் சொல்ல.

(மேற்) 82 - 3 தக்க 240, உரை

(பி - ம்) †'வருந்தியபொழி' ‡'கலமபொரு' ¶'நோக்கிப், புறத்து' $'முத்தமுஞ் செழுமுலைத்' §'வருந்த'

புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு †கிளவியின்
இருபுற மொழிப்பொருள் கேடடன ளாகித்
தளர்ந்த சாயற் றகைமென் கூந்தல்
கிளர்ந்துவே ருகிய கிளர்வரிக் கோலமும்
பிரிந்துறை ‡காலத்துப் பரிந்தன ளாகி
என்னுறு ¶கிளைகட்குத் தன்னுறு துயரம்
தேர்ந்துதேர்ந் துரைத்த தேர்சசிவரி யன்றியும்
§வண்டலர் கோதை மாலையுண் மயங்கிக்
கண்டவர்க் குரைத்த காட்சி ||வரியும்
அடுத்தடுத் தவர்முன் மயங்கிய மயக்கம்
எடுத்தவர் தீர்த்த வெடுத்துக்கோள் வரியும்
ஆடன் மகளே யாதலி னுயிழை
பாடுபெற் றனவப் பைந்தொடி தனக்கென
அணித்தோட்டுத் திருமுகத் தாயிழை யெழுதிய
மணித்தோட்டுத் திருமுக மறுத்ததற் கிரங்கி
வாடிய வுள்ளத்து வசந்த $மாலை

98 - 101 புணரச்சி நிமித்தமாகப் புலநது தன் சிலதியர்க்குச் சொல்லிவிடட வார்த்தையைக் கேடடு அப்படியனறிப் புலந்து சொன்னே னுகக் கொண்டு தான நடித்துப்போன நடம

103 - 4 தேர்ச்சிவரியாவது - தன்னுறவுமுறையார்க்குத் தன் வித னங்களை விசாரித்துச்சொன்ன நடம்.

106. கண்டவர்க்கு - கண்டவரெல்லார்க்கும, உரைத்தல் - தன் விதனத்தைச் சொலலுதல் காட்சிவரியாவது - தன் வருத்தம பலருங காணுமபடி நடித்த நடம.

108. எடுத்துக்கோள்வரியாவது - கையறவெய்தி வீழநதாளாக வீழ்ந்து பிறர் எடுத்துக்கொளளுமபடி நடித்த நடம்.

77 - 108 "வரியெனப்படுவது நெறித்தே", "அவறறுள், கண்கூடென்பது தன்மைத்தெனப", "காண்வரியென்பது தன் மையதாகும்", "உள்வரியெனபது . . அடுதறகுரித்தே", "புறவரி யென்பது . . . . .விடைபெறுவதுவே", "கிளர்வரியென்பது நிறப துவே", "தேர்சசியென்பது தேர்ச்சிவரியாகும", "காட்சி வரி யென்பது .. பரிந்து நிறபதுவே", "எடுத்துக்கோளை. எடுத்துக் கோளே"

வரியென்றது நடத்தை

109 (பா) மகளை ஐ இடைச்சொல். ஆயிழையென்றது கூனியை, இவள் வசந்தமாலை, அண்மைவிளி

(பி - ம்) †'கிளவி, யிருபுறம்' ‡'காலத்தும' ¶'கிளைஞர்க்குத்' §'வண்டமர் கோதை' ||'வரியன்றியு, மடுத்தடுத்' $'மாலையுந், தோடலர்'

தோடலர் கோதைக்குத் துணைந்துசென் றுரைப்ப
115 மாலை வாரா ராயினு மாணிழை
காலைகாண் குவமெனக் கையறு நெஞ்சமொடு
பூமல ரமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென்.

வெண்பா

(1) செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
† மைந்தா ரசோக மடலவிழக்—கொந்தார்
இளவேனல் வந்ததா லென்னுங்கொ லின்று
வளவேனற் கண்ணி மனம்

(2) ஊடினீ ரெல்லா முருவிலான் றன்னுணை
‡ கூடுமி னென்று குயில்சாற்ற—நீடிய
வேனற்பா ணிக்கலந்தாண் மென்பூந் திருமுகத்தைக்
கானற்பா ணிக்கலந்தாய் காண்

---

117. பொருந்தாது - கூடாது

(18) வேனிறபள்ளியேறி (23) யாழ் கைவாங்கி (24) மயங்கி (48) மாலையின் நடுவு வைத்துத் தொடுத்த (49) தாழைப்பூந்தோட்டிலே (67) எழுதி (69) அமமாலையை வசந்தமாலை கைக்கொடுத்து (71) அவனைக் கொண்டு வருகவென, (72) அவள் (73) சென்று கொடுத்துழி, கோவலன் வரியைப பாராட்டி இப்பண் (110) பாடுபெறறனவென்று சொல்லக்கேட்டு (112) இரங்கிச் (114) சென்றுரைப்ப (115) வாராராயினும (116) காலை காண்போமெனச்செயலறறுப் (117) பாயலிற் பொருந்தாது வதிந்தனளெனக் கூட்டுக.

(1) மைநது - அழகு கொத்து, கொந்தென மெலிந்தது

இது கூனி ஓலைகொண்டு செல்லுகின்ற காலத்துத் தன்னுள்ளே சொல்லியது, கோவலனுக்கு அவள் சொல்லியதாஉமாம

(2) இக்காதையில் அவள் செய்த படியைக் கோவலனுக்கறிவிக்கின்றாள் —

சாறற நீடிய கானலிற் பாட்டிலே வருந்தினுய், இதனைக்காணென்று கோவலன் கையில் ஓலையை நீட்டினாள்.

---

(1) வேனல் - வேனில், சீவக 2382, 2578 (2) ஒப்பு நற். 224 4-6, 243, கலித் 92. 61-2.

(மேற்) 115-6 சீவக. 683, ந. பாடல், (2) எல்லாமென்பது, சிறு பான்மை முன்னிலைக்கண் வருமென்பதறகு இது மேற்கோள், தொல். பெயர். 33, ந, இ - வி. 191, உரை.

(பி - ம்.) † 'மந்தாரசோக' ‡ 'கூடிநீரென்று'

1 - 2. நெடியோன் குன்றமும் புனனன்ஞட்டு

நெடியோன் குன்றம் - வேங்கடமலை தொடியோள் - பெண்பாற் பெயராற குமரி யென்பதாயிற்று, ஆகவே தென்பாறகண்ணதோர் ஆறறிறகுப பெயராம். ஆனுல், நெடியோன் குன்றமும தொடியோள் நதியுமெனனுது பௌவமுமெனறது என்னையெனின், முதலாழியிறுதிக் கண் தென் மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனுரும் இறையனுரும் குமரவேளும் † முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும என்றிவருள்ளிடட நாலாயிரத்து நானூறறு நாற் பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முது குருகும் களரியாவிரையும உளளிடடவறறைப புனநது தெரிநது நாலாயிரத்து நானூறறு நாறபதிறறியாண்டு [1] இரீயினுர் காய்சின வழுதி முதற கடுங்கோனீருளளார் எண்பத்தொன்பதின்மர், அவருட் கவியரங்கேறினுர் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமா கீர்த்தியனுகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலபபடுத்து [1] இரீயினுன அக்காலத்து அவர நாடடுத் தென்பாலி முகத்திறகு வடவெலலையாகிய பஃறுளி யென்னுமாறறிற்கும குமரி யென்னுமாறறிறகுமிடையே எழுநூறறுக் காவதவாறும இவறறின் நீர் மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ்மதுரை நாடும ஏழ் முனபாலை நாடும ஏழ் பின்பாலை நாடும் ஏழ்குன்ற நாடும ஏழ்குண காரை நாடும ஏழ்குறுமபனை நாடுமென்னும இநத நாறபதிதொன்பது நாடும குமரி கொலல முதலிய பன்மலை நாடும காடும நதியும பதியும தடநீரக் குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண் டொழிதலாற குமரியாகிய பௌவமெனறுரைனறுணரக இஃது என்னை பெறுமாறெனின், "வடிவே லெறிநத வான்பகை பொருது, பஃறுளி யாறறுடன பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொளள" (11. 18-20) என்பதனுலும, கணக்காயனுர் மகனுர் நக் கீரனுருரைத்த இறையனுர் பொருளுரையானும, உரையாசிரிய ராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும, பிறவாறருனும பெறு தும் அஃது அறறுக, வடக்கின்கண் வேங்கடமலை தெறகினகட குமரிக் கடலெனக் குறியாற கூறினவர் கீழபான் மேல்பாறகு எலலை கூருதது என்னையோ வெனின, நெடுந் திசையாகிய வடபாறகெல்லை குன்றமென றும் தென்பாற் கெல்லை குமரிப் பௌவமென்றும கூறினமையான் ஒழிந்த திசைகட்கு ஒழிந்த பௌவம எல்லை யென்பதாயிறறு, என்னை? "வேங் கடங் குமரி தீமபுனற பௌவமென், றிந்நான் கெல்லை தமிழது வழக்கே" என்ருர் சிகண்டியாரு மாகலின் அன்றியும [2] வடதிசைக்கண் வடு கொழிநத திரிபுடை மொழி பலவுளவாகலான் மலையெல்லை கூறி ஒழிந்த திசை மூன்றிறகும் திரிபின்மையாற கடலெல்லை கூறினுரெனினும் அமையும.

(இ - ள்) வடக்கின்கண் வேங்கட மலையும் தெற்கின்கட் குமரிக்கட லும் கிழக்கின்கண்ணும் மேற்கின்கண்ணும ஒழிநத கடல்களுமே தமிழ் நாட்டிறகு எல்லையென்று கூறுபடுத்த மூவேநதருடைய குளிரநத புனலை யுடைய நல்ல நாடடிடதெனக.

---

[1] இரீயினுர், பிறவினை. [2] "வடதிசை மருங்கின் வடுகு வரமபாக" (சிறுகாக்கைபாடினியம்.) (பி - ம்.) † 'முரிஞ்சியூர்'

3 - 7 மாட மதுரையும் வந்த திவணைன

இந்த நகரம் நான்கிற்கும் மாடமுதலிய நான்கும் அடை.

(இ - ள்) மதுரையும உறந்தையும் வஞ்சியும் புகாருமென்னும் நான்கு நகரிறகும அரசனுய்த் தன் தேரும் புரவியும் யானையும சேனையும் இச்சொன்னமுறையே வைத்து வீறறிருந்த புகழமைந்த சிறப்பினை யுடைய மாரனுகிய மன்னனுக்கு மனமகிழநதுணையாகிய இன்பதைதத் தரும இளவேனிலென்னும இளவரசன் இப்பொழுது இங்கே வந்துவிட்டா னென்றென்க

வந்தது வருமென்னும எதிர்காலதைதை இறந்தகாலதைதாற் கூறினுர்: விரைவு, என்னை? "வாராக் காலதைதது நிகழுங் காலதைதும, ஓராங்கு வரூஉம விணைச்சொற கிளவி, இறநத காலதைதுக் குறிபபொடு கிளதைதல், விரைநத பொருள வென்மனுர் புலவர்" (தொல் விினை. 44) எனறராக லின இஃது என் சொலலியவாறேனின, காமனுக்குத்தேர் தென்ற லும், புரவி கிள்ளையும, யானை அநதியும, [1]சேனை மகளிருமாதலால் தேர் தென்னர்காவலும, புரவி கிள்ளிகாவலும, யானை சேரமான்காவலுமாக் கிதி தானும தன்சேனையும புகாரில வீறறிருந்தானென்பது கருதித்து. அஃது, "உருவி லாள ளெருபெருளு சேனை, இகலமராடடி யெதிர்நின்று விலக்கி" (5 224-5) என்பதனுனும, "மகர வெல்கொடி மைந்தன் சேனை, புகரறு கோலங கொளளு மென்பதுபோல" (8 10-11) என மேறகூறுத லானுமுணர்க "திண்பரிதி தென்றலந் தேருந தார்புனை, வண்பரிக் கிளையு மாலை யானையும், கண்கடைப் படுகொலைக் காமர் சேனையும, எண் படப் புகுநதன னிரதி காந்தனே" என்ருர் பிறருமெனக்கொள்க

8 - 13 வளங்கெழு பொதியில் பணிமொழி கூற

(இ - ள்) வளமைபொருந்திய பொதியதைது முனிபயந்த இளங்கா லாகிய தூதன குயிலோனுக்கு இசைதைதனுதலானே காமன் சேனையா யுள்ளா ரெலலாம் கோலங்கொண்மினென்னும பொருள்பயப்பப் பூங் கொடிகள் மிடைநத சோலையென்னும பாசறையிலிருக்கும அக்குயிலோ னென்னும் சின்னமூதி காறறூதன் தனக்குப பணிதைத மொழியைச் சேனைக்குக் கூறவென்க.

இளங்காறறூதன் - தென்றலாகிய தூதன், இளைய காற்றூதனென்று மாயிறறு, [2] காறறூதன் - ஓடடன சேனை - மகளிர் கோலங்கோடல் - அக்காலதைதிறகேறபனவுடைதைது முடிதைதுப் பூசிப் பூணுதல், போர்க்கோல மென்றுமாயிறறு படையுள் படுவோன - சினனமூதி, "சேனையுள் படு நரை யாணையி னேவி" என்ருர் கதையிலும பணிமொழி - காறறூதன் பணிதைதமொழி, பணிதைதல் - அருளிசசெயதல, திசைசசொல், "மண்ட லமேபணியாய" (திருச்சிற். 117) என்பதுபோல, பணிவிடையென்னும வழக்குமது

14 - 8. மடலவிழ் கானல் பள்ளியேறி

(இ - ள்) கடலாட்டாகிய விளையாட்டின்கண்ணே மடலவிழுங்கான லிடதைதுக்கோவலனுெடு ஊடுதலாலே தமியளாய்த் தன்மனையிறபுக்க கரிய

---

[1] சீவக. 458. [2] காற்றூதன் : 26 : 250.

மலர்போலும் நெடிய கண்ணையுடைய மாதவி அதற்கு விருமபிப் பருவதத் திறகுப் பொருநத வானிலேயுறவுயர்ந்த மேனிலையில் ஒருபக்கத்து நிலா முறறத்தே யேறியென்க.

விளையாட்டினுளென்றார், 'விளையாட்டுப்பூசல் விளையாயிற்று' என்னும் வழக்குப்பறறி.

18 - 22 மாணிழை கையுறையேந்தி

(இ - ள) அந்த மாடசிமைப்படட இழையினையுடையாள் முதீதும் சந்தும அக்காலத்திறகு எப்பொழுதும தான கடனுக இடக்கடவ திறையாகலான் முன்சென்ற பினபனிக்காலத்திற குங்குமத்தால அலங்கரிக்கப்படட முலைமுறறமாகிய பரபபிலே அமமுத்தையும சநதையும கையுறையாக ஏந்தி யெனக.

கையுறை - காணிக்கை ஏநதியெனவே பூண்டும் பூசியுமென்பதாயிற்று காணிக்கை காடடுவார் காண்பாரமுனறிலிறகொணரநது காடடுவாராகலிற கொணகைமுனறிலில ஏநதியெனறார முலைக்குமுறறம மார்பு.

23 - 6 அதிரா மரபின் இருக்கைய ளாகி

(இ - ள்) மாதவி பணிமொழிகூற, அதறகு விருமபி ஏறிப்பூண்டு பூசி ஒன்பது வகைபபடட இருபபினுள முகறகணணதாகிய பதுமாசன மென்னும ஆசனத்திருநது கோவை கலஙகாமரபினையுடைய யாழைக் கையில வாஙகிக் கண்டதீதால் முந்துற மதுரகீதமாகப்பாடி அதுமயங்கிக் கலதீதாற பாடதீதொடஙகினவளெனக

இதனுள விருத்தியென்பது இருப்பு **ஓவியநூலுள்,** நிறறல் இருத்தல் கிடதீதல் இயங்குதலெனனும இவறறின விகறபக்கள பலவுள, அவறறுள, இருத்தல —திரிதரவுடையனவும திரிதரவிலலனவுமென இரு பகுதிய, அவறறுள திரிதரவுடையன —யானை தேர் புரவி பூனைமுதலியன, திரிதர வில்லன ஒன்பது வகைப்படும் அவை —பதுமுகம, உற்கடடிதம, ஒப்படி யிருக்கை, சமபுடம, அயமுகம, சுவதீதிகம, தனிப்புடம, மண்டிலம, ஏகபாதம எனவிவை, எனனை? 'பதுமுக முறகட்டிதமே யொப்படி, இருக்கை சமபுட மயமுகஞ் சுவதீதிகம, தனிப்புட மண்டில மேகபாதம, உளப்பட வொன்பது மாகும, திரிதர வில்லா விருக்கை யெனப" என்றாராகலானும, "பனனுள கழிநத பின்னர் முனனுள, எண்மெய்ப பாடடினு ளிரக்கமெயந நிறீஇ, ஒண்விளை யோவியர் கண்ணிய விருத்தியுள், தலையத னுமபர்தீ தான்குறிக் கொண்ட, பாவை நோக்கத் தாரணங் கெயதி" (1 35 . 44-8) எனப் **பெருங்கதையுட்** கூறினமையானுங் கொள்க.

இனி **நாடக நூலார்** இவவிருப்பை ஐமபதென விரிவரையறையாற் கூறிதீ தொகை வரையறை கூறுவார் அவறறை ஒன்பதின் அடக்கினரென வுணர்க, என்னை? "ஆதிப்பா விருத்தி யைமபதிற புலவோர், ஒதிக் கொண்டன ரொன்பான் விருத்தி" என்றாராகலின்

அவறறுள், **தலைக்கண்விருத்தியாவது** - பதுமாசனம இதனுற் சொல்லியது, அதிராமரபினையுடைய யாழைக் கையின்வாஙகிப் பதுமாசனமாக இருந்தவள் தனக்கு நாயகனின்மையால் தியாதநாயகனுக

மானததீதால் நோக்கி எதிர்முகமாகவிருந்து வாசிததலைக் கருதினு ளென்பது என்னை? "முதறக னெதிர்முக நோக்கி நயதீதக, ஒருவ ஞகிய தோறறமும" என்றுராகலின்

யாழ்வாசிக்குமுறையை, "நலிசை மடந்தை நல்லெழில் காட்டி, அல்லியம பங்கயத் தயனினி நு படைதீத, தெயவஞ் சா ற தீருசுவை நலயாழ், மெயபெற வணங்கி மேலொடு கீழபுணரத், திருகையின் வாங்கி யிடவயி னிரீஇ, மருவிய வினய மாடடுதல கடனை" என்பதனுனறிக, வினயம - தேவபாணி

27 - 8 வலக்கைப் பதாகை மாடகந் தூீஇ

(இ - ள்) வலக்கையைப பதாகையாகக கோடடின்மிசையே வைதீது இடககைநாலவிரலால மாடகதீதைத் தழுவியென்க.

பதாகைக்கைடாவது பெருவிரலகுஞ்சித்து ஒழிந்த விரலெல்லாம் நிமிரதீதல, என்னை? "எலலா விரலு நிமிரதீதியினறிப், பெருவிரல் குஞசிதீதல பதாகை யாகும" எனறுராகலின மாடகம - வீக்குங்கருவி. அது முனனர் ஆணியெனபதனுட (7 1) கூறினும

29 - 30 செம்பகை யார்ப்பே விரகுளி யறிந்து

செம்பகை ஆரப்ப கூடம அதிரவென்னு நான்கினும செமபகை தாழநதவிசை = ஙனபமினறியிசைதீதல, ஆரபபு மாதீதிரையிறநத சுருதி = ஓங்க விசைதீதல, கூடம இசைநிறவாதது = தன பகையாகிய ஆருநரமபினிசையிற குனறிதீ தனஞைசை மழுங்கல, அதிர்வு நரமபைச் சிதறவுநதலெனக கொளக. இதனை, "இன்னிசை வழிய தன்றி யிசைதீ தலசெம பகையதாகும, சொனனமாத் திரையி னுங்க விசைதீகிடுஞ சுருதி யாரப்பே, மனனிய விசைவ ராது மழுங்குதல கூட மாகும, நன்னுதால சிதற வுநத லதிரவென நாடடி னுரே" எனபதனுற்கொளக, இது பஞ்சபாரதீயம்

அன்றி, [1] "செமபகை யென்பது பண்ணை டுளரா, இன்பமி லோசை யென்மனுர் புலவர", "ஆர்ப்பெனப் படுவ தளவிறந திசைக்கும", "கூட மென்பது குறியுற விளமபின, வாயவதின் வராது மழுங்கியிசைப் பதுவே", "அதிரவெனப் படுவ திழுமென லின்றிச, சிதறி யுரைக்குந ருச்சரிப் பிசையே" எனக் கூறினுருமூளர இவைநானகும மரக்குறறதீ தாற பிறக்கும, என்னை? "நீரிலே நிறற லழுகுதல வேத னிலமயக்குப், பாரிலே நிறற லிடிவீழத னுயமரப் பாறபடலகோ, ணேரிலே செமபகை யாரப்பொடு கூட மதிர்வுநிறறல், சேரினேர் பண்க ணிறமயக் குபபடுஞ் சிறறிடையே" என்றுர்.

(இ - ள்) இசசொலலப்பட்ட பகைநரம்பு நான்கும் புகாமல் நீக்கும் விரகைக் கடைபபிடிதீதறிநதென்க

31 - 2 பிழையா மரபின் இறுவாய்க் கட்டி

(இ - ள்) மயங்காமரபினையுடைய இப்பதினறகோவையாகிய சகோட யாழை உழைகுரலாகக கைக்கிளை தாரமாகக் கடடியெனக

---

[1] சீவச 716 - 9, ந மேற.

இக்குரன்முதலேழினும் முன் தோன்றியது தாரம்; "தாரத்துட் டோன்று முழையுழை யுடடோன்றும், ஒருங் குரல்குரலி னுட்டோன்றிச் - சேருமிளி, உடடோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட், கைக்கிளை தோன்றும பிறப்பு" என்பதனால, தாரத்தில முதற்பிறப்பதாகிய உழை குரலாய்க் கைக்கிளை தாரமாகிய கோடிப்பாலை முதறபிறக்கக் கடடி யெனக.

33 - 4 இணைகிளை எய்த நோக்கி

இணை கிளை பகை நட்பென்று சொலலப்படட நான்கினும், இணை - இரண்டு நரமபு, என்னை? "இணையெனப் படுவ கீழு மேலும, அணையத் தோன்று மளவின வென்ப"

கிளை - ஐநதுநரமபு, என்னை? "கிளையெனப் படுவ கிளக்குங் காலைக், குரலே யிளியே துத்தம விளரி, கைக்கிளை யெனவைந தாகு மென்ப"

பகை - ஆறும மூன்றும், "நின்ற நரமபிற காறு மூன்றும், சென்று பெற நிறபது கூட மாகும" கூடமெனினும பகையெனினுமொக்கும

நட்பு - † நாலுநரம்பு .

(இ - ள்) இந்நான்கனுள் இசைபுணருங்குறிநிலையைப் பொருந்த நோக்கி யென்க.

35. குரல்வா யிளிவாய்க் கேட்டனள்

(இ - ள்) குரல்முதலாக எடுத்து இளிகுரலாக வாசித்தாளென்க.

இனி வட்டப்பாலை இடமுறைத்திரிபு கூறுகின்றார் "குன்றுக் குரற் பாதி தாரத்தி லொன்று, நடுவ ணிணைகிளை யாக்கிக் - கொடியிடையாய், தாரத்தி லொன்று விளரிமே லேறடவந், நேரத் ததுகுரலா நின்று" என்-னின், உழை குரலாகிய கோடிப்பாலைநிறக இடமுறைதிரியுடமிடத் துக் குரல்குரலாயது செமபாலை, இதனில்ல குரலிறபாதியும தாரத்தி லொன்றும் இரண்டின் அநதரத்திலே கிளையாக்கித் தாரத்திலேநினற ஓரலகை விளரியின்மேலேறட விளரிகுரலாய்ப் படுமலைபபாலையாம. இமமுறையே துத்தம குரலாயது செவவழிப்பாலையாம ‡ இளி குரலாயது அரும்பாலையாம கைக்கிளை குரலாயது மேறசெமபாலையாம. தாரம குரலாயது விளரிப் பாலையாம என அநதரமைநது நீக்கி உறழந்து கண்டுகொள்க இவவிடத்தில் தாரநரமபின் அந்தரக்கோலத் தார மெனறது, "தன்னமுந தாரமுந தன்வழிப் படர" என்னும் சூத்திர விதியானெனக இவவேழு பெருமை பாலையினையும முதலடுத்து நூறறு மூன்று பண்ணும் பிறகும, அவறறுள் செமபாலையுட பிறக்கும பண்கள் —பாலையாழ், நாகராகம், ஆகரி, தோடி, கௌடி, காநதாரம, செநதுருத்தி, உதயகிரியெனவிவை. பிறவும விரிப்பின் உரைபெருகு மாதலின் அவற்றை வந்தவழிக்கண்டுகொள்க. "நாற்பெரும் பண்ணுஞ் சாதி நான்கும, பாறபடு திறனும பண்ணெனப் படுமே" என்றார்.

(பி - ம்) † 'நாலாநரமபு, கிளை ஐந்தாநரம்பு, பகை ஆருநரம்பு' ‡ 'விளரிகுரலாயது'

35-6. அன்றியும் ஏழினும்

(இ - ள்.) அங்ஙனம் இளிகுரலாக வாசித்தலேயன்றி முற்கூறிய வகையே ஐந்து நரம்பானமுறைமையின் ஏழுநரமபுமம வாசித்தாளென்ற வாறு.

37-41 உழைமுத லாகவும் நலம்பெற நோக்கி

உழை குரன்முதல் உழை குரலீருவுள்ள நான்கிறகும் அகநிலைமருத முதறபெருகியன்மருதம ாருகவுளள நான்கும நிரனிறை

(இ - ள்) முன் அணிநதமுறையே உழைகுரலாய கோடிப்பாலை அகநிலை மருதமாகவும், உழைகுரலாயக் கைக்கிளைகுரலாய மேறசெம் பாலை புறநிலை மருதமாகவும், குரலகுரலாய செமபாலை அருகியன மருத மாகவும, குரலதாரமாயத் தாரஙகுரலாய விளரிப்பாலை பெருகியன மருத மாகவும இச்சொலலப்பட்ட சாதிப் பெருமபண்ணையும ஓசையினிமை பெற நோக்கி யென்றவாறு.

42 மூவகை யியக்கமு முறையுளிக் கழிப்பி

(இ - ள்) வலிவும மெலிவும் சமனுமென்னும மூவகைப்படட சுருதி யும் நிறகுநிலைமையிலே நிறுத்தி முறையானே அத்தொழிலக்கழித் தென்க

43-4 திறத்து வழிப்படூஉம் பூங்கொடி மயங்கி

(இ - ள்) திறஙகடகுப் பிறப்பிடமாயுள்ள இச்சாதிப்பெரும்பண் களுட் புறநிலைமருதப்பண்ணை வாசித்தலிலே மயங்கியென்க

அன்றி அத்திறங்களுட் புறநீர்மையென்னும் திறத்தில் மயங்கி யென்றுமாம

45-71 சண்பக மாதவி கொணர்க வீங்கென

(இ - ள்) அங்ஙனம் கண்டத்தினும் கலத்தினுமயஙகிய மாதவி யாகிய பூங்கொடி பசந்த மேனியளாய நறிய வாளியாலே பெரியநிலமுழு தையும் ஆண்ட ஒபபிலலாத தனிச்செங்கோலையுடைய ஒருவனுகிய காம ராசனுணையாலே ஒரு முகமன்றி உலகமெல்லாம எதிரகொணடு தொழு திறைஞசப்படும அவன் திருமுகத்தைப் போகவிடக்கடவோமென்னும நினைவாற பிறந்த செவ்வியையுடையளாகிச சண்பகமுகுலியவறருல் நெருஙகத் தொடுத்த பூவின் மணமாறுபடும செவவியையுடைய மாலையி னிடையே தொடுத்த செவ்வி எதிரகொளளமுதிரநத தாழைப்பூவினது மூடகஙகத்தையுடைய வெளளியதோடடிலே அதறகு அயலதாகியதோர பித்திகையினது கொழுவிய முகையாகிய எழுத்தாணியைக் கையில வாங்கிக்கொண்டு அதனைச் செமபஞ்சின் குழமபில் தோய்த்து உதறி எழுதுகின்றவள உலகின்மிக்க உயிர்பபன்மைகளைத் தாம மகிழுந்துணை யோடு புணரவிக்கும இனிய இளவேனிலென்பான் இளவரசன், ஆத லால் நெறிப்படச்செய்யான், அவனேயன்றியும, அநதிபபொழுதின் கண்ணே அருமபுகின்ற விரகவிதனத்தின் மேலே வந்துதோன்றிய திங்க ளாகிய செல்வனும் இன்றுண்டான பண்பன்றிப் பிறப்பினும் கோட்ட

முடையன், ஆதலாற் புணர்ந்தோர் இடைப்படுப்பினும் தணந்தோர் மறப்பினும் நறிய பூவாளியாலே இன்ப நுகருமுயிரைக் கொண்டுவிடுதல் அவற்குப் புதியதொன்றன்று, இதனை அறிமினென்றுகொண்டு அறுபதீதுநாலவகைக் கலைகளும வழிபடடுப் புகழநதொழுக அவறறுட பண்களும திறங்களுமாகிய அவை புறங்கூறபபடுநாவில முறறுத மழலைச் சொல்லோடே அப்பாசுரத்தைப் பேசிபபேசி யெழுதி நினைவுமிகும் மாலைக்காலதீதே வசநதமாலையை வருகவெனவழைதீது இமமாலையி லெழுதிய பொருளையெலலாம கோவலறகேறபச சொல்லி இப்பொழுதே இஙகே கொணரவாயாக வெனருளென்க.

தமாலம - பசசிலை. கருமுகை - பிதீதிகை. கதீதிகை - தொடை விசேடம இடைநிலம - தொடைநடு தாழைமுடங்கல் இருபெயரொடடுமாம போக்கும - போகவிடும செவவி - மஞ்ஞைதமுமாம அலதீதகச் சேறு - செமபஞசுக்களி

[1] திங்கட்செல்வன "கால முலகம்" (தொல் கிளவி 58) என்னுஞ் சூதீதிரதீதுள ஞாயிறு திங்களென்பன உயரதிணைமேலனவாயப் பால் பிரிநதிசையாவெனவும, "நினருங கிசைதீத லிவணியல் பின்று" (தொல் கிளவி 59) எனவே நின்றமுறையானே ரறுபெறறுநின்று உயரதிணையாயிசைதீதல் சிவணியலபினறெனவுங கூறிய ஆசிரியர், "இசைதீதலு முரிய வேறிடதீ தான" (தொல் கிளவி 60) எனக கால முதலாகியசொல உயரதிணையாயிசைதீதலுமுரிய, ரறுதிரிநது வாயபாடு வேறுபடடவழி யெனருராகலின், இதுவும ரறுதிரிநது திங்கடசெல்வனென்ருயிறறெனக மேலும இவவாறு வருவனவறறிறகும இவ்விதி கொளக. திங்களாகிய செலவனெனப பணபொடடுவிரிக்க.

செவவியனலலன செமமை - நடுவுநிலமை, "செவ்வியான் கேடும" (குறள, 169) எனவும, "செவவிய ரல்லார" (நாலடி 323) எனவும கூறினமையின் பொழுதிடைப படுப்பினும - சிறிதுபொழுதை இடையே பயமினருகக் கழிபபினும, எனறது ஊடல நீடடிபபினுமெனற படி. தணதீதல் - ஒதன முதலியவற ரறசெனறு குறிதீதுககூறும பருவம் பொயதீதல். வாளியின இன, ஆன், உருபுமயக்கம நலலுயிர் - காம வின்பதீதை நுகருமுயிர. இறுமபூது - புதுமை அறிநதீமின - அறிமின, பகுதிபபொருள விகுதி புறங்கூறுநா - புறங்கூறுதறகுக் காரணமான நா, புறங்கூறறு - நிகரலலார தம பொருமையான அவரிலவழி இகழ்ந்து கூறுபவாகலின இவையுங்கூறின, இவறறைப பழிக்குநாவெனவுமாம. தலைவாயவிழ்நத - கடடுக்குலைநத, எனறது தன்வரைதீதன்ருகல், என்னை? "பஞசிறை கொண்ட பைமபொற கலபுறஞ சூழ வைதீது, நஞசிறை கொண்ட நாகப் படமபழிதீ தகன்ற வல்குல, வெஞசிறைப பளளி யாக யிழுமலைதீ தடதீது வைகதீ, தஞசிறைப் படுகக லாதார தம்பரி வொழிக வென்ருள" (சீவக 1538) என்ருர் பிறரும தனிப்படுகாமம - சிறந்தாரக்கும உரைக்க லாவதனருய் அரிதாய அகதீதே சுடடுருக்குங்காமம. விளைதல் - முறறுதல. மழலையின் - மழலையோடே. படருறுமாலை - நினைவுமிகுமாலை, படர் - துனபமுமாம. துணிபொருள் -† மறதீதலால் வருந்தண்டம, திரு

---

[1] சிலப். 4 4

(பி - ம்.) †'இறுதீதலால்'

வாணிகக்கு மேலாய ஆணை இல்லையென்பது வழக்கு. அளித்து - இனிமையாற கொடுத்து, "உணர்த்தியு மண்ட மாணையி னிறைஞசும" என்ப கத்திகையிடைநிலத்தில் யாத்த தாழைவெண்டோட்டின் எழுதியென்க துணிபொருளென்பதறகுத் தீரநதபொருளெனினும அமையும. அளிக்கவென்ஞது அளித்துக்கொணர்கவெனருள, இது காமன் திருமுக மாதலானும முன்னம இவன பிரிவது அறியாமையானுமெனக் கொளக. இனி இவவாறன்றி அநதிபபோதகமெனபதனை யாணையாக்கி அதன புறக் கழுத்தில தோன்றிய திங்களெனிற பிறையாம, ஆகவே **நாடுகாண் காதையுள** "வைகறையாமத்து, மீனறிகழ விசுமபின் வெண்மதி நீங்கக், காரிரு ணினற கடைநாட கங்குல, ஊழவினை கடைஇ யுள்ளந் துரபப நெடுங்கடை கழிந்து" (10 1-8) எனபதனுற பூரூவபக்கத்துப் பதினைலாம பக்கமாதலான அதனோடும, "ஆடித் திங்கட பேரிருட் பக்கத், தழலசேர் குடடத் தடடமி ஞானறு, வெளளி வாரத் தொளளெரி யுண்ண, உரைசான மதுரையோ டரைசுகே டுறுமெனும, உரையு முண்டு" (23, 132-6) எனபதனோடும பிறவறறோடும மாறுகொளளு மாதலான அவவாறு கூறுதல பொருநதாதென வுணர்க இனி இவ் விழாவின் முதலும முடிவும கடலாடடும புலவியும புறபபாடும வதிச் செலவும பொறையுயிரத்திருபபும நிறைபதிப்புகலும தீதுறுநாளும ஊரதீபபாடும முதனடுவிறுதியாகக் **கட்டுரைகாதையுள விரியக் கூறுவாம**, அதனுட கண்டுகொளக இனி இதன பிறபபை இகழநது கூறுவாள், தநதை தாயரிடஙகனறி அலிநதனமையதாகிய மாலையெனனும யாணையின பிடரிற பிறநத செலவனெனருளெனினும அமையும. செவ்வியனலலன் - புணரநதாரக்கும பிரிநதாரக்கும ஒரு தனமையனலலனெனினும அமையும

பூங்கொடி இருகையளாகிச சேர்த்தித் தழீஇ அறிந்து கட்டி நோக்கிக கேடடனள, கேடடு நோக்கி இயக்கிக் கழிபபி மயஙகிச் செவ்வியளாகி அணைஇக் கைகொண்டு எழுதிக் கூடைய அளித்துக் கொணரக ணஙகென்ருளென வினை முடிக்க

72 - 3 மாலை வாங்கிய கோவலற் களிப்ப

(இ - ள்) இஙஙனம் மாதவி கூற அமமாலையை வாங்கிய வசநத மாலை போய எண்வகைக் கூலங்கள செறிநத மறுகினையுடைய கோவலனைக் கண்டு அவனுக்கு அம்மாலையைக கொடுப்பவெனக

போயெனவும் கண்டெனவும வருவிகக

74 - 7. திலகமு மளகமும் கண்கூடு வரியும்

இனிக் குரவையும வரியுமென்னுமிரணடனுள், வரிகூறுவார அதனை இவள் தொழிலாகச் சாரதீதிக் கூறுகினருர —

வரியாவது - அவரவர் பிறந்த நிலத்தன்மையும பிறப்பிறகேற்ற தொழிறறனமையும தோனற நடிதீதல, எனனை? "வரியெனப்படுவது . . வழஙகல" எனருராகலின

அவ்வரி [1] எட்டு வகைப்படும —கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காடசிவரி, எடுதீதுக்கோளவரியென; என்னை? "கண்கூடு நெறிதீதே" என்பவாகலின,

---

[1] சிலப். 3 . 13, 14 . 150, அடியார்.

அவற்றுட் கண்கூடாவது பிரியதரிசனம், அஃதாவது காட்சி; அஃது ஒருவர் கூட்டவன்றித் தானே வந்து நிறகும் நிலைமை, என்னை? "கண்கூ டென்பது கருதுங் காலை, இசைப்ப வாராது தானே வந்து, தலைப்பெயது நிறகுந் தன்மைத் தென்ப" என்ருராகலின்.

(இ - ள்) சிலை முதலியவறறை உறுப்பாகக்கொண்ட திலக முதலிய வற்றையுடைய மாதர் முகத்தின் மதர்த்த நோகதோடே என்மேற காதலையுடையாள் போல்தோன்றி முதறகண் எதிர்முகமாக நின்று நடித்த நடிபபும்.

78 - 83 புயல்சுமந்து காண்வரிக் கோலமும்

"காண்வரி யென்பது காணுங காலை, வந்த பின்னர் மனமகிழ் வுறுவன, தநது நீங்குந் தன்மைய தாகும்"

(இ - ள்) புயல் சுமநது வருந்திக் கதிரைப் பொழியும மதியிடத்தே கயல்கள் உலாவித் திரிகினற செவ்வியோடே பாகைப் பொதிநத பவளத் தைத் திறந்து ஒளியைத் தருகின்ற முத்தையொத்த நகைநலத்தைக் காட டி வருகவென வந்து போகவெனப் போகிய கரிய நெடிய கண்ணு ளுடைய காண்வரியென்னும கோலமும்,

இளமுத்தென்ருர், ஒளிபெறுதல் கருதி. இளநாகீனற முத்தெனி னும அமையும்

84 - 9 அந்தி மாலை உள்வரி யாடலும்

உள்வரியென்றது - வேறறுருக்கொண்டு நடித்தல், என்னை? "உள்வரி யென்ப துணரத்துங் காலை, மண்டல மாக்கள் பிறிதோ ருருவம், கொண்டுங் கொள்ளாது மாடுதற் குரித்தே" என்ருராகலின், பாண்டவர் பிறிதுருவங கொண்டதுமது மண்டலமாக்களாவார் அரசர

(இ - ள்) யான் ஊடிப் பிரிந்தகாலத்து அந்திமாலை வந்ததாகப் பிரிவாற்றுமல் இரஙகி என் சிநதை நோயமிகும வறுமையைத் தானறிநது கிளியொத்த கிளவியையும மடப்பம பொருந்திய அன்னத்தையொத்த நடையினையும் களித்த மயில்போலுஞ் சாயலினையும் கரந்தனளாகி வேல் போன்ற கண்ணையுடைய தனது சிலதியர் கோலத்தைக்கொண்டு தான் தனி வந்து நின்று நடித்த உள்வரியெனனும நடிப்பும,

90 - 93 சிலம்புவாய் புலம்பவும் புன்புற வரியும்

புறவரியாவது-தலைவனுடன் அணையாது புறத்து நின்று விளையாடு வது, என்னை? "புறவரி யென்பது புணர்க்குங் காலை, இசைப்ப வந்து தலைவன் முறபடாது, புறத்துநின் ருடி விடைபெறு வதுவே" என்ருராகலின்

(இ - ள்) கலங்கஞர்ப் புனையவும் பெருத நுசுப்பினையுடையாள் சிலம்பு வாய்விடடுப் புலமபவும் மேகலை வாய்விடடார்ப்பவும் ஏன்ற காதலையுடையாள்போல் வந்து நோக்கிய நோக்கோடே தன்னைப் பிரித லால் தன்மை திரிநத எனது வறுமையையறிந்தும் என்னுடன் அணை யாது புறம்பே நினறு நடித்த நடிப்பும்.

நுசுப்பினள் புலம்பவும் ஆர்ப்பவும் நோக்கமொடு நோக்கியும் நின்றுடிய புறவரியுமென்க.

94 - 101. கோதையுங் குழலும் கிளர்வரிக் கோலமும்

கிளர்வரியென்றது நடுநின்றுர் இருவருக்கும் சந்து சொல்லக் கேட்டு நிறபது, என்னை? "கிளரவரி யென்பது கிளக்குங காலை, ஒருவருய்ப்பத் தோனறி யவர்வாய், இருபுற மொழிப்பொருள் கேட்டுநிற் பதுவே" என்றுராகலின்

(இ - ள்) நனனுதல் கோதை முதலியன மின்னிடையை வருத்தத் தோன்றி வநதணுகாதே புறவாயிலே வநது நின்று சிலதியர் வார்த்தை கேட்டு மறுமாறறஞ் சொல்லப்புணர்ச்சியை உட்பொதிநதிருகின்ற எனது புலவிச் சொல்லைக் கேடடு அதனை இருபுறமொழிப் பொருளாகக் கொண்டு தளர்ந்த மேனியினையும அழகிய கூந்தலினையுமுடையாள் புலவியாற் போகின்றுள்போல நடித்துப்போன நடிப்பும,

இதனுற் கூறியது யான் புணர்ச்சி நிமித்தமாகப் புலந்து தன் சிலதியர்க்குச் சொல்லிவிட்ட மொழியைக் கேட்டு அப்படியன்றிப் புலந்து சொன்னேனுக நடித்துப்போன நடிப்பென்றபடி.

102 - 4 பிரிந்துறைகாலத்து தேர்ச்சிவரியன்றியும்

தேர்ச்சிவரியென்றது - நாயகன் கிழைகட்குத் தன் துன்பங்களைத் தேடித் தேடிச் சொலலுதல என்னை? "[தேர்சசி யென்பது தெரியுங் காலைக்,] கெடட மாக்கள் கிழைகண்ட வர்முன, பட்டது முறறது நினைஇ யிருந்து, தேர்சசியோ டுரைப்பது தேர்ச்சிவரி யாகும்" என்றுராகலின.

(இ - ள்) நான் பிரிந்துறை பொழுதில் தான் பிரிவாறறது வருந்தினளாகப் பாவித்து எனது மிக்க கிழைகட்குத் தனது மிக்க துயரத்தைத் தன் மயக்கத்தாலே தேர்ந்து தேர்நது சொல்கின்றுளாக நடித்த நடிப்பும், அதுவன்றியும,

105 - 6 வண்டலர் கோதை காட்சி வரியும்

காட்சிவரியென்றது - தன் வருத்தத்தைப் பலருங் காணும்படி நடித்தல் என்னை? "காட்சிவரி யெனபது கருதுங காலைக், கெடட மாக்கள் கிழைகண்ட வரமுனரப், படடது கூறிப் பரிந்துநிற பதுவே" என்றுராகலின்.

(இ - ள்) வண்டலர்த்துங் கோதையையுடையாள் மாலைக்காலத்தின் கண்ணே மயஙகிக் கண்டோரெவர்க்கும தன விரகதீதைச் சொல்லி நடித்த நடிப்பும,

107-8. அடுத்தடுத்தவர்முன் எடுத்துக்கோள்வரியும்

எடுத்துக்கோள்வரியென்றது - தான் கையறவெயதி வீழ்ந்தாளாக வீழந்து பிறர் எடுத்துக்கொள்ளுமபடி நடித்தல, என்னை? "எடுத்துக்கோளை யிசைக்குங் காலை, அடுத்தடுத் தழிந்து மாழ்கி யயலவர், எடுத்துக்கோள் புரிந்த தெடுத்துக் கோளே" என்றுராகலின்.

(இ - ள்) அவர் முன்பு தான் மேன்மேலு மயங்கிய மயக்கதீதை அவர் எடுத்துத் தீர்த்த எடுத்துக்கோள்வரியென்னும் நடிப்பும,

109-10 ஆடன் மகளே பைந்தொடி தனக்கென

(இ - ள்) ஆயிழாய்! பைந்தொடி நாடகமகளாதலான் இங்ஙனம் நடித்தல் அவட்கு இயல்பன்றேவென்று கூறவென்க.

இவறருற கூறியது முன்பு தான் இவளோடு கூடியும் ஊடியும் செல்கின்ற காலத்து இங்ஙனம நடித்த நடிப்பை நாடகவுறுப்பாகிய கண்கூடு முதல் ஏடுதீதுக்கோளீறுயுள்ள வரி எடடிஞேடும் சிலேடித்துக் கூறிய கோவலன் நாடக மகளிர்க்கு இந்நாடகம பிறநதுடைமை யன்றே வெனச் சொல்லி ஓலையை மறுத்தானென்பது.

111 - 4. அணித்தோட்டு சென்றுரைப்ப

(இ - ள்.) அழகிஞையுடைய பொறறேடணிந்த திருமுகத்தையுடைய ஆயிழையெழுதிய அழகிய தாழந்தோடடுத் திருமுகத்தைக் கோவலன் மறுப்பத் தான் அதற்கு வருந்தி வாடிய உள்ளத்தையுடைய வசந்தமாலை மாதவிக்கு விரைந்து சென்று உரைப்பவென்க

அணியும மணியும அழகு. தோடு - பொற்றேடும், தாழந்தோடும். துணவு - விரைவு

115 - 8 மாலை வாரா ராயினும் மாதவி தானென்.

துணந்துசென்றுரைப்பவென்றதனுன் ஆற்றுளாகிய தலைவியை ஆற்றுவித்தறபொருடடுத் தலைவனை இயற்பழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழிகின்றுளாகலின், இன்னும இமமாலைப்பொழுதினுள் வருவார், வாராராயினும காலைப்பொழுதில ாண்டு நாம் காண்போமெனச் சொன்ஞள், சொன்னவள் தானிருநத மலரமளிக்கண்ணே செயலற்ற நெஞ்சதீதோடு வீழ்நதாள், வீழந்தவள அமளிமிசையே இமைபொருந்தாமற் கிடந்தனள், அவள் யாரெனிற் கரிய மலரபோலும நெடிய கண்ணிணையுடைய மாதவிதானென்க

இனி, தான அசையுமாம. அளிப்ப அவன் பாடுபெறறனவென்று சொல்லி மறுப்ப அதனைக் கடடுரைத்தவளுக்குக் காண்குவமெனச் சொல்லிப்பொருந்தாது வதிநதனனென்க வதிதல - தங்குதல், பொருந்தாது வதிதல் - தன் கொழுநனைக் கூடாது வதிதலுமாம்.

இது நிலைமண்டில ஆசிரியப்பா.

ஊடினீ ரெல்லா காண்.

(இ - ள்) உலகில் ஒருவனும் ஒருத்தியுமாயுள்ளோரில் ஊடினவர் களே? நீயிரெல்லாம அநங்கன்றிருவாணையே, கூடுமினென்று குயிற் குலங்கள் சாறற, இங்ஙனம் பிரிந்து சாலநீடுதலால் ஆறறுளாகி இளவேனிற் பொழுதில் நின்ஞேடு கலந்தாளுடைய மெல்லிய பூவிலெழுதிய திருமுகத்தை, கானலிடத்து அவள பாடிய பாட்டிற்கு அலந்தோனே! காண்பாயாகவென்று ஓலையை நீடடினுளென்க.

(அ) வேனிற்காதை முற்றிற்று.

ஒன்பதாவது

கனத்திறமுரைத்த காதை

அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகன்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர்
கோலங் கொடியிடையார் தாங்கொள்ள மேலோர்நாள்
மாலதி மாற்றுண் மகவுக்குப் பாலளிக்கப்
பால்விக்கிப் பாலகன் றுனசோர மாலதியும்
பார்ப்பா ஞெடுமனையா ளென்மேற் படாதனவிட்
டேற்பன கூறுரென் றேங்கி மகக்கொண்
டமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல் † வாயில்
உசசிக் கிழான்கோட்ட மூர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்

2. நிகரமலர் - ஒளிமலர்

2-3 தூவி விளக்கேறறியென்க

3-4 இரவிறகோர கோலம - இராப்பொழுதைக்கு ஆமபடி நொய் தானவை உடுத்தும புனைந்தும ஒபபித்த கோலம

4. (பா) மேலைநாள - முன்னேர்நாள

6 சோர - சாய

7. படாதன - இல்லாதன.

9 அமரர் தருக்கோடடம - கற்பகம் நிறகுங்கோயில்; சாந்தி கரைக கோட்டமெனினுமாம

10 வெள்ளைநாகர் - பலதேவர் பகல்வாயில் - பகல் தோற்றுகிற வாயில், கீழதீதிசை

10-11 உசசிக்கிழான் - சூரியன் அன்றி, பகலவாயில உச்சிக் கிழான், பகறபொழுதுக்கு வழியான உசசிக்கிழானெனறுமாம. ஊர்க் கோடடம - ஸ்ரீ கைலாயம நிறகும கோயில வேறகோட்டம - முருகன் கோயில்

12 வச்சிரக்கோடடம - வசசிராயுதம் இருக்கிற கோயில். புறம் பணையான் - மாசாதீதன, புறமபு அணைந்தவிடம புறம்பணையாயிறறு

அடி, 2 நிகர்மலர் குறுந். 311 6, அகநா. 11 12, மணி. 3 15 மலரை நெல்லொடு தூவல் சிலப் 9 : 43, முல்லை 8-10 அடி, 3-4 . மகளிர் மாலையில் விளக்கெடுத்தல் . மதுரைக் 555-6, குறுந். 386 . 3-4. அடி, 4 மணி. 2 . 28. அடி, 5-36 சிலப். 30 74-87. அடி, 9 சிலப் 5 . 143, 145 அடி, 12 மணி 1 27.

(பி - ம்.) † 'வாயி, னுச்சி'

நிக்கந்தக் கோட்ட நிலாக்கோட்டம் புக்கெங்கும்
தேவிர்கா ளெம்முறுநோய் † தீர்மென்று மேவியோர்
பாசண்டச சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்
கேசும் படியோ ரிளங்கொடியா ‡யாசிலாய்
செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொயயுரையே யன்று பொருளுரையே கையிற்
படுபிணந்தா வென்று பறித்தவளகைக் கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளிற் சென்றுங்
கிடுபிணந் தின்னு மிடாகினிப்பேய் வாங்கி
மடியகத் திட்டாண் மகவை யிடியுண்ட
மஞ்ஞைபோ லேங்கி யழுதாளுக் கச்சாத்தன்
¶ அஞ்ஞைநீ யேங்கி யழலென்று முன்னின
உயிர்க்குழவி காணுயென் றக்குழவி யாயோர்
குயிற்பொதும்பர் நீழற் குறுக வயிர்ப்பின்றி
மாயக் குழவி யெடுத்து மடித்திரைத்துத்
தாய்கைக் கொடுத்தாளத் தையலா டுய
மறையோன்பின் மாணியாய் வான்பொருட் கேள்வித்

---

13. நிக்கந்தக்கோட்டம் - நிக்கந்ததீதேவரான அருகர்கோயில் நிலாக்கோட்டம் - சந்திரன் கோயில்.

15 பாசண்டச்சாத்தறகு - சாத்தனென்கிற ஐயன் கோயிலிலே.

16. ஏசுமபடி - அழகால எல்லாரையும் இகழுமபடி ஓர் இளங் கொடியாய - ஒரு பெண்கொடியாகி.

18. பொருளுரை - மெய்யுரை.

19. படுதல் - உண்டாதல். (பா) பறித்தாள் - பறித்து.

22. மடியகம் - வயிறறிடம், "படியை மடியகத்திட்டான்" (நான்மணி. கடவுள்) என்றுராதலால்.

(19) பிணந்தாவென்று சொல்லிப் பறித்து (22) வயிற்றிடத்திட்டா ளென்க

27. மடித்திரைத்து - வயிறறிலே அணைத்து; மடியாகிய புடை வையையுடைய ஒக்கலையிலே திரைத்தென்றுமாம்.

அடி, 15 பாடுகிடத்தல் சிலப் 30 78, மணி. 18 . 158.

அடி, 17 பாக. 10 11 . 5.

(மேற்.) அடி, 13 'நிக்கந்தக்கோட்டம்' (தொல். தொகை. 11, ந.)

(பி - ம்.) † 'தீர்மி னெனமேவி' ‡ 'யாசிலாச்செய்' ¶ 'அன்னைநீ'

30 துறைபோ யவர்முடிந்த பின்ன ரிறையோனும்
தாயத்தா ரோடும் வழக்குரைத்துத் தந்தைக்கும்
தாயர்க்கும் வேண்டுங் †கடன்கழித்து மேயநாள்
தேவந்தி யென்பாணீ மனைவி யவளுக்குப்
பூவந்த வுண்கண் பொறுக்கென்று மேவித்தன்
35 ‡மூவா விளநலங் காட்டியெங் கோட்டத்து
நீவா வெனவுரைத்து நீங்குதலுந் ¶தூமொழி
ஆர்த்த கணவ னகன்றனன் போயெங்கும்
தீரத்தத் துறைபடிவே னென்றவனைப் பேர்த்திங்ஙன்
மீட்டுத் தருவா யெனவொன்றன் மேலிட்டுக்
40 கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் வாட்டருஞ்சீர்க்
கண்ணகி நல்லாளுக் குற்ற குறையுண்டென்
றெண்ணிய நெஞ்சத் தினையளாய் நண்ணி
அறுகு சிறுபூளை நெல்லொடுதூஉய்ச் சென்று
பெறுக கணவனே டென்றுள் பெறுகேன்

---

30 அவர் - மாதாபிதாக்கள் முடிதல் - மரித்தல்.

31 தாயதீதார் - ஞாதிகள்

32. கடன் - உதகக்கிரியை, பலிகன்மம். (பா) மேவினுள் - மேயினவள்.

34. பூவந்தவுண்கண் - பூப்போலுமுண்கண். பொறுக்கென்று - பொறுப்பனவாகவென்று, தெய்வயாக்கையாதலாற் பொருதென்று பொறுப்பிதீதானென்க. மேவி - கூடி.

38. கங்கைநீர்த்துறை படிவேனென்று அகன்றவனையென்க.

38-40 கணவன் துறைபடிவேனென்று அகன்றனனதலால், அவனைப்பெயர்த்து இங்ஙனம மீடுதீதருவாயென்று உலகதீது ஒன்றன்மேலிட்டுச் சாதீதற்குப் பூவும் நீரும தூவியிருப்பாள்.

42 இனையளாய் - வருதீதத்தளாய, இனைதல், ஈறுகுறைந்து இனையாயிற்று

43. தூஉய்ச் சென்று - இதற்குப்பரிகாரமாகச் சாதீதற்குதீதூவிப் பின்பு கண்ணகிபாற சென்று, கண்ணகியிடதீதே தூவியென்பாருமுளர்.

43-4 சென்று பெறுக கணவனேடெனருள, கூட்டமென ஒருசொல் வருவிக்க, கணவனேடு கூட்டம பெறுக, உருபு நிற்கப் பொருள் தொக்கது, தெய்வதீதை வழிபாடுசெயத அதுகொண்டு பெறுகவென்றுள்

அடி, 34 பொறுக்கென்று, மணி. க. கரு.

அடி, 35 மூவா இளநலம முருகு 290.

(பி - ம்) †'கடனசெயது' ‡'மூவா வெழினலம்' ¶'தூமொழியா, ளார்தீத கணவ னகன்றனனுப் போய்'

கடுக்குமென் னெஞ்சங் கனவினு லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டேம்
பட்ட பதியிற் படாத தொருவார்த்தை
இட்டன ரூரா ரிடுதேளிட் டென்றன்மேல்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனே
டீர்க்குற்ற தீங்குமொன் றுண்டா லுரையாடேன்
தீக்குற்றம் போலுஞ் செறிதொடீஇ தீக்குற்றம்
உற்றேனெ டுற்ற வுறுவனே டியானுற்ற
நற்றிறங் கேட்கி னகையாகும் பொற்றொடீஇ
கைத்தாயு மல்லை கணவற் கொருநோன்பு
பொய்த்தாய் †பழம்பிறப்பிற் போய்க்கெடுக வுய்த்துக்
கடலொடு காவிரி ‡சென்றலைக்கு முன்றின்

---

45 கடுக்கும் - ஐயுறும் கனவினுல் - கனவினிடத்து.

46. பிடித்தனன்போய் - பிடித்துப்போக போயப்பட்டேமென்று இருவர் தொழிலுமாம்

48 இடுதேளிடடு - தேள்கொட்டப்படுவார் காணுமல் தேளல்லாத தொன்றை மறைய மேலே போகட்டுப் பயப்படப்பண்ணுதல், தேளென்று பொய்யே ஒன்றை இட்டாலொப்ப

49 கோவலறகுறறதென்றது, பழிமொழியாதலால்

48-9 என்றன்மேற் கோவலற்கு உற்றதோர் தீங்கென்று சொல்ல, சொல்லவென ஒருசொல் வருவிக்க

50-51. காவலனேடீர்க்கு உற்ற தீங்குமொன்று உண்டால் - காவலன் பாடும் ஊர்தீப்பாடும் உண்டாகையால் உரையாடேன் - பொல்லாக் கனவாதலால் உனக்குசசொல்லேன், "உரையார், இழிதக்க காணிற் கனு" (பழ. 182) என்ருராதலின்

52. தீக்குற்றம் - கொடியகுறறம், அஃதாவது முலைதிருகியெறிதல்

53. உறுவன் - மிக்கோன், என்றது கோவலனை

54. நற்றிறம் - இருவரும் தேவலோகம்புகுதவுள்ள நன்மை. நகையாகுமென்ருள் அதன்மிகுதிநினைந்து. எனவென ஒருசொல் வருவிக்க.

55. கைதீதல் - அவனுல் வெறுக்கப்படுதல்.

56. உய்த்தது - நீரையுய்த்தது.

44-56. என்றது நீ சொன்னபடியே கூட்டம்பெறுவேன்; ஆயினும் ஓர் ஐயம் உண்டு, கண்டகனவாலேயென்று கண்ணகி சொல்ல, நீ கண்ட கனுக்கொண்டு வருந்தவேண்டா, நீ அவனுல் வெறுக்கப்பட்டாயுமல்லை.

(பி - ம்.) † 'மறுபிறப்பிற்' ‡ 'நின்றலைக்கு'

மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டஞ் சூரிய †குண்டந் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் ‡கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினுஞ் போய்ப்பிறப்பர் யாமொருநாள்
¶ஆடுது மென்ற வணியிழைக்கவ் வாயிழையாள்
§பீடன் றெனவிருந்த பின்னரே நீடிய
காவலன் போலுங் கடைத்தலையான் வந்துநம்
கோவல னென்றுளோர் குற்றிளையாள் கோவலனும்
பாடமை சேக்கையுட் புக்குத்தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தங்கண் $டியாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன

---

58 - 9 சோமகுண்டமும் சூரியகுண்டமுமென்னும பேரையுடையன, முறறு.

55-63 முற்பிறப்பிற் கணவன்காரணமாக ஒரு நோன்பு தப்பினுய், அதறகுப் பரிகாரமாவது இநதக் குண்டம் படிந்தாடிக் கோட்டந் தொழுதல், தொழுவார் கணவரொடுகூடி இன்புறுவரென்று சொல்ல, கண்ணகியும.

64. பீடன்றெனவிருந்த பின்னர் - குலத்திற் பிறந்தார்க்குப் பெருமையன்றென இருந்தகாலை.

65-6. காவலன்போலுங் கோவலன் கடையிடதீதானென்று மாறியுரைக்க, அன்றித் தூரதீதே பார்த்து ஐயுறறு நங்காவலன் போலுமென்று அவன் அணுகினவிடதீது ஐயந்தீர்ந்து கோவலனென்றுளெனினுமாம், கோவலன்வந்து நங்கடைதீதலையான், அவன்றன் நெடுங்காலம் நம்மை நீங்காக் குறிப்பினையுடையனென்றுளெனினும் அமையும.

66-7. சிலதி கூறுதலும் கோவலன் உட்புகுந்து.

(4) கொடியிடையார்தாம் கோலங்கொள்ளாநிறக, அக்காலதீதே (66) கோவலன் (67) பாடமைசேக்கையுட்புக்கென்க.

69. சலம் - பொய். சலதி - பொய்ச்சி. ஆடி - அனுபவிதீது.

70. குலந்தருவான்பொருள் - தாயதீதாரால் தரப்பட்டபொருள்.

71. இலம்பாடு - வறுமை.

(மேற்.) அடி, 71 : தொல். புள்ளி. 21, உரி. 62, ந.; இ. வி. 129, 281.

(பி - ம்) † 'குண்டதீதுறை' ‡ 'கணவனெடு' ¶ 'ஆடுதுமோ வென்ற' § 'பீடன் றெனவுரைத்த' $ 'டியாதும்'

நலங்கேழ் முறுவ னகைமுகங் காட்டிச்
†சிலம்புள கொண்மெனச சேயிழை கேளிச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனே
‡டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென் றென்னேடிங்
கேடலர் கோதா ¶யெழுகென்று நீடி
வினைகடைக் கூட்டவியங் §கொண்டான் கங்குற்
கனைசுடர் காலசீயா முன்

வெண்பா

காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவிதன் சொல்லை ||வறிதாக்க—மூதை
வினைகடைக் கூட்ட வியங் $கொண்டான் கங்குற்
கனைசுடர் காலசீயா முன்.

---

72. நகை - ஒளி

74. சிலம்பு முதலாகவென்றான், வாணிகஞ்செய்வதற்கு; முதலீ டென்பராகலான். சென்ற கலன் - முன்பு வாங்கியழித்த ஆபரணம்.

75. உலந்தபொருள் - கெட்ட பொருள்.

(76) மதுரையிடத்துச் சென்று (75) ாட்டுதலுற்றேனென்க.

77. நீடி - நெடுங்காலம் நின்று.

78. வியங்கொண்டான் - வினையினது ஏவலைக்கொண்டான்.

77-8. எழுகென்று வியங்கொண்டானென்க.

78-9 கங்குலை இடத்துநின்றும் சுடர்போக்குவதன் முன்னென்க; என்றது, இருளிலே போதல்பற்றி.

'காதலிகண்ட': மாதவிதன்சொல்லை வறிதாக்க என்றது, வேனிற் காதையில் 'காலைகாண்குவம்' (116) என்ற வார்த்தையை. மூந்தை மூதையாயிற்று.

(பி - ம்.) †'சிலம்புகொண் மோவெனச் சேயிழைகே ளிந்தச், சிலம்பு' ‡'டுலந்த பெரும்பொரு ளீட்டுறறேன்' ¶'யெழுகென்ன மூதை' §'கொண்டார்' ||'வறிதாக்கி' $'கொண்டார்'

1 - 4. அகனகர் தாங்கொள்ள

(இ - ள்) கொடியிடையார், அகன்ற மனையிடமெங்கும் கதிரோன் மறைநதமாலைக்காலத்தே அருமபு புரிநெகிழ்ந்த முல்லையினது ஒளி மலரை நெல்லோடேதூவி இலலுறைதெயவத்தை வணங்கி மாணிக்க, விளக்கை மைவிளக்கோடே எடுத்து அமமாலைக்காலத்தே இராப்பொழு தைக்கு ஆமபடி கொழுநரமாரபைத் தமது [1]முலையாற பொரு(ந்து)தற் கேறற கோலங்களைக் கொள்ளாநிறபவென்க

என்றது, மகரக்குழைமுதலிய மணியும பூணும் மதாணியுமுதலிய அணியும இரட்டையங்கண்ணி பிணையன் முதலிய பணியுங் களைந்து நொயயனவே புனைந்தும் பூண்டும முடிதீதுரு செயதல அகனகர் - பட்டினப் பாக்கமெனினுமை அமையும நிகர் - ஒளி, [2]"நீரவார் நிகர் மலர் கடுப்ப" என்ருர் கதையினும. பகல ஆகுபெயர். மாய்தல் - மறைதல், "களிறு மாயக்குங் கதிர்க்கழனி" (மதுரைக் 247) என்ருற் போல மணிவிளக்கம உமமைத்தொகை, இருபெயரீக்கண்வநதது, மணி - அழகுமாம கோலம - ஒப்பனை, தமது கொழுநரோடெதிரக் கும் போரக்கோலமுமாயிற்று தாம - அஙஙனம தூவியமகளிர் தாம். "நெல்லு மலருந தூஉயக் கைதொழுது, மல்ல லாவண மாலை யயர" (43-4) என்ருர் நெடுநல்வாடையினும

4 - 6 மேலோர்நாள் பாலகன் ருன்சோர

(இ - ள்) முன்னெருநாளிலே மாலதியென்பாள் ஒரு பார்ப்பனி தனது மாற்ருள் குழவிக்குத் தன்முலை சுரந்தபாலைச் சங்காலூட்ட அப்பால் விக்குதலாலே தன் கையிலை அச்குழவி மரிக்கவென்க.

பால் - ஆன்பாலுமாம். பாலகனென்பது காலவழக்கு. சோர்தல் - மரிதீதல்.

6 - 8 மாலதியும் மகக்கொண்டு

(இ - ள்) அஙஙனம பாலகன் மரித்தலானே, அம்மாலதியும் பார்ப் பானெடு அவன் மனைவியும் என்மேல் அடாப்பழி கூறுதலொழிதீது ஏறபன கூருராதலால் இதறகு என்செய்கேனென்றேங்கி அம்மகவைக் கொண்டென்க.

உம்மை இழிவுசிறப்பு. ஒடு . எண்ணெடு. படாதன - அடாதன. விட்டு - ஒழிந்து.

9 அமரர்தருக்கோட்டம்

(இ - ள்) தேவர்தரு நிறகுங்கோயில்,

வெள்யானைக்கோட்டம்—(இ - ள்.) ஐராவதம் நிற்குங் கோயில்.

10 புகர்வெள்ளைநாகர்தங்கோட்டம்

(இ - ள்) அழகினையுடைய பலதேவர்கோயில்,

புகர் - அழகு. வெள்ளைநாகர் - பலதேவர்.

---

[1]8 8-13, அடியார். [2]இது, அகநா. 11-12-ஆம் அடியாகவும் காணப்படுகின்றது.

10 - 11 பகல்வாயிலுச்சிக்கிழான்கோட்டம்

(இ - ள்) கீழ்த்திசையில் தோன்றுகின்ற சூரியன்கோயில்,

பகல்வாயில் - பகல்தோன்றுகின்றவாயில், ஆவது கீழ்த்திசை. உச்சிக்கிழான் - பகறபொழுதிறகுரியோன், இனிப்பகறபொழுதிற்கு வருவாயாயுள்ளவனென்றுமாம, சூரியன்கோயிலெனறபடி.

11. ஊர்க்கோட்டம்

(இ - ள்) இறைவனூராகிய கைலாயம் நிற்குங்கோயில்,

வேற்கோட்டம்—(இ - ள்) முருகவேள நிறகுங்கோயில், வேல: ஆகுபெயர.

12 வச்சிரக் கோட்டம்

(இ - ள்) வசசிரப்படைநிறகுங்கோயில்,

[1] புறம்பணையான் வாழ்கோட்டம்

(இ - ள்) சாதவாகனன்கோயில்,

புறம்பு அணைந்தவிடம புறமபணையாயிற்று, "புறம்பணை யியம்பு மோசை" (85) எனருர் சிந்தாமணியினும.

13 நிக்கந்தக் கோட்டம்—(இ - ள்) அருகன்கோயில்,

என்னை? "துக்கந துடைக்குந் துகளறு காட்சிய, நிக்கந்த வேடதீ திருவடி கணங்களை, ஒக்க வடிவீழந துலகியல் செய்தபின, அக்கதை யாழ்கொண் டமைவரப் பண்ணி" என்ருர வளையாபதியினும.

நிலாக்கோட்டம்—(இ - ள்) சந்திரன்கோயில்,

இவை செவவெண்.

புக்கெங்கும்—(இ - ள்) இக்கூறிய கோயில்களெங்குமபுகுந்து,

14 - 5. தேவிர்காள் பாடு கிடந்தாளுக்கு

(இ - ள்.) இங்ஙனம எங்கும்புக்கவள, தெய்வங்களே! எமது மிக்க இந்நோயைத் தீர்மினென்று இரப்பவும ஒருவருமை தீராமையின் ஆண்டுப் பொருந்தாதுபோந்து ணடுச் சாத்தனிடதீதே பொருந்தி அவன்பால் வரங்கிடநதாளென்க

தேவும தெயவத்திறகொருபெயர், "தேவாதிதேவனவன்சேவடி" (சீவக 1) என்ருராகலின் தேவிர் இர் முனனிலைப்பன்மை. தீர் மென்று ாற்றுமிசையுகரம் கெடடது. [2] பாசண்டம் - தொண்ணூற்றறு வகைச் சமய சாதிதிரதிதருக்கக்கோவை, என்னை? "பண்ணுற றிறதிதிற

---

[1] "குடுமிப் பருவதீதே கோதை புனைந்த, இடுமுதிதுப் பூதனிருப் பப் படுமுதிதம, புன்னை யருமபும் புகாஅர்ப் புறமபணையாய்க், கென்ன முறைய ளிவள்" என்னும் பழஞ்செயயுளின்பொருள் (தொல். செய். 118, ந. மேற) ாண்டு அறியறபாலது [2] "பாசண்டதீ துறையு மிவற் றுட் பலவாம், பேசிற் ரொண்ணூற றறுவகைப் படுமே" (திவாகரம், 12.)

பழுதின்றி மேம்பட்ட, தொண்ணூற றறுவகைக் கோவையும் வல்லவன், விண்ணு றியங்கும விறலவ ராயினும, கண்ணுறி நோக்கிக் கடுநகை செய்வான்" எனருர் வஜீயாபதியினுமாகலின் இவறறிறகு முதலா யுளள சாத்திரங்களீப பயினறவனுதலின, † மகாசாத்திரனென்பது அவறகுப பெயராயிறறு சாத்தறகு உருபுமயக்கம இது "மணற கீன்ற" (அகநா. 212) என்ருறபோல நின்றது கிடந்தாளுக்கு - கிடந் தாளை, இயல்புமாம. இப்பொருடகு ஆசிலாயென்று சொலலியென ஒரு சொல் வருவிக்க

16 - 22 ஏசும்படியோர் மகவை

(இ - ள்) சுடுகாடடுக் கோடடத்து இடுபிணநதினனும இடாகினிப் பேய ஏசுமபடி ஓரிளங்கொடியாயத் தூங்கிருளிறசெனறு அங்குப் பாடு கிடநதாளை நோக்கி ஒன்றினும குறறமறறவளே, கேளாய, முறபவத்தில் தவருசெயயாதோரக்குத் தேவரும வரங்கொடார, அதுபொயயன்று; மெயயெனச் சொலலி அங்ஙனமபடட நின் பிளளைப்பிணத்தைப் பாரக்கத் தந்துகாணெனச் சொல்லாநின்று பறித்து அவள் வாங்கி மடியகத்திட்டா ளெனக.

ஏசல - பழித்தல். படி - வடிவு பிறரைப்பழிக்கும வடிவையுடைய தொரு பெண்வடிவுமாம் சுடுகாடடுக்கோடடம - [1]சக்கரவாளக்கோடடம. தூங்கிருள - செறிநதவிருள, யாவரும துஞ்சுமிருளுமாம இடுபிணம - குழியிலிடுபிணம மடி - வயிறு, "படியை மடியகத்திடடான" (நான்மணி கட 2) என்பதனுனும உணர்க மடியகத்திட்டாள் - விழுங்கினுள் மக, "குழவியு மகவு மாயிரண் டல்லவை, கிழவ வலல மக்கட கண்ணே" (தொல். மரபு. 23) என்பதனுற கூறப்பட்டது, பாலக னென்பது கால வழக்கு.

22 - 8 இடியுண்ட தையலாள்

(இ - ள்) இடிக்குரல்கேட்ட மயில் அகவுமாபோலே ஏங்கியழுகின்ற தையலாளுக்கு அச்சாத்தன் அன்னைய, நீ செல்கின்ற வழிமுன்னர்ப் பொதுமபரிடத்து உயிரோடு கிடக்கின்ற குழவியைக் காண்கின்றிலையோ வென, அவள் அது செயய ஏங்கி அழுகின்றுய! அழாதொழியென்றுதான் அக்குழவியாய் அவவிடத்துச்சென்று கிடபப, அவள் வஞ்சக்குழவியை ஐயமினறித் தன்குழவி யென்றெடுத்து வயிற்றிலே அணைத்துக் கொடு போய்த் தாய்கையிற கொடுத்தாள், அங்ஙனம் ஏங்கியழுத அத்தையலா ளென்க

அடிக்கப்பட்டதனை 'அடியுண்டது' என்ருற்போல இடிக்கப்பட்ட தனை இடியுண்டதெனருர், உண்டல - உறுதல.

28 - 32 தூய மேயநாள்

(இ - ள்) அக்குழவியாய இறையோனும இருமரபுந்தூய மறையோ னுக்குப் பின்செலலும்பிள்ளையாய்மிக்க கலவிகளையும அவறறின பொருட

---

[1] இது காவிரிப்பூம்பட்டினத்திற் பண்டைக்காலத்து மயனல் நிருமிக் கப்பட்டது, இதன் வரலாறறை மணிமேகலை, ஆருவது காதையிற காண்க

(பி - ம்.) † 'மகாசாத்தன்'

கேள்விகளையும் கற்றும் தரிதீதும் துறைபோய்தீ தந்தைதாயர் இறந்த பின்னர் அவரக்கு நீரக்கடன் முதலியவுஞ்செய்து தன் தாயதீதாரோடும [1]வெலவழக் குரைதீது எட்டியாண்டு தன் மனைவியோடே கூடி நடந்தபின் ஒருநாளிலென்க.

வான்பொருட்கேள்வி - மறைநூலும் அங்கமும் துறைபோதல் - [2]அதறகுதீ நக நிறறல மாணியாயெனவே சௌளமும உபநயனமும, துறைபோயெனவே கல்வி கேளவி முதலிய பிரமசரியங்காதீதலுங்கூறி, மேல "தேவந்தியென்பாண்மனைவி" என்பதனுல் விவாகமும காருகதீத முங் கூறினமையுமுணரக. இறையோனும உமமை சிறபபு. வழக் குரைதீதெனவே, தன மனைவிக்குப பொருடகுறைபாடில்லாமற செயது எனபதாயிறறு இறையோனும அவர் மடிநதபின்னர்க் கடன கழிதீது வழக்குரைதீதென்க தாயரென்றுர் மாலதியையும கூடடி மேயநாள் - மேவியநாள, இவஞதீ நீவலஞசெயது [3]நாலீராண்டு கழிந்தபின்னர், 'மேவினள' என்று பாடமோதிதீ தன்னை மேவினவளென்று பொருளுரைபபாருமுளர்.

33 - 6 தேவந்தி யென்பாள் நீங்குதலும்

(இ - ள்) அங்ஙனம் கூடி நடந்த தன்மனைவியாகிய தேவந்தியென்று பெயர் கூறப்படுவாளுடைய பூவின் தன்மை தலைவந்த மையுணடகண்கள் இதனைப் பொறுப்பனவாகவென நிருமிதீதுக்கொண்டு பினபு அவளை மேவிதீ தனது ஏக்காலதீதும முதிராத இளைய அழகினது நலதீதை வெளிப்படுதீதி அவன் அவள் குறிப்பினையறிந்து அதறகேற்ப அவடகு நீ எம்கோடடதீது வாவெனச சொல்லிப் பிறர்க்கெல்லாம தீர்தீததீதுறை படிவேனெனச் சொல்லி நீங்கினுனகவென்க.

[4]மக்கள் கண்ணிறகுதீ தெய்வயாக்கை காணப்பொருதாகலின் இவள் கட்குப் பொறுக்கக்கடவதென்று நிருமிதீதுக்கொண்டான, "அந்தரதீ துள்ளோ ரறியா மரபின், வந்து" (6 72 - 3) என இதனுள்ளும், "கரந் துரு வெய்திய கடவு ளாளரும்" (1 15), "தேவரு மக்களு மொதீதுடன் றிரிதரு, நாலேழ நாளினும" (1 66 - 7) என மணிமேகலையுள்ளும கூறினமையானுமுணர்க. இனி உண்கணென்பதனை முன்னிலை விளி யாக்கி இம்மறையை நீ பொறுக்கவென்று சொல்லிக்காடடினுனெனினும் அமையும.

36 - 40 தூமொழி கொண்டிருப்பாள்

(இ - ள்) அங்ஙனமாகிய தூமொழி, என்னெஞ்சிற்பிணிதீதகணவன தீர்தீததீதுறைகளெஙகும்போய்தீ தீர்தீதமாடுவேனென்று எனனைவிட டகன்றனன், மறுதீதும் இவ்விடதீதே அவன மனதீதைதீ திருமபப பண்ணி அழைதீதுதீ தருவாயென்று ஒரு பெயரிடடுக்கொணடு அவன கோட்டதீதை வழிபடுதலை நாடோறும் கடனுகக் கொண்டிருக்கின்றவ ளென்க

---

[1] "தோறபது, கொண்டு புகாஅ ரவை" (பழ 4) [2] குறள், 391. [3] சிலப். 30 . 85. [4] பெருங். 1. 53 16.

40 - 44 வாட்டருஞ்சீர் கணவனே டென்றாள்

(இ - ள்) நிறைந்த சீருடைய கண்ணகியாகிய நலலாளுக்குக் கொழுநன் பிரிதலால் உற்றதோர் துன்பமுண்டென்ற நினைந்த நெஞ்சின் வருத்ததீதை யுடையாளாயக் கோடடதீதை நண்ணி அறுகுமுதலிய வறறை இவள் கணவனைப் பெறலவேண்டுமெனத் தூவிப் பினனர்க் கண்ணகிபாற் சென்று ஆண்டு ஆசிகூறுவாள் கணவனைப் பெறுவாயாக வென்றுளென்க.

இனி, கண்ணகிபால் நண்ணிச்சென்று தூவிக் கணவனெடு வாழ்வு பெறுகவென்றுளெனினும அமையும் வாடு வாடடென விகாரம, வாடுதல் - குறைதல், குறைதலரியவெனவே நிறைநதவென்பதாயிறறு, பிறரால வாடடுதலரிய வெனவுமாம இனைதல இனையாயிறறு, விகாரம. கணவனேடு - கணவனை.

44 - 54. பெறுகேன் நகையாகும்

(இ - ள்) செறிதொடீஇ, நீ இங்ஙனங் கூறுதலாற் பெறுவேனையினும என்னெஞ்சம ஐயுறுகின்றதுகாண், அஃது எறறுளெனின், நெருநற்கங்குற கனவினகண் என் கொழுநன் என்னைக் கைப்பறறினனையப் போக யாங்கள ஒரு பெரிய பதிக்கடபுக்கோம, அங்ஙனம புக்க பகியிடதீதே எங்கட்கு ஏலாததோர படிறறுரையை அவவூரார இடுதேள் இடுமாறுபோல என்மேலிடடனர், அங்ஙனம அவரிடப்பட்ட அப்படிற்ருற கோவலறகு ஓர தீங்குற்றதென்று பிறர் சொலலக் கேட்டு அது பொருது அவவூரரசன் முனனர்ச்செலலாதேன் சென்று வழக்குரையாதேன் வழக்குரைத்தேன், ஆதலால் அவவரசனெடு அவவூர்க்கும உறறதோர் தீங்குண்டு, ஆனலும அவை தீக்குலுவாதலான நினக்குரையேன், இங்ஙனம தீவினையுறற எனனெடு பொருநதிய மிக்கோனுடனேயான பெறற நறறிறங்களை நீ கேடபாயாயின் அது நினக்கு நகையைத் தருமென்று சொலல வென்க.

கடுக்கும - ஐயுறும், கடியென்னுமுரிச்சொல் ாறுதிரிநதது, "போறறி னரியவை போற்றல் கடுத்தபின், தேறறுதல் யார்க்கு மரிது" (குறள 693) எனறுறபோல, அது, "ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே" (தொல் உரி. 86) என்பதனன் முடிநதது கனவினுற கடுக்குமெனினும் அமையும் இடுதேளிடுதல - தேளிடப்படுவார காணுமே தேளல்லாத தொன்றை மறையக் கொடுவந்து மேலேயிடடு அவரைக் கலஙகப் பண்ணுதல, பாயசசுதீதேளெனபாருமூளர எனறன்மேல் தன் அசை என்றன மேலென்றுள, பெண்பாறறன்மையான், அன்றி இப் பழியைத் தான் சுமந்து நிறறலானெனினும அமையும தீங்கென்று அது கேட்டு - தீங்கெனறு சொலல அதுகேடடு, சொல்லலென ஒரு சொல்வருவிக்க ஒடு எண்ணெடு, வேறுவினை ஒடுவுமாம், ஆவது காவலன் மரணமும ஊர்தீப்பாடும உமமை இறநதது தழீஇயவெச்சவுமமை உரையாடேனெனறுள, "உரையா ரிழித்தக்க காணிற கனு" (187) என்பது பழமொழியாகலின் தீக்குறறம - கடிகான குறறம்; ஆவது மூலதிருகியெறிதல நறறிறம - இருவரும சுவரகமபுகுதல நகையாகுமென்றுள், இது கிட்டாததொன்றுகலின் எனவென ாண்டும் ஒருசொல வருவிக்க.

54 - 64 பொற்றொடி பின்னரே

(இ - ள) பொறறொடி, நீகண்டகனுக்கொண்டு வருந்த வேண்டா, நீ அவனுல வெறுக்கப்படடாயுமலல, நின்கணவன் காரணமாக ஒரு நோன்பு முறபிறபபிலே தப்பினுய், அதனுல உள்ள தீங்குமிக்கன, அத்தீஙகும கெடுவனவாக, காவிரி தன் நீரைக் கொண்டு சென்று கடலோடெதிர்த்து அலைக்கும் சங்கமுகத்தயலதாகிய பூவினிதழ் அவிழும நெயதறகானலிடத்து இரண்டு தடாகமுள்ளன, அவையாவையெனிற [1]சோமகுணடம சூரியகுண்டமென்னும பெயரையுடையன, அவறறின் துறைகளில் மூழ்கிக் காமவேள் கோட்டத்திறபுக்கு அவனைத் தொழுதாராயின், அவர இப்பிறப்பிலுள்ள நாளெலலாம தம கணவரோடும பிரிவினறியிருநது இவவுலகத்து இன்பமுறுவர், மறுமைககும போகபூமியிலேயும போய்ப்பிறநது கணவரோடும பிரிவின்றி மூன்றுபல்லஙகாலம இனபமநுகர்வராதலான் அவறறை யாமும் ஒருஞான்று ஆடக்கடவேமெனறு சொன்ன தேவநதிக்குக் கண்ணகி அஙஙனம் துறைமூழ்கித் [2]தெய்வநதொழுதல் எஙகடகு இயல்பன றென்று சொலலி இருநதபினஙுகவெனக

"காமனை யெனறுஞ சொல்லார் கணவறகை தொழுது வாழ்வார்" (சீவக 1598) எனறராகலின, இங்ஙனம் கூறிஞள் இக்குண்டமிரண்டிறகும இவவுலகத்தினபுறலும, போகபூமியிற பிறத்தலும நிரனிறையாக்கலுமொனறு, அவறறை, "இரு காமத்திணையேரி" (39) என்றுர் **படடினபபாலை**யிலும

64 - 6 நீடிய காவலன் குற்றிலையாள்

(இ - ள்) அங்ஙனஞ்சொல்லி அவர் இருக்கின்றவளவிலே குறுந்தொழிலிலையாள் காவலன்போலுங கோவலன் நீடிய நம கடையிடத்தானென்றுளென்க.

அன்றித் தூரத்தேபார்த்து ஐயுறறு நம் காவலன்போலுமென்று, அவன் அணுகினவிடத்து ஐயந்தீரந்து கோவலனெனறுளெனினும அமையும, இனி, நம கோவலன் வருகின்றவரத்து நமமை நெடுங்காலம் காபபான் போல இராநினறதென்றுளெனினும அமையும

66 - 71 கோவலனும் தருமெனக்கென்ன

(இ - ள்) அஙஙனங் கடைத்தலையானை கோவலனும, [3]கொடியிடையார்தாம் விளக்கஙகாடடிக் கோலங்கொள்ளாநிறப, அக்காலத்தே வநது பெருமையடைநத சயனத்தினிடத்தேபுக்கு அவன் தனது பைந்தொடியுடைய மேனிவாடடமும நெஞசுவருத்தமுஙகண்டு எலலாப் பொருளிலும பொயயை மெயயாகப் பொருநதுவித்தொழுகும பொயத்தியோடுங்கூடி ஆடிய ஒழுக்கத்தினுனே நமகுலத்திலுளளார தேடித்தந்த மிக்க நிதிக்குன்றமெலலாம் அவள பொருடடால் தொலைந்தன, அதனை இலலாமையுண்டாதல் எனக்கு நாணைத்தருகின்றது காணெனன வென்க

---

[1] இங்கே கூறிய சோமகுண்டமும சூரியகுண்டமும முறையே திருவெண்காட்டுள்ள சோமதீர்த்தமும சூரியதீர்த்தமுமாமென்று சில பெரியோர் கூறுகினறனர

[2] "தெயவந தொழாஅள் கொழுநற றெழுதெழுவாள், பெயயெனப் பெய்யு மழை" (குறள், 55)

[3] இக்காதை, அடி, 3 - 4.

பாடு - படுக்கையுமாம். சலம் - பொய். சலதி - பொய்த்தி ஆடுதல் - உடனுதல் குலந்தருவான்பொருள் - தொனறுதொடடு வருகின்ற பொருள். இனறு நாணுத்தருமென்றது, 'கெடடால் மதிதோன்றும' என்னும் வழக்கு.

72 - 3 நலங்கேழ் கொண்மென

(இ - ள) இவவாறு அவன் தன்னைப்போறறி இலமபாடு நாணுத்தரு மென்றதனை மாதவிக்குக் கொடுக்கும பொருடகுறைபாடடால் தளர்நது கூறினனைக் கருதி ஒளிபொருநதிய முகத்தே நலம பொருநதிய சிறிய முறுவலை விளைத்து இன்னும சிலமபு ஓரிணையுள , அவறறைக் கொண்மி னெனருளெனக

சிலம்புளவென்றுள், இவையொழிந்த கலனெல்லாம் தொலைதலால். இவை அணியாதிருத்தலின் அவனறியாவனைக்கருதினும் அவன் தளரச்சி கூறுதலால் தான் இவையுண்மைநினைநது கூறினனென்க புலந்து கூறினனெனிற கறபின் தனமையனறும.

73 - 9 சேயிழை கேள் கால்சீயா முன்

(இ - ள்) இஙஙனம் கருதிய சேயிழாய! கேள், நீ சொன்ன இச் சிலம்பை நான் வாணிகமுதலாகக் கொணடு முனபு நான வாஙகியழித்த கலனையும் கெடட பொருளையும் தேடித்தொகுத்தலைத் துணிநதேன், அஃது எவ்விடத்தே சென்றெனின், விரிநத புகழையுடைய மதுரையென்னும நகரிடத்தே சென்று, ஆதலால் கோதாய! அதறகு நீ இபபொழுதே இஙகு நினறும என்னோடு எழுவாயாக வென்று சொலலி முறபவத்தில் தான் செயத தீவினை நெடுஙகாலம நினறு நெஞசை ஒருபபடுத்துதலானே அவவினையினது ஏவலைக்கொண்டான், எப்பொழுது போதற் கெனிற கஙகுலை அவவிடத்துநின்றும் சுடர் போக்குவதன் முன்னே யென்க.

சீத்தல் - விளக்குதல், சிலம்புமுதலா .. உறறேனென்பதற்குக் கலனைச் சிலம்பானும பொருளை முதலானும ஈடடுதலுறறேனென்று னெனினும் அமையும

இது, கனவென்னும பொருளையே கருதாது மாலதி கதையையும் தேவந்தி கதையையும் கலநது கூறிறனெனும, உறுப்பழிவின்றி நடந்த தெனும முந்நான்கடியினிறநதுவருதலான் நெடுவெண்பாட்டாகாது கலி வெண்பாடடாதல உணர்க.

வெண்பா

காதலிகண்ட கால்சீயாமுன்.

இவட்கு மேற்கூட்டமின்மையாற [1]கருநெடுங்கண்ணென்றுர், கனவு சொல்லை வறிதாக்க வினைகடைக்கூட்ட வியங்கொண்டானென்க. சொலலை வறிதாக்குதல் வேனிறகாதையிற காலைகாண்குவமென்ற சொல்லைப் பயனின்றுக்குதல்.

(கூ) கனத்திறமுரைத்த காதை முற்றிற்று

---

[1] சிலப். 5. 267.

பத்தாவது

நாடுகாண் காதை



வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிரு ணின்ற கடைநாட் கங்குல்
ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப
ஏழகத் தகரு மெகினக் கவரியும்
தூமயி ரன்னமுந் துணையெனத் திரியும்
† தாளொடு குயின்ற தகைசால் சிறப்பின்
நீணெடு வாயி னெடுங்கடை கழிந்தாங்
கணிகிள ரரவி னறிதுயி லமர்ந்த
‡ மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து
பணையைந் தோங்கிய பாசிலைப் போதி

---

1. வான்கண் - ஆதித்தன். விழித்தல் - விளங்குதல்

2. வெண்மதிநீங்க - வெண்மதி நீங்கின அளவிலே

3. காரிருணின்ற கடை நாள் - காரிருள் கடையிலே நின்ற நாள், ஆவது பூருவபக்கம்.

4. ஊழ்வினை கடாவுதலால உள்ளந்தன்னைத் துரப்ப; வினை செலுத்தி நெஞ்சை ஓடடவெனவுமாம்

5. ஏழகத்தகர - மேழகம எகினமாகிய கவரி.

7 தாளொடு குயின்ற தகைசால் சிறப்பெனவே தாள்முதலான உறுப்பெல்லாம் அடங்கின, தாளொடு குயிறறுதல் - போர்க்கதவு பண்ணும் போதே தாளோடே பண்ணுதல்

8. வாயிலென்றது, ஆகுபெயராற் கதவை வாயினெடுங்கடை யாவது - முதலான தோரணவாயில

(6) துணையெனத் (பா) திரிதருமென்றது - இவை ஒன்றேடொன்று இனமல்லவாயினும் பழக்கத்துத் திரியும் (8) வாயில்.

10. வலஞசெயா - வலத்திலேயிடடு.

11. மாபோதிக்கு ஐநதுகொமபாதலாற் பணையைந்தோங்கிய வென்றார்.

அடி, 1: மலைபடு 257 அடி, 11-2 மணி 30 10

(பி - ம்.) † 'தாழொடு குயிற்றியதகை' ‡ 'மணிவணன்'

அணிதிகழ் நீழ லறவோன் றிருமொழி
அந்தர சாரிக ளறைந்தனர் சாற்றும்
இந்திர விகார மேழுடன் †போகிப்
புலவூண் டுறந்து பொய்யா விரதத்
தவல நீத்தறிந் ‡தடக்கிய கொளகை
மெய்வகை யுணர்ந்த விழுமி¹யோர் ¶குழீஇய
ஐவகை நின்ற வருகத் தானத்துச்
சந்தி யைந்துந் தம்முடன் கூடி
வந்துதலை மயங்கிய வான்பெரு மன்றத்துப்
பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்
நீரணி §விழவினு நெடுந்தேர் விழவினும்
சாரணர் வரூஉந் $தகுதியுண் டாமென
உலக நோன்பிக ளொருங்குட னிட்ட

---

12. திருமொழி - தருமம்.

13. அந்தரசாரிகள் - ஆகாயசாரிகள் அறைந்தனர் சாற்றல் - ஆகமத்தைச் சொல்லி விளங்கப் பொருள் சொல்லுதல்.

14. இந்திரவிகாரம - இந்திரன் நிருமித்தது. ஏழுடன்போகி என்றது, இவர் அன்று கழிந்தபடியாலே அவற்றை யடைவே கழிந்துபோ யென்றவாறு.

15. (பா) புலூயூன் - மச்சமாங்கிசம

15 - 7. (பா) விரததீதோடே அடங்கிய கொள்கையையுடைய விழுமியோரென்க.

18. ஐவகைநின்ற கோயில் - ஐந்து சந்திக்கும் ஐந்து கோயிலாய் நின்ற கோயில்.

19. சந்தியைந்து - ஐஞ்சந்தி, அவையாவன . பஞ்சபரமேட்டிகள் தெரு அவர —அருகர், சித்தர், ஆசாரியர்கள், உபாத்தியாயர்கள், சாதுக்கள்.

20. இவர்கள் கூடின மன்று.

22. நீரணிவிழவு - திரு அபிடேகவிழவு ; அயனம், சங்கிரமம், புதுப் புனலாட்டெனவுமாம தேர்விழவு - திருநாள்.

24. உலகநோன்பிகள் - உலகவழக்கோடு பொருந்தின நோன்பிகள் - அவர் இல்லறத்தையுடைய சாவகர்.

அடி, 13 . மணி. 21 . 35.

அடி, 14 · மணி 26 55, 28 · 70.

அடி, 15 . ‘புலவுத்துறந்த நோன்புடையாராகலாற் பொய்கூறார்’ (தொல் மரபு 94. பேர்)

அடி, 19 - 20 “சதுக்கமுஞ்சந்தியும்” (முருகு 225)

அடி, 21, பதிகம், 4 அடி, 21-5 சிலப். 15 152-4, சீவக. 384.

(பி - ம்) †‘போக்கிப், புலூயூண் டுறநத’ ‡‘தடஙகிய’ ¶‘குழீ இ யைவகை’ §‘விழுவினும்’ $‘தகுதியுண் டாகலி, னுலக’

இலகொளிச் சிலாதலந் தொழுது வலங்கொண்டு
மலைதலைக் கொண்ட பேர்யாறு போலும்
உலக †விடைகழி யொருங்குட னீங்கிக்
கலையி லாளன் காமர் வேனிலொடு
மலய மாருத ‡மன்னவற் கிறுக்கும்
பன்மல ரடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையி னெயிற்புறம் போகித்
தாழ்பொழி லுடுத்த தண்பதப் பெருவழிக்
காவிரி வாயிற் ¶கடைமுகங் கழிந்து
குடதிசைக் கொண்டு கொழும்புனற் காவிரி
வடபெருங் கோட்டு மலர்ப்பொழி னுழைந்து
காவதங் கடந்து §கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்கண்
இறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து

---

(20) இமமன்றிற (21) பிண்டிநிழலிலே (24) இட்ட (25) சிலாதல மென்க.

26 - 7 வாயிலுக்கு உவமம் மலை, தெருவுக்குவமம் யாறு. உலக விடை கழி - உலகதீதாரெல்லாரும போகலான ஊர்வாயில், தெரு வொழுங்குக்கு இடையே கழிதலால இடைகழி

28 கலை - சரீரம, அன்றிக் கலையிலாளனென்றது, கலைகளில் நின்ருன் காமனென்றவாறுமாம்

29. மன்னவன் - சோழன். இறுக்கும் - இறையிடும்.

30. மரப்பந்தர் - சோலை

28 - 31. காமன் வேனிற்காலத்தையும் தென்றலையும் சோழனுக்குதீ திறையிடும் பொழிலையுடைய எயில், இலவநதிகை - நீராவி, எயில் - சுற்று மதில், சோலையையும பொய்கையையுமுடைய எயில்

32. தண்பதப்பெருவழி - புனலாட்டுக்குப்போம் பெருவழி, திரு மஞ்சனப் பெருவழியுமாம்.

33. காவிரிக்கரையிடதீது வாயில்.

34. குடதிசைக்கொண்டு - மேற்கு நோக்கி.

35 வடபெருங்கோடு - வடகரை.

36 - 7 கவுந்தியடிகள் பள்ளியையுடைய காவிற்பொருந்தி.

அடி, 27 உலகவிடைகழி **புறநா.** 175 . 8.

அடி, 30 - 31 **மணி.** 3 . 44 - 5.

அடி, 31 இலவந்திகை . **பெருங்.** 1. 40 312; **சிலப்.** 14:76-82, **அடியார்.**

அடி, 33 : **மணி.** 22 : 43. 36. **மணி.** 11 . 5. 39 : **சிலப்.** 12 : 3.

(பி - ம்.) † 'விடைகழீஇயொருங்கு' ‡ 'மன்னவர்க்' ¶ 'கடை முகங்குறுகிக், குடதிசைக்கொண்ட' § 'கவுந்திபள்ளியோர்'

முதிராக் †கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ
ஆறைங் காதநம் மகனுட் டும்பர்
நாறைங் கூந்த னணித்தென நக்குத்
தேமொழி தன்னெடுஞ் சிறையகத் திருந்த
‡காவுந்தி யையையைக் கண்டடி தொழலும்
உருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்
பெருமகன் றிருமொழி பிறழா நோன்பும்
உடையீ ரென்னே வுறுக ணைளரிற்
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென
உரையாட் டில்லை ¶யுறுதவத் தீர்யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்
பாடகச் சீறடி பரற்பகை யுழவா
காடிடை யிட்ட நாடுநீர் கழிதற்
கரிதிவள் செவ்வி யறிகுநர் யாரோ

---

42. ஆறைங்காதம் - முப்பது காதம் ஆறைங்காதமென்றுன், அவடகு அறுகாதம் ஐங்சாத மெனருறபோலத் தோன்ற

43 கூந்தல பெயர் நக்கு - நகைத்து, நகுதல் சோக கருண தசை தொக்கதாற பிறந்த விகாரம

44 சிறையகம் - ஸ்ரீகோயிலின் ஒரு பக்கத்தே பள்ளியகம்.

47 பெருமகன் - அருகதேவன்

48 உறுகணைளரின் - துன்பமுறுமம பாவமுடையரர்போல, மிடி யாளரைப்போலவென்றுமாம்

49 கடைகழிந்து - வாசலைவிடடு.

50 உரையாட்டில்லை - சொல்லலாவதொன்றில்லை, ஒன்று - ஒரு வாசகம்

51 மூதூர்க்கண்ணே பொருளீட்டும் வேட்கையேன்; பொருள் வரைதல் வேடகையென்க, வரைதல் - தன்னிடத்து ஆக்குதல், இன்ன தற்கு மேறபட்டது தானதீதுக்கேயென்று வரைநதிடுதலுமாம்.

மேறகவுந்தியடிகள் வார்தீதை —

52. பரற்பகை உழக்கமாட்டா.

53 காடும நாடுமாகிய வழிகடக்க.

54. அரிதிவள் செவ்வியென்றது - இவள் செவ்வியின் மென்மையால் நடக்குந் தன்மையிலளென்றதாம். அறிகுநர்யாரோ - வல்லளாகவுமடுக்கு மன்றே.

அடி, 43. ஐங்கூந்தல். 11. 109, 15. 97, கலித். 96. 8, மணி. 22 : 130

(பி - ம்) † 'கிளவிமுள்ளெயிறு' ‡ 'காவுந்திகையைக்கண்டு' ¶'யுயர்தவத்தீர்'

உரிய தன்றீங் கொழிகென வொழியீர்
மறவுரை நீத்த மாசறு †கேள்வியர்
அறவுரை கேட்டாங் கறிவனை யேத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்
கொன்றிய வுள்ள முடையே ‡னுகலிற்
போதுவல் யானும் போதுமி னென்ற
காவுந்தி யையையைக் கைதொழு தேத்தி
அடிக ணீரே யருளுதி ராயினித்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேனெனக்
கோவலன் காணுய் கொண்ட விந்நெறிக்
கேதந் தருவன யாங்கும்பல கேண்மோ
வெயினிறம் பொருஅ மெல்லியற் கொண்டு
பயில்பூந் தண்டலைப் ¶படர்குவ மெனினே
மண்பக வீழ்ந்த கிழங்ககழ் குழியைச்
சண்பக நிறைத்த $தாதுசோர் பொங்கர்
பொய்யறைப் படுத்துப் போற்ரு மாக்கட்குக்
கையறு துன்பங் காட்டினுங் காட்டும்
உதிர்பூஞ் செம்மலி னெதுங்கினர் கழிவோர்
முதிர்தேம் பழம்பகை முட்டினு முட்டும்
மஞ்சளு மிஞ்சியு மயங்கரில் வலயத்துச்

---

58 - 9. மதுரைக்கு ஒன்றியவென்றதற்குப் போகவென ஒரு சொல் வருவிக்க

63. என - என்று கோவலன் சொல்ல.

64 காணுய் - பாராய் கொண்டநெறி - வழிக்கொண்டநெறி யிடத்து , இந்நெறி - காவிரி வடகரைவழி.

65. யாங்கும் பலவுள - யாங்கும் மிகவுள்ளன.

67. (பா) படர்குவமாயினென்ருள், தன்னையும் உளப்படுத்தி.

68 - 71 சண்பகம் குழியை நிறைத்த பொங்கர். போற்ரு மாக்கள் - பரிகரித்துப் போகாத மாக்கள்.

குழியைச் சண்பகநிறைத்த தாதுசோர் பொங்கர் பரிகரியா மாக்கட் குதீ துன்பந்தரினுந்தரும் , பழம்பூவானிறைத்தல பெற்றும். தாதுசோர் பொங்க ரென்றலின் , பொங்கர் - சோலையுமாம்

73. (பா) மேல்தூங்குகிற பழமாகிய பகையிலே முட்டினு முட்டுவர்.

74. வலயம் - தோட்டம்.

அடி, 56 - 7 சிலப். 13 34 - 5 68. சீவக 1416, ந மேற.

(பி - ம்) † ‘கேள்வியறவுரை’ ‡ ‘ஞதலிற்’ ¶ ‘படர்குவமாயின்’ $ ‘தாதுசேர்’

செஞ்சுஃளப் பலவின் பரற்பகை யுறுக்கும்
கயனெடுங் கண்ணி காதற் கேள்வ
வயலுழைப் படர்குவ மெனினை யாங்குப்
பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர்நாய் கௌவிய நெடும்புற வாஃள
மலங்குமிளிர் செறுவின் விலங்கப் பாயிற்
கலங்கலு முண்டிக் காரிகை யாங்கண்
கரும்பிற் ரெடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்
அடங்கா வேட்கையி னறிவஞ ரெய்திக்
குடங்கையி ஞெண்டு கொள்ளவுங் கூடும்
குறுந ரிட்ட குவஃளயம் போதொடு
பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரஞ ரெய்தி
அறியா தடியாங் கிடுதலுங் கூடும்
எறிநீ ரடைகரை யியக்கந் தன்னிற்
பொறிமா ணலவனு நந்தும் போற்ரு
தூழடி யொதுக்கத் துறுநோய் காணின்
தாழ்தரு துன்பந் தாங்கவு மொண்ணு
வயலுஞ் சோஃலயு மல்ல தியாங்கணும்
அயல்படக் கிடந்த நெறியாங் கில்ஃல
நெறியிருங் குஞ்சி நீவெய் யோளொடு
குறியறிந் தவையவை குறுகா தோம்பெனத்

---

77. யாற்றங்கரையையிட்டு வயல்வழியே போகில்.
79. நீர்நாய் எழுவாய் 80 விலங்க - குறுக்காக.
84 வேட்கை - தண்ணீர்த்தாகம. அறிவஞரெய்தி - அறிவுமயங்கி.
86 குறுதல் - பறித்தல்.
90. எறிநீரடைகரை - நீர்க்கரை, கடற்கரையென்பாரும் உளர்.
93. துன்பம் - நமக்கு வருந்துன்பம்.
91 - 3. அலவனையும் நத்தையையும போற்ருது முறையாக இடுகிற அடியொதுக்கத்தினுலே உறுநோய் அவையிறறுக்கு உண்டாமாயின், அப்பாவம தாங்கவொண்ணு தபடியால் கடறகரை வழியன்று.
95. அயல்பட - வேறுபட. 97 ஓம்புகவெனச்சொல்லி.

அடி, 82 கருமபிற தேன் · குறுந் 85 4, பெருங். 1 48 16-7; சீவக. 712 3, 1936 . 1. அடி, 86 . குறுந். 309 . 1-3

தோமறு †கடிஞையுஞ் சுவன்மே லறுவையும்
காவுந்தி யையைகைப் பீலியுங் கொண்டு
மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகெனப்
பழிப்பருஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்
கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றெடும்
சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பஃ றுரமொடு
கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஓவிறந் தொலிக்கு மொலியே ‡யல்ல
தாம்பியுங் கிழாரும் வீங்கிசை யேத்தமும்
ஓங்குநீர்ப் பிழாவு மொலித்தல் செல்லாக்
கழனிச் செந்நெற் கரும்புசூழ் மருங்கிற்
பழனத் தாமரைப் பைம்பூங் கானத்துக்
கம்புட் கோழியுங் கானகுர ணுரையும்
செங்கா லன்னமும் பைங்காற் கொக்கும்
கானக் கோழியு நீர்நிறக் காக்கையும்
உள்ளூ மூரலும் புள்ளும் புதாவும்

---

98 அறுவை - தோளிலிடும் உறி.

100. மொழிப்பொருடடெயவம - மொழியாகிய தெய்வம், பொருண் மொழி - உபதேச மந்திரம, பஞ்ச மநதிரம.

97 - 101 குறுகாதோம்பெனக் காவுந்தி கொண்டு மொழிப்பொருட டெய்வம் நமக்கு வழித்துணையாகவென்று சொல்ல வழிபோகப புரிநதோர்.

102. கரியவன - சனி. புகைக்கொடி - தூமகேது சனி தூமனுடனும்.

106. தாரம் - சந்தனம் அகில் முதலாயின.

107. கடல்வளன - "ஓர்க்கோலை . ஐநது" எதிர - வளத்தோடு எதிரக்கையாலே, கடல்வளன் காவிரியோடெதிர. கயவாய் - புகார.

109 ஓவுதல் தவிர்ந்து

110 ஆமபி - பதிதர். கிழார் - பூட்டை 111 பிழா - இடா.

114. கமபுடகோழி - ஒரு சாதி. 116. நீர்நிறக்காக்கை - நீர்க்காக்கை.

117. உள்ளூமூரலும் - உள்ளலும ஊரலும். புதா - பெருநாரை, மரக்காஞரையுமாம

அடி, 98 மணி பதி 63, 6 93. அடி, 102-4 புறநா. 35 : 6-8, 117 1-2 அடி, 106-8 . மலைபடு 527-8 அடி, 110 ஆம்பியும் கிழாரும · மதுரைக். 91-3. அடி, 114-9 . பதிற். 84 . 20-24, மணி. 8 28-34. அடி, 117. புதா பெருங். 1. 51 70.

(பி - ம்) † 'கடிகையுஞ்' ‡ 'யன்றியு, மாமபியும்'

வெல்போர் வேந்தர் முனையிடம் போலப்
பல்வேறு குழூஉக்குரல் பரந்த வோதையும்
உழாஅ நுண்டொளி யுள்புக் கழுந்திய
கழாஅமயிர் யாக்கைச் செங்கட் காரான்
சொரிபுற முரிஞ்சப் புரிஞெகிழ் புற்ற
குமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு
கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரியக்
கருங்கை விளைஞருங் களமருங் கூடி
ஒருங்குநின் ருர்க்கு மொலியே யன்றியும்
கடிமலர் கலைந்து முடிநா றழுத்தித்
தொடிவளைத் தோளு மாகமுந் தோய்ந்து
சேருடு கோலமொடு வீறுபெறத் தோன்றிச்
செங்கய னெடுங்கட் சின்மொழிக் கடைசியர்
வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணியும்
கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் †கைதொழ
ஏரொடு நின்ரே ரேர்மங் கலமும்
அரிந்துகால் குவித்தோ ரரிகடா வுறுத்த
‡பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்
தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த
மண்கணை முழவின் மகிழிசை யோதையும்

---

120 உழாநுண்டொளி - தானேபட்டசேறு. 121. காரான் - எருமை.
122 சொரிபுறம் - தினவையுடைய முதுகு
123. குமரிக்கூடு - அழியாக்கூடு கொழுமபல்லுணவு - பலவர்க்கதீ துணவு, அவரை துவரையுள்ளிட்டன
125. கருங்கைவினைஞர் - பள்ளர், பறையர். களமர் - உழுகுடி வேளாளர்.
132-5. அறுகையும் குவளையையுங் கலந்து கதிரோடு தொடுத்த மாலையை ஏரிலே சூட்டிப் பாருடைப்பனர்போல் ஏரொடு நின்ரேர்: குட்டக் கலப்பையிலே சூடடியென்றுமாம
136. அரி - அரிந்திடு சூடு.
137 முகவைபாடுதல் - பொலிபாடுதல், முகவையென்ரூர், நெல்லு முகந்து கொடுக்கப்படுதலாலே, " புகர்முகமுகவை " (புறநா 371 . 20) போல.

அடி, 121. செங்கடகாரான் . குறுந். 251 3 அடி, 123 பெரும் பாண். 246-7. அடி, 127-30 சீவக. 46. அடி, 137 . புறநா. 395 . 35. (மேற்.) 137. நன். 289, மயிலை.

(பி - ம்.) † 'கைதொழு, தேரொடு' ‡ 'பெருஞ்செந் நெல்லின்'

பேர்யாற் றடைகரை நீரிற் கேட்டாங்
கார்வ நெஞ்சமோ டவலங் கொள்ளார்
உழைப்புலிக் கொடித்தே ருரவோன் கொற்றமொடு
மழைக்கரு வுயிர்க்கு மழற்றிக ழட்டில்
மறையோ ராக்கிய †வாவுதி நறும்புகை
இறையுயர் மாட மெங்கணும் போர்த்து
மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்றும்
மங்கல மறையோ ரிருக்கை யன்றியும்
பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்
பொங்கழி யாலைப் புகையொடும் பரந்து
மங்குல் வானத்து மலையிற் ரேன்றும்
ஊரிடை யிட்ட நாடுடன் கண்டு
காவத மல்லது கடவா ராகிப்
பன்னுட் டங்கிச் சென்னு ளொருநாள்
ஆற்றுவீ யரங்கத்து ‡வீற்றுவீற் ருகிக்

---

140. யாற்றடைகரைகளிலே இவ்வோசைகளை முறையிற்கேட்டு. நீரின் - நீர்மையுடனே, உருவக் கேட்டுப்போதுகையுமாம்.

141. கேட்ட உவகையால் அவலங்கொள்ளாராய்

142. உழைப்புலிக்கொடி - புலியை இடத்திலேயுடைய கொடி.

143. மழைக்குக் கருப்பமாவது தூமம். அட்டில் - ஓமசாலை.

142 - 3. கொறறதத்துடனே மழைக்கருவையும் தோற்றுவித்து அவ் வளவிலே விளங்கிய சாலையென்க.

144. (பா) வானவருணு - சோற்ருவி, அவியிடுகிற ஆவி.

145. இறை - இறப்பு

148. காவிரிப்பாவைதன்புதல்வர் - வேளாளர்.

(150) விளைப்போரான (148) புதல்வர் (150) பழவிறலூர்களும்.

149 புரப்போர் - காக்கும் அரசர்.

151. பொங்கழி - தூற்ருப் பொலி. பரந்து - பரக்க.

152. மங்குல் - இருடசி.

(147) மறையோரிருக்கையும் (150) பழவிறலூர்களும் (152) மலையிற் ரேனறும் (153) நாடென்க.

(101) வழிப்படர்புரிந்தோர் (155) செல்லுநாளுள் ஒருநாளென்க.

156. ஆற்றுவீயரங்கம் - ஆறறை மறைக்கும் அரங்கம்: ஆவது குறை, அது சீரங்கம்; ஆறறுவியென்பாருமுளர்.

அடி, 144 : கலித். 130 9
(மேற்) 149. குறள். 1034, பரி.
(பி - ம்.) † 'வானவி நறுமபுகை' ‡ 'வீற்றுவே ருகிக்'

குரங்கமை யுடுத்த மரம்பயி லடுக்கத்து
வானவ ருறையும் பூநா ருருசிறைப்
பட்டினப் பாக்கம் விட்டனர் நீங்காப்
பெரும்பெய ரைய ரொருங்குட னிட்ட
விலங்கொளிச் சிலாதல மேலிருந் தருளிப்
பெருமக னதிசயம் பிறழா வாய்மைத்
தருமஞ் சாற்றுஞ் சாரணர் தோன்றப்
பண்டைத் தொல்வினை பாறுக வென்றே
கண்டறி கவுந்தியொடு காலுற வீழ்ந்தோர்
வந்த காரணம் வயங்கிய கொள்கைச்
சிந்தை விளக்கிற் றெரிந்தோ ளுயினும்
ஆர்வமுஞ் செற்றமு மகல நீக்கிய
வீர னுகலின் விழுமங் கொள்ளான்
கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணுய்
ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை
இட்ட வித்தி னெதிர்ந்துவந் தெய்தி
ஒட்டுங் காலை யொழிக்கவு மொண்ணு
கடுங்கா னெடுவெளி யிடுஞ்சுட ரென்ன
ஒருங்குட னில்லா வுடம்பிடை யுயிர்கள்
அறிவ னறவோ னறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் றலைவன் றருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் றேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்

---

157. மரமபயில் அடுக்கம் - மரச்செறிவு, அடுக்கம் - அரங்கத்துக்கு அடுத்தவிடமுமாம்

158 ஒரு சிறை - ஒரு பக்கத்திலே.

160 ஐயர - முன்சொன்ன உலக நோன்பிகள்

163. முன்பு சொன்ன சாரணர தோன்ற

ஐயர் [1] பட்டினப்பாக்கத்திலிட்ட சிலாதலத்தினின்று தருமஞ் சாற்றுதல் சாரணர்க்கு அடையாக்கி அவர் இங்கே தோன்றவென்க.

167. சிந்தைவிளக்கு - அவதிஞானம, என்றது திரிகால ஞானத்தை.

172 வித்தின் - வித்துப்போல

அடி, 158 மணி 4 95. அடி, 162-3 சீவக. 2746. அடி, 166 : மணி 16 72 அடி, 171 சிலப் பதி 57

[1] இக்காதை 24-ஆம அடி முதலியவறறைப் பார்க்க.

தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்ம றிகழொளி
இறைவன் குரவ னியல்குண னெங்கோன்
குறைவில் புகழோன் †குணப்பெருங் கோமான்
சங்கர னீசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோ னருக னருண்முனி
பண்ணவ னெண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
ஓதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரெனச்
சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந்தி கைதன் கைதலை மேற்கொண்
டொருமூன் றவித்தோ னெதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா
காமனை வென்ரே ஞயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்ஞ
ஐவரை வென்ரே னடியிணை யல்லது
கைவரைக் காணினுங் காணு வென்கண்
அருளறம் பூண்டோன் றிருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தா
தருக ரறவ னறிவோற் கல்லதென்
இருகையுங் கூடி யொருவழிக் குவியா
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
தலைமிசை யுச்சி தானணிப் பொருஅ
திறுதியி லின்பத் திறைமொழிக் கல்லது

188. எண்குணமென்றது அநந்த ஞானம், அநந்த தரிசனம், அநந்த வீரியம், அநந்தசுகம், அநந்தநாமம, நிட்களம, நிராயுஷ்யம், சற்பாவனை யென இவை
191. பிறவிப பொதியறை - பிறவியாகிய துவாரமில்லாத அறை.
194. ஒரு மூன்று - காமம வெகுளி மயக்கம்.
198 ஐவர் - பஞ்சேந்திரியங்கள்
198-9. மறறைத் தேவர் இணையடிகளைக் கையிடதீதே காணினும்; அந்நியமாகிய சமய தேவர்களைக் காணினுமெனவுமாம.
200 திருமெயக்கு - திருமெய்ப்பொருட்டு.
202. (பா) அருகனறவோர் - இருடிகள்.
205. தலையிடத்து
206 இறுதியிலின்பம் - அநந்தசுகம்

அடி, 184 மணி 5 71 அடி, 191 . மணி 4 105, 19 : 8.
அடி, 196-7 . மணி. 5. 77-9. (பி - ம்.) †‘ குணப்பொருட் ’

மறுதர வோதியென் மனம்புடை பெயரா
தென்றவ னிசைமொழி யேத்தக் கேட்டதற்
கொன்றிய மாதவ ருயர்மிசை யோங்கி
நிவந்தாங் கொருமுழ நீணில நீங்கிப்
பவந்தரு பாசங் கவுந்தி கெடுகென்
றந்தர மாருப் படர்வோர்த் தொழுது
பந்த மறுகெனப் பணிந்தனர் போந்து
காரணி பூம்பொழிற் காவிரிப் பேர்யாற்று
நீரணி மாடத்து நெடுந்துறை போகி
மாதருங் கணவனு மாதவத் தாட்டியும்
தீதுதீர் நியமத் தென்கரை யெய்திப்
போதுசூழ் கிடக்கையோர் பூம்பொழி லிருந்துழி
வம்பப் பரத்தை வறுமொழி யாளனெடு
கொங்கலர் பூம்பொழிற் குறுகினர் †சென்றூர்
காமனுந் தேவியும் போலு மீங்கிவர்
ஆரெனக் கேட்டீங் கறிகுவ மென்றே
நோற்றுணல் யாக்கை நொசிதவத் தீருடன்
ஆற்றுவழிப் பட்டோ ராரென வினவவென்
மக்கள் காணீர் மானிட யாக்கையர்
பக்க நீங்குமின் பரிபுலம் பினரென
உடன்வயிற் றூர்க ளொருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ கற்றறிந் தீரெனத்

---

209. உயர்மிசை - சிலாவட்டம். ஓங்கி - எழுந்திருந்து.
213. பநதம - ஸம்ஸாரம்.
215. நீரணிமாடம - பள்ளியோடம், போகி - அதனுலேபோந்து.
219. வம்பப்பரதீதை, வம்பு - புதுமை, பரதீதைத்தன்மைக்குப் புதியவள் வறுமொழியாளன் - பயனில சொல்லுவான்.
221-2. காமனும தேவியும்போலும் இவராரெனக்கருதி, போலும் : ஒப்பில்போலி
223 நோற்றுணல் - பட்டினிவிட்டுணல்.
224. ஆறறுவழி - நெறியிடதீது
225 மானிடயாக்கையரென்றது - நீங்கள் நிஜனதீத காமனும் தேவியு மல்லரென்றவாறு
226. பரிபுலம்பினர் - செலவால் வருந்தினர்

அடி, 215 'நீரணி காண்போர் நிரைமாட மூர்குவோர்' (பரி. 10 : 27) ; 'நீரணிமாடதீது நிலாநெடு முறறதீது' (பெருங் 1 40 17)
அடி, 219 சிலப் 16 63, குறள் 1311, மணி 10 22. அடி, 220 தொல் முதற் சூதீதிரவிருதீதி, மேற அடி, 223 மணி 18 122. அடி, 226 மலைபடு. 497, மணி. 16 57. (பி - ம்.) † 'சென்றுழிக்'

தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க
எள்ளுநர் போலுமிவ ரென்பூங் கோதையை
முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகெனக்
கவுந்தி யிட்டது தவந்தரு சாபம்
கட்டிய தாதலிற் பட்டதை யறியார்
குறுநரி நெடுங்குரற் கூவிளி கேட்டு
நறுமலர்க் கோதையு நம்பியு நடுங்கி
நெறியி னீங்கியோர் நீரல கூறினும்
அறியா மையென் றறியல் வேண்டும்
செய்தவத் தீர்நுந திருமுன் பிழைத்தோர்க்
குய்திக் கால முரையீ ரோவென
அறியா மையினின் றிழிபிறப் புற்றோர்
உறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்
பன்னிரு மதியம் படர்நோ யுழந்தபின்
முன்னை யுருவம் பெறுகவீங் கிவரெனச்
சாபவிடை செய்து தவப்பெருஞ் சிறப்பிற்
காவுந்தி யையையுந் தேவியுங் கணவனும்
முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்

229-30 புதைத்து நடுங்காநிறப

234 பட்டதையறியார் - மனத்தில் இவர் (கவுந்தியடிகள்) நினைத்த தாதலால் அறிந்திலர்

235-40 பின்பு அறிந்தபடி அவர் கண்முனனே நரியானபடி யாலும, பொல்லாங்கு கூறினமையாலும், அவவிடத்து இவரலது வேறு சாபமிட வலலாரிலலையாகலானும, இச்சாபம இவராலேவநததென்று இவர் (கோவலனும கண்ணகியும) அறிநதார, அறிந்து உயதிக்காலம் உரையீரோவெனறார்

242 நொசசி - மதில, பதணமுமாம, என்றது காவல்வேண்டாத அரணென்றவாறு

243. படரநோய் - உறழ்ச்சியாலுண்டான நோய்

247-8 முறம - சுளகு வாரணம - யானை, கோழி, புறத்தே சிறையையுடைய கோழி - உறையூர, வாரணம ஆகுபெயர் யானையைக் கோழிமுருக்கலால கோழியென்று பெயராயிறறு. யானையைச் சயித்த கோழி தோன்றினவிடம வலியுடைத்தெனறு கருதி அவவிடத்து அதன்பெயராலே சோழன ஊர்காண்கின்றபொழுது சிறையும கழுத்தும மாக ஆக்கியவதனால புறமபே சிறையையுடைய கோழியெனறுயிறறு

அடி, 240 மணி 25 5 அடி, 242 "நொச்சி வேலித் திதத னுறந்தை" (அகநா 122 21)

அடி, 247 முறஞ்செவி வாரணம் கலித் 42 2, புறநா 339 : 13, மணி. 19 . 121. (மேற்.) 247-8 . சிறுபாண். 83, ந

கட்டுரை

முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
தொடிவிளங்கு தடக்கைச் சோழர்குலத் துதித்தோர்
அறனு மறனு மாற்றலு மவர்தம்
பழவிறன் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவும்
†ஒடியா வின்பத் தவருறை நாட்டுக்
குடியுங் கூழின் பெருக்கமு மவர்தந்
தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும்
பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலும்
அரங்கு மாடலுந் தூக்கும் வரியும்
பரந்திசை ‡யெய்திய பாரதி விருத்தியும்
திணைநிலை வரியு ¶மிணைநிலை வரியும்
அணைவுறக் கிடந்த யாழின் ருருதியும்
ஈரேழ் சகோடமு மிடநிலைப் பாலையும்

---

3 அறன் - தருமாசனம் மறன் - இமயத்துப்புலிபொறித்தது; சிலப் 5 97 - 8, ஆறறல்-அமராபதிகாத்தது, 6 14

4 மூதூர்ப்பண்பு - காவிரிபபூமபடினதீதுப்பண்பு

5 விழவு - நிதிரவிழவு விண்ணவர் வரவு - தேவர்கள் வரவு

7 கூழின் பெருக்கம்-கவரிசசெநநெறகாய்த்தலையிற கூட்டின் நெற் சொரிதல் சிலப் 10 123 - 4

6 - 7 நாட்டுக்குடி - உழவிடைவிளைப்போர், சிலப் 10 150.

8 காவிரிச்சிறப்பு - ஆறறுவரி, 7 2 - 4, 25 - 7

9 பொய்யா வானம புதுப்புனல் பொழிதல - மழைக்கருவுயிர்த்தல்; 10 143

10. அரங்கு மாடலும் - அரங்கேற்றுகாதையிற கூறின

(பா) தலைவரியியலபு "திங்கண்மாலை" முதலான முகமுடை வரிகள், 7 2 - 4

11 பாரதிவிருத்தி - கடலாடுகாதையிறகூறிறறு (பதினேராடல்)

12 திணைநிலைவரி - "புணர்துணையோடாடுமு" எனறன் முதலா யின, சிலப் 7 3, இணைநிலைவரி - அல்லாத நிலைவரி முதலாயின

13 (பா) யாழின் பகுதி - வேனிற்காதையிறசொன்ன "உழை முதற கைக்கிளை" (32) முதலாயின

14 (பா) இடைநிலைபபாலை "கோடிவிளரி மேற்செம் பாலை" முதலாயின, 3 88.

அடி 1 சிலப் 23 கட்டுரை, 1

(பி - ம்) †'ஒழியா வின்பதீ தவருடை' ‡'யேத்திய' ¶'கிணை வரியுங்'

தாரத் தாக்கமுந் தான்றெரி பண்ணும்
ஊரகத் தேரு மொளியுடைப் பாணியும்
என்றிவை யனைத்தும் பிறபொருள் வைப்போ
டொன்றித் தோன்றுந் †தனிக்கோ ணிலைமையும்
ஒரு பரிசா நோக்கிக் கிடந்த
புகார்க்காண்டம் முற்றிற்று

வெண்பா

காலை யரும்பி மலருங் கதிரவனும்
மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
அகழா லமைந்த வவனிக்கு மாலைப்
[1] புகழா லமைந்த புகார்

---

15 தாரதீ தாக்கமுந் தான்றெரி பண்ணும் . "புறதீதொரு பாணி யிற் பூங்கொடி மயங்கி" என்றது முதலாயின , 8 . 44

16 ஊரகத்தேர் : இந்திரவிழவூரெடுத்த காதையிற சொன்ன ஊரின் வண்ணம.

ஒளியுடைப்பாணி "வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணி" முதலாயின , 10 131

17. பிறபொருள்வைப்பு . . முதலாயின

முதலாவது

புகார்க்காண்டம் அரும்பதவுரையுடன் முற்றிற்று

---

[1] மணி. 1 . 2.

(பி - ம்.) † 'தன்கோ ணிலைமையும்'.

1 - 3 வான்கண் விழியா கடைநாட் கங்குல்

(இ - ள்) உலகிற்குக் கண்ணுகிய ஆதித்தன் தோன்றி விளங்காத வைகறையென்னும் யாமத்திடத்து மீனெடு அழகுபெறருமுகும் வெண் மதியானது விசுமபினின்றும் நீங்கிற்றுக் கரிய இருள கடைக்கணின்ற கங்குற்பொழுதிலென்க.

என்பது அந்தச் சித்திரைத் திங்கட் புகுதிநாள் - சோதி, திதி - மூன்றும பக்கம, வாரம - ஞாயிறு இத்திங்களிருபதிதெட்டிற சித்திரை யும் பூரணையுங்கூடிய சனி வாரத்திற கொடியேறறி "நாலேழ் நாளி னும" (மணி 1 8) எனபதனன் இருபதிதெடடு நாளும விழா நடந்து கொடியிறக்கி வைகாசி இருபதிதெடடினிற் பூருவ பக்கத்தின் பதின்மூன் றும பக்கமும் சோம வாரமும் பெறற அனுடத்தில் நாட்கடலாடி ஊடுத லின் வைகாசி இருபதிதொனபதிற் செவவாயக்கிழமையும் கேட்டையும் பெறற நாசயோகத்து நிறைமதிப் பதினலாம் பக்கத்து வைகறைப் பொழுதினிடத்து நிலவுபடட அந்தரத்திருளிலேயெனறவாறு அது பூருவ பக்கமென்பது தோனறக் 'காரிரு ணின்ற கடைநாட் கங்குல்' என்றார், "குணமுதற றேன்றிய வாரிருண் மதியிற், றேயவன கெடுக நின் றெவ்வ ராக்கம்" (195-6) என இருண்மதியென்றார் **மதுரைக் காஞ்சி**யுள்ளும கண் - இறைவன்கண் எனபாருமுளர் விழித்தல் - விளங்குதல், அது செய்யாத வைகறை, ஆகுபெயர, வைகல் - துயிறல; அறல - அறையாயிற்று, "பொறியறை" (திரி 15) போல [1]

4. ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப —

(இ - ள்) முன் செயத தீவினை முறையானே வந்து இவனுள்ளத் தைச் செலுத்துதலானே யென்க

கடைஇ - செலுத்தி யெனறுமாம்

5 - 8 ஏழகத் தகரும் நெடுங்கடை கழிந்து

(இ - ள்) ஏழகமாகிய தகரும எகினமாகிய கவரியும் தூய மயிரினை யுடைய அன்னமுமாகிய இவை ஒன்றேடொனறு இனமல்லவாயினும் இனம்போலே விடாது திரியும் தாளோடுகூடப்பண்ணப்படட பெருமை பொருந்திய சிறப்பினையுடைய மிகவும பெரிய கதவையுடைய இடைகழி யைக் கழிநதென்க

நெடுவாயிற்கடை - பெரிய கதவையுடைய தலைக்கடை தகர் முதலி யன இவள் வளர்த்தனவாகலின், இவளைத் தமமினமென்று கருதித் திரியு மெனவுமாம், வாயிறகணைழுதினவற்றை இனமெனக்கருதித் திரியு மெனவுமமையும். தாளொடு குயின்றவென்றார், போர்க்கதவாகலின் இனியிளகாமற பண்ணுகின்றபோதே கூடபபண்ணுதலான். ஏழகத்தகர் முதலியன இருபெயரொடடுப் பண்புத்தொகை வாயில் - கதவு கடை கழிந்தென்றார், மனையின் பெருமையும காவன்மிகுதியும் தோன்ற. இனி, இவன் அன்று கழிந்தானெனினும் அமையும

[1] இவவிசேடவுரையிலுள்ள காலவரையறை பொருந்தாததுபோல் தோற்றினும் பிரதிகளிலுள்ளவாறே பதிபபிக்கபபட்டது.

8 - 10 ஆங்கு . . வலஞ்செயாக்கழிந்து

(இ - ள்.) அங்ஙனம் வாயில் கழிந்தபொழுதே அரவணையின்மீதே அறிவோடு துயிலகொள்ளும் மணிவண்ணனென்னும் திருநாமத்தை யுடைய திருமால் கோயிலை வலஞசெய்து கழிந்தென்க,

ஆவது வலத்திட்டேகுதல். அணி - அழகு அறிதுயில் - யோகநித் திரை. மணிவண்ணன் . பெயர்.

11 - 4. பணையைந் தோங்கிய ஏழுடன் போகி

(இ - ள்) ஓங்கிய ஐந்து பணையினையும் பசிய இலையினையுமுடைய [1]மாபோதி நிழலிலெழுந்தருளிய அறவோனுகிய புத்தன் அருளிச்செயத ஆகமத்தை ஆகாயசாரிகள மறையவிருந்தோதி யாவர்க்கும விளங்கப் பொருளுணர்த்தபபடும [2] இநதிரனுல நிருமிக்கப்பட்ட விகாரங்களேழினை யும அடைவேகண்டு அவறறைக் கழிநதுபோயென்க.

அவை அவ்வூர்ப் [3]புத்தசைத்தியத்து இந்திரன் நிருமித்தனவாகிய ஏழரங்கு. மாபோதி ஐநதுபணையது இயல்பு திருமொழி - ஆகமம். அறைநது சாறறுதல் - [4]பாடமோதிப் பொருளுரைத்தல். விகாரம - கையாற கருவியாற பண்ணுது மனத்தால் நிருமித்தல

15 - 25 புலவுண்டுறந்து தொழுது வலங்கொண்டு

(இ - ள்) புலாலாகிய ஊனைத் துறநது பொய் கூறுமையாகிய விர ததோடு பொருநதி [5]அழுக்காறு அவா முதலியவறறைக் கைவிடடு அற நூல் முதலியவறறையறிநது ஐமபுலனையுமடக்கிய கோட்பாட்டையுடை யராய் உண்மை வகையுணரநத சீரியோர் திரண்ட ஸ்ரீகோயிலில் பஞ்ச பரமேட்டிகள நிலைபெறற ஐநது சந்தியுங் கூடி வந்து, தலமயங்கி யிருக் கின்ற மிக்க பெரிய மன்றிற பூவையுடைய பிண்டியினது அழகுகிளரும் நிழறகண்ணே விழு அயஞதிகளிலும விழவுகளிலும ஆகாயசாரிகள் வரதிகுமெனறு சாவகரெலலாம கூடியிடபபட்ட விளங்காநினற ஒளியை யுடைய சிலாவடடத்தை இவரகள் தொழுது வலங்கொண்டென்க.

புலவுண் ← புலாலோடே உண்ணும ஊணுமாம்

" புலையுண் " பாடமாயிற புலையருண்ணும ஊனென்க விரததது - விரததீதோடே அவலம - அழுக்காறு அவா முதலியன அறிநது - அறியப்படும அற நூல்களை அறிநது பஞசபரமேடடிகளாவார — அருகர, சித்தர், உபாதியாயர், ஆசிரியர, சாதுக்களெனவிவர்.

இனி, ஐவகைநினற அருகத்தானத்துச சநதிமன்றென்பதறகு ஐநது ஸ்ரீசோயிறசநதி கூடிய மன்றெனபாருமுளர் பொன் பொலிவாதலன்றிப்

---

[1] மாபோதி = மஹாபோதி, கௌதம புத்தருக்கு ஞானோதயமான இடத்துளள அரசமரம " போதிமூலம " (மணி 30 10) என்பதன் குறிபபைப் பார்க்க

[2] சிலப் 27 92

[3] புத்தசைத்தியம் - பௌத்த வித்தியாசாலை , புத்தனுலயமுமாம்.

[4] பாட மோதல் - மூலத்தை விளங்கச் சொல்லுதல்.

[5] " அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொ னன்கும், இழுக்கா வியன்ற தறம் " (குறள். 35.)

பொலம பொலிவாகாைமயின் அருகனுணையான் எப்பொழுதும் பொற் பூவைப் பூக்கும பிண்டியென்க. சிலாதலம - சந்திரகாந்தக்கலலாற் படுத்தது நீரணி விழவு - அபிடேக விழவெனினும அமையும்

26 - 7 மலைதலைக் கொண்ட ஒருங்குட னீங்கி

(இ - ள்) மலையிடத்தே தலையையுடையதோர் பெரிய யாறுபோலும் உலகிலுள்ளோராயவர் போக்குவரவு செயதறகு அமைந்த ஊர்வாயிலை அக்காலத்துப் போவாரோடு கலநதுபோய் அதனைவிடடு நீங்கியென்க.

உலகவிடைகழி - ஊர்வாயில் இடையே கழிதலின், அவ்வாயில் இடைகழியாயிற்று. கோயிறகோபுரத்தை மலையாகவும் அதனைடு மணந்து கிடந்த தெருவை ஆருகவும் உவமித்தார்.

28 - 31 கலையி லாளன் எயிற்புறம் போகி

(இ - ள்) மன்னவரக்குக் காமன் வேனிலோடு தென்றலையும் திறையாக இடுதற்குப் பொருநதிய பல மலர்களை நிரைத்த நல்ல மர நிழலையுடைய இலவந்திகையினது எயிற்குப் புறத்திலே போயென்க.

கலையிலாளன் - அநங்கன், கலை - சரீரம். காமர் - அழகு. பந்தர் - நீழல். இலவந்திகை - நீராவியைச் சூழந்த வயந்தச்சோலை, அஃது அரசனும் உரிமையுமாடுங காவற்சோலை, " இலவந் திகையி னெயிற் புறம போகின், உலக மன்னவ னுழையோ ராங்குளர் " (3. 45-6) எனருர் **மணிமேகலையிலும்.**

32 - 3 தாழ்பொழி லுடுத்த கடைமுகங் கழித்து

(இ - ள்) இருமருங்கும் சோலை சூழ்ந்த புதுப்புனலாடப்போம் பெரிய வீதியையுடைய காவிரிக்கரையில் திருமுகத்துறை கழிகின்ற வாயிலையும கழிந்தென்க.

கடைமுகங்கழிந்தென்ருர் , காலையில் நாணீராடுவோர் பிறர்முகம் நோக்காது போதறகு மறைந்து கழிவர் , இவரும அவ்வாறு கழிந்தாரென்றறகு.

34. குடதிசைக்கொண்டு —(இ - ள்.) மேற்றிசையை நோக்கிக் கொண்டு,

34 -,5. கொழும்புனற் காவிரி பொழினுழைந்து

(இ - ள்.) வளவிய புனலையுடைய காவிரியினது பெரிய வடகரையிற் பொழிலைக் கழிந்தென்க.

கோடு - கரை. நுழைதல் - கழிதல், அன்றி இளமரக்காவாதலால் தாழ்ந்த கோட்டிடை நுழைந்துபோயெனவுமாம

36 - 41 காவதங் கடந்து வினவ

(இ - ள்) நறிய ஐவகைக் கூந்தலையுடையாள் அங்ஙனம காதமென்று சொல்லப்படும் எல்லையைக் கடந்து சென்று கவுந்தியடிகள் இருக்கின்ற பளளிக்கு அயலதோர் பொலிவினையுடைய செறிந்த இளமரச் சோலையளவுஞ் சென்று பொருந்தி அவ்விடத்தே இனி இஃது இறுமெனத் தக்க கொடிபோலும் இடையும அடியும மிகவும வருந்தி மேல இளைப்பாற்

குறுக வுயிர்த்து முற்றுத மழலை மொழியாலே கூர்த்த எயிறிலங்க மதுரையெனனு மூதூர் யாதுதானென்று கேடபவென்க.

காவதம - காதம், பகுதிப்பொருள் விகுதி. பொதும்பர் - மரச் செறிவு, கோடரமென்றுமாம்.

42 - 3. ஆறைங் காதம் நக்கு

(இ - ள்) நீ கூறிய மதுரை நம் அகன்ற நாட்டிற்குமேல் ஆறைங் காவதங்காண், இனி அண்ணிதெனறு கூறி நக்கென்க.

யாதென்றவட்கு முப்பதென்னும் பொருள் மறைந்து காதம் ஆறு காதம் ஐந்தென்றுறபோலிருத்தறகு ஆறைங்காதமெனருன். [1] நகுதல் - துன்ப நகை. கூந்தல். விளி

44 - 5. தேமொழி தொழலும்

(இ - ள்.) அங்ஙனம் வினவின தேமொழிதன்னோடு சென்று தவ வேலிக்கண் இருந்த கவுந்தியடிகளைக் கண்டு அடிதொழுதலுமென்க.

சிறை - பள்ளியென்றுமாம், ஸ்ரீகோயிலின் ஒரு பக்கமுமாம.

8 - 45 கழிந்து கழிந்து போகிக்கொண்டு நீங்கிப் போகிக் கழிந்து தூழைந்து கடந்து பொருநதி நக்குக் கண்டு அடிதொழலுமென்க.

46 - 9. உருவுங் குலனும் கருதிய வாறென

(இ - ள்) இவர்கள் தொழுதார்களாக, அழகும் குடிப்பிறப்பும் ஒழுக்கமும் இறைவனூலிற் கூறிய விரதந் தப்பாமையுமென்னும் இவறறையெல்லாம ஒருதலையாகவுடைய நீங்கள தீவினையாளரைப்போல நுமதிடத்தைக் கழிந்து வருவதறகுக் கருதியதென்னேவென்று கேட்ப வென்க.

பெருமகன் - அருகதேவன். திருமொழி - அவனருளிச் செய்த ஆகமம் உறுகணுளர் - மிடியாளரென்பாருமுளர், கடைகழிதல் இவர்க்கு மரபனமையிற கழிந்தென்றார்.

இவ்வும்மைகள் எண்ணுக்குறித்தனவெனினும் சிறப்புப்பொருண்மை தோன்ற நின்றன

50 - 51. உரையாட்டில்லை வேட்கையான்

(இ - ள்) மிக்க தவத்தினையுடையீர், இவ்வினுவிறகு ஓர் உதிதர மில்லை, ஆயினும் யான் கருதியதொன்றுண்டு, அது யாதெனின், மதுரையாகிய மூதூரிற சென்று நிருமித்த பொருளைத் தேடக்கடவோ மென்னும வேடகையை யுடையேனுயினேனென்று சொல்லவென்க.

முன்னர்க் காதையில் "சென்ற கலனே, டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன்" (9 74-5) என்றுனுகலின், அதனை வரைபொருளென்றுன். இனி நியாயதிற்றேடும் பொருளெனினும் அமையும், அன்றி இதறகு இதுவுணபபொருட்கு மேறபடடதே தானமபண்ணக் கடவேனென வரைநத பொருளென்பாருமுளர் எனவென ஒருசொல் வருவிக்க.

இனிக் கவுந்தியடிகள் கூறுவார் .—

---

[1] "இடுக்கண் வருங்கா னகுக" குறள். 621.

52 - 4 பாடகச் சீறடி அறிகுநர் யாரோ

(இ - ள்) இனி அங்ஙனம்கருதீதாயின், இவள்சீறடிகள் பருக்கை யாகிய பகையை வெல்லமாடடா, ஆதலால நீர் காடுநாடுமென்னும இவ் வழியைக் கடதீதறகு இவள செவ்வி ஏறறதனறு, இனிஊழ என்செயது முடிக்குமோ? அதனை அறிவாராரெனருரென்க.

என்றகருதீது · அடி பரறபகையுழவா, வழி காடிடையிட்டநாடு; இவள அதறகேறற தன்மையளலலள் இனி ஊழஎனசெயயுமோ, இதனை யார் அறியவல்லாரெனப் பரிவுறல்தோன்ற நின்றது.

55. உரிய தன்றீங் கொழிகென வொழியீர்

(இ - ள்) இவையே யன்றியும் குடிப்பிறப்பிற்கும் இவளை ஒருங்கு கொண்டு சேறல் ஏலாதாகலின் இனிச் செலவை ஒழிமினென்று யாமொழிப் பவும ஒழிகின்றிலீராயினீரென்ரு ரென்க.

ஒழிகெனவொழியீரென்பதற்கு இவர்க்கு எதிர்வதறிந்து கூறினு ரெனின, "தவந்தரு சிறப்பிற கவுந்தி . உண்ணு நோன்போ டுயிர்பதிப் பெயர்தீததும்" (27 79-83) என நீர்ப்படையுள் மாடலன் கூறுத லானும, அடைக்கலக்காதையில், "தன்குல வாணர், அரும்பொருள் பெறுநரின் விருநதெதிர் கொண்டு, கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுதீதுவர், உடைப் பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும், இடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்" (15 126-30) எனவும், "தாயு நீயே யாகித் தாங்கு" (15 136) எனவும், "மிகப்பே ரின்பந்தருவது கேளாய்" (15 150) எனவும் ஒரு பொழுதிறகு இத்துணை ஓமபடையெலலாம் கூற வேண்டாவாகலானும இவர்க்குத் தவப்பயனலே சபித்த லன்றிக் கால வுணர்சசியின்மையுணர்க

56 - 63 மறவுரை நீத்த தீர்த்தேனென

(இ - ள்) மறவுரைகளை நீதிதிருக்கும் குற்றமற்ற பொருட்பயனை யுடையவர்தம் நூலைக்கேட்டு அந்த ஆகமப்படியே அறிவனையேதீதுதற் குத் தெற்கின்கண் உள்ள தமிழ்நாட்டின்கண்ணதாகிய குறறந்தீர்ந்த மதுரைக்குப் போதறகு முன்னே ஒருப்பட்ட உள்ளமுடையேனதலின், யான்போதுவேன், நீருமம போதுமினென்ற கவுந்தியடிகளைக் கையால் தொழுது நாவானேதீதி, அடிகளே! நீரே இங்ஙனம அருள்செய்வீராயின் இவ் வளைபொருந்திய தோளினையுடையாளுடைய துயரெல்லாம் இப் பொழுதே போக்கினேனன்ரேவென்று சொல்லவென்க.

நீயிரே இதுசெய்வீராயினென்றது ஒரு வழக்கு ஏகாரதீதை இசை நிறையாக்கலுமொன்று தொடி - வளைவு, "தொடிக்கட் பூவை" (சீவக. 932) என்ருராகலின்

நீதீதென்றும் பாடம்.

64 - 5 கோலன் காணுய் பலகேண்மோ

(இ - ள்.) கோவலனே! நாம் போவதாகவுட்கொண்ட இந்நெறி யிடதீது வருதீததீதைதீ தருவன எவ்விடதீதும் பலவுள, அவற்றை நீயறியாய், ஆதலால், யான் சொல்லக் கேட்பாயாகவென்ருரென்க.

காணைய - நீ முன்பு அறியாய் இந்நெறி - வடகரைவழி. மோ • முன்னிலை யசை.

66 - 71 வெயினிறம் பொருஅ . காட்டினுங் காட்டும்

(இ - ள்) வெயிலினது நிறத்தைக் கண்ணுறபார்க்கவும் பொருத இம் மெல்லிய இயலபினையுடையாளைக் கொண்டு நாம பூப்பயிலும் தண்டலை யூடு போகக்கடவேமென்பேமாயின் , அவ்விடத்து நிலமபிளக்குமபடி இடங்கொண்டு கீழ் வீழ்ந்த வள்ளிக்கிழங்கை அகழ்நதுகொண்ட குழி களைச் சண்பக மரங்கள் நிறைத்த பூநதாதுசேர்ந்த பொங்கர் பொயக் குழிப்படுவித்து அவவிடங்களை அறிந்து பாதுகாத்துச் செல்லாத மாக் கடகுச் செயலறுதியாகிய துன்பத்தைக் காட்டுதலைச் செய்யினுஞ் செய்யு மென்ருரென்க.

பொங்கர் - ாண்டு வாடற்பூ அதுபோர்த்தலாற பொயயறைப் படுத் தென்ருர் , " பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கு " (12 ' செமபொன் வேங்கை ') என்ப மேலும. கையறுதுன்பம - மீளாத்துன்பமுமாம். காட்டல் - தருதல் பொங்கர் படுத்துக் காட்டுமென்க

72 - 3. உதிர்பூஞ் செம்மலின் முட்டினு முட்டும்

(இ - ள்) அங்ஙனமுதிர்ந்த செம்மற்பூ மறைத்த குழியுள்ளவழி நாடு தற்கு நிலனேக்கி ஒதுங்கிச் செல்வோரை முறறிப் பழுத்து விண்டு தேனெழுகும பலாப்பழங்கள் தாழந்த கோடடின்கண் இருநது பகை போல முடடுதலைச் செய்யினுஞ் செய்யுமென்ருரென்க

இனித் தேமென்பதனை இனிமையாக்கித் தெங்கம்பழம் முட்டுமெனி னும் அமையும ; பழமபகையாயெனப் பண்பொட்டு விரிக்க.

முட்டினுமுட்டுவரென்றது பாடமாயின், கழிவோர் செய்யினுஞ் செய்வாரென்க , உமமையை ஐயவுமமையாக்கிப் பொருளுரைக்க. படர் குவமெனினேயெனக் கழிவோர்கருதீதைக் கொண்டு கூறினர், உலகிய லாகலான்.

74 - 5. மஞ்சளுமிஞ்சியும் பகையுறுக்கும்

(இ - ள்) அவ்வாறன்றி வெள்ளிடைப் போவோமெனின், ஆண்டு மஞ்சள் முதலியன தமமில் தலைமயங்கிய பிணக்கத்தையுடைய தோட் டங்களிற பாதிதோறும பலவின் செஞ்சுளைகளினுள்ள வெண்காழாகிய பருக்கைகள் இவள் மெலலடிக்குப் பகையாய் உறுத்தலைச் செயயுமெனரு ரென்க.

வலயம் - பாதி. வலயதோடு பரலும் பகையாயுறுக்குமெனினும் அமையும உறுக்கும - உறுத்தும

என்ற கருதீது . மஞ்சள் முதலியன நிலவண்மையான் முற்றிப் பரு வஞ் செயதமுளை சருகின்மறைநது கிடநதவறறேடு பரலும உறுதீது மென்றதாம.

76 - 7 கயனெடுங் கண்ணி படர்குவ மெனினே

(இ - ள்.) கயல்போலும் கண்ணினையுடையாள் காதலிக்கப்பட்ட கேள்வனே ! அங்ஙனம சோலையும் தோடடமுமாகிய கரைவழியன்றி வயல்வழியே போகக்கடவேமென்பேமாயின்,

77 - 81. ஆங்கு காரிகை

(இ - ள்) தம்மிடத்துமலர்ந்த பூக்களின்மணம் கமழாநின்ற குளங் களில நீர்நாய பொருகின்ற கயல்கள் வெருவியோடவோடிக் கௌவப் பட்ட நீண்ட முதுகையுடைய வாளை மலஙகுகள நெளியுஞசெறுவிற் குறுக்கிடப் பாயுமாயின், இக்காரிகை கலங்குதலை அடையவுங் கூடு மென்றுரெனக

நீர்நாய கௌவிய வாளை பொருகயலோட்டிப் பாயினெனினும் அமை யும் இதனுறசொல்லியது மீனிரைதேரும நீர்நாய்காணினும, இடையே பொருகயலகள உகளக்காணினும, வாளை பாயக்காணினும, மலங்கு மிளிரக் காணினும் மனத்திற கலஙகலுமுண்டு இக்காரிகையென்றதாம.

81 - 5 ஆங்கண் கொள்ளவுங் கூடும்

(இ - ள்.) அஃதன்றியும், [1] கரும்பல்லது காடின்மையான் அவ் விடத்து உளதாய [2]கருமபின்வைதீத பெருநதேனடைகள் முறறி நெருங் குதலானே தேன் அழிநதொழுகிச் சுரும்புசூழப்பட்ட பொய்கையின் நலலநீரோடு சென்று கலநதுவிடும, ஆதலான அதனை அறியாமல தணி யாத நீரவேட்கையான் இவள் தன்குடங்கையால் முகந்துகொண்டு பருகவுங் கூடுமெனரு ரென்க.

குடங்கையாவது ஐந்துவிரலுங்கூட்டி உட்குழிப்பது; எனனை? "குடங்கை. உடகுழிபபதுவே" (2 17, அடியார்) எனறுராகலின். இதனுறசொல்லியது நமது [3]தரிசனதீதுக் கடியப்பட்டவாற்றுல தேனுண் டலைப் பரிகரிக்கவென்றதாம் எனவே ஊனையும் உடன கூறிறரும். மேலும் இவ்வாறு வருவனகொள்க

86 - 9 குறுந ரிட்ட இடுதலுங் கூடும்

(இ - ள்) கலைபறிப்பார் பறிதீது வரமபிலிட்ட குவளைப்பூவுடனே தம் மெய்யிற பொறியையும வரியையுமுடைய வண்டினம மதுமயக்கதீ தாற் போக அறியாது உளளொடுங்கிக்கிடப்பனவற்றை வழிச்செல் வருதீததாலே நீர் உணர்வுமயங்கி வறும்பூவெனக்கருதி அவற்றின்மேல் அடியிடவுங் கூடுமென்றுரென்க.

இதனுறசொல்லியது உயிர்க்கொலைபுகாமற பரிகரிக்கவென்பதாம்

90 - 93 எறிநீ ரடைகரை. . . ஒண்ணு

(இ - ள்) எறியுநீரையுடைய பெருவாய்க்காலினது அடைகரை வழியே போகக்கடவேமென்றேமாயின், அவவடைகரை நீரிலுள்ளன வாகிய பொறிகளின் அழகையுடைய அலவனும் நந்தும் உள்ளவழி யறிந்து பாதுகாவாது முனபு நடக்கு முறைமையான் அடியிடடு நடக்கும் நடையின் அவைதாம உறக்கடவநோயை நமமாலுறுமாயின் அதனுல் நமக்கு வரும் கொலைப்பாவம நம்மால் தாங்கவுமொண்ணுது.

---

[1] "கருமபலாற் காடொன் றில்லாக் கழனிசூழ் பழன நாடும" (சீவக. 2902.) [2] பெருங். 1. 48 146 - 7 [3] தரிசனம் - சாஸதிரம்

எறிநீர் - வாய்த்தலையினின்றும் குதித்துவரும் வாய்க்கால்நீர். இயக்கம் - வழி நந்து - ாண்டு நத்தை ஊழ் - முறைமை. ஒதுக்கம - நடை. நோயென்ருர், கொலையென்று வாக்காற்கூறவுமாகாமையின் இக்கொலைப் பாவம ஒன்ருலும் கழுவப்படாது, அதுவேயுமன்றி மறுமைக்கண் நரகத்திலுறும துன்பமு ம நம்மால தாங்கலாமளவிறறன்றென்பதனை, உம்மை எச்சவும்மையாயிறறு. அடைகரை - கடற்கரையெனபாருமுளர்.

94 - 7. வயலுஞ் சோலையும் குறுகா தோம்பென

சோலையுமெனவே ஒருசார்வுபற்றித் தோட்டமும் அடங்கிற்று. வயலும் சோலையுமென்பனவற்றைக் கூறிய முறையானே எதிர்நிரனிறை யாகக் கொள்ளுவாருமுளர்.

(இ - ள்) ாண்டுக்கூறிய வயலும் ஆண்டுக் கூறிய சோலையுமல்லது வேறுபடக்கிடக்குநெறி மேல் நாமசெல்லுகின்ற இடத்தில் இல்லை, ஆதலான், நெறிதித குஞ்சியையுடையாய்[1] நீ நின்னேவிருமபிய மனைவியோடே அவ்வவ்விடங்களைக் குறிப்பானறிந்து அவை †அபகாரங்களுருமற் பாதுகாப்பரயாகவென்ருரென்க.

வெய்யோளுக்குக் குறுகாமலெனினும் அமையும்.

காட்டினுங்காட்டும், முட்டினுமுட்டும், பரற்பகையுறுக்கும், கலங்கலுமுண்டு, கொள்ளவுங்கூடும, இடுதலுங்கூடும, தாங்கவுமொண்ணை; ஆகலாற் குறியறிந்து அவையவை குறுகாதோமபென்ருரென்க.

இங்ஙனம மென்மைத்தன்மைகூறுவார், வருணனைகளையும் உடன் கூறினரென்க இத்துணையும கவுந்தியடிகள் தமது பள்ளிக்கண் இருந்து கூறினரெனவுணர்க. வயலுமெனவே வாயக்காலுமடங்கிறறு.

98 - 101 தோமறு கடிஞையும் வழிப்படர் புரிந்தோர்

(இ - ள்) கவுந்தியடிகள் கடிஞைமுதலியவற்றைக்கொண்டு பஞ்சமந் திரமே நமக்கு வழித்துணையாகவெனச்சொல்லிச்செல்ல, அவரோடு பழித்தலரிய ஒழுக்கத்தோடு வழிச்செலவைப்புரிந்தவரென்க

தோம் - குற்றம் கடிஞை - [1]ஐயக்கடிஞை அறுவை - தோளிலிடு மூறி மொழிப்பொருட்டெய்வம - பொருண்மொழியாகியதெய்வம, ஆவது [2]பஞ்சமந்திரம, அ ஸி ஆ உ ஸா = அ சி ஆ உ சா

இனிக் கொண்டென்றதனைக் கொள்ளவெனத்திரித்து அடிகளிது செய்ய இவர்கள் துணையாகவென்ருரெனினும் அமையும

102 - 11. கரியவன் புகையினும் ஒலித்தல் செல்லா

(இ - ள்) கோள்களிற் சனிக்கோள் *இடபம் சிங்கம் மீனமென்னு மிவற்றினேடு மாறுபடினும், ஆகாயத்தே தூமக்கோள் எழினும, விரிந்த கதிரையுடைய வெள்ளிக்கோள் தென்றிசைக்கண்ணே பெயரினும காற்றுப் பொரும் குடகவரையினது உச்சிக்கண்ணே கடிய குரலையுடைய உருமேற்

---

[1] "ஐயம் புகூஉந் தவசி கடிஞை" (நாலடி. 9)

[2] இந்தப் பஞ்சமந்திரத்தைப் பஞ்சநமஸ்காரமென்பர் சைனர்.

(பி - ம்.) † 'அபசாரங்கள்'

ரேடு சூன்முதிர்ந்த பருவப்புயல் தன்பெயலாகிய வளத்தைச் சுரத்த லானே அவ்வரையிற்பிறந்த பல பண்டத்தோடு கடுகிவருதலையுடைய காவிரியினீர், முகத்தைக் குத்தியிடிக்குங் கடல் தன் வளத்தைக்கொண்டு எதிர்தலானே தேங்கி, வாய்த்தலைக்கிட்ட கதவின்மீதெழுந்து குதிக்கின்ற அப்புதுப்புன லொலியல்லது ஆம்பிமுதலாயின ஒலித்தல்செல்லாவென்க.

கரியவன் - சனி புகைக்கொடி - வடடம், சிலை, நுட்பம, தூமமென்னும் [1]கோடகள் நான்கினுமத தூமக்கோள், "மைம்மீன் புகையினுந் தூமந் தோனறினும, தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்" (புறநா. 117 . 1-2) என்ருர் பிறரும் கால்பொருநிவப்பு - குடகின் உச்சி. ஏறு - இடியேறு. பஃருரம - பல்தாரம், பலபண்டம். எனவே மலைவளனுயிறறு, ஆவன "தக்கோலந்.. சாதியோ டைந்து" (5 26, அடியார்)

கடல்வளனுவன "ஓர்க்கோலை சங்க மொளிர்பவளம் வெண்முத்தம், நீர்ப்படு முப்பினே டைந்து."

கடுவரல் - முடுகிவரும்வரவு ஒ - தாம்பிற்கதவு, இனி ஓவுதல், விகாரத்தால் ஓவென நின்றதெனவுமாம், இதறகு இறத்தல் ணண்டுத் தவிர்தன் மேற்று. ஆம்பி - பன்றிப்பதிதர் கிழார் - பூட்டைப்பொறி. பிழா - [2]இடா "நீர்த்தெவ்வு நிரைதொழுவர், பாடுசிலம்பு மிசையேற்றத், தோடுவழங்கு மகலாம்பியிற, கயமகைய வயனிறைக்கு, மென்ருடை வன்கிழாஅர்" (மதுரைக் 89-93) என்ருர் பிறரும்.

இனிக் கரியவன் புகையினுமென்பதறகுச் சனிவாரம் புகையினுமெனவுமாம இனிப் புகையினும தோன்றினும் படரினும் சுரப்ப எதிர நீர் வாய்த்தலை ஒவிறந்தொலிக்குமொலியல்லது ஆம்பிமுதலிய ஒலித்தல் செல்லாமைக்குக் காரணமாகிய காவிரியென முடிப்பினும் அமையும். புகையினும் தோன்றினும படரினுமென்ற உம்மைகள், மழை பெய் தொழில மாற இவறறில் ஒன்றே அமையுமாகவும் இவையெல்லாம் சேரினும் கடல்வளனெதிர நெரிக்குமெனக் காவிரியின்சிறப்பை விளக்கி நிற்றலிற் சிறப்பும்மைகள்.

112 - 3. கழனி கானத்து

(இ - ள்) அங்ஙனம் ஒலித்தல்செல்லாக் கழனியிற் செந்நெலும் கரும்புஞ் சூழ்ந்த இடத்தையுடைய நீர்நிலைச்செறுவிலுண்டாகிய தாமரைக் காட்டிலென்க.

114 - 9. கம்புட்கோழியும் பரந்த வோதையும்

(இ - ள்) கம்புட்கோழி முதலியன வெல்லும்போரைவல்ல அரசரிருவர் பொருமிடம்போலப் பலவேறுவகைப்பட்ட திறத்தையும் ஒலியையு முடையனவாய் ஒலிக்கும் மிக்க ஓசையுமென்க

கூக்குரலும் பாடம். கம்புள் - சம்பங்கோழி. கானக்கோழி - காஞ்சங்கோழி, நிலவண்மையாக்கிக் காட்டுக்கோழியென்பாருமுளர். நீர்நிறக் காக்கை - நீர்க்காக்கை. உள்ளூ - உள்ளான் ஊரல் - குளுவை, நீர்மேலூர்தலினுல், ஆகுபெயர். புள்ளூ - கணந்துட்புள். போதா - பெருநாரை,

---

[1] இவற்றைக் கரந்துறைகோட்களென்பர். [2] இடா - இறைகூடை.

மரக்காஞரை , புதா · விகாரம். வெல்போரும், முனையிடமும் வினைதீ தொகை. குழூஉக்குரல் - பலவாயொன்ருன ஓசையுமாம்.

120 - 24 உழாஅ நுண்டொளி காய்த்தலைச்சொரிய

(இ - ள்.) உழவராலுழப்படாத சேடுக்குழியிற சேற்றினுட்புக்கு அழுந்திய கழுவாத மயிரையுடைய யாக்கையும சிவந்த கண்ணையு முடைய எருமை தன்தினவையுடைய முதுகை உரிஞசுதலாலே புரி தேயந்து அறறுச்சரிதலுற்ற அழிவற்ற பரிக்கூட்டினின்ற வளவிய பல வருக்கத்து நெலலுக் கவரிதிதொங்கலபோல விளைந்துகிடக்கின்ற செந் நெற்கதிர்தீதலை யிடதீதே சொரியவென்க.

தொளி - சேறு.

125 - 6. கருங்கை ஒலியே யன்றியும்

(இ - ள்) அங்ஙனம் நெற்சொரிதலானே வினைஞரும் களமருங் கூடி ஒன்றுபட நின்றெலிக்கும ஒலியும , அதுவேயன்றியுமென்க

கருங்கை - வலியகை. வினைஞர் - பறையர், பள்ளர் முதலாயினர். களமர் - உழவர் கீழக்குடிமக்கள் கருங்கை இருவர்க்கும பொது.

127 - 31. கடிமலர் களைந்து விருந்திற் பாணியும்

(இ - ள்) காலையின்முடிதீத பூக்களைந்து முடிதீத முடியிலே முடியி னுற்றை நறுக்கிச் சூடிக்கொண்டு வளைந்தவளையுடைய தோளும முலை யாகமுந்தோய்ந்து சேருடுகோலதிதொடு அழகுபெறதிதோன்றிச் சிவந்த கயல்போலும் பெரிய கண்ணையும சிறியமொழியையுமுடைய கடைசியர் கடுக மயக்கும் கள்ளை உண்டு தொலதீததனலுண்டான பண் நிறதீதிற் சேர்ந்து பழகிப்போதாத பாடடுமென்க.

என்றது, மதுமயக்கதீதாற் பதஞ்சலிதீது மயங்கப் பாடினரென்றபடி. இனிக் கடிமலர் களைந்து முடி நாறமுதீதியென்பதறகுப் போகாப்புல்லாகிய கழுநீர்முதலைப்பறிதீது மறிதீது அதன்மீதே முடியினுறறைப் பகுந்து நடடெனினும் அமையும். தோளும் ஆகமும தோய்ந்துசேருடுதல் - களிதீது ஒருவர்மேல் ஒருவர் சேறறை இறைதீதுக்கோடல். வீறுபெறதீ தோன்றலாவது - முலைமேற றெறிதீதசேறு கோடடுமண் கொண்டாற் போன்றிருதீதல், "வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்தீதனபோல், ஏரிய வாயினு மென்செய்யும்—கூரிய, கோட்டாணைக் தென்னன் குளிர் சாந் தணியகலம், கோட்டுமண் கொள்ளா முலை" (முதீதொள்ளா யிரம்) என்ருறபோல சின்மொழி - இழிநதமொழி, சிலவானமொழியு மாம விருந்திறபாணி - தம இசையிற புதுமையுண்டாகப் பாடும் பாட் டெனினும அமையும , இதனைப் பெருமுளையென்பாருமுளர்.

132 - 5. கொழுங்கொடி ஏர்மங்கலமும்

(இ - ள்) செந்நெற்கதிரோடே அறுகையும் குவளையையும் கலந்து தொடுதீத மாலையை மேழியிலே சூட்டிப் பாரை இரண்டாகப் பிளப் பாரைப்போலப் போற்றுவார்தொழப் பொன்னேர்பூடடி நின்ருேர் ஏரைப் பாடும ஏர் மங்கலப்பாடடுமென்க.

சூட்டித் தொழநின்ரேர் பாடும் ஏர்மங்கலமுமென்க.

136 - 7. அரிந்துகால் .. முகவைப்பாட்டும்

(இ - ள்) நெல்லையரிந்து போரிட்டார் சூட்டைக்கடாவிடுதலானுண்டான முகவைப்பாட்டும்,

ஆவது பொலிபாடுதல். முகக்கக் கொடுத்தலின், முகவையாயிற்று.

138 - 9. தெண்கிணைப்பொருநர் மகிழிசையோதையும்

இது களவழி வாழ்த்து, எனனை? " தண்பணைவயலுழவனைத், தெண்கிணைவன நிருந்துபுகழ் கிளநதன்று ", வரலாறு " பகடுவாழ் கென்று பனிவயலு ளாமை, அகடுபோ லங்கட டடாரித்—துகடுடைத்துக், குன்றுபோற போர்விற குருசில வளமபாட, இன்றுபோ மெங்கட கிடர் " (பு வெ 186) எனவரும. கிணை - தடாரி, புடபறை யென்பதுங்கொள்க.

(இ - ள) தெளிந்த ஓசையையுடைய கிணைப்பொருநர் செருக்குதலோடெடுத்த மார்ச்சனையையுடைய திரண்ட முழவினது கேட்டோர் மகிழும் இசையினது ஒலியும்,

140 - 41. பேர்யாற்று .. அவலங் கொள்ளார்

(இ - ள்) பெரிய யாற்றடைகரையிலே இவவோசைகளை முறையிற் கேட்டு நெஞசம விருமபுதலாலே வழி நடதீதலின் உண்டான வருதீ ததீதை நெஞசிற கொளளாராயெனக .

பரந்தவோதையும ஆர்க்குமொலியும விருநதிறபாணியும் ஏர்மங்கலமும் முகவைப்பாட்டும் மகிழிசையோதையும என்னுமிவறறைப் பேரயாறறடை கரைக்கண்ணே நீர்மைபெறக் கேடடலால் உண்டான விருப்பதீ தானே நெஞ்சில் அவலங் கொள்ளாராயென்க

142 - 7 உழைப்புலிக்கொடி இருக்கை யன்றியும்

(இ - ள்) புலியைத் தன்னிடதீதேயுடைய கொடியையுயரீதீத தேரையுடைய உரவோனுகிய கரிகாலனது கொறறதீதுடனே மழைக்கும் கருப்பதீதைத் தோறறுவிக்கும அழலை விளக்குகின்ற சாலையினுண்டான மறையோரான் ஆக்கப்பட்ட தேவருணவின ஆவி இறையுயரீநத மாடமாகிய அகங்களெஙகும போரீதீதலானே மஞ்சு சூழ்ந்த மலைபோல மாடசிமைப்படதீ தோன்றும மங்கல மறையோரிருப்பிடங்களும , அவையன்றியும்,

148 - 55. பரப்புநீர் சென்ற ளொருநாள்

(இ - ள்.) இரப்பவர் சுறறதீதையும் புரப்பவர் கொற்றதீதையும் தம் உழவினிடதீதே விளைப்போருடைய பழைய வலி பொருநதிய ஊர்களுமாகிய இவவிருவகையூர்களையும் இடையிடட நாடெல்லாங்கண்டு நடக்கு நாட் காதமென்னும எல்லையலலது நடந்து தொலைக்க மாடடாராயப் பல நாள் தஙகி நடக்கினற நாளிலே ஒருநாளென்க.

சூற்றப்பொலி ஆலையிற் பாகு காய்கின்ற புகையாற் பரக்கப்பட்டு இருடசியையுடைய முகில் தவழ்ந்த மலைபோலதீ தோன்றும் பழவிறலூர்களும் என்க.

[1] காவிரிநீர் கங்கைநீராதலிற் கங்கையின் புதல்வரைக் காவிரியின் புதல்வரென்றார், அன்றியும் "மகவாய வளர்க்குந் தாயாகி" (7 · 27) என் பதனானுங்கொள்க. தோன்றுமிருக்கையும தோன்ற மூர்களுமெனவியை யும். அவ்வூர்களை இடையிடட நாடென்க உடன்கண்டென்றார், இந் நாட்டுச் சிறப்பெல்லாம கண்டு தொலைத்துக் கழிதலருமையின். புதல்வ ராகி உழவிடை விளைபபோரென்க.

156 - 63. ஆற்றுவீ யரங்கத்து ...சாரணர் தோன்ற

(இ - ள்) ஆற்றை மறைக்கும் அரங்கத்தில் வேறிடத்தில்லாத தன் மைத்தாய் வளைந்த மூங்கின் முளளால் வளைக்கப்பட்ட வேலியையுடைய மரமபயின்ற செறிந்த சோலையில தேவருறைதறகொத்த பூப்பொருநதிய தொருபக்கத்தே படடினப்பாக்கத்து [2]வான்பெரு மன்றத்துப் பிண்டிநீழற் கண்ணே உலக நோன்பிகள் இடப்பட்ட சிலாதலத்தின் மேலிருந்தருளிப் பெருமகனுற செய்யப்பட்ட அதிசயங்கள் மூன்றுந தப்பாத ஆகமநூலி னுண்மைத் தனமையையுடைய தருமவொழுக்கத்தை யாவருங கேடகும் படி அருளிசெயயும [3] சாரணர் அபபடடினப்பாக்கத்தைவிடடு நீங்கி வந்து தோன்ற வென்க ;

அதிசய மூன்றுவன . சகசாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தெய்வீகாதி சயமென்மன.

வீறறுவீறறுகி உடுத்த ஒருசிறைச் சாரணர் தோன்றவென்க.

164 - 9 பண்டைத் தொல்வினை கொள்ளான்

(இ - ள்.) முன்செய்த பழவினையெல்லாம் கெட்டோடுகவென்று உட் கொண்டு அவர் வந்தமையைக் கண்டறிந்த கவுந்தியடிகளுடனே சென்று அவரடியிலே தலையுற வீழந்தார், அங்ஙனம் வீழ்ந்தவர் ாண்டுவந்தது தனது விளங்கிய கோடபாடையுடைய [4]அவதி ஞானத்தால் தெரிந்தவ ஞையினும் ஆர்வமும் செற்றமும் தன்னைவிட்டுப் போம்படி நீக்கிய [5] வீர ஞகலாலே இவர்க்கு வருநதுன்பத்திறகுத் தான் வருந்தாஞகியென்க

---

[1] 'கங்கையாருழைச்சென்று காவிரியாரை வாங்கி' என்று கூறினர் நச்சினர்க்கினியரும் ; தொல்காப்பியப் பாயிரவுரையிற் காண்க.

[2] வான்பெருமன்றமென்பது முதலாக இங்கே தந்துரைத்தவற்றை, இக்காதை, 20-ஆம் அடி முதலியவறறிற காண்க.

[3] சாரணர் - சமண முனிவர். அவர் . தல சாரணர், சல சாரணர், பல சாரணர், புட்ப சாரணர், தந்துசாரணர், சதுரங்குல சாரணர், சங்க சாரணர், ஆகாச சாரணரென எண்வகையர், இவ்விருவராகச் சென்று தருமோபதேசஞ் செய்தல் அவர்கட்கு இயல்பென்பர்.

[4] அவதி ஞானம் - அதீதகமான பரிஞ்ஞானம், அஃதாவது தன் னுடைய முற்பிறப்பை யறியுமறிவு.

[5] வந்த சாரண ரிருவருள், உபதேசிப்போர் மூத்தோரே யாதலின், வீரனென ஒருமையாற் கூறினர்.

[1] கண்டறிவுகவுந்தியென்பதனலும் காலவுணர்ச்சியின்மை யுணர்க.. ஒடு ஒருவினையொடு.

170 - 71 கழிபெரு வல்வினை

(இ - ள்) மிக்க பெரிய தவச் சிறப்பையுடைய கவுந்தி, யாவராணும் ஒழிக்க ஒழியாததாய் நுகர்விக்க வந்துநிறகின்ற தீவினையைக் காணு யென்ருரென்க

காணுய் - பாராய் ஒழிகென வொழியாதென்பதற்கு, நீ 'உரிய தன்றீங் கொழிக' (10 . 55) எனவும் ஒழியாது ஊடடுந் தீவினையை யெனினும் அமையும்

172 - 3. இட்ட வித்தின் ஒண்ணு

(இ - ள்) விளைநிலத்திடட வித்துப்போலப் பயனெதிர்ந்து கண் கூடாக நல்வினைவநது நுகர்விக்குங காலதீதும் ஒழிக்கவொண்ணு; அதுபோல இதுவும ஒழிக்க ஒழியாதென்ருரென்க.

"உறற்பால . . தணிப்பாருமில" (நாலடி. 104) என்ருராகலின், தீவினை தன்னையே கூறினும அமையும உமமை . எச்சவுமமை

174 - 5 கடுங்கால் உடம்பிடை யுயிர்கள்

(இ - ள்) கடிய காறறையுடைய நெடிய வெளியிலிடப்பட்ட விளக் கென்னுமபடி மாயினல்லது கூடி உடனிலலா, உடமபினின்ற உயிர் களுமென்ருரென்க

நல்வினை தீவினைப்பயனுகிய இன்பமும் துன்பமும் வருங்கால் யாவ ராணும ஒழிக்கவொண்ணு வென்ப தூஉம, யாக்கை நிலையாமையும் இவர் தமபால் உறுவது கண்டு கவுந்தியடிகடகுச் சாரணர் கூறினரென வுணர்க. விளக்கு உவமித்தார், நினைவற அழிவதறகும், புக்குழிப் புலப் படாமைக்கும்.

176 - 91. அறிவ'னறவோன் பொதியறை யோரென

176. அறிவன்—(இ - ள்.) எல்லாப் பொருளையுமறியும் அறிவையுடையோன்,

அறவோன்—(இ - ள்.) அறஞ்செய்தலையே தொழிலாக வுடையோன்,

அறிவு வரம்பிகந்தோன்—(இ - ள்.) யாவருமறியப் படும் அறிவெல்லையைக் கடந்தோன்,

177. செறிவன்—(இ - ள்) எல்லாவுயிர்கட்கும் இதனுயுள்ள வன், சலியாதவனென்றுமாம்.

சினேந்திரன்—(இ - ள்.) எண்வகைக் கன்மங்களையும் சயித்தவன்,

---

[1] இஃது, 'உரிய தன்றீங் கொழிகென வொழியீர்' (10 . 55) என்பதன் உரையிற் கூறியதை வறபுறுதீதற்கு.

அவையாவன: [1] ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம, கோத்திரம, அந்தராயம் எனவிவை.

சித்தன்—(இ - ள்) கிருதகிருத்தியன் = செய்யவேண்டுவனவற்றைச் செய்துமுடித்தவன், கன்மங்களைக் கழுவினவனுமென்ப

பகவன்—(இ - ள்) [2] கேவல ஞானி.

178. தரும முதல்வன்—(இ - ள்) தருமங்களுக்கு அடியாயுள்ளவன்,

தலைவன்—(இ - ள்.) எல்லாத் தேவர்க்கும தலைவனாக எண்ணப்பட்டவன்,

தருமன்—(இ - ள்) தருமம் தானாயுள்ளவன்,

179 பொருளன்—(இ - ள்) ஆகமத்தின் பொருளாயுள்ளவன், உண்மைப் பொருளாயுள்ளவனெனவுமாம்.

புனிதன்—(இ - ள்) சுத்தன், புதியவனுமென்ப

புராணன்—(இ - ள்) பழையவன்,

புலவன்—(இ - ள்) எல்லார்க்கும அறிவாயுள்ளவன்,

180 சினவரன்—(இ - ள்) சினத்தைக் கீழ்ப்படுத்தியவன்,

தேவன்—(இ - ள்) தேவர்களுக்கு ஆதியாகிய தேவன்,

சிவகதி நாயகன்—(இ - ள்) வீட்டுலகிற்கு நாயகனாயுள்ளவன்,

181 பரமன்—மேலானவன்,

குணவதன்

(இ - ள்) குணத்தையுடையவன், வதம் - [3] விரதமுமாம.

பரத்தி லொளியோன்—

(இ - ள்) மேலாய உலகிற்கு விளக்காயுள்ளவன்,

182. தத்துவன்—(இ - ள்) தத்துவங்களையுடையோன்,

சாதுவன்—(இ - ள்) ஒடுங்கினவன்,

சாரணன்—(இ - ள்) ஆகாசவாசி

---

[1] ஞானவரணீய முதலிய வெட்டும் காதி அகாதியென இருவகைப்பட்டு, நூற்று நாறபகதெட்டாக விரியுமென்பர்.

[2] கேவல ஞானம் - ஐந்து ஞானத்துளனும் சிறந்தது ஐந்து ஞானங்களாவன —(1) மதி ஞானம - சுபாவ புத்தி, (2) சுருத ஞானம - நூல் உணரசசி, (3) அவதி ஞானம - தன்னுடைய முறபிறப்பை யறியுமறிவு, (4) மனப்பரியய ஞானம - தனனுடைய முறபிறப்பையும், பிறருடைய முற்பிறப்பையும் அறியுமறிவு; (5) கேவல ஞானம் - திரிகால உணர்ச்சி.

[3] விரதம் - அணுவிரதம், குணவிரதம், சிக்ஷாவிரதமென மூன்று வகைப்படும், அவறறுள் குணவிரதம்—திக்குவிரதம், தேசவிரதம், அநர்த்ததண்ட விரதமென மூன்றுவகைப்படும்.

காரணன்

(இ - ள்) எல்லாவற்றிற்கும் காரணமாயுள்ளவன் = காரணபூதன்,

183 சித்தன்

(இ - ள்) எண்வகைச் சித்திகளையு முண்டாக்கினவன்.

பெரியவன்—(இ - ள்) எல்லாவற்றினும் பெரியவன்,

செம்மல்—(இ - ள்.) நாயகமூர்த்தி,

திகழொளி—(இ - ள்) விளங்கும் ஒளியாயுள்ளவன்

184 இறைவன்—(இ - ள்) எப்பொருளினும் தங்குகின்றவன்,

குரவன்—(இ - ள்) குருமூர்த்தியாயுள்ளவன்,

இயல்குணன்—(இ - ள்.) இயல்பையே குணமாக உடையவன்,

எங்கோன் —(இ - ள்) எமமுடைய சுவாமி,

185 குறைவில் புகழோன்

(இ - ள்) நிறைந்த புகழையுடையோன்,

குணப்பொருட் கோமான்—

(இ - ள்) குணங்களைச் சமபதத்தாக வுடையவன்,

186 சங்கரன்—(இ - ள்) சுகத்தைப்பண்ணுகின்றவன்,

ஈசன்—(இ - ள்) ஐசுவரியவான்,

சயம்பு—(இ - ள) தானேதோன்றினவன்,

சதுமுகன்—(இ-ள) நான்முகன் = அதிசயத்தோடு நான்முகன்,

187. அங்கம் பயந்தோன்

(இ - ள்) [1] அங்காகமத்தை யுண்டாக்கினவன்,

அருகன்—(இ - ள்) பூச்சியன்,

அருண்முனி—(இ - ள்) சிவபர மூர்த்தி,

188 பண்ணவன்——(இ - ள்) கடவுள்,

எண்குணன்—(இ - ள்) எடடுக்குணங்களையுடையோன்,

எண்குணமாவன — அநந்தஞானம், அநந்தவீரியம், அநந்ததரிசனம, அநநதசுகம், நிர்ந்நாமம, நிரக்கோத்திரம, நிராயுஷ்யம, அழியாவியல்பென விவை

பாத்தில் பழம்பொருள்—(இ - ள்) பகுத்தற்கரிய புராணப் பொருளாயுள்ளவன் , ஓடடமறற பொன்னையொப்பானென்றுமாம

189. விண்ணவன்—(இ - ள்.) சுவர்க்கவாசி,

---

[1] அங்காகமம், 12 பகுப்புடைத்து. அவை வருமாறு (1) ஆசாராங்கம் (2) சூத்திரகிருதாங்கம், (3) ஸதாணுங்கம, (4) ஸமவாயாங்கம், (5) வியாக்கியாப் பிரஜ்ஞப்தியங்கம, (6) ஞாதிருகதாங்கம, (7) உபாஸகாத்தியயனங்கம் (8) அநதக்கிருததசாங்கம, (9) அநுத்தரோபபாதிகதசாங்கம, (10) பிரச்சிந வியாகரணங்கம், (கக) விபாகசூத்திராங்கம, (12) திருஷ்டிவாதாங்கம.

வேத முதல்வன்—(இ - ள்.) [1]ஆகமமூன்றிற்கும் முதலா யுள்ளவன்.

விளங்கொளி—(இ - ள்.) அஞ்ஞானவிருள் நீங்க விளங்கு மொளி

190 - 91. ஓதிய வேதத்து பொதியறை யோரென

(இ - ள்) இந்நாமங்களை யுடையோனால் ஓதப்பட்ட ஆகமமாகிய விளக்கொளியைப் பெறாறபோதறேறுவதல்லது யாவரும் பிறவியாகிய சிறையினின்றும போகமாட்டாரென்றாரென்க

[2] பொதியறை - துவாரமில்லாத கீழறை.

192 - 3 சாரணர் மேற்கொண்டு

(இ - ள்) இங்ஙனம சாரணர அருளிச்செய்த உண்மைமொழியைக் கேட்டடுத் தவத்திறகு முதலவியாகிய கவுநதியடிகளும தமது கைகளைத் தலைமேல் வைத்துக்கொண்டு நின்றுகூறுவார் —

194 - 5 ஒருமூன்று செவியகந் திறவா

(இ - ள) எனது செவிகள் காமவெகுளி மயக்கங்களைக் கெடுத்தவ னால் ஓதப்பட்ட ஞானபாதமாகிய திருமொழியைக் கேட்டறகுத் திறபபி னல்லது பிறிதொனறறகுத் திறப்பனவல்லவெனறாரென்க.

அவித்தல் அடக்குதலுமாம.

196 - 7 காமனை நவிலா தென்னு

(இ - ள்) என்நாவும் காமன்செயலை வென்றவனுடைய ஆயிரத் தெட்டு வகைப்பட்ட நாமம நவிலினல்லது பிறிதொன்றனை நவிலா தென்றாரென்க.

198 - 9 ஐவரை வென்றோன் காணு வென்கண்

(இ - ள்.) எனதுகண்களும ஐவகைப்பட்ட இநதிரியங்களையும் வென் றவனுடைய அடியிணைகளைக் காணினலலது பிறிதொரு தேவரடியிணை களைக் கையகதீதே காணினும் காணுவென்றாரென்க

(இ - ள்) தேன்சேர்நத கழுநீர்மலர் சண்பகமலரென்னுமிவறறு லாகிய மாலையோடு குருக்கத்தியும மலலிகையும மனையின்கண்வளர்ந்த முலலையுமெனனும இவவிழநத பூக்களால் நிரைத்த பொலிவினையுடைய அணையிலே பொருநதி,

122 - 6 அட்டிற் புகையும் பூம்புகை யளை இ

(இ - ள்) அடுக்களைகளில் தாளிப்புமுதலிய புகையும அகன்ற அங் காடியிடத்து அப்பவாணிகர முடடாமற சுடுகினற அபபவகையிற புகையும மைந்தரும மகளிரும மயிரக்கும துகிறகும மாலைமுதலிய வறறிறகுமெடுத்த அழகிய இனிய அகிறபுகையும யாகசாலைதோறும்

[1] அருமபாலை பரி. 11 . 126-7, உரை. (பி - ம்.) † 'அரசன்சாதி'

ஆகுதிபண்ணுதலாலெழுந்தபுகையும் ஆகிய இப்பலவாகிய வேறுபட்ட பொலிவினையுடைய புகையையளவி,

126 - 9 வெல்போர் காண்வரத் தோன்றி

(இ - ள்) இந்திரனுறபூட்டப்பட்ட விளங்காநின்ற ஆரத்தையுடைய மாரபாலே வெல்லும போரை வல்ல பாண்டியனது கோயிற்கண் யாவராலும அளவிடடறியப்படாவாய இக்கலவைத்தொகுதி தன்மெயயெல்லாம் கமழுமபடி தோனறியெனக

அவை எத்தன்மையவாகிய கலவையெனின், தமமைப் புலன்கள் ஒருகால நுகருமாயிற பின்னை வீடடுலகநுகருதித் துறவிறசெலல வொடடாது மனத்தைப்பிணிதத்துக்கொளளும கோயிலிறகலவையென்க. அவை முனனர்க்கூறியனவும பிறவும

130 - 32 புலவர் செந்நா வந்தது காணீர்

(இ - ள்) சஙகப்புலவரது செந்நாவாலே புகழப்பட்ட இசசிறப்புக் கனை யுடைத்தாகலிற பொதியிறறென்றல தன்னை ஒவ்வாமைக்குக் காரணமாகி இநத மதுரைத்தென்றல்வந்தது, இதனைக் காணீரென்க

ஆடிப பொருந்தி அனைத்தோன்றித் தென்றல் வந்ததென்ற ரென்க

133 - 4 நனிசேய்த் தன்றவன் தகைக்குந ரில்லென

(இ - ள்) காவதங்கூறுமினென்ருற்குக் காணீர்; அதனால் மிகத் தூரிதனறு அப்பாண்டியனது செலவமிக்க மூதூர், அதுவன்றியும ஆண்டுச் செல்வார் இநநீர்மையாரன்றி வேறுபடடநீர்மையாரொருவர் செல்லினும் நில்லென்பாரில்லையென்று சொல்லவென்க

135 - 6 முன்னுண்முறைமையின் பெயர்ந்தனர்

(இ - ள்) அறறைஞான்று ஆண்டுத்தஙகிப் பிறறைஞான்று செல்லக் கருதியவர் முனனைஞான்றை முறைமைபோலே இரவிடையிலே கவுநதியடிகளுடனே பெயர்நதனரென்க

136 - 40 பெயர்ந்தாங்கு குரலோதையும்

(இ - ள்) அரிதாகிய அழித்தறருழிலவல்ல கடவுளது அகன்ற பெரிய கோயிலிடத்தும் மிக்க புகழையுடைய மன்னவன் கோயிலிடத்தும் வேறுபட்ட பகுதிபொருநதிய சிறப்பையுடைய காலைமுரசமாகிய பேரிசைப்பல்லியம பெயர்ந்து கூடியொலிக்குமொலியும்,

பெயர்தல் - தாளமறுதல் கனைதல் - செறிதல்.

141 நான்மறை யந்தணர் நவின்ற வோதையும்—

(இ - ள்) அந்தணர் நான்மறை நவில்விக்கும் அவைக்களந்தோறும் மறைக்கு விதித்த மரபினையுடைய சுருதிகுன்ருமல் உச்சரிக்கு மோதையும,

142 மாதவ ரோதி மலிந்த வோதையும்—(இ - ள்.) மாதவர்கள் சிறுகாலையில் மந்திரமோதுதலால் மிக்க ஓதையும்,

143 - 4 மீளா வென்றி நாளணி முழவமும்

(இ - ள்) மடங்காத வென்றியையுடைய வேந்தனுற் பெற்ற சிறப் போடே வாள்வீரர் தத்தம்வீரத்திறகு எடுத்த வரிசையையுடைய முரசு முதலியவற்றின் நாளணியோதையும்,

நாள் - குடைநாட்கோள் முதலியவுமாம்

145 போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்— (இ - ள்) மறப்பகைமன்னரைப் போரில் வென்று கொண்டுவந்த போர்க் களிற்றின் முழக்கமும்,

146 வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்— (இ - ள்.) காட்டிற் பிடித்துகொண்டுவந்த வலிய யானையின் முழக்கமும்,

147 பணைநிலைப் புரவி யாலு மோதையும்—(இ - ள்) பந்திதோறும்நின்ற புரவிகள் போர்நினைந்து ஆலிக்குமோதையும்,

148 கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்— (இ - ள்.) கிணைப்பறையையுடைய மள்ளர் மருதநிலநதோறும் வைகறைக் காலத்தே கொடடுமோதையும,

கிணை - மருதப்பறை, கூத்தர் பறையுமாம

149 - 50 கார்க்கடல் ஆரஞர் நீங்கி

(இ - ள்) இவையும பிறவுமாகிய அக்கூடலிடத்து ஆர்க்குமொலி யெல்லாம காரக்கடலொலிபோல ஒலித்து எதிர்கொளளுதலாலே முன்பு உழந்த வருத்தமெல்லாம் நீங்கி,

151 - 4 குரவமும் பன்மலர் விரிந்து

(இ - ள்) கரையின் புறவாயெஙகும், குரவும மகிழும் கோங்கும் வேங்கையும வெண்கடம்பும சுரபுன்னையும மஞசாடிமரமும் மருதும் உச்சிச செலுநதிலும செருநதியும் சண்பகமரமும ஆகிய இவை பாதிரி யுடனே பலவகைமலரும விரிந்துசூழ்ந்தவை மீதுடுத்த பூந்துகிலாகவும்,

155 - 60 குருகுந் தளவமும் அல்குல்

(இ - ள்) அகவாயெங்கும, குருக்கத்தியும செமமுல்லையும் முசுட்டை யும் மோசிமல்லிகையும வெளளை நறுநதாளியும வெட்பாலையும மூங்கிலும் இவறறிற்படரந்த பெருங்கையாலும குட்டிப்பிடவமும் இருவாடசியுமா கிய பலமலரும விரிந்து பூஙகொடிகள் நிரைபடநெருங்கிப் படர்நதுமன் னினவை தன்னை மிடைந்துசூழந்த கோவையாகிய மேகலையாகவு முடைய கொடுங்கரையாகிய அகன்றேந்திய அல்குலையும்,

அல்குலென்பதறகேறபக் கொடுமைகூறினர். மேகலைக்கோவை. வேற்றுமைத்தொகையுமாம. கொழுங்கொடி விரிமலரென்னும் அடை களை ஏறபுழி எஙகும் ஒட்டுக அம சாரியை.

161 - 3 வாலுகங் குவைஇய கதிரிள வனமுலை

(இ - ள்) அகற்சியையும் பொலிவையுமுடைதீதாகிய இடைக்குறை யிலே பக்கங்கள் புடைக்கொண்டு கோங்கு வேங்கையென்னும் பலமலரா கிய சுணஙகால் உயர்ச்சிபெறறு ஒன்றுக்கொனறு மாறுபட விளங்கிய மணற் குன்றுகிய நிறதீத முலையினையும்,

164 கரைநின் றுதிர்த்த கவிரிதழ்ச் செவ்வாய்

(இ - ள்) கரைக்கணின்று உகுத்த முருக்கிதழாகிய செவ்வாயினையும்,

165 அருவி முல்லை யணிநகை யாட்டி

(இ - ள்.) அருவிநீரோடு இடையருதுவந்த முல்லையாகிய நகையினையுமுடையாள்,

166 விலங்குநிமிர்ந் தொழுகிய கருங்கய னெடுங்கண்

(இ - ள்.) குறுக்கே மறிந்தும் நெடுகவோடியுந்திரிகின்ற கயலாகிய நெடிய கண்ணினையும,

167 விரைமலர் நீங்கா வவிரறற் கூந்தல்

(இ - ள்) இருமருங்கும திரைகளரித்த மணமலர் நீங்காத விளங்குகின்ற அறலாகிய கூநதலினையும,

168-70. உலகுபுரந் தூட்டும் பொய்யாக் குலக்கொடி

(இ - ள்) உலகைப் பாதுகாத்தறகுப் பலபொருள்களையும் விளைத்து நுகர்வித்தலான மிக்க பெரிய ஒழுக்கத்தினையுமுடையாள், புலவர நாவிற புகழபொருநதியவள், சேர்ந்தோர்க்கு வரைவினறி இன்ப மளித்தலின் திருமகளையொப்பாள், வையையெனறு பெயர்கூறப்படுவாள், பருவம்பொய்யாமையானும் வேறறுவேநது அணுகாமையானும தெனனர்குலக்கொடியாயுளளவள்

171 - 3 தையற் குறுவது கரந்தன ளடக்கி

(இ - ள்) கண்ணகிக்கு மேலவரும துன்பங்களைத் தான் முன்னறிந்தாள்போலத் தன்னைக்கொண்டு அருச்சித்தார்க்குப் புண்ணியங்களைக் கொடுக்கும நறிய பூவாடையால் தனது மெயமமுழுதும போரத்துதி தன்கண்மல்கிநின்றநீரைப் புறத்திடின் அதுகண்டு வருந்துவாரென்று உள்ளடக்கி,

நெடுநீர் - மிக்கநீர் அடக்கவெனத்திரிக்க

174 - 5 புனல்யா றன்றிது தொழுது

(இ - ள்.) அங்ஙனமபோர்த்த பூவாற புனல்மறைதலின் இது புனல் யாறன்று பூவாறென்று புகழநது மாதரும கொழுநனும் தொழுது,

176 - 80. பரிமுக வம்பியும் தென்கரை யெய்தி

(இ - ள்) ஓடக்கோலுக்கு நிலைத்தல்அரிய துறையிற் சென்றேரைச் செலுத்தும குதிரைமுகவோடமும யானைமுகவோடமும சிங்கமுகவோட மூமென்னும இவறறினேறிப் பலர்போகும துறையிறபோகாது அதற் கயலதாகிய துறையிலே கவுந்தியடிகளுடனே மரப்புணையிலேபோகி மதுநாறு மலரையுடைய சோலைபொருநதிய தென்கரையிற பலர் செல்லாததோரிடத்தே சென்றெயதியென்க

முன்னர், வம்பப் பரதீதை வறுமொழி யாளனெடு (10 : 219) சாப முறுதலின், ாண்டு மருங்கிறபெயராதென்றுரீர்.

பரிமுகமுதலியவறறைத் தொழிறபெயராக்கினும் அமையும்.

181 - 3 வானவ ருறையும் அகழிசூழ் போகி

(இ - ள்) தேவர்கள் உறையும் மதுரையை வலங்கொண்டுசென்ருல் மிகவும் பெரியதாகிய புண்ணியதீதை யுடைதீதென்றெண்ணி அழிதீதற் கரிய மிஃசூழந்த கிடங்கினபுறதீதைச் சூழ்போநதென்க.

மிஃ - காவறகாடு, கட்டுவேலியுமாம.

184 - 8 கருநெடுங் குவஃயும் நடுங்க

(இ - ள்) குவஃயும் ஆமபலும கமலமும, தையலும கணவனும் மேல்தனிதீதுறுந்துயரதீதைதீ தாம தெளிய அறிநதனபோல வண்டுகள் இரங்கும பண்ணீர்மையைக்கொண்டு பரிந்தேங்கியழுது கண்ணீரைக் கொணடு காலுற நடுங்காநிறகவெனக

பண்ணீர்மையன்றிப் பண்ணீரெனறமையால் திறம் பன்னிரண்ட னுள் நோதிறமெனவுமாம. கண்ணீர் - களளாகிய நீரெனவுமாம. காலுற-காலிலேயுறவெனவும், காறறு உறுதலாலெனவுமாம அறிநதனபோல நடுங்கவென்க. ஏங்கியென்னும செயதெனெச்சம நடுங்கவென்னும் பிற வினகொண்டு முடிந்தது

189 - 90 போருழந் தெடுத்த மறித்துக்கை காட்ட

(இ - ள்) மாற்ருர்வருந்தப் போர்தேய்தீதெடுதீத [1] புறமதிற்றலையின் கொடிகள் இவரை இந்நகரில் வாராதொழிமினென்பனபோல தம் கையின் மறிதீதுக்காடடவென்க.

அன்றி, வாரலென்பார்கையின் தன்மைபோலெனவுமாம்

191 - 6 புள்ளணி கழனியும் புக்கனர் புரிந்தென்.

(இ - ள்) புட்களால் அழகுசெயயப்படட ஏரியும பண்ணையும கழனி யும் சோலையும தெங்கும கமுகும வாழையும வேழதீதிரளால் இடப்படட தண்ணீர்ப்பநதரகளும பொருநதிவிளங்கிய மூதூர்ப்புறமதில் இடதீத தாகி அறதீதைப் புரியும தபோதனரன்றிப் பிறர் சேரப்படாத புறஞ் சேரிக் கண்ணே தாம் கருதிவநத கோடபாட்டிலே மனம்புரிந்து புக்கா ரென்க.

இது கீழ்தீதிசைவாயிற்கு அயலதோர் முனிவர் இருப்பிடம் புரிந்து புக்காரெனப் பொதுமையாற கூறினமையின், முன்னர் நாடுகாண் காதைக் கண்ணே, "அறிவனேயேதீத . ஒன்றிய வுள்ள முடையேன்" (57-9) என்பதனுற கவுந்தியடிகளும அறிவனைப் புரிந்து புக்காரென்க. பண்ணை - தோடடங்களும, ஓடைகளும

இது நிலைமண்டிலவாசிரியப்பா.


(கஈ) புறஞ்சேரியிறுத்த காதை முற்றிற்று.

---

[1] "ாண்டுநீ வரினு மெங்க ளெழிலுடை யெழிலி வண்ணன், பாண்ட வர் தங்கட் கல்லாற் படைதீதுணை யாக மாட்டான், மீண்டுபோ கென்றென் றந்த வியன்மதிற் குடுமி தோறும், காண்டகு பதாகை யாடை கைகளாற் றடுப்ப போன்ற" (வி. பா. வாசுதேவனை. 6.)

பதினன்காவது

ஊர்காண் காதை



புறஞ்சிறைப் பொழிலும் பிறங்குநீர்ப் பண்ணையும்
இறங்குகதிர்க் கழனியும் புள்ளெழுந் தார்ப்பப்
புலரி வைகறைப் பொய்கைத் தாமரை
மலர்பொதி யவிழ்த்த வுலகுதொழு மண்டிலம்
வேந்துதலை பனிப்ப வேந்துவாட் செழியன்
ஓங்குயர் கூட லூர்துயி லெடுப்ப
நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவ லுயர்த்தோ னியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்
அறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியும்
மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்
வால்வெண் சங்கொடு வகைபெற் றேங்கிய
காலை முரசங் கனைகுர லியம்பக்

---

1 - 2 பொழிலிலும் பண்ணையிலும் கழனியிலும் ஆர்ப்பவென்க.

3. புலரி வைகறை - புலருகின்றதாகிய வைகறை

4. மலர்பொதி - பெரும்பொதி, மலர் பொதியவிழ்த்தறகுக் காரணமான மண்டிலமுமாம்.

5. (பா) பனித்தவாள் - பனித்தற்குக்காரணமான வாள்

7. நுதலிலே விழித்த நாட்டத்தையுடைய

8. நியமம் - கோயில்

9. மேழி வலனுயர்த்த வெள்ளை - மேழியைக் கையாயுதமாக வலனுயர்த்த பலதேவர்.

அடி, 2 இறங்குகதிர்க்கழனி புறநா. 98 . 19. அடி, 1-2 சிலப், 13 191-2 அடி, 3 உலகுதொழுமண்டிலம் · முருகு. 2 அடி, 7 மணி. 5 · 54. அடி, 9 மேழி - பலதேவனது ஆயுதம . பரி. 1 . 5, 15 57; கலித். 36 1 வெள்ளை நகரம் . சிலப். 9 10. அடி, 7-11 . சிலப். 5 : 169-72. மதுரைக் 455-8, புறநா 56 · 1-10, இன்னு. 1, மணி. 1 : 51-5. அடி, 14. காலைமுரசம் . சிலப். 13 . 140, அடிக்.

கோவலன் சென்று கொள்கையி னிருந்த
காவுந்தி யையையைக் கைதொழு தேத்தி
நெறியி னீங்கியோர் நீர்மை யே ஞகி
நறுமலர் மேனி நடுங்குதுய ரெய்த
அறியாத் தேயத் தாரிடை யுழந்து
சிறுமை யுற்றேன் செய்தவத் தீர்யான்
தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னேர்க்
கென்னிலை யுணர்த்தி யான்வருங் காறும்
பாதக் காப்பினள் பைந்தொடி யாகலின்
ஏத முண்டோ வடிகளீங் கென்றலும்
கவுந்தி கூறுங் காதலி தன்னெடு
தவந்தீர் மருங்கிற் றனித்துய ருழந்தோய்
மறத்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்
றறத்துறை மாக்க டிறத்திற் சாற்றி
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்
யாப்பறை மாக்க ளியல்பிற் கொள்ளார்
தீதுடை வெவ்வினை யுருத்த காலைப்
பேதைமை கந்தாப் பெரும்பே † துறுவர்
ஒய்யா வினைப்பய னுண்ணுங் காலைக்
கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள்
பிரிதற் றுன்பமும் புணர்தற் றுன்பமும்
‡ உருவி லாள ஞெறுக்குந் துன்பமும்

17. நெறியினீங்கியோர - இலலறநெறியின் நீங்கிய வேசையர் பதிகள்

23 - 4 உன்னுடைய பாதமாகிய துணையை யுடையவளாதலால், இவளுக்கு ஏதமுண்டோ? இலலையென்றதாம, பாதமாகிய காவலுண் டாக இவளுக்கு ஏதமுண்டோவென்றுமாம

26. தவம - புண்ணியம், தவநதீர்மருங்கின் - புண்ணியம் முடிந்த கூற்றல்.

30. அறை - அறுதல் இயல்பில் - நன்மைக்கூற்றில்

32. அறியாமை துணையாக மிக்க மயக்கமுறுவர்

33. ஒய்யாவினை - போக்கவொண்ணுத வினை

35 - 6 பிரிதறறுன்பம் - பிரிதலால் வருந்துன்பம் புணர்தற் றுன்பம் - புணர்தல காரணமாக வருந்துன்பம இரண்டுகாலதீதும் காமன் ஒறுக்கும துன்பம

அடி, 17 சிலப 10 237. அடி, 26 மணி 14 89, பெருங். 1. 35 · 137 அடி, 27 - 9 மணி. 25 41 - 51 அடி, 30. யாபபு - உறுதி, மணி 3 58

(பி - ம்) † 'துறுவா ரெய்யா' ‡ 'உருவில் வில்லி யொறுக்குந்'

புரிகுழன் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்ல
தொருதனி வாழ்க்கை யுரவோர்க் கில்லை
பெண்டிரு முண்டியு மின்பமென் றுலகிற்
கொண்டோ ருறூஉங் கொள்ளாத் துன்பம்
கண்டன ராகிக் † கடவுளர் வரைந்த
காமஞ் சார்பாக் காதலி னுழந்தாங்
கேமஞ் சாரா விடும்பை யெய்தினர்
இன்றே யல்லா லிறந்தோர் பலரால்
தொன்று படவரூஉந் ‡ தொன்மைத் தாதலின்
தாதை யேவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றே
வல்லா டாயத்து மண்ணர சிழந்து
மெல்லிய றன்னுடன் வெங்கா னடைந்தோன்
காதலிற் பிரிந்தோ னல்லன் காதலி
தீதொடு படூஉஞ் சிறுமைய ளல்லள்
அடவிக் கானகத் தாயிழை தன்னை

---

38. உரவோர் - இருடிகள்.

39 - 42 மனத்து இன்பமென்று கொண்டோர் உறும் தம்மளவல்லாத துன்பத்தைக்கண்டு தவத்தினர் நீக்கின காமம.

44. (பா) இறந்தனர் - முறகாலத்திற் கழிநதார்

45. தொன்றுபட வரூஉம் தொன்மைத்து - அடிப்பற்றி வருகின்ற பழமைத்து, முறறு. ஆதலாலென்று மேறசொலலுகின்ருர்

49. நெடுமொழி - பெருவார்த்தை

பழையதாகப் போதுகின்ற வார்த்தையன்ருவென்றுமாம்

50. வல்லாடாயம் - சூதாடும் தாயம்.

51. மெல்லியல் - தமயந்தி. வெங்கானடைந்தோன் - நளன்.

52. காதலிற் பிரிந்தோனல்லன் - அவள்காதல்காரணமாகப் பிரியக் கருதியவனல்லன்.

52 - 3 அவளும் இவனிடத்துப் பிரியவேண்டிப் பிரிவாளுமல்லள்.

அடி, 53 தீது - பிறர்நெஞ்சுபுகுதல், சிலப் 1 27, மணி. 22 46-ஆம் அடி முதலியவற்றையும் அவறறின் உரைகளையும் பார்க்க.

(பி - ம்.) † 'கடவுள் வரைந்தனர்' ‡ 'தொன்மைய தாகலின்'

இடையிருள் யாமத் திட்டு†நீக் கியது
வல்வினை யன்றே மடந்தைதன் பிழையெனச்
சொல்லலு முண்டேற் சொல்லா யோநீ
அனையையு மல்லை யாயிழை தன்னெடு
பிரியா வாழ்க்கை பெற்றனை யன்றே
வருந்தா தேகி மன்னவன் கூடற்
‡பொருந்துழி யறிந்து போதீங் கென்றலும்
இளைசூழ் மிளையொடு ¶வளைவுடன் கிடந்த
விலங்குநீர்ப் பரப்பின் §வலம்புண ரகழியிற்
பெருங்கை யானை யினநிரை பெயரும்
சுருங்கை வீதி மருங்கிற் போகிக்
கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க் கயிராது புக்காங்
காயிரங் கண்ணே னருங்கலச் செப்பு
வாய்திறந் தன்ன மதிலக வரைப்பிற்
குடகாற் றெறிந்து கொடிநுடங்கு மறுகிற்
கடைகழி மகளிர் காதலஞ் செல்வரொடு
வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை
விரிபூந் துருத்தி வெண்மண லடைகரை
ஓங்குஜநீர் மாடமொடு நாவா யியக்கிப்

---

58. அனையையு மல்லை - அவர்களைப்போல மனைவியைவிட்டுப் பிரிந்தாயுமல்லை.

62. இளை - அரண்காவல், மிளை - அதனைச் சூழ்ந்த காவற்காடு.

64 - 5. யானை போகலாம்படி கீழ் சுருங்கையாக அதனை மேலிட்ட வீதி. சுருங்கை - கரந்துறை; ஒழுகுநீர் புகுகையை ஒருதீதரும் அறியாதபடி மறைதீதுப்படுத்த வீதிவாய்தீதலை.

67. அயிராமற் புக்கு. 70 எறிந்து - எறிய, கோடை எறிதலால்.

71. கடைகழிமகளிர் - பரதீதையர்.

72. மருதோங்கு துறை - திருமருதந்துறை

74. நீர்மாடம் - பள்ளியோடம்.

அடி, 65. சுருங்கைவீதி . பரி. 20 104, சீவக. 142; மணி. 12 : 79, 28 · 5, கம்ப. ஊர்தேடு. 145 அடி, 68 . சீவக. 35. அடி, 72 : குறுந் 258 3, ஐங்குறு. 7 . 4 - 5, பரி. 7 . 83, 11 : 30, 22 . 45, திரட்டு, 2 : 72, கலித் 26 13, அகநா. 36 9 - 10.

(பி - ம்) †'நீங்கியது' ‡'பொருந்துவழி யறிந்து போதீங் கென்ற பின்' ¶'வளைவுறக்கிடந்த' §'வலம்புரியகழி' $'நீரோடமொடு'

பூம்புனை தழீஇப் புனலாட் டமர்ந்து
தண்ணறு முல்லையுந் தாழ்நீர்க் குவளையும்
†கண்ணவிழ் நெய்தலுங் கதுப்புற வடைச்சி
வெண்பூ மல்லிகை விரியலொடு தொடர்ந்த
‡தண்செங் கழுநீர்த் தா துவிரி பிணையல்
கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு
தெக்கண மலயகச் செழுஞ்சே ருடிப்
பொற்கொடி மூதூர்ப் ¶பொழிலாட் டமர்ந்தாங்
கெற்படு பொழுதி னிள நிலா முன்றில்
தாழ்தரு §கோலந் தகைபா ராட்ட
வீழ்பூஞ் சேக்கை மேலினி திருந்தாங்
கரத்தப் பூம்பட் டரைமிசை யுடீஇக்
குரற்றலைக் கூந்தற் குடசம் பொருந்திச்
சிறுமலைச சிலம்பிற் செங்கூ தாளமொடு
நறுமலர்க் குறிஞ்சி நாண்மலர் வேய்ந்து
குங்கும வருணங் கொங்கையி னிழைத்துச்
செங்கொடு வேரிச் செழும்பூம் பிணையல்
சிந்துரச் சுண்ணஞ் சேர்ந்த மேனியில்
அந்துகிர்க் கோவை யணியொடு பூண்டு
$மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தற்குக்

---

75. புனை - தெப்பம்

76. தாழநீர்க் குவளை - தாங்கின நீரையுடைய குவளை; ஆழ்ந்த நீர்க் குவளை யென்றுமாம.

78. வெண்பூமலலிகை, முதல். விரியல் - பூ.

81. (பா) மலயச் செழுஞ்சேறு - சந்தனக்குழம்பு.

84. தகை - கொழுநன்

(84) தகைமையைக் (71) காதலஞ்செல்வரொடு (84) பாராட்டச் (85) சேக்கைமேலேயிருநது.

87. குரல் - கொத்து சிறுமலையாகிய சிலம்பு

(86) 'அரத்தப் பூமபட்டு' முதலாக, (93) 'துகிர்க்கோவை' ஈருகச் சொன்னவை கார்காலத்துப் பரக்க அணிவன

94. மலைச்சிறகரிநத - மலையைச் சிறகரிந்த.

அடி, 76. தாழ்நீர்க்குவளை குறுந். 388 1. அடி, 77. நெய்தலுக் குக்கண் உவமை முருகு 75, நற 8 8, குறுந். 9 4-6. குவளையை யும் நெய்தலையும அடைச்சுதல் மதுரைக் 588, நற். 204 . 3, 357 . 8. அடி, 75 - 7. புனல்விளையாடடும் பூவை அடைச்சுதலும் . குறுந். 80 . 1 - 2. அடி, 81. தெக்கணம . மணி. 13 . 105, பெருங். 1. 36 : 238. அடி, 87 . சிலப். 30 33, மணி. 8 36.

(பி - ம்) †'கண்ணெகிழ்' ‡'தண்பூங்' ¶'பொழிலாட்டு மகிழ்ந் தாங்' §'கோலர்தகை' $'மலைச்சிறை யரிந்த'

கலிகெழு கூடற் செவ்வணி காட்டக்
காரர சாளன் வாடையொடு வரூஉம்
கால மன்றியு நூலோர் சிறப்பின்
முகிரேய் மாடத் தகிறரு விறகின்
மடவரன் மகளிர் தடவுநெருப் †பமர்ந்து
நறுஞ்சாந் தகலத்து நம்பியர் தம்மொடு
குறுங்க ணடைக்குங் கூதிர்க் காலையும்
வளமனை மகளிரு மைந்தரும் விரும்பி
இளநிலா முன்றிலி னிளவெயி னுகர
விரிகதிர் மண்டிலந் தெற்கேர்பு வெண்மழை
அரிதிற் ரேன்று மச்சிரக் காலையும்
‡ஆங்க தன்றியு மோங்கிரும் பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட
அகிலுந் துகிலு மாரமும் வாசமும்
தொகுகருப் பூரமுஞ் சுமந்துடன் ¶வந்த

---

96. காரரசாளன் - கார்காலம்.

97. நூலோர் - சிறபர், அவர் புகழ்ச்சியையுடைய (98) மாடமென்க.

97 - 8 நூலோர் மாடம் - மயமதமறிவாராற் புகழ்ச்சியையுடைய மாடமென்றுமாம்

99. தடவு - இந்தளம். 100. [1] சாந்து - அகில்நெய்.

101. குறுங்கண் - சாளரம்.

104. மண்டிலம் - ஆதித்தன், இவன் தெற்கே மிதுன வீதியிலே இயங்குதலானே வெண்மழை - வெள்ளை மேகம்.

105. அரிதாகத் தோன்றும் முன்பனிக்காலம்.

106. பரப்பு - கடல் 107. வங்க ாட்டத்தாலே.

108 துகில் - பட்டு வர்க்கம், [2] நாற்றங்கொளுவுதலால் இவற்றுடன் எண்ணினர். வாசம - தக்கோலம் சாதிக்காய முதலியன.

109 சுமந்து - அவறறின் நாற்றத்தைச் சுமந்து.

அடி, 96 காரரசாளன் பிரயோக 49, உரை. அடி, 105. 'அருகித் தோன்றும்' என்று பாடங்கொண்டு, 'அருகுதிசை' (தக்க. 37) என்பதற்கு மேறகோள் காட்டினர்.

[1] சீவக. 2675, ந. [2] சிலப். 14 205-7, அடியார்.

(பி - ம்.) † 'பயர்ந்து' ‡ 'ஆங்கனமன்றியு' ¶ 'வந்து'

கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்
வெங்க ணெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்துப் பனியர சியாண்டுளன்
கோதை மாதவி கொழுங்கொடி யெடுப்பக்
காவுங் கானமுங் கடிமல ரேந்தத்
தென்னவன் பொதியிற் றென்றலொடு புகுந்து
மன்னவன் கூடன் மகிழ்துணை தழூஉம்
இன்னிள வேனில் யாண்டுளன் கொல்லென்
றுருவக் கொடியோ ருடைப்பெருங் கொழுநரொடு
பருவ மெண்ணும் படர்தீர் காலைக்
கன்றம ராயமொடு களிற்றின நடுங்க
என்றூழ் நின்ற குன்றுகெழு நன்னாட்டுக்
காடுதீப் பிறப்பக் †கனையெரி பொத்திக்

110-11. கூடலிடத்துக் காமனுக்குச் செய்யும வில்விழவு.

(107) வங்கவீடதாலே தொண்டியிலுள்ளோரிட்ட (108 - 9) பல சரக்குக்களைச் சுமந்து வந்து புகுந்த (110) கீழ்காறரோடு புகுந்து தென்னவன் கூடலெடுக்கும் (111) வில்விழாக்காணும (112) பங்குனிமாததீதோடு பொருந்தின பனியரசென்க, என்றது பின்பனிக்காலம இவவிழாவைக் கொண்டலொடு புகுந்து காணும் பங்குனி மாதம் பொருந்திய பின்பனிக் காலமாகிய அரசன் யாண்டுளன்.

113. கோதை - ஒழுங்கு 117 யாண்டுளன் - எங்கேயுள்ளான்.

(117) எங்கேயுள்ளானென்று (119) போன காலங்களைக் குறித்து எண்ணும்.

118. உருவக் கொடியோர் - கொடியுருவதீதினோர், வல்லியாகவெழுதும் கொடியுமாம. உடைப்பெருங்கொழுநரொடு - தம்மையுடைய கொழுநருடன்.

(118) தம்மையுடைய கொழுநருடனே (85) வீழ்பூஞ்சேக்கையிலிருந்து (119) இப்பருவங்களை (112-7) எங்குளவென்று எண்ணுகிற காலையென்று சேர்க்க. காலம் கோடைக்காலமாகையாலே, அல்லாத காலங்களை நினைதீதெண்ணினார்.

118 - 9. ஐந்து காலமுங் கழிந்தது கூறுகின்றார், 'உடைப்பெருங் கொழுநரொடு, பருவமெண்ணும் படர்தீர் காலை' என்றார், என்றது வேனிற காலத்தை.

120. ஆயம் - நிரை.

121 கோடைதீதன்மை (பா) நீடிய குன்று.

122. (பா) பொதீதிய - பொதிநத.

அடி, 111. வில்விழா . குறுந். 31, திணைமா. 62.

(பி - ம்.) † 'கனவெரி'

கோடையொடு புகுந்து கூட லாண்ட
வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர
ஓசனிக் கின்ற வுறுவெயிற் கடைநாள்
வையமுஞ் சிவிகையு மணிக்கா லமளியும்
உய்யா னத்தி னுறுதுணை மகிழ்ச்சியும்
சாமரைக் கவரியுந் தமனிய வடைப்பையும்
கூர்நுனை வாளுங் கோமகன் கொடுப்பப்
பெற்ற செல்வம் பிறழா வாழ்க்கைப்
பொற்றொடி மடந்தையர் புதுமணம் புணர்ந்து
செம்பொன் வள்ளத்துச் சிலதிய ரேந்திய
அந்தீந் தேறன் மாந்தினர் மயங்கிப்
பொறிவரி வண்டினம் புல்லுவழி யன்றியும்
நறுமலர் மாலையின் வறிதிடங் கடிந்தாங்
கிலவிதழ்ச் செவ்வா யிளமுத் தரும்பப்
புலவிக் காலத்துப் போற்ரு †துரைத்த

(71) 'காதலஞ்செல்வரொடு' என்றது முதல் (85) 'வீழபூஞ் சேக்கை மேலினி திருந்து' என்றது இறுதியாக முதுவேனிறகாலம கூறினபடி.

123 கோடை - மேல்காறறு.

124. படர - படரகை காரணமாக.

124 - 5. ஓசனித்தல் - வெக்கையால் தலையெடுத்தல், கடைநாள் - வேனிற் பின்னுளென்றுமாம வேறறுப்புலம படர்தறகு எடுத்துப் பார்க்கின்ற முதுவேனில கழிகிற நாளிலே, சிந்தாமணியினும், "ஓசனிக்கின்ற வனனம்" (2652) என்ருர்.

127. உயயானத்து மகிழ்ச்சி - சோலையிலே சேவிப்பாருடனிருந்து விணைதம காண்டல், உயயானங்களில் உறுதுணையோடு மகிழும மகிழச்சி யுமாம்.

128. சாமரையிடப்பெறுகையும, பொன்னுற செய்த வெற்றிலைப் பெட்டி பிடித்திடப பெறுகையும் வரிசை

129 கோமகன் - இராசராசன், பாண்டியன்.

130 அப்படிப்பெற்று உடையராதல் - சிலதியர் சூழ்ந்து வாட் பிடிக்கப் போதல் முதலியன.

(118) கொழுநரொடு (131) புதுமணம் புணர்ந்தென்று கூட்டுக.

134 - 5. வண்டு பொருந்தின இடமன்றியே களிப்பாலே வறிதிடத் திலும் மாலைகொண்டோச்சி.

அடி, 127 உய்யானம் **மணி** 3 52

அடி, 124 **தக்க** 577, உரை, மேற் (பி - ம்.) †'துணர்த்திக்'

காவியங் கண்ணூர் கட்டுரை †யெட்டுக்கு
நாவொடு நவிலா நகைபடு கிளவியும்
அஞ்செங் கழுநீ ‡ரரும்பவிழ்த் தன்ன
செங்கய னெடுங்கட் செழுங்கடைப் பூசலும்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை சுருளத்
திலகச் சிறுநுத லரும்பிய வியருமெ
செவ்வி பார்க்குஞ் செழுங்குடிச் செல்வரொடு
வையங் காவலர் மகிழ்தரு வீதியும்
சுடும ¶ணோரு வடுநீங்கு சிறப்பின்
முடியர சொடுங்குங் கடிமனை வாழ்க்கை
வேத்தியல் பொதுவிய லெனவிரு திறத்து
மாத்திரை யறிந்து $மயங்கா மரபின்

---

138. கட்டுரை (பா) எடுக்குநர் - வார்த்தைசொல்லப் புகுகின்றவர்.

139. நகைபடு கிளவி - களியாற் கேட்டாரை மகிழ்ச்சி பிறப்பிக்கும் வார்த்தை, கேட்டோர்க்கு நகை விளைவிக்கும் நாவாற் சொல்லாத கிளவியுமாம்.

142. சுருளல் - புருவம் கோபத்தால் ஏறுவது இழிவதாகை

144. செழுங்குடிச் செல்வர் - அரசரல்லா ஏனையோர்

146 - 7. ஒடு வேயாது பொற்றகடு வேய்ந்த மனை, அன்றியும், சாதிக் குற்றப்பட்டால் தலையிலே செங்கல் ஏறறி ஊர் சூழ்வித்துக் கழித்து விடுதல் மரபு, இன்னும், சுடுமண் - மட்பாத்திரமுமாம முடியரசு ஒடுங்குங் கடிமனை - [1] ஆசைப்பட்டு அரசுவைகுமனை, அரசர் ஆர்வத்தா லடங்குமனை யென்றுமாம் அரசொடுங்குமனை - அரசர் புகுந்தாலும தெரியாதே பேரிடமான மனை யென்றுமாம.

148 வேத்தியல் - அரசர்க்கு ஆடுங்கூத்து பொதுவியல் - எல லார்க்கும் ஒப்ப ஆடுங்கூத்து.

அடி, 139 அகநா. 16 · 4 அடி, 141 - 3. கோபக் குறிப்புக்கள்: பெருங் 2. 16 16 - 23. அடி, 146 சுடுமண் பெரும்பாண். 405; மணி. 18 33, பெருங். 1. 36 . 155, பு. வெ. 113. அடி, 148. மணி. 2 . 18.

[1] சீவக. 109.

(பி - ம்.) †'யெடுக்கும்' ‡'ரரும்பவிழ்ந் தன்ன' ¶'ணேங்கு' $'மகிழ்தரு'

ஆடலும் வரியும் பாணியுந் தூக்கும்
†கூடிய குயிலுவக் கருவியு முணர்ந்து
நால்வகை மரபி னவினயக் களத்தினும்
‡ஏழ்வகை நிலத்தினு மெய்திய விரிக்கும்
மலைப்பருஞ் சிறப்பிற் றலைக்கோ லரிவையும்
வாரம் பாடுந் தோரிய மடந்தையும்
தலைப்பாட்டுக் கூத்தியு மிடைப்பாட்டுக் கூத்தியும்
நால்வேறு வகையி ¶னயத்தகு மரபின்
எட்டுக் கடைநிறுத்த §வாயிரத் தெண்கழஞ்சு
முட்டா ||வைகன் முறைமையின் வழாஅத்
தாக்கணங் கனையார் நோக்குவலைப் $பட்டாங்
கரும்பெற ₹லறிவும் பெரும்பிறி தாகத்
தவத்தோ ராயினுந் தகைமலர் வண்டின்
நகைப்பதம் பார்க்கு மிளையோ ராயினும்
காம விருந்தின் மடவோ ராயினும்
ஏம வைக லினறுயில் வதியும்

---

150 ஆடல் - இப்படிப்பட்ட கூத்து. வரி - வரிப்பாட்டு பாணி - தாளம் தூக்கு - வாச்சியம

152 அவினயம "நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தலென், றதீதகு நான்கே யவினயக் களனே" களன் - அழகுமாம்

153 (பா) எழுவகை நிலத்தினு மெயதிய வரியாவது - ஆறறுவரி, சாற்றுவரி, திணைநிலைவரி, மயங்குதிணைநிலைவரி, முகமுடைவரி, முகமில் வரி, படைபபுவரி யென்பனவாம, அன்றிக் குரலமுதலான ஏழுநரம் பென்றுமாம

154 தலைக்கோலரிவை - கூத்தாடுமவள்

160 தாக்கணங்கு - தீண்ட வருத்தஞ்செய்யும் தெய்வம், சீதேவியு மாம நோக்காகிய வலையிலே படடு

161 பெருமபிறிதாகை - கையறறுப்போகை

(162) தவத்தோர்களாயினும் வண்டுபோல (163) இவர்கள் நகையின் செவ்விபார்க்கும் காமுகராயினுமம (164) காமத்துக்குப் புதிய மடவோ ராயினுமம (165) தங்கியே போகவேண்டுமம (167) வீதி

(161) அருமபெறலறிவும் பெருமபிறிதாக (160) நோக்குவலைப்பட்டுத் (162) தவத்தோர்முதலாயினுர் (165) இன்றுயிலவதியுமம (167) வீதி யென்க

அடி, 160 தாக்கணங்கு குறள், 1082 அடி, 162 பெண்டிர் நலம் நுகருபவனுக்கு வண்டு கலித் 40 25, திருச்சிற் 123 அடி, 162-3: பெருங் 1 35 212-4, 'முகைப்பதம பார்க்கும் வண்டுபோலத் தலைவி யரை நகைப்பதம பார்க்குமம அறிவுடைமை' (தொல் மெய்ப். 11, பேர்.)

அடி, 155 தொல். மரபு. 107, பேர், மேற ஷி (பா) 'தோரிய மகளிருமம'

(பி - ம்) †'கூடிசைக் குயிலுவ' ‡'எழுவகை நிலத்தினு மெய்தி யது' ¶'னலத்தகு' §'வாயிரக்கழஞ்சு' ||'வைகலின்' $'படடங்' ₹'லறிவு பெரும'

பண்ணுங் † கிளையும் பழித்த தீஞ்சொல்
எண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்
வையமும் பாண்டிலு மணித்தேர்க் கொடுஞ்சியும்
மெய்புகு கவசமும் வீழ்மணித் தோட்டியும்
அதள்புனை யரணமு மரியா யோகமும்
வளைதரு குழியமும் வால்வெண் கவரியும்
ஏனப் படமுங் கிடுகின் படமும்
கானப் படமுங் ‡ காழூன்று கடிகையும்
செம்பிற் செய்நவுங் கஞ்சத் தொழிலவும்
வம்பின் முடிநவு மாலையிற் புனைநவும்
¶ வேதினத் துப்பவுங் கோடுகடை தொழிலவும்

---

166. கிளை - கிள்ளை; கிள்ளையைக் கிளையென இடைக்குறைத்தார்; கிளை - பண்ணின் திறமுமாம.

167. எண்ணெண்கலையோர் - தளியிலார் இருபெருவீதி - சிறுதனம் பெருந்தனம் பெறுவாரவீதி.

168. பாண்டில் - இரண்டு உருளையையுடைய சகடம் கொல்லாப் பாண்டில்; பாண்டியென்று பாடமோதிக் கூடாரப்பண்டியென்பாருமுளர். கொடுஞ்சி - தேர்மொட்டு

169. கவசம - கைத்தளம். விரும்பப்பட்ட அழகிய தோடடி.

170. அதளபுனை யரணம - தோற கைத்தளம. அரியாயோகம் - விசாதி (வியாதி) கட்குக் கொடுக்குமமருந்து, சன்னகமுமென்ப, அரித்தல் - கெடுத்தல், பிணியைக் கெடுத்தலையுடைய ஆராயப்பட்ட ஔடத மென்றுமாம.

171. குழியம் - வாசவுண்டை, கட்டுக்குழியமுமென்ப.

172. ஏனப்படம - பன்றிமுகக்கடகு, பன்றி வலையுமாம். கிடுகின் படம் - சிறுகடகு.

173. கானப்படம் - காடெழுதின கடகு, யானை சிங்கம் முதலிய சித்திரமெழுதின கடகுமாம்; இடத்துநிகழ்பொருளின்தொழிலை இடத்திற் கேற்றினர், பெருவாரல்வலையுமாம. காழூன்று கடிகை - காழாற் பிணித்த கடகு, படங்குமாம.

இவை நான்கும் கிடுகின விசேடம்.

175. மாலையிற்புனைந - கிடேச்சுமாலை.

176. வேதினத் துப்பவும் - ார்வாளால் வலியப்பெற்றனவும்; என்றது ாருங்கருவியாற் பண்ணப்பட்டன. கோடு - தந்தம்.

அடி, 167. சிலப். 22 138-9, மணி 2. 29, பெருங். 1.35: 84-6. அடி, 168. பாண்டில். பிரபு. மாயையுற்பத்திகதி 17.

(பி - ம்) †'கிளவியும்? ‡'கரமூன்று' ¶'வேதினத் தீர்ப்பவுங் கோடுகடைதீ தொழிலவும்'

புகையவுஞ் சாந்தவும் பூவிற் புனைநவும்
வகைதெரி வறியா வளந்தலை மயங்கிய
அரசுவிழை திருவி னங்காடி வீதியும்
காக பாதமுங் களங்கமும் †விந்துவும்
ஏகையு நீங்கி ‡யியல்பிற் குன்ரு
நூலவர் நொடிந்த நுழைநுண் கோடி
நால்வகை வருணத்து நலங்கே ழொளியவும்
ஏகையு மாலையு மிருளொடு துறந்த
பாசார் மேனிப் பசுங்கதி ரொளியவும்
பதுமமு நீலமும் விந்தமும் படிதமும்
விதிமுறை பிழையா விளங்கிய சாதியும்
பூச வுருவிற் பொலந்தெளித் தனையவும்
தீதறு கதிரொளித் தெண்மட் டுருவவும்

---

177. புகையவுமென்றது, புகைக்குறுப்பான நேர்கட்டி முதலான ஐந்தும். சாந்தவும - சாந்துக்குறுப்பான முப்பத்திரண்டுறுப்பும். (பா) பூவிற் புனைஞ - மாலை விகறபங்கள்.

176 - 7. தந்ததாற் கடைந்தவை - இரதத்திற்குச் செய்தவை. சந்தனதாற் செய்தவை - கலவை கூட்டின. பூவிறபுனைந்தவை - மாலை.

178. வேறுபாடு தெரியா வளமென்ரூர், முன் எண்ணியவற்றை. (பா) மயங்கி - மயங்கப்பட்டு.

180 - 83. காகபாதம், களங்கம், விந்து, இரேகையென்னும் நான்கு குற்றமுமின்றிக் கோடியும் பலவகையுமுள்ளன நல்லவயிரம்.

184 - 5. ஏகையும் மாலையும் இருளும் மரகததீதுக்குக் குற்றம்; இக்குறறமற்றுப் பசுங்கதிரொளியையுடையன மரகதம்.

186 - 7. பதுமமும் நீலமும் விந்தமும் படிதமுமாகிய விதிமுறையிற் சொல்லுகிற குற்றமின்றி விளங்குகின்றவை சாதிமாணிக்கம்.

188. (பா) பூனைக்கண்போன்று பொன்னைத் தேய்த்தாற்போன்றவை புருடராகம். பூசை - பூனை.

189. ஒளியினையுடைய மட்டுநிறமாயிருப்பன கோமேதகம்.

(பி - ம்.) † 'விந்துதும்' ‡ 'யியற்பிற்'

இருடெளித் தனையவு மிருவே றுருவவும்
ஒருமைத் தோற்றத் தைவேறு வனப்பின்
இலங்குகதிர் விடுஉ †நலங்கெழு மணிகளும்
காற்றினு மண்ணினுங் கல்லினு நீரினும்
தோற்றிய குற்றந் துகளறத் துணிந்தவும்
சந்திர குருவே யங்கா ரகனென
வந்த நீர்மைய வட்டத் தொகுதியும்
கருப்பத் துளையவுங் ‡கல்லிடை முடங்கலும்
திருக்கு நீங்கிய ¶செங்கொடி வல்லியும்
வகைதெரி மாக்க டொகைபெற் §றேங்கிப்
பகைதெற லறியாப் பயங்கெழு வீதியும்
சாத ரூபங் கிளிச்சிறை யாடகம்
சாம்பூ நதமென வோங்கிய கொள்கையிற்
பொலந்தெரி மாக்கள் கலங்களு ரொழித்தாங்
கிலங்குகொடி யெடுக்கு $நலங்கிளர் வீதியும்

---

190. இருள் தெளித்தனைய நிறத்தினை யுடைய நீலம். இருவேறுரு வினையுடைய வயிடூரியம்.

191. ஒருமைத்தோற்றம் - ஓரிடத்தே தோற்றல்; ஓரிடமென்றது பளிங்கை.

193 - 4 காற்று முதலான இக்குற்றம் நீங்கினவும் குற்றமென்றது மூன்பு சொன்ன குறறங்களை

195. சந்திரகுரு - வெண்முத்து. அங்காரகன் - செந்நீர்முத்து. வட்டத்தொகுதி - ஆணிமுத்து.

197. கருப்பத் துளை - உள்ளே துளையாகை. (பா) கல்லுடை முடங் கல் - கல்லை உள்ளேயுடைய வளைவு.

198 திருக்கு - திருகல், இவை மூன்று குற்றமும் நீங்கிய செங் கொடி வல்லி : பவளம்.

201 - 3. சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாம்பூநதமென்னும் இவை நான்கும் பொன்னின் சாதி. பொலநதெரி மாக்கள் - செட்டியர்.

204. கொடியெடுத்தல் பொருளெல்லைக்கு.

(பி - ம்) †'நலங்கேழ்' ‡'கல்லுடை முடங்கரும்' ¶'செழுங் கொடி' §'றேங்கிய' $'நலந்தரு'

*

பதினேந்தாவது

அடைக்கலக் காதை

நிலந்தரு திருவி னிழல்வாய் நேமி
கடம்பூண் டுருட்டுங் கௌரியர் பெருஞ்சீர்க்
கோலின் செம்மையுங் குடையின் றண்மையும்
வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
பதியெழு வறியாப் பண்புமேம் பட்ட
மதுரை மூதூர் மாநகர் கண்டாங்
கறந்தரு நெஞ்சி னறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடம் புகுந்து
தீதுதீர் மதுரையுந் தென்னவன் கொற்றமும்
மாதவத் தாட்டிக்குக் கோவலன் கூறுழித்
தாழ்நீர் வேலித் தலைச்செங் கானத்து
நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை
மாமறை முதல்வன் மாடல னென்போன்
மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து
தமர்முதற் பெயர்வோன் ருழ்பொழி லாங்கண்
வகுந்துசெல் வருத்தத்து வான்றுயர் நீங்கக்
கவுந்தி யிடவயிற் புகுந்தோன் றன்னைக்
கோவலன் சென்று சேவடி வணங்க

---

1. நிலந்தருதிரு - விளைவு. நேமி - நேமியை.
2. கடம்பூண்டு - முறைமையை மேற்கொண்டு. கௌரியர் - பாண்டியர்.
6. ஆங்கு - அப்பொழுதே. (4) விளங்கிய (6) மூதூர்.
14. முனிவன் - அகத்தியன்.

அடி, 1 "நிலந்தரு திருவி னெடியோன்" (மதுரைக். 763); பதிற். 82 · 16; "நிலந்தரு திருவிற் பாண்டியன்" (தொல். பாயிரம்)

அடி, 2. கடம்பூணல் . குறுந். 181 6, மணி. 3 . 70. அடி, 3-4: பட்டினப். 300-01.

அடி, 5. "பதியெழு வறியாப் பழங்குடி" (சிலப். 1 : 15); மலை படு. 479.

அடி, 7 : சிலப் 13 . 195-6, 15 115-6.

அடி, 12. "நான்மறை முற்றிய வதங்கோட் டாசான்" (தொல். பாயிரம்.)

நாவ லந்தணன் ருனவின் றுரைப்போன்
வேந்துறு சிறப்பின் விழுச்சீ ரெய்திய
மாந்தளிர் மேனி மாதவி மடந்தை
பால்வாய்க் குழவி பயந்தன ளெடுத்து
†வாலா மைந்நா ணீங்கிய பின்னர்
மாமுது கணிகையர் மாதவி மகட்கு
நாம நல்லுரை நாட்டுது மென்று
தாமின் புறூஉந் தகைமொழி கேட்டாங்
கிடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்
உடைகலப் பட்ட வெங்கோன் முன்னுள்
புண்ணிய தானம் புரிந்தோ னுகலின்
நண்ணுவழி யின்றி நாள்சில நீந்த
இந்திர னேவலி னீங்கு வாழ்வேன்
வந்தே னஞ்சன் மணிமே கலையான்
உன்பெருந் தானத் துறுதி யொழியாது
துன்ப நீங்கித் துயர்க்கட லொழிகென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த

---

20. நவின்றுரைத்தல் - பலகாற் சொல்லுகை.

24. வாலாமை - தூய்மையின்மை.

25. முதுகணிகையராவார் - பாட்டிமார், தாய்மார்.

29 - 30. எங்கோனென்றது கோவலன் மரபினுள்ளானெருவனே; புண்ணியதானம் முன்பு செய்து ஒழுகினனுதலால்.

31. நண்ணுவழியின்றி - கரையைக் கிட்டுமிடமின்றி.

(28) கடலின் இடையிருள் யாமத்துக் (31) கரைகாணாது சிலநாள் நீந்திச் செல்ல.

32. இந்திரனேவலால் இத்தீவிலுள்ளாரை அசுரர் வாதியாமற் காத்து இங்கு வாழ்வேன்.

34. நீ முன்பு செய்த தானங்களால் வந்த புண்ணியம் உன்னை விடாது, உறுதி யொழியாது, முற்று.

35. ஒழிகவெனச் சொல்லி.

அடி, 20. "நாவ லந்தண ரருமறைப் பொருளே" (பரி. 1 : 13, 2 : 57.

அடி, 28 - 37 : மணி. 7 : 33 - 5, 21 . 181 - 2, 29 . 14 - 31.

அடி, 29. உடைகலப்படல் : மணி. 16 : 20, 18 : 64. அடி, 33 : மணி. 7 : 18.

(பி - ம்.) †'வாலாமை நாணீங்கிய'

எங்குல தெய்வப் பெயரீங் கிடுகென
அணிமே கலையா ராயிரங் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று
மங்கல மடந்தை மாதவி தன்னெடு
செம்பொன் மாரி செங்கையிற் பொழிய
ஞான நன்னெறி நல்வரம் பாயோன்
தானங் கொள்ளுந் தகைமையின் வருவோன்
தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
வஞ்ச யாக்கை மறையோன் றன்னைப்
பாகுகழிந் தியாங்கணும் பறைபட வரூஉம்
வேக யானை வெம்மையிற் கைக்கொள
ஒய்யெனத் தெழித்தாங் குயர்பிறப் பாளனைக்
கையகத் தொழித்ததன் கையகம் புக்குப்
பொய்பொரு முடங்குகை வெண்கோட் டடங்கி
மையிருங் குன்றின் விஞ்சைய னேய்ப்பப்
பிடர்த்தலை யிருந்து பெருஞ்சினம் பிறழாக்
கடக்களி றடக்கிய கருணை மறவ
பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
எள்ளிய மனையோ ளினைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரு மாமறை யாளன்

---

37. எங்குல தெய்வமென்றான் ; அவ்வுதவி பற்றி. என - என்று கோவலன் கூற.

41. பொழிய - பொழியா நிற்க.

(43) வருவோனுகிய (45) மறையோனை.

46. பாகு - பாகர்.

48. ஒய்யென - விரைய. தெழித்து - உரப்பி.

50. பொய் பொருந்து கை - பொய் பொருந்தின துதிக்கை. கோட் டடங்கி - கொம்புகளுக்கு நடுவே புக்கு.

53. கருணைமறவ - கிருபாவீரனே.

54. பிள்ளை நகுலம் - [1] கீரிக்குட்டி. பெரும்பிறிதாகை - மரிக்கை.

55. எள்ளிய மனையோள் - அவனுல் இகழப்பட்ட மனையாள்.

அடி, 44-5 நாலடி. 14, மணி. 14. 30-31. அடி, 45-53 : சிலப். 30 : 120-24. அடி, 46 : மணி. 4. 41. அடி, 50. பொய்பொரு.....கை : மலைபடு. 107. அடி, 51 : சீவக. 1838.

[1] குட்டியென்னும் இளமைப் பெயர் கீரிக்கும் உரித்தென்பர் மயிலை நாதர் ; நன். 387.

கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை
வடமொழி வாசகஞ் செய்த நல்லேடு
கடனறி மாந்தர் கைந்நீ கொடுக்கெனப்
பீடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறு மறுகிக்
கருமக் கழிபலங் கொண்மி னெவெனும்
அருமறை †யாட்டியை யணுகக் கூஉய்
யாதுநீ யுற்ற விடரீ தென்னென
மாதர்தா னுற்ற வான்றுயர் செப்பி
இப்பொரு ளெழுதிய விதழிது வாங்கிக்
கைப்பொரு டந்தென் கடுந்துயர் கூளெனெ
அஞ்ச லுன்ற னருந்துயர் கூளகேன்
நெஞ்சுறு துயர ‡நீங்குக வென்றுங்
கோத்துடை யந்தண ருரைநூற் கிடக்கையின்
தீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்
தானஞ் செய்தவ டன்றுயர் நீக்கிக்

---

57. நின் கைத்தூண் வாழ்க்கை-நின் ஒழுக்கத்தினுல் நான் உண்டு வாழும் வாழ்க்கை, நீ இட்டதனை உண்டு வாழ்தல் கடவதன்றென்றுமாம்.

58. வடமொழி வாசகமாவது ஒரு கிரந்தம், அது, "அபரீக்ஷ்ய நகர்தீதவ்யங் கர்தீதவ்யம் ஸுபரீக்ஷிதம், பஶ்சாதீ பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம் யதா" என்பது.

59. கொடுக்கென - கொடுக்கவென.

62. கருமக் கழிபலங் கொண்மின் - இவ்வேட்டை வாங்கிப் பாவத்தைக் கழிக்கும் புண்ணியஞ்செயது கொண்மின்; என்றது காரியமாயிருப்பதொரு நிமித்த பலமென்றவாறு, அஃதாவது தான் கொன்ற கொலைத்தொழில் நீங்கப் போன கணவன் வரும்படி தானம் பண்ண வேண்டும் பொருள் அளிக்கும காரியமாயிருப்பதொரு நிமித்த பலம்.

63. (பா) கூவி - அழைத்து.

64. நீயுற்ற இடர் யாதென, ஈது என்னென - இவ்வேடு என்னென்று சொல்ல.

70. நூற்கிடக்கை - வேதவிதி. 71. தீத்திறம் - கொலைத்திறம்.

அடி, 57. "கைத்தூ ணல்க" (மணி. 16 . 6.)

(பி - ம்.) † 'யாட்டியை யழைத்தனன் கூஉ, யாதுநீ யுற்றனை யிட ரீங் கென்னென' ‡ 'நீங்குகென்றுங், கோத்துடை யந்தண னுரை'

கானம் போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ
பத்தினி யொருத்தி படிற்றுரை யெய்த
மற்றவள் கணவற்கு வறியோ னெருவன்
அறியாக் கரிபொய்த் தறைந்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்
பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிதுசென் றெய்தி
என்னுயிர் கொண்டீங் கிவனுயிர் தாவென
நன்னெடும் பூத நல்கா தாகி
நரக னுயிரக்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை
ஒழிகநின் கருத்தென வுயிர்முன் புடைப்ப
அழிதரு † முள்ளத் தவளொடும் போந்தவன்
‡ சுற்றத் தோர்க்குந் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரிற் பசிப்பிணி யறுத்துப்
பல்லாண்டு புரந்த வில்லோர் செம்மல்
இம்மைச் ¶ செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்

---

74 செல்வத் துறுபொருள் - செல்வத்திலே உற்ற பொருள், செல்வத்தாலே யுறறவெனறுமாம.

75 செல்லாச் செல்வ - தொலையாச் செல்வ.

76 படிற்றுரை - பொய்ப்பழி. 77. வறியோன் - அறிவில்லான்.

79. கறைகெழு பாசம் - கரிய பாசம். 85. இழக்கும் - நழுவும்.

86. உயிரென்றது ஆகுபெயரான் உடம்பை.

89. கிளைஞரின் - கிளைஞரைப்போல.

90. இல்லோர் - வறியோர். செம்மல் - தலைவன். இல்லோர் செம்மலென்பதறகு இல்லறதிதார் தலைவவென்றுமாம்.

அடி, 78. "அறிகரி பொய்த்த லான்றேர்க் கில்லை" (குறுந் 184:1.)
அடி, 78-9. சிலப். 5 128-34, மணி. 1 23-4; 22: 49-56.
அடி, 90. இல்லோர் புறநா. 95. 8.
அடி, 91-3. குறள். 169, பரிமேல், மேற்.
(பி - ம்.) † 'முள்ளத் தளரொடு' ‡ 'சுற்றத் தோர்க்குத் துடர்' ¶ 'செய்த'

திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோ பால நீயென வினவக்
கோவலன் கூறுமோர் குறுமகன் றன்னுற்
காவல் வேந்தன் கடிநகர் தன்னில்
நாறைங் கூந்த னடுங்குதுய ரெய்தக்
கூறைகோட் பட்டுக் கோட்டுமா வூரவும்
அணித்தகு புரிகுழ லாயிழை தன்னெடும்
பிணிப் †பறுத் தோர்தம் பெற்றி யெய்தவும்
மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து
காமக் கடவுள் கையற் றேங்க
அணிதிகழ் போதி யறவோன் றன்முன்
‡மணிமே கலையை மாதவி யளிப்பவும்
நனவு போல நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன் கடிதீங் குறுமென
அறத்துறை மாக்கட் ஙீகல்ல திந்தப்
புறச்சிறை யிருக்கை பொருந்தா தாகலின்
அரைசர் பின்னே ரகநகர் §மருங்கினின்

94. விருத்த கோபால - ஞான விருத்த கோபாலனே. வினவ - (92) 'உம்மைப்பயன்கொல்' என்றலால் மாடலன் வினவவென்க.

95. குறுமகன் - கீழ்மகன்.

98. கோட்டுமா - பன்றி; எருமைக் கடாவுமாம்.

100. பிணிப்பு - பற்று. பெற்றி - பெருமை = சுவர்க்கம்.

101. வாளி - வாளியை. 102. கையறவு - செயலறவு

103. போதியறவோன் - புத்தன்.

106. கடிதீங்குறும் - பொல்லாததொன்று இவ்விடத்தே வரும்

109. அகநகர் மருங்கில் அரசர் பின்னேரென்க.

அடி, 97. ஐங்கூந்தல் கலித் 96: 8. அடி, 100 "பிணிப்பறு மாதவன்" (மணி. 21 16) அடி, 101 கலித் 109 19-20. அடி, 102. மணி. 3. 23 அடி, 103. போதியறவோன் மணி. 11 73-4, 12. 101-2, 111, 15. 26, 29, 28: 174, 29 23-4, 30. 10.

(பி - ம்.) †'பறுதிதோர் பெற்றியை' ‡'மணிமே கலையொடு மாதவி துறப்பவு, நனவே போலும்' ஙீ'கல்லதை யிந்தப், புறத்துறை வாழ்க்கை' §'மருங்கி, னுரையிற்'

உரையிற் கொள்வரிங் கொழிகநின் னிருப்புக்
காதலி தன்னெடு கதிர்செல் வதன்முன்
மாட மதுரை மாநகர் புகுகென
மாதவத் தாட்டியு மாமறை முதல்வனும்
கோவலன் றனக்குக் கூறுங் காலை
†அறம்புரி நெஞ்சி னறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்க ணியக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்
ஆயர் முதுமகண் மாதரி யென்போள்
‡காவுந்தி யையையைக் கண்டடி தொழலும்
ஆகாத் தோம்பி யாப்பய னளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை
தீதிலண் முதுமகள் செவ்விய ளெளியள்
மாதரி ¶தன்னுடன் மடந்தையை யிருத்துதற்
கேத மின்றென வெண்ணினை ளாகி
மாதரி கேளிம் மடந்ததன் கணவன்
தாதையைக் கேட்கிற் §றன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் ||படுத்துவர்
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும்

---

109 - 10 நின் உரை - மாசாத்துவானென்னும் பிரகாசம்; வணிகர் நின் பிரகாசத்தாலே நின்னை அகநகர் மருங்கில் வைத்துக்கொள்வ ரென்றுமாம்.

(108) ஆதலால (112) மதுரையிலே போவென்று (113) மாடலனும் கவுந்தியும் (114) கூற நிற்கையில்.

117 பான்மடை - பாறசோறு.

128. கடிமனைப் படுத்துவர் - காவலையுடைய தங்கள் வீடுகளிலே வைத்துக்கொள்வர்.

அடி, 112. மாடமதுரை . கலித் 33 17, புறநா 32 5 அடி, 115 - 6 : சிலப். 13 . 195-6, 15 . 7-8. அடி, 129. உடைப்பெருஞ் செல்வம் பழ 200.

(பி - ம்) †'அறந்தரு' ‡'காவுந் திகையைக் கண்டடி வணங்க, ஆகாத் தோம்பி யாபய' ¶'தன்னெடு மடந்தையை யிருத்தற்' §'றங்குல வாழ்நர்' ||'படுக்குவர்'

இடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்
மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கய னெடுங்க †ணஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமுங் காவலு மாயிழை தனக்குத்
தாயு நீயே யாகித் தாங்கீங்
கென்னெடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணுத் தகைசால் ‡பூங்கொடி
இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்தநா டென்னும்
அத்தகு நல்லுரை யறியா யோநீ
தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பந் தருமது கேளாய்
காவிரிப் படப்பைப் பட்டினந் தன்னுள்
பூவிரி பிண்டிப் பொதுநீங்கு திருநிழல்

---

138. அவளைப் புறப்பட விடாமையாலே அவளடியைப் பூமிதேவியும் கண்டறியாள், இனி, கொபபுளங் கொண்டதென்பாள், 'மண்மக ளறிந்திலள்' என்றுள் எனறும, காலின் மென்மைக்குத் தக்கபடி தானும் மெல்கிறறிலளென்றுமாம்.

151. காவிரிப் படப்பைப் பட்டினம் - காவிரிப்பூம்பாக்கத்துப் பட்டினம்.

152. பொதுநீங்கு திருநிழல் - பிறிது மரம்போல ஆதித்தனுடன் திரியாது நிறகும நிழல, ஆவது ஆதித்தன் கிரணத்தாற சாயாதே நிறறல்.

அடி, 143. "கறபுக்கடமபூண்டு காதலன் பின்போந்த.. . நங்கை" (சிலப். 29 "தறபயந்தாள"), "கறபுக்கடம்பூண்டு நுங்கடன் முடிதீத" (மணி 26 8) அடி, 145. பத்தினிப் பெண்டிர் இருந்த நாட்டில் வானம் பொய்யாது. கலித். 16 . 20, குறள், 55, திரி. 98, மணி. 15 . 77-8 அடி, 151. காவிரிப்படபபைப் படடினம மணி 25 16

(பி - ம்.) † 'ணஞ்சன மூட்டித்' ‡ 'பூங்கொடி கற்பு'

உலக நோன்பிக ளொருங்குட னிட்ட
†இலகொளிச சிலாதல மேலிருந் தருளித்
தருமஞ் சாற்றுஞ் சாரணர் தம்முன்
திருவி லிட்டுத் திகழ்தரு மேனியன்
தாரன் மாலையன் றமனியப் பூணினன்
பாரோர் காணுப் பலர்தொழு ‡படிமையன்
கருவிரற் குரங்கின் கையொரு பாகததுப்
¶பெருவிறல் வானவன் வந்துநின் ரேனைச்
சாவக ரெல்லாஞ் சாரணர்த் தொழுதீங்
§கியாதிவன் வரவென விறையோன் கூறும்
எட்டி சாயல னிருந்தோன் றனது
பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையிலோர்
மாதவ முதல்வனை மனைப்பெருங் கிழத்தி
ஏத நீங்க வெதிர்கொ ளமயத்
தூர்ச்சிறு குரங்கொன் ரெடுங்கி யுள்புக்குப்
பாற்படு மாதவன் பாதம் பொருந்தி
உண்டொழி மிசசிலு முகுத்த நீரும்
தண்டா வேட்கையிற் ருன்சிறி தருந்தி
எதிர்முக நோக்கிய வின்பச் செவ்வியை

---

153. உலக நோன்பிகள் - சாவகர்.

156. (பா) திருவில் விடடு - நல்ல ஒளியை விட்டு.

(158) பாரோர் கண்டறியா (160) வானவன் நின்ரேனை.

(159) ஒரு பாகத்துக் கை குரக்குவடிவாயிருக்கின்ற (160) வானவன் வந்து நின்ரேனைக் (162) கேடக இறையோன் கூறும.

163. எட்டி சாயலன் என்போன் ஒரு வாணிகன், எட்டி : பட்டப் பெயர். இருந்தோனென்ருர், தன்மம செய்தவன்ருனும் இங்கே யிருந்தா னென்றற்கு.

168. தன்பாற்பட்ட மாதவத்தை யுடையவன்

170. தண்டாவேடகை - பசி.

170 - 71. பசிகெடடு நோக்கிய முகச்செவ்வி.

அடி, 153-4 சிலப். 10 24-5. அடி, 156 மணி. 6 10. அடி, 157-8 . மணி 3 . 36-7. அடி, 161. சாரணர் · சிலப். பக். 278, அடிக்.

(பி - ம்.) †'இலங்கொளிச்' ‡'சிறப்பினன்' ¶'பொருவிறல்' §'கியாதிவர் வரவென'

அதிராக் கொள்கை யறிவனு †நயந்துநின்
மக்களி னேம்பு மனைக்கிழத் தீயென
மிக்கோன் கூறிய ‡மெய்ம்மொழி யோம்பிக்
காதற் குரங்கு கடைநா ¶ளெய்தவும்
தானஞ் செய்வுழி யதற்கொரு கூறு
தீதறு கென்றே செய்தன ளாதலின்
மத்திம நன்னாட்டு வாரண நன்னுள்
உத்தர கௌத்தற் கொருமக ளாகி
உருவினுந் திருவினு முணர்வினுந் தோன்றிப்
பெருவிறற் ருனம் பலவுஞ் செய்தாங்
கெண்ணி லாண்டி னிறந்த பிற்பாடு
§ விண்ணோர் வடிவம் பெற்றன ளுதலிற்
பெற்ற செல்வப் பெரும்பய னெல்லாம்
தற்காத் தளித்தோ ||டானச் சிறப்பெனப்
பண்டைப் பிறப்பிற் குரங்கின் $சிறுகை
கொண்டொரு பாகத்துக் கொள்கையிற் ₣புணர்ந்த
சாயலன் மனைவி தானந் தன்னுள்
ஆயின னிவ்வடி வறிமி னெனவெனச்
சாவகர்க் கெல்லாஞ் ‡‡சாற்றினன் காட்டத்
¶¶ தேவ குமரன் ரோன்றின னென்றலும்
சாரணர் கூறிய தகைசா னன்மொழி
ஆரணங் காக வலந்தலைப் பட்டோர்
அன்றப் §§பதியு ளருந்தவ மாக்களும்

---

174. மொழி - மொழியை 175. கடைநாளெய்த - மரிக்க.

176. தானமென்றது முன்பு சாரணர்க்குச் செய்துபோதுகிற தானம்.

178. வாரணம் - ஸ்ரீ வாரணசி

179. (பா) கவிப்பன் - பசுமறையதீ தேடின பொருளுடையவன்.

193. ஆரணங்காக - மந்திர உபதேசமாகக்கொண்டு, மிக்க தெய்வப் பிரார்த்தியமாகக் கொண்டென்றுமாம்.

அடி, 182 பிற்பாடு . சிலப் 13 1. அடி, 192 : சிலப். 11 . 7.

(பி - ம்-) †'நயந்து, மக்களி' ‡'மிகுமொழி' ¶'ளெய்ததீ, தானஞ்' §'விண்ணோ ருருவம்' ||'டானப் பயனெனப்' $'சிறுவிரற்' ₣'புணர்ந்து' ‡‡'சாற்றிக் காட்டதீ' ¶¶'தேவர் குமரன்' §§'பதியி லருந்தவ'

195 தன்றெறல் வாழ்க்கைச் சாவக மாக்களும்
இட்ட தானத் தெட்டியு மனைவியும்
முட்டா †வின்பத்து முடிவுல கெய்தினர்
கேட்டனை ‡யாயினித் தோட்டார் குழலியொடு
நீட்டித் திராது நீபோ கென்றே
200 கவுந்தி கூற வுவந்தன ளேத்தி
வளரிள வனமுலை வாங்கமைப் பணைத்தோள்
முளையிள வெண்பன் முதுக்குறை நங்கையொடு
சென்ற ஞாயிற்றுச் செல்சுட ரமயத்துக்
கன்றுதே ராவின் கனைகுர லியம்ப
205 மறித்தோ ணவியத் துறிக்கா வாளரொடு
செறிவளை யாய்ச்சியர் சிலர்புறஞ் சூழ
மிளையுங் கிடக்கும் வளைவிற் பொறியும்
¶கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
§பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
210 காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையும்
தூண்டிலுந் ||தொடக்கு மாண்டலை யடுப்பும்

195. தன்றெறல் வாழக்கை - தன் மனதிதுக்குள்ளானேர்க்கெல்லாம் பொதுப்பட்ட வாழ்க்கை, பொதுநிலப்பட்டோராகிய சாவகர்.
198. தோடார் குழலி தோடடார் குழலியென விகாரம்.
202. முதுக்குறை நங்கை - பெரிய அறிவினையுடைய நங்கை.
203. சென்ற ஞாயிறு - உவாவின ஞாயிறு, செல்சுட ரமயம் - இதனையுடைய மாலைபபொழுது, விழுந்த ஞாயிறறுச் சுடர் செல்லுகின்ற பொழுதின்கண்
208 (பா) கருவிறல் - கொடிய வெற்றி.
209. பாகடு குழிசி - செம்புருக்கும மிடா, சாணகங் கரைத்துக் காய்கிற மிடாக்களுமாம்
210. இருப்பு வடடுக்கள் காய்கிற உலை. கல்லிடுகூடை - இடங் கணிக்கல் வீசுங் கூடை.
211. தொடக்கு - கயிற்றுதீ தொடக்கு. ஆண்டலையடுப்பு - ஆண் டலைப் புள்ளின் வடிவாகிய அடுப்பு.

அடி, 198. தோட்டார்குழல் கலித். 117 . 10. அடி, 202 முளையிள வெண்பல் சிலப. 7 16, மணி. 4 100. அடி, 205 உறிகடடினகா : பெரும்பாண். 171. அடி, 206. செறிவளையாயச்சியர் . சிலப். 16 . 7. அடி, 207. விற்பொறி பதிற். 22 . 23, பெருங். 3. 25 23. அடி, 210. கல்லிடுகூடை . பெருங். 3. 25 . 22. அடி, 211. ஆண்டலை யடுப்பு : மதுரைக். 29. அடி, 207-15. பலவகைப்பொறி . பு. வெ. 112; சீவக. 102.

(பி - ம்.) † 'வின்பதீ துயருல' ‡ 'யாயிற் ரேட்டலர்' ¶ 'கருவிரற் கூகையுங்' § 'பரிவுறு நெய்யும்' || 'தூடக்கு மாண்டலை யடக்கலுங்'

கவையுங் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமுங் கைபெய ரூசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமும்
கோலுங் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் †கழிந்துதன் மனைபுக் கனளாற்
‡கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்தென்.

---

212. கவை - கவைக்கோல் கழு - கழுக்கோல். புதை - அம்புக் கட்டு; மண்ணிற் புதைத்த இரும்பாணியுமென்ப. புழை - ஏவறை.

213. ஐயவித்துலாம் - கதவை அணுகாதபடி கற்கவி தொடங்கி நாற்றும் துலாம், அப்புப்பறருக்கை தூக்கிற்றென்பாருமுளர், சிறறமபு கனை வைத்து எயயும் இயந்திரமுமாம

கைபெயரூசி - கையின்கட [1] பொதுக்கும் ஊசி, பொய்யூசியென்று பாடமோதி, மாறறுரைக் கையைப் பொயயாக்கும் ஊசியென்பாருமுளர்.

214 சிரல் - சிச்சிலி பணை - வேய்வடிவாகப் பண்ணி வைப்பது; மூரசென்பாருமுளர், குதிரைப் பநதியுமாம்.

215 எழுவுஞ் சீப்பு - கதவுக்கு வலியாக உள்வாயிற்படியிலே வீழாது எடுக்கவிடும் மரங்கள் [சீப்பு=விசை], கதவோடு பொருந்தின மேலிற் றுழுமாம், நிரைத்த கதவுமாம். திறக்கும் காலத்து மேலே யெழுப்பு கையால், எழுவுஞ் சீப்பென்றுர் கணையம் - சீப்பு அகப்படக் குறுக்கே போடக்கடவ மரம்

216. கோல் - விடடேறு. குந்தம் - சிறு சவளம்

217. நாட்கொடி - நலல நாளிலே கட்டின கொடி, நாள்தோறும் செய்த வெற்றிக்குக் கட்டின கொடியுமாம.

219. கோவலர் மடந்தை - இடைசசியான மாதரி.

(219) கோவலர் மடந்தை அடைக்கலங்கொண்ட கொள்கையொடு
(218) வாயில் கடந்து தன் மனை புக்காளென்க

அடி, 213 ஐயவித்துலாம பதிற் 22 23 அடி, 215 "ஏணியுஞ் சீப்பு மாறறி, மாண்வினை யானையு மணிகளைந் தனவே" (புறநா. 305 : 4-5), "சீப்புள் ளுறுத்துத் திண்ணெழுப் போக்கிக், காப்புள ளுறுத்த கடிமதில் வாயில்" (பெருங். 1 43 . 163-4)

[1] பொதுக்கும் - துளைக்கும், "அண்டத் தைப்பொதுத் தப்புறத் தப் பினு லாடும்" (கம்ப. இரணிய 4)

(பி - ம்) † 'கடந்துதன்' ‡ 'கோவலன் மடந்தையொடு கொள்கை யிற் சிறந்தென்'

மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி
ஏத மில்லா விடந்தலைப் படுததினள்
நோதக வுண்டோ நும்மக ளுர்க்கினிச
சாவக நோன்பிக ளடிக ளாதலின்
நாத்தூ ணங்கையொடு நாள்வழிப் படுஉம்
அடிசி லாக்குதற் கமைந்தநற் கலங்கள்
நெடியா தளிமி னீரெனக் கூற
இடைக்குல மடந்தைய ரியல்பிற் குன்ரு
மடைக்கலந் தன்னெடு மாண்புடை மரபிற்
கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலி யரிசி தம்பாற் டாயனெடு
கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப
மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்

---

15. மாதவத்தாடடியெனறது கவுநதியை

18 அடிகளென்றது கோவலனை.

19 நாத்தூணங்கை - மாதரிமகள் ஐயை.

19 - 20 நாளவழிப் படுஉமடிசில் - காலத்திலே ஆக்கும அடிசில்.

18 - 21 சாவக நோனபிகளாதலின இரவுண்ணுரென்பது

23 மடைக்கலம - ஆக்குங்கலம்

22 - 3. இயல்பிற் குன்ருக் கலமென்ருர், புதுக்கலத்தை, மடை மேல் ஏற்றுவாருமுளர்

24 கோளிப்பாகல் - பூவாதே காய்க்கும் பலா, வெளிப்படை, கனிக்காய் - முதாரிக்காய், கனிக்கு ஆன காய்.

25. (பா) வால்வரிக் கொடுங்காய - வெள்வரிக்காய். மாதுளங்காய - கொம்மட்டி மாதுளங்காய், புளித்த கறி ஆக்குதற்குக் கொம்மட்டி மாதுளங்காய் சிறக்கும.

27. (பா) தன்பாறபயன் - தனக்குள்ள பாலாகிய பயன்.

அடி, 17, கணவனை மகன் எனல் . மணி. 21 . 29. அடி, 19 நாத்தூண் - கணவனுடன் பிறந்தவள் . சேதுபுராணம், தேவிபுர 5. அடி, 24 : பெரும்பாண். 407-8. அடி, 27 சாலியரிசி பெருங். 1. 43 : 182.

கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன
கரிபுற வட்டில் கண்டனள் பெயர
வையெரி மூட்டிய வையை தன்னெடு
கையறி மடைமையிற் காதலற் காக்கித்
தாலப் புல்லின் வால்வெண் டோட்டுக்
கைவன் மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செய்வினைத் தவிசிற் செல்வ னிருந்தபின்
கடிமல ரங்கையிற் காதல னடிநீர்
சுடுமண் மண்டையிற் றெழுதனண் மாற்றி
மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையாற் றடவிக்
† குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்
கமுத முண்க வடிக ளீங்கென
அரசர் பின்னேர்க் கருமறை மருங்கின்
உரிய வெல்லா மொருமுறை கழித்தாங்

---

30 குயம் - அரிவாள் விடுவாயசெய்தல் - அரிதல்.

32 பெயர - புகை கண்டறியாதபடியாலே திருமப.

33 வை - வைக்கோல

(32) அடடிலைக்கண்டு பெயரும்படி (33) வைக்கோலால் எரிமூட்டிய வென்க, தீமூட்டுவது வைக்கோலாதலால்..

34 கையறி மடைமையின் - தன்கைவல்ல அளவாலே.

(30) விடுவாய்செய்ய (31) முகம் வியர்த்தது ; (32) கரிந்த இடத்தை யுடைய அட்டிலைக்கண்டு பெயர்ந்த வளவிலே (31) கண் சேந்தன ; இவ் வாருகவும் (34) கையறிமடைமையிற் காதலறகு ஆக்கி

35 தாலப்புல் - பனையாகிய [1] புறக்காழ்மரம். 37 தவிசு - தடுக்கு.

(38) அங்கையின் (39) மாற்றி

40. மயக்கொழித்தல் - இவர்க்கு நிகழ்வனவறிந்து மயங்கின மயக் கம் தீர்த்தல், அனந்தல் தீர்க்கையுமாம.

42. குமரி வாழை - ாஞ்ஞை வாழை

44 - 5. அருமறை மருங்கின் உரியவெல்லாம் - பலியிடுதல் முதலி யன, வாய்பூசல் முதலாயினவுமாம். தன்னூரிற் செய்வன வெல்லாம் செய்யப்பெருமையின், ' ஒருமுறை கழித்து ' என்றார்.

---

[1] " புறக்கா ழனவே புல்லென மொழிப " (தொல். மரபு. 85)

(பி - ம்.) † ' குமரி வாழைக் குருத்தகம் விரித்தாங், கமிழ்த முண்மி னடிக ணீரென '

காயர் பாடியி னசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணு நம்பி யீங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்
தொழுனை யாற்றினுட் டுமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லென
ஐயையுந் தவ்வையும் விம்மித மெயதிக்
கண்கொளா நமக்கிவர் காட்சி யீங்கென
உண்டினி திருந்த வுயர்பே ராளற்
கம்மென் றிரையலோ டடைக்கா யீத்த
மையீ ரோதியை வருகெனப் பொருந்திக்
கல்லத ரத்தங் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ மடந்தைமெல் லடியென
வெம்முனை யருஞ்சுரம் போந்ததற் கிரங்கி
எம்முது குரவ ரென்னுற் றனர்கொல்
மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ
யானுளங் கலங்கி யாவது மறியேன்
வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்

---

52 தவ்வை - தமக்கை, தாயுமாம, முறையன்று. விம்மிதம் · வியப்பு.

(45) ஒருமுறைகழிதீது (54) உண்டினிதிருந்தவெனக்கூட்டுக

55 திரையல் - வெறறிலைசசுருள்

57 - 60 கல்லதரதீதம . . . என்னுற றனரென்றது, வல்லவோ அடியென இரங்கி என்னுறறனரோவென்றுனெனக.

62 நினனை இவவாறு தனியாக்குதற்குக் காரணமாம என்பொருட் டொலைவால் வந்த பான்மையினை இன்னதென்று ஒன்றுமறிகிலேன்.

63 வறுமொழி, பயனில் சொல் (பா) வமபமாந்தர் - ஒன்றிற் படாத மாந்தர்

64 குறுமொழிக்கோட்டி - சிறு சொல்லையுடையார். நெடுநகை - மிக்க நகை

அடி, 50. "தொழுனைத் துறைவனே டாடிய பின்னை", "வஞ்சஞ் செயதான் றெழுனைப் புனலுள், நெஞசங் கவர்ந்தாள்" [17 . (22), (24)], "விழுமிழை நல்லார் வெருள்பிணபோ னேக்கம், கெழுமிய நாணை மறைக்கும் - தொழுனையுள், மாலையுண் மாலை மயக்குறுதீ தாளஃதாற, சால்பினைச் சால்பறுக்கு மாறு" (பழ. 12.)

அடி. 57. கல்லதரதீதம் "கல்பிறங்கதீதம்" (குறுந். 66 2; அகநா. 79 16), "கல்லதர்ச் சிறுநெறி" (அகநா. 72 17); "கல்லத ரத்தங் கடவா நின்றுழி" (மணி. 13 39.)

அடி, 63 . "வமபப் பரதீதை வறுமொழி யாளனெடு" (10 : 219); மணி · 7 . 50.

65 பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக்கொன் றேற்கு நன்னெறி யுண்டோ
இருமுது குரவ ரேவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்
70 டெழுகென வெழுந்தா யென்செய் தனையென
அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலும்
துறவோர்க் †கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னாநும்
பெருமக டன்னெடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
75 ‡மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவிகந் தனனு

---

65 பொச்சாப்புண்டு - மறவியிற்பொருந்தி.

66 நசசப்படுபொருளை நச்சென்றார்.

65 - 6 பொருளுரையாளர் நச்சுக்கொன்றேற்கு - மெயயுரைக்கும் சான்றோரால் நச்சப்படுநதொழிலாக கெடுதீதேனுக்கு, ஆவது ஆசாரம்.

68 சிறுமுதுக் குறைவிக்கு - சிறிய வயதிலே பெரிய அறிவினை யுடைய உனக்கு. சிறுமை - நோய்

69 மாநகர்மருங்கு - நம மாநகர் மருங்கினின்றும ாண்டு - இவ் விடத்து, என்றது மதுரையை

70 என்செய்தனை யென்றது செய்த அருமை என்னென்று வியந்தது

69-70 வழியிடை நினக்குவரும் தீங்கு ஒன்றும கருதாது எழுக வென்று யான் சொலல .. ...

71. 'அறவோர்க்களித்தல்' என்பது முதற் கண்ணகி வார்த்தை. அறவோர் - துறவாது விரதங் காத்தோர்.

72 துறவோர்க்கு - துறநதோரை

74 பெருமகள் - கோவலன் மாதா

74 - 5 பெரிய புகழையும் தலையான உற்சாகத்தையுமுடைய மாநிதிக் கிழவன் - கோவலன் பிதா, பெரிய பொருளுதீ தன்னிடத்தே யுடைய மாநிதிக் கிழவனென்றுமாம்.

76 - 9 கரந்தொழுகினவாறே அவர்கள் இருவரும் இக்குணத்தைக் கண்டு அற்புளஞ்சிறந்து.

(அடி,) 71-3. குறள், 8-ஆம அதிகாரம், பரிமேல். மேற்.

73. "விருந்து என்பது உயர்திணை யிருபாலையும் உணர்த்தும்' (தொல். கிளவி. 57, ந.)

(பி - ம்.) †'கீதலுந்' ‡'வண்பெருஞ்'

அற்புளஞ் சிறந்தாங் †கருண்மொழி யஃஇ
எற்பா ராட்ட யானகத் தொளித்த
நோயுந் துன்பமு நொடிவது போலுமென்
‡ வாயன் முறுவற்கவ ருள்ளகம் வருந்தப்
போற்ரு வொழுக்கம் $ புரிந்தீர் யாவதும்
மாற்ரு வுள்ள வாழ்க்கையே ஞதலின்
ஏற்றெழுந் தனன்யா னென்றவள் கூறக்
குடிமுதற் சுற்றமுங் குற்றிஃ யோரும்
அடியோர் பாங்கு மாயமு நீங்கி
நாணமு மடனு நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னெடு போந்தீங் கென்றுயர் கஃந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பி னென்றுகொண் டியான்போய்

---

79 நோய் - உடம்பின்மெலிவு. துன்பம - மனத்தளர்ச்சி

81 - 2 (பா) நீர் போறரு வொழுக்கத்தை மேவினீராயிருக்கவும் மாற்ருவுள்ள வாழ்க்கையையுடையேனுதலாலே.

83. ஏறறு - உடன்படு.

76 - 83 நீர் என்முனபு நில்லாமையாலுள்ள வெறுப்பைக் கரந் தொழுகினேனுக, அதனை அறிந்து அவர்களுடைய உள்ளஞ்சிறந்து ஆங்கு அருண்மொழியஃஇ எறபாராடட யான் நெஞ்சத்தடக்கிய தும்பிரிவையும அதனல் வந்த ஆறருமையையும சொல்லுவதுபோலும் என் மெய்யலலா முறுவல்காரணமாக அவர் வருந்தும்படி போறரு ஒழுக்கத்தை மேவினீர், மாறருத உள்ளத்தேன் ஆகையாலே உடன் பட்டுப் போநதேன.

84. குற்றிஃயோர் - குற்றேவன்மகளிர், [1] எடுத்துக்கை நீட்டு வாருமாம்.

85. அடியோர்பாங்கு - அடியோர் பகுதி, சேவிக்கும் பெயர். ஆயம் - தோழிமார், சேவிக்குநதோழிமாருமாம்

86. நல்லோரேத்தது - நலலோராலே ஏத்தப்படுந்தன்மை

84 - 7. சுறறமுதலான நான்குக்கும நான்கும துணையாக.

90. நாணினையுடைய பாவாய், சாரியை நிறக உருபுதொக்கது

அடி, 80 "வறிதகத் தெழுநத வாயன் முறுவலள்" (அகநா. 5 5)

[1] திருக்குற்ருல 1 13 80

(பி - ம்.) † 'கருமொழி' ‡ 'வாயின்' $ 'புரிந்தா ராவது'

மாறி வருவன் மயங்கா தொழிகெனக்
கருங்கய னெடுங்கட் காதலி தன்னை
ஒருங்குடன் றழீஇ யுழையோ ரில்லா
ஒருதனி கண்டுதன் னுள்ளகம் வெதும்பி
வருபனி கரந்த கண்ண ளுகிப்
பல்லான் கோவல ரில்ல நீங்கி
வல்லா நடையின் மறுகிற் செல்வோன்
இமிலே றெதிர்ந்த திழுக்கென வறியான்
தன்குல மறியுந் தகுதியன் ருதலின்
தாதெரு மன்றந் தானுடன் கழிந்து
மாதர் வீதி மறுகிடை நடந்து
பீடிகைத் தெருவிற் பெயர்வோ னுங்கண்
கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர
மெய்ப்பை புக்கு விலங்குநடைச் செலவிற்
கைக்கோற் கொல்லனைக் கண்டன ளுகித்
தென்னவன் பெயரொடு சிறப்புப் பெற்ற
பொன்வினைக் கொல்ல னிவனெனப் பொருந்திக்
காவலன் றேவிக் காவதோர் காற்கணி
† நீவிலை யிடுதற் காதி யோவென
அடியே னறியே னுயினும் ‡வேந்தர்
முடிமுதற் கலன்கள் $ சமைப்பேன் யானெனக்

---

95. ஒருங்குடன்தழீஇ - மேனிமுழுதும் தழுவி
95 - 6. துணையிலலாத தனிமையையக்கண்டு விடடு நீங்கமாட்டாமை யால் மனம் வெதுமபி 99 வல்லாநடை - மாட்டாநடை
100 - 101. ஏறு எதிர்தல் இடையரறியும நிமித்தமாதலின் அறிந்திலன்.
103. மாதர் வீதி - தளிப்பெண்டுகள் தெரு
105 - 6. சிறபதிதொழிலெல்லாம துறைபோகிய கொல்லர், கம் மாளரது வினையாவது - சிறபம
107. மெய்ப்பை - சட்டை விலங்கு நடைச்செலவு - இழிகுலதீதோ ருதலின், உயர்ந்தோர்வந்தவிடமெங்கும் விலங்கி நடதீதல்.
108. கைக்கோல் - பற்றுக்கொடிறு. 109. சிறப்பு - வரிசை.
112. ஆதியோ - ஆவையோ.

அடி, 95 - 7 மனைவியரக்குத் தமது வருத்தம தோன்றுமல் கணவர் மறைத்தல் **புறநா.** 41 . 14-5 அடி, 102 தாதெருமன்றம் . 17 . (28) . 4 , **மலைபடு** 531 , **நற்.** 343 . 3 , **குறுந்.** 46 3 - 4 , **கலித்.** 103 . 62 ; **புறநா.** 33 11. அடி, 104. பீடிகைத்தெரு . 5 . 41. அடி, 105. கண்ணுள் வினைஞர் **கலித்** 85 7 , **பெருங்.** 5. 9 30 ; அடி, 107. " மெய்ப்பைபுக்க வெருவருந் தோற்றத்து " (**முல்லை.** 60)

(பி - ம்.) † ' நீவிலை தெரிதற ' ‡ ' வேந்தற்கு ' $ ' அமைப்பேன் '

கூற்றத் தூதன் கைதொழு தேத்தப்
†போற்றருஞ் சிலம்பின் பொதிவா யவிழ்த்தனன்
மத்தக மணியொடு வயிரங் கட்டிய
பத்திக் கேவணப் ‡பசும்பொற் குடைச்சூற்
சித்திரச் சிலம்பின் செய்விலை யெல்லாம்
$பொய்த்தொழிற் கொல்லன் புரிந்துட னேக்கிக்
கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்பு
யாப்புற வில்லை யெனமுன் போந்து
விறன்மிகு வேந்தற்கு விளம்பியான் §வரவென்
சிறுகுடி லங்க ணிருமி னீரெனக்
கோவலன் சென்றக் குறுமக னிருக்கையோர்
தேவ கோட்டச் சிறையகம் புக்கபின்
கரந்தியான் கொண்ட காலணி யீங்குப்
பரந்து வெளிப்படா முன்ன ¶மன்னற்குப்
புலம்பெயர் புதுவனிற் போக்குவ னியானெனக்
கலங்கா வுள்ளங் கரந்தனன் செல்வோன்
கூடன் மகளி ராடற் ரேற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்
காவல னுள்ளங் கவர்ந்தன வென்றுதன்
ஊட லுள்ள முள்கரந் தொளித்துத்

---

116. பொதிவாய் - கட்டின வாய். 117. மத்தகமணி - தலையானமணி.

118 பத்தியாக வகுத்த கேவணம், கேவணம் - கல்லழுத்துங்குழி. குடைச்சூல் - புடைதாழ்த்தல், உள்ளுள் தாழ்த்தலுமாம்.

120. கொல்லன் புரிந்துடனேக்கி - கொல்லன் தான் மறைத்த சிலம் போடு ஒக்கும்படியைப் பார்த்து.

122. போந்து - போய்.

124. சிறுகுடிலங்கண் - சிறுகுடிலுக்கு அருகான அவ்விடம்; ஆவது அவனிருக்கையருகான தேவகோட்டம்.

125 - 6..... . அக்கசாலை . ...

128. மன்னறகு வெளிப்படாமுன்னென்க.

129. புலம்பெயர் புதுவன் - வேறெரு தேசத்தினின்றும் வந்தவன்; பரதேசி.

(பி - ம்.) †'பொற்றஞ் சிறப்பிற் பொதிவாயவிழ்த்து' ‡ 'பசும் பொற்சூடகச், சித்திரச்' $ 'பொறரெழிற கொல்லன் புரிந்து நோக்கி' §'வருவேன், சிறுகுடி லாங்க' ¶'மன்னவற்குப்'

தலைநோய் வருத்தந் தன்மே லிட்டுக்
குலமுதற் றேவி கூடா தேக
மந்திரச் சுற்ற நீங்கி மன்னவன்
சிந்தரி நெடுங்கட் சிலதியர் தம்மொடு
கோப்பெருந் தேவி கோயி †னேக்கிக்
காப்புடை வாயிற் கடைகா ‡ணகவையின்
வீழ்ந்தனன் கிடந்து தாழ்ந்துபல வேத்திக்
$கன்னக மின்றியுங் கவைக்கோ லின்றியும்
துன்னிய மந்திரந் துணையெனக் கொண்டு
வாயி லாளரை மயக்குதுயி லுறுத்துக்
கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேரூர்க் காவலர்க் கரந்தென்
சில்லைச் சிறுகுடி லகத்திருந் தோனென
வினைவிளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் றேரா ஞகி
ஊர்காப் பாளரைக் §கூவி யீங்கென்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகிற்
கொன்றச சிலம்பு கொணர்க வீங்கெனக்
காவல னேவக் கருந்தொழிற் கொல்லனும்

---

131 - 41. அரசனுக்கு ஆடிப் பாடினருள் ஒருத்திமேல் உளளஞ் சென்றதென்று தேவி ஊடி நீங்க மந்திரச்சுற்றம நீங்கி அரசன் அவள் வயிற குறுகினவளவிலே தட்டான் தொழுதேத்தி.

(130) செல்வோன் (141) வீழ்ந்தனன் கிடந்தென்க.

142. கன்னகம் - அகழ்கருவி. கவைக்கோல் - குத்துக்கோல், கொடிறு, மண்வாங்குங்கருவி.

143. மந்திரம் - துயின்மந்திரம். 147. சில்லை - இழிவு.

150 - 51 என் கோதை - என்தேவி.

152. கன்றிய கள்வன் - களவிறறழும்பினவன்.

அடி, 148 இந்நூற்பதிகத்தின் 27 - ஆம் அடி முதலியவற்றைப் பார்க்க, 'வினைவிளைந்தது' (தொல் கிளவி 57, சே. ந.) என்பது இங்கே அறிதறபாலது.

(பி - ம்) † 'னேக்கக்' ‡ 'ணகவயின்' $ 'கன்ன மின்றியுங்' § 'கூமி னீங்கென்'

ஏவ லுள்ளத் தெண்ணியது முடித்தெனத்
† தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த
கோவலன் றன்னைக் குறுகின ஞகி
வலம்படு தானை மன்னவ னேவச்
சிலம்பு காணிய வந்தோ ரிவரெனச்
செய்வினைச் சிலம்பின் செய்தி யெல்லாம்
பொய்வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட
இலக்கண முறைமையி னிருந்தோ னீங்கிவன்
கொலைப்படு மகனல னென்று ‡கூறும்
அருந்திறன் மாக்கலை யகநகைத் துரைத்துக்
கருந்தொழிற் கொல்லன் காட்டின னுரைப்போன்
மந்திரந் தெய்வ மருந்தே நிமித்தம்
தந்திர மிடனே காலங் கருவியென்
றெட்டுட னன்றே யிழுக்குடை மரபிற்
கட்டுண் மாக்க டுணையெனத் $திரிவது
மருந்திற் பட்டீ ராயின் யாவரும்
பெரும்பெயர் மன்னனிற் பெருநவைப் பட்டீர்
மந்திர நாவிடை வழுத்துவ ராயின்
இந்திர §குமரரின் யாங்காண் குவமோ
தெய்வத் தோற்றந் தெளிகுவ ராயிற்

155. ஏவலுள்ளத்து - ஏவப்பட்ட உள்ளத்தோடே. எண்ணியது முடித்தென - எண்ணியது முடித்தேனென்று, முடித்து தன்மைவினை

156 தீவினையாகி வந்து நிற்கிற வலை 157 குறுகினஞகி - குறுகி.

164. (பா) அருந்திறன் மாக்கட்கு அகநகவுரைத்து - இவனிருந்த படியாற் கள்வனல்லனென்று உரைத்தவர்கள் மனம் பிரியமாக உடம் படும்படி வார்த்தைகள் சொல்லி

165. காட்டினன் - ஏதுக்கலைக்காட்டி.

170. மருந்திற் பட்டீராயின் - இவன் மருந்திலை தப்பினவிடத்து.

173. இந்திரகுமரர் அகப்படாததுபோல.. நாமும் காணமாட்டோம்.

174 - 5 கள்ளர் தங்கள் தெய்வத்தோற்றத்தினை நினைப்பாராயின், கையிலகப்பட்ட பொருளைக் காட்டியும் தப்புவர்; அகங்கையை அவர்க்குக் காட்டியும் பெயர்குவரென்றுமாம்.

அடி, 156 - 7 : 'குறுகுதல் அணுகுதலென்னும் பொருளில் வரும்' (தொல். முதற்சூத்திரவிருத்தி, மேற்.)

(பி - ம்) †'தீவினை வலையிற்' ‡'கூறலு, மருந்திரண் மாக்க ளகனக வுரைத்துக்' $'திரிவ, மந்திர நாவிடை வழுத்துவர்' §'திருவின் யாங்காண் குவமோ'

†கையகத் துறுபொருள் காட்டியும் பெயர்குவர்
மருந்தி னங்கண் மயக்குவ ராயின்
இருந்தோம் பெயரு மிடனுமா ருண்டோ
நிமித்தம் வாய்த்திடி னல்ல தியாவதும்
‡புகற்கில ரரும்பொருள் வந்துகைப் புகுதினும்
தந்திர கரண மெண்ணுவ ராயின்
இந்திரன் $மார்பத் தாரமு மெய்துவர்
§இவ்விட மிப்பொருள் கோடற் கிடமெனின்
அவ்விடத் தவரை யார்காண் கிற்பார்
காலங் கருதி யவர்பொருள் கையுறின்
||மேலோ ராயினும் விலக்கலு முண்டோ
கருவி கொண்டவ ரரும்பொருள் கையுறின்
இருநில மருங்கி னியார்காண் கிற்பார்
இரவே பகலே யென்றிரண் டில்லை
கரவிடங் கேட்பினேர் புகலிட மில்லை
¶தூதர்கோ லத்து வாயிலி னிருந்து
₱மாதர்கோ லத்து வல்லிருட் புக்கு
விளக்கு நிழலிற் றுளக்கிலன் ††சென்றுங்
கிளங்கோ வேந்தன் றுளங்கொளி யாரம்
‡‡வெயிலிடு வயிரத்து மின்னின் வாங்கத்
துயில்கண் விழித்தோன் றேளிற் காணுன்

176 - 7. நம்மிடத்து மயக்குவரென்றல், இருந்த நாம எழுந்திருந்து போகலாமிடமும உண்டோ, இருநத நாம பெயர்ந்து போகவுமாட்டோ மென்றுமாம்.

179. புகற்கிலர் - புகார்கள், பொருள்வந்து கைப்புகுதினும் அதனை விருமபாரென்றுமாம்.

180 தந்திரகரணம - கரவடநூல, களவுநூலிற சொல்லுகிற கிரியையுமாம.

185. மேலோர் - தேவர்

189 கரவிடம் - களவின்பகுதி. புகலிடம் - ஒளிக்குமபரப்பு, புகலிட மில்லை - சொல்லின் முடிவில்லை யென்றுமாம. (பா) பரவிடமில்லை - புகழ்ந்து முடியவொண்ணுதென்க.

193. இளங்கோவேந்தன் - தென்னவன் தம்பி

194. வெயிலிடு வயிர ஆரத்தை வாங்கவென்க, ஆரத்தை வயிரத் தொளியே ஒளியாகச் சென்று வாங்கவென்றுமாம்.

(பி - ம்.) †'கையகத் துப்பொருள்' ‡'புகற்கி லரும்பொருள் வந்துகை கூடா' $'மார்பி லாரமு' §'இவ்விடத் திப்பொருள்' ||'மேலோ ராலும்' ¶'தூதர்க்கோலத்து' ₱'மாதர்க்கோலத்து' ††'சென்றீங்' ‡‡'வில்லிடு'

உடைவா ளுருவ வுறைகை வாங்கி
எறிதொறுஞ் செறித்த வியல்பிற் கரற்ருன்
மல்லிற் காண மணித்தூண் காட்டிக்
கல்வியிற் பெயர்ந்த கள்வன் றன்னைக்
கண்டோ ருளரெனிற் காட்டு மீங்கிவர்க்
குண்டோ வுலகத் தொப்போ ரென்றக்
கருந்தொழிற் கொல்லன் சொல்ல வாங்கோர்
திருந்துவேற் றடக்கை யிளையோன் †கூறும்
நிலனக ழுளிய னீலத் தானையன்
கலனசை வேட்கையிற் கடும்புலி போன்று
மாரி நடுநாள் வல்லிருண் மயக்கத்
தூர்மடி கங்கு லொருவன் ரேன்றக்
கைவா ளுருவவென் கைவாள் வாங்க
வெவ்வாய் மருங்கினும் யானவற் கண்டிலேன்
அரிதிவர் செய்தி யிலைக்கும் வேந்தனும்
உரியதொன் றுரைமி னுறுபடை யீரெனக்
கல்லாக் களிமக ஞெருவன் கையில்
வெள்வா ளெறிந்தனன் விலங்கூ டறுத்தது
புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப
மண்ணக மடந்தை வான்றுயர் கூரக்
காவலன் செங்கோல் வளை இய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை யூழ்வினை யுருத்தென்

---

196 - 9 அவன் உடைவாளுருவ உறையைத் தன் கையிலேவாங்கி அவ்வாளெறிய வாங்குந்தோறும் உறையைச் செறித்தான், அதிலே (பா) அலசிப் பின்பு மல்லாலே காண நினைத்தவனை நின்ற தூணைக்காட்டித் தான் மறைந்தான். 200 இவர்க்கென்ருன், இவனையும் கள்ளனைக்கி

202-3 அங்கு வந்து இவர்களுடன் நின்ருஞெருவன் சொல்லுவான்.

211 உரியது - இனிச்செய்வது

212. கல்லாக்களிமகன் - கல்வியினமையின் மயங்கின மகன்.

213. வாளெறிந்தனன் .... . விலங்கூடறுத்தது - குறுக்காக ஊடறுத்தது அந்தவாளென்க, அறுத்தது முற்று

216 அதனுலே விழுந்தான்

207 - 16 ஒரு கள்ளனை யான் கண்டேன், கைவாளை உறைவிட்டு நீக்க அவனை ஓரிடத்திலுங் கண்டிலேன், ஆதலின் இவர் செய்தி தெரியாது, இவனை நாம் கொல்லாதே தப்பவிடில் அரசன் நம்மை வருத்தும்; இனி உரியது செய்க வென, ஒருவன் வாளாலெறிந்தான், அது விலங்க ஊடறுத்தது, விழுந்தான். 217 உருத்து - உருப்ப.

அடி, 204 - 5 மதுரைக் 639 - 42 அடி, 207. ஊர் மடிகங்குல்: கலித் 65 3 அடி, 217 வினை உருத்தல் மணி 8 . 40

(பி - ம்) † 'சொல்லும்'

நேரிசை வெண்பா

நண்ணு மிருவினையு நண்ணுமின்க ணல்லறமே
கண்ணகி தன்கேள்வன் †காரணத்தான் - மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை.

"நண்ணும". கண்ணகிதன் கேள்வன்காரணமாக வளைந்தது, இது பண்டை வினை, இருவினையும் நண்ணும, ஆதலால் உலகத்தீர், அறஞ்செய்மினென்று இளங்கோவடிகள் அருளிச்செய்தது.

---

1 - 2 அரும்பெறற் பாவையை மடந்தை

(இ - ள்) தனக்குப் பெறுதற்கரிய பாவைபோலவாளைக் கவுந்தியடிகளால் அடைக்கலங் கொடுக்கப்பெற்ற மிகவும் பெரியதாகிய உவகையையுடைய இடையரகுலத்திற பிறந்த மாதரியாகிய மடந்தை

மடந்தை, பருவமன்று, பெண்பாற்பெயர்.

3 - 6 அளைவிலை யுணவின் மனைப்படுத்து

(இ - ள்) மோர்விலையை உணவாகவுடைய ஆயச்சியரோடு இடையர் குடியிருந்த இல்லினன்றிக் கடுவேலிசூழ்ந்த காவலையும அழகுபெற விட்ட குளிர்ந்த காவணத்தையுமுடைய செம்மண்பூசப்பட்ட சிறிய இல்லாகிய புதிய மனையிலேயிருத்தியென்க

அளை - மோர் மிளை - கட்டுவேலி பூவல் - செம்மண், "பூவற படுவிற கூவற றேண்டிய" (319 1) எனருர் **புறத்தினும**

7 - 8. செறிவளை யாய்ச்சியர் நாணீ ராட்டி

(இ - ள்) தன்சுற்றத்திலுள்ள செறிந்த வளையையுடைய ஆய்ச்சியர் சிலருடனே தான் நினறு நறிய மலர்க்கோதையினையுடையாளைப் புதுநீரால் மஞ்சனஞ்செய்வித்தெனக

9 - 14 கூடன் மகளிர் தொழுது

(இ - ள்) இக்கூடல்நகரிடத்து மகளிர் கொளளும் அருவிலை ஆடகப் பைம்பூணறைசெய்த கோலமழித்தறகுச் செய்யாக்கோலமொடுவந்த உமக்கு அடித்தொழிலாடி இலலையெனறு கருதறபாலீரலலீர, எனமகள ஐயை காணும அடித்தொழிலாட்டி, யான் உமமைப் பொன்போலப் பொதிந்து கொள்வேன், பூங்கோதையையுடைய நங்காய், இங்ஙனமாதலான், இனி ஒன்றற்கும கவலாது இருப்பீராகவென்று சொல்லித் தொழுவதுஞ்செய்தென்க.

(பி - ம்.) †'காரணமா மண்ணில்'

கூடன் மகளிரென்ருள், தானறியுமூர் அதுவாகலின். இனிக் கூடன் மகளிரக்கு அழகைக் கொடுக்கும ஆடகப் பைம்பூணினது அருவிலையை யழித்தறகுச் செய்யாக்கோலமொடு வந்தீர்க்கெனினும் அமையும். செய் யாக்கோலம - புனேயாதவழகு, ஆவது [1] இயறகையழகு. வந்தீரீர்க் கென்றும், காணீரென்றும உயர் சொல்லால் ஒருவரைக்கூறும் பன்மை யாற் கூறினவள் ாண்டு நங்கையென்றது ஒருமை பன்மை மயக்க மெனின்,—அறறன்று, நம்பீயெனப் [2] பலலோர்க் குறித்த முறைநிலைப் பெயர் நங்கையென்று புதல்வர்மனேவியரைக்கூறும் முறைபபெயராத லின், நங்கையென்ருளென்க, "நாதீதூ ணங்கையொடு" (16 19) என்ப மேலும இஃது அக்கால வழக்கு சோவலனேதீ தனக்கு மகளுகக் கருதி இங்ஙனம கூறினுள் இனி வந்தாய்க்கெனவும, காணினெனவும் பாடங கூறுவாருமுளர்

15 - 7. மாதவத்தாட்டி மகனுர்க்கினி

(இ - ள்) மாதவத்தாட்டி தீங்குள்ள நெறியில் ஒரு தீங்குமுறுமற காத்து வருதீதம சிறிதுமிலலாவிடத்தே கூடடினுளாதலான், இனி நின் கொழுநறகு இவ்விடத்தில் மனக்கவலே யுறுதலுண்டோ வென்ருளென்க.

இடந்தலைப்படுதல - கூடடுதல. புறனடைவிதியான் (தொல். குற றியல் 78) நோவுதகவு [3] நோதகவாயிறறு நும்மகனுர்க்கு மகனென்பது ஆண்பாற பெயர், நும்முடைய புருடனுக்கென்பதாயிறறு, "நினக் கிவன் மகனுய்த் தோன்றியதூஉம், மகாக்கினி யாறகுநீ மகளாய தூஉம், பண்டும பண்டும பலபிறப புளவாற, சண்ட பிறவியே யலல காரிகை" (21 29-32) என்ருர மணிமேகலையிலும "கண்போன்ற மாமன் மகள" (26) என்ருர் சிந்தாமணியிலும ஓகாரம் எதிரமறை.

18 - 21 சாவக நோம்பிகள் நீரெனக் கூற

(இ - ள) அடிகள் சாவக நோனபிகளாதலின, நங்கையார் நாதீதூ ணுருடனே நீங்களும் பகறபொழுதேயுண்ணும அடிசில சமைதீதறகுப் பொருநதின நலல புதுககலங்களே விரையக் கொணடுவநது கொடுப்பீ ராகவெனறு சொன்ருளாகவென்க

சாவகநோன்பு - துறவாது விரதங்காதீதல் அடிகளென்ருர கோவல ணரை நாதீதூணங்கை - நங்கை நாதீதூணெனக நாதீதூணெடு நங்கை அடிசிலாக்குதறகெனினும அமையம நாள்வழிப் படுமடிசில் - போசனம அமைநத கலமெனறுள், தாங்கள் ஆளுங்கலமனறி மேன் மக்கள் ஆளும மடைக்கலங்களே நறகலம - புதுகலம. நெடிதீதல் - நீடடிதீதல் நீரளிமினென்ருள், கனக்கு [4] நெயமமுறையாதலின்

---

[1] "உமிழ்சுடர்க் கலன்க ணங்கை யுருவினே மறைப்ப தோரார்" (கம்ப. கோலங்காண் 3) [2] தொல் பெயர. 11.

[3] "நோதக விருங்குயி லாலுமரோ" (கலித் 32 24)

[4] "நெய்ம்முறை நமக்கின்ருமென்" [17 · (1) 7]

இதுதுணையுங்கூறியது, இவர்கள்சென்ற அன்றிரவு செய்தனவும் மேறசெய்வனவும

இனி மறறைநாளைச்செய்தி கூறுகின்ருர்.

22 - 8. இடைக்குல மடந்தையர் கொடுப்ப

(இ - ள்) ஐயைமுதலாகிய இடைக்குலமடந்தையர் மாதரி கூறிய இயல்பிற குனரு மடைக்கலத்துடனே [1] மாடசிமையுடையோர் கொடுக்கும் மரபு போலப் பூவாதுகாய்க்கும பாகலினுடைய கொழுவிய திரண்ட கனிக் காயும் வளைநத வரியையுடைய வெள்ளரிக்காயும கொமமட்டிமாதுளங் காயும இனிய மாங்கனியும் வாழைக்கனியும் செந்நெலரிசியும் தமமிடத் துள்ள பாலும நெயயும என்னும் இவறறைக்கொண்டு சென்று நேரிய வளையையுடைய மாதே, இவறறைக் கொள்வாயாகவென்று கொடுக்க வென்க

கோளிப்பாகல, வெளிப்படை, கோளி - பூவாது காயக்கும மரம். என்ன? "கோளி யாலத்து" (புறநா 58 2) எனருர், பாகல - பலா, "முளிதயிர் மிசைபாகன் மென்பழம" எனவும "பைமபாகற பழந்து ணரிய, செஞ்சுளைய கனிமாநதி" (பொருந 191-2) எனவுஞ் சொனனுர் பாட்டினும கனிக்காய - [2] முதாரிக்காய் வால்வரிக்கொடுங்காயென்று பாடமோதி, வெள்வரிக்காயெனபாருமுளர, "அணிலிவரிக்கொடுங்காய்" (246 4) எனப் புறத்தினுங காடடினராதலின், கொடுங்காயெனபது பெயர் வரி அடை மாதுளங்காய கூறினுர், புளிதீதகறி பண்ணுதறகு பாறபயன் - பாலும பயனும, எண்ணுமமை தொக்கு ஒடுவிநது உட னிகழ பொருளாயிறறு

29 - 34. மெல்விரல் சிவப்ப காதலற் காக்கி

(இ - ள்) அங்ஙனம அவர்கொடுதீக பலவேறு வகைப்படட பசுங் காயகளைக் கொடுவாய்க்குயத்தின் மெலவிரல சிவப்ப விடுவாய செயயத் திருமுகம வியர்தீதது, செஙகண் சேநதன, கரிய இடத்தேயுடைய அட டிலகக் கண்டனளாய முகமாறிப் பெயருமவகை வைக்கோலால் எரி மூட்டிய ஐயையுடனே தனகை வல்ல மாதிரதீதாலே காதலனுக்கு ஆக்கியென்க.

கொடுவாய்க்குயம - கோடிய வாயையுடைய அரிவாள், "கூனிக் குயத்தின் வாய்நெல லரிநது" (242) என்ருர பொருநராற்றுப்படை யினும விடுவாய் செய்தல - அரிதரல் திரு - அழகு, பெயருமாம். சேநதன - சிவந்தன. கரிபுறவட்டில் - புறம கரிதான அட்டில், புறம் - இடம. வையெரி மூட்டிய - வைக்கோலால் எரியை மூட்டிய கையறி மடமை பாடமாயின், கை அறிநததும் அறியாததுமாகவென்க, முன்பு ஆக்கிக் கைதேறிஞற்போல வெனவும அமையும

---

[1] மாடசிமை யுடையோர் கொடுக்குமரபு சொல்லாமலே கொடுத்தல், "சொல்லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர், சொல்லியுஞ் செய் யார் கயவரே - நல்ல, குலாமாவை வேற்கண்ணுய் கூறுவமை நாடிற், பலாமாவைப் பாதிரியைப் பார்" (ஔவையார் பாடல்)

[2] முதாரி - முதுமை, "முதாரிப்பாண" (புறநா. 198), இது வழக்கி லுமுள்ளது. (பி - ம்.) † 'உதாயக்காய்'

35 - 43. தாலப் புல்லின் அடிக ளீங்கென

(இ - ள்.) புற்களில் தாலப் புல்லினது மிகவும் வெள்ளிய தோட் டாலே கைவன்மையையுடைய மகள் அழகுபெறப் புனைந்து செய்த தொழிலையுடைய தவிசிலே தனது செலவன் வந்திருந்தபின்பு கடிமலரங் கையாற சுடுமண்மண்டையாற காதலனடிமலர கழீஇய நீரைத் தான் தொழுதனளாய் மாற்றி மண்ணகமடந்தையுறற மயக்கத்தைத்தான் ஒழிக்கின்றுள்போலத் தன்கையாற குளிரந்த நீரைத் தெளித்துத் தடவி மண்டலமிடடு ானுவாழையினது குருத்தை விரித்து அதனகத்தே அமுதைப் பெய்து, அடிகள ாங்கு அமுது செயதருளுகவென்று சொல்ல வென்க.

"புறக்கா ழனவே புல்லென மொழிப" (தொல் மரபு. 85) என்ரு ராகலின், தாலப்புல்லென்ரூர் வால்வெண்டோடு - இனைய வெள்ளிய தோடெனினும் அமையும், "ஊர்தி வால்வெள் ளேறே" (புறநா, கடவுள்.) என்ருராகலின் மகடூஉ பெண்பாற பொதுச்சொல் தவிசு - தடுக்கு அங்கை - அகங்கை, "அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே, முதனிலை யொழிய முன்னவை கெடுதலும, வரைநிலை யின்றே யாசிரி யற்க, மெலலெழுத்து மிகுத லாவயி னை" (தொல் புள்ளிமயங்கு 20) என்பதனுன் முடிக்க கழீஇய வென்பதூஉம, அமுதைப பெய்தென் பதூஉம [1] முன்னதித் னுணரும் கிளவியாற குறிப்பாறகொளளப்படடன. மண்டையென்னுது சுடுமண்மண்டையென்ரூர், புதுக்கலமாதலதோன்ற. இதனை மண்டையென இழிதத்துக்கூறினரை, முனனர்ப் பொன் வெள்ளி முதலியன வழஙகுதலின் வழிபாடு தோனறத் தொழுதனள் மாறறி யென்ரூர் மண்ணகம. ஒரு சொல மயக்கொழிப்பனள்போல் - மண் மடந்தை தங்கடகு எதிர்வதுணர்ந்து மயங்கினுள மயக்கொழிப்பாள் போல மயக்கம - அனந்தரென்பாருமுளர குமரிவாழை இது பெய ரின்வந்த [2] சமாதியென்னு மலங்காரம உண்க இரந்துகோடற் குறிப்பின்கண் வந்த ககரவீறறு வியங்கோள் ாங்கு அமுதமுண்க வென்றது, இவையும் பொறுக்கவறறேயென்னும இரக்கம.

ஆக்கி இருந்தபின் மாறறித் தெளித்துத் தடவி விரித்து அமுத முண்க என்ருளென்க.

44 - 53 அரசர் பின்னேர்க்கும் காட்சி யீங்கென

(இ - ள்) ஒதவும் உணரவுமரிய மறையிடதது அரசர் பினனேர்க் குரியவாக விதிதத வாய்ப்பூச்சுப் பலியிடுதல் முதலியவெல்லாம ஒரு முறையாற் கழிதத்தபின்பு புறதத்துநின்ற ஐயையும மாதரியும இந்த மதுரையில் இவ்வாயர்பாடியில் யாம்பெறற இந்நல்லமுதம் உண்கின்ற இந்த நம்பி அந்த மதுரையில் ஆயர்பாடியில அசோதைபெறற அநத நல்லமுதமுண்ணும் புதிய காயாமபூப்போலும வண்ணத்தையுடைய கண்ணனேதான், இவன் துயர்தீர்தத இப்பல்வளைத் தோளியும் காளிந்தி

---

[1] தொல் எச்ச. 63. [2] "உரிய பொருளன்றி யொப்புடைப் பொருண்மேல், தரும்வினை புணர்ப்பது சமாதி யாகும்" (தண்டி. 25.)

யாறறின்கண் தூய நீலமணி வண்ணனைத் துயர்தீர்த்த பின்னையென் னும விளக்கோதானென்று உவகை பொங்கி இவரழகு நம் கண்களின் அடங்காவென்று புகழ்ந்து கூறவென்க.

அரசர் பின்னோர் - வணிகர் தவ்வை - தாய் விம்மிதம் - அதிசய மூமாம.

54 - 6. உண்டினிதிருந்த வருகெனப் பொருந்தி

(இ - ள்) அங்ஙனம் அவர் புகழ இனிது உண்டிருந்த மிக்கபுகழை யுடைய கோவலனுக்கு அழகிய மெலலிய சுருளோடே பிளவையும் கொடுதீது நின்ற கரிய பெரிய ஓதியையுடையாளை வருகவென்று அரு கணைதீதென்க ஓதி . ஆகுபெயர்

57 - 62. கல்லத ரத்தம் யாவது மறியேன்

(இ - ள்.) எம்முடைய முதுகுரவர், பருக்கை பொருந்திய சின்னெறி யையுடைய அருநெறியைக் கடதீதறகுச் சிறிதும வன்மையையுடைய னவோ மடநதையுடைய அடியென்று இவ்வெமமையையுடைய எயினர் ஆறலைக்குஞ சுரதீதினெறியிற போநததற்கு இரங்கி என்ன இடும்பை யுறறுர்களோ' யாம இங்ஙனமுறறது கனவோ' நனவாமாயின் முன் செய்த தீவினைப்பயனே' யான இப்பொழுது உள்ளங் கலங்குதலான் இவறறினனென்றையும அறிகின்றிலேன் ,

என்னுறறனர்கொல் - இறநதுபடடார்களோ மாயம - கனவு யாவ தும - யாதும , பகுதிப்பொருள விகுதி

63 - 70 வறுமொழி யாளரொடு என்செய் தனை யென

(இ - ள்) வீணரோடும் பரதீதரோடும்கூடிப் பிறரைப் புறங்கூறும அவையின்கண் வெடிசிரிபபுக்கு உட்படடு மறவியிறபொருந்தி அமைந் தோர் விருமபப்படடும பொருளாகிய நல்ல ஒழுக்கதீதைக் கெடுதீத வெனக்கு நினைத் தீங்கதியன்றி நறகதியுண்டாமோ . அதுவேயுமன்றி இருமுது குரவரக்குமு செயயும ஏவலையும் பிழைதீதேன் , நினக்கும சிறுமை செய்தேன் , இவ்வழுவொழுக்கம் இழுக்கமென்பது சிறிதும் பார்தீதிலேன் , யான இங்ஙனமாயும நமமுடைய நகரிடதீதுநினறும் இந்நகரிடதீது வருதறகு எழுகவென்றேனுக, அது முறைமையன்றென மறுது என்னோடு ஒருபபடடெழுநதாயே , நீ என்ன கருமம் செய்தா யெனக் கோவலன் இரங்கிக்கூறினெனக

வறுமொழியாளர் - பயனில கூறுவோர். [1] வம்பப்பரதீதர் - புதிய காமநுகர்ச்சியை விரும்புங்காமுகர் , பரதீதையை நுகர்வானும [2] பரதீ தன் குறுமொழி - சிறுசொல , ஏவது பிறரையிகழ்நது கூறுதல் நெடு நகைபுக்கு - வெடிசிரிப்புக்கு உடபடடு பொச்சாபபுண்டு - மறவியிற் பொருந்தி. நச்சு - நச்சப்படும் பொருள் இருமுது குரவர் - தந்தை தாயர் ஏவல் பிழைதீதல் - மாதவி நட்பை அவரொழிக்க ஒழியாமை.

---

[1] இறை 35, உரை

[2] பரதீதனென்பதறகு இப்பொருள் கொண்டே, "பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர், நண்ணேன் பரதீதநின் மார்பு" (குறள், 1311) என்றுர் , "பண்பில் காதலன் பரதீதமை" (மணி 7 : 50)

சிறுமுதுக்குறைவி - சிறிய பிராயத்தே பெரிய அறிவையுடையாள். வழு - பழிப்புரை எனும - சிறிதுமென்றபடி நகர் - தன்மனையுமாம. ாண்டு எழுகவென்பதறகு நாம போதறகு விரையென்ருனெனினும அமையும. இத்துணையும தனது ஒழுக்கத்தை வெறுத்து இவ்வரவிறகு நீயுமுடன் பட்டாயெனத் தனது அறிவின்மையை அவளொடுபடுத்துக் கூறினள்.

இனிக் கண்ணகி கூறுவாள் —

71 - 83. அறவோர்க் களித்தலும் என்றவள்கூற

(இ - ள்.) அறவோர் அந்தணர துறவோர் விருந்தினரென்னும் இவர் கட்கு அளித்தலும் ஓமபலும எதிர்தலும் கோடலுமென்னும் இவற்றை இழந்தவென்னை நும் பெருமகளுடனே இருநிதிக்கிழவன் கண்டு, நீர் என் முன்பு நில்லாமையான் வநத வெறுப்பைக் கரந்தொழுகினேனுக, அவர்கள அது தெரிநது தம் உள்ளத்தின் மிக்க அன்போடே அருள் கலந்த மொழியால் என் பொறையைப் பாராட்ட, யான் இதயத்தே மறைத்த மெயவருத்தமும் மனக்கவலையும வெளிப்பட்டு வாய்திறந்து சொல்லுவதுபோலே யிருந்ததென்று என் பொய்ம் முறுவல கண்டு அவர் வருந்த நீர் போறருவொழுக்கம மேவினீராகவும் உமமுடைய வார்த்தை யைச் சிறிதும் மாறருத உளள வாழ்க்கையையுடையேனுதலாலே யான் அதறகு உடன்படடெழுந்தேனென்று அவள் கூறவென்க.

அறவோர் - சாவகநோன்பிகள். பெருமகள் - கோவலன்மாதா. பெயர் - புகழ தலைத்தாள் - தலைமையுடைய முயறசி மன் - மன்ன ரால். நீரென ஒரு சொல் வருவிக்க இகநதனை - இகநதேனுக, தன்மை. அறபு - அன்பு, "மெலலொறறு.... . ..கிளையொறருகும்" (தொல். குறறியலுகரப் 9) என்பதனால முடிந்தது சிறதிதல - மிகுதல். நொடிதிதல - சொலலுதல. வாயன்முறுவல - பொயநநகை. 'ஆறரு வுள்ள வாழ்க்கையீ ராதலின்' என்பதுஉம பாடம.

84 - 93. குடிமுதற் சுற்றமும் மயங்கா தொழிகென

(இ - ள்) சுற்ற முதலிய நான்கினையும நீங்கி நாண முதலிய நான்கும் துணையாக அறிவறற என்னுடு போந்து என் தனிமையைத் தீரத்த பொன்னே! கொடியே! கோதாய! பாவாய்! விளக்கே! கொழுநதே! செல்வி! யான் நின் சீறடிக்கு அணியாகிய சிலமபில ஒன் றைக்கொண்டு போய் விற்றுவருவேன், வருந்துணையும் நீ தனிமையான் வருந்தாதொழிக வென்ருனுக வென்க.

குடிமுதறசுற்றம - தாய்தந்தை முதலியோர் குற்றேளியோர் - குற் றேவன் மகளிர் அடியோரபாங்கு - அடியார் பகுதித்திரள்; என்பார் செவிலித்தாய முதலிய [1]ஐவர், "ஐவர் நலனுமெப" (சீவக. 393) என்ருர் பிறரும ஆயம் - சேவிக்கும தோழிமார் மடன் - கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. நலலோரேதது - மகளிரால் ஏதிதபபடு மழகு பேணிய கறபு.. ... பொன் முதலியவறறுக்கெலலாம உவமம் விரிதீதுரைகக.

---

[1] ஆட்டுவாள், ஊட்டுவாள், ஓலுறுதீதுவாள், நொடி பயிறறுவாள், கைதீதாய் என்ற ஐவர்.

94 - 9 கருங்கய னெடுங்கண் மறுகிற் செல்வோன்

(இ - ள்) கரிய கயல்போலும் நெடிய கண்ணினையுடைய தனது காதலியை மெய்முழுதும் தழுவி அவள் அருகில யாவருமின்றித் தனியிருக்கின்ற அதனைக் கண்டு உள்ளகம் வெதுமபுதலாலே மல்கிய கண்ணின் நீரை அவள் காணின் வருந்துமென்று அதனைக்கரந்த கண்ணினையுடையனுய்ப் பல பசுக்களையும பல எருமைகளையுமுடைய கோவலர் இல்லத்தை விடடு நீங்கி மாடடாநடையோடே அத்தெருவிற செல்கின்றவனென்க.

இதில், 'உழையோரில்லா' எனவும, 'ஒரு தனிகண்டு' எனவும் கூறினர், ஆய்ச்சியரெல்லாம குரவையாடப் போனமை தோன்ற.

100 - 101. இமிலே றெதிர்ந்தது தகுதியன் ருதலின்

(இ - ள்.) அங்ஙனம் செல்கின்றவன் முரிப்பையுடைய கொல்லேறு எதிர்த்துப் பாயவந்ததனை நிமித்தவிரோதமென்று அறிநதிலன், அஃது இடையர் குலத்தாரன்றித் தன்குலத்துள்ளோர் அறியும முறைமையன்மை யானென்க. இமில் - முரிப்பு.

102 - 104. தாதெரு மன்றம் பெயர்வோ ணுங்கண்

(இ - ள்.) அம்மறுகில் தாதெருவையுடைய மன்றத்தை யெல்லாம் கழிந்து [1] தளிப்பெண்டுகள் தெருவினடுவே போய்க் கடைத்தெருவிற பெயர்கின்றவன் அவ்விடத்தே.

105 - 12. கண்ணுள் வினைஞர் ஆதியோவென

(இ - ள்.) உருக்குத்தட்டாரும் கைவினைமுற்றிய பணித்தடடாருமாகிய நூறறுவர் பின்வர அரசவரிசையாகிய சட்டையுடனே ஒதுங்கி நடந்து செல்லும் செலவினையும கைபிற பிடித்த கொடிறறையுமுடைய பொறகொல்லனைக் கண்டனனுகிப் பாண்டியன் பெயரோடு வரிசைபெறற பொற்கொலலன் இவனெனக் கருதி அணுகச்சென்று, அரசன் தேவிக்குப் பூணலாவதொரு சிலம்பினை விலைமதித்தற்கு நீ வலலையோவென்று கேட்பவென்க

மெய்ப்பை - சடடை. விலங்குநடைச் செலவு - மேன்மக்களைக்கண்டு ஒதுங்கி நடத்தல் கைக்கோல் - கொடிறு ஆதியோ - ஆவையோ, கருத்தறனெவென்றுமாம ஆதியோவென்றான், தன் சிலமபினது அருவிலை கருதி. இவனைக்கண்டாலும துநநிமித்தமென்பார் பின்வர முன் கண்டனனுகியென்றார்.

இனிப் பொற்கொல்லன் கூறுவான் —

113 - 6 அடியேனறியேன் அவிழ்த்தனன்

(இ - ள்) மகளிருடைய அடிக்கலம் விலைமதித்தறகறியேனையினும் வேந்தர் முடிக்கலம் முதலியன சமைப்பேன் யானெனக் கால தாதனுக வந்த பொற்கொல்லன் கையால் தொழுது புகழ்தலானே யாவர்க்கும் புகழவரிய சிலம்பினைப் பொதிந்த பொதிவாயை அவிழ்த்தனனுகவென்க.

117 - 20. மத்தக மணியொடு புரிந்துட னேக்கி

---

[1] தளிப்பெண்டுகள் தெரு - கோயிலிற் பணிசெய்யும் மகளிர் தெரு; தளித்தெருவெனவும் வழங்கும்.

(இ - ள்.) தலையான மாணிக்கத்தோடு வயிரமும் பதிதிபட அழுத்திய கேவணத்தையுடைய கிளிச்சிறையென்னும் பசும்பொன்னுறை செயத புடை பட்டு உட்கருவையுடைய சித்திரத்தொழிலையுடைத்தாகிய சிலம் பின் தொழிலருமையையெல்லாம . ... பொய்ச் செயதி சார்ந்த தொழிலை யுடைய பொறகொல்லன் நெஞ்சம [1] இடுவந்திகூறுதலைப் புரிந்து நோக்கக் கண்கள் சிலம்பை நோகக இவ்விரு நோக்கும கண்டார்க்கு ஒரு நோக்கமபோல நோக்கியென்க

மதிதகமணி - சுடிகைமணியுமாம , சிலமபின மதிதகத்தின் மணி யெனினும அமையும கேவணம - மணியழுத்தும குழி. குடைச்சூல் - குடைபடுதல் எனபாருமுளர். செயவினை - கைதிதொழில பொயதி தொழில - பொய் சொலலுதலே தொழிலாகவுடைய வெனினுமாம.

புரிந்துடனேக்கி யென்பதறகுப் பணியும் விலையும் நோக்காது அவனை இடுவநதியிடுவதறகு இசைநது தான் வஞ்சித்துக்கொண்ட சிலமபோடு ஒக்குமபடியைப் பார்த்தென்பாரும உளர

121 - 6 கோப்பெருந்தேவிக்கு சிறையகம் புக்கபின்

(இ - ள்) அரசனுடைய [2] பெருந்தேவிக்கல்லது இப்பெருவிலைச் சிலமபு வேறெருவர்க்கும் வினவில்லையென்று சொலலி, முன்னின்றும் போய் வெறறிமிக்க வேந்தனுக்கு இதனை யுணரத்தி யான் வருமதுணை யும் என் புனகுடிலுக்கு அருகாகிய அவவிடதீதே நீர் இருமெனக் கோவலனுமை சென்று அக்கீழ்மகனிருப்பிடதிற்கு அயலதோர் அக்க சாலைப்பளளியின் மதிலுக்குள்ளே புக்கபின் எனக

ஐ இடைசசொல் யாப்புறவு - வினை, பொருதீதமுமாம். என - என்று சொல்லி முன்போநது - முன்னின்றும போய

இனி, அவனுட்கோள் கூறுவார :—

127 - 30 கரந்தியான் கொண்டே செல்வோன்

(இ - ள்) யான் முன்பு வஞ்சித்துக்கொண்ட சிலம்பு என்னிடத்ததே யென்பது பலரும அறிய மன்னறகு வெளிப்படுவதன் முன்னே வேறெரு தேயத்தினின்றும் வநத புதியவனேடே போக்குவேன் யானென்று துணிநத உளதீதைக் கரந்து செல்கின்றவன்.

யாம் கொண்ட வென்றும, போக்குவமென்றும கூறற்பாலவறறை இவன் கீழ்மகனதலால், தனிதீதன்மை கூறினர்.

131 - 41. கூடன்மகளி ராடல் தாழ்ந்துபல வேத்தி

(இ - ள்.) கூடலில் நாடகமகளிருடைய ஆடலிடத்துதீ தோன்றும முகதீதோறறமும் அவர் ஆடல்விகறபமும அவவாடல விகறபதீதுக் கேறற பாடலின வேறுபாடும் யாழிசையின் பயனகளும காவலனுடைய உள்ளதீதை விருமபுவிதீதனவென்று கருதி ஊடியவுள்ளதீதைதீ தன்

[1] இடுவந்தி - குறறமில்லாதவன்மேற குறறதீதை யேறறுதல். இஃது இதீதமிழ் நாட்டின் வடபாகதீதே வழங்குகின்றது.

[2] பெருந்தேவி - பட்டதீதுதீ தேவி.

னுள்ளே கரந்தொடுக்கி வருத்ததைச் செய்யும தலைநோயென்பதனைத் தன்மேலே யிடடுக்கொண்டு குலப்பிறபபையுடைய பெருந்தேவி தன் னோடு மேவாதே தனது கோயிறகண்ணே அநதப்புரத்திற செனறு புகுந்துவிடுதலானே அரசன் காமபரவசனுய் அமைச்சர் திரளினின்று நீங்கி அரிசிநதிய கண்ணையுடைய சிலதியரதிரளுடனே கோபபெருந் தேவியுடைய கோயிலை நோக்கிச் செல்வோனைக் காவலையுடைய வாயிற கடையிடத்தே கண்டவளவிலே வீழ்நது தாழ்நது பலகால் ஏத்திச் சொல் கின்றவனெனக

கலங்கா வுள்ளங் கரந்தனன் செல்வோன, தாழ்ந்து பலவேத்தி யென்க

142-7 கன்னக மின்றியும் இருந்தோனென

(இ-ள்) கன்னக்கோலும கவைக்கோலுமின்றுகவும தன் மனதினின் கண் பயின்ற துயின்மந்திரமே களவுக்குத் துணையெனக் கொண்டு வாயில காவலரை மயக்கமுறுதீதும துயிலெய்துவித்துக் கோயிற்கண் இருந்த சிலம்பினை அபகரித்துக்கொண்ட கள்வன் இநத ஒலியையுடைய பெரிய ஊர் காவலருடைய கண்ணை மறைத்து அடியேனுடைய புன்குடி லகத்தே வந்திருக்கிறுனென்று அவ்வரசறகுச சொல்லவெனக

கன்னகம் - அகழ்கருவி கவைக்கோல - கொடிற்றுக்கோல், ஆவது படைக்கல், இட்டிகை முதலியவறறைப பறிக்குங் கருவி, குதித்துக்கோ லென்பாருமுளர். [1] சிலலை - இழிவு இன்றியுமென்னும உமமை சிறப்பு. துணை - உசா முன்னுள் தனனிடத்திலலை யென்று நிலைநின்றதற கேறபக் கோயிற் சிலம்புகொண்ட கள்வனென்றுன் விறகவநது அகப் படடானென்பது தோன்ற, என் சிறு குடிலகத்திருந்தானென்றுன்.

148-53. வினைவிளை காலம் கொணர்க வீங்கென

(இ-ள்) சினையலர் வேமபன் ஊர்காக்கும காவலாளரையழைத்து இங்ஙனமாகிய எனது தாழபூங்கோதையையுடையாள் தன்னுடைய காலணியாகிய சிலமபு இவன் சொன்ன களவில் தழுமபிய களவனுடைய கையகத்ததாயின், அவனைக் கொல்ல அச்சிலமபோடு ஙகுக் கொணர்க வெனக் கருதியவன் வினைவிளைகின்ற காலமாதலானே இதனைச் சிறிதும் தேராணுய்த் தேவி கூடாதேகச் சுறற நீஙகிச் சிலதியரோடு கோயில் நோக்கிக் காம பரவசனுய் அவள் கடையிடத்தோனுகலானே அவனைக் கொன்று அச்சிலம்பை இவளுடல் தீர்த்தறகு உதவியாக இவ்விடத்தே கொணர்வீராகவென்று சொலலவென்க

யாவதும் - சிறிதும். சினை - கொம்பு அலர்வேம்பு - வேமபலரென்க, ஆகுபெயரான் மாலையாயிற்று. வேம்பன், [2] "கொன்றையன்" (திருச் சிற் 400) என்பதுபோல நின்றது கன்றிய - அடிப்படடவென்றபடி. கொன்று - கொல்லவெனத் திரிப்பினும் அமையும். இனி என் கோதை தன் காற்சிலமபு அடிப்படட கள்வன் கையதாயிற கொன்று கொணரக வெனினும தன்கட் கொடுங்கோன்மை யின்மை யுணர்க.

---

[1] "சில்லைக்க ணன்பினை" (நாலடி. 377). [2] கொன்றையனெனபதற் குக் கொன்றைப் பூவின் தன்மையனென்பது பொருள்.

154 - 7 காவல னேவ... குறுகின னுகி

(இ - ள்.) அங்ஙனம் கூறிய காவலன், வேற்காரரைத் தன்னோடு ஏவுதலாலே கருந்தொழிறகொல்லனும், ஏவப்பட்டவுள்ளதோடே நாம் எண்ணிய வெண்ணமை முடிந்ததன்றே வெனக்கருதித் தீவினையாகிய சூழ்ந்த வலைக்குள்ளே சென்று அகப்பட்டிருந்த கோவலனைக் குறுகச் சென்றனுக வென்க

கருந்தொழில் - கொலைதொழில். முடிந்ததென்பது விகாரம். இனி, எதிர்காலத் தன்மை வினையை விரைபொருட்கண் இறந்த காலத்தாற் கூறினன் எனினும் அமையும். முதிர்தல் - சூழ்தல். முதிர்வினையென மாறித் தீய பழவினையாகிய வலைக்குள்ளேயெனினும் அமையும.

158 - 61. வலம்படு தானை புரிந்துடன் காட்ட

(இ - ள்) வெற்றி பொருந்திய தானை மன்னவன் ஏவுதலாற் சிலம்பு காணிய இவர் வந்தார், அதனைக் காடடுமினெனச் சொல்லி அத்தொழில் பொருந்திய சிலமபின் அருமையெல்லாம் கூறுவான்போலப் பொய்மமை யைத் தொழிலாகவுடைய கொல்லன் அவரை வேருக அழைத்துக் கோயி லில் இருக்கின்ற தனிச் சிலம்போடே பொருந்தச்சொல்லிக் காட்டவென்க.

காடடுமினென்பது சொல்லெச்சம். காணிய வினையெச்சம். புரிந் தெனவே அவனினீங்கி யென்பதும், உடன்காட்டவெனவே அச்சிலம் போடு ஒரு தன்மையாக ஒப்புக்கூறியென்பதும கொள்ளப்படடன.

162 - 5 இலக்கண முறைமையின் . உரைப்போன்

(இ - ள்) இவன் மெய்ப்பொறியானும் இருக்கின்ற முறைமையானும் கள்வனென்று நீ சொல்லப் படுவானுமல்லன், கொல்லப் படுவானுமலல னென்று சொல்லும் அரிய திறலையுடைய வேற்காரரை நகைத்து இகழ்ந்து கூறிக் கொலைதொழில் புரிந்த பொறகொல்லன் [1] களவு நூலிலுள்ள ஏதுக்களைக் காட்டினனுய் உரைக்கின்றவனென்க

இலக்கண முறைமை - இலக்கணத்தானும் இருந்த முறைமையானு மென உமமைத் தொகை. கொலைப்படுமகன் - கள்வன். அகநகை - இகழச்சி நகை.

அகநெகவென்று பாடமாயின், நெகவுரைதீதென்க.

166 - 9. மந்திரந் தெய்வம் துணையெனத் திரிவது

(இ - ள்) பொல்லா வொழுக்கத்தினுற் களவுகண்டு உண்ணும் மாக்கள் மநதிர முதலிய எட்டையுமன்றே படையாகக்கொண்டு திரிவ தென்றனென்க.

மருந்தே இடனேயென்ற ஏகாரமிரண்டும எண். அன்றேயென்பது தேற்றம. கட்டுண்மாக்கள் எடடுடனன்றே துணையெனத் திரிவதென்க.

170 - 71 மருந்திற் பட்டீ ராயின் பெருநவைப் பட்டீர்

[1] களவுநூல் ஸ்தேய சாஸ்திரமென்று வழங்கப்படுகின்றதென்றும், அந்நூலைச் செயதவர் கசரென்பவரின் ஆசிரியராகிய கர்ணீ ஸுத ரென்பவரென்றும் வடமொழியாளர் கூறுவர்.

(இ - ள்.) இவன் வலியையழித்துத் தப்புவதன்றி இவன் மருந்திற் பட்டீராயின், நும் பெரிய புகழையுடைய வேதனைலுல் வரும் தண்டம இப் பொழுதே படீரன்ரே என்ருனென்க.

படீர், விளைபொருள், சொன்னேம் சொன்னேமென்னும் வழக்கு: இது முறகூறினுன், அவர் அஞ்சிக் கடுகக் கோறறகு. இனி மந்திர முதலிய எட்டின் விளைவு கூறுவான்.—

172 - 3. மந்திர நாவிடை யாங்காண் குவமோ

(இ - ள்) தாம் சாதித்த மந்திரத்தை நாவிடத்தே வழுத்துவராயின், தேவ குமாரரைப்போல நாம் காணமாட்டோமென்ருனெனக.

வழுத்தல் - அபிமந்திரித்தல். இந்திரகுமரர் காணப்படார்; அவரைப் போல இவரும காணப்படார். இநதிரர் - தேவர், "இந்திரர்க்கும புகழ்வரிதே" (சீவக 173) எனவும, "இந்திர ரமுத மியைவ தாயினும" (புறநா 182 1-2) எனவும் சொன்னுர் பிறரும், இனி அந்தர குமரரென்பாருமுளர்.

174 - 5. தெய்வத் தோற்றம் பெயர்குவர்

(இ - ள்) தாங்கள் ஆதரிக்கும் தெயவம் எப்பொழுதும் தங்களுக்கு முன் நிற்கும்படி மனந்தெளிநது நினைப்பாராயிற கையிலேயகப்படட மிக்க பொருளை நமக்குக் காடடியும தப்புவரென்ருனெனக

176 - 7. மருந்தி னங்கண் இடனுமா ருண்டோ

(இ - ள்) இவர் மருநதினுலே நம்மிடத்து மயக்கம் செய்வாராயின், இருநத நாம புடைபெயரும இடமுமுண்டாமோ வென்ருனென்க.

மார. இடைச்சொல்.

178-9 நிமித்தம் வாய்த்திடின்..வந்துகைப் புகுதினும்

(இ - ள்) தாம ஆண்ட நிமித்தம வாய்ப்புப் பெற்ருலல்லது பெறுதற் கரிய பொருள் தானேவந்து கைபபுகுதினும் புகார்களெனருனென்க.

யாவதும் - எளியவிடத்திலும.

180 - 81 தந்திர கரணம் எய்துவர்

(இ - ள்) களவு நூலிற் சொல்லிப் போதுகின்ற தொழில்களையறிந்து எண்ணிச் செய்வாராயின், தாம மண்ணுலகத்திருப்பினும விண்ணுலகத் திருக்கும இந்திரனது மார்பிலணிநத ஆரத்தை எய்தவேண்டின அதனை யும எய்துவரென்ருனென்க.

தந்திரகரணம் - நூலிற சொல்லும் கிரியை. எண்ணுதல் - எண் ணிச் செயல்.

182 - 3 இவ்விட மிப்பொருள் .யார்காண் கிற்பார்

(இ - ள்) இப்பொருள் நாம கோடற்கு இவ்விடமே யிடமென இவர் துணிவாராயின் அவ்விடத்து அவரை யார் கண்ணுற காணவல்லாரென்ரு னென்க

கிறறல் - செய்தல்.

184 - 5. காலங் கருதி விலக்கலு முண்டோ

(இ - ள்) அவர்கள் களவுகொள்ளுங் காலம் இதுவென்று கருதிப் பொருளைக் கைப்பற்றுவாராயின், மேலேராயிருப்பினும் விலக்குதல் உண்டாகுமோ வென்றுனென்க.

186 - 7. கருவிகொண்டவர் காண்கிற்பார்

(இ - ள்.) கருவிகளைக்கொண்டு பெறுதற்கரிய பொருளைக் கைப் பற்றுவராயின், இப்பூமியிடத்து யாவர் கண்கொண்டு காணவல்லா ரென்றுனென்க.

இங்ஙனமாதலாலென ஒருசொல் வருவிக்க.

188 - 9 இரவே பகலே புகலிட மில்லை

(இ - ள்.) இவர்க்கு இரவுபகலென்று இரண்டில்லை , இக்கரவின் பகு தியை நாம் கேட்பிற் புகன்று முடியாது ,

இக்களவுநூலை நாம் கேட்பின், ஓடியொளிக்கலாமிடமில்லை யென்று மாம்.

190 - 202. தூதர் கோலத்து கொல்லன் சொல்ல

இங்ஙனம் களவுநூல் துறைகூறி, முன்னுள் இதிதென்னவன் தம்பி யிடத்து நிகழ்ந்ததொன்றென்று ஒரு பொயக்கரி கூறுகின்றுன் ,

(இ - ள்) முன்னுளிலே ஒருகள்வன் தூதர் உருக்கொண்டுவந்து கொற்றவன் வாயிறகட் பகறபொழுதிருந்து இராப்பொழுது மாதர் உருக் கொண்டு உள்புகுந்து விளக்குநீழலிலே பள்ளியறையினுள் அஞ்சாது புக்கு அடங்கி இந்நெடுஞ்செழியற்கு இளங்கோவாகிய வேந்தன் துயில் கின்றவனுடைய மார்பில வெயிலிடுகின்ற வயிரதீதையுடைய ஆரதீதை விரைய வாங்கினுனக, துயிலுணர்ந்தவன் தோளிறகாணுஞ்சு உடை வாளையுருவினுனக, அதனுறையைக் கள்வன்கையிலே வாங்கி அவன் குதிதுந்தோறும் வாளிலே யுறையைச்செறிதீதான் , அங்ஙனஞ்செறிதீ தலின், அதறகு அரறருனுய் மறபோராலே அவன் வலியினெல்லையைக் காண, ஆண்டு நின்றதோர் தூணிதீதானுகக்காட்டிக்கழிந்து தன்களவு நூறகல்வியால் தப்பிய கள்வனைக் கண்டாருண்டாயின் அவர்களைக் காட்டிக்காணீர் , ஆதலான், இவரக்கு இவரே ஒப்பாதலன்றி இவ்வுலகதீ துப் பிறரை ஒப்பாகக்கூறுதலுண்டோவென்று அக் கொலைதிதொழிற் கஞ்சாத பொற்கொல்லன் சொன்னுனகவென்க.

வேந்தன் விழிதீதோன் காணுன் உருவ வாங்கிச் செறிதீத இயல் பிற்கு அரற்றுன் காணக் காட்டிப்பெயர்ந்த கள்வனென்க

இதனுல் அரசன் நெஞ்சுணர்ந்தும் நாவெழாமை கூறினுன். இவர்க் கென்றுன், கள்வரென்றசாதிபறறி. அ . முன்னறிசுட்டு.

202 - 3 ஆங்கோர் கூறும்

(இ - ள்) அவ்விடத்து அவர்களில் வேலைக் கையிலேயுடையாரேர் இளையவன் சொல்லும் , அஃதியாதெனின்—

204 - 11. நிலனக ழளியன் உறுபடை யீரென

(இ - ள்.) முன்னுளிலே, நிலதீதையகழும் உளியையுடையனும் நீல நிறதீதானையையுடையனும்ப் பலகலன்களையும் நச்சிய வேட்கையாற்

பற்றிய பொருளேவிடாமையிற கொடும்பசியால் ஊனைக்கவ்வி விடாத புலிபோன்று சரற்காலத்து இடையாமமாகிய, இருளாற் கண்கள் மயங்கச் செய்தலேயுடைய, ஊரெல்லாம் துயிலால் மடிவித்தலேச்செய்யும் இராக் காலத்து ஒரு கள்வன் வந்து தோன்ற, யான் என்கையில் வாளே உறை கழித்தேனுக, அவ்வாளே அவன்வாங்க, அவனேயும் என்வாளேயும் எவ் விடத்தும கண்டிலேன், ஆதலால் இவர்செய்கை யாவர்க்கும் அறிய வரிது, இவனே நாம நெகிழவிடின், அரசன் நம்மை வருத்தும, ஆதலான், இனி இதற்குச் செய்தறகுரியதொன்றைத் துணிந்து கூறு மின, மிக்க படைக்கலத்தையுடையீரென்றுனென்க.

" நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர், மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர், நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்கும, கண்மா ருடவ ரொடுக்க மொறறி " (639 - 42) என்ருர் **மதுரைக்காஞ்சியினும்.**

இனி, உளியதென்று பாடமோதி, நின்றுவந்த தொகைப்பின் நின்ற போன்றென்பதனே இதனேடு கூட்டி முடிப்பினும் அமையும். இதற்கு நீலத்தானேயன் நிலன் அகழ்தலால் உளியம்போன்றும், கலனசை வேட்கையாற் புலிபோன்றுமென்க.

உளியன்தானேயன் புலிபோன்று ஒருவன் தோன்ற என்க.

212 - 7. கல்லாக் களிமகன் ஊழ்வினை யுருத்தென்.

(இ - ள்.) இங்ஙனம இவர்கூறலின், அறிவின்மையாற கொலேயஞ் சான் ஒரு களிமகன் தன்கையில் வெள்வாளாலே வெட்டினுனுக, அது குறுக்கே துணிதீத்து, துணிந்த உடறகுறைப் புண்வழியே கொப்புளிக் கின்ற குருதி குதிதீத்து எங்கும்பரக்க நிலமடந்தை தனக்கு ஆவது உணர்ந்து மிக்கதுயரமுற அக்காவலனுடைய செங்கோல் வளேய முன்னேத்தீவினை முதிர்தலாலே கோவலன் வெட்டுண்டு விழுந்தா னென்க.

வெள்வாள் - மாற்ருரையெறிந்து குருதிக்கறை தட்டாதவாளெனவு மாம், போர்மாலே சூழ்ந்து புகர் புகாத வாள். விலங்கூடறுத்தது - அவ் வாள் குறுக்கே துணிதீத்து, முறறு. உமிழ்தல் - கொபபுளிதீதல். வானும் கூர்ப்பும் மிகுதி.

இஃது எல்லாவடியும் அளவடியாய் வந்துமுடிதலின், **நிலேமண்டில ஆசிரியப்பா.**

நண்ணும் வந்தவினை.

(இ - ள்.) பாண்டியன் முன்செய்த தீங்கின் விளேவாகிவந்தவினை யாலே, மண்ணில் வளேயாத செங்கோல் கண்ணகிதன் கேள்வன் முன் னிலேயாக வளேந்தது, ஆதலால், செய்தாஞெருவனே இருவினேயும் நண்ணுமென்பதனேயறிந்து, உலகதீதீர்! நல்வினேயே செய்யுமின்க ளென்று அடிகள் கூறினரென்க.

ஆதலாலென ஒருசொல்வருவிக்க.

(கசு) கொலேக்களக் காதை முற்றிற்று.

பதினேழாவது

ஆய்ச்சியர் குரவை

---

(1) கயலெழுதிய விமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண்பொழின் †மன்னர்
ஏவல் கேட்பப் பாரர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் ‡கோயிலிற்
காலை முரசங் கனைகுர லியம்புமாகலின்
நெய்ம்முறை நமக் $கின்ருமென்
றையைதன் மகளைக்கூஉய்க்
கடைகயிறு மத்துங்கொண்
டிடைமுதுமகள் வந்துதோன்றுமன்

உரைப்பாட்டுமடை

(2) குடப்பா லுறையா குவியிமி லேற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு,

---

(1) 2 அயலெழுதிய புலியும் வில்லுமென்றது அவற்றையுடைய அரசரை ; சோழன் சேரன்.

3. மன்னர் - மற்றுள்ள குறுநில மன்னர்.

6. இயம்பும் : முறறு.

8. ஐயையாகிய தன்மகளை. 10. முதுமகள் - மாதரி
உரைப்பாட்டுமடை - உரையாகிய பாட்டை இடைப்படுத்தீதது.

(2) உறையா - தோயா.

---

(1) அடி, 3 நாவலந்தண்பொழில் பெரும்பாண் 465. அடி, 6 : மதுரைக் 232, ஐங்குறு. 448 1.

அடி, 6 இயம்பல் என்பது ஒலித்தற்றெழிற் பண்பில் வரும் (நன். மயிலை. 458, சங் 459, மேற.) அடி, 1-10 : பாட்டிடை வைத்த குறிப் பினன் வந்த உரை (தொல். செய். 165, இளம்.)

(பி - ம்) † 'மன்னரொ, டேவல் கேட்பவர சாண்ட' ‡ 'கோயிற், காலை முரச மியம்பு மாதலின்', 'கோயிற், காலை முரசியம்பு' $ 'கின்ருகு மென, ஐயை'

(3) உறிநறு வெண்ணெ யுருகா †வுருகும்
மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு,
(4) நான்முலை யாய நடுங்குபு நின்றிரங்கும்
மான்மணி வீழும் வருவதொன் றுண்டு

கருப்பம் ‡

(5) குடத்துப்பா லுறையாமையும் குவியிமிலேற்றின் மடக் கண்ணீர் சோர்தலும் உறியில்வெண்ணெ யுருகாமையும் மறி முடங்கி யாடாமையும் மான்மணி நிலத்தற்று வீழ்தலும் வருவ தோர் துன்பமுண்டென மகளேநோக்கி மனமயங்காதே மண் ணின் மாதர்க் கணியாகிய கண்ணகியுந் தான்காண ஆயர் $பாடியி லெரு மன்றத்து மாயவனுடன் தம்முனுடிய வால சரிதை நாடகங்களில் வேனெடுங்கட் பிஞ்ஞையோடாடிய குர வையாடுதும் யாமென்றுள் கறவைகன்று துயர்நீங்குக வெனவே

கொளு

(6) § காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ்
வேரி ¶ மலர்க்கோதை யாள், சுட்டு, (கூ)
(7) நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரியவிப்
பொற்றொடி மாதரா டோள், (உ)

---

(3) (பா) உருகி - மெலிந்து உருகி ஆடா - குழைந்து கிடக்கும்; உருகியென்பது ஆடாமையென்னும் மறையொடு முடிந்தது

(4) நான்முலையாயம் - பசு, ஆயம் மணி வீழும், இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்திலே முடிந்தது. மான் மணி - பெரிய மணி; கழுத்தின் மணி.

கருப்பம் - கேட்டுக்குக் கருப்பம்.

(5) 'உறையாமை' முதலாக எண்ணிய உம்மைகளுக்கு உறையா மையாலுமென்று மூன்றும் வேறறுமை விரிக்க மயங்காதே - வருந் தாதே. குரவை - பலர் கூடியாடும். .யைக்கூத்து வாலசரிதை நாட கம் - பிள்ளைச் சரித நாடகம. மாயவன் தொழுனையாற்றிற் பிள்ளைப் பருவத்துப் பலதேவரோடும் பின்னையோடுமாடின குரவைக் கூத்தைக் கூறுகின்றுள் .—

" குரவையென்பது.....இயல்பிற்றென்ப."

கொளு - குரவைக்குக் கருத்து.

(7) செகில் - சிவந்த சுட்டி.

---

(6) "காரிகதனஞ்சான் கொள்பவன்", "காரிகதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே" (கலித் 104 . 21, 74)

(பி - ம்.) † 'மறுகி' ‡ 'ஆங்கு, குடத்து' $ 'பாடியினெரு' § 'ஆங்கு, காரி' ¶ 'மலர்க்குழலாள், நெறறிச் செதிலை யடர்த்தாற் குரியதிப், பொற் றொடி மாதர் நகை'

(8) மல்லன் மழவிடை யூர்ந்தாற் குரியளிம்
முல்லையம் †பூங்குழ லுன் , (ரு)
(9) நுண்பொறி வெள்ளை ‡யடர்த்தாற்கே யாகுமிப்
பெண்கொடி மாதர்தன் ரோள் , (ச)
(10) பொற்பொறி வெள்ளை $யடர்த்தாற்கே யாகுமிந்
நற்கொடி மென்முலை தான் , (ஙி)
(11) வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக்
கொன்றையம் பூங்குழ லாள் , (சு)
(12) §தூநிற வெள்ளை யடர்த்தாற் குரியளிப்
பூவைப் புது ||மல ராள் (எ)

எடுத்துக்காட்டு

(13) ஆங்கு,
தொழுவிடை யேறு குறித்து வளர்த்தார்
எழுவ ரிளங் ¶கோதை யார்
என்றுதன் மகளைநோக்கித்
5 தொன்றுபடு முறையானிறுத்தி
இடைமுது மகளிவர்க்குப்
படைத்துக்கோட் ††பெயரிடுவாள்
குடமுத ‡‡லிடமுறை யாக்குர றுத்தம்
கைக்கிளை யுழையிளி விளரி தாரமென
10 விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே

(8) மல்லல் - வலி. தான் அசை
எடுத்துக்காட்டென்பது - இவ்வேறு கொண்டானுக்கு இன்னுள் உரியளென்றல்.

(13) 8 குடமுதல் - மேற்றிசை முதலாக வட்டப்பாலை வருமாறு —
[1] "ஆழியு மாரும்போற கீறிச் சிறுதிகைக்கண், ஊழி னெரோவொன் றுடன்கீறிச்—சூழி, எருதாதி கீழ்த்திசைக்கொண் டீராறு மெண்ணிக், கருதி நிலக்கயிறறைக் காண்", "இளியிடபங் கறகட கமாம்விளரி சிங்கம, தளராத தாரமதுவாம் - தளராக், குரல்கோற் றனுத்துதிதங் கும்பங்கிளையாம், வரலா லுழைமீன மாம", "குரறுலி விற்றுதிதங் கைக்கிளையே கும்பம், பரிய வுழைமீனம் பாவாய்—அரிதாரம், கொல்லே

(9) "நுண்பொறி வெள்ளைக், கதனஞ்சான் பாய்ந்த பொதுவன்" (கலித் 101 27 - 8)
(10) வெள்ளை "செம்மறு வெள்ளையும்" (கலித் 105 12)
(12) தூநிற வெள்ளை · "பானிற வண்ணன்போற் பழிதீர்ந்த வெள்ளை" (கலித் 104 8)
[1] சினேந்திரமாலை, ஆரூடசக்கரம், 1.

(பி - ம்) †'பூங்குழலாள்' ‡'யடர்தீதானுக்காகும்' $'அடர்தீதாற் குரிதீதா மிந்' §'தூவுறு வெள்ளை' ||'மலரா, ளாங்கு' ¶'கோதை யார், எடுத்துக்காட்டு' ††'பேரிடுவாள்' ‡‡'லிடைமுறை யாகக் குரல்'

(14) மாயவ னென்ருள் குரலே விறல்வெள்ளே
ஆயவ னென்ரு ளிளிதன்னே - யாய்மகள்
பின்னேயா மென்ருளோர் துத்தத்தை மற்றையார்
முன்னேயா மென்ருண் †முறை,

(15) ‡மாயவன் சீருளார் பிஞ்ஞையுந் தாரமும்
வால்வெள்ளே சீரா ருழையும் விளரியும்
கைக்கிளே பிஞ்ஞை யிடத்தாள் வலத்துளாள்
$முத்தைக்கு நல்விளரி தான்,

(16) அவருள், வண்டுழாய் மாலேயை மாயவன் மேலிட்டுத்
தண்டாக் குரவைதா னுள்படுவாள் - கொண்டசீர்
வைய மளந்தான்றன் மார்பிற் றிரு §நோக்காப்
பெய்வளேக் கையாணம் பின்னேதா னுமென்றே
ஐயென்ரு ளாயர் மகள்

றிளிவிளரி கற்கடகங் கோப்பமைந்த, தொல்லே ழிசைநரம்பிற் காம்.'' இப்படி ஏழு நரம்புகளேயும் நிறுத்தி 'ஏழுவ ரிளங்கோதையார்' என்ற ஏழு பெண்களேயும் ஏழு நரம்பாக்கி அவர்களே நரம்புநிற்கு நிலேகளிலே நிறுத்தி..... .. ..

அவருள்,—

(14) மாயவ னென்ருள் குரலே, மற்றை வெள்ளே யாயவனென்ருள் இளிநரம்பை, ஆய்மகள் பிஞ்ஞையாமென்ருள் துத்ததீதை, மறறைப் பெண்களேக் கைக்கிளே உழை விளரி தாரமென்ருள்

[உழையுளியென்று உழைக்குப் பெயர்.]

(15) மாயவனென்ற குரனரமபைப் பின்னேயான துத்தமும் தார மும் சேரநின்றன; பலதேவராகிய இளிநரம்பை உழையும் விளரியும் சேரநின்றன, கைக்கிளே யென்கினற நரம்பு பின்னேக்கு இடப்பக்கமே நின்றது, முந்தையாகிய தாரதீதுக்கு வலப்பக்கமே நின்றது விளரி.

[''குரன்மருங்கிற் பாகந் ,தன்மருங்கணேந்து நின்ற வுழைகைக் கிளேகண் மேலொரோவலகு செல்லவு மமைப்பது துத்தங் குரலாகவக் குரன்முதலேழு வகை யோசையு நிரல்படப் பிரிந்திசைப்பது நேரிசை மண்டிலம்'']. இது திரிபு சூதிரம்.

(16) மாயவன் - மாயவனுக நிறுத்தினவள். நோக்காத வளேக்கை யாள். ஐ யென்ருள் - வியந்தாள்

(பி - ம்.) †'முறையவருள்' ‡'மாயவள் சீருள்ளாள் பின்னேயுந்' $'முந்தைக்கு நல்விளரிதான் வண்டு' §'நோக்காள், பெய்வளேக் கையா ளப்பின்னே தானு'

கூத்துள்படுதல்

(17) அவர்தாம், செந்நிலைமண்டிலத்தாற்கற்கடகக்கைகோஒத்
† தந்நிலையே யாடற்சீ ராய்ந்துளார் - முன்னைக்
குரற்கொடி தன்கிளையை நோக்கிப் பரப்புற்ற
கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தாற் ‡ பாடுதும்
முல்லைத்தீம் பாணியென் ருள்

(18) எனுக்,
குரன்மந்த மாக விளிசம ஞுக
வரன்முறையே கூத்தம் வலியா - உரனிலா
மந்தம் விளரி பிடிப்பா $ளவணட்பின்
பின்றையைப் பாட்டெடுப் பாள்.

பாட்டு

(19) கன்று குணிலாக் § கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ (க)

(20) பாம்பு கயிறுக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ. (உ)

கூத்துள்படுதல் - தான் கூத்துக்குள் ஒத்தாடுதல்

(17) செந்நிலையாவது - சமநிலை. மண்டிலத்தான - மண்டிலத் தோடே கறகடகக்கை - நடுவிரலும் அணிவிரலும் முன்னேநின்று மடித்து மறறை இரண்டுவிரல்களுமு கோத்தல.

"இருவிரல்க டம்மையுந தமமுள்ளே கோத்துப், பெருவிரல்க ணீக்கநண் டாம்"

(19) குணில் - குறுந்தடி. கொன்றையந்தீங்குழல் என்றமையான் முன்பினவையும் பண்ணின்மேறசெலுத்தாது கருவிமேற செலுத்துக, பண்களுமாம்.

(20) ஆம்பன்முதலானவை சில கருவி, ஆம்பல் - பண்ணுமாம். "மொழியாம்பல் வாயாம்பல் முத்தாமபல்" என்றுசொல்லுவர் பண்ணுக்கு.

---

(19) கொன்றையந்தீங்குழல் கலித் 106 3 (20) ஆமபலந் தீங்குழல் . குறிஞ்சிப். 222, ஈங்குறு 215, கலித். 108 62.

"கன்றுகுணிலா", "பாம்புகயிறு", "கொல்லையஞ்சாரல்" [(19), (20), (21)] என்பவை பின்குறிப்பிடடுள்ள இடங்களில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன; தொல். செய 174, இளம், 149, பேர். ந, யா - வி. செய். 22, யா - கா. செய். 9, இ - வி 735, மேற.

(பி - ம்.) † 'தந்நிலையா ராடியசீ ராயந்துளள்' ‡ 'பாடுகோ, முல்லைப் பூம்பாணியென்ருளெனக்' $ 'ளிவணடப்பிற், பின்றையோர் பாட்டு' § 'கனியுகுத்த'

(21) கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
† எல்லைநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி, [1] (ங)

(22) தொழுனைத் துறைவனே டாடிய பின்னை
அணிநிறம் பாடுகேம் யாம்.

(23) இறுமென் சாய னுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்
அறுவை யொளித்தா னயர வயரும்
நறுமென் சாயன் முகமென் கோயாம். (க)

(24) வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயாம்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம். (உ)

(25) தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தாண் முகமென் கோயாம்
கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய ‡ லுழந்தான் வடிவென் கோயாம் (ஙு)

ஒன்றன்பகுதி

(26) கதிர்திகிரி யான்மறைத்த கடல்வண்ண னிடத்துளாள்
மதிபுரையு நறுமேனித் தம்முனேன் வலத்துளாள்
பொதியவிழ் மலர்க்கூந்தற் $பிஞ்ஞைசீர் புறங்காப்பார்
முதுமறைதேர் நாரதனுர் முந்தைமுறை நரம்புளர்வார்

(27) மயிலெருத் துறழ்மேனி மாயவன் வலத்துளாள்
§பயிலிதழ் மலர்மேனித் தம்முனே னிடத்துளாள்
கயிலெருத்தங் கோட்டியநம் பின்னைசீர் புறங்காப்பார்
||குயிலுவரு ணாரதனுர் கொளைபுணர்சீர் ¶நரம்புளர்வார்

(22) (பா) "தொழுனைக் கணவனே டாடிய பின்னை, அணிநிறம் பாடுகம் யாம்" என்று ஒரு குறள்வெண்பா இட்டோதுவாருமுளர்

ஒன்றன்பகுதி - ஒறறைதீதாளதீதின் கூறு.

(22) தொழுனைதீதுறைவன் . 16 50.

[1] "கன்று குணிலா" (19) என்பது முதலிய மூன்றும், இரண்டா மடிகளிரடிடிக்கப்பெறறு நந்நான்கடியினவாக மிதிலைப்பட்டிப் பிரதியிற் காணப்படுகின்றன.

(பி - ம்) † 'எல்லி' ‡ 'லுழந்தான் மனமென்கோ' $ 'பின்னை சீர்' § பயிலிதழ்மாமேனித் தன்முன்னேன்' || 'குயிலுவ நாரதனுர்' ¶ 'நரம்புளர்வார் மாயவன்'

ஆடுநர்ப்புகழ்தல்

(28) மாயவன்றம் முன்னினெடும் வரிவளைக்கைப் பின்னையொடும்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ் †சோர
ஆய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்ததீ
தாதெருமன் றத்தாடுங் ‡குரவையோ தகவுடைத்தே
எல்லாநாம்,
புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்
உள்வரிப் பாணியொன் றுற்று.

உள்வரிவாழ்த்து

(29) கோவா மலையாரங் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணரம் $பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் §குருந்தொசித்தா னென்பரால் (க)
(30) பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணுண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால் (உ)

---

(28) மாயவன் : எழுவாய் அசோதையார் - இடைச்சேரியில் வளர்தீத தாய்பெயர்.

எல்லா - தோழி, அன்றி நாமெல்லாமென்றுமாம்

உள்வரிவாழ்த்தென்பது பிறிதோருருவங்கொண்டும் கொள்ளாதும் .. ..வாழ்த்துவது.

(29) கோவாமலையாரம் - சந்தனம, வெளிப்படை கோ - பசு.

(30) '' பொன்னிமய '' .... .

---

(28) '' மாமணி வண்ணனுந் தமமுனும பிஞ்ஞையும், ஆடிய குரவையிஃ தாமென நோக்கியும் '' (மணி. 19 65 - 6) தாதெருமன்றம். சிலப். 16 . 102, கு - ரை.

(29) '' தன்கடற் பிறந்த முத்தி னுரமு, முனைதிறை கொடுக்குந் துப்பிற் றன்மலைத், தெறலரு மரபிற கடவுட் பேணிக், குறவர் தநத சந்தி னுரமும், இருபே ராரமு மெழில்பெற வணியும, திருவீழ் மார்பிற் றென்னவன் '' (அகநா. 13 . 1 - 6), '' திண்கா ழார நீவிக் கதிர்விடும், ஒண்கா ழாரங் கவைஇய மார்பு '' (மதுரைக். 715 - 6)

29 - 31 '' கோவாமலையாரம '' முதலிய மூன்றும் தென்னவன் முதலியோரை மாயோனுகக்கூறியது (தொல் புறத் 5, ந), ' அரசரைத் தெய்வமென்றே பரவியது ' (தொல். செய் 149, ந. மேற.)

(பி - ம்) † ' சோரப் பால்வளைக்கைச் சீறடியாரசோதை ' ‡ ' குரவை யோதகவுடைத்தே ஆடுநர்ப்புகழ்தல் ' $ ' பூண்டோன் ' § ' குருந்தொசிப் பானென்பரால் '

(31) முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
†மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிரே ளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால் (ரு)

முன்னிலைப்பரவல்

(32) வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணுக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றுற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே (க)

(33) ‡அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவிலு னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே (உ)

(34) திரண்டமரர் $தொழுதேத்துந் திருமானின் செங்கமல
இரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே (ரு)

படர்க்கைப்பரவல்

(35) மூவுலகு மீரடியான் §முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து

---

(31) மூவாக் கடம்பு - வஞ்சத்தால் நின்றதாகலின், மூப்பின்றி ஒரு நாளேப்போல நின்ற கடம்பு

இம்மூன்றும் பூவைநிலை

(35) சோவரணம் - அசுரர் நகரம்.

---

(32) 'வயிறு என்பது நடு என்னும்பொருளது' (கல் 35, மயி லேறு.) (33) உறுபசி . தக்க 617, உரை. (35) இதுமுதலிய மூன்றும் படர்க்கைப் பரவலாய் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி நான்கடி இறைபின் ஓரடி மிக்கு வந்த கொச்சக வொருபோகு, தொல். செய். 149, ந. மேற்.

(பி - ம்.) †'மன்னர்கோன்சேரன்' ‡'அறிபொருள்' $'தொழு தேத்தத் திருமால்' §'முறைதிறம்பா வகையன்று, தாவியசே வடி சிவப்பத்'

ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன தெவன் † வாழி யோதோழீ
நன்பகற் போதே ‡ நடுக்குநோய் கைம்மிகும்
அன்பனைக் காணு தலவுமென் னெஞ்சன்றே
அன்பனைக் காணு தலவுமென் னெஞ்சாயின்
மன்பதை சொன்ன தெவன்வாழி யோதோழீ
தஞ்சமோ தோழீ தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சன்றே
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சாயின்
¶ எஞ்சலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ
சொன்னது —
அரைசுறை கோயி லணியார் ஞெகிழும்
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
குரைகழன் மாக்கள் கொலைகுறித் தனரே
§ எனக்கேட்டு,
பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கண் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப வழுதாடன் $கேள்வனை
எங்கணுஅ வென்னு வினைந்தேங்கி மாழ்குவாள்

---

15 ஏதிலார் சொன்னது யாதென்று ஐயுறருள், ஏதிலாரென்றது மறையச் சொன்னவர்களை, ஏதிலார் - நகரிலுளளாருமாம, தோழீயென்றது ஐயையை.

20. (பா) தஞ்சமோ காணேன் - வேறு துணை காண்கின்றிலேன்.

21. வஞ்சமோ உண்டு - கிருத்திரிமமானது ஒன்றுண்டு. நெஞ்சு மயங்கும் முறறு. 22 ஆயின் - ஆதலால்

23. எஞ்சலார் - அயலார் எவனென்றருள், வருபாடடைப்பற்றி.

24 சொன்னது - அவர்கள் சொன்னபடி.

25 ஞெகிழும் - சிலம்பு. 26. கரையாமல் - ஓசைப்படாமல்.

28. கொலை குறித்தனரென்றருள், ஐயை

31 திங்கள் முகிலோடு நிலங்கொண்டாற்போல.

33. (பா) எங்கணுய் - எங்குற்றுய் மாழ்குதல் - மயங்குதல்.

அடி, 31 கலித். 64 · 1

(அடி,) 24 - 33 . ‘இவை தனிச்சொற பெறறுதீ தனியே வந்த கொச்சக வொருபோகு’ (தொல் செய் 149, ந மேற்.)

(பி - ம்.) † ‘வாழிதோழி’ ‡ ‘நடுங்குநோய் கைமிக, அன்பனை’ ¶ ‘எஞ்சிலார் சொன்ன தெவன்வாழி தோழி’ § ‘எனப் பொங்கி’ $ ‘கோவலனை’

இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை யலர்தூற்ற மன்னவன் றவறிழைப்ப
அன்பனை யிழந்தேன்யா னவலங்கொண் டழிவலோ
நறைமலி வியன்மார்பி னண்பனை யிழந்தேங்கித்
துறை †பல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போல்
மறனெடு திரியுங்கோன் மன்னவன் றவறிழைப்ப
அறனெனு மடவோயா னவலங்கொண் டழிவலோ
தம்முறு பெருங்கணவன் ‡றழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போல்
செம்மையி னிகந்தகோற் றென்னவன் றவறிழைப்ப
இம்மையு மிசையொரீஇ யினைந்தேங்கி யழிவலோ
காணிகா,
வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
¶ ஆய மடமகளி ரெல்லீருங் கேட்டீமின்
ஆய மடமகளி ரெல்லீருங் கேட்டைக்க
பாய்திரை வேலிப் படுபொரு ணீயறிதி
காய்கதிர்ச செல்வனே கள்வனே வென்கணவன்
கள்வனே வல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்

---

34. இடரெரி - இடர்செய்யெரி.

41. அறனென்றது தரும தேவதையை

43. கைமமை யொழுக்கத்தினையுடைய நோன்பு

45. இமமையுமென்றது பரலோகத்தையும் கருதி.

46. (பா) காணிகா காணிகா இகவென்பது ாறு திரிந்தது, இரண்டும் விரைவின்கண் வந்தன

47. வாய்வதின் வநத குரவை - புத்தி பூருவமாக எடுத்த குரவை.

49. (பா) கேட்டைக்க கேட்டைக்க - கேட்க கேட்க, இரட்டித்தரர், எல்லாரும் கேட்டற்கு

53. ஊருண்ணு மென்றது முறறு. ஒருகுரல் - அசரீரி.

அடி, 34 - 5 மணி. 2 . 46 - 7. அடி, 43. கைம்மை நோன்பு : "வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட, வேஎ வெந்தை வலசி யாகப், பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும், உயவற் பெண்டிர்" (புறநா. 246 : 7 - 10). அடி, 47. வாய்வது மணி 11 . 138, 21 171.

அடி, 47 - 53. 'ஐந்தடியின்மேல் ாரடிமிக்கு வந்த ஒருபோகு' (தொல். செய். 149, ந. மேற்)

(பி - ம்.) † 'பலதொறு' ‡ 'றழலெரியிடை' ¶ 'ஆயர்மட'

1 ஆங்கு—(இ - ள்.) அவ்விடத்து

2 - 7. ஆயர் முதுமகள் வந்தாளுளள்

(இ - ள்) மாதரி, இங்ஙனம் அவராடிய குரவை முடிந்தவளவிலே [1]ஒழுக்கருத நீரையுடைய வையையாறறின் கரையிடத்து நெடுமாலடியைப் பூ முதலியவற்றைத் தூவி ஏத்துதறகு நீராடப் போயினுளாக; சாயலாள் வேறொருத்தி உள் நகரத்துப் பிறநததொரு வார்த்தை கேட்டுச் சென்றிருந்து கூறுதற்கு விரைவோடு வநதாளுளளென்க

ஆடிய சாயலாளெனச் சேர்த்து அசைந்த சாயலாளென்பாருமுளர். புணை சாய்ந்து - மெய்ச்சாந்து. நெடுமால் - **அந்தரவானத்தெம்பெருமான்.** துறை படிதல் - நீராடுதல்; அக்கால வழக்கு முதுமகள் போயினுளுடைய சாயலாள் அரவங்கேடடு வந்து அவ்விடத்து நின்றுளுளளென ஐயை மேலேற்றுவாருமுளர் போயினுள் கேடடு வந்தாளுளளெனப் [2]பொருண்மை சுட்டலாக்கி மாதரிமேலேற்றலுமொன்று. இது புறஞ்சேரியாதலின், ஊரரவமென்றுரர்.

8. அவடான்—

(இ - ள்.) அங்ஙனம் விரைவோடு வந்து நின்றவள்தான்,

9 - 10. சொல்லாடாள் சொல்லாடுந்தான்

(இ - ள்) அங்ஙனஙு கேட்டு வந்து கண்ணகிக்குத் தன் வாக்காற் சொல்லாளாய்க் குரவை முடிதீது நீராடி வந்து நின்ற ஆயர்மகளிரக்கு மறையிற கூறி அவரோடு தானும விமமுறறு நின்றவள் அவளழகும இளமையும் தனிமையுங் கண்டு ஆற்றுளாய நெஞ்சழிந்து சொல்ல நாவெழாதுதான் நிறகுமென்க.

இனி வாக்காற் சொல்லாதவள் தன் மெய்ப்பாட்டாற சொல்லுமென்று மாம் இனி அங்ஙனம் நின்றுளாகிய அந்நங்கைக்குக் கண்ணகி தான் சொல்லாடுமெனினும் அமையும். அது மேற்கூறுகினறுர் —

11. எல்லாவோ—(இ - ள்) ஏடீ; ஓ · இரக்கக் குறிப்பு

12 - 5. காதலற் காண்கிலேன் வாழியோ தோழீ

(இ - ள்.) தோழீ, என் காதலனை வரக் காண்கின்றிலேன்; அங்ஙனம் காணுமையின் நெஞ்சு கலங்கி நோய் கைமமிகா நின்றது; அதுவேயுமன்றி உலையிலூதுமத துருத்திமூக்கும் தோறகுமபடி மூச்சும் அழலெழுவுயிரா நின்றன, இவை இங்ஙனமாகாநிற்குமாயின் என்னை நோக்கி இவ்வாய்ச்சியர் குறிப்பாற் கூறுகின்றது யாதோவென்றறிகின்றிலேனென இரஙகிக் கூறினுளென்க.

கோமுறை பிழைந்த நாளி லிந்நகர்
தீமுறை யுண்பதோர் திறனுண் ‡டென்ப
தாமுறை யாக வறிந்தன மாதலின்
யாமுறை போவ தியல்பன் ரேவெனக்
கொங்கை குறித்த கொற்ற நங்கைமுன்
நாற்பாற் பூதமும் பாற்பாற் பெயரக்
கூல மறுகுங் கொடித்தேர் வீதியும்

---

(86) உரியோனெனறு சொல்லப்படுவோனகிய (88) பூதக்கடவுளுமென்க.
(97) 'மண்ணுறுதிருமணி' முதலாகப் (101 - 2) 'பலிபெறுபூததத் தலைவன' ாறுக வேளாண்பூததத்தைக் கூறிறறு, அதறகு நிறம் நீலம்.
97 திருமணி - நீலமணி 99 ஆடறகமைந்தவை - வாச்சியம்.
100. துறைபோகல - முடியவறிதல்
(100) முடியப்போகிப் (101) பலிபெறு பூதமென்க
36 - 102 இந்நால்வரும் தோன்றி
104. தீமுறையுண்பது - நெருப்பு நியாயமாகவுண்பது.
105 ஆமுறையாக - ஆவதொரு நியாயமாக, இன்னும், ஆமுறை யாக அறிந்தனம - மேல் வரக்கடவதொரு வியினென்று முன்னே யறிந்தேம

அடி, 93-4 · நால்வகைப் பூக்கள் அடி, 97 புறநா. 56 : 5.
அடி, 109 சிலப் 14 211.
(பி - ம்) †'சென்னியன்' ‡'டென்ப, தியாமுறை யாக வறிந்தன மன்றே, நாற்பாற்'

†பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்
[உரக்குரங் குயர்தத வொண்சிலை யுரவோன்]
காவெரி யூட்டிய நாள்போற் ‡கலங்க
அறவோர் மருங்கி னழற்கொடி விடாது
மறவோர் சேரி மயங்கெரி மண்டக்
கறவையுங் கன்றுங் கனலெரி சேரா
அறவை யாய ரகன்றெரு வடைந்தன
மறவெங் களிறு மடப்பிடி நிரைகளும்
விரைபரிக் குதிரையும் புறமதிற் பெயர்ந்தன
சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை
மைத்தடங் கண்ணுர் மைந்தர் தமமுடன்
செப்புவா யவிழ்ந்த தேம்பொதி நறுவிரை
நறுமல ரவிழ்ந்த நாறிரு ¶முசசித்
துறுமலர்ப் பிணையல் சொரிந்த பூந்துகள்
குங்கும மெழுதிய கொங்கை முன்றிற்
பைங்கா ழாரம பரிந்தன பரந்த
தூமென் சேக்கைத் §துனிப்பதம் பாராக்
காமக் கள்ளாட் டடங்கினர் மயங்கத்
திதலை யல்குற் றேங்கமழ் குழலியர்
குதலைச் செவவாயக் குறுநடைப் புதல்வரொடு

---

110 நால்வேறுதெரு - நால்வகை வருணத்தார் தெரு
112 கா - காண்டாவனம
113 அறவோரிடத்து அழறகொடி விடாதாய
116. அறவை - அறத்தையுடைய
115 - 6 கனலெரி சேராவாய ஆயரதெருவில் அடைந்தன.
121 செப்பு வாய்திறந்து சொரிந்த விரை - சாநது, புழுகுநெய் முதலாயின
121 - 3 செப்பிலே வாய் அவிழ்ந்த பிணையலெனக்கூட்டி, நறு விரையையுடைய பிணையல, முச்சிப் பிணையலெனறுமாம நறுமலரவிழ் தல், முச்சிக்கடை 126 துனியின் செவ்வி பார்க்கவேண்டாத, துனி யளவு விடடிராத வென்றுமாம, இவர பிள்ளை பெருதவர்.
125 - 6 பரிந்தன பரந்த சேக்கை - கையறறுப் பரந்த சேக்கை.
127. அடங்கினர் மயஙக - ஒழிநது சோர.

அடி, 110 சிலப். 14 212.
அடி, 112 சிறுபாண் 238. 116 அறவையாயர் சிலப். 15 : 120-21
அடி, 121 செப்பு - மலரும அருமபுகள் வைத்திருக்கும் பூஞ் செப்பு, மதுரைக் 421 3, நற் 337 6, குறுந். 9 2, மணி. 4 65, சூளா மந்திர 56, பெருங் 1 33 76, கலித் 68 15.
அடி, 127 "தருக்கிய காமக்களளாடடு" (மணி. 25 . 91)
அடி, 129 மணி 7 57
(பி - ம்) †'பால்வகை தெரிந்த நால்வேறு தெருவுங், காவெரி யுண்ட நாட்' ‡'கலங்கி' ¶'முச்சிப்புதுமலர்' §'துனிபதங் காமக், கடவுள்கள்'

† பஞ்சியா ரமளியிற் றுஞ்சு துயி லெடுப்பி
வானரைக் கூந்தன் மகளிரொடு ‡போத
வருவிருந் தோம்பி மனையற முட்டாப்
பெருமனைக் கிழத்தியர் பெருமகிழ் வெய்தி
இலங்குபூண் மார்பிற் கணவனை யிழந்து
சிலம்பின் வென்ற சேயிழை நங்கை
கொங்கைப் பூசல் கொடிதோ ¶வன்றெனப்
பொங்கெரி வானவற் றெழுதன ரேத்தினர்
எண்ணுன் கிரட்டி யிருங்கலை பயின்ற
பண்ணியன் மடந்தையர் பயங்கெழு வீதித்
தண்ணுமை முழவந் தாழ்த்தரு தீங்குழல்
பண்ணுக்கிளை பயிரும §பண்ணியாழ்ப் பாணியொடு
நாடக மடந்தைய ராடரங் கிழந்தாங்
கெந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
இந்நாட் டிவ்வூ ரிறைவனை யிழந்து
தேரா மன்னனைச் சிலம்பின் வென்றிவ்
வூர்தீ யூட்டிய வொருமக $ளென்ன
அந்தி விழவு மாரண வோதையும்
செந்தீ ††வேட்டலுந் தெய்வம் பரவலும்
மனைவிளக் குறுததலு மாலை யயர்தலும்
வழங்குகுரன் முரசமு மடிந்த மாநகர்க்
காதலற் கெடுத்த நோயொ டுளங்கனன்
றூதுலைக் குருகி னுயிர்த்தன ளுயிாத்து
மறுகிடை மறுகுங் கவலையிற் ‡‡கவலும்

136 கொடிதன்று - நியாயம
139 பண்ணியன மடநதையர் - இசையறிவார்
142 நாடகமடநதையர் - தளியிலார்.
(139) வீதியிடத்து (142) அரங்கிழநது
147. அநதிவிழவு - சீபலி
148 தெயவமபரவல - தெய்வபூசனை
153 மறுகிடை மறுகும் - மறுகிலே சுழன்று திரியும் கவலை - குறுந் தெரு. கவலும போம

அடி, 132 குறள, 86 அடி, 138. "எண்ணெண்கலையோர்" (சிலப் 14 167), சீவக 2107, மணி 2 29, "யாழ்முத லாக வறுபதி தொருநான், கேரள மகளிரக் கியறகை" (பெருங் 1 35 84-5)
அடி, 141 மணி 7 46 அடி, 152 சிலப் 13 45, "ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது" (மணி 2 43)
(பி - ம்) † 'பாலாரமளித்', 'பல்லாரமளித்' ‡ 'மயங்க' ¶ 'வின்றெனப்' § 'பணையாழ்ப்பாணரொடு' $ 'ளெனவுமந்தி' †† 'வேட்கையின்' ‡‡ 'கவலையும்'

இயங்கலு மியங்கு மயங்கலு மயங்கும்
155 ஆரஞ ருற்ற வீரபத் தினிமுன்
கொந்தழல் வெம்மைக் கூரெரி †பொருஅள்
வந்து தோன்றினண் மதுரா பதியென்

வெண்பா

[1] மாமகளு நாமகளு மாமயிடற் செற்றுகந்த
கோமகளுந் தாம்படைத்த கொற்றததாள்—நாம
முதிரா முலைகுறைத்தாண் முன்னரே வந்தாள்
[2] மதுரா பதியென்ன ‡மாது.

---

(139) விலைமடந்தையரது வீதியில் (142) மடந்தையர் (140) தண் ணுமை முழவு குழல (141) யாழ்ப்பாணி இவற்றுடனே (142) ஆடும் அரங்கினை இழந்து (146) இவ்வொரு மகள் (143) எந்நாட்டாள்கொல்? யார்மகள் கொல்? (146) என்ன (150) நகரியிலே (154) இயங்குதலையுஞ் செய்யும், மயங்குதலையுஞ் செய்யும், இவ்வகை (155) ஆரஞருற்ற வீர பத்தினிமுன் (156) ஊர எரியுண்டதறகுப் பொருளாய் (157) வந்து தோன்றினள், மதுராபதியென்னும தேவதையென்க

வெண்பா —தாம படைத்த கொற்றத்தாள் - இவர்கள் படைத்த கொற்றமெல்லாமுடையாள்; "நாவினுந்.. வாளினும்" என்ற மூவகை வென்றியும், மாமகள் - சீதேவி நாமமுலை - அச்சததைச் செய்யும் முலை.

(உஉ) அழற்படு காதை முற்றிற்று

அடி, 154. "சுழலலுஞ் சுழலு மோடலு மோடும்" (மணி. 3 111-2)

அடி, 155, மு. சிலப். பதி. 42

[1] இச்செய்யுளிலுள்ள முறைப்படியே, "திருவின் செல்வி யொரு தனிக் கொழுந, புலமை சான்ற கலிமகள் கணவ, வீரிய மடந்தை பேரிசைக் கிழவ" என ஞாணுமிருதம், 46-ஆம் செய்யுளிலும் அமைந் திருத்தல் காண்க.

[2] "மதுரா பதியென்னு மாபெருந் தெய்வம்" (மணி. 26 13)

(பி - ம்) † 'போன்றுள்' ‡ 'மான்'

இருபத்து மூன்றுவது

கட்டுரை காதை

சடையும் பிறையுந் தாழ்ந்த †சென்னிக்
குவளை யுண்கட் டவளவாண் முகத்தி
கடையெயி றரும்பிய பவளச் ‡செவ வாய்த்தி
இடைநிலா விரிந்த நித்தில $நகைததி
இடமருங் கிருண்ட நீல மாயினும்
வலமருங்கு பொன்னிறம் புரையு மேனியள்
இடக்கை பொலம்பூந் தாமரை யேந்தினும்
வலக்கை யஞ்சுடரக் §கொடுவாள் பிடித்தோள்
வலக்கால் புனைகழல் கட்டினு மிடக்கால்
தனிச்சிலம் பரற்றுந் தகைமையள் பனித்துறைக்
கொற்கைக் கொண்கன் குமரித் துறைவன்
பொற்கோட்டு வரம்பன் பொதியிற் பொருப்பன்
குலமுதற் கிழத்தி யாதலி னலமந்
தொருமுலை குறைத்த திருமா பத்தினி
அலமரு திருமுகத தாயிழை நங்கைதன்
||முன்னிலை யீயாள் பின்னிலைத் தோன்றிக்
கேட்டிசின் வாழி நங்கையென் குறையென
வாட்டிய திருமுகம் வலவயிற் கோட்டி
¶யாரை நீ யெனபின் வருவோ யென்னுடை
ஆரஞ ரெவ்வ மறிதி யோவென

---

1 சடையும பிறையும் - சடையிடத்தே பிறையும.

3 கடையெயிறு - பன்றிக் கொம்புபோலப் புறப்பட்ட எயிறு

8. கொடுவாள் - மழு

13 குலமுதலாதலின் - அடியே தொடங்கி இரட்சிதீதற்குரியளா தலின.

16. முனனிலையீயாள் - முன நில்லாள், அவளுக்கு முன்னிற்ற லைச் செய்யாள்

அடி, 1 "தருண வாணிலா வீசுசடில மோலிமாகாளி" (தகக 107)

அடி, 1-10 மதுராபதியின் கேசாதிபாத வருணனை, இவளுக்கு வீரத்தின் அறிகுறியான கூறு வலப்புறம என்று தோனறுகிறது

அடி, 9 கழல - வீரக்கழல், வீரர ஒரு காலில் மடடும கழலணிவர், **கம்ப** மாயாசனகப் 8. அடி, 11-2 பாண்டியன பெயர்கள்.

அடி, 20. அஞரெவ்வம் ஒரு பொருடபனமொழி.

(பி - ம்.) †'செநநிறக்' ‡'செவ்வாய, ிடைநிலா' $'நகைச்சி யிடை' §'நெடுவாள பிடிதீதன, ளிடக்காற் றனிச்சிலம் பரற்றினும் வலக்காற, புனைகழல கடடுந் தகைமையள்' ||'பின்னிலைஇ யாண முன் னிலைத் தோன்றி' ¶'யாரிவ ளென்முன் முநதா ளிவளெ, ஞரஞ ரெவவ மறியா தாளென'

ஆரஞ ரெவ்வ மறிந்தே †னணியிழாஅய்
மாபெருங் கூடன் மதுரா பதியென்பேன்
கட்டுரை யாட்டியேன் ‡யானின் கணவற்குப்
பட்ட கவற்சியேன் பைந்தொடி கேட்டி
பெருந்தகைப் பெண்ணொன்று கேளாயென் னெஞ்சம்
வருநதிப் புலம்புறு நோய்
தோழிநீ $யீதொன்று கேட்டியெங் கோமகற்
கூழ்வினை வந்தக் கடை
மாதரா யீதொன்று கேளுன் கணவற்குத்
தீதுற வந்த வினை, காதில்
மறைநா வோசை யல்ல தியாவது
மணிநா வோசை கேட்டது மிலனே
அடிதொழு திறைஞ்சா மன்ன ரல்லது
குடிபழி தூற்றுங் கோலனு மல்லன்
இன்னுங் கேடடி நன்னுதன் மடந்தையர்
மடங்கெழு நோக்கின் §மதமுகந் திறப்புண்
டிடங்கழி நெஞ்சத் திளமை யானை
கல்விப் ||பாகன் கையகப் படாஅ
தொல்கா ¶வுளளத் தோடு மாயினும்
ஒழுக்கொடு புணர்ந்தவிவ் விழுக்குடிப் பிறந்தோர்க்

---

23. கட்டுரையாடடியேன் - ஒரு வார்தீதை சொல்லுதலுடையேன்.

23 - 4 நின் கணவறகுப்படட கவறசியுடையேன், ஆயினும் நீ கேளென்க

27 - 8 ஊழ்வினை வநதபடி கேளாய், வநதக்கடை - ககரவொறறு விகாரம

(30) வினை (29) கேளென்க.

(31) மறை நா - அந்தணர் நா, ஓசை - ஓதினர் வாயில்வரும் நியம மான வார்தீதை

33. மன்னர் பழி தூற்றுவதல்லது

36. மடங்கெழு நோக்கின் - மகளிருடைய பார்வையாலே ..... சிலேடையாக்குக

அடி, 22 • மணி. 26 13 அடி, 31 . "ஓத லந்தணர் வேதம பாட" (மதுரைக் 656), "நான்மறைக் கேள்வி நவிலகுர லெடுபப, ஏம வினறுயி லெழுத லல்லதை, வாழிய வஞ்சியுங கோழியும போலக், கோழியி னெழாதெம பேரூர் துயிலே" (பரி. திரடடு, 7) அடி, 34 . புறநா. 72 • 12 அடி, 37 "இடங்கழி காமமொ டடஙகான்" (மணி 10 22, 18 119) அடி, 38 "கல்விப் பாகரிற காப்புவலை யோடடி" (மணி. 18 ,165)

(பி - ம்) † 'னணியிழாய், மாபெருங் கூடன் மதுரா பதியெனுங், கடடுரை யாடடியேன்' ‡ 'யானுன்' $ 'இஃதொன்று கேளாயெங' § 'மதிமுகந்' || 'பாகர் கையகபபடா' ¶ 'வுள்ளமொடோடுமாயினும்', 'உள்ள மோடுமாயினும்'

கிழுக்கந் தாரா திதுவுங் கேட்டி
உதவா வாழ்க்கைக் †கீரந்தை மனவி
புதவக் கதவம் ‡புடைத்தன னெருநாள்
அரைசு வேலி யல்ல தியாவதும்
புரைதீர வேலி யில்லென மொழிந்து
மன்றத திருத்திச் சென்றீ ரவவழி
இன்றவ் வேலி காவா தோவெனச்
செவிச்சூட் டாணியிற் புகையழல் $பொத்தி
நெஞ்சஞ் சுடுதலி னஞ்சி நடுக்குற்று
வசசிரத் தடக்கை யமரர் கோமான்
உச்சிப் பொன்முடி யொளிவளை யுடைத்தகை
§ குறைத்த செங்கோற் குறையாக் கொற்றத்
திறைக்குடிப் பிறந்தோர்க் கிழுக்க மின்மை
இன்னுங் || கேடடி நன்வா யாகுதல்
பெருஞ்சோறு பயந்த திருந்துவேற் றடக்கை

---

42. உதவா வாழ்க்கை - பிறர்க்கு உதவமாடடாத மிடிவாழ்க்கை.

43. புதவக்கதவம - கதவிலலா வீடு, குழை

46. மன்றம் - [1] அரணிலலாத வீடு. அவ்வழி - நீர் போகின்ற அக்காலத்து.

48. செவிச்சூட்டாணி - செவியைச் சுடுவதாகிய ஆணி, சுடுத லுள்ள இறைச்சி சூடடிறைச்சியாறைபோல

51 - 2 கை குறைதீதசெங்கோல - கை குறைதீதறகுக் காரண மாகிய செங்கோலையும. 54 நன்வாயாகுதல் - நன்ருகிய மெய்யாதல்.

55. பெறுஞ்சோறு பயந்த - பாண்டவர்கள் படைக்கும் துரியோ தனன் படைக்கும சேரன் சோறிடடதனை

அடி, 42 உதவா வாழக்கை அகநா. 125 2. அடி, 47. தக்க. 217. அடி, 48-9 கலித் 34 11 அடி, 42-52 பாண்டியன் கை குறைத்த செயதி (பதி 27-30, அடிக்குறிப்பு), "கையரிந்தான் மாறன் கதவிடித்த குறறத்தால, எயயுஞ் சிலைக்கை யிரங்கேசா", "கொறகை யான் மாறன் குலசே கரவழுதி, பொறகையா ஞனகதை போதாதோ" என்ருர் பிறரும, திருவால 57 4 அடி, 48 "சுடுநா ராசஞ் செவி செறித் தாங்கு" (பெருங் 1 47 238) அடி, 50 சிலப் 11. 26. அடி, 55 'பெருஞ்சோறு பயநத' என்றது சேரமான் பெருஞ்சோற் றுதியஞ சேரலாதன் பாரத யுத்தத்தில் எலலோர்க்கும உணவளித்த செய்தியை, "ஓரைவ ரீரைம பதினம ருடன்றெழுநத, போரிற பெருஞ் சோறு போற்றுது தானளித்த சேரன்" (29 ஊசல்வரி), "உதியஞ் சேரல், பெருஞசோறு கொடுத்த ஞானறை" (அகநா. 233 9-10), 'அலங்குஞைப் புரவி யைவரொடு சீனை இ, நிலநதலைக் கொண்ட பொலம் பூந் தும்பை, ாரைம பதின்மரும பொருதுகளத் தொழியப, பெரூஞ் சோறறு மிகுபதம வரையாது கொடுத்தோய" (புறநா 2 13-6)

[1] "அமபலந் தாழ்க்கூட்டு வார்" (பழ. 136)

(பி - ம்) † 'கீரத்தன் மனவி' ‡ 'புடைத்தஞைஞது' $ 'பொங்கி, நெஞ்சகஞ்' § 'குறைத்துச்' || 'கேட்டியோர்நன்'

திருநிலை பெற்ற பெருநா ளிருக்கை
அறனறி செங்கோன் மறநெறி நெடுவாள்
புறவுநிறை புக்கோன் கறவைமுறை செய்தோன்
பூம்புனற் பழனப் †புகார்நகர் வேந்தன்
தாங்கா விளையு ‡ணன்னு டதனுள்
வலவைப் பார்ப்பான் பராசர னென்போன்
குலவுவேற் சேரன் கொடைத்திறங் கேட்டு
வண்டமிழ் மறையோற்கு ¶வானுறை கொடுத்த
திண்டிற னெடுவேற் §சேரலற் காண்கெனக்
காடு நாடு மூரும் போகி
நீடுநிலை மலயம் பிற்படச் சென்றுங்
கொன்றுபுரி கொள்கை யிருபிறப் பாளர்
முத்தீச செல்வத்து நான்மறை முற்றி
ஐமபெரு வேள்வியுஞ் செயதொழி லோம்பும்
அறுதொழி லந்தணர் பெறுமுறை $ வகுக்க

---

56 பெருநாளிருக்கை - பெரிய நாளோலக்கத்து இருக்கை.
57. மறநெறி நெடுவாள் - மறத்திலே யொழுகின வாள்
66. நீடுநிலை மலயம - போகிய நிலையையுடைய மலயம்
67 ஒன்று - முத்தி இருபிறப்பு - உபநயனத்துக்கு முன்னும் பின்னும்.
68 முத்தீ - ஆகவனீயம, காருகபத்தியம், தக்கிணக்கினி.
70 அறுதொழிலாளர பெறுமுறை - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ாதல், ஏறறல் என இக்குணங்களையுடையார் பெறு முறையை. வகுக்க - அவனுக்குக் கூறுபடுத்த.

அடி, 56 பெருநாளிருக்கை - சேரனுடைய காலையோலக்கம, "தண் கட ணை ணெண்பூங் கோதை, பெருநா ளிருக்கை" (மதுரைக். 524-5) என அந்நாளோலக்கம பாராடடப் பெற்றிருத்தல் காண்க.

அடி, 63. மறையோனென்றது பாலைக்கௌதமனரை, இவருக்குச் சுவர்க்கங்கொடுத்த சேரன் இமயவரமபன் தமபி பல்யானைச் செல்கெழு குடடுவனென்பவன், "நான்மறை யாளன செய்யுட் கொண்டு, மேனிலை யுலகம விடுத்தோன்" (சிலப் 28 137-8), 'பல்யானைச் செல்கெழு குட்டுவனை பாலைக்கௌதமனர் பாடினர் பத்துப்பாடடு ... . பாடிப் பெறற பரிசில், நீர் வேண்டியது கொண்மினென யானும் என் பார்ப் பனியும் சுவர்க்கம் புகல் வேண்டுமெனப் பார்ப்பாரிற பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பித்துப் பத்தாம பெருவேள்வியிற் பார்ப்பானையும பார்ப்பனியையும காணுராயினர்' (பதிற். 3-ஆம் பத்து, இறுதி வாக்கியம்), "துறக்க மெய்திய தொய்யா நல்லிசை, முதியர்ப் பேணிய வுதியஞ் சேரல்" (அகநா. 233 : 7-8); பழமொழி, 316; தொல். புறத். 25, ந.

அடி, 67 புறநா. 367 : 12-3 அடி, 68 . முருகு. 181-2.

(பி - ம்) † 'புகாஅர் வேந்தன்' ‡ 'நன்னட்டதனுள், பலவைப் பாசான்' ¶ 'வானகங் கொடுத்த' § 'சேரற்காண்கென' $ 'யெய்தி'

நாவலங் கொண்டு நண்ணு ரோட்டிப்
பார்ப்பன வாகை சூடி யேற்புற
நன்கலங் கொண்டு தன்பதிப் பெயர்வோன்
செங்கோற் †றென்னன் றிருந்துதொழின் மறையவர்
தங்கா லென்ப தூரே யவ்வூர்ப்
பாசிலை பொதுளிய போதிமன் றத்துத்
தண்டே குண்டிகை ‡வெண்குடை காட்டம்
பண்டச சிறுபொதி பாதக் காப்பொடு
கலைந்தன னிருப்போன் காவல் வெண்குடை
விலைந்துமுதிர் கொற்றதது விறலோன் வாழி
கடற்கடம் பெறிந்த காவலன் வாழி
விடர்ச்சிலை §பொறித்த வேந்தன வாழி
பூந்தண் பொருநைப் பொறையன் வாழி
மாந்தரஞ் சேரன் மன்னவன் வாழ்கெனக்
குழலுங குடுமியு மழலைச் செவவாய்த்
தளர்நடை யாயத்துத் தமர்முத னீங்கி
விளையாடு சிறுஅ ரெல்லாஞ் சூழ்தரக்

---

71. நா வலங்கொண்டு - தருக்கஞ்சொல்லி நாவெறறியையுடை யோனுய, நா வலம் - நாவெறறியென்க.

(70) பெறுமுறைவகுத்த (73) நன்கலங்கொணடென்க

(71) நாவலங்கொண்டு ஓட்டிச் (72) சூடிக் (73) கொண்டு தன்பதிப் பெயர்வோன், பெயர்வோன் பெயர்தர.

74 திருந்துதொழில் மறையவர் - பஞ்சக்கிராமிகள்

75. தங்கால் - திருத்தங்காலூர்

76. அரசுநிறகுமன்று 77 காட்டம் - சமித்து

(79) குடையையும (80) கொறறதீதையுமுடைய விறலோன்

84. வாழ்கென - வாழ்கவென்று சொலல

87 சிறுர் சூழ்தர - தன்னைச்சிறுரெல்லாம் சூழ்தர.

அடி, 72. பாரப்பனவாகையினியல்பு : "கேள்வியாற் சிறப்பெய்தி யானை, வேள்வியான் விறன்மிகுத்தன்று", "ஓதங் கரைதவழ்நீர் வேலி யுலகினுள், வேதங் கரைகண்டான் வீறறிருக்கும்-ஏதம், சுடுசுடர் தானுகிச் சொல்லவே வீழ்ந்த, விடுசுடர் வேள்வி யகத்து" (பு. வெ. 163)

அடி, 81 - 2. சிலப். 25 . 187-8, 28 135 - 6

(பி - ம்.) † 'றென்னவன் றிருத்தொழில்' ‡ 'யொண்குடை' § 'பொறித்த விறலோன் வாழி'

†குண்டப் பார்ப்பீ ரென்னே டோதியென்
பண்டச் சிறுபொதி கொண்டு ‡போ மின்னெனச்
சீர்த்தகு சிறப்பின் வார்த்திகன் புதல்வன்
ஆலமர் செல்வன் §பெயர்கொண்டு வளர்ந்தோன்
பானூறு செவவாய்ப் படியோர் முன்னர்த்
தளர்நா வாயினு மறைவிளி வழாஅ
துளமலி யுவகையோ டொப்ப வோதத்
$தக்கிணன் றன்னை மிக்கோன் வியந்து
முத்தப் பூணூ லத்தகு புனைகலம்
கடகந் தோட்டொடு கையுறை யீத்துத்
தன்பதிப் பெயர்ந்தன னகை நன்கலன்
புனைபவும் பூண்பவும் பொருஅ ராகி
வார்த்திகன் றன்னைக் காத்தன ரோம்பிக்
கோத்தொழி லினையவர் கோமுறை ||யன்றிப்
படுபொருள் வெளவிய பார்ப்பா னிவனென
விடுசிறைக் ¶கோட்டத் திட்டன ராக
வார்த்திகன் மனைவி கார்த்திகை யென்போள்
அலந்தன ளேங்கி யழுதன ணிலத்திற்
புலந்தனள் புரண்டனள் பொங்கின ளதுகண்டு
மையறு சிறப்பி னினையை கோயிற்

---

88 குண்டப்பார்ப்பீர் - பிழுக்கை மாணிகாள, சிறுமாணிகாள், சிறு பிள்ளைகாளென்னினுமாம்

91. ஆலமர் செல்வன் பெயர் - தக்கிணமூர்த்தி.

92. பாலநாறு செவ்வாயையுடைய பிரமசாரிகள், [1] படிமம், படி யென்றுயிறறு. படியோர் - தன்னை இளமையாலொப்பாருமாம்; படி - வேடமுமாம.

99 புனைவனவும் பூண்பனவுமாக வேறுபடுதலின் புனைபவும் பூண்பவும் என்றார்.

101. கோமுறையன்றி - இராசநீதி யன்றி.

102. படுபொருள் - புதையல, களவுப்பொருளென்றுமாம்.

107. ஐயைகோயில் - மதுரையில் துர்க்கை கோயில்.

---

[1] சிலப். 30 179, உரை.

(பி - ம்.) † 'குண்டைப்பார்ப்பீர்' ‡ 'போமினென' § 'பேர்' $ 'தெக்கணன்றன்னை மிக்கென', 'தக்கன்' || 'யன்றியும்' ¶ 'கோட்ட மிட்டன'

† செய்வினைக் கதவந் திறவா தாகலின்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவம்
மறவேன் மன்னவன் கேட்டனன் மயங்கிக்
கொடுங்‡கோ லுண்டுகொல் கொற்றவைக் குற்ற
இடும்பை யாவது மறிந்தீ மின்னென
ஏவ லிளையவர் காவலற் றொழுது
வார்த்திகற் கொணர்ந்த §வாய்மொழி யுரைப்ப
நீர்த்தன் றிதுவென நெடுமொழி கூறி
அறியா மாக்களின் முறைநிலை திரிந்தவென்
இறைமுறை பிழைத்தது பொறுத்தனுங் கடனெனத்
தடம்புனற் கழனித் தங்கா றன்னுடன்
மடங்கா விளையுள் வயலூர் நல்கிக்
கார்த்திகை கணவன் வார்த்திகன் முன்னர்
இருநில மடந்தைக்குத் திருமார்பு நல்கியவள்
தணியா வேட்கையுஞ் சிறிதுதணித் தனனே
நிலைகெழு கூட னீணெடு மறுகின்
மலைபுரை மாட மெங்கணுங் கேட்பக்
கலையமர் செல்வி கதவந் திறந்தது
$சிறைப்படு கோட்டஞ் சீமின் யாவதும்
||கறைப்படு மாக்கள் கறைவீடு செய்ம்மின்
¶இடுபொரு ளாயினும் படுபொரு ளாயினும்

115 நெடுமொழிகூறி - புகழந்து சொலலி

119 வயலூர் ஓர் ஊரின் பெயர் [விட்டு.

118-9 இவன் பிறநத தங்காலுடன் வயலூரென்பதோர் ஊரும்

121 திருமாரபு நலகுகை - தண்டனிடுகை. அவளென்றது நிலமடந்தையை அவனைப் பணிநதென்பார், இருநிலமடந்தைக்குதீ திருமார்பு நல்கி யென்றார்.

122 மார்பினைப் பெருமையால தணியாத வேட்கை.

127. கறை - கடமை

128. இடுபொருள் - பிறர் வரவிட்ட பொருள் படுபொருள் - புதையல், அன்றிதீ தன் தேட்டத்தால் மிக்க பொருளுமாம, "படுபயன் வெஃகி" (குறள் 172) என்றாறபோல

அடி, 115 நீரதீது - நீரமையது. அடி, 125 "கலைகாமுறுவி" (பெருங் 1. 52 24), "கலையுகப்பாள" (தக்க 75) அடி, 126 மணி. 19 161.

(பி-ம்) †'செய்வுறு' ‡கோல்கண்டுகொல் . உற்றதிடுமபை யாவது மறிமி னின்றென' §'வாயமொழி யுரைப்ப, வறியா மக்களின்' $'சிறைபடு' ||'கறைபடு' ¶'படுபொரு ளாயினு மிடுபொரு'

உற்றவர்க் குறுதி பெற்றவர்க் காமென
யானை யெருத்தத் தணிமுர சிரீஇக்
கோன்முறை யறைந்த கொற்ற வேந்தன்
தான்முறை பிழைத்த † தகுதியுங் கேணீ
ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்
தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண
உரைசான் மதுரையோ டுரைசுகே டுறுமெனும்
உரையு ‡ முண்டே நிரைதொடி யோயே
கடிபொழி லுடுத்த கலிங்கநன் னுட்டு
வடிவேற் றடக்கை வசுவுங் குமரனும்
தீம்புனற் பழனச் சிங்க புரத்தினும்
காம்பெழு கானக் கபில புரத்தினும்
¶ அரைசாள் செல்வத்து நிரைதார் வேந்தர்
வீயாத் திருவின் விழுக்குடிப் பிறந்த
தாய வேந்தர் தம்முட் பகையுற
இருமுக் காவதத் திடைநிலத் தியாங்கணும்
செருவல் வென்றியிற் செல்வோ ரின்மையின்
அரும்பொருள் வேட்கையிற் பெருங்கலன் சுமந்து
கரந்துறை மாக்களிற் காதலி § தன்னெடு

---

129 உறறவர்க்கு - எடுத்தார்க்கு பெறறவர்க்கு - கொண்டவர்களுக்கு, அவவிருவர்க்கும் உறுதி ஆமென்க

ஆதலால, தமக்காகா, உறறவர்க்குப் பெற்றவர்க்காமென்று அறைவித்தான்

131. கோன்முறையறைந்த - இராசநீதியாகச் சொன்ன

133. பேரிருடபக்கம - கிருடடின பக்கம்

134 அழல்சேர்குட்டம் - [கார்த்திகைபரணி]

137 உரை - சோதிட வார்த்தை, உரையு முண்டென்றது எதிரது தழீஇய எச்சவும்மை

139-44. வசுவும் குமரனுமாகிய வெந்தரிருவர் தம்மில் தாய வேந்தர்

146. இருவரது மலைவு வேல்வென்றி நிகழுகை காரணமாகச் செல்வோரின்மையால்

(148) கரந்துறைமாக்களைப்போல (147) ஆபரணங்களைச் சுமந்து போந்து, போநதென்று ஒரு சொல வருவிக்க.

அடி, 134 "அழறகுட்டத்து" (புறநா 229 1)

அடி, 133 நன். மயிலை 175, மேற்

(பி - ம்) † 'தகுதிகேட்டிநீ' ‡ 'முண்டுநிரை' ¶ 'உரைசால் செல்வத்து நிரைதார் வேந்தன், வீயாச் சிறப்பின்' § 'தன்னுடன், சிங்கா'

சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்தினேர்
† அங்கா டிப்பட் டருங்கலன் பகரும்
சங்கம னென்னும் வாணிகன் றன்னை
முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவன்
‡ வெந்திறல் வேந்தற்குக் கோத்தொழில் செய்வோன்
பரத னென்னும் பெயரனக் கோவலன்
விரத நீங்கிய வெறுப்பின ஞதலின்
ஒற்ற னிவனெனப் பற்றினன் கொண்டு
வெறுறிவேன் மன்னற்குக் காட்டிக் §கொல்வுழிக்
கொலைக்களப் பட்ட சங்கமன் மனைவி
நிலைக்களங் காணு ணீலி யென்போள்
அரசர முறையோ பரதர் முறையோ
ஊரீர் முறையோ சேரியீர் முறையோவென
மன்றினு மறுகினுஞ் சென்றனள் பூசலிட்
டெழுநா ளிரட்டி யெல்லை சென்றபின்
தொழுநா ளிதுவெனத் தோன்ற வாழ்த்தி
மலைததலை $யேறி யோர மால்விசும் பேணியில்
|| கொலைத்தலை மகனைக் கூடுபு நின்ரேள்
எம்முறு துயரஞ் செய்தோ ரியாவதும்
தமமுறு துயரமிற் ¶ருகுக வென்றே

149 - 50 சிங்கபுரத்தின் ஓர் அங்காடியிடத்தாஞகியிருந்து

152. பைநதொடி முன்னிலை

154 பரதனென்றது கோவலனது முறபெயர்

155. விரதநீங்கிய - கொலலாவிரதத்தால நீங்கிய வெறுப்பின ஞதலின் - வெறுக்கப்படுபவனுதலால

165 விசுமபேணியில - விசுமபெல்லையில், '' நளியிரு முநநீ ரேணி யாக '' (புறநா 35 1) என்ருர்

166 தலைமகனைக் கூடுவதாக நின்றவள்

167 செயதோரென்னுமெழுவாய படுவார்களாகவெனனும வியங் கோள் வருவித்தலோடு முடிநதது யாவதும - எப்படியானும

168 தம்முறு துயரமிறருக - தாங்களும் இப்படிப் படுவார் களாக, நான படடதே படுகவென்றது பழியிட்ட படியைக்கொண்டு

(165) ஏறி (169) விழுவோளெனக

அடி, 163 - 4, மு 193 - 4

(பி - ம்.) † 'அஙகாடிப்படவிருந்துகலன்' ‡ 'வெந்தொழில' § 'கொல் வுழீஇக்' $ 'யேறிமால்' || 'குலத்தலை' ¶ 'ருகுகவென'

விழுவோ ளிட்ட வழுவில் சாபம்
பட்டனி ராதலிற் கட்டுரை கேணீ
உம்மை வினைவந் துருத்த காலைச்
செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது
†வாரொலி கூந்தனின் மணமகன் றன்னை
ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லதை
ஈனோர் ‡வடிவிற் காண்ட லில்லென
மதுரைமா தெய்வ மாபத் தினிக்கு
விதிமுறை சொல்லி யழல்வீடு கொண்டபின்
கருத்துறு கணவர் கண்டபி னல்ல
திருத்தலு ¶மில்லை னிற்றலு மிலனெனக்
கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்துக்

---

171 - 2 உம்மைவினை. யுதவாது - உமையிற் செவ்விய மனமில்லாதோரக்கு அக்காலத்துச் செய்தவினை வந்து பலிக்குங்காலத்து முன்பு செயத நலவினை யாதும உதவாது, இத்தீவினைவந்து கொடுப்பதறகு முன்னே வந்துதவுதல் பின்புதவுதல் செய்யுமித்தனை, அந்நல்வினையும உதவாமற போகாது, பாவமானதும தானிலே அனுபவிக்க வேண்டும

176 ானோர் - ாங்குள்ளோர் 176 - 8 இல்லென்று மதுரைமா தெய்வம் சொல்ல

181. பொறறொடி - பொலிவினையுடைய சங்க வளை, துர்க்கை கோயில் வாயிலிலே தனகைவளையைத் தகர்த்து

அடி, 138 - 9 • இசசாபவரலாறறை இப்படியே **மணிமேகலையில்** வஞ்சிமாநகர்புக்க காதையிலும மணிமேகலக்குக் கண்ணகி கூறியதாகக் கூறினர், அது வருமாறு —"வேடகை துரப்பக் கோடமம புகுந்து, வணங்கி நின்று குணம்பல வேத்தி, அறபுக்கட னில்லாது நற்றவம் படராது, கறபுக்கடன் பூண்டு நுங்கடன முடிதீத, கருளல் வேண்டு மென் றழுதுமுன னிறப, ஒருபெருந பத்தினிக் கடவளாங் கூரைப்போள், எமமிறைக் குறற விடுககண் பொறாது, வெமமையின் மதுரை வெவ்வழற படுநாள், மதுரா பதியெனு மாபெருந் தெயவம, இதுநீர் முன்செய் வினையின் பயனுற, காசில டுமபொழிற கலிங்கநன் னாடடித், தாய மன்னவர் வசுவுங் குமரனும, சிங்க புரமுரு செழுநீர்க் கபிலையும், அங்காள் கின்ரு ரடறசெரு வுறுநாள், மூவிரு காவத முன்னுந ரின்றி, யாவரும் வழங்கா விடத்திற பொருள்வேட்டுப், பலகலங கொண்டு பலரறி யாமல், எல்வளை யாளோ டரிபுர மெய்திப், பண்டக் கலமபகர் சங்கமன் றன்னைக், கண்டனர் கூறத் தையனின் கணவன், பார்த்திபன் றெழில்செயும் பாத னென்னும், தீதிதொழி லாளன் றெற்றெனப் பற்றி, ஒற்ற னிவனென வுரைத்தமன் னறகுக், குறறமி லோனைக் கொலபுரிந திட்டனன், ஆங்கவன் மனைவி யழுதன ளரறறி, ஏங்கிமெய பெயர்ப்போ ளிறுவரை யேறி, இட்ட சாபங் கடடிய தாகும், உம்மை வினைவந் துருத்தலொழி யாதெனும், மெயம்மைக் கிளவி விளமபிய பினனும, சீறறங் கொண்டு செழுநகர் சிதைத்தேன்" (5 34) அடி, 173 - 6 மு • **சிலப் பதிகம**, 50 - 53

(பி - ம்.) †'வாருறு கூந்தன்மணமகன்' ‡'வடிவினிற்' ¶'மிலனே யிறத்தலும்'

கீழ்த்திசை வாயிற் கணவனெடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் †பெயர்கென
இரவும் பகலு மயங்கினள கையற்
185 றுரவுநீர் வையை யொருகரைக் கொண்டாங்
‡கவல வென்னு ளவலித் திழிதலின்
¶மிசைய வென்ணெண் மிசைவைத் தேறலின்
கடல்வயிறு கிழித்து மலைநெஞ்சு §பிளந்தாங்
கவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்
190 நெடுவேள் குன்ற மடிவைத் தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்
தீத்தொழி லாட்டியேன் யானென் றேங்கி
எழுநா ளிரட்டி யெல்லை சென்றபின்
தொழுநா ளிதுவெனத் ||தோன்ற வாழ்த்திப்
195 பீடுகெழு நங்கை பெரும்பெய ரேததி
வாடா மாமலர் மாரி பெய்தாங்
கமரர்க் கரசன் றமர்வந் $தேத்தக்

---

183 தமியேனுய்ப் பெயராநின்றேனெனைச் சொல்லி
184 இரவுமபகலுமயங்கினள - இரவும பகலும அறியாது மயங்கி.
186 பதறி இழிதலாற குழியெனறு பாரக்கிலள்
190 நெடுவேளகுனறு - திருச்செங்கோடு அடிவைத்தேறி யென்ருர, அதறகுமுனபு வருத்தத்தாற் கால் நிலத்துப் பாவாமையால்
191 வேஙகையின் கீழே நினறெனக
192 குறத்தியரகேடகத் தீத்தொழிலாட்டியேன் யானென்று சொல்லி, ஏஙகியென்றது - சொல்லியென்றபடி.
193 எழுநாளிரடடி - வேங்கை நீழலினின்ற நாளளவு எல்லை யென்றது பகலை அவணின்ற நாளளவு, அனறு பதிருலாநாளாயிற்று பதினலாநாள பகறபொழுது சென்றபின் எனக, பதிகத்திலும், "ாரேழ் நாளகத்தெலலை" (51) என்ருர
194 - 7 அமரர்க்கரசன் தமர்வந்து, கண்ணகி தன்கணவனைத் தோனறவாழத்தித் தொழுநாளிதுவெனகருதி இவளபெயரைச் சொல்லி மலரைத்தூவி ஏத்தினுர, இவள் பெயர மந்திரோத்தியாதலால், இன்னும், கண்ணகி கோவலனைத் தோனறவாழத்தி வானவூரதியேறினு ளென்றுமாம்.
194 - 9. பெருமபெயரேத்தி மலர்மாரிபெய்து தமர்வந்தேத்த வான வூர்தி ஏறினுளென்க.

அடி, 188 - 9 குறுந் கடவுள் 4 - 5. அடி, 190 நெடுவேள் பெரும்பாண். 75.

அடி, 193 - 4. மு 163 - 4. அடி, 197 சிலப். பதி 6.

(பி - ம்) † 'பெயர்வனென்று' ‡ 'கவலென்னுளலைத்திழிதலின்' ¶ 'மிசையாமென்ணெண்' § 'பிளந்தே யவுணரை' ‖ 'தொழுது வாழ்த்திப்' $ 'தேத்திக்'

கோநகர் பிழைத்த கோவலன் றன்னெடு
வான வூர்தி †யேறினண் மாதோ
கானமர் புரிகுழற் கண்ணகி தானென்

வெண்பா

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெயவந் தொழுந்தகைமை ‡திண்ணிதால்—¶தெய்வமாய்
மண்ணக மாதரக் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து

கட்டுரை

§முடிகெழு வேந்தர் மூவ ருளளும்
படைவிளங்கு தடக்கைப் பாண்டியர குலத்தோர்
அறனு மறனு மாற்றலு மவர்தம்
பழவிறன மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி ||சிறப்பும் விண்ணவர் வரவும்
ஒடியா வின்பத் தவருடை நாட்டுக்
குடியுங் கூழின் பெருக்கமு மவர்தம்
வையைப் பேரியாறு வளஞ்சுரந் தூட்டலும்
பொயயா வானம் புதுப்பெயல் பொழிதலும்
ஆரபடி சாத்துவதி யென்றிரு விருததியும
நேரத் தோன்றும வரியுங் குரவையும்
$என்றிவை யனைததும் பிறபொருள வைப்போ
டொன்றித் தோன்றுந ††தனிககோ ணிலைமையும்
வடவாரியர் ‡‡படைகடந்து
தென்றமிழ்நா டொருங்குகாணப்
புரைதீர கற்பிற் றேவி தன்னுடன்
அரைசு கட்டிலிற் §§றுஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியனே டொரு பரிசா
நோகஙிக கிடந்த
மதுரைக் காண்ட முற்றிறறு

இரண்டாவது, மதுரைக்காண்டம் முற்றிற்று

வெண்பா —மண்ணகமாதர - உலகதீதுக் கற்புடைமகளிர் விண்ணக மாதர்க்கு விருந்தாளுள, ஆதலால தெயவந்தொழுகை திண்ணி தென்க

வெணபா குறள, 55 அடி, 1. சிலப் பக். 265, கடடுரை, 1; புறஉ 35 4 அடி, 4 "பழவிறன் மூதூர்" (மணி 7 . 63)

(பி - ம்) †'யேறினள், கானமர' ‡'திண்ணமால்' ¶'தெய்வமா, மண்' §'முடியுடை' ||'சிறபபின் வானவர் வரவும, வையைப்பேரி யாற்று' $'என்றிவ்வனைததும' ††'தன்கோ' ‡‡'படைதந்து' §§'றுஞ்சிய நெடுஞ் செழியனே டாருபரிசு'

மூன்றுவது

வஞ்சிக்காண்டம்

உசா—குன்றக்குரவை

உரைப்பாட்டுமடை

(1) குருவியோப்பியுங் கிளிகடிந்துங் குன்றத்துச்சென்று †வைகி
அருவியாடியுஞ் சுனைகுடைந்து ‡மலவுற்று வருவேமுன்
மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க
முலையிழந்து ¶வந்துநின்றீர் யாவிரோவென முனியாதே
5 மணமதுரையோ டரசு ²கேடுற வல்வினைவந் துருத்தகாலைக்
கணவனையங் கிழந்துபோந்த கடுவினையேன் யானென்றுள்
என்றலு மிறைஞ்சியஞ்சி யிணைவளைக்கை யெதிர்கூப்பி
நின்ற §வெல்லையுள் வானவரு நெடுமாரி மலர்பொழிந்து
குன்றவருங் கண்டு ||நிற்பக் கொழுநனெடு கொண்டு
[போயினர்
10 இவள்போலு $நங்குலக்கோ ரிருந்தெய்வ மில்லையாதலின்

---

1. குனறத்துச சென்று தங்கிக் குருவியோபபியுமென்க.

3 வள்ளி - வல்லி, தங்கள் வள்ளியென்கின்ற பெண்ணுமாம், என்றது குமரவேள் தேவியை

4 நின்றீர், யாவிர், இவை உயர்த்துக் கூறினர் முனியாதே - அவர்கள் கேடடதறகு வெருதே

5. [1] மணமதுரை - கலியாணமதுரை

9. போயினர் முறறு.

முன் தேவருடன் போனபடியை விரியக்கூறினது இது

குன்றக்குரவை நற். 276, அகநா 232, முருகு 196-7, மதுரைக் 615, மலைபடு 320-22, திருச்சிற் 127

உரைப்பாடுமடை - உரையாகிய பாடடை இடையேயுடையது, சிலப் பக் 437

அடி, 2 அலவுற்று - வருத்தமுறறு அடி, 5. "ஒட்டே னரசோ டொழிபபேன் மதுரையும்" (சிலப். 21 37)

[1] மணமதுரை - நறுமணத்தையுடைய மதுரையுமாம் (சிலப் 13. 115 - 33), "நன்றவிழ் பன்மலர் நாற நறைபனிப்பத், தென்ற லசைவரூஉஞ் செமமறறே யம்மநின், குன்றத்தாற கூடல் வரவு" (பரி. 8 · 26 - 8)

(பி - ம்) †'வைகியுமருவி' ‡'மலவுறறும் வருவேம்' ¶'வந்துநின்ற நீரியாவிரோ' §'வெலலையில்' ||'நிறகவே கொழுநனெடுங்கொண்டு' $'நங்குலத்துக்கோரிருந்'

†சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே
நிறங்கிள ரருவிப் பறம்பின ருழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே
தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்
குறிஞ்சி பாடுமி னறும்புகை யெடுமின்
பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை ‡நிறுமின்
பரவலும் பரவுமின் ¶விரவுமலர் தூவுமின்
ஒருமுலை யிழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே

கொளுச்சொல்

(2) ஆங்கொன்று காணு மணியிழா யீங்கிதுகாண்
அஞ்சனப் பூழி யரிதாரத் தின்னிடியற்
சிந்துரச் சுண்ணஞ் செறியத்தூய்த் தேங்கமழ்ந்
திந்திர வில்லி னெழில்கொண் டிழுமென்று
வந்தீங் கிழியு மலையருவி யாடுதுமே

---

13. பறம்பின் தாழ்வரை - நெடுவேளகுன்றமாகிய பறமபின் தாழ் வரையில்

14 - 5 வேங்கைக்கீழ ஒரு தெய்வமாகப் பண்ணிக்கொள்ளுமின்.

16 தொடுத்தல் - வாசித்தல

17 கோடு - கடமாக்கொமபு. கொடுமணி - ஓசைகடிதான மணி.

19 காப்பு - சுற்றுமதில கடை - வாயில் சுறறுமதிலிட்டு வாச லும் செய்மமின [னென்று முன்னே கூட்டுக.

(22) வளம துஞ்சாது சுரக்கவென்று (21) நங்கைக்குச் (19) செய்மமி கொளுச்சொலென்றது, மேறசொலலுகினற மூன்று பாடடின் சொற் களைப் போதந இப்பாடடின் கருததென்றுமாம

(2) ஆங்கொன்று காணுயென்றது, தூரநின்று கிட்டச்சென்று, ஈங்கிதுவென்ருள. இதுவெனருள, கண்ணகி அங்கே வந்தவளவிலே மழை பெய்தலால் விழுகிற அருவியை அவ்வருவி தூங்கக்கண்டு தங்களை யணுக வந்தபடியே 3 செறிய - செறியாநிறக

5. ஆடுதுமே ஏகாரம் தேறறம அவன் கொடுமை கிடக்கச்செய்தேயும்

அடி, 16. "தொண்டகச சிறுபறை" (முருகு 197) [246

அடி, 17 "கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி" (முருகு.

அடி, 18 "நறுமபுகை யெடுத்துக் குறிஞசி பாடி" (முருகு. 239); "நறையி னறும்புகை நனியமர்ந தோயே" (பரி 14 20)

அடி, 19 பூப்பலி "மலரபபலிதூஉய", "பூப்பலி செய்து காப்புக் கடை நிறுத்தி" (28 . 5, 231), "பூப்பலிவிடடகடவுளை" (கலித். 93 : 24)

அடி, 20 "பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்" (குறிஞ்சிப். 5)

(2) 2 "அஞ்சனத் திரளு மணியரி தாரமும்" (25 40)

அடி, 4-5 "இழுமென விழிதரும் பறைக்குர லருவி" (பதிற். 70 :

(பி - ம்.) †'சிறுகுடீரே' ‡'நிறுத்துமின்' ¶'விரைமலர்' [24.

(3) ஆடுதுமே தோழி யாடுதுமே தோழி
அஞ்சலோம் பென்று நலனுண்டு †நல்காதான்
மஞ்சுசூழ் சோலை மலையருவி யாடுதுமே

(சிறைப்புறம்)

(4) எற்றென்றுங் காணேம புலத்த லவர்மலைக்
கறறீண்டி வந்த புதுப்புனல்
கற்றீண்டி வந்த புதுப்புனன் மற்றையார்
உறறுடி னேந்தோழி நெஞ்சன்றே , (க)
(5) என்னென்றுங் காணேம் புலதத லவர்மலைப்
பொன்னுடி வந்த புதுப்புனல
பொன்னுடி வந்த புதுப்புனன் மற்றையார்
முன்னுடி னேந்தோழி நெஞ்சன்றே , (உ)
(6) யாதொன்றுங் காணேம புலத்த லவர்மலைப்
போதாடி வந்த புதுப்புனல்
போதாடி வநத புதுப்புனன் மற்றையார்
மீதாடி னேநதோழி நெஞ்சன்றே (ரு)

பாட்டுமடை

(7) உரையினி மாதரா யுணகண் சிவப்பப்
புரைதீர புனல்குடைந் ‡தாடினே மாயின்
உரவுநீர் மாகொன்ற $வேலேந்தி யேத்திக்
குரவை தொடுத்தொனறு §பாடுகம்வா தோழி

அவனுடைய மலையருவியை ஆடவேண்டிறறேயென்றுள. (3) அஞ்ச லோமபு - அஞ்சுதலைப பரிகரி.

(4) .. அவர் செயத கொடுமையால நாம் அவர் மலையின் வந்த புதுப்புனலோடு புலத்தறகுச் சிறிதும காரணமிலலை மறறையா ரெனறது அருவியாடுவாருள தனனையொழிய முன அந்நீரிற குளித்த மகளிரை தனக்கு முறபட வாடினவரொடு நெஞ்சுதான் வேறுபடடுப் புலதீதறகுக் காரணம என்னென்றுள் அன்றேயென்றது இசை நிறைக் கிளவி

(5) என்னென்றும் - எவனென்றும் விகாரம

'எறறென்றும' (4) என்பது முதலாக மூன்றும் **சிறைப்புறம்; தோழிக்குத் தலைமகள் சொல்லியது, முன்னிலைபபுறமொழி யுமாம**

(7) உரையினி - இனிச் சொல்.

---

(3) "பெண்டிர நலமவௌவித் தண்சாரற குதுண்ணும, வண்டிற றுறப்பான் மலை" (**கலித்.** 40 24 - 5)

(7) "உரவுநீர் மாகொன்ற, வென்வேலான் குன்றின்மேல் விளையாட் டும விருமபார் கொல்" (**கலித்.** 27 15 - 6)

(பி - ம்) †'நல்காதார்' ‡'தாடின' $'வேலேத்தி' §'பாடுதும் யாம், பாட்டு, மடை சீர்கெழு'

தெய்வம் பராஅயது

(8) சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமு நீங்கா விறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே, (க)

(9) அணிமுகங்க ளோராறு மீராறு கையும்
†இணையின்றித் தானுடையா னேந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே, (உ)

(10) ‡சரவணப்பூம் பள்ளியறைத தாய்மா ரறுவர்
திருமுலைப்பா லுண்டான் றிருக்கைவே லன்றே
$வருதிகிரி கோலவுணன் மாரபம் பிளந்து
குருகு பெயர்க்குன்றங் கொன்ற நெடுவேலே (ங)

(8) செந்தில் - திருச்செந்தில் செங்கோடு - திருச்செங்கோடு வெண்குன்றம - சுவாமிமலை ஏரகம - .சூர் மா - சூரனுகிய மா சுடரிலைய, அ இடைச்சொல, சுடரிலை வேல், இறைவன் வேலென்க.

(9) இவ்வடிவு பிறர்க்கு இல்லாமையாற பிறரொப்பிலலாதான் பிணி முகம் - மயில். (10) சரவணப் பூமபள்ளியறை - சரவணப பொயகை யில் தாமரையாகிய பளளியறை அறுவா - கார்த்திகையார். திகிரி கோலவுணன் - மலையைச சூழவரும அவுணன் பிளநது - பிளக்க. குருகுபெயர்க்குன்றம - கிரவுஞ்ச பருப்பதம

(8) "அலைவாயச சேறலு நிலைஇய பண்பு" (முருகு 125), "முருகன் றீமபுன லலைவாய" ("பையுண்மாலை" தொல் களவு 23, ந. மேற), "திருமணி விளக்கி னலைவாயச், செருமிகு சேஎய" (அகநா 266), "வெண்டலைப் புணரி யலைக்குஞ செநதில, நெடுவே ணிலைஇய காமர் வியன்றுறை" (புறநா. 55 18-9), "நஞுசெநதின் மேய வள்ளி மணாளறகுத் தாதை கண்டாய்" (தே மறைக்காடு) 3-4. "பதிதிரா பதிமிசைப பனிக்கடற பிறநத, வெஞசூர தடிநத வஞசுவரு சிறறதீது, முருகவேள" (பெருங் 1. 42 229-31)

ஏரகம, "ஏரகத் துறைதலு முரியன்" (முருகு 189) என்ற விடத்து ஏரகம் மலைநாடடகத்ததொரு திருபபதியென்ருர், நச்சினுர்க் கினியர்

"பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச், சூர்முத றடிந்த சுடரிலை நெடுவேல" (முருகு 45-6), "பாயிரும பனிக்கடல் பாரதுகள் படப் புக்கு" (பரி. 5 . 1), "பாரமுதிர பனிக்கடல்" (பாகவத. 3 கருதீத மன் 50)

(9) பீடு - பெருமை மணி விசும்பு - நீலமணி போன்றவானம் கோன் - இந்திரன். பிணிமுகம "பிணிமுக மஞ்ஞை செருமுகத் தேந்திய, மூவிரு திருமுகத் தொருவே லவறகு" (கல். 7) பிணிமுகம் - முருகக் கடவுள் ஊரும யானையுமாம, "சேயுயர் பிணிமுக மூர்ந்து (பரி 5 2), "பிணிமுக வூர்தி யொன்செய் யோனும" (புறநா 56 8), "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" (முருகு 247)

(10) சரவணப்பூம்பள்ளி. "நெடுமபெருஞ் சிமையத்து நீலப் பைஞ் சுனை, . அறுவர் பயநத வாறமர செல்வ" (முருகு 253 - 5), "கட

(பி - ம்.) † 'இணையன்றித்' ‡ 'சரவணப் பளளியிசைத்தாய்மார்' $ 'வருதிகிரிபோலவுணன் மார்பம்', 'திகிரியோனவுணன்'

பாட்டுமடை (அறத்தொடு நிலை)

(11) இறைவளை நல்லா யிதுநகையா கின்றே
கறிவளர தணசிலம்பன செய்தநோய் தீர்க்க
அறியாண்மற் றன்னை யலர்கடம்ப னென்றே
வெறியாட ருன்விருமபி வேலன்வரு கென்ருள் † (க)

(12) ஆய்வளை நலலா யிதுநகை யாகின்றே
மாமலை வெற்பனேய் தீரக்கவரும வேலன்
வருமாயின் வேலன் மடவ னவனிற்
குருகு பெயர்க்குன்றங் கொன்ருன மடவன், (உ)

(13) செறிவளைக்கை நலலா யிதுநகையா கின்றே
வெறிகமழ் வெற்பனேய் தீரக்கவரும் வேலன்
வேலன் மடவ னவனினுந் தான்மடவன்
ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின், (ங)

(14) நேரிழை நலலாய் நகையா மலைநாடன்
மாரபு ‡தருவெந்நோய் தீர்க்க வரும்வேலன்
தீரக்க வரும்வேலன் றன்னினுந் தான்மடவன்
கார்க்கடப்பந் தாரெங் கடவுள வருமாயின், (ச)

"சீர்கெழுசெநதில்" (8) முதலிய மூன்றும் வரைவு முடிவதாகத் தெய்வம் பராயது

'இறைவளை நலலாய்' (11) முதல், 'என்றியாமபாட' (19) இறுதி அறத்தொடுநிலை (12) 2 வெறபன் நோய் - வெறபஞல் வநத நோய்.

ளொருமீன் சாலினியொழிய வறுவர் மறறையோரும . . நிவநதோங் கிம யதீது நீலப் பைஞ்சுனைப், பயந்தோ ரென்ப பதுமதீதுப் பாயல" (பரி 5 . 44 - 9) குருகுபெயர்க்குனறதீதைக் கொன்றது "குருகொடு பெயர்பெறற மால்வரை யுடைதீது, மலையாறறுப் படுதீத மூவிரு கயந் தலை" (பரி. 5 . 9-10), "குனறங் கொன்ற குன்ருக் கொன்றதீது" (முருகு. 269), "குருகுபெயரக் குன்றங் கொன்ருேன்" (மணி. 5 . 13), "குருகுபெயரக் குன்றத் துடல்பக வெறிநத, நெடுவேற் கடவுட்கு" (கல "பொருப்புவளன")

அறதீதொடு நிறறல் - உண்மை கூறல், உண்மை கூறுதலே அற மாதலின் இஃது இப்பெயர் பெறறது, 'அறம் என்பது தக்கது, தக்க தனைச் சொல்லி நிறறல்... .., அல்லதூஉம் பெண்டிர்க்கு அறமென்பது கற்பு, கறபினறலை நிறறல என்பதூஉமாம' என்பர் இறையனுரகப் பொருளுரையாசிரியர்.

(12) 2-4. "வேலன் வேண்ட வெறிமனை வந்தோய், கடவு ளாயினு மாக, மடவை மன்ற வாழிய முருகே" (நற். 34 9-11)

(13) 4. ஆலமர் செலவன புதல்வன் "ஆலமர் செல்வ னணிசால் பெருவிறல்", "ஆலமர செலவ னணிசான் மகன்" (கலித் 81, 83), "ஆலகெழு கடவுட புதலவ" (முருகு. 256), "ஆலமர் செல்வன் மகன்" (மணி. 3 144)

(14) 1-2. "நாடன், மார்புதர வந்த படர்மலி யருநோய்" (நற். 34 . 5-6) 4 கார்க்கடப்பந்தார் - கார்காலதீதிறகுரிய கடமபின்மாலை, "கார்கோண் முகநத .. இருள்படப் பொதுளிய பராரை மராஅதீ, துருள்பூந் தண்டார புரளு மார்பினன்" (முருகு 7-11), "கார்நறுங்

(பி - ம்.) † 'பாட்டுமடையாய்வளை' ‡ 'தருநோய்'

பாட்டுமடை

(15) வேலனூர் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப் பறவைமே னேரிழை தன்னோடும்
ஆலமர் செல்வன் புதல்வன் வருமவந்தால்
மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே, (கூ)

(16) கயிலைநன் மலையிறை மகனை நின் மதிநுதல்
மயிலியன் மடவரன் மலையர்தம் மகளார்
†செயலைய மலர்புரை திருவடி தொழுதேம்
அயன்மண மொழி ‡யரு ளவர்மண மெனவே, (கூ)

(17) மலைமகண் மகனை நின் மதிநுதன் மடவரல்
குலமலை யுறைதரு குறவர்தம் மகளார்
நிலையுயர் கடவுணின் னிணையடி தொழுதேம்
பலரறி மணமவர் படுகுவ ரெனவே, (எ)

(18) குறமக ளவளெம குலமக ளவளொடும்
அறுமுக வொருவனின் னடியிணை தொழுதேம்
¶துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமண மெனவே, (அ)

பாட்டுமடை

(19) என்றியாம் பாட மறைநின்று கேட்டருளி
மன்றலங் கண்ணி மலைநாடன் போவான்முன்

---

(15) 2 நீலப்பறவை - மயில். (16) 1. மகனை, ஐ இடைச்சொல். 4. அயன்மணம - பிராசாபத்தியம ஒழி - இதனை விலக்குவாய்

(17) 4. பலரறி மணமென்றார், இதற்கு முன்பு களவாதலால். படுகுவர் - உடன் படுகுவாராக அவரென்றது தலைவனை.

(18) 3 துறை - நீரதீத்துறை, "யாறுங்குளனும" (முருகு 224) என்றாராதலின் நின் திருவடி தொடுநரென்றது சூளுறற தலைவனை

(19) 1. மறைநின்று - மறையச் சிறைப்புறமாக நினறு
3 சென்றேன - சென்று நின்றேன் நின்றேன் - நின்ற நான்

கடம்பின் கண்ணி சூடி முருகே" (நற 34 '8-11), "கார்நறுங் கடம்பின்... தெரியற், சூர்நவை முருகன்" (புறநா. 23 1 4), "காரலர் கடம்பன்" (மணி 4 49) [(22) 6.

(15) 4. "மாமலை வெறபன் மணவணி வேண்டுதுமே" [24 :

(17) 4 "நேரிறை முன்கை பறறி நுமர்தர, நாடறி நன்மண மயர்கம்" (குறிஞ்சிப. 231 - 2), "பல்லா ரறியப் பறையறைந்து நாடகேட்டுக், கல்யாணஞ செயது" (நாலடி 86)

(18) 3 "ஆலமுங் கடம்பு நல்யாற்று நடுவும், கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும், அவ்வவை மேய வேறுவேறு பெயரோய, எவ்வயி னேயுநீயே" (பரி 4. 67-71), "துறையு மாலமுந் தொலவலி மராமும், முறையுளி பராஅய்" (கலித் 101 14) [42 28.

(19) 1 "என்றியாம் பாட மறைநின்று கேட்டனன்" (கலித்.

(16) : "குன்றக்குரவையுள், 'சீர்கெழுசெந்தில்' (8) என்னும் தாழிசை முதற பல அடுக்கி வந்து பின்னர், 'என்றியாம பாட. கேடு'

(பி - ம்) † 'செயலைமென்' ‡ 'யருள் பலர்மணம்' ¶ 'துறையுறை மிசைநின திருவடி தொழுமவர்'

சென்றே னவன்றன் றிருவடி கைதொழுது
நின்றே னுரைத்தது கேள்வாழி தோழி (கூ)
(20) கடம்பு சூடி யுடம்பிடி யேந்தி
மடந்தை பொருட்டால் †வருவ திவ்வூர்
அறுமுக மில்லை யணிமயி லில்லை
குறமக ளில்லை செறிதோ ளில்லை
கடம்பூண் டெய்வ மாக நேரார்
மடவர் மன்றவிச் சிறுகுடி யோரே

பாட்டுமடை

(21) என்றீங்
கலர்பாடு பெற்றமை யானுரைப்பக் கேட்டுப்
புலர்வாடு நெஞ்சம் ‡புறங்கொடுத்துப் போன
மலர்தலை வெற்பன் வரைவானும் போலும்
முலையினுன் மாமதுரை கோளிழைத்தாள் காதல்
தலைவனை வானேர் ¶தமராருங் கூடிப்
பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலையொன றுபாடு தும்யாம்
(22) பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலுள்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுகம்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுங்கால்
மாமலை வெற்பன் மணவணி வேண்டு துமே

---

(20) இபபடிச்சூடி ஏந்தி இவவூர் வருவது, தனனை முருகனென்று கண்டார் கருதுதல்வேண்டி ..இசசிறு குடியோர் தெய்வமாக உடன் படார். ஆதலால, அறியார், மடவர் - அறியார் அன்றி, இச்சிறு குடி யோராதலால... .. சொல்லுமாறு அறுமுகமில்லை, அணிமயிலில்லை யென்று சொல்லுவார்களென்று வேறு காடடினுள், தலைமகன் கடமபுசூடி உடமபிடியேந்தித் தன்னைக் குமரனென்று பிறர் கருத வந்த காரணம், “ பண்டைத்தன், மணங்கமழ் தெயவத் திளநலங் காடடி ” (முருகு. 289 - 90) என்றுராதலால்

(21) 3 புலர்வாடு நெஞ்சம் - புலரும் நெஞ்சம். புறங்கொடுத்துப் போன - தன் பின்னே கிடக்கப்போன, ஒழியபபோன வென்றுமாம். தமராரும் கூடி - தமரெல்லாருங்கூடி நிலை - தன்மை.

(22) அத்தன்மையினை நாம் பாடுமிடத்து இதனை வேண்டிக்கொள் ளுவோமென்றுரர்.

என்று அடக்கியற் பொருள பெறறு முடிந்தவாறு காண்க ” (தொல். செய் 149, ந. மேற்.)

(22) 1 . “ பாடுகம் வாவாழி தோழி ” (கலித். 41 . 1)

6 “ மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே ” [24 (15) : 4]

(பி - ம்.) † ‘ வருவதிவ்வூர்க் கடம்பூண்... . குடியோரே யறுமுகமில்லை யணி.....இல்லை ’ ‡ ‘ புறக்கொடுத்துப் ’ ¶ ‘ தமராகக் கூட்டிப் ’

(23) பாடுற்றுப்
பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்
பைத்தர வல்குனம் பைம்புனத துள்ளாளே
பைத்தர வலகுல் கணவனே வானோர்கள்
உய்ததுக் †கொடுத்து முரையோ வொழியாரே

(24) வானக வாழ்க்கை யமரர் தொழுதேத்தக்
‡கான நறுவேங்கைக் கீழாளோர் காரிகையே
கான நறுவேங்கைக கீழாள் கணவனெடும்
வானக வாழ்க்கை ¶மறுதரவோ வில்லாளே

(25) மறுதர வில்லாளே யேத்திநாம் பாடப்
பெறுகதில் லம்ம §விவ்வூரு மோர்பெற்றி
பெற்றி யுடையதே பெறறி யுடையதே
பொற்றொடி மாதர் கணவன் மணங்காணப்
பெற்றி யுடையதிவ் வூர்

(26) என்றியாம்
கொண்டு நிலைபாடி யாடுங் குரவையைக்
கண்டுநங் காதலர் $கைவந்தா ராஞ
துண்டு மகிழ்ந்தாஞ வைகலும் வாழியர்
வில்லெழுதிய விமயத்தொடு
கொல்லி யாண்ட குடவர கோவே.

(உசா) குன்றக்குரவை முற்றிற்று

---

(23) பாடுறறு - பெருமையுறறு.
வானோர் கொடுத்த பின்பும அவளைப் புகழலொழியார்

(25) மறுதரவு - மீட்சி. இவ்வூரும் ஒரு விரதமபெறுக. கணவன் மணம் - வரைவு

(26) . 2 கொண்டுநிலை - பொருளைக்கொண்டு நிற்கும்நிலை. 3. கை வந்தார் - அவன் பிரசாததீதாலே நம் வழியிலே புகுந்தார். 4. உண்டு - வீரபானதீதையுண்டு. ஆஞ வைகல்தொறுமு வாழ்வாஞக.

இவ்வுறுப்புக்களையுடைய **கொச்சகப்பாத் தலைமகட்குத் தோழி வரைவு கூறியது.**

---

(25) "பெறுகதில் லம்ம யானே" (குறுந். 14 3)

(26) கொண்டுநிலை - ஒருவகைச் செய்யுளென்பர், "குரவை தழீ இயாமாடுங் குரவையுட், கொண்டு நிலைபாடிக் காண்" (கலித். 39 : 28 - 9) என்பதன் உரையைப் பார்க்க.

(26) 6. "கொல்லிப் பொருந" (பதிற். 73 11); "முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி, செல்லா நல்லிசை நிறுத்த வல்வில், ஓரிக் கொன்று சேரலற் கீத்த, செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகநா. 209 . 12-5), "ஓங்கு கொல்லியோ ரடுபொருந" (புறநா. 22 : 28) என்பவற்றுற கொல்லிமலை சேரபரம்பரையினர்க்குரிதீதாதல் காண்க.

6. குடவர்கோ : "குடவர் கோவே கொடிதீதே ரண்ணல்" (பதிற். 55 : 9)

(பி - ம்) †'கொடுத்தவுரை' ‡'கானனறு' ¶'மறுதரலோ' §'விவ் வூர் பெற்றியுடையதே' $'கைவந்தா, ருண்டு'

இருபத்தைந்தாவது

காட்சிக் காதை

மாநீர் வேலிக் கடம்பெறிந் திமயத்து
வானவர் மருள மலிலவிற் பூட்டிய
வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
விளங்கில வந்தி வெள்ளி மாடத்
5 திளங்கோ வேண்மா ளுடனிருந் தருளித்
துஞ்சா முழவி னருவி யொலிக்கும்
மஞ்சுசூழ் சோலை மலைகாண் குவமெனப்
† பைந்தொடி யாயமொடு பரந்தொருங் கீண்டி
வஞ்சி முற்ற நீங்கிச் செல்வோன்
10 வளமலர்ப் பூம்பொழில் வானவர் மகளிரொடு
விளையாட்டு விரும்பிய விறல்வேல் வானவன்
பொலம்பூங் காவும் புனல்யாற்றுப் பரப்பும்

---

1. மாநீர் வேலிக் கடமபு - இருண்ட நீரை வேலியாகவுடைய கடம்பு.

4. இலவந்தி - நீராவி

5. இளங்கோவேண்மாள் பெயர், 'நன்னன்வேண்மாள்', 'உதியன் வேண்மாள்' என்பனபோல, வேண்மாளுடனிருந்து, இளங்கோவை அருளிப்பாடிட்டு என்றுமாம்

அடி, 1 கடமபெறிந்தமை "வலமபடு முரசிற் சேர லாதன், முந்நீ ரோட்டிக் கடம்பறுத் திமயத்து, முன்னேர் மருள வணங்குவிற் பொறித்து", "சாலபெருந் தானைச் சேர லாதன், மால்கட லோட்டிக் கடம்பறுத் தியறறிய, பண்ணமை முரசு" (அகநா. 127 · 3-5, 347 : 3-5), "பலர்மொசிந் தோமபிய திரள்பூங் கடமபின், கடியுடை முழுமுத றுமிய வேஎய், வென்றெறி சேர லாத", "அரசுதலை பனிப்பக், கடம்பு முத றடிந்த கடுஞ்சின வேந்தே", "மாக்கட னீக்கிக், கடம்பறுத் தியற்றிய வலமபடு வியன்பணை தொடித்தோ ளியவர்", "இருமுந்நீர்த் துருத்தியுள், முரணியோர்த் தலைச்சென்று, கடம்புமுத றடிந்த கடுஞ்சின முன்பின், நெடுஞ்சேரலாதன்" (பதிற் 11 12-6, 12 2-3, 17 : 4-7, 20 2-5)

அடி, 1-2 இமயத்து விற்பொறித்தமை "விற்றலைக் கொண்ட வியன் பேரிமயத்து" (சிலப் 25 118), "இமயம் விற்பொறித்து" (பதிற். 2 - ஆம்பற்துப்பதிகம), "ஆரிய ரலறத் தாக்கிப் பேரிசைத், தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற பொறித்து, வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன் வஞ்சி" (அகநா 396 16-9)

அடி, 5. "வதுவை வேண்மாண் மங்கல மடந்தை" (சிலப் 28 : 51)

அடி, 6. "முழவின் னிசை மூரிமுழங்கருவி" (சீவக 1193)

அடி, 7 சிலப் 24 (2) 4.

அடி, 9 "வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றம்" (சிலப். 25 : 34)

(பி - ம்.) † 'பஞ்சடியாயமொடு'

இலங்குநீர்த் துருத்தியு மிளமரக் காவும்
அரங்கும் பள்ளியு மொருங்குடன் பரப்பி
ஒருநூற்று நாற்பதி யோசனை † விரிந்த
பெருமால் களிற்றுப் பெயர்வோன் போன்று
கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
நாகந் திலக நறுங்கா ழாரம்
‡ உதிர்பூம் பரப்பி ஞெழுகுபுன லொளித்து
மதுகர ஞிமிறெடு ¶ வண்டினம் பாட
நெடியோன் மார்பி லாரம் §போன்று
பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
இடுமண லெக்க ரியைந்தொருங் கிருப்பக்
குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடலும்
வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்
தினைக்குறு வள்ளையும் புனத்தெழு விளியும்
நறவுக்கண் ணுடைத்த குறவ $ரோதையும்
பறையிசை யருவிப் பயங்கெழு மோதையும்
புலியொடு பொரூஉம் புகர்முக வோதையும்
கலிகெழு மீமிசைச் சேணோ ணோதையும்

---

14 அரங்கு - நாடகசாலை. பள்ளி மண்டபம்

(3) செங்குடடுவன் (7) மலைகாண்குவமென்றுசொல்லி (11) இந்திரன் (16) பெயர்வோன் போன்று.

12 - 6 பூங்கா முதலானவறறை யானைமேலுளவாக நிருமித்தது.

(16) களிறறிலே (12 - 4) இவறறைப் பரப்பி (16) பெயர்வோனென்க.

(18) கோங்கம் முதலியன உதிர்ந்த (19) பூம்பரப்பாற் புனல் ஒளித்து.

22. மலையை விலங்கிய யாறு, **பேர்யாறு**, இஃது ஓர் யாற்றின் பெயர்.

23. எக்கர் - எக்கரிடத்து, இயைந்தொருங்கிருப்ப - மூவருங் கூடியிருப்ப.

25 செவ்வேள் வேலன் - செவ்வேளுடைய வேலன், வேலன் - படி

30. சேணோன் - பரணின் மேலோன். [மதிதான்.

அடி. 21. "மாயோன் மார்பி ஞரம போல" (தொல். செய். 35, 78, பேர். மேற)

அடி, 28 "பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந", "பறையிசை யருவி நன்னாட்டுப் பொருநன்" (புறநா. 126. 9, 229 14), "பறைக்குர லருவி" (பதிற். 70. 24)

அடி, 30 "கலிகெழு மரமிசைச் சேணோன்" (குறிஞ்சிப். 40)

(பி - ம்) † 'விலங்கு, பருமால் களிறறிற் பெயர்வோன்' ‡ 'முதுபூஞ் செம்மலி லொழுகுபுனல்' ¶ 'வண்டின மார்ப்ப' § 'போலப்' $ 'ரோதையும் புலியொடு'

பயம்பில்வீழ் யானைப் பாக ரோதையும்
இயங்குபடை யரவமோ டியாங்கணு மொலிப்ப
அளந்துகடை யறியா வருங்கலஞ் சுமந்து
வளந்தலை மயங்கிய வஞ்சி †முற்றத்
திறைமகன் செவ்வி யாங்கணும் பெருது
திறைசுமந் து ‡நிற்குந் தெவ்வர் போல
யானைவெண் கோடு மகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியு மதுவின் குடங்களும்
சந்தனக் குறையுஞ் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளு மணியரி தாரமும்
ஏல வல்லியு மிருங்கறி வல்லியும்
¶கூவை நூறுங் கொழுங்கொடிக் கவலையும்
§தெங்கின் பழனுந் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமுங் கரும்பும் பூமலி கொடியும்
$கொழுந்தாட் கமுகின் செழுங்குலத் தாறும்
பெருங்குலை வாழையி னிருங்கனித் தாறும்
ஆளியி னணங்கு மரியின் குருளையும்
வாள்வரிப் பறழு மதகரிக் களபமும்

---

31. பயமபு - யானையைப் படுக்குங்குழி 32. ஒலிப்ப - ஒலியாநிற்க.
33 'அளநதுகடை யறியா' என்பது முதல் திறையிடுவார்க்கு அடை.
38 மான்மயிராகிய வெண்சாமரை. மதுவின்குடம் - தேன்குடம்.
42 கூவைநூறு - கூவைக் கிழங்கினீறு.
44. பைஙகொடிப் படலை - பச்சிலைமாலை
45. காயம - வெள்ளுள்ளி. பூமலிகொடி - பூங்கொடி
48 அணங்கு - குட்டி.
49 வாள்வரி - புலி கரிக்களபம் - யானைக்கன்று.

அடி, 40 "அஞ்சனப் பூழி யரிதாரத் தின்னிடியல்" [சிலப். 24. (2) 2] அடி, 42 கூவைநூறு "நூரெடு குழீஇயின கூவை" (மலைபடு. 137), "பாவை யிஞ்சியுங கூவைச் சுண்ணமும்" (பெருங். 1. 51 23). அடி, 44 'பைங்கொடி - பச்சிலைக்கொடி, எல்லாவறறிலும் பசுத்திருத் தலிற பச்சிலையென்று பெயர் பெறறது, பச்சிலையென்னுது சினைவினை முதன்மேலேறறிப் பைங்கொடி யென்றார்' (முருகு. 190, ந.) என்பது ஈண்டு அறியற்பாலது.

(பி - ம்) †'மன்றத்' ‡'நிறகுமன்னர்' ¶'கூவைநீறுங்', 'கூலக்கிழங்குங்கொடி' §'தெங்கம்பழனுந்' $'கருந்தாட்'

குரங்கின் குட்டியுங் குடாவடி யுளியமும்
வரையாடு வருடையு மடமான் மறியும்
காசறைக் கருவு மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையு நாவியின் பிள்ளையும்
கானக் கோழியுந் †தேன்மொழிக் கிள்ளையும்
மலைமிசை மாக்க டலைமிசைக் கொண்டாங்
கேழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்
கான வேங்கைக் கீழோர காரிகை
தான்முலை யிழந்து தனித்துய ரெய்தி
வானவர் போற்ற ‡மன்னெடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்
எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
நின்னுட் டியாங்க ணினைப்பினு மறியேம்
பன்னூ றுயிரத் தாண்டுவா ழியரென
மண்களி நெடுவேன் மன்னவற் கண்டு

50 குடாவடியுளியம் - பிள்ளைக்கரடி, திசைச்சொல், கரடிக்குட்டி.
51. காசறைக்கரு - கத்தூரிக்குடி. 59. மன் - கணவன

அடி, 50 குடாவடி - வளைந்த அடிகளையுடையது, **மலைபடு** 501, **ந.** அடி, 51. வரையாடுவருடை - மலையிற பாய்ந்து விளையாடுகின்ற வருடைமான், "சிலம்புபாய் வருடையொடு", "குன்றின்மேல் வருடை பாய்ந்த துழக்கலின்" (**சீவக** 1238, 1299), வருடைக்குக் கால்கள முதுகிலுமுள்ளனவென்றும கால்கள எட்டெனறும வேறு நூல்களால் தெரிகின்றன, "மீமிசைக் கொண்ட கவரபரிக் கொடுநதாள், வரைவாழ் வருடை வன்றலை மாத்தகர்" (**மலைபடு.** 502-3) என்பதனுரையின் அடிக்குறிப்பைப் பாரக்க, 'எடடுக் காலுடையன வருடை, ஆறுகாலுடையன கழிப்பாம்பு' (நீல தரும செய 54, உரை)

அடி, 55-60 சிலப். பதிகம, 3-8.

அடி, 37-55 "குழிப்படு வேழக் கூன்மருப் பிரட்டையும், வரைப்படு தேனுஞ் சினைப்பட கனியும, வீணைத் தண்டும வேயபடு முத்தும, கானத் தகிலு மேனத் தெறியும், பொறிபபுலித் தோலு மறுப்பிய லுகமும், மந்திப் பிணையொடு மற்றவை பிறவும், தநதிறை தந்து முநதுசிறைப் பட்ட, வறற காலத்து முறற நோக்கி, அடியுறை செய்தொழிற குடிமுதல் பிழைத்தல், இருநிலம பெயரினு மெம்மாட டிலவெனப், பெருமகன் றமரொடு தெளிவனர் தேறறி" (பெருங் 1. 58 83-93), **மலைபடு.** 500-ஆம் அடி முதலியனவும் இந்தப் பகுதியை ஒத்துள்ளன.

(பி - ம்.) †'தேமொழிக்' ‡'தன்மகிழ்நனெடுகூடின னென்னுட் டாள்', 'கூடிப் போயினளெந்நாட்'

கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கும்
ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாம்
திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்
தீவினைச் சிலம்பு காரண மாக
ஆய்தொடி யரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்
செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்
வஞ்சினஞ் சாற்றிய மாபெரும் பத்தினி
அஞ்சி லோதி யறிகெனப் பெயர்ந்து
முதிரா முலைமுகத் தெழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் சுட்டதும்
அரிமா னேந்திய வமளிமிசை யிருந்த
திருவீழ் மார்பிற் றென்னர் கோமான்
தயங்கிணர்க் கோதை தன்றுயர் பொருஅன்
மயங்கினன் கொல்லென மலரடி வருடித்
தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள்

---

65 கண்களிமயக்கம் - கண் களித்தறகுக் காரணமான ஆச்சரியம்; மயக்கம - கண்டாரை மயங்கப்பண்ணுதல்

64-5. காண்டலின், விசாரமில்லேமென்று

(63) வேடர சொன்னவளவிலே (67) உறறதையெல்லாம் (91) ஒழி வின்று (66) உரைக்குமென்க, உரைக்குமென்றது முறறு.

69. தீவினைச்சிலம்பு - இவர் தீவினை பலித்தறகுக் காரணமான சிலம்பு

(70) உற்றதும், (72) வழக்கும், (77) சுட்டதும சொல்லியென ஒரு சொல் வருவிகக

80-81 இணர்க்கோதை - கண்ணகி பொருஞய மயங்கினளே.

82 தலைத்தாணெடுமொழி - கண்ணகி சொலலிய வீரமொழி; மரித்தபடியால், அவள சொல்லியது முடியக் கேடடிலள்

அடி, 65 "கண்களி கொள்ளுங காடசியை" (சிலப் 26 73)

அடி, 66. "அவனுழை யிருந்த தண்டமிழச சாத்தன்" (சிலப். பதி. 10)

அடி, 69 "சூழவினைச் சிலம்பு காரண மாக" (சிலப் பதி. 58)

அடி, 78 - 9 "அரிமா னேந்திய வமளிமிசை யிருநதனன், திருவீழ் மார்பிற றென்னவர் கோவே" (சிலப் 20 22 - 3)

அடி, 80. "தயங்கிணர்க் கோதை" (மணி. 7. 100)

கலக்கங் கொள்ளாள் †கடுந்துயர் பொருஅள்
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போல்
பெருங்கோப் பெண்டு மொருங்குடன் ‡மாய்ந்தனள்
கொற்ற வேந்தன் கொடுங்கோற் றன்மை
இற்றெனக் காட்டி யிறைக்குரைப் பனள்போல்
தன்னுட் டாங்கட் டனிமையிற் செல்லாள்
நின்னுட் டகவயி னடைந்தன ணங்கை ¶யென்
றெழிவின் றுரைத்தீண் டூழி யூழி
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றமெனத்
தென்னர் கோமான் றீத்திறங் கேட்ட
மன்னர் கோமான் வருந்தின னுரைப்போன்
எம்மோ ரன்ன §வேந்தற் குற்ற
செம்மையி ||னிகந்தசொற் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் $பெயர்த்தமை யுறுக வீங்கென
வல்வினை வளைத்த கோல மன்னவன்
செல்லுயிர் நிமிரத்துச் செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்

---

83 கலக்கங கொள்ளாளென்றார், கடுக மரிதீதாளென்றது தோன்ற

88. இறை முன்னிலைப் பெயர.

95 எமமோரன்ன என்றது உடகோள்.

95-7. பாண்டியனது உயிரை உடமபினின்று நீக்கினமை இப் பொழுது கடுகச் சென்றுற வேண்டுமென.

99 ஆக்கியது முற்று

அடி, 78 - 86 "காதல ரிறப்பிற கனையெரி பொத்தி, ஊதுலைக் குருகி னுயிரத்தகத் தடங்கா தினனுயி ரீவர பத்தினிப் பெண்டிர்" (மணி 2 42-8). அடி, 92. "வழிவழிச் சிறக்கநின வலமபடு கொறறம்" (மதுரைக் 194)

அடி, 97 உயிர்பதிப் பெயர்த்தல் - உயிரை உடமபினின்றும் நீக்குதல், "உண்ணு நோனபோ டுயிர்பதிப பெயர்த்ததும" (சிலப். 27. 83), "உண்ணு நோன்போ டுயிரபதிப பெயரப்புழி" (மணி. 14 95)

அடி, 98 - 9 "வளைகோ லிழுக்கத் துயிராணி கொடுத்தாங், கிருநில மடந்தைக்குச் செங்கோல் காடட" (சிலப 22 4 - 5)

அடி, 100 - 105 "ஒருமைநந்தன் றன்குலத்துக் குள்ளானென் பது முணரான், தருமநதன் வழிசெல்கை கடனென்று தன்மைந்தன், மரு மந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன், அருமநத வரசாடசி யரி தோமற றெளிதோதான்" (பெரிய திருவாரூர். 44)

அடி, 84. மெய்யீற்று முன் உயிர்வருங்கால் உடமபடுமெய்யன் றெனப்படும் வகரம் தோன்றுமென்பதறகு, 'செல்வுழிச் செல்க' என்பது மேற்கோள் (நன். 163, சங்)

(பி - ம்) †'கடுந்துயருருள, மன்னன்' ‡'அமர்ந்ததும்' ¶'யென வொழி' §'வேந்தர்க்கிறறெனச்' ||'னிழந்தகொல் செவி' $'பெயர்ந் தமை'

பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கு நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லெனத்
துன்னிய துன்பந் †துணிந்துவந் துரைத்த
நன்னூற் புலவற்கு நன்கன முரைத்தாங்
குயிருடன் சென்ற வொருமக டன்னினும்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்
நன்னுதல் வியக்கு நலத்தோ ரியாரென
மன்னவ னுரைப்ப மாபெருந் தேவி
காதலன் றுன்பங் காணுது ‡கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக ¶வானகத்
தத்திற நிற்கநம் மகனு டடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென
மாலை வெண்குடை மன்னவன் விரும்பி
நூலறி புலவரை நோக்க வாங்கவர்
ஒற்கா மரபிற் பொதியி லன்றியும்
விற்றலைக் கொண்ட வியன்பே §ரிமயத்துக்
கற்கால் கொள்ளினுங் கடவு $ளாகும்
கங்கைப்பேர் யாற்றினுங் காவிரிப் புனலினும்

---

101. பிழையுயிரெய்தின் - உயிர்கள் யாதானுமொன்றுல் வருந்தின்.
105. துன்னிய துன்பம் - கண்ணகிக்குத் துன்னிய துன்பத்தை.
104 - 5 தொழுதகவில்லென வந்துரைத்த.
109 நன்னுதல் முன்னிலைப்பெயர் 111. காதலன் - பாண்டியன்.
112 - 4 மாதர் - அவன்தேவி, அவள் வானிலே திருவுறுக; அது கூற வேண்டா, இவளைக் கொண்டாடவேண்டுமென்று தேவி சொல்ல.
116. [1] நூலறி புலவர் - அமைச்சர்.
117 - 21 இமயக்கல்லுக்குக் கங்கை, பொதியிறகல்லுக்குக் காவிரி.

அடி, 106. நன்னூறபுலவன் - சாத்தனுர், மணிமேகலை நூலாசிரியர்.

அடி, 118 - 9. "விற்றலைக் கொண்ட வியன்பே ரியமதிதொர், கற் கொண்டு பெயருமெங் காவலன்" (சிலப். 25 183 - 4), "கடவுட்பத்தினிக் கறகோள் வேண்டி" (பதிற் 5-ஆம பத்துப் பதிகம்)

[1] "நூலவர் பாகமாக" (சூளா. மந்திர. 7)

(பி - ம்.) † 'துணேநது' ‡ 'கரந்த' ¶ 'வானதி' § 'ரிமயதீதுங்' $ 'ளாகுமெனக்'

தங்கிய நீர்ப்படை தகவோ வுடைத்தெனப்
பொதியிற் குன்றத்துக் †கற்கால் கொண்டு
முதுநீர்க் காவிரி முன்றுறைப் படுத்தல்
‡மறத்தகை நெடுவா ளெங்குடிப் பிறந்தோர்க்குச்
சிறப்பொடு வரூஉஞ் §செய்கையோ வன்று
புன்மயிர்ச் சடைமுடிப் புலரா வுடுக்கை
முந்நூன் $மார்பின் முத்தீச் செல்வத்
திருபிறப் பாளரொடு பெருமலை யரசன்
மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்
¶கடவு ளெழுதவோர் கற்ரு ரானெனின்
வழிநின்று பயவா மாண்பில் வாழ்க்கை
கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சியும்
முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை
மதிமுடிக் களித்த மகட்பாற் காஞ்சியும்
தென்றிசை யென்றன் வஞ்சியொடு வடதிசை
நின்றெதி ரூன்றிய நீள்பெருங் காஞ்சியும்

128 இருபிறப்பாளர - தேவவிருடிகள்

128 - 30 பார்ப்பாருடனே மகட்டருதலைக்கி இருபிறப்பாளரோடு கல் தாராளுயினெனருன் 130 [1] எழுத - பண்ண.

131 - 2. நிலைநின்று பயன்படாத வாழக்கையை மரித்தோர் இருந் தோர்க்குக் காட்டிய நிலையாமையும

134 மதிமுடி - தேவன் மகட்பாற் காஞ்சி - தான் இனியனுய்க் கொடுத்த காஞ்சியும்

135 - 6 தென்றிசைக்கண்ணே மேறசெலவு. அவன் எதிரூன்றல உயர்தீதான்

அடி, 126 - 7 "ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண், புலராக் காழகம் புலர வுடீஇ" (முருகு. 183 - 4)

அடி, 132 "கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும" (தொல் புறத் 24) என்பதையும அதன் உரைகளையும் பார்க்க.

அடி, 134 மகட்பாற காஞ்சி "ஏந்திழையாட் டருகென்னும், வேந்தனெடு வேறுநின்றன்று" (பு வெ 184)

அடி, 136 . "எதிரூன்றல் காஞ்சி" (பழைய பாடல்)

பெருங்காஞ்சி "தாங்கு திறன்மறவர் ததித மாற்றல், வீங்கு பெரும படையின் வெளிபபடுதி தன்று" (பு வெ. 66)

[1] "கடவு ளெழுதவோர் கறகே யாதலின்", "கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது" (சிலப் 25 169, 26 14), "கந்துடை நெடு நிலைக் காரணங் காட்டிய, அந்தி லெழுதிய வற்புதப் பாவை", "கடவு ளெழுதிய, அந்திற்பாவை" (மணி 7 94 - 5, 15 - 33 - 4)

(பி - ம்.) † 'கற்கொண்டு பெயர்ந்து' ‡ 'மறத்தகு' § 'செய்தியோ' $ 'மார்பதீது' ¶ 'கடவுளாகவோர்'

நிலவுக்கதி ரஸைந்த நீள்பெருஞ் சென்னி
அலர்மந் தாரமோ டாங்கயன் மலர்ந்த
வேங்கையொடு தொடுத்த விளங்குவிறன் மாலை
மேம்பட மலைதலுங் † காண்குவ லீங்கெனக்
குடைநிலை வஞ்சியுங் கொற்ற வஞ்சியும்
நெடுமா ராய நிலைஇய வஞ்சியும்
வென்ரூர் விளங்கிய வியன்பெரு வஞ்சியும்
பின்ருச சிறப்பிற் பெருஞ்சோற்று ‡வஞ்சியும்
குன்ருச் சிறப்பிற் கொற்ற வள்ளியும்
வட்கர போகிய வான்பனந் தோட்டுடன்

137 - 40 சென்னியிலே மந்தாரமாலையோடு வேங்கைப்பூ இடையிட்டுத் தொடுத்த மாலையைத் தான் சூடிநிறகுமதுவுங காண்பேன்; [அவையும் வெடடுவனென்பதாம.] 146 வட்கர் போகிய - இடையில முரியில்லாத, நேராதார் போகைக்குக் காரணமாகிய போந்தையென்றுமாம்.

அடி, 137 "நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ சென்னி" (சிலப் 26 54)

அடி, 141 குடைநிலைவஞ்சி - குடைநாட்கோடல், "பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெருமபுலவர் புகழபாடக், கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று" (பு - வெ 38). கொறறவஞசி - அரசனது வெறறியின் மிகுதி, "வையகம வணஙக வாளோச் சினனெனச, செயகழல் வேந்தன் சீர்மிகுதி தனறு" (பு - வெ. 42)

அடி, 142 மாராயவஞ்சி - அரசஞறை சிறப்பெய்துநிலை, "மாராயம் பெற்ற நெடுமொழி யானும" (தொல் புறத் 8, இளம் ந.), "மறவேந் தனிற சிறப்பெயதிய, விறல்வேலோர் நிலையுரைத்தன்று" (பு - வெ. 46)

அடி, 143. பெருவஞசி - பகைவர் நாடடைக்கொளுதிதல, "முன்னடையார் வளநாட்டைப, பின்னருமுடன் றெரிகொளீஇயன்று" (பு - வெ. 57)

அடி, 144 பெருஞ்சோற்றுவஞ்சி - வீரர்களுக்குப் பெருஞ்சோறளிதீதல், "பிண்ட மேய பெருஞ்சோறறு நிலையும்" (தொல் புறத் 8, இளம் ந), "திருந்தார் தெமமுனை தெறுகுவ ரிவரெனப், பெருஞ்சோருடவர் பெறுமுறை வகுதீதன்று" (பு - வெ 58)

அடி, 145. கொறறவள்ளை - அரசன் பிரதாபதீதைக் கூறுவதுடன் பகைவரநாடு அழிந்ததற்கு இரங்கல், "குன்ருச் சிறப்பிற் கொற்ற வள்ளையும" (தொல் புறத். 8, இளம். ந), "மன்னவன் புகழ்கினந், தொன்னுர்நா டழிபிரங்கின்று" (பு - வெ 43). அடி, 146. "வட்கர் போகிய வளரிளம போந்தை" (புறநா 100) அடி. 146-7 அரசர் தமக்குரிய அடையாளப் பூக்கள் முதலியவற்றுடன் புறத்திணைப் பூக்களையும் விரவித் தொடுப்பிதீதுத் தாம சூட்டிக்கொள்ளுதலும, வீரர்க்குச் சூட்டுதலும மரபு, இதனை, "பொலநதோடடுப் பைந்தும்பை, மிசையலங் குனைய பனைப்போழ் செரீஇ", "வேம்பி ஞெண்டலிர், நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து", "போந்தை, யுச்சிக் கொண்ட வூசிவெண் டோட்டு, வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச், சுரியிரும் பிதீதை பொலியச் சூடி" (புறநா. 22, 77, 100), "இளவரிக் கவட்டிலை

(பி - ம்.) † 'காண்குவ மீங்கெனக், கொடை' ‡ 'வஞ்சியும், வட்கார் வான்பனைத் தோட்டுடன் பூட்கை'

புட்கைச் சேஎன பொலியச் சூட்டிப்
பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்தென்
வாய்வாண் மஎலந்த வஞ்சிசூ டுதுமெனப்
பல்யாண்டு வாழ்கநின் கொற்ற மீங்கென
வில்லவன் கோதை வேந்தற் குரைக்கும்
நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
†பகைபுறத்துத் தந்தன ராயினு மாங்கவை
திகைமுக வேழத்தின் செவியகம் ‡புக்கன
கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
¶ பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்
கடமஎல வேட்டமென் கட்புலம் பிரியாது
கங்கைப் பேர்யாற்றுக் கடும்புன னீத்தம்
எங்கோ மகஎள யாடடிய §வந்நாள்
ஆரிய மன்ன ரீரைஞ் ஞூற்றுவர்க்
கொருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்

---

147. பூட்கை - மேறகோள், புட்கை விகாரம்
(141) 'குடைநிஎலவஞ்சி' முதலாக, (144) 'பெருஞ்சோற்றுவஞ்சி' ஈருகத் தன்சேஎனக்குச் (147) சூடடி.
148 பூவாவஞ்சி - கருவூர்.
150-51. 'பலயாண்டு வாழ்க' என்று இனிச் சொல்லுகின்ருன், வில்லவன் கோதையென்னும மநதிரி.
152 நுமமையொக்கும வேந்தரென்ருன், குலம்பற்றி.
153-5 புலிக்கொடியும கயறகொடியும பகைக்களதிதிலே உனக்குத் தந்து ஓடினராயினும் அவை எஙகும பரந்து திக்கயங்களின் செவியகம் புக்கன. 158. தமிழப்படை மயங்கிய செருக்களம்.
159. கடமஎல வேட்டமென கடபுலம பிரியாது - நீ நின்யாஎனயை விட்டபடி என் கண்ணினின்றும போகாது.
161. எங்கோமகளென்றது செங்குடடுவன்மாதாவை, அவஎள இவன் கொண்டுபோயதி தீர்திதமாட்டினது ஒரு கதை.
162-4 ஆரியவரசர் ஆயிரவர்க்கு நீயொருவனுகச்செய்த போர்க் கோலங்கண்டது கூறறமன்ரே.

யாரொ டேர்பெறதி, துளவிய றுமபையுஞ் சுழியச் சூடினுன்" (கம்ப. மூதறபோர், 115) என்பவறருலுமுணர்க
அடி, 148 "பூவா வஞ்சியிற பூதித வஞ்சி" (சிலப். 26 : 50); "பூவா வஞ்சியுந் தருகுவன்" (புறநா. 32 2), "பூதித வஞ்சி பூவா வஞ்சியில்" (மணி. 26 78)
அடி, 157. கங்கர் கட்டியர் - தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு சிற்றரசர் மரபினர், "நன்ன னேறறை நறுமபூ ணதி, துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி" (அகநா. 44 . 7-8)
(பி - ம்) †'பகைப்புறதிதுதி' ‡'புக்கெனக்கொங்கர்' ¶'வங்களர் கங்கர் வல்வேற்' §'நன்ளுள்'

இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
இதுநீ கருதினை †யாயி னேறபவர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை
இமய மால்வரைக் கெங்கோன் செல்வது
கடவு ளெழுதவோர கற்கே யாதலின்
வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாம்
தெனறமிழ் நன்னுட்டுச செழுவிற் ‡கயற்புலி
மண்டலை யேற்ற வரைக வீங்கென
நாவலந் தண்பொழி னண்ணு ரொற்றுநம்
காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா
வமபணி யாணை வேந்த ரொற்றே
தஞ்செவிப் படுக்குந் தகைமைய வன்ரே
அறைபறை யென்றே யழுமபில்வே ளுரைப்ப
நிறையருந் தாணை வேநதனு நேர்ந்து
கூடார் வஞ்சிக் கூட்டுண்டு சிறந்த
வாடா வஞ்சி மாநகர் புக்கபின்

---

168 செல்வது - செலலுகிறபடியை

165 - 72 இமிழ்கடல் வேலியைத் தமிழநாடாக்கவேண்டி இமயத்தே கற்கால் கொளக்கருதின், ஏறபார் யாரென்று அரசனுக்குச்சொல்லி ஓலை யெழுதுகவெனருன.

171 - 2. விலலுக் கயல் புலி இவையிறறிணையுடைய இலச்சினை மண்ணேறற ஓலைகள மன்னர்க்கெல்லாம வரைகவென.

மேல் அழும்பில்வேள கூற்று —

173 - 7 நண்ணுர் வரவிடட ஏறறுப்பிரியா, ஆகையால் அவ் வொறறே அரசரசெவிக்கு அறிவிக்கும தன்மையையுடைய, வடதிசைக் குச் செலவு ஆணைமேல இங்கே பறையறைய அடுக்குமென்ருன்

178 பகைமேறசெல்பொழுது நிறுதீதுதலரிய தாணை. நேர்ந்து - உடன்படு

179 - 80 வஞ்சிக்கூட்டு - எடுதீதுச்செலவாற்கொண்ட திறை, அத னுறற பொலிவுபெற்ற கருவூரிலே திரியச்சென்று புக்கபின்

அரசன் பேராறறங்கரையினின்றும போநது புக்கபின் என்க.

அடி, 165. சிலப். 3 37, பதிற் 2-ஆம் பதீதுப் பதிகம, மணி. 17 62

அடி, 166 - 7 "இதுநீ கண்ணிய தாயி னிருநிலதீ, தியார்கொ லளி யர் தாமே" (புறநா 52 7 - 8) அடி, 169 சிலப 26 151. அடி, 173 நாவலந் தண்பொழில் சிலப 17 (1) 3, கு - ரை, மணி. 22 29.

அடி, 177 "அழும்பில் வேளோ டாயக் கணக்கரை" (சிலப். 28 205), "பெருமபூட சென்னி, அழுமபி லன்ன வருஅ யாணர்" (அகநா. 44 14 - 5), "மான விறல்வேள், அழுமபில்" (மதுரைக். 344 - 5)

அடி, 178. "நிறையருந் தாணை" (புறநா 156 5, மணி. 9 : 26) (பி - ம்.) †'யாகலி னெதிர்ப்பவர்' ‡'கயல்புலிமண்டலையொறருவருக'

வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதொ றூழி யுலகங் †காக்கென
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்தோர்
கற்கொண்டு ‡பெயருமெங் காவல னுதலின்
வடதிசை மருங்கின் மன்ன ரெல்லாம்
இடுதிறை கொடுவந் தெதிரீ ராயிற்
கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்தையும்
கேட்டு வாழுமின் கேளீ ராயின்
தோட்டுணை துறக்குந் துறவொடு வாழுமின்
தாழ்கழன் மன்னன் றன்றிரு ¶மேனி
வாழ்க சேனு முகமென வாழ்த்தி
இறையிக லியானை யெருத்தத் தேற்றி
அறைபறை யெழுந்ததா லணிநகர் மருங்கென்

181. 'வாழ்க' என்றதுமுதல் **பறையறைகின்ருர்** வார்த்தை.

184. எங்காவலன் பெயருமெனபதை முறருக்கி ஆதலினென்க.

186 - 9. எதிரேறறுக் காணீராயின், கடலுட்புக்கும மலையிலேறியும் உறைமினென்பார், இரண்டு வார்த்தையும கேடடு வாழுமினென்ருர்.

[அவ்விடத்துப்படை அதன் புகழேயாதலான், அவவிடங்களிறசெல்லாது ாண்டே உறைமினென்பார், அரசன் போர் கருதினதிசையிற் போமபடியைக் கேளீராயினென்ருர்.]

190 தோட்டுணை - மகளிர். துறவு - தவம்.

191 - 2. திருமேனியாகிய சேனுமுகம், சேனுமுகம் அரசனுக்குச் சிறந்தமையின், 'திருமேனி' எனருர்.

193. இறையிகலியானை - படடவர்த்தனம்.

194. பறை - பறையொலி. காட்சி - கற்கொள்ள மனத்தால் நிச்சயித்தல்.

(உடு) காட்சிக்காதை முற்றிற்று.

அடி, 181 - 2 . சிலப். 11 15 - 6, 27 . 139 - 40, 28 . 185 - 6.
அடி, 183 - 4 . சிலப். 25 118 - 9.
அடி, 185 . சிலப். 25 . 170, 26 . 13.
அடி, 187 - 8 . சிலப். 23 81 - 2, 28 . 135 - 6.
(பி - ம்.) †'காக்கவில்' ‡'பெயருங்காவலன்' ¶'மேனியாயசேனு'

இருபத்தாருவது

கால்கோட் காதை

அறைபறை யெழுந்தபி னரிமா னேந்திய
முறைமுதற் கட்டி லிறைமக னேற
ஆசான் பெருங்கணி யருந்திற லமைச்சர்
தானைத் தலைவர் தம்மொடு குழீஇ
மன்னர் மன்னன் வாழ்கென் றேத்தி
முன்னிய †திசையின் முறைமொழி கேட்ப
‡வியம்படு தானை விறலோர்க் கெல்லாம்
உயர்ந்தோங்கு வெண்குடை யுரவோன் கூறும்
இமையத் தாபத ரெமக்கீங் ¶குணர்த்திய
அமையா வாழ்க்கை யரைசர் வாய்மொழி
நம்பா §லொழிகுவ தாயி னுங்கஃ
தெம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந் தரூஉம்
வடதிசை மருங்கின் மன்னர்த முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகிற்
$செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்

---

3 - 6. தானைத்தலைவர் தமமொடு ஆசான் பெருங்கணி அருந்திறல் அமைச்சர் கூடி ஏத்திக் கேட்ப.

(7) ஏவப்பட்ட தானைத்தலைவர்க்கெல்லாம் (8) கூறுமென்க.

9. தாபதர் - தீர்த்தமாட இமயத்தினின்றும் வந்த தாபதர்.

10 அமையா வாழ்க்கை - நிரம்பாத உயிர் வாழ்க்கை, பலமில்லாத வாழ்க்கை யெனலுமாம். அங்குள்ள ஆரியமன்னர் சொன்ன வார்த்தை.

11 - 2. நமபால் ஒழிகுவதாயின் - அது நமமிடத்தே கிடப்பதொரு வார்த்தையாயின், [அவர்க்குப் பலியாது] நம்மிடத்தே கிடந்துவிடிற் சோழ பாண்டியரிடத்தில் இகழ்ச்சியும் தரும.

அடி, 9-15 "தென்றமிழ் நாடாளும் வேந்தர்.....நங்கைதன்னை நீர்ப்படுத்தி வெஞ்சினந்தரு வெம்மை நீங்கி" (சிலப். 29. உரைப்பாடு மடை.)

அடி, 17-8 "பழியொடு படராப் பஞ்சவ வாழி", "வேத்தின நடுக்கும வேலோன்" (சிலப் 20. 33, 26. 127)

(பி - ம்) †'திசைமென்' ‡'வியன்படு' ¶'குரைத்த' §'லொழிவ தாயி' $'செருகழல் புனைந்து'

† குடிநடுக் குறூஉங் கோலே னெனென
ஆர்புனே தெரியலு மலர்தார வேம்பும
சீர்கெழு மணிமுடிக் கணிந்தோ ரல்லால்
அஞ்சினர்க் களிக்கு மடுபோ ரண்ணனின்
வஞ்சினத தெதிரு மன்னரு முளரோ
இமைய வரம்பநின் னிகழ்ந்தோ ரல்லர்
அமைகநின் சினமென வாசான் கூற
ஆறிரு மதியினுங் காருக வடிப்பயின்
‡றைந்து கேள்வியு மமைந்தோ னெழுந்து
வெந்திறல் வேந்தே வாழ்கநின் கொற்றம்
இருநில மருங்கின் மன்ன ¶ரெல் லாநின்
திருமலர்த் தாமரைச சேவடி பணியும்
முழுத்த மீங்கிது முன்னிய திசைமேல்
எழுச்சிப் பாலை §யாகென் றேத்த
மீளா வென்றி வேந்தன் கேட்டு
வாளுங் குடையும் வடதிசைப் பெயர்க்கென
உரவுமண் சுமந்த வரவுத்தலை பனிப்பப்

---

18. ஆகவென்று சொல்ல

19 - 24 இமயவரம்ப! சோழபாண்டியரை யல்லது நின்னை இகழ்ந்து கூறினரல்லர், அடுபோரண்ணலே? நீ வஞ்சினங் கூறுதறகு நின்னுடன் எதிர்க்கும மன்னரும் உளரோ, ஆதலால, நின் சினம தணிகவென்றன், இது **புரோகிதன்** வார்தீதை

25. ஆறிரு மதியினும - இராசி பன்னிரண்டிலும். காருகவடி - கிரகநிலை

26. ஐந்து கேள்வி - திதி, வாரம், நக்ஷதீதிரம், யோகம், கரணம்; நட்பு, ஆட்சி, உச்சம, பகை, நீசக்கோளுமாம. அமைந்தவன் - [1]மௌதீதிகன்.

30 - 31. இது [2]முழுதீதம், எழும் பக்கதீதையாகவெனச் சொல்ல.

34 உரவு மண் - உரதீத மண்

அடி, 18 சிலப். 19 28, கு - ரை அடி, 21 அஞ்சினர்க்களிதீதல். **சிறுபாண்** 210. அடி, 25-31 **முல்லை**. 55-8.

அடி, 33. "வாளுங் குடையு மயிர்க்கண் முரசும், நாளொடு பெயர்தீது", "மறமிகு வாளு மாலைவெண் குடையும் புறநிலைக் கோட்டப் புரிசையிற் புகுதீதி" (சிலப 5 91-2. 26 · 44-5), "குடைநாட் கொளல் வாணுடகொளல் குறியாவர சவுணன், உடைநாளழி வறியாதவ னுரஞென்றிய வாழிப், படைநாரணன் மகன்வெண்குடை பறறக்குடை யேயாய், அடையாவமர் வுறறுலன முடிமீக்குடை நிழல" (**தணிகைப்.** சீபரி. 63)

[1] மௌதீதிகன் - மௌகூர்தீதிகன்.

[2] முழுதீதம் - முகூர்தீதம், இது முகிழ்தீதமெனவும் வழங்கும்.

(பி - ம்.) †'குடிநடுக்குறுக்குங்' ‡'ருறைந்து' ¶'ரெல்லாந்திரு' §'யேகென்'

பொருந ரார்ப்பொடு முரசெழுந் †தொலிப்ப
இரவிடங் கெடுத்த ‡நிரைமணி விளக்கின்
விரவுக்கொடி யடுக்கத்து நிரயத் தானையோ
டைம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
¶வெம்பரி யானை வேந்தற் கோங்கிய
கரும வினைஞருங் கணக்கியல் வினைஞரும்
தரும வினைஞருந் தந்திர வினைஞரும்
மண்டிணி ஞால மாள்வோன் வாழ்கெனப்
பிண்ட முண்ணும் பெருங்களிற் றெருத்தின்
மறமிகு வாளு மாலைவெண் குடையும்
புறநிலைக் கோட்டப் புரிசையிற் புகுத்திப்
புரைதீர் வஞ்சி போந்தையிற் றெடுப்போன்
அரைசுவிளங் கவைய §முறையிற் புகுதர
அரும்படைத் தானை யமர்வேட்டுக் கலித்த
பெரும்படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்துப்
பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி
வாய்வா ணெடுந்தகை மணிமுடிக் கணிந்து

---

36. இரவிடங்கெடுத்த விளக்கிலே யென்றதி . . .. விடுகிறபடி யாலே . .. .

37. நிரயத்தானை - மாற்றுர்க்கு நரக வேதனையைச் செய்யும் தானை.

40. கரும வினைஞர் - புரோகிதர்.

43. பிண்டமுண்ணும் பெருங்களிறு - ....பிண்டத்துக்குரிய களிறு, படடவர்த்தனம

45. புகுத்தி - புகவிடு. 46. தொடுப்போன் - சேரன்.

அடி, 37 நிரயத்தானை . " நிரைய வொள்வா ளிளையர் பெருமகன் " (குறுந். 258 6); " நிரைகளி ருழுகிய நிரைய வெள்ளம் " (பதிற். 15 . 4)

அடி, 38 . சிலப். 5 157, மணி. 1 17, பெருங். 2. 5 . 6, 13 : 3, தொல். கிளவி 57, ந மேற்.

அடி 42 " மண்டிணிந்த நிலனும் " (புறநா. 2 1), ப. வெ. 35.

அடி, 46. அரசர், தமக்குரிய அடையாளப்பூ முதலியவற்றேடு புறத்திணைக்குரிய பூ முதலியவறறையும் விரவுவித்து அணிந்து கொள்ளுதல் மரபு : 25 : 145 - 6, கு - ரை.

அடி, 47 " அரசுவிளங் கவையத்து " (சிலப். 26 : 95)

அடி, 49 · சிலப் 25 · 146 , " பெருஞ்சோ றுகுத்தற் கூறியும், கடுஞ்சின வேந்தே " (பதிற் 30 . 43-4)

அடி, 50 · சிலப். 25 148.

(பி - ம்.) † ' தார்ப்ப ' ‡ ' மாமணி ' ¶ ' வெம்பரித் தானை வேந்தர்க் ' § ' முறைமையிற் '

ஞாலங் காவலர் நாட்டிறை பயிரும்
காலை முரசங் கடைமுகத் தெழுதலும்
நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலை யொடு†புனைந்
திறைஞ்சாச் சென்னி யிறைஞ்சிவலங் கொண்டு
‡மறையோ ரேந்திய வாவுதி நறும்புகை
நறைகெழு மாலையி னல்லகம் வருத்தக்
கடக்களி யானைப் பிடரத்தலை யேறினன்
குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென
ஆடக மாடத் தறிதுயி ¶லமர்ந்தோன்
சேடங் கொண்டு சிலர்நின் §றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின ஞகித் தகைமையிற் செல்வுழி
நாடக மடந்தைய ராடரங் கியாங்கணும்
கூடையிற் பொலிந்து கொற்ற வேந்தே

---

52 - 3. அரசர் இடும் திறையை அழைக்கும் முரசம்.

58 ஏந்திய - எடுத்த புகை - அக்கினி கோதீதிரம்.

57 - 8 அக்கினி கோதீதிரங்களையும் நமக்கரிதீது.

62. ஆடகமாடம் - திருவனந்தபுரம் : இரவிபுரம் என்பாரும் உளர்

(60) ஏறினன் (67) தாங்கினஞகிச் செல்வுழி.

69. கூடையிற் பொலிந்து - குவித்த கையுடனே பொலிந்து, கூடைக்கை - இரடடை ஒறறைக் கை.

அடி, 53 சிலப் 17 5-6, கு - ரை அடி, 54 சிலப். 25 · 137. அடி, 55-7. இறைவனை யன்றிப் பிறரை வணங்காச் சென்னி : "கடவுளை வழிபடி னல்லது, வணக்க மிலலா வணிதீதகு சென்னி" (பெருங். 1. 42 . 8-9), இறைவன்கோயிலை வலம்வந்து வணங்கல் : "பணியிய ரதீதைநின் குடையே முனிவர், முக்கட செல்வர் நகர்வலஞ் செயறகே" (புறநா. 6 : 17-8). அடி, 61 . "குடக்கோச் சேரலன் குட்டுவன் பெருந் தகை" (மணி. 28 . 103). அடி, 62 : "ஆடக மாடத் தரவணைக் கிடந் தோன்" (சிலப். 30-51), ஆடகமாடம்" (இறை. 23, மேற்.) அடி, 68 . சிலப். 27 245-50

(பி - ம்.) †'பொருந்தி, யிறைஞ்சாச்' ‡'மறையோ ராக்கிய வாகுதி நறும்புகை, நறைகெழு மாலை நல்லகம்' ¶'லமைந்தோன்' §'றேதீத, நாடக மடந்தையர்'

வாகை தும்பை மணித்தோட்டுப் போந்தையோ
டோடை யானையி னுயர்முகத் தோங்க
வெண்குடை நீழலெம் வெள்வளை †கவர்ந்து
கண்களி கொள்ளுங் காட்சியை யாகென
மாகதப் புலவரும் ‡வைதா ளிகரும்
சூதரும் நல்வலந் தோன்ற வாழ்த்த
யானை வீரரு மிவுளித் தலைவரும்
வாய்வாண் மறவரும் வாள்வல னேத்தத்
தானவர் தம்மேற் றம்பதி நீங்கும்
வானவன் போல வஞ்சி நீங்கித்
¶தண்டலைத் தலைவருந் தலைத்தார்ச் சேனையும்
வெண்டலைப் §புணரியின் விளிம்புசூழ் போத
மலைமுதுகு நெளிய நிலைநா டதர்பட
உலக மன்னவ னெருங்குடன் சென்றூங்
காலும் புரவி யணித்தேர்த் தானையொடு
நீல கிரியி னெடும்புறத் திறுத்தாங்
காடியல் யானையுந் தேரு மாவும்
பீடுகெழு மறவரும் பிறழாக் காப்பிற்
பாடி யிருக்கைப் பகல்வெய் யோன்றன்
இருநில மடந்தைக்குத் திருவடி யளித்தாங்

---

70 - 71. அரசர்சூடுவன யானைக்குஞ் சூடுதலின், வாகையும் தும்பையும் போந்தையோடு நின யானைமுகத்து ஓங்கித் தோன்ற வென்றார்.

(68) நாடகமடந்தையர் (73) காட்சியை யுடையையாகவென வாழ்த்தா நிறக.

75. நல்வலம் - களவெற்றி. 78. தானவர் - அசுரர்.

80. தார் - தூசிப்படை. 81. கடற்கரை அருகே போத.

85. நீலகிரி ஒருமலை. 88 நடுவுநிலை விருமபுவோன்

88 - 9. சேரன் தான் ஆள்கின்ற பூமிதேவிக்குத் திருவடியளித்து; அங்கே யானையினின்றிழிந்து கால நிலம தோயச்செய்தலால்..... ... .

அடி, 70 "போந்தையொடு தொடுத்த பருவத் தும்பை", "தோடார் போந்தை தும்பையொடு முடித்து" (சிலப். 26 219, 27 . 45)

அடி, 74 - 5 "சூதர் மாகதர் வேதா ளிகரொடு" (சிலப். 5 48); "சூத ரேத்த மாகதர் நுவல, வேதா ளிகரொடு" (மதுரைக். 670 - 71)

அடி, 77 · "வாண்மீக் கூறறதது வயவ ரேத்த" (சிறுபாண். 212)

அடி, 80, தலைதாரச்சேனை மணி 19 123.

அடி, 81 . "வெண்டலைப் பணரி" (புறநா. 2 . 10, 31 · 14)

அடி, 86 : ஆடியல்யானை . புறநா. 165 7, பெருங் 2 10 : 15.

(பி - ம்.) † கவருங்கண் ' ‡ 'வேதாளியரும் ' ¶ ' தண்டத் தலைவருந் தலைச்சார்ச் சேனை ' § 'புணரி விசும்புசூழ் போக '

கருந்திறன் மாக்க ளடியீ டேத்தப்
பெரும்பே ரமளி யேறிய பின்னர்
இயங்குபடை யரவத் தீண்டொலி யிசைப்ப
விசும்பியங்கு முனிவர் வியனில மாளும்
இந்திர திருவனைக் †காண்குது மென்றே
அந்தரத் திழிந்தாங் கரசுவிளங் கவையத்து
மின்னெளி மயக்கு மேனியொடு தோன்ற
மன்னவ னெழுந்து வணங்கிநின் ரேனைச்
செஞ்சடை வானவ னருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய ‡வானவ கேளாய்
மலயத் தேகுதும் வான்பே ரிமய
நிலயத் தேகுத னின்கருத் தாகலின்
அருமறை யந்தண ராங்குளர் வாழ்வோர்
¶பெருநில மன்ன காத்தனின் கடனென்
ருங்கவர் வாழ்த்திப் போந்ததற் பின்னர்
வீங்குநீர் ஞால மாள்வோன் வாழ்கெனக்
கொங்கணக் கூத்தருங் கொடுங்கரு நாடரும்
§தங்குலக் கோதிய தகைசா லணியினர்
இருள்படப் பொதுளிய சுருளிருங் குஞ்சி
மருள்படப் பரப்பிய வொலியன் மாலையர்
வடஞ்சுமந் தோங்கிய வளரிள வனமுலைக்
கருங்கய னெடுங்கட் காரிகை யாரோ
டிருங்குயி லால வினவண் டியாழ்செய

---

92. இயங்குபடை - சேனை, வெளிப்படை. இசைப்ப - இசைத்த லால்.

101. நிலயத்து - நிற்கிறவிடத்து.

102 - 4. அங்கு அந்தணர் வாழ்வாருளர், அவர்களை நலியாது காத்தல் நினது கடனென்று பெயர்ந்தபின்.

106. கொங்கணதேசத்துக்கூத்தர்.

107. குலத்திற்கு ஒதிய ஒப்பனையினராய். 108. குஞ்சியிடத்து.

109 ஒலியன்மாலை - தழைத்த மாலை.

அடி, 95. அரசுவிளங்கவையம் சிலப். 26 . 47.

அடி, 98-9 "ஆனே றூர்ந்தோ னருளிற் ரேன்றி, மாநிலம் விளக்கிய மன்னவன்" (சிலப். 30 141-2). அடி, 105 · சிலப். 26 : 155, 173.

அடி, 106. பிரயோக. 2, உரை, மேற்.

அடி, 108 . "இருள்படப் பொதுளிய" (முருகு. 10)

(பி - ம்) † 'காண்குவ' ‡ 'வானவன்' ¶ 'பெருநிலை' § 'தன்குலக் கெழுதிய'

அரும்பவிழ் வேனில் வந்தது வாரார்
காதல ரென்னு மேதகு சிறப்பின்
மாதர்ப் பாணி வரியொடு தோன்றக்
கோல்வளை மாதே கோலங் கொள்ளாய்
காலங் காணுய் கடிதிடித் துரறிக்
காரோ வந்தது காதல ரேறிய
தேரோ வந்தது செய்வினை முடித்தெனக்
காஅர்க் குரவையொடு கருங்கய னெடுங்கண்
கோற்றொடி மாதரொடு குடகர் தோன்றத்
தாழ்தரு கோலத்துத் †தமரொடு சிறந்து
வாள்வினை முடித்து மறவாள் வேந்தன்
ஊழி வாழியென் றேவர் தோன்றக்
கூத்துள் ‡படுவோன் காட்டிய முறைமையின்
ஏத்தின ரறியா விருங்கல ¶னல்கி
வேத்தின நடுக்கும் வேலோ னிருந்தூழி
நாடக மகளிரீ ரைம்பத் திருவரும்
§கூடிசைக் குயிலுவ ரிருநூற் றெண்மரும்
தொண்ணூற் றறுவகைப் பாசண் டத்துறை
நண்ணிய நூற்றுவர் நகைவே ழம்பரும்
கொடுஞ்சி நெடுந்தே ரைம்பதிற் றிரட்டியும்
கடுங்களி யானை யோரைஞ் ஞூறும்
ஐயீ ராயிரங் கொய்யுளைப் புரவியும்
எய்யா வடவளத் திருபதி னுயிரம்
$கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடமும்

---

115 பாணிவரி - இப்பொருள் வைத்த உரு

(120) கார்காலத்தைப் பாடின பாட்டோடு (121) இவர்கள் தோன்ற; இவர் குடகர்

124. ஓவர் - ஏதீதாளர். 125 கூத்துள்படுவோன் - ஆடலாசிரியன்.

135 எய்யா வளம - புறம்பு ஓரிடத்தும் கண்டறியா வளம, அது தான் வடக்கிற பாகுடம்

136 இன்னசரக்கென்று எழுதித்துப்படுத்தன சகடம் - கொல்லாப் பண்டி

அடி, 127 சிலப் 26 17 - 8 அடி, 130 சிலப் 9 14-5, அடி, 131 நகை வேழம்பர் சிலப் 5 53 [அடியார்.

அடி, 136 "கண்ணெழுதீத்துப் படுத்த வெண்ணுப் பல்பொதி" (சிலப் 5 · 112)

(பி - ம்) †'தமரொடுஞ் சிறந்து, வாழ்வினை' ‡'படுவோள்' ¶'நல்க வேதீனர் நடுக்கும' §'கூடைக் குயிலுவ' $'கண்ணெழு வுடையன கைபுனை சகடமும'

சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற
கஞ்சுக †முதல்வரீ ரைஞ்ஞூற் றுவரும்
சேயுயர் விற்கொடிச் செங்கோல் வேந்தே
வாயி லோரென வாயில்வந் திசைப்ப
நாடக மகளிரு நலத்தகு மாக்களும்
‡கூடிசைக் குயிலுவக் கருவி யாளரும்
சஞ்சயன் றன்னெடு வருக வீங்கெனச்
செங்கோல் வேந்தன் றிருவிளங் கவையத்துச்
சஞ்சயன் புகுந்து தாழ்ந்துபல வேத்தி
ஆணையிற் ¶புகுந்தவீ ரைம்பத் திருவரொடு
மாண்விளை யாளரை வகைபெறக் காட்டி
வேற்றுமை யின்றி நின்னெடு கலந்த
நூற்றுவர் கன்னருங் §கோற்றொழில் வேந்தே
வடதிசை ||மருங்கின் வானவன் பெயர்வது
கடவு ளெழுதவோர் கற்கே $யாயின்
ஓங்கிய விமயத்துக் கற்கால் கொண்டு
வீங்குநீர்க் கங்கை நீர்ப்படை செய்தாங்
கியாந்தரு மாற்றல மென்றன ரென்று
வீங்குநீர் ஞால மாள்வோய் வாழ்கென
அடல்வேன் மன்ன ராருயி ருண்ணும்
கடலந் தானைக் காவல னுரைக்கும்
பால குமரன் மக்கண் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்

137. சஞ்சயன் - தூதரில் தலையாயவன். தலைக்கீடு - மயிர்க்கட்டு.

138. கஞ்சுகமுதல்வர் - சட்டையிட்ட பிரதானர்.

146. ஆணையிற புகுந்த ாரைம்பதிருவரென்றது முன்சொன்ன நாடக மகளிரை, கன்னரென்பார் வரக்காட்டினர்.

158 - 9 பாலகுமரன் மக்கள் - கனகனும விசயனுமென்பார்

அடி, 150 - 51 . " இமய மாலவரைக் கெங்கோன் செல்வது, கடவு ளெழுதவோர் கறகே யாதலின் " (சிலப். 25 168 - 9). அடி, 155. சிலப் 26 105, 173.

அடி, 159 . " யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற், சோகாப்பர் சொல்லிழுக்குப் படடு " (குறள், 12/), " ஆக்கப் படுக்கு மருந்தலை வாய்ப் பெய்விக்கும், போக்கப் படுக்கும் புலைநரகதி துயப்பிக்கும், காக்கப் படுவகா விந்திய மைந்தினும், நாக்கல திலலை நனிவெல்லு மாறே " (வளையாபதி)

(பி - ம்) † ' முதல்வ ரைஞ்ஞூற் றுவரும ‡ ' கூடிய குயிலுவக் ' ¶ ' புகுந்தவைம்பதி ..னனரமாண்விளை ' § ' கோத்தொழில் ' || ' மருங்கு வான்பே ரிமையதீதுக் ' $ ' யாகி, லோங்கியர் '

விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
அருந்தமி ழாற்ற லறிந்தில ராங்கெனக்
†கூற்றக் கொண்டிச் சேனை செல்வது
நூற்றுவர் கன்னர்க்குச் சாற்றி யாங்குக்
கங்கைப் பேர்யாறு கடத்தற் காவன
வங்கப் பெருநிரை செய்க தாமெனச்
சஞ்சயன் போனபின் கஞ்சுக மாக்கள்
எஞ்சா நாவின ரீரைஞ் ஞூற்றுவர்
சந்தின் குப்பையுந் தாழ்நீர் முத்தும்
தென்ன ரிட்ட திறையொடு கொணர்ந்து
‡கண்ணெழுத் தாளர் காவல் வேந்தன்
மண்ணுடை ¶முடங்கலம் மன்னவர்க் களித்தாங்
காங்கவ ரேகிய பின்னர் மன்னிய
வீங்குநீர் ஞால மாள்வோ ரேங்கிய
நாடாள் செல்வர் நலவல னேத்தப்
பாடி யிருக்கை நீங்கிப் பெயர்ந்து

---

160. விருந்தின் மன்னர் - தமிழ் வேநதர் ஆற்றல் அறியாத புதிய அரசர்

160 - 61 இவருடன கூடித் தமிழ வேந்தரை இகழ்ந்து உரைதீதார்.

162. கூறறமபோலும கொண்டிசசேனை 'கூறறங் கொண்டிச் சேனை செல்வது' என்று பாடமாயின், கூறறம் பின்செல்ல இப்படை செல்லுகிறபடியையென்க.

161 - 2. அருநதமிழ் ஆறறல அறிநதிலரென்று சேனை செல்வ தெனச சேனை மேலிடடுக் கூறினை , தனக்கு அவர் நிகரன்மையின்.

166 கஞ்சுகமாக்கள் - தன தூதர்

167. எஞசா நாவினர் - வார்தீதை தப்பாத நாவினர் , அரசன் நினைவு தபபாத நாவினரென்றுமாம.

168 தாழ்நீர் - தங்குநீரமை

168 - 9 சந்தும் முதீதுமாகிய தென்னரிட்ட திறை.

169 கொணரநது - கொணர

170. கண்ணெழுதீதாளர் - திருமுகமெழுதுவார்

170 - 72 இவர் வரைநது இலசசினையிடடு அவர்கைக்கொடுப்பத் திருமுகங்கொண்டு அவர் போயபின்

171. அளிதீது - அளிப்ப.

அடி. 161. தமிழ - தமிழபபடை , சிலப 27 5 , பதிற். 63 . 9; புறநா. 19 . 2. அடி, 168. சநதனமும முதீதும தென்னர்க்குரியன : சிலப். 17 (29) கு - ரை

அடி, 171 : "மண்ணுடை முடங்கன் மாதவி யீதீததும் "(சிலப். 13 : 76)

அடி, 173 : சிலப். 26 105, 155

(பி - ம்.) † 'சிறறங்கொண்டு' ‡ 'கண்ணெழுதீ தாளரொடு காவல்' ¶ 'முடங்கன் மன்னவறகு'

கங்கைப்பே ரியாற்றுக் கன்னரிற் பெற்ற
வங்கப் பரப்பின் வடமருங் †கெய்தி
ஆங்கவ ரெதிர்கொள வந்நா டுகழிந்தாங்
கோங்குநீர் வேலி யுத்தர மரீஇப்
பகைப்புலம் புக்குப் பாசறை ‡யிருந்த
தகைப்பருந் தானை மறவோன் றன்முன்
உத்தரன் விசித்திர னுருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன் ¶றனுத்தரன் சிவேதன்
வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாம்
தென்றமி ழாற்றல் §காண்குதும் யாமெனக்
கலந்த கேண்மையிற் கனக விசயர்
நிலந்திரைத் தானையொடு நிகர்த்து மேல்வர
இரைதேர் வேட்டத் தெழுந்த வரிமாக்
கரிமாப் பெருநிரை கண்டுளஞ் சிறந்து
பாய்ந்த பண்பிற் பல்வேன் மன்னர்
காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப
||வெயிற்கதிர் விழுங்கிய துகிற்கொடிப் பந்தர்
வடித்தோற் கொடும்பறை வால்வளை நெடுவயிர்
$இடிக்குரன் முரச மிழுமென் பாண்டில்
உயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து
மயிர்க்கண் முரசமொடு மாதிர மதிரச்

179 உதீதரம் - வடபூமி

182 - 4 உதீதரன் விசித்திரன் முதலான மன்னவர்கள் கனகவிசயர்க்குத் துணையான அரசர்.

185 - 7. தமிழாறறலைக் காண்டுமெனக் கனகவிசயர் தானையுடனே ஒதீதுவர.

190. பாய்ந்த பண்புபோல.

191. காஞ்சித்தானை - [1] எதிரூன்றிய தானை

194 பாண்டில் - கஞ்சதாளம

196 மாதிரமதிர்தல் - இவை அதிரதீ தானுமதிர்தல்

194 - 6. முரசமுதலிய இவையிறரேடு

அடி, 184 கனகனும் விசயனும் மணி 26 86, சிலப் 26 . 13.

அடி, 187 " நிலந்திரைக்குங் கடறருனை " (புறநா 97 14)

அடி, 195 - 6 . " உயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து, [1] " உட்காது, எதிரூன்றல் காஞசி " (பழம்பாடல்)

(பி - ம்.) † ' கேறி, யாங்கவ ரெதிர்கொள வவர நாடுகழிந், தோங்கு நீர் ' ‡ ' இராஅதி, தகைப்பெருந்தானை ' ¶ ' றநுதீதிரன் ' § ' காண்குவநா மெனக் ' || ' வெயிறகொடி ' $ ' இடிக்கண் '

† சிலைத்தோ ளாடவர் செருவேற் றடக்கையர்
கறைத்தோன் மறவர் கடுந்தே ரூருநர்
வெண்கோட் டியானையர் ‡ விரைபரிக் குதிரையர்
மண்கண் கெடுத்தவிம் மாநிலப் பெருந்துகள்
களங்கொள் யானைக் கவிழ்மணி நாவும்
§ விளங்குகொடி நந்தின் வீங்கிசை நாவும்
நடுங்குதொழி லொழிந்தாங் கொடுங்கியுள் செறியத்
தாருந் தாருந் || தாமிடை மயங்கத்
தோளுந் தலையுந் துணிந்துவே ருகிய
சிலைத்தோண் மறவ ¶ ருடற்பொறை யடுக்கத்
தெறிபிண மிடறிய குறையுடற் கவந்தம்
$ பறைக்கட் பேய்மகள் பாணிக் காடப்
பிணஞ்சுமந் தொழுகிய நிணம்படு குருதியிற்
கணங்கொள் பேய்மகள் கதுப்பிகுத் தாட
†† அடுந்தேர்த் தானை யாரிய வரசர்

198. கறைதீதோல் - கருங்கடகு

202 கொடிநந்து - கொடியும சங்கும் முகத்துக்கட்டுவர்போலும் 'சங்கின் நா' எனருர, பேசுதலால, ஒலிபறறி

203. ஒழிந்து - ஒழிய உள்ளே துகள் செறிய.

206. உடற்பொறை - உடற்பாரம. 207 எறிபிணம் - வெட்டுண்ட பிணம்

208 பேய்மகள் தாளத்துக்குக் கவந்தம் ஆட

மயிர்க்கண் முரசு" (சிலப் 5 67-8), "கொலலேறறுப் பைந்தோல் சீவாது போர்த்த, மயிர்க்கண் முரச மோவில கறங்க" (மதுரைக். 732-3), "உருமிடி முரசமொடு" (முருகு 121), "ஏற்றுரி போர்த்த.. . முரசு" (மணி 1 29-31), "சாறறிடங் கொண்ட வேற்றுரி முரசும்", "ஏற்றுரி முரசி னிறைவன் மூதூர்க்கு" (பெருங் 1 38 100, 33 · 195), "ஏறறுரி முரச நாண" (சீவக 2142). அடி, 204. 'தார் - தூசிப்படை, தூசிப்படைக்கிலக்கணம, துன்னூசியின் முகம் போல நேர்ந்து நெடுகி இடை பரநது கடைதிரண்டு பரந்து சுழன்று வெளிப் படடிருதீதல்' (தக்க 515, உரை) அடி, 208 "பறையன்ன விழித்த கண்ணுள்" (தகடூர்யாத்திரை) "பேய்க்க ணன்ன பிளிறுகடி முரசம" (பட்டினப் 236) அடி, 209-10 "கணங்கொள் கூளியொடு கதுப்பிகுதீ தசைஇப், பிணநதின் யாக்கைப் பேய்மகள்" (பட்டினப். 259-60)

(பி . ம்) † 'சிலைக்கோ ளாடவர்' ‡ 'விடுபரிக்' § 'விளங்கொளி' || 'தம்மிடை' ¶ 'ருடறபொறி' $ 'பறைக்குரற்' †† 'நெடுந்தேர்த்'

கடும்படை மாக்களைக் கொன்றுகளங் †குவித்து
நெடுந்தேர்க் கொடுஞ்சியுங் கடுங்களிற் றெருத்தமும்
விடும்பரிக் குதிரையின் வெரிநும் பாழ்பட
எருமைக் கடும்பரி யூர்வோ னுயிர்த்தொகை
ஒருபக லெல்லையி னுண்ணு மென்ப
தாரிய வரச ரமர்க்களத் தறிய
நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்
போந்தையொடு தொடுத்த பருவத் தும்பை
ஓங்கிருஞ் சென்னி மேம்பட ‡மலைய
வாய்வா ளாமையின் வண்டமி ழிகழ்ந்த
காய்வேற் றடக்கைக் கனகனும் விசயனும்
ஐம்பத் திருவர் கடுந்தே ராளரொடு
செங்குட் டுவன்றன் சினவலைப் ¶படுதலும்
சடையின ருடையினர் சாம்பற் பூச்சினர்
பீடிகைப் பீலிப் பெருநோன் §பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளினர்
ஆடு கூத்த ராகி யெங்கணும்
ஏந்துவா ளொழியத் தாந்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற் ||படர்தரக்

215. எருமையாகிய பரியூர்வோன் - கூறறுவன்.
218 நூழிலாட்டுவதாக.
221. வாய வாளாமை - வாய் வறிது இராமை
225. உடையினர் - காஷாய முதலிய உடையினர், சந்நியாசிகள்.

அடி, 215-8 "மன்னுயிர்ப் பன்மையுங் கூறறத் தொருமையும், நின்னெடு தூக்கிய வென்வேற செழிய" (புறநா 19 3-4)

அடி, 216 "ஒருபக லெல்லை யுயிர்த்தொகை யுண்ட", "ஒருபக லெல்லை யுயிர்ப்பலி யூடி" (சிலப் 27 12, 130)

அடி, 217 - 8. "ஆரிய ரலறத் தாக்கிப் பேரிசைத், தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து, வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன் வஞ்சி" (அகநா. 396 16-9)

அடி, 220 "ஓங்கிருஞ் சென்னி மேமபட மிலைந்த" (பொருந. 145)

அடி, 221 - 2. "அரியிற போநதை யருந்தமி ழாற்றல், தெரியாது மலைந்த கனக விசயரை" (சிலப் 27 189-90)

அடி, 225-8. "மீனுய வேலையை யுறறூர் சிலர்சிலர் பசுவாய் வழி தொறு மேயவுறறூர், ஊனுர் பறவையின் வடிவுற றூர்சிலர் சிலர்நான் மறையுவ ருருவானுர், மானுர் கண்ணிள மடவா ராயினர் முன்னே தங்குழல் வகிர்வுறறூர், ஆனுர் சிலர்சில ரையா நின்சர ணென்றூர் நின்றவ ரரியென்றூர்" (கம்ப. அக்க 40)

(பி - ம்) †'குவிதீது, நூழிலாடடிய' ‡'மலைந்து' ¶'படுதீதலும்' §'பாளரிற்' ||'படர்ந்த'

கச்சை யானைக் காவலர் நடுங்கக்
†கோட்டுமாப் பூட்டி வாட்கோ லாக
‡ஆளழி வாங்கி யதரி திரிதத
வாளே ருழுவன் மறக்களம் வாழ்த்தித்
தொடியுடை நெடுங்கை தூங்கத் தூக்கி
முடியுடைக் கருந்தலை ¶முந்துற வேந்திக்
கடல்வயிறு கலக்கிய ஞாட்புங் கடலகழ்
இலங்கையி லெழுந்த சமரமுங் கடல்வணன்
தேரூர் செருவும் பாடிப் பேரிசை
முன்றேர்க் குரவை முதல்வனை வாழ்த்திப்
பின்றேர்க் குரவைப் பேயாடு பறந்தலை
முடித்தலை யடுப்பிற் பிடர்த்தலைத் தாழித்
தொடித்தோட் டுடுப்பிற் றுழைஇய வூன்சோறு
மறப்பேய் வாலுவன் வயினறிந் தூட்டச்

---

232. யானை எருதாக வாள் பிடிக்கும கோலாக.

233 ஆளழிவாங்கி - ஆளாகியபோரை இறங்கவிட்டு அதரிதிரிதத- கடாவிட்ட

235 தொடிக்கை - பேய்க்கை தூங்க - அசைய

236. முநதுற - முன்னுக

237 - 9. கடல்வயிறு கலக்கிய போர்முதல் மூன்றும் மாயவன் செய்தன இவன் மேலேறறிப் பூவைநிலையாறபாடுதல்.

240 - 41 முன்றேர்க்குரவையிலே முதல்வனை வாழ்த்திப் பின்றேர்க் குரவையிலே ஆடுதலிற பேயக்குரவையாயிறறு

242 பிடர்த்தலையாகிய தாழி.

244. பேயவாலுவன் - பேய்க்குச்சோறிடு மடையன்.

அடி, 231. கச்சையானை தக்க. 180.

அடி, 232 "யானை யெருதீதின் வாண்மட லோச்சி, அதரி திரிதத" (புறநா. 371 15-6)

அடி, 234 . வாளேருழுவன் . புறநா. 368 · 13.

அடி, 237 - 9 சிலப் 27 . 8 - 10, கு - ரை

அடி, 242 - 3 "ஆண்டலை யணங்கடுப்பின், வயவேந்த ரொண் குருதி, சினதீயிற பெயர்புபொங்கத், தெறலருங் கடுநதுப்பின், விறல் விளங்கிய விழுச்சூர்பபிற, ரெடிதிதோட்கை துடுப்பாக, ஆடுறற வூன் சோறு, நெறியறிநத கடிவாலுவன், அடியொதுங்கிப் பிறபெயராப், படையோர்க்கு முருகயர" (மதுரைக். 29 - 38). "முடிதிதலை யடுப் பாகப், புனறகுருதி யுலைக்கொளீஇத், தொடிதிதோட் டுடுபபிற துழநத வல்சி" (புறநா. 26 . 8-10), பு வெ 160.

(மேற்) 233. தக்க. 439, உரை.

(பி - ம்.) † 'கோட்டுமாபூட்டி' ‡ 'வாளரி வாங்கியதிரி திரிதத' ¶ 'முன்னுற'

சிறப்பூண் கடியினஞ் செங்கோற் கொற்றத்
தறக்களஞ் செய்தோ ணூழி வாழ்கென
மறக்கள முடித்த வாய்வாட் குட்டுவன்
வடதிசை மருங்கின் மறைகாத் தோம்புநர்
தடவுத்தீ யவியாத் தண்பெரு வாழ்க்கை
காற்றூ தாளரைப் போற்றிக் காமினென
வில்லவன் கோதையொடு வென்றுவினை முடித்த
பல்வேற் ருனைப் படைபல வேவிப்
பொற்கோட் டிமயத்துப் †பொருவறு பத்தினிக்
கற்கால் கொண்டனன் காவல ஞங்கென்

---

249. வாழ்க்கையென்றது, முன்புவந்த ஆகாசசாரிகள் சொன்ன வார்த்தையை (26 93 - 103) நினைந்து

250. காறறூதாளரை நீர் போறறிக் காமினெனச் சொல்லி.

254. காலகொள்கையாவது - கடவுள் வடிவெழுதத் தொடங்குதல்

(251) வில்லவன் கோதையோடே (252) படையையேவிக் (254) கற் செய்தலை அடிக்கொண்டான்.

(உசு) ‡கால்கோட் காதை முற்றிற்று

அடி, 248 - 9 "அருமறை யந்தண ராங்குளர் வாழ்வோர், பெரு நில மன்ன பேணினின் கடனென்று" (சிலப். 26 102 - 3)

அடி, 249. தடவுத்தீ தடா = தடவு - தூபமுட்டி, புறநா. 201 : 8; சீவக. 2373. அடி, 253 - 4 . பதிற். 5-ஆமபதிதுப பதிகம், 4.

(பி - ம்.) † 'பொதுவறு' ‡ 'கற்காலகொள்காதை'

இருபத்தேழாவது

நீர்ப்படைக் காதை



வடபே ரிமயத்து வான்றரு சிறப்பிற்
கடவுட் பத்தினிக் கற்கால கொண்டபின்
சினவேன் முன்பிற் செருவெங் கோலத்துக்
கனக விசயர்தங் கதிர்முடி யேற்றிச
செறிகழல் வேந்தன் றென்றமி ழாற்றல்
அறியாது மலைந்த வாரிய மன்னரைச்
செயிர்த்தொழின் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த்தொகை †யுண்ட வொன்பதிற் றிரட்டியென்
றியாண்டு மதியு நாளுங் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலங் கூட்டி யெண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கின்
ஒருபக லெல்லை யுயிர்ததொகை யுண்ட
செங்குட்டு வன்றன் ‡சினவேற் றானையொடு
கங்கைப் பேர்யாற்றுக் கரையகம் புகுந்து
பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை
நூற் ¶றிறன் மாக்களி னீர்ப்படை செய்து

---

2 கடவுடபத்தினி - பத்தினியாகிய கடவுள்

7. செயிரதீதொழின முதியோன - கூறறுவன்.

8 - 10 [1] உயிர்தீதொகை உண்டனவாகிய ஆண்டும் மதியும் நாளும கடிகையும ஒன்பதிற்றிரடடியென்று அவறறேடே கூடடி யெண்ண - தேவாசுர யுதீதம பதினெட்டாண்டிலும், இராமராவணயுதீதம் பதினெடடு மாததீதிலும, பாண்டவ துரியோதன யுதீதம பதினெடடு நாளிலும, செங்குடடுவனும கனகவிசயரும செயத யுதீதம பதினெட்டு நாழிகையிலும முடிநதவென்றெண்ண.

(6) மனனரை (12) உயிர்தீதொகையுண்ட (13) செங்குட்டுவன்.

அடி, 5 தமிழ் - தமிழப்படை ; சிலப் 26 161, கு - ரை.

அடி, 5 - 6 சிலப் 27 189 - 90.

அடி, 12 "ஒருபக லெல்லை யுயிர்ப்பலி யூட்டி" (சிலப். 27 . 130)

[1] இக்குறிப்பு, "எண்கொண்டஞாடபு" (சீவக 2353) என்னும் மூலதீதாலும, அதற்கு, 'தேவாசுரம இராமாயணம் மாபாரதம என்கின்ற போர்' என்றெழுதிய உரையாலும, "தேவாசுர ராமாயண மாபாரத மூளவென், ரேவாவுரை யோயுமபடி யுளதப்பொரு களமே" (கலிங்க. களம் 1) என்பதனாலும் அழகுற்றுப் பொருடபொடர்புபெற்று விளங்குதல் காண்க

அடி, 15 - 6 . பதிற். 5-ஆம் பதீதுப் பதிகம், 4 - 7.

(பி - ம்.) † 'யுண்டன ஞென்பதிற' ‡ 'செருவேற்' ¶ றிறமாக்கள்'

மன்பெருங் கோயிலு மணிமண் டபங்களும்
பொன்புனை யரங்கமும் புனைபூம் பந்தரும்
உரிமைப் பளிளியும் விரிபூஞ் சோலையும்
திருமலர்ப் பொய்கையும் வரிகா ணரங்கமும்
பேரிசை †மன்னர்க் கேற்பவை பிறவும்
ஆரிய மன்ன ரழகுற வமைத்த
தெள்ளுநீர்க் கங்கைத தென்கரை யாங்கண்
வெள்ளிடைப் பாடி வேந்தன் புக்கு
நீணில ‡மன்னர் நெஞ்சுபுக லழித்து
¶வானவ மகளிரின் வதுவைசூட் டயர்ந்தோர்
உலையா வெஞ்சம மூர்ந்தம ருழக்கித்
தலையுந் தோளும் விலைபெறக் கிடந்தோர்
நாள்விலைக் கிளையு ணல்லம ரழுவத்து
வாள்வினை முடித்து மறத்தொடு §முடிந்தோர்
குழிகட் பேய்மகள் குரவையிற் றொடுத்து
வழிமருங் கேத்த வாளொடு மடிந்தோர்
கிளைக டம்மொடு கிளர்பூ ணுகத்து
வளையோர் மடிய மடிந்தோர மைந்தர்
மலைத்துத் தலைவந்தோர் வாளொடு மடியத்
தலைத்தார் வாகை தம்முடிக் கணிந்தோர்
திண்டேர்க் கொடுஞ்சியொடு தேரோர் வீழப்
புண்டோய் குருதியிற் பொலிந்த மைந்தர்
மாற்றருஞ் சிறப்பின் மணிமுடிக் கருந்தலைக்

---

24. வெள்ளிடைப்பாடி - வெளியான நிலத்துப் பாசறை.
26. தெய்வமகளிரால் மாலை சூட்டப்படடோராவார் - வீரஞ்செய்து பட்டவர்
27. ஊர்ந்து - அடர்ந்து.
28. விலைபெற - அரசரகண்டு நேயத்தோராம்படி.
29. அமரழுவம் - சமரபூமிப் பரப்பு
30. வாளாறசெய்யும விளைகளெல்லாவற்றையும் செய்துமுடிதீது.
32. வழிமருங்கேத்த - வழியிலுள்ளாரையேத்த.
33. கிளைகள - போரில் உடனின்று பட்டவர்கள்.
33-4. உறவான வீரர் தமமொடு மடிந்தோர், ஸ்திரீகள்மடிய மடிந்தோர்.
○ 36. தலைதாார் - [1] தூசி வாகையணிந்தோர் - மாற்ருர் புறதீதைதீ தாங்கள் பெற்றவளவிலே மீண்டோர்.

---

[1] தூசி . சிலப. 26 . 204, கு - ரை.

(பி - ம்) † 'மன்னற் கொப்பவை' ‡ 'மறவர்' ¶ 'வானவர்' § 'மடிந்தோர்'

கூற்றுக்கண் ணுேட வரிந்துகளங் கொண்டோர்
நிறஞ்சிதை கவயமொடு நிறப்புண் கூர்ந்து
புறம்பெற வந்த போர்வாண் மறவர்
வருக தாமென வாகைப் பொலந்தோடு
பெருநா ளமயம் பிறக்கிடக் கொடுத்துத்
தோடார் போந்தை தும்பையொடு முடித்துப்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தன்
ஆடுகொண் †மார்போ டரசுவிளங் கிருக்கையின்
மாடல மறையோன் வந்து தோன்றி
வாழ்க வெங்கோ மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலே ‡நெரித்தது முதுநீர் ஞாலம்
அடிப்படுத் தாண்ட வரசே வாழ்கெனப்
பகைப்புலத் தரசர் ¶பலரீங் கறியா
நகைத்திறங் கூறினை நான்மறை யாள
யாதுநீ கூறிய §வுரைப்பொரு ளீங்கென
மாடல மறையோன் மன்னவற் குரைக்கும்
கானலந் தண்டுறைக் கடல்விளை யாட்டினுள்
மாதவி மடந்தை வரிநவில் பாணியோ
டூடற் காலத் தாழ்விளை யுருத்தெழக்

---

44 பெரியநாளிற் கொடுக்கும் பொழுது ஒழிய நெடுமபொழுதிருந்து கொடுத்து, 'பெருநாள்' என்றுர கொடுக்கிற நாளாதலால்

(26) 'வதுவை சூடடயரந்தோர' முதல (34) 'வளேயோர் மடியமடிந்தோர்' இறுதி பட்டவர்களேயெண்ணி இவர்கள் மைந்தரென ஒரெண்ணுக்கி மேல படாது பொருது வென்றவர்களேயும கூடடியெண்ணி இவர்களுக்கு (43 - 4) வாகை கொடுத்தென்றுர்.

46. வீரரைப்பாடும் புறத்துறையெல்லா முடித்துப் பாட்டுண்ட வேந்தன்.

47 வெற்றிகொண்ட மார்போடே.

53 - 4. மாற்றரசர் பலரும் அறியாத சிரிப்பின் கூறென்றது (51) நெரித்ததென்றதனே. 'நானறியாத நகை' என்னுது 'மன்னர் பலருமறியாத' என்றுன் இராசபாவத்தாலே.

அடி, 40. "கூறறுக்கண் ணுேடிய வெருவரு பறநதலே" (புறநா. 19 . 16)

அடி, 43 . சிலப். 26 . 70 - 71, கு - ரை.

அடி, 45 : சிலப். 27 . 112.

அடி, 46 "பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்வி" (சிறுபாண். 228), மு புறநா. 21 11.

(பி - ம்.) †'மகளிரோ' ‡'யேற்றி' ¶'பரிசீங் கறியாது' §'வுரை யீங்கென்னென'

கூடாது †பிரிந்து குலக்கொடி தன்னுடன்
மாட மூதூர் மதுரை புக்காங்
கிலேத்தார் வேந்த ‡னெழில்வா னெய்தக்
கொலேக்களப் பட்ட கோவலன் மனேவி
குடவர் கோவே நின்னெடு புகுந்து
வடதிசை மன்னர் மணிமுடி $யேறினள்
இன்னுங் கேட்டரு ளிகல்வேற் றடக்கை
மன்னர் கோவே யான் §வருங் காரணம்
மாமுனி பொதியின் மலேவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை யாடி மீள்வேன்
ஊழ்வினேப் பயன்கொ லுரைசால் சிறப்பின்
வாய்வாட் டென்னவன் மதுரையிற் சென்றேன்
வலம்படு தானே மன்னவன் றன்னேச்
சிலம்பின் வென்றனள் சேயிழை யென்றலும்
தாதெரு மன்றத்து மாதரி யெழுந்து
கோவலன் றீதிலன் கோமகன் பிழைத்தான்
அடைக்கல மிழந்தே னிடைக்குல மாக்காள்
குடையுங் கோலும் பிழைத்த வோவென
இடையிரு ளியாமத் தெரியகம் புக்கதும்
தவந்தரு சிறப்பிற் ||கவுந்தி சீற்றம்
நிவந்தோங்கு செங்கோ னீணில வேந்தன்
போகுயிர் ¶தாங்கப் பொறைசா லாடடி
††என்னே டிவர்வினே யுருத்த தோவென
உண்ணு நோன்போ ‡‡டுயிர்பதிப் பெயர்த்ததும்
பொற்றேர்ச் செழியன் மதுரை மாநகர்க்
குற்றது மெல்லா மொழிவின் றுணர்ந்தாங்

77. 'பிழைத்தவோ' என்றுள, மூன் பிழையாமைபறறி.
79. சீற்றம - சீற்றத்தை
81. சபியாதபடி தணிதீதது அவன் மரணம்.
83. ஊணும மாற்றிபபோய

அடி, 63 . சிலப பதி 31.
அடி, 64 . "குடக்கோச் சேரலன் குட்டுவர் பெருந்தகை" (மணி. 28 103)
அடி, 74 தாதெருமன்றம் சிலப். 16 . 102, கு - ரை
அடி, 83 "உயிர்பதிப பெயர்தீதமை யுறுக" (சிலப். 25 . 97); "உண்ணு நோன்போ டுயிர்பதிப் பெயர்பபுழி" (மணி 14 : 95)
(பி - ம்.) †'பிரிந்த' ‡'லுயர்வா னெய்தக்' $'யேறறினள்' §'வருகாரண, மமரமுனிவனமலே' ||'கவுந்தியடிகள்' ¶'தாங்காப்' ††'என்னெடுவர்வினே' ‡‡'டுயர்பதிப் பெயர்ந்ததும்'

கென்பதிப் பெயர்ந்தே னென்றுயர் †போற்றிச்
செம்பியன் மூதூர்ச் சிறந்தோர்க் ‡குரைக்க
மைந்தற் குற்றது மடந்தைக் குற்றதும்
செங்கோல் வேந்தற் குற்றதுங் கேட்டுக்
கோவலன் ருதை கொடுந்துய ரெய்தி
¶மாபெருந் தானமா வான்பொரு ளீத்தாங்
கிந்திர விகார மேழுடன் புக்காங்
கந்தர சாரிக ளாறைம் §பதின்மர்
பிறந்த யாக்கைப் பிறப்பற முயன்று
துறந்தோர் தம்முன் றுறவி யெய்தவும்
துறந்தோன் மனைவி மகன்றுயர் பொருஅள்
||இறந்ததுய ரெயதி யிரங்கிமெய் விடவும்
கண்ணகி தாதை கடவுளர் கோலத்
தண்ணலம் பெருந்தவத் தாசீ வகர்முன்
புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவும்
தானம் புரிந்தோன் றன்மனைக் கிழத்தி
$நாள்விடுஉ நல்லுயிர் நீத்துமெய் விடவும்
மற்றது கேட்டு மாதவி மடந்தை

---

92. இந்திரவிகாரம - இந்திரனுல் நிருமிக்கப்பட்ட அரங்கு.

93 - 5. ஆறைமபதின்மர், அவர் தாம் முன்பு பிறந்துவருகிற யாக்கை பிறப்பற முயன்று துறந்தாரென்று விசேடணம்.

102. நாள்விடுஉ - நாளைவிடு ; விணையெச்சம்.

அடி, 92-3 . "அந்தர சாரிக ளறைந்தனர் சாற்றும், இநதிர விகார மேழுடன் போகி" (சிலப் 10 . 13-4), "இந்திர விகார மேழுமேதீ துதலின்", "அந்தர சாரிக ளமர்ந்தினி துறையும், இந்திர விகார மென வெழில் பெற்று" (மணி 26 55, 28 69-70)

அடி, 99. ஆசீவகம் - சமணமததின் பாகுபாடுகளுள் ஒன்று ; இம் மததினர்க்குத் தெய்வம் மற்கலி என்றும, நூல் நவகதிர் என்றும் கூறுவர் , "என்றலு மறகலி தானே யிறையினி, ஒன்பது வாங்கதிர் நூல்யா முடையன, மன்பெரு நுண்பொரு ளுந்தியல் பாயவை, இன்ப நிகழ்ச்சியுங்காழ்ப்பா டெனச்சொல" (நீலகேசி ஆசீவக. 13)

அடி, 103-8 கோவலன் இறந்தமை கேடடு மாதவி பௌதத்தப்பள் ளியையடைந்து துறவு பூண்டமை, "போதியின்கீழ மாதவர்முன் புண் ணியதீதா னமபுரிந்த, மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழீ" [சிலப். 29 (17)], "ாங்கிம மாதவ ருறைவிடம் புகுந்தேன், மறவண நீத்த மாசறு கேள்வி, அறவண வடிக ளடிமிசை வீழநது, மாபெருந் துன்பங் கொண்டுள மயங்கிக், காதல னுற்ற கடுந்துயர் கூற ...உரவோ னருளி னன்", "கோவல னிறந்தபின் கொடுந்துய ரெயதி, மாதவி மீதவர் பள்ளியு ளடைந்ததும்" (மணி 2 59-69, 18 . 7-8) என்னுமிடங்களி லும கூறப்படடுள்ளது.

(பி - ம்) †'போலச்' ‡'குரைப்ப' ¶'மாபெருந் தான மாண்பொரு ளீய்ந்தாங்' §'பதின்மர்முன்' ||'இறந்துயிர் நீங்கி' $'நாள்வீடு'

†நற்றுய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வான்றுய ருறுக்கும்
கணிகையர் கோலங் ‡காணு தொழிகெனக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித தானம் புரிந்தறங் கொள்ளவும்
என்வாய்க் கேட்டோ ரிறந்தோ ருண்மையின்
நன்னீர்க் கங்கை $யாடப் போந்தேன்
மன்னர் கோவே வாழ்க வீங்கெனத்
தோடார் போந்தை தும்பையொடு முடித்த
வாடா வஞ்சி வானவர் பெருந்தகை
மன்னவ னிறந்தபின் வளங்கெழு சிறப்பின்
§தென்னவ னுடு செய்ததீங் குரையென
நீடுவா ழியரோ நீணில ||வேந்தென
மாடல மறையோன் மன்னவற் குரைக்குநின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த ¶பண்பின ரொன்பது மன்னர்
இளவரசு பொருஅ ரேவல் ††கேளார்
வளநா டழிக்கு மாண்பின ராதலின்
ஒன்பது குடையு மொருபக லொழித்தவன்

---

104. நறறிறமபடர்கேன் - நற்றிறம் படரக்கடவேன்.

105 - 6. மணிமேகலையை கணிகையர்கோலங் காணுதொழிக வென்று நற்றுய்க்குச் சொலலி, துன்பத்தைச் செய்யும் கணிகையர் கோலமென்றுள், அக்கோலத்தால் தான் துன்பமுறுதலால்.

90-110. அவர்கள் இப்படிச் செய்யாநிற்க அவரின் இறந்தோருண் டாகையாற் கங்கையாடப் போந்தேனென்றுன்.

111. ாங்கு - இப்பூமியின். 114. மன்னவன் - பாண்டியன்.

119. தவற்றுல் ஒத்த பண்பினையுடையர்.

அடி, 105-8 . "மணிமேகலை, அருந்தவப் படுத்த லல்ல தியாவதும், திருந்தாச் செய்கைத் தீதிதொழிற் படாஅள்" (மணி. 2 . 55-7)

அடி, 112 : சிலப். 27 45.

அடி, 122 . "ஆர்புனை தெரிய லொன்பது மன்னரை, நேரி வாயி னிலைச்செரு வென்று" (சிலப். 28 116-7), "ஆராச் செருவிற் சோழர் குடிக்குரியோர், ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து, நிலைச்செருவி னுற்றலை யறுத்து" (பதிற் 5-ஆம் பத்துப்பதிகம்)

(பி - ம்) †'நறறவர் தமக்கு நற்றவம் படர்கென' ‡'காணையதேர் கெனக்' $'யாடிய' §'தென்னவனன்னுடு' ||'வேந்தென்று' ¶'பண் பினெனபது' ††'கொள்ளார்'

பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்
பழையன் காக்குங் குழைபயி னெடுங்கோட்டு
வேம்புமுத றடிந்த வேந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய கேட்டருள்
கொற்கையி லிருந்த†வெற்றிவேற் செழியன்
பொற்றொழிற் கொல்ல ‡ரீரைஞ் ஞூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்
கொருபக லெல்லை யுயிர்ப்பலி யூட்டி
உரைசெல ¶வெறுத்த மதுரை மூதூர்
அரைசுகெடுத் தலம்வரு மல்லற் காலைத்
தென்புல மருங்கிற் றீதுதீர் சிறப்பின்
மன்பதை காக்கு முறைமுதற் கட்டிலின்
நிரைமணிப் புரவி யோரேழ் பூண்ட
ஒருதனி யாழிக் கடவுட் டேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுளே றினனென
மாலைத் திங்கள் வழியோ னேறினன்
ஊழிதொ றூழி யுலகங் காத்து
வாழ்க வெங்கோ வாழிய பெரிதென
மறையோன் கூறிய மாற்ற மெல்லாம்
இறையோன் கேட்டாங் கிருந்த வெல்லையுள்
அகல்வாய் ஞால மாரிருள் விழுங்கப்

---

124 - 5. பழையன் - குறுநிலமன்னன், அவன் வேம்பு.
128. ாரைஞ்ஞூற்றுவர் - ஆயிரவரை.
131. புகழ் எங்கும பரக்கும்படி மிக்க மதுரை.

அடி, 124. "பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின், முழாரை முழுமுத றுமியப் பண்ணி" (பதிற். 5-ஆம பதிகப் பதிகம); "மோகூர்ப், பணியா மையிற் பகைதலை வநத, மாகெழு தானை வம்ப மோரியர், பூனேதேர் நேமி யுருளிய குறைத்த" (அகநா 251 10-13); "பழையன் மோகூர்" (மதுரைக் 508) அடி, 124 - 5. பகைவர் களுடைய காவல் மரங்களை அழித்தல் மதுரைக். 152 - 3, பதிற். 11. 12 - 3, 12. 1 - 3, 49 16, புறநா 23 8 - 9, 36. 7 - 9, 57. 10.

அடி, 127 "கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக் குப் பொற்கொல்லர் ஆயிரவரைக்கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடுமலிய மழைபெய்து நோயுந்துன்பமும் நீங்கியது" (சிலப் உரை பெறுகடடுரை, 1)

அடி, 130. சிலப். 27. 12. அடி, 132. மு. சிலப். 4 8. அடி, 139. மு: சிலப் 30 145

(பி - ம்.) † 'விளங்கோச்' ‡ 'ாரைந்நூறறுவரை' ¶ 'வறுதீத'

பகல்செல †முதிர்ந்த படர்கூர் மாலைச்
செந்தீப் பரந்த திசைமுகம் விளங்க
அந்திச் செக்கர் வெண்பிறை தோன்றப்
பிறையேர் வண்ணம் பெருந்தகை நோக்க
இறையோன் செவ்வியிற் கணியெழுந் துரைப்போன்
எண்ணென்கு மதியம் வஞ்சி நீங்கியது
மண்ணுள் வேந்தே வாழ்கென் றேத்த
நெடுங்காழ்க் கண்ட நிரல்பட நிரைத்த
கொடும்பட நெடுமதிற் ‡கொடிததேர் வீதியுள்
குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
உறையுண் முடுக்க ரொருதிறம் போகி
$விதத்தகர் கைவினை விளங்கிய கொள்கைச்
சித்திர விதானத்துச் செம்பொற் பீடிகைக்
கோயி லிருக்கைக் கோமக னேறி
வாயி லாளரின் மாடலற் §கூஉய்
இளங்கோ வேந்த ||ரிறந்ததற் பின்னர்
வளங்கெழு நன்னாட்டு மன்னவன் கொற்றமொடு
செங்கோற் றன்மை தீதின் ரேவென
எங்கோ வேந்தே வாழ்கென் றேத்தி
மங்கல மறையோன் மாடல னுரைக்கும்
வெயில்விளங்கு மணிப்பூண் விண்ணவர் வியப்ப

---

144 - 6. தன்னியல்பு முதிர்நத மாலையாகிய செந்தீப் பரந்த மேலைதிதிசை விளஙகப் பிறைதோன்ற

147. பிறையெழுந்தபடியை 151 நிரல் - ஒழுங்கு.

152. படம் - படஙகு படங்கை மதிலாகவுடைய வீதி.

154. உறையுள் - உறையுமிடம் 156 பீடிகை - சிங்காதனம்.

159. இளங்கோவேந்தர் - பட்ட ஒன்பதின்மர்.

அடி, 151 நெடுங்காழ்க்கண்டம் - நெடிய குதீதுக்கோலுடனே பல நிறத்தாற கூறுபட்ட திரைச்சீலை, கண்டம் . ஆகுபெயர், முல்லை. 44, ந., "கண்டங் குதீதிய மண்டப வெழினியுள்", "கண்டப் பூந்திரை காழ்முதற் கொளீஇ" (பெருங். 1 37 . 103, 2. 4 134); சீவக. 647, 873.

அடி, 153. மு . மணி. 6 58.

(பி - ம்) †'முரஞ்சிய' ‡'கொடிதங்கேர் வீதியிற்' $'விதீதகன்' §'கூவி' ||'ரிறந்த பினனர்'

165 எயில்மூன் †றெறிந்த விகல்வேற் கொற்றமும்
குறுநடைப் புறவி னெடுந்துயர் தீர
எறிதரு பருந்தி னிடும்பை நீங்க
அரிந்துடம் பிட்டோ னறந்தரு கோலும்
திரிந்துவே ருகுங் காலமு முண்டோ
170 தீதோ வில்லெச் செல்லற் காலையும்
காவிரி புரக்கு நாடுகிழ வோற் ‡கென்
றருமறை முதல்வன் சொல்லக் கேட்டே
பெருமகன் மறையோற் பேணி யாங்கவற்
காடகப் ¶பெருநிறை யையைந் திரட்டித்
175 தோடார் போந்தை வேலோன் றன்னிறை
மாடல மறையோன் கொள்கென் றளித்தாங்
காரிய மன்ன ரையிரு பதின்மரைச்
சீர்கெழு நன்னுட்டுச் செல்கவென் §றேவித்
தாபத வேடத் துயிருய்ந்து பிழைத்த
180 மாபெருந் தானை மன்ன குமரர

---

174. ஐம்பது துலாம்பாரம் பொன்
177. ஐயிருபதின்மர் - முன்சொன்னகன்னகர்.....

அடி, 165 "தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்" [சிலப் 29 (17)], "ஒன்னு ருடகுந் துன்னருங் கடுநதிறற், தூங்கெயி லெறிந்த நின் னூங்கணேர்" (புறநா. 39 5 - 6), "வீங்குதோட் செமபியன் சீற்றம் விறல்விசும்பில், தூங்கு மெயிலுந் தொலைத்தலால" (பழ 49), "ஒன்னு, ரோங்கெயிற கதவ முருமுச்சுவல் சொறியும், தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை, நாடா நல்லிசை நறறேர்ச் செம்பியன்" (சிறுபாண். 79-82), "தூங்கெயி லெறிந்த தொடித்தோட செமபியன்" (மணி. 1 . 4), "தேங்கு தூங்கெயி லெறிந்த வவனும" (கலிங்க. இராச 17), "வாங்குந திருக்கொறற வாளொன்றின் வாய்வாய்ப்பத், தூங்கும் புரிசை துணித்தகோன்" (இராசராச. 13), "தூங்கு மெயி லெறிந்த சோழனும்" (விக்கிரம. 9)

அடி, 166. புறவின் துயர்தீரத்தது சிலப் 20 52, கு - ரை.

அடி, 171 . "காவிரி புரக்கு நாடுகிழ வோனே" (பொருந. 248, புறநா. 393 23)

அடி, 177. சிலப் 26 . 163. அடி, 179 சிலப் 26 · 22 - 56.

(பி - ம்) †'றெறிந்த வியறேர்க் கொற்றக்' ‡'கென, வருமறை' ¶'பசுநிறை' §'றேவிக், கருங்கய னெடுங்கட் கவின்பெறு காதில், விரி வெண்'

சுருளிடு தாடி மருள்படு பூங்குழல்
அரிபரந் தொழுகிய செழுங்கய னெடுங்கண்
விரிவெண் டோட்டு வெண்ணகைத் துவர்வாய்ச்
சூடக வரிவளை யாடமைப் பணைத்தோள்
185 வளரிள வனமுலைத் †தளரியன் மின்னிடைப்
பாடகச் சீறடி யாரியப் பேடியோ
டெஞ்சா ‡மன்ன ரிறைமொழி மறுக்கும்
கஞ்சுக முதல்வ ரீரைஞ் ஞூற்றுவர்
அரியிற் போந்தை யருந்தமி ழாற்றல்
190 தெரியாது மலைந்த கனக விசயரை
இருபெரு வேந்தர்க்குக் ¶காட்டிட வேவித்
திருந்துதுயில் கொள்ளா வளவை யாங்கணும்
பரம்புநீர்க் கங்கைப் பழனப் பாசடைப்
பயிலிளந் தாமரைப் பல்வண் டியாழ்செய
195 வெயிலிளஞ் செல்வன் விரிகதிர் பரப்பிக்
குணதிசைக் குன்றத் துயர்மிசைத் தோன்றக்
குடதிசை யாளுங் கொற்ற வேந்தன்
வடதிசைத் தும்பை வாகையொடு §முடித்துத்
தென்றிசைப் $பெயர்ந்த வென்றித் தானையொடு
200 நிதிதுஞ்சு வியனகர் நீடுநிலை நிவந்து

---

181. தாடி - மோவாய.
183. வெண்தோடு - சங்கிஞுற செய்த காதாபரணம்
187. எஞ்சாமன்னர் - மறத்திறலொழியாத மன்னர்.
188 - 8. இறைமொழிமறுக்குங் கஞ்சுகமுதல்வர் - மேலான வார்த்தைத பொருது மறுத்துரைக்குந தூதர
189. அரியில - அரிதரலில். ஆறறல் - இவர்களை வென்று கைக் கொண்ட வலி.
188 - 91. தூதர் காட்டிட ஏவி.
192. கொள்ளா அளவை, கடுமை கூறிற்று.
193 கங்கையைசசூழ்நத பழனம. 200 நகர் - கோயில்.

அடி, 181 - 6. பேடி "சுரியற முடி மருள்படு பூங்குழல், பவளச் செவ்வாய்த் தவள வாணகை, ஒளளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக், கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதல், காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை, அகன்ற வல்கு லந்நுண் மருங்குல், இகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து, வாணன பேரூர் மறுகிடைத் தோன்றி, நீணில மளந்தோன் மகன்முன் ஞடிய, பேடிக் கோலத்துப் பேடு" (மணி 3 116-25)
அடி, 189 - 90. சிலப். 27 5 - 6
அடி, 198 "வாகை தும்பை வடதிசைச் சூடிய" (சிலப் 27 221)
(பி - ம்) †'தளரிள' ‡'மன்னர்க் கிறைமொழி யிறுக்கும்' ¶'காட்ட' §'முடித்தோன்' $'பெயர்ந்தனன்'

கதிர்செல வொழித்த †கனக மாளிகை
முத்து‡நிரைக் கொடித்தொடர் முழுவதும் வளைஇய
சித்திர விதானத்துச் செய்பூங் கைவினை
இலங்கொளி மணிநிரை யிடையிடை வகுத்த
¶விலங்கொளி வயிரமொடு பொலந்தகடு போகிய
மடையமை செறுவின் வான்பொற் கட்டில்
புடைதிர டமனியப் பொற்கா §லமளிமிசை
இணைபுண ரெகினத் || திளமயிர் செறித்த
துணையணைப் பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்
கெறிந்துகளங் கொண்ட வியறேர்க் கொற்றம்
அறிந்துரை பயின்ற வாயச் செவிலியர்
தோட்டுணை துறந்த துயரீங் கொழிகெனப்
பாட்டொடு தொடுத்துப் பல்யாண்டு வாழ்த்தச்
சிறுகுறுங் கூனுங் குறளுஞ் சென்று
பெறுகநின் செவ்வி பெருமகன் வந்தான்
நறுமலர்க் கூந்த ளணணி பெறுகென
அமைவிளை தேறன் மாந்திய கானவன்
கவண்விடு புடையூஉக் $காவல் கைவிட
வீங்குபுன முணீஇய வேண்டி வந்த
††ஓங்கியல் யானை தூங்குதுயி லெய்த
வாகை தும்பை வடதிசைச சூடிய
வேக யானையின் வழியோ நீங்கெனத்

201. மாளிகை - அந்தப்புரம கதிர்செலவொழித்தல் - உயர்தல்
202. கொடித்தொடர் - சலலியும தூக்கும.
205. விலங்கொளி - பக்கமோடுகிற ஒளி பொலநதகடு - பொற்றகடு. போகிய - ஒழுகிய.
209. துயிலைப்போக்கி.
216. கூந்தல் நாளொப்பனை பெறுக என - என்று சொல்ல.

அடி, 208-9, சிலப் 4 66, கு - ரை.

அடி, 214 "கூனுங் குறளு மூமுங் கூடிய, குறுநதொழி லினளுர", "கூனுங் குறளுங் கொண்டன" (சிலப் 20 17, 28 58); பெருங 1. 46 256 - 63

அடி, 221 சிலப் 27 198.

அடி, 222 "வேக யானையின் மீமிசைப் பொலிந்து" (சிலப். 27 . 254)

(பி - ம்) †'தமனிய மாளிகை' ‡நிரைத்தொடர் முழுவதும் வளைஇச' ¶'விளங்கொளி ..... தகடுபோக்கி, மடையமை செறிவன வான்பொற றகட்டிற்' §'லமளியிணை' ||'தினமயிர்' $'காவலன்' ††'வாங்குநிலை யானை நூங்குதுயி'

திறத்திறம் பகர்ந்து சேணுங் கிதணத்துக்
குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணியும்
வடதிசை மன்னர் மன்னெயின் முருக்கிக்
கவடி வித்திய கழுதையே ருழவன்
குடவர் கோமான் வந்தா னுளப்
படுநுகம் பூணுய் பகடே மன்னர்
அடித்தலை நீக்கும் வெள்ளணி யாமெனும்
தொடுப்பே ருழவ ரோதைப் பாணியும்
†தண்ணன் பொருநை யாடுந ரிட்ட
வண்ணமுஞ் சுண்ணமு மலரும் பரந்து
விண்ணுறை விற்போல் விளங்கிய பெருந்துறை
வண்டுண மலர்ந்த மணித்தோட்டுக் குவளை
முண்டகக் கோதையொடு மூடித்த ‡குஞ்சியின்
முருகுவிரி தாமரை முழுமலர் ¶தோயக்
குருகலர் தாழைக் கோட்டுமிசை யிருந்து
வில்லவன் வந்தான் வியன்பே ரிமயத்துப்
பல்லா னிரையொடு படர்குவிர் நீரெனக்
காவல னுனிரை நீர்த்துறை §படீஇக்
கோவல ரூதுங் குழலின் பாணியும்
வெண்டிரை பொருத வேலை வாலுகத்துக்
குண்டுநீ ரடைகரைக் குவையிரும் புன்னை
வலம்புரி யீன்ற நலம்புரி முத்தம்

---

(218) காவல்கைவிடுதலாற (219) புனமுண்ணவந்த (220) யானை துயிலெய்தப் (224) பாடிய குறிஞ்சிப் பாடலும
(228) பூணுய - பூண்டல் செயவாய பகடே விளி
229. வெளளணி - பிறநததாளொப்பனை.
230 தொடுபபேருழவர் - விளாக்கொண்டு உழுமுழவர்; ஏருழவர். ஒரு சொல் 239 பலலானிரை - வடக்கு நின்றும கொண்டு போந்த நிரை, அவறறேடு நீருஞசேரவீர்
240 படீஇ - படுதீதி 243 - புன்னை - புன்னையிடதீதே.

அடி, 217 - 24. அகநா 102
அடி, 225 - 6 பகைவர் மதிலை அழித்துக் கழுதையேரால் உழுது வெள்ளை வரகும் கொள்ளும் விதீதுதல் மரபு, புறநா 15 2 - 3, 392 : 9 - 11, பதிற 75 11, பு - வெ. 120 அடி, 226. கவடி - வெள்ளைவரகு.
அடி, 230 தொடுப்பு - விதைப்புமாம, "தொடுப்பி னுயிரம் வித்தியது விளைய" (மதுரைக் 11), "ததீதுநீ ரடைகரைச் சங்குழு தொடுப்பின், முதீதுவிளை கழனி" (மணி 8 3 - 4)
அடி, 244 "ஆடுங்கழங்கும" அம்பிகாபதி.
(பி - ம்.) †'தண்ணம்பொருநை' ‡'குஞ்சியன்' ¶'தேயக்' 'படியாக்'

கழங்காடு மகளிர் ரோதை யாயத்து
வழங்குதொடி முன்கை மலர வேந்தி
வானவன் வந்தான் வளரிள வனமுலை
தோணல †முணீஇய தும்பை போந்தையொடு
வஞ்சி பாடுது மடவீர் யாமெனும்
அஞ்சொற் ‡கிளவிய ரந்தீம் பாணியும்
ஓர்த்துட னிருந்த கோப்பெருந் தேவி
வால்வளை செறிய வலம்புரி வலனெழ
மாலைவெண் குடைக்கீழ் வாகைச் சென்னியன்
வேக யானையின் மீமிசைப் பொலிந்து
குஞ்சர வொழுகையிற் கோநக ரெதிர்கொள
¶வஞ்சியுட் புகுந்தனன் செங்குட் டுவனென்.

---

(246) 'ஏந்தி' என்னும் வினையெச்சம (249) 'எனும்' என்னும் பெய ரெச்ச வினையோடு முடிந்தது.

248. உணீஇய - உண்ணும்படி.

(248) உண்ணும்படி (249) பாடுதுமென்க.

[1]பாட்டால் தமமிடத்து வருவானென்று (224-50) குறிஞ்சி முதலாக நாலுநிலத்துப் பாணியும (251) ஓர்த்து உறங்காத தேவியென்றது நாலு நில அணிமையுங் கூறிறறு.

(198) வடதிசைக்கண் தும்பைத்துறையையும் வாகைத்துறையையும் முடிவு செய்து (251) தன்றேவி (252) கைவளைசெறிய வலமபுரி முழங்க (253) வாகைச் சென்னியனுய (254) யானைமிசைப்பொலிநது (255) திரு நகரெதிர் கொள்ளத் (199) தானையொடு (256) வஞ்சியிற புகுந்தன னெனக் கூட்டுக.

(உஎ) நீர்ப்படைக்காதை முற்றிற்று

அடி, 248. தோள்நலம் உண்ணல் பரி 12 46, கலித் 23 8, 147 : 7.

அடி, 254 . சிலப் 27 : 222.

அடி, 255 . "களிறுபல பூடடி யொழுகை யுய்த்த" (பதிற். 44 : 16-7) 1. பரி 14 : 23-4.

(பி - ம்.) † 'முண்ணியதும்பை' ‡ 'கிளவியந்தீம்' ¶ 'வஞ்சியிற்

இருபத்தெட்டாவது

நடுகற் காதை

தண்மதி யன்ன தமனிய நெடுங்குடை
மண்ணக †நிழற்செய மறவா ளேந்திய
நிலந்தரு திருவி னெடியோன் ‡றனது
வலம்படு சிறப்பின் வஞ்சி மூதூர்
ஒண்டொடித் தடக்கையி ணெண்மலர்ப் பலிதூஉய்
வெண்டிரி விளக்க மேந்திய மகளிர்
உலக மன்னவன் வாழ்கென் றேத்திப்
பலர்தொழ வந்த மலரவிழ் மாலை
போந்தைக் கண்ணிப் பொலம்பூந் தெரியல்
¶வேந்துவினை முடித்த வேந்துவாள் வலத்தர்
யானை வெண்கோ டழுத்திய மார்பும்
நீள்வேல் கிழித்த நெடும்புண் §ணகமும்
எய்கணை கிழித்த பகட்டெழி லகலமும்
வைவாள் கிழித்த மணிப்பூண் $மார்பமும்
மைம்மல ருண்கண் மடந்தைய ரடங்காக்

---

1. தமனிய நெடுங்குடை யென்றது காம்பும் முகப்பும் பொன்னு தலால்.

2. மறம் - வீரம்

அடி, 3. "நிலந்தரு திருவி னெடியோய்" (பதிற். 82. 16)' "நிலந்தரு திருவி னெடியோன்" (மதுரைக் 763)

அடி, 5 - 8 "அகனக ரெலலா மரும்பவிழ் முல்லை, நிகர்மலர் நெல் லொடு தூஉய்ப் பகன்மாய்ந்த, மாலை" (சிலப் 9 1-3) என்பதையும் அதன் குறிப்புரையையும் பார்க்க.

அடி, 6 "கன்னியர் கைவிளக் கேந்தக் காவலன், பொன்னியல் வளநகர் பொலியத் தோன்றினர்" (சூளா. சீய 244)

அடி, 9 - 10. "வேந்துவினை முடித்த வேந்துவாள் வலத்துப், போந்தைக் கண்ணிநி னூங்கணேர்" (சிலப் 28. 133-4) அடி, 13: "எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பு" (புறநா. 13 3)

(பி - ம்.) † 'நிழற்ற' ‡ 'முனது' ¶ 'வேய்ந்துவினை' § 'ணகமும்' $ 'புயமும்'

கொம்மை வரிமுலை வெம்மை †வேதுறீஇ
‡அகிலுண விரித்த வம்மென் கூந்தல்
முகிலுழை மதியத்து $முரிகருஞ் சிலைக்கீழ்
மகரக் கொடியோன் மலர்க்கணை துரந்து
சிதரரி பரந்த §செழுங்கடைத் தூது
மருந்து மாயதிம் மாலையென்||றேத்த
இருங்கனித் துவர்வா யிளநிலா விரிப்பக்
கருங்கயல் பிறழுங் காமர் செவ்வியில்
திருந்தெயி றரும்பிய விருந்தின் மூரலும்
மாந்தளிர் மேனி மடவோர் ¶தம்மால்
ஏந்துபூண் ††மார்பி னிளையோர்க் களித்துக்
காசறைத் திலகக் கருங்கறை கிடந்த
மாசில்வாண் முகத்து வண்டொடு சுருண்ட
குழலுங் கோதையுங் கோலமுங் காண்மார்
நிழல்கான் மண்டிலந் தம்மெதிர் நிறுத்தி
வணர்கோட்டுச் சீறியாழ் ‡‡வாங்குபு தழீஇப்
புணர்புரி நரம்பிற் பொருள்படு பத்தரக்
குரல்குர லாக வருமுறைப் $$பாலையில்

(16) உறீஇ (21) ஏதீதவெனனுமெசசம, (24) அருமபியவென்னும் பெயரெச்சத் தொழிலோடு முடிந்தன.

(3) நெடியோன் (4) மூதூரில் (8) வந்த மாலை (9) தெரியல் (10) வேந்து வாள்வலத்தர் (11-4) மார்பை (15) மடநதையர்தம (16) முலை யால வேது கொண்டு இவருடைய (20) கடகடையாகிய தூது (21) முன் பாசறைக்கண் நமக்கு வருத்தஞ் செய்ததேயன்றி இமமாலைக்கண் அதற்கு மருந்து மாகியதென்று (26) இளையர் (21) ஏதீத (24) அருமபிய மூரலையும் (26) அவவிளையோர்க்கு (25) அமமடவோராலே (26) அளிப் பதுஞ் செய்தென்க.

அடி, 16 . "கொமமை வருமுலை வெமமையிற றடைஇ" (நெடுநல். 69), கலித். 106 35, "தங்குகண் வேல்செயத புண்களோதீ தடமுலை வேதுகொண் டொற்றியும், செங்கனி வாய்மருந தூட்டுவீர் செமபொ னெடுங்கடை திறமிஞ்ஞே" (கலிங்க கடை. 35)

அடி, 17 "அகிலுண விரித்த வம்மென் கூந்தலின்" (சிறுபாண். 263)

அடி, 29 - 30 . "மாசறக் கண்ணடி வயக்கி வண்ணமும், தேசு மொளியுந திகழ நோக்கி" (பரி. 12 . 20-21)

அடி, 30 . "நிழல்கான் மண்டில நோக்கி யழல்புனை, அவிரிழை திருத்துவாள்" (பரி. 21 : 23-4), "நிழல்கான் மண்டிலத்து" (அக நா. 71 . 13)

(பி - ம்.) † 'வெய்துறீஇ' ‡ 'அகிலுண விருந்த' $ 'மூரிவெஞ்' § 'செங்கடைத்' || 'றேத்தி' ¶ 'ததத, மேந்து' †† 'மார்பி னினியோர்க்' ‡‡ 'வாங்குபுடைதீ தழீஇப், புரிபுரி' $$ 'பாலை'

துத்தங் †குரலாத் தொன்முறை யியற்கையின்
அந்தீங் குறிஞ்சி யகவன் ‡மகளிரின்
மைந்தர்க் கோங்கிய வருவிருந் தயர்ந்து
முடிபுற முரிஞ்சுங் கழற்காற் ¶ குட்டுவன்
குடிபுறந் தருங்காற் றிருமுகம் போல
உலகுதொழத் தோன்றிய மலர்கதிர மதியம்
பலரபுகழ் §மூதூர்க்குக் காட்டி நீங்க
மைந்தரு மகளிரும் வழிமொழி கேட்ப
ஐங்கணை நெடுவே ளரசுவீற் றிருந்த
வெண்ணிலா முன்றிலும் வீழ்பூஞ் சேக்கையும்
மண்ணீட் டரங்கமு மலர்ப்பூம் பந்தரும்
வெண்கா லமளியும் விதானவே திகைகளும்
தண்கதிர் மதியந் தான்கடி கொள்ளப்
படுதிரை சூழ்ந்த பயங்கெழு மாநிலத்
திடைநின் றேங்கிய நெடுநிலை மேருவிற்
கொடிமதின் மூதூர் நடுநின் றேங்கிய
தமனிய மாளிகைப் புனைமணி யரங்கின்
வதுவை வேண்மாண் மங்கல மடந்தை
மதியேர் வண்ணங் காணிய வருவழி

---

(30) நிறுத்திதீ (31) தழீஇயென்னுமெச்சங்கள் (35) அகவன் மகளி ரென்னும் பெயரில் அகவுதறறெழிலோடு முடிநதன

(29) போகதீதாற் குலைநத குழல முதலியன திருதீதிக் காணவேண் டிக் (30) கண்ணுடிபார்தீது (31) யாழைதீதழீஇக் (35) குறிஞ்சியை அகவுதலைச் செயயும மகளிராலே (36) மைநதர்க்கு விருந்தயர்நதென்க.

(8) பலர் தொழ வந்த மலரவிழ் மாலை, (26) இஞோர்க்கு (25) மடவோராலே (24) மூரலையும் (26) அளிதீது (36) மைந்தர்க்கு (35) அகவன் மகளிராலே (36) விருந்தும் அயர்நது (40) மூதூரிடதீது (39) மதியதீதைக் (40) காடடிநீங்க, அநதமதியம (43) வெண்ணிலாமுன்றில் முதலானவற்றை (46) விளக்காநிறக (52) அம்மதியதிதெழுச்சியை (51) வேண்மாள் (52) காண்டற்கு வருவழி (50) அரங்கின்.. .. .. பெற்றன ஒருபக்கமென்க.

அடி, 38 - 9 அரசன் முகம மதிக்கு உவமை "அடுபோ ரண்ணல், நாடுதலை யளிக்கு மொண்முகம போலக், கோடுகூடு மதியம" (புறநா. 67 . 2-4)

அடி, 45 : "விதானித்துப் படுத்த வெண்கா லமளி" (சிலப். 6 : 170); பெருங் 1. 33 63

அடி 50-51 . "விளங்கில வந்தி வெள்ளி மாடத், திளங்கோ வேண் மா ளுடனிருந் தருளி" (சிலப 25 4-5)

(பி - ம்) †'குரலாற றென்முறை யியக்கி, யந்தீங்' ‡'மகளிர், மைநதர்க் கோக்கிய வருவிருந தயர' ¶'குடவன்' §'மூதூர் காட்டி யாங்கு'

எல்வளை மகளிர் ரேந்திய † விளக்கம்
பல்லாண் டேத்தப் பரந்தன வொருசார்
மண்கனை முழவும் வணர்கோட் டியாழும்
பண் ‡ கனி பாடலும் பரந்தன வொருசார்
மான்மதச் சாந்தும் வரிவெண் $ சாந்தும்
கூனுங் குறளுங் கொண்டன வொருசார்
வண்ணமுஞ் சுண்ணமு § மலர்பூம் பிணையலும்
பெண்ணணிப் பேடிய ரேந்தின ரொருசார்
பூவும் புகையு மேவிய விரையும்
தூவியஞ் || சேக்கை சூழ்ந்தன வொருசார்
ஆடியு மாடையு மணிதரு கலன்களும்
சேடியர் ¶ செவ்வியி னேந்தின ரொருசார்
ஆங்கவ டன்னுட னணிமணி யரங்கம்
வீங்குநீர் ஞால மாள்வோ னேறித்
திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
†† பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்
செங்க ணுயிரந் திருக்குறிப் பருளவும்

---

65. மணியரங்கம - நிலா முற்றம.

அடி, 53-4 . "பஞ்சிலங்கு மல்குலார் பலாண்டுகூற", "தழை மலர்க் கோதை நலலார் பலாண்டிசை ததுமப வாழ்த்த", "பங்கயமுகத் தவர் பலாண்டிசை பரவ" (சூளா தூது 65, கல்யாண. 141, 267)

அடி, 58 சிலப் 27 214, கு - ரை.

அடி, 60 "பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ" (நாலடி 251)

அடி, 61 மு. சிலப் 5 14, 12 38, 30 153.

அடி, 66 மு சிலப். 26 . 105, 155, 173, "வீங்குநீர் ஞால மாள் வோய்" (மணி 5 . 31)

அடி, 67 - 75 . "திரிபுர மெரியத் தேவர் வேண்ட, எரிமுகப் பேரம் பேவல் கேட்ப, உமையவ ளொருதிற ஞக வோங்கிய, இமையவ ஞடிய கொடுகொடடி யாடலும" (சிலப. 6 40-43), "கொடடி கொடு விடையோ ஞடிற றதறகுறுப், பொடடிய நான்கா மெனல" (சிலப் 3 14, மேற்), "படுபறை பலவியமபப் பலலுருவம பெயர்தீதுநீ, கொடு கொட்டி யாடுங்கால.. கொண்டசீர் தருவாளோ" (கலித். கடவுள் 5-7), "கொட்டி யாடற றேற்ற மொடடிய, உமையவ ளொருபா லாக வொரு பால், இமையா நாடடத்திறைவ ஞகி, அமையா வுட்கும வியப்பும் விழை வும், பொலிவும பொருந்த நோக்கித், தொக்க அவுண ரின்னுயிரிழப்ப, வக்களம, பொலிய வாடினனென்ப" (கலித் கடவுள் 5-7, மேற்.)

(பி - ம்) † 'விளக்கமொடு, பல்யாண் டேத்தப் பரந்தனர்' ‡ 'கனிப் பாடலும்' $ 'கலவையும்' § 'மலர்ப்பூம்' || 'சேக்கைத் தந்தனர்' ¶ 'செல்வியி' †† 'புரிதரு'

செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை † யசையாது
வார்குழை யாடாது மணிக்குழ லவிழா
துமையவ ளொருதிற னுக வோங்கிய
இமையவ னுடிய ‡கொட்டிச் சேதம்
பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
$ கூத்தச் சாக்கைய னுடலின் மகிழ்ந்தவன்
ஏத்தி நீங்க விருநில மாள்வோன்
§ வேத்தியன் மண்டப மேவிய பின்னர்
நீலன் முதலிய கஞ்சுக மாக்கள்
மாடல மறையோன் றன்னெடுந் தோன்றி
வாயி லாளரின் மன்னவற் கிசைத்தபின்
கோயின் மாக்களிற் கொற்றவற் ருெழுது
தும்பை வெம் || போர்ச் சூழ்கழல் வேந்தே
செம்பியன் மூதூர்ச் சென்றுபுக் காங்கு
வச்சிர மவந்தி மகதமொடு ¶ குழீஇய
சித்திர மண்டபத் திருக்க வேந்தன்
அமரகத் துடைநத வாரிய மனனரொடு
தமரிற் சென்று தகையடி வணங்க

---

75. கொடடிச்சேதம - கொடுகொடடிக் கூதீது

76 - 7. இதனை, பகுதீதலரிய நான்மறையோரது பறையூரிற் கூதீதச் சாக்கையன் ஆடுதலின் மகிழ்ந்தெனக.

79. வேத்தியன் மண்டபம் - அரசிருப்பாய பேரோலக்க மண்டபம்.

86 - 7. வச்சிரம் அவந்தி மகதமொடு திரண்ட மண்டபம - இந் நாடு மூன்றுமுடையோர் திறையிடட பந்தர் தோரணவாயில் பட்டிமண் டபம், இவை கூடிய மண்டபம், ஆகலான், ஆகுபெயர், பிறந்த வழிக்கூறல்.

89. தமரிற்சென்று - சங்கோச பரிவாரதீதுக்குக் கடவாருடன் சென்று

அடி, 70 "எண்டிக் களந்து கொண்டன வென்னப், புரிந்த செஞ் சடை நிமிரநது சுழல" (கல் 'உழைநின்றீரும்',

அடி, 77 சாக்கையரென்னும் ஒருவகைச் சாதியார் இப்பொழுதும் கூதீதுநிகழ்தீதும் தொழிலையுடையராக மலைநாட்டிலுள்ளாரென்று தெரி கின்றது.

அடி, 86 - 7 : "வச்சிர நன்னுட்டுக், கோனிறை கொடுதீத கொற்றப் பந்தரும், மகதநன் னுட்டு வாள்வாய் வேந்தன், பகைபுறதீதுக் கொடுதீத பட்டிமண் டபமும், அவந்தி வேந்த னுவந்தனன் கொடுதீத, நிவந் தோங்கு மரபிற ருேரண வாயிலும்" (சிலப. 5 . 99-104)

(பி - ம்) † 'யியங்காது' ‡ 'கொடிகொட்டிச்' $ 'கூதீதைச் சகை யோ னுடலின்' § 'வேந்தியன் மண்டப மேறிய' || 'போர்சூழ்' ¶ 'குழீஇச்'

நீளம ரழுவத்து நெடும்பே ராண்மையொடு
வாளுங் குடையு மறக்களத் †தொழித்துக்
கொலலாக் கோலத துயிருய்ந் தோரை
வெல்போர்க் கோடல் வெற்ற மன்றெனத்
தலைத்தேர்த் தானைத் தலைவற் குரைத்தனன்
சிலைத்தா ரகலத்துச் செம்பியர் பெருந்தகை
ஆங்குநின் றகன்றபி னறக்கோல் வேந்தே
ஓங்குசீர் மதுரை மன்னவற் காண
‡ஆரிய மன்ன ரமர்க்களத் தெடுத்த
சீரியல் வெண்குடைக் $காம்புநனி சிறந்த
சயந்தன் வடிவிற் றலைக்கோ லாங்குக்
கயந்தலை யானையிற் §கவிகையிற் காட்டி
இமையச் சிமையத் திருங் ||குயி லாலுவத்
துமையொரு பாகத் தொருவனை வணங்கி
அமர்க்கள ¶மரசன தாகத் துறந்து
தவப்பெருங் கோலங் கொண்டோர் தம்மேல்

---

93. போரிடத்துப் பிடித்துக்கோடல். 97. காண - கண்டவளவிலே.

102. குயிலாலுவம் - இமவான்பக்கத்து ஒரு பகுதி.

(98) ஆரியமனனரென்னுந் தொகுதி யொறறுமைபற்றிக் (101) காட்டி (103) வணங்கிக் (105) கொண்டோரெனச் சிலர்வினை வேறுசிலர் வினையொடு முடிநதது

அடி, 92. கொல்லாக் கோலங்கள். "சடையின ருடையினர் சாம் பற் பூச்சினர், பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்", "தாபத வேடத் துயிருய்ந்து பிழைத்த, மாபெருந் தானை மன்ன குமரர்", "தவப்பெருங் கோலங கொண்டோர" (சிலப். 26 225 - 6, 27 179 - 80, 28 . 105)

அடி, 93 வெறறம் - வெற்றி.

அடி, 98 - 9 "பேரிசை மன்னர் பெயர்புறத் தெடுத்த, சீரியல் வெண்குடைக் காமபுநனி கொண்டு" (சிலப் 3 114 - 5)

அடி, 100 "தெய்வ மால்வரைத் திருமுனி யருள, எய்திய சாபத் திந்திர சிறுவனெடு, தலைக்கோற ருனத்துச் சாபம", "மன்னவன் கோயில், இந்திர சிறுவன் சயந்த னெனை" (சிலப் 3 · 1 - 3, 118 - 9)

அடி, 102 குயிலாலுவம நீல மொக்கலவாதச் சருக்கம், 190-ஆம் பாட்டுரையில், 'குயிலாலபுரம' என்று ஓர் இடப்பெயர் காணப்படுகிறது

அடி, 104 வென்ரேர்க்குரியது போர்க்களம் என்பர்; "தேன் மிடைந்த தாரினன் செங்களஞ் சிறந்தது" (சீவக 279) என்பதையும், 'இதி.தூணையும் இவன் வெறறியாதலின இவன்களம் என்ரூர்' (சீவக. 279, ந) என்னும அதன் விசேட உரையையும, பு வெ. 180 உரையை யும, "ஒன்றி லிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினுல், வென்று களங் கொண்ட வேலவேந்தே" (பு வெ. 225) என்பதையும் பார்க்க. .

அடி, 105 சிலப். 28 92, கு - ரை.

(பி - ம்) †'தொளித்துக்' ‡'ஆரியமாக்களமர்க்' $'காம்பினிற் சிறந்த' §'கவிகை காட்ட' ||'கயிலாயத்' ¶'மரசரணுகத்துரந்து'

கொதியழற் சீற்றங் கொண்டோன் கொற்றம்
புதுவ தென்றனன் போர்வேற் செழியனென்
றேனை மன்ன ரிருவருங் கூறிய
நீண்மொழி யெல்லா நீலன் கூறத்
தாமரைச் செங்கண் டழனிறங் கொள்ளக்
கோமக னகுதலுங் குறையாக் கேள்வி
மாடல னெழுந்து மன்னவர் மன்னே
வாழ்கநின் கொற்றம் வாழ்கவென் றேத்திக்
கறிவளர் சிலம்பிற் றுஞ்சும் யானையின்
சிறுகுர னெய்தல் †வியலூ ரெறிந்தபின்
ஆரபூனை தெரிய லொன்பது மன்னரை
நேரி வாயி னிலைச்செரு வென்று
நெடுந்தேர்த் தானையொ †டிடுமபிற்புறத் திறுத்துக்
கொடும்போர் கடந்து நெடுங்கட லோட்டி
உடன்றுமேல் வந்த வாரிய மன்னரைக்
கடும்புனற் கங்கைப் பேர்யாற்று வென்ரேய்
நெடுந்தார் வேய்ந்த பெரும்படை வேந்தே

98 - 107. ஆரியமன்னர் அமர்க்களத்தில தங்களுக்கெடுத்த குடையிற் காமபைக் கையிலே பிடித்து ஆனைக்கழுத்தில் இருத்திய ஆசிரியன் கையில் தலைக்கோலாகக் காடடியும, குயிலாலுவமென்னும... ... . அமர்க்களம அரசனதாகத் துறந்தும, தவபபெருங்கோலம் கொண்டாராயினுர் தம்மேற சீறறங்கொண்டோன் கொறறம புதிதென்ருன்.

114 - 5 யானையினையுடைய வியலூர்.

117. நேரிவாயில - உறையூர்த் தெற்கில்வாயிலதோரூர 120. ஆரிய மன்னரென்றது முன்னெருகால இவனுக்குத் தோற்ருர்சிலரை

அடி, 114 கறிவளரசிலமபு குறுந் 91 2, 288 1, கலித். 52 : 17.

அடி, 115. "சிறுகுர னெய்தல் வியலூர் நூறி" (பதிற் 5-ஆம் பதிதுப் பதிகம, 11)

அடி, 116-7 "நின், மைதீதுன வளவன் கிள்ளியொடு பொருந்தா, ஒதீத பண்பின ரொன்பது மன்னர், இளவரசு பொருஅ ரேவல் கேளார், வளநா டழிக்கு மாண்பின ராதலின், ஒன்பது குடையு மொருபக லொழிதீதவன், பொன்பூனை திகிரி யொருவழிப் படுத்தோய" (சிலப். 27 : 117 - 23, பதிற 5-ஆம் பதிதுப் பதிகம், 18 - 9)

அடி, 119 - 21 'மறதீதுறை முடிதீத வாய்வாட் டானையொடு, பொங்கிரும் பரப்பிற் கடலபிறக் கோடடிக், கங்கைப் பேர்யாற றுக்கரை போகிய, செங்குடடுவன்" (சலப். 30 கடடுரை, 11 - 5), "கோடுநரல் பௌவங் கலங்க வேலிட், டுடைதிரைப் பரப்பிற படுகட லோடடிய, வெல்புகழ்க் குடடுவற கண்டோர்", "கெடலரும பல்புகழ் நிலைஇ நீர்புக்குக், கடலொ டுழந்த பனிதீதுறைப் பரதவ" (பதிற். 46 11-3, 48 3-4), "மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குடடுவன்.. .. செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி, ஓங்குதிரைப் பௌவ நீங்க வோடடிய, நீர்மா ணெஃக நிறதீதுச் சென் றழுந்த" (அகநா 212 16 - 20), புறநா. 369-ஆம பாடடிலும் இக்கருதீது வநதுள்ளது.

(பி - ம்) † 'வீயலூ' † 'டிடும்பியாதீதிறுதீதுக், கடம்போர்'

புரையோர் †தம்மொடு பொருந்த வுணர்ந்த
அரைச ரேறே யமைகநின் சீற்றம்
மண்ணுள் வேந்தே ‡நின்வா ணுட்கள்
தண்ணுன் பொருநை மணலினுஞ் சிறக்க
அகழ்கடன் ஞால மாள்வோய் வாழி
இகழா தென்சொற் கேடடல் வேண்டும்
வையங் காவல் பூண்டநின் னல்யாண்
டையைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செயயா தியாங்கணும்
மறக்கள வேளவி செயவோ யாயினை
வேந்துவினை முடித்த வேந்துவாள வலத்துப்
போந்தைக் கண்ணி நி ¶ணூங்கணேர் மருங்கில்
கடற்கடம் பெறிந்த காவல னுயினும்
விடர்ச்சிலை பொறித்த விறலோ னுயினும்
நானமறை யாளன செய்யுட் கொண்டு
மேனிலை யுலகம் §விடுத்தோ னுயினும்
போற்றி மன்னுயிர $முறையிற் கொள்கெனக்
கூற்றுவரை நிறுத்த கொற்றவ னுயினும்
வன்சொல் யவனர் வளநா டாண்டு

123. புரையோர் - உயர்ந்தோர்.

அடி, 125-6. ஆறறு மணலினும வாழக என்றல். "எங்கோ வாழிய... பஃறுளி மணலினும பலவே", "சிறக்கநின னுயுள், மிக்குவரு மின்னீர்க் காவிரி, எக்க ரிடட மணலினும் பலவே", "நீ நீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர், வெண்டலைப் புணரி யலைக்குஞ் செநதில், நெடுவே ணிலைஅய காமர் வியன்றுறைக், கடுவளி தொகுப்ப வீண்டிய, வடுவா ழெக்கர் மணலினும் பலவே" (புறநா. 9 8-11, 43 21-3, 55 17-21), பதிற் 48 . 17-8.

அடி, 12ர ஆன்பொருநை - சேரநாட்டிலுள்ளதொரு நதி, இஃது ஆன் பொருந்தமெனவும வழங்கும, "வாழிவருபுனனீரானபொருநை சூழ்தரும வஞ்சியார்கோமான்" [சிலப் 29 (14)], பதிற். 50 . 7, உரை, "தண்ணுன் பொருனை மணலினுமபலவே" (அகநா. 93 23); "தண்பொருனைப் புனல்பாயும், விண்பொருபுகழ் விறல்வஞ்சி", "தண்ணுன் பொருனை வெண்மணல்", "வஞ்சிப் புறமதி லலைக்குங், கல்லென் பொருனை" (புறநா. 11 : 5-6, 36 . 5, 387 33-4), 'ஆன்பொருநையும் வையையும் போலும யாறறிலும்' (தொல். கறபு சூ. 10, ந.)

அடி, 133 - 4 சிலப் 28 9 - 10

அடி, 135-6 : சிலப். 23 81 - 3, 25 1 - 2, கு - ரை. "குடக்கோச் சேரலன் குட்டுவர் பெருந்தகை, விடர்ச்சிலை பொறிதீத வேந்தன்" (மணி 28 103 - 4) சிறுபாண். 48-9

அடி, 137 சிலப். 23 63, கு - ரை

அடி, 141 "வன்சொல் யவனர் வளநாடு வண்பெருங்கஷ், தென்குமரியாண்ட" (சிலப். 28 . ஊசல்வரி), பதிற். 2-ஆம் பதிகத்துப் பதிகம், 8.

(பி - ம்) †'தம்மொழி பொருந்தா துணர்ந்த' ‡'நீநின்வாழ்நா, டண்ணுர் பொருனை' ¶'ணூங்கணூர் மருங்கும்' §'கொடுதீதோ' $'முறைமையிற்'

பொன்படு நெடுவரை புகுந்தோ ஞயினும்
†மிகப்பெருந் தானையோ டிருஞ்செரு வோட்டி
அகப்பா வெறிந்த வருந்திற லாயினும்
உருகெழு மரபி னயிரை மண்ணி
இருகட னீரு மாடிஞே ஞயினும்
சதுக்கப் பூதரை வஞ்சியுட் டந்து
மதுக்கொள வேள்வி வேட்டோ ஞயினும்
மீக்கூற் ருளர் யாவரு மின்மையின்
யாக்கை நில்லா தென்பதை யுணர்ந்தோய்
மல்லன்மா ஞாலதது வாழ்வோர் ‡மருங்கில்
செல்வ நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமி ழிகழ்ந்த வாரிய மன்னரிற்
கண்டனை யலலையோ காவல் வேந்தே
இளமை நில்லா தென்பதை யெடுத்தீங்
§குணர்வுடை மாக்க ளுரைக்கல் வேண்டா
திருஞெமி ரகலத்துச் செங்கோல் வேந்தே
நரைமுதிர் யாக்கை நீயுங் கண்டனை
விண்ணே ருருவி னெய்திய நல்லுயிர்
மண்ணே ருருவின் §மறிக்கினு மறிக்கும்
மக்கள் யாக்கை பூண்ட ||மன்னுயிர்
மிக்கோய் விலங்கி னெய்தினு மெய்தும்
விலங்கின் யாக்கை ¶விலங்கிய வின்னுயிர்
கலங்கஞர் நரகரைக் காணினுங் காணும்
ஆடுங் கூத்தர்போ லாருயி ரொருவழிக்
கூடிய கோலத் தொருங்குநின் றியலாது

---

145. அயிரை . ஓர்யாறு. அதிலே குளித்தது.

147. சதுக்கப்பூதர் - அமராபதியிற பூதங்கள்.

149. மீக்கூற்ருளர் - மேற்பட்ட வார்த்தையையுடையவர்கள்.

அடி, 144. குட்டுவன் அகப்பாவென்னும் அரணத்தை எறிந்தது; "குட்டுவன், அகப்பா வழிய நூறி" (நற் 14 : 3-4); "அண்ணலம் பெருங்கோட் டகப்பா வெறிந்த, பொன்புனை யுழிஞை வெல்போர்க் குடடுவ", "அகபபா வெறிந்து பகறறீ வேடடு" (பதிற். 22 : 26-7, 3-ஆம் பத்துப் பதிகம், 3)

அடி, 145. அயிரையை ஒருமலையென்றுங் கூறுவர்; "இருகட னீரு மொருபக லாடி, அயிரை பரைஇ" (பதிற. 3-ஆம் பத்துப் பதி.); "கடவு ளயிரையி னிலைஇ", "உருகெழு மரபி னயிரை பரைஇ", (பதிற். 79, 88, 90). அடி, 147 . பதிற. 9-ம் பத்துப் பதிகம், 13-4.

அடி, 165-6 . "ஆடுங் கூத்த ரணியே போல, வேற்ரே ரணியொடு வந்தீ ரோவென" (மணி. 12 . 51-2)

(பி - ம்.) †' மிகற்பெருந் ' ‡' மருங்கு ' §' குரனுடை மாக்க ளுரைக்க வேண்டா ' §' மறிக்கலு ' ||' விவவுயிர், மிக்கோர் ' ¶' யெய்து மிவ்வுயிர் '

செய்வினை †வழித்தா யுயிர்செலு மென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலின்
எழுமுடி மார்பநீ யேந்திய திகிரி
வழிவழிச் சிறந்த வயவாள் வேந்தே
அரும்பொருட் ‡பரிசிலே னல்லே னியானும்
பெரும்பே ரியாக்கை பெற்ற நல்லுயிர்
மலர்தலை யுலகத் துயிர்போகு பொதுநெறி
புலவரை யிறந்தோய் போகுதல் ¶பொறேஎன்
வானவர் போற்றும் வழிநினக் களிக்கும்
நான்மறை §மருங்கின் வேள்விப் பார்ப்பான்
$அருமறை மருங்கி னரசர்க் கோங்கிய
பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்

---

168. பொருளுரை - மெய்யுரை

169 எழுமுடி - எழுமுடியாற் செய்த ஆரம்.

171 பொருள் பரிசிலாக வருவேனல்லேன், அதுகாரணமாகச் சொல்லலுற்றேனல்லேன்

173. பொதுநெறி - பிறந்திறப்போரெல்லாரும் போம்வழி.

174 புல வரை இறந்தோய் - அறிவெல்லை கடந்தோய்.

175. வானவர் போறறுமவழி - மோட்சமார்க்கம்.

(175) அளிக்கும் (176) வேள்விப்பார்ப்பானென்க.

178. வேள்வி - இராசசூயம்.

அடி, 167 - 8 · "ஐய முண்டோ வாருயிர் போனற், செய்வினை மருங்கிற் சென்றுபிறப் பெயதுதல்" (மணி. 6 158-9)

அடி, 168. பொருளுரை . மணி 12 107, 22 . 61.

அடி, 169. எழுமுடி இன்னதென்பதை, "எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து, நோன்புரிதீ தடக்கைச் சான்ரோர் மெய்ம்மறை", "எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்துப் புரையோர்", "எழுமுடி மார்பி னெய்திய சேரல்" (பதிற் 14, 16, 45) என்பவற்றாலும், 'எழு முடியென்பது, ஏழு அரசரைவென்று அவர்கள் ஏழுமுடியானுஞ் செய் ததோ ராரமாம்' (பதிற். 14, உரை) என்பதனாலுமுணர்க.

அடி, 171 . "அன்ன வாகநின் னருங்கல வெறுக்கை, அவைபெறல் வேண்டேம்" (புறநா 146 1 - 2)

அடி, 173 "உயிர்வழங்கு பெருநெறி" (மணி 12 . 62)

அடி, 174 புல வரை பரி. 15 . 1, புறநா. 21 . 1; "புலவரை யிறந்த புகார்" (மணி 5 109)

(பி - ம்.) †'வழியே, வழிவழிசிறக்கவாய்வாள்' ‡'பரிசிலல்லேன் யானுன், பெரும்பெயர்' ¶'போற்றேன்' §'மரபின்' $'அருமறை மரபி னரசர்க் கோக்கிய'

நாஅச் செய்குவ †மறமெனி னின்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்
இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை
வேள்விக் கிழத்தி யிவளொடுங் கூடித்
தாழ்கழன் மன்னர் நின்னடி போற்ற
ஊழியோ டூழி யுலகங் காத்து
‡நீடுவா ழியரோ நெடுந்தகை யென்று
மறையோன் மறைநா $வுழுது வான்பொருள்
இறையோன் செவிசெறு வாக வித்தலின்
வித்திய பெரும்பதம் விளைந்துப தமிசைத்துத்
துய்த்தல் வேட்கையிற் சூழ்கழல் வேந்தன்
நான்மறை மரபி னயந்தெரி நாவின்
கேள்வி முடித்த வேள்வி மாக்களை
மாடல மறையோன் சொல்லிய முறைமையின்
§வேள்விச் சாந்தியின் விழாக்கொள வேவி
ஆரிய ||வரசரை யருஞ்சிறை நீக்கிப்
பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ் ¶நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
††வேளா விக்கோ மாளிகை காட்டி
‡‡நன்பெரு வேள்வி முடித்ததற் பின்னுள்

.. . .ஆரியன்மன்னர்க்காட்டி விடுதலீருய்... .

180. கேள்வியளவேயான நல்லுயிர்

182 உலகில் ஓரிடத்திலுமில்லை.

183 வேள்விக்கிழத்தி வேண்மாள் 189 பதம் - உணவு.

198. வேளாவிக்கோமாளிகை - வேள் ஆவிக்கோ மந்திரம்.

அடி, 179 - 80 "காலைச்செய் வோமென் றறதீதைக் கடைப் பிடித்துச், சாலச்செய் வாரே தலைப்படுவார் - மாலைக், கிடந்தா னெழுத லரிதான்மற் றென்கொல், அறங்காலைச் செய்யாத வாறு" (அறநெறிச். 67)

அடி, 181 - 2 . "கடைநா ளிதுவென் றறிந்தாரு மில்லை" (கலித். 12 · 15)

அடி, 184 "தாழ்கழன் மன்னர் தன்னடி போற்ற" (சிலப். 30 : 169)

அடி, 185 சிலப் 30 145 - 6.

அடி, 187 - 8 "செவிசெறு வாக, முதுமொழி நீராப் புலனுவுழவர்" (கலித் 68 3 - 4)

அடி, 196 - 8 புறநா. 13, அவதாரிகை.

(பி - ம்) †'மறனென் றெண்ணிற, கேள்வி யின்னுயிர் நீங்கென நீங்கும்' ‡'நீவா ழியரோ' $'வுழுத' §'வேட்கைச் சாந்தியின் விழாக் கோள் செய்கென' ||'வரச ரருஞ்சிறை' ¶'நீர்க்கேணித்' ††'வேள்விக் கான மாளிகை கட்டி' ‡‡'நம்பெரு வேள்வி முடித்த பின்னுள்'

தம்பெரு நெடுநகர்ச் சார்வதுஞ் †சொல்லியம்
மன்னவர்க் கேற்பன செய்க நீயென
வில்லவன் கோதையை விருப்புட னேவிச்
சிறையோர் கோட்டஞ் ‡சீமின் யாங்கணும்
கறைகெழு நாடு கறைவீடு செய்ம்மென
அழும்பில் வேளோ டாயக் கணக்கரை
முழங்குநீர் வேலி மூதூ ரேவி
அருந்திற $லரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்
பண்டையோ ருரைத்த §தண்டமிழ் நல்லுரை
பார்தொழு தேத்தும் பத்தினி யாதலின்
ஆர்புனை சென்னி யரசற் களித்துச்
செங்கோல் வளைய வுயிர்வா ழாமை
தென்புலங் காவன் மன்னவற் களித்து
வஞ்சினம் வாய்த்தபி னல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்த ||ரென்பதை
வடதிசை மருங்கின் மன்னவ ரறியக்
குடதிசை ¶வாழுங் கொற்றவற் களித்து
மதுரை மூதூர் மாநகர் கேடுறக்
கொதியழற் சீற்றங் கொங்கையின் ††விளைத்து

---

(194) விழாக்கொளவேவி (202) வில்லவன் கோதையை யேவியென்க.

205 - 6 அழுமபில்வேள் . .மூதூர்களிலே இப்படிச் செய்யுமென்று ஏவியென்க

அடி, 203 "சிறைப்படு கோட்டஞ் சீமின் யாவதும், கறைப்படு மாக்கள் கறைவீடு செயமமின்" (சிலப். 23 126 - 7), "கறையோ ரில்லாச சிறையோர் கோடடம" (மணி 16 161), "தமபியை முகத்து ணேக்கி, ஊரபிணி கோடடஞ் சீபபித் துருதவ ஞண்ட நாடடைப், பார்பிணி கறையி னீங்கப் படாமுர சறைவி யென்ருன்" (சீவக. 2372)

அடி, 205 சிலப் 25 177, "விளஙகுபெருந் திருவின் மான விறல்வேள், அழுமபில்" (மதுரைக். 344 - 5)

அடி, 207 - 8 "மாதவர் நோன்பு மடவார் கற்பும, காவலன் காவ லின்றெனி னின்ருல்" (மணி 22 208 - 9), குறள், 543, பரிமேல்

அடி, 212 . "செங்கோல் வளைய வுயிர்வாழார் பாண்டியர்" [சிலப். 29 . (11)]

அடி, 219 சிலப். பதி 44.

(பி - ம்) † 'சொல்லி, மன்னியற்கொப்பன செய்க நீரென' ‡ 'சீமி னெங்கணும, கறைகெழு நாடுக்' $ 'லரசன்' § 'தண்டா நல்லுரைப்' ‖ 'ரென்பது' ¶ 'யாளுங்' †† 'வீழ்த்து'

நன்னு டனைந்து †நளிர்சினை வேங்கைப்
பொன்னணி புதுநிழற் பொருந்திய நங்கையை
அறக்களத் தந்தண ராசான் பெருங்கணி
சிறப்புடைக் கமமியர் தம்மொடுஞ் சென்று
மேலோர் விழையு நூனெறி மாக்கள்
பால்பெற வகுதத பத்தினிக் கோட்டத்
திமையவ ருறையு மிமையச் செவ்வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் ‡பரசிக்
கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
வித்தக ரியற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை ¶நன்கல முழுவதும் பூட்டிப்
பூப்பலி செய்து காப்புகடை நிறுத்தி
வேள்வியும் விழாவு நாடொறும் வகுத்துக்
கடவுண் மங்கலஞ் செய்கென வேவினன்
வடதிசை வணக்கிய மன்னவ ரேறென்

(உஅ) நடுகற் காதை முற்றிற்று

---

222. ஆசான் - புரோகிதன

224 நூனெறிமாக்கள் - § தபதிகள்

(224) இவர் (222 - 3) அந்தணர் முதலாயினுரோடு சென்று (225) வகுத்த பத்தினிக்கோயிலில (228) கைத்தொழில மிகுத்த படிமத்திலே (230) ஆபரணங்கள் பூட்டி.

231. பூப்பலி - அருசசனை. காப்பு - திக்கிறறேவதைகள், கடை நிறுத்தி - கடைவாயிலில நிறுத்தி

232. வேள்வி - ஓமம். விழா - உறசவம்.

233 கடவுள் மங்கலம் - பிரதிடடை

... (221) நங்கையைப் (225) பத்தினிக்கோடடத்துத் (228) தெயவப் படிமத்திலே (233) கடவுள் மங்கலம செயகென ஏவினனெனக.

அடி, 228 . "கடவு ளெழுதிய படிமங் காணிய, வேட்கை" (மணி. 26 : 4 - 5)

அடி, 229 "வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச், சித்திரம்" (மணி. 3 . 167 - 8, 19 5 - 6)

அடி, 231 சிலப். 24 . 19, கு - ரை., "கலம்பகர் பீடிகைப் பூப்பலி கடைகொள" (மணி 7 122)

அடி, 232 "விழவொலியும் வேள்வொலியு மானுன் கண்டாய்" (தே. நா. மழபாடி), "சாறும் வேளவியுந் தலைமயங்குமே" (கம்ப. நாடு 56)

அடி, 233 . "கடவுண் மங்கலஞ் செய்த பினனுள்" (சிலப். 29 . உரைப்பாட்டுமடை)

அடி, 254 . "வடதிசை வணக்கிய வானவர் பெருந்தகை" (சிலப். 30 : 1)

(பி - ம்) † 'நளிசினை' ‡ 'பாச்சக், கைவினை.. .. .. .. படிவத்து' ¶ 'நன்கலன்' § 'சம்பந்திகள்'

இருபத்தொன்பதாவது

வாழ்த்துக் காதை

உரைப்பாட்டுமடை

(1) குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன்மக ளீன்ற மைந்தன் கொங்கர்செங் களம்வேட்டுக் †கங்கைப் பேர்யாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன் சினஞ் செருக்கி வஞ்சியுள்வந் திருந்த காலை வடவாரிய மன்னராங்கோர் மடவரலை மாலைசூட்டி யுடனுறைந்த விருக்கைதன்னி லொன்று ‡மொழிநகையினராய்த் தென்றமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்றவழு மிமயநெற்றியில் விளங்கு விற்புலி கயல்பொறித்தநா ளெம்போலு முடி ¶மன்னரீங் கில்லைபோலு மென்றவார்த்தை யங்குவாழுமாதவர்வந் தறிவுறுத்த விடத்தாங்க ணுருள்கின்ற மணிவட்டைக் குணில்கொண்டு துரந்ததுபோ லிமய மால்வரைக் கற்கடவுளா மென்ற வார்த்தை யிடந்துரப்ப வாரியநாட்டர

குமரியினும் வடவிமயத்தினுமெனவே இடை சொல்ல வேண்டா வாயிறறு

ஒரு மொழி - தன் ஆணையினை.

ஞாயிறறுச்சோழன் - சூரியவங்கிசத்துச சோழன்

சோழன் மகள் மைந்தனுகிய செங்குடடுவன்

சினஞசெருக்கி - ஆரியமன்னரிடதீதே சினதீதை மிகுதீது

அதனை விடடு வஞசியிலே வந்திருந்த காலை.

ஒன்றுமொழி நகையினராய் - தமமில ஒதீத வாரதீதையுடனே சிரிப் பினராய்.

இடநதுரப்ப - இடதீதினின்றும் துரப்ப

---

1 குமரி முதல் இமயமிறுதியாக ஆண்ட குடடுவன். சிலப். பக்கம, 12 "ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம, தெனனங் குமரியொ டாயிடை, மன்மீக் கூறுநர் மறநதபக் கடந்தே", "வடதிசை யெல்லை யிமய மாகதீ, தென்னநங குமரியொ டாயிடை யரசர், முரசுடைப பெருஞ் சமந் ததையவார்ப்பெழ குடடுவ" (பதிற 11, 43) ஒருமொழி-ஆணை, கலித் 104 80

கங்கை. . .குட்டுவன் "கங்கைப் பேர்யாற்றுக்கரைபோகிய செங் குட்டுவன்" (சிலப் 30 கட்டுரை, 13 - 4)

(பி - ம்.) †'கங்கையாற்றுக்கரை' ‡'மொழியுந்தகை' ¶'மன்ன ரில்லைபோலு மீங்கென்ற'

சோட்டி யவர்முடித்தலை யணங்காகிய பேரிமயக் கற்சுமத்திப் பெயர்ந்துபோந்து நயந்த கொள்கையிற் கங்கைப்பேர் யாற் றிருந்து நங்கைதன்னை †நீர்ப்படுத்தி வெஞ்சினந்தரு வெம்மை நீங்கி வஞ்சிமா நகர்புகுந்து நிலவரசர் நீண்முடியாற் பலர் தொழு ‡படிமங்காட்டித் தடமுலைப் பூசலாட்டியைக் [1]கடவுண் மங்கலஞ் செய்தபின்னுட் கண்ணகி தன் கோட்டத்து மண்ண ரசர் திறை கேட்புழி யலம்வந்த மதி $முகத்திற் சில செங்கய னீருமிழப் பொடியாடிய கருமுகிறன் புறம் புதைப்ப வறம் பழித்துக் [2]கோவலன்றன் வினையுருத்துக் குறுமகனுற் கொலை யுண்ணக் காவலன்ற னிடஞ்சென்ற கண்ணகி தன் கண்ணீர் கண்டு மண்ணரசர் பெருந்தோன்ற லுண்ணீரற் றுயிரிழந்தமை மாமறையோன் வாய்கேட்டு [3]மாசாத்துவான் §ருன்றுறப்பவு மனைக்கிழத்தியுயிரிழப்பவு மெனைப்பெருந் ||துன்பமெய்திக் காவற் பெண்டும் அடித்தோழியுங் கடவுட்சாதத னுடனுறைந்த தேவந் தியு முடன்கூடிச சேயிழையைக் காண்டுமென்று மதுரைமா நகர் புகுந்து முதிராமுலைப்பூசல் ¶கேட்டாங் கடைக்கலமிழந் துயிரிழந்த விடைக்குலமக ளிடமெய்தி ††யையையவண் மக ளோடும் வையையொரு வழிக்கொண்டு மாமலைமீமிசையேறிக் கோமகடன் கோயில்புக்கு நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டு வற்குத் திறமுரைப்பர்மன்

அணங்கென்றார், சிலாதெய்வமாதலால்

'வடவாரியர்' என்பது முதலாக, 'கடவுண்மங்கலஞ் செய்தபின் னுள்' என்பதீறாக முன்பு செய்ததனைக் கொண்டு கூறியதாக்கி யுரைக்க.

அறம்பழித்தது - தன்மதேவதையை இகழ்ந்து, "அறனென்னு மட வோய்" (சிலப் 18 41) என்று வைதது காவறபெண்டு - செவிலித் தாய்.

முதிராமுலைப்பூசல் - ஊர் வெந்தபடி.

இஃது உரைப்பாட்டு, இதனை முன்னே மடுத்தலான் மடையாயிற்று.

---

[1] சிலப். 28 · 233 [2] சிலப் பக் 576

[3] "கோவலன் றுதை மாதவம் புரிநதோன்" (மணி. 28 73)

(பி ∴ ம்) †'நீர்ப்படுத்தது வெஞ்சின வேல் வேட்கை நீங்க' ‡'படிவங்' $'முகத்துச்சில' §'ருன்றுறக்கவும் .. இழக்கவு' ||'துய ரெய்தி.. .. மடிந்தொழியுங்' ¶'கண்டாங்சடைக்கல மிமந்துயிருலநத' ††'யையை யிவண்மகளோடுவையை.....மலைமிசை'

தேவந்திசொல்

(2) முடிமன்னர் மூவருங் †காத்தோம்புந் தெய்வ
வடபே ரிமய மலையிற் பிறந்து
கடுவரற் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளர்த் தோளிக்குத் தோழிநான் கண்டீர்
சோணுட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்,

‡ காவற்பெண்டுசொல்

(3) மடம்படு சாயலாண் மாதவி தன்னைக்
கடம்படாள் காதற் கணவன் ¶கைப்பற்றிக்
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போநத
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்
தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்,

அடித்தோழிசொல்

(4) §தற்பயந்தாட் கில்லைத் தன்னைப் புறங்காத்த
எற்பயந் தாட்கு மெனக்குமோர் சொல்லில்லைக்
கற்புக் $கடம்பூண்டு காதலன் பின்போந்த
பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்
பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்,

---

(2) முடிமன்னர் மூவருங காதீதோமபுமலை - தமது இலாஞ்சனையிட்டுக் காத்த மலை.

(3) மடம்படு சாயலாள் - கண்ணகி கடமபடாள் - கோபிதீது வெகுளாள் நீரின்மையின், குடமபுகாக் கூவலென்றார்.

(4) சொல்லில்லை முற்று. இவ்வாறு கற்பைக் கடனுக மேற் கொண்டு.

---

(3) . 3. "குடமபுகாக் கூவல் குடிகாக்கும்" (தொல். அகத். 42, ந. மேற்)

(4) 3 "கற்புக் கடம்பூண்ட விதீதெய்வ மல்லது, பொற்புடைதீ தெய்வம யாங்கண் டிலமால்" (சிலப் 15 143-1) என்பதையும் அதன் குறிப்புரையையும பார்க்க.

(பி - ம்) †'காதீதோம்பு தெய்வ' ‡'காவற்பெண்டிர் பாட்டு' ¶'கைபற்றி' §'தற்பயந்தார்க் கில்லைதீ தன்புறங் காத்த, வெற்பயந் தார்க்கு' $'கடன்'

தேவந்தியரற்று

(5) செய்தவ மில்லாதேன் றீக்கனாக் கேட்டநாள்
எய்த வுணரா திருந்தேன்மற் †றென்செய்தேன்
மொய்குழன் மங்கை முலைப்பூசல் கேட்டநாள்
அவ்வை யுயிர்வீவுங் கேட்டாயோ தோழீ
அம்மாமி தன்வீவுங் கேட்டாயோ தோழீ ,

‡காவற்பெண்டரற்று

(6) கோவலன் றன்னைக் குறுமகன் $கோளிழைப்பக்
காவலன் றன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து
மாசாத்து வான்றுறவுங் கேட்டாயோ வன்னை
மாநாய்கன் §றன்றுறவுங் கேட்டாயோ வன்னை ,

அடித்தோழியரற்று

(7) ||காதலன் றன்வீவுங் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறு மேச்சுரையுங் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழீ
மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ ,

தேவந்தி ஐயையைக் ¶காட்டியரற்றியது

(8) ‡‡ஐயந்தீர் காட்சி யடைக்கலங் காத்தோம்ப
வல்லாதேன் பெற்றேன் மயலென் றுயிர்நீத்த
அவ்வை ††மகளிவடா னம்மணம் பட்டிலா
வையெயிற் றையையைக் கண்டாயோ தோழீ
மாமி மடமகளைக் கண்டாயோ தோழீ ,

---

(6) இவ்வாழ்வு கெடுவதாகவென்று

(8) ஐயந்தீர்காட்சி - கவுந்தியடிகள். உயிர்நீத்த அவ்வை - உன்மேல் அன்பால் உயிர்விட்ட மாதரி. மணம்படடிலா ஐயையென்றது, மாதரி இறந்தமையால் மணமபடுத்துவாரின்மையின்.

---

(6) சிலப். பக். 570 (7) மாதவி துறவு . மணி 18 7-8.

(பி - ம்.) †‘றென்செய்கோ’ ‡‘காவற்பெண்டிரரறறு’ $‘றீங்கிழைப்பக், காவலன் றன்னுயிர் நீத்ததுங் கேடஞ்சிச், சாவதிவ்’ §‘றன்னுறவுங்’ ||‘காதல னின்னுயிருங்’ ¶‘காட்டியது’ ‡‡‘கவ்வைதீர்’ ††‘மகளிவடான் மணம் பட்டிலாள்’

செங்குட்டுவன் கூற்று

(9) †என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்
பொன்னஞ் சிலம்பிற் புனேமே கலேவலேக்கை
நல்வயிரப் பொற்றேட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றேன்றுமால் ,

செங்குட்டுவற்குக் கண்ணகியார் ‡கடவுணல்லணி காட்டியது

(10) தென்னவன் றீதிலன் றேவர்கோன் றன்கோயில்
நல்விருந் தாயினு னனவன் றன்மகள்
வென்வேலான் குன்றில் விளேயாட்டு $யானகலேன்
என்னேடுந் §தோழிமீ ரெல்லீரும் வம்மெல்லாம் ,

வஞ்சி மகளிர் சொல்

(11) வஞ்சியீர் வஞ்சி யிடையீர் மறவேலான்
பஞ்சடி யாயத்தீ ரெல்லீரும் ||வம்மெல்லாம்
கொங்கையாற் கூடற் பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றுளேப் பாடுதும் ||வம்மெல்லாம்
தென்னவன் றன்மகளேப் பாடுதும் வம்மெல்லாம் ,
செங்கோல் வளேய வுயிர்வாழார் பாண்டியரென்
றெங்கோ ¶முறைநா வியம்பவிந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்
பாண்டியன் றன்மகளேப் பாடுதும் வம்மெல்லாம் ,††

---

(9) என்னேயிஃது என்னே யென்பது செங்குட்டுவன்கூற்று. மின்னுக்கொடி - கண்ணகி

(10) முன் மானிட யாக்கையிற்கொண்ட சிவப்பாறிதீ தெய்வ யாக்கை பெறுதறகுக் காரணமாயினுனென்பதுபறறி, நான் அவன் மகளென்றுள். வென்வேலான் குன்று - செங்கோடு. நான் குன்றில் வந்து விளேயாடுவேன் , நீங்களும அங்கே வாருங்கோளென்றுள்.

(11) செங்குட்டுவன் பரிகரத்தின் மகளிர். (11) . 8 எங்கோ - சேரன். முறைநா - முறையையுடைய நா. முன் அவன் மரிதீததற்கு இவன் புகழந்தபடியோடு கூறினர்.

(10 3.) "வென்வேலான் குன்றின்மேல் விளேயாடடும் விருமபார் கொல்" (கலித். 27 16)

(11) 6 - 7. "செங்கோல் வளேய வுயிர்வா ழாமை, தென்புலங் காவன் மன்னவன்" (சிலப். 28 . 212-3)

(பி - ம்.) † 'நோதகோ, என்னேயீ தென்னேயீ தென்னேயீ தென்னென்கொல்' ‡ 'கடவுண்மங்கலங் காடடியது, வானேர்வரவு' $ 'நான்' § 'தோழீரெல்லீரும் ..என்று செங்குடடுவறகு..... காடடியது' ॥ 'வம்மெலாம்' ¶ 'மணிநா' †† 'வேறு ஆயதீதார்'

ஆயத்தார்சொல்

(12) வானவ னெங்கோ †மகளென்றும் வையையார்
கோனவன்றுன் பெற்ற ‡கொடியென்றுள் - வானவனை
வாழ்த்துவோ நாமாக வையையார் கோமானை
வாழ்த்துவா $டேவ மகள்

வாழ்த்து

(13) தொல்லை வினையாற் றுயருழந்தாள் கண்ணினீர்
கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீர் வையை
சூழு மதுரையார் கோமான்றன் ரெல்குலமே ,
(14) மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
§நிலவரசர் நீண்முடிமே லேற்றினுன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுன||னீ ரான்பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் ரெல்குலமே ,
(15) எல்லா நாம் :
காவிரி நாடனைப் பாடுதும் பாடுதும்
பூவிரி ¶கூந்தல் புகார்

அம்மானைவரி

(16) வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை
ஓங்கரணங் காத்த ††வுரவோ னுயர்விசும்பில்
தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை ,

---

(12) எங்கோனுகியவன் பிரதிட்டிதமையால் நாம் இவ்வாறு கூறினேம்.

(15) எல்லா நாம் - தோழிநாம் கூந்தல் - கூந்தால். புகார் பாடுவேம்.

---

(12) இவ்வெண்பா சில பிரதிகளிற் காணப்படவிலலை.

(14) · 3. சிலப் 28 123, கு - ரை.

(16) . சிலப். 27 . 165, கு - ரை.

(பி - ம்) † ‘மகனென்றுள்’ ‡ ‘கொம்பென்றுள்’ $ ‘டேவர்மகள்’ § ‘நிலவரசனீண்முடி’ ‖ ‘னீர்தீதண்பொருளை சூழ்தருவஞ்சி’ ¶ ‘சோலைப் புகார்’ †† ‘வுரவோனெளிவிசும்பு’

(17) புறவுநிறை புக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானை
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெயத காவலன்கா ணம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை ,

(18) கடவரைக ளோரெட்டுங் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யா ரம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்றிக் கெட்டும்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்கா ணம்மானை
†கொற்றவன்றன் பூம்புகார் பாடேலோ ரம்மானை ,

(19) அம்மானை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மானையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மானையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை
கொம்மை வரிமுலைமேற் ‡கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானை ,

கந்துகவரி

(20) பொன்னிலங்கு பூங் ¶கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைக ளார்ப்பவார்ப்ப வெங்கணும்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் §தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந தடித்துமே ,

---

(18) திக்கயமெட்டும்.

அமமனை முன்னிலையாகக் கூறியது , தமவேட்கை மிகுதியால்.

(19) அம்மனையாடுகின்ருரைக் கண்டபின்பு தாமும் அமமனையாடு கின்ருர் சொலலியது.

ஏலும ஓரும் அசை. பாடு . வியங்கோள்.

(20) பொன்னிலங்கு பூங்கொடி ' பெயர் பந்து - தெறிக்கும் பந்து.

---

(17) 1 சிலப் 20 52, கு - ரை.

(17) 4 20 53-5, கு - ரை

(18) 2 . " இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக், கொடுவரி யொறறி " (சிலப் 5 97-8) என்பதையும் அதன் உரையையும் பார்க்க.

(20) பந்தாட்டத்தைத் தெரிவிப்பதற்குச் சீவகசிந்தாமணி (150-51)யிலும இச்சந்தமே வந்துள்ளது.

(பி - ம்) †'கொறறவன் பூம' ‡கூடிக்குலவேந்தன், வம்மென்' ¶' கொடிப்பொலஞ் ' §' தடிக்குமே'

(21) பின்னுமுன்னு மெங்கணும் பெயர்ந்துவந் தெழுந் †துலாய்
மின்னுமின் னிளங்கொடி ‡வியனிலத் திழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே,

(22) துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலம்
தன்னினின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே,

ஊசல்வரி

(23) வடங்கொண் மணியூசன் மேலிரீஇ யையை
உடங்கொருவர் கைநிமிர்த்தாங் கொற்றைமே லூக்கக்
கடம்பு முதறடிந்த காவலனைப் பாடிக்
குடங்கைநெடுங் கண்பிறழ வாடாமோ வூசல்
$கொடுவிற் பொறிபாடி யாடாமோ வூசல்,

(24) ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்ருது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் §குழலாட வாடாமோ வூசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல்

(25) வன்சொல் யவனர் வள ||நாடு வன்பெருங்கல்
தென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான்
மன்பதைகாக் குங் ¶கோமான் மன்னன் றிறம்பாடி
மின்செ யிடைநுடங்க வாடாமோ வூசல்
விறல்விற் ††பொறிபாடி யாடாமோ வூசல்,

---

(21) பெயர்ந்து உலாவி. மின்னுமின் - ஒளிவிடுகிற மின். நிலத்து - நிலமீது.

(22) கைத்தலத்திருந்ததில்லை, நிலமீதெழுந்ததில்லை. என்றது, விரைவு பற்றி.

(23) உடங்கொருவர் - ஐயையுடன் நின்ருரிலொருவர். ஒற்றை - ஒற்றைத்தாளம்.

---

(23) சிலப். 24 : 135-6, கு - ரை.

(24) 1. சிலப் 23 55, கு - ரை.

(25) 1. "வன்சொல யவனர் வளநா டாண்டு" (சிலப். 28 . 141); "நயனில் வன்சொல் யவனர்ப பிணித்து" (பதிற். 2-ஆம் பத்துப் பதிகம்)

(25) . 2. கயற்புலியான் : சிலப். 25 . 171.

(பி - ம்) †'துராய்' ‡'மீநிலத்' $'கோவிற்' §'குழலசைய' ||'நாடடு வடபெருங்கல்' ¶'செங்கோலான் றிறம்பாடி' ††'றிறம்பாடி'

வள்ளைப்பாட்டு

(26) தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழ லவைப்பார் புகார்மகளிர்
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்,
பாவைமா †ராரிக்கும் பாடலே பாடல்,

(27) பாடல்சான் முத்தம் பவழ வுலக்கையான்
மாட மதுரை மகளிர் குறுவரே
வானவர்கோ னுரம் வயங்கியதோட் பஞ்சவன்றன்
மீனக் கொடிபாடும் பாடலே பாடல்
வேப்பந்தார் நெஞ் ‡சுணக்கும் பாடலே பாடல்,

(28) சந்துரற் பெயது தகைசா லணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டால்
$கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
§படர்ந்த நிலம்போர்த்த பாடலே பாடல்
பனந்தோ டுளங்கவரும் பாடலே பாடல்,

(29) ஆங்கு, நீணில மன்னர் ¶நெடுவிற் பொறையனல்
தாடொழார் வாழ்த்த றமக்கரிது சூழொளிய
எங்கோ மடந்தையு மேத்தினு ணீடுழி
செங்குட் டுவன்வாழ்க வென்று

(உக) வாழ்த்துக் காதை முற்றிற்று

வள்ளை - உலக்கைப்பாட்டு.

(27) 1 "பவள வுலக்கை கையாற் பற்றித், தவள முத்தங் குறுவாள்" (சிலப். 7 20)

(பி - ம்.) †'ராரக்கும' ‡'சுவக்கும்படாலோ' $'கடந்தடுபோர்ச்' §'படர்ந்து' ¶'பொறியாற்குதீ, தான்'

முப்பதாவது

வரந்தரு காதை

வடதிசை வணக்கிய † வானவர் பெருந்தகை
கடவுட் கோலங் கட்புலம் புக்கபின்
‡ தேவந் திகையைச் செவ்விதி னேக்கி
வாயெடுத் தரற்றிய மணிமே கலையார்
யாதவ டுறத்தற் கேதுவீங் குரையெனக்
கோமகன் கொற்றங் குறைவின் றேங்கி
நாடு பெருவளஞ் சுரக்கென் றேத்தி
அணிமே கலையா ராயத் தோங்கிய
மணிமே கலைதன் வான்றுற வுரைக்கும்
மையீ ரோதி வகைபெறு வனப்பின்
ஐவகை வகுக்கும் பருவங் $ கொண்டது
செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்கண்
அவ்விய மறிந்தன வதுதா § னறிந்திலள்
ஒத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
நித்தில விளநகை நிரம்பா வளவின
புணர்முலை || விழுந்தன புல்லக மகன்றது
தளரிடை ¶ நுணுகலுந் தகையல்குல் பரந்தது
குறங்கிணை திரண்டன கோலம் பொருஅ
நிறங்கிளர் சீறடி நெய்தோய் †† தளிரின
தலைக்கோ லாசான் பின்னுள னுகக்

---

1. வடதிசை வணக்கிய - வடதிசையிலுள்ளாரை வணக்கிய.
2. கட்புலம் புகுகை - கண்ணறிவிறகு வெளிப்படுகை
16. விழுந்தன - நேராக வெழுந்தனவில்லை புல்லகம் - புல்லப்படுகிற மார்பு.
18. ஆபரணம் பொருவென்றது இளமையால்.
19. அடி தளிர் நெய்தோய்த்த தன்மையவாயின
20. தலைக்கோலாசானென்றது நட்டுவனை

அடி, 1 : "வடதிசை வணக்கிய மன்னவ ரேறென்" (சிலப். 28.234)

அடி, 5 . "மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ" (சிலப். 29 : 7)

(பி - ம்.) † மன்னவர் ' ‡ 'தேவந்தியையைச் ' $ 'கொண்டில' § 'னறிந்தில' || 'யுருத்தன ' ¶ நுடங்கின ' †† தளிரன '

குலத்தலை மாக்கள் கொள்கையிற் †கொள்ளார்
யாது நின்கருத் தென்செய் கோவென
மாதவி நற்றுய் மாதவிக் குரைப்ப
வருகவென் ‡மடமகண் மணிமே கலையென்
றுருவி லாள ரெருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்
ஆங்கது கேட்ட வரசனு நகரமும்
ஓங்கிய நன்மணி யுறுகடல் வீழ்த்தோர்
தம்மிற் றுன்பந் தானனி யெய்தச்
செம்மொழி மாதவர் சேயிழை நங்கை
தன்றுற வெமக்குச் ¶சாற்றின ளென்றே
அன்புறு நன்மொழி யருளொடுங் கூறினர்
பருவ மன்றியும் பைந்தொடி நங்கை
§திருவிழை கோல நீங்கின ளாதலின்
அரற்றினை னென்றுங் கரசற் குரைத்தபின்

---

20 - 21. பின்னுளனுகைச் சிரமஞ்செய்து முடியாமையாலே தலைக் கோற்றரமபெறுந தனமையில்லை , ஆதலால், குலதீதலைமாக்கள் கொள்ள நினைக்கின்றிரில்லை.

25 - 6. இவளாலே தவசிகளையும் சயிக்க நினைத்திருந்த காமன் கையற வென்க

30 - 31. வீழ்த்தோர் தமமையொப்ப.

32. செம்மொழிமாதவர் - தவம்படுத்தின சங்கதீதாரான **அறவண வடிகள்.** சேயிழை - மணிமேகலை.

33. துறவுசொல்லுதல் - வைராக்கியஞ்சொல்லுதல்.

(5) யாதவடுறதீதற் கேதுவீங் குரையெனச் (9) சொல்லுகின்றுள், (36) திருவிழைகோலம நீங்கினபடியாலே (37) அரற்றினேனென்றுள்.

அடி, 25 : "உருவி லாள ரெருபெருங் கருப்புவில்" (**சிலப்.** 2 . 44)

அடி, 25-6 "காமன் கையறக் கடுநவை யறுக்கும், மாபெருந் தவக்கொடி யீன்றனை" (**மணி** 7 36 - 7)

அடி, 27-8 "கோதைத் தாமங் குழலொடு களைந்து, போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்" (சிலப் 27 . 107-8)

அடி, 30-31 . "அரும்பெறன் மாமணி, ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று, மைய னெஞ்சமொடு" (**மணி.** 2 72-4)

(**பி - ம்.**) † 'கொள்ளாளியாது' ‡ 'மகண்மணிமேகலையென, வுருவி' ¶ 'சாற்றின தொன்றே, யன்புட னன்மொழி யருளுடன் கூறு னள், பருவ மன்றிப்' § 'திருவீழ் கோல'

குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழத்
†துடித்தனள் புருவந் துவரிதழ்ச் செவ்வாய்
மடித்தெயி றரும்பினள் வருமொழி மயங்கினள்
திருமுகம் ‡ வியர்த்தனள் செங்கண் சிவந்தனள்
கைவிட் டோச்சினள் கால்பெயர்த் தெழுந்தனள்
பலரறி வாராத் தெருட்சியண் மருட்சியள்
உலறிய நாவின ளுயர்மொழி $கூறித்
தெய்வமுற் றெழுந்த தேவந் திகைதான்
கொய்தளிர்க் குறிஞ்சிக் கோமான் றன்முன்
கடவுண் மங்கலங் காணிய வந்த
§மடமொழி நல்லார் மாணிழை யோருள்
அரடடன் செட்டித ஞயிழை யீன்ற
இரட்டையம் பெண்க ளிருவரு மன்றியும்
ஆடக மாடத் தரவணைக் கிடந்தோன்
||சேடக் குடும்பியின் சிறுமக ளீங்குளள்
மங்கல மடந்தை ¶கோட்டத் தாங்கண்
செங்கோட் டுயர்வரைச் சேணுயர் சிலம்பிற்
பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய

38. குரற்றலைக்கூந்தல் - கொத்துக்களாத் தன்னிடத்திலேயுடைய கூந்தல்.

45. தெய்வமுறறு - தெயவமேறி.

49-52 அரட்டன் செட்டி . மாகிய . கைக்கொண்டு.. குடும்பதி தையுடையான், திருவடி பிடிப்பான்

53. மங்கலமடந்தை - [1]மங்கலாதேவி.

54. செங்கோடு - செவ்விதான கோடு

55. பிணிமுகநெடுங்கல் [முளம்பின்முகம், இது வில்முகம்]

அடி 38 "குரற்றலைக் கூந்தற் குடசம் பொருந்தி" (சிலப். 14 87), "குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ" (மணி 8 : 36)

அடி, 39-45 . "தெய்வமுற்றேனவிநயம்.....உணர்ந்தோரே" (சிலப். பக் 86)

அடி, 49-50 சிலப். 30 . 129-31

அடி, 51 · சிலப். 26 . 62, கு - ரை.

அடி, 52 · சிலப். 30 : 135.

[1] மங்கலா தேவியென்றது கண்ணகியை, மங்கலாபுரம் அல்லது மங்களூரென்பது இத்தேவி காரணமாகவந்த பெயரென்பர்.

(பி - ம்.) † 'துடித்தன' ‡ 'வியர்த்தன செங்கண் சிவந்தன' $ 'கூறினள்' § 'வடமொழி' || 'சேடக்குடும்பியன் சிறுமகளங்கு', 'சேடக் குடுமியன்' ¶ 'பீடத் தாங்கண்'

அணிகயம் பலவுள வாங்கவை யிடையது
கடிப்பகை † நுண்கலுங் கவிரிதழ்க் குறுங்கலும்
இடிக்கலப் பன்ன விழைந்துகு நீரும்
உண்டோர் சுனையத னுள்புக் காடினர்
பண்டைப் பிறவிய ராகுவ ராதலின்
ஆங்கது ‡கொணர்ந்தாங் காயிழை கோட்டத்
தோங்கிருங் கோட்டி $யிருந்தோ யுன்கைக்
குறிக்கோட் டகையது கொள்கெனத் தந்தேன்
உறித்தாழ் கரகமு முன்கைய தன்றே
கதிரொழி காறுங் கடவுட் டன்மை
முதிரா தந்நீர் முத்திற மகளிரைத்
தெளித்தனை §யாட்டினிச் சிறுகுறு மகளிர்
ஒளித்த பிறப்பின ராகுவர் காணுய்
பாசண் டன்யான் பார்ப்பனி தன்மேல்
மாடல || மறையோய் வந்தே னென்றலும்
மன்னவன் விம்மித மெய்தியம் மாடலன்
தன்முக நோக்கலுந் தானனி மகிழ்ந்து
கேளிது ¶ மன்னு கெடுகநின் றீயது
மாலதி யென்பாண் மாற்றுள் குழவியைப்
பால்சுரந் தூட்டப் பழவினை யுருத்துக்
கூற்றுயிர் கொள்ளக் குழவிக் கிரங்கி

---

57 கடிப்பகைநுண்கல் - வெண்சிறுகடுகுபோன்ற நுண்ணிய கல் கவிரிதழ்க் குறுங்கல் - முருக்கம்பூப்போன்ற நிறத்தையுடைய குறிய கல்.

58 இடிக்கலப்பன்ன - மாவைக் கரைத்தாலொத்த இழைந்துகு

61. ஆயிழைகோடடம் - மங்கலாதேவிகோயில்

62. கோட்டி - கோயில்வாயில்

65 - 6 சந்திராதித்தருள்ள அளவும் அதன் கடவுட்டன்மையொழியாது.

66 - 8 உன் கையதாகிய கரகத்துநீரை இம்மூவர் பெண்கள் மேலும் தெளித்தறியென்று சத்தியம் சொல்லுதலும்

அடி 58 சிலப் 6 146, "இடியினுங் கொடியினு மயங்கி" (சீவக. 196), "இழையினுங் கொடியினு மிடியினும பிணங்கி" (பெருங். 1. 32 . 43)

அடி 64 . சிலப் 30 90, "உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும" (கலித் 9 2)

அடி 68 "ஒளித்த பிறப்புவந் துற்றதை யாதலின்" (சிலப் 30 : 97)

அடி 74-87 சிலப் 9 . 5 - 36-ஆம் அடிகளை இப்பகுதியுடன் ஒப்பிடுக.

(பி - ம்) † 'நணுகலுங் கவரிதழ் குறுகலும்', 'நுணுகலும்' ‡ கொணர்ந்தங்' $ 'யிருந்தோ யினகைக், குறிக்கோட டக்கையது' § 'யாட்டிச் சிறிய மகளி, ரொளித்த பிறப்பு முணர்குவர்' ||'மறையோன்' ¶'மன்னே'

ஆற்றுத் தன்மைய ளாரஞ †ரெய்திப்
பாசண் டன்பாற் பாடு கிடந்தாட்
காசில் குழவி யதன்வடி வாகி
வந்தன னன்னீ நீ வான்றுய ரொழிகெனச்
செந்திறம் புரிந்தோன் செல்ல னீக்கிப்
பார்ப்பனி தன்னெடு ‡பண்டைத் தாய்பாற்
காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து
தேவந் திகையைத் தீவலஞ் செய்து
நாலீ ராண்டு நடந்ததற் பின்னர்
மூவா விளநலங் காட்டியென் கோட்டத்து
நீவா வென்றே நீங்கிய சாத்தன்
மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
$அங்குறை மறையோ னுகத் தோன்றி
உறித்தாழ் § கரகமு மென்கைத் தந்து
குறிக் ||கோள் கூறிப் போயினன் வாரான்
ஆங்கது கொண்டு போந்தே னுதலின்
¶ ஈங்கிம் மறையோ டன்மேற் ரூன்றி
அந்நீர் தெளி $$யென் றறிந்தோன் கூறினன்
மன்னர் கோவே மடந்தையர் தம்மேல்
தெளித்தீங் ††கறிகுவ மென்றவன் றெளிப்ப
ஒளித்த பிறப்புவந் துற்றதை யாதலிற்
புகழ்ந்த காதலன் போற்ரு வொழுக்கின்
நிகழ்ந்ததற் கிரங்கு மென்னையு நோக்காய்
ஏதி னன்னுட் டியாருமி லொருதனிக்
காதலன் றன்னெடு கடுந்துய ‡‡ ருழந்தாய்
யான்பெறு மகளே யென்றுணைத் தோழீ

96 - 7. நீரை அப்பெண்கள்மேலே தெளித்தலும் கழிந்த பிறப்பு வந்து உறறது அவர்க்கு.

(98) 'புகழ்ந்தகாதலன்' என்னுஞ் சொல் முதலாக (103) 'மாதே வாராய்' என்னும துணையும் கண்ணகிதாய் கூற்று.

அடி. 78. பாடுகிடத்தல் - வரங்கிடத்தல் : "பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்கு" (சிலப். 9 15), "பன்னு ளாயினும் பாடு கிடப் பேன்" (மணி. 18 158)

அடி. 83. காப்பியக்குடி யென்பது சீகாழிக்குத் தென்கிழக்கிலுள்ள தோரூர்.

(பி - ம்.) † 'ரெய்துபாசாண்டன்' ‡ 'பண்டை மரபாற்' $ 'நங்குல மறை யோனுகித்' § 'கரக மென்கைத்' || 'கோட்கூறிப்' ¶ 'நீங்கிய மனை யோடன்' $$ 'யெனவறிநதோன்' †† 'அறிகுவனென்றவன்' ‡‡ 'ரெய்திய'

வான்றுயர் நீக்கு மாதே வாராய்
என்னே டிருந்த விலங்கிழை நங்கை
தன்னே டிடையிருட் டனித்துய ருழந்து
†போனதற் கிரங்கிப் புலம்புறு நெஞ்சம்
யானது பொறேஎ னென்மகன் ‡வாராய்
வருபுனல் வையை வான்றுறைப் பெயர்ந்தேன்
உருகெழு மூதூ ரூர்க்குறு மாக்களின்
வந்தேன் கேட்டேன் மனையிற் காணேன்
எந்தா யிளையா யெங்கொளித் தாயோ
என்றுங் கரற்றி $யினை நந்தினை நந்தேங்கிப்
பொன்ரு ழகலத்துப் §போர்வெய் யோன்முன்
குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர்
||முதியோர் மொழியின் முன்றி னின்றழத்
¶தோடலர் போந்தைத் தொடுகழல் வேந்தன்
மாடல மறையோன் றன்முக நோக்க
மன்னர் கோவே வாழ்கென் றேத்தி
முந்நூன் மார்பன் முன்னிய துரைப்போன்
மறையோ னுற்ற வான்றுயர் நீங்க
உறைகவுள் வேழக் கையகம் புக்கு
வானேர் வடிவம் பெற்றவன் பெற்ற
காதலி தன்மேற் காதல ராதலின்
மேனிலை யுலகத் தவருடன் போகும்

---

(104) 'என்னேடிருந்த' ஆதி (107) 'என்மகன்வாராய்' இறுதி யாகக் கோவலன்மாதா வார்த்தை.

(108) 'வருபுனல் வையை வான்றுறைப் பெயர்ந்தேன்' என்பது முதலாக (111) 'எங்கொளிதீதாயோ' என்பதீருக மாதரிவார்த்தை.

114. குதலை - இளமொழி.

121. உறை கவுள் - மதம் துளிக்கின்ற கவுள்.

122. வானேர் வடிவம் பெற்றவன் - கோவலன்.

123 காதலி - கண்ணகி.

அடி, 120-22 "மறையோன் றன்னைப், பாகுகழிந் தியாங்கணும் பறைபட வரூஉம், வேக யானை வெம்மையிற கைக்கொள, ஒய்யெனத் தெழித்தாங் குயர்பிறப் பாளனைக், கையகத் தொழித்ததன் கையகம் புக்கு.. .. அடக்கிய கருணைமறவ" (சிலப் 15 45 - 53)

(பி - ம்.) † 'போந்ததற்' ‡ 'வாரான், வருபுனல் வையை வாவறைப் பெயர்ந்தே' $ 'யினைந்துநைந்தேங்கிப்' § 'போர்வேந்தன் முன்' || 'முதிரா' ¶ 'தோடார்'

தாவா நல்லறஞ் செய்திலர தனலை
அஞ்செஞ் சாய †லஞ்சா தணுகும்
வஞ்சி மூதூர் மாநகர் மருங்கிற்
பொற்கொடி தன்மேற் பொருந்திய காதலின்
அற்புளஞ் சிறந்தாங் ‡கரட்டன் செட்டி
மடமொழி நல்லாண் மனமகிழ் சிறப்பின்
உடன்வயிற் ரூரா யொருங்குடன் ரூன்றினர்
ஆயர் முதுமக ளாயிழை தன்மேற்
போய பிறப்பிற் பொருந்திய காதலின்
ஆடிய குரவையி னரவணைக் கிடந்தோன்
சேடக் $குடும்பியின் சிறுமக ளாயினள்
நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச சேறலும்
அறப்பயன் விளைதலு மறப்பயன் விளைதலும்
§பிறந்தவ ரிறத்தலு மிறந்தவர் பிறத்தலும்
புதுவ தன்றே ||தொன்றியல் வாழ்க்கை
ஆனே றூர்ந்தோ னருளிற் ரூன்றி
மாநிலம் விளக்கிய மன்னவ னுதலிற்
செய்தவப் பயன்களுஞ் சிறந்தோர் படிவமும்
கையகத் தனபோற் கண்டனை யன்றே

---

123 - 31 காதலராகையாலே அறஞ்செய்திலர், அதனுறை காதலியாகிய அஞ்செஞ்சாயல் அஞ்சாதணுகும் வஞ்சிமூதூரிற பிறந்தார்

132 - 5. ஆடிய குரவையின்பயதீதால திருவடி பிடிப்பான் குலதீதிற பிறந்தாள் மாதரி

ஆதலால்,

136. பொற்படி - பொன்னுலகம்.

137 அற்புளம் - அன்புடையவுள்ளம். பற்றுவழிச்சேறல் - பூமியிற பறறுள்ளவிடதீதே பிறதீதல.

அடி, 131 சிலப். 10 227

அடி, 138. "பிறந்தோ ரிறதீதலு மிறநதோர பிறதீதலும, அறந்தரு சால்பு மறந்தரு துன்பமும்" (மணி. 21 19 - 20)

அடி, 140 "புதுவ தன்றே புலனுடை மாந்திர" (கலித் 22 4), புதுவ "தன்றிவ் வுலகதீ கியறகை" (புறநா 76)

அடி, 141 - 2 "செஞ்சடை வானவ னருளினில் விளங்க, வஞ்சிதீ தோன்றிய வானவ" (சிலப் 26 98 - 9)

(பி - ம்) †'லகலா தணுகும', 'லருகா நணுகும'. ‡'கருட்டன்' $'குடுமபியன்' §'பிறந்தவர் சாதலு மிறந்தவர்' ||'யொன்றியல்'

ஊழிதோ றூழி யுலகங் காத்து
நீடுவா ழியரோ நெடுந்தகை யென்ற
மாடல மறையோன் றன்னெடு மகிழ்ந்து
பாடல்சால் சிறப்பிற் †பாண்டிநன் னுட்டுக்
கலிகெழு கூடல் கதழெரி மண்ட
முலைமுகந் திருகிய மூவா மேனிப்
பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்து
நித்தல் விழாவணி நிகழ்கென் றேவிப்
பூவும் புகையு மேவிய விரையும்
தேவந் திகையைச செய்கென் றருளி
வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி
உலக மன்னவ னின்ரேன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய வாரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
‡குடகக் கொங்கரு மாளுவ வேந்தரும்
கடல்சூ ழிலங்கைக் $கயவாகு வேந்தனும்
எந்நாட் டாங்க §ணிமைய வரம்பனின்
நன்னுட செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்த ¶தொருகுரல்

---

151 படிப்புறம் - அரசசனபோகம

158 சிறைக்கோடடம பிரிநத மனனர - பணடே வஞசியிற சிறை கிடந்த மன்னர்.

162 - 3 வேள்வியில் வரவேண்டுமென்ரூர்

அடி, 145 சிலப். 25 181 - 2, கு - ரை

அடி, 151 "பத்தினிக் கோடடமுஞ சமைதது, நிததல் விழாவணி நிகழ்வித தோனே" (சிலப் உரைபெறு கட்டுரை, 4)

அடி, 153 சிலப் 28 61, கு - ரை.

அடி, 159-60. "அதுகேடடுக், கொங்கிளங கோசர தங்கணணட டகதது, நங்கைக்கு விழவொடு சாநதி செய்ப, மழைதொழி லென்றும் மாருதாயிறறு", "அது கேடடுக், கடலசூ ழிலங்கைக கயவாகு வென் பான, நங்கைக்கு, நாட்பலி பீடிகைக் கோடடமுந துறுதீதாங்கு, அரநதை கெடுதீது வரநதரு மிவளென, ஆடிதீ திங்க ளகவையி னுங் கோர, பாடி விழாக்கோள பனமுறை யெடுபப, மழைவீற் றிருநது வளமபல பெருகிப, பிழையா விளையு ணுடா யிறறு" (சிலப. உரைபெறு கட்டுரை, 3)

(பி - ம்) †'பாண்டியன் றனனுட்டுக்' ‡'குட கருங' §'சாவல் வேந்தன்' §'ணிமையவர் தம்மி, னன்னுட் செயத நாளணி வேள்வி யுள்' ¶'தோர்குரல்'

ஆங்கது கேட்ட வரசனு மரசரும்
ஓங்கிருந் தானையு முரையோ டேத்த
வீடுகண் டவர்போன் மெய்ந்நெறி விரும்பிய
மாடல மறையோன் றன்னெடுங் கூடித்
தாழ்கழன் மன்னர் தன்னடி போற்ற
வேள்விச் சாலையின் வேந்தன் போந்தபின்
யானுஞ் †சென்றே னென்னெதி ரெழுந்து
தேவந் திகைமேற் றிகழ்ந்து தோன்றி
வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாணிழ லிருந்தோய் நின்னை
அரைசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்
றுரைசெய் தவன் ‡மே லுருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்ல னீங்கப்
பகல் $செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் §பார மகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்
தந்தமி லின்பத் ¶தரசாள் வேந்தென்
றென்றிற முரைத்த விமையோ ரிளங்கொடி
தன்றிற முரைத்த தகைசா னன்மொழி

---

170. யாகசாலைக்கண் அரசன்போந்தபின்.

171. யானென்றது இளங்கோவடிகளை.

179. ஆதித்தன தோன்றுகிற குணக்காகிய திக்கினுலே பேருடைய குணவாயில். படிமமென்றது பூதம, அது கடைகுறைந்து படியென நின்று அதனையுடையோர்க்குப் படியோராயிற்று.

(173) 'வஞ்சிமூதூர்' என்றது முதலாக (182) 'அந்தமி லின்பத் தரசாள் வேந்து' என்பதீருக இளங்கோவடிகள் தெயவம சொன்ன தனைக் கொண்டு கூறினர்.

174 - 85 நுந்தையாகிய சேரலனிடத்தே நீயிருக்க, ஒருநிமித்தி கன்வந்து நின்னைப்பார்த்து அரசுவீறறிருக்கும் இலக்கணமுண்டென்று

அடி, 169 "தாழ்கழன் மன்னர் நின்னடி போற்ற" (சிலப் 28 : 184)

அடி, 170 - 83 "குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த, குடக் கோச் சேர லிளங்கோ வடிகள்" (சிலப். பதி. 1-2) என்பதையும அதன் உரைகள் முதலியவற்றையும் பார்க்க, பக்கம், 5, 12, 13.

(பி - ம்) †'சென்றே னெதிரேன் றெழுந்து' ‡'மேற்கறுத்து நோக்கிய' $'செய்வாயிற்' §'பார மகன்று போந்து' ¶'தரசாயினை வேந்தென வென்'

185 தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவு மிடுக்கணும் பாங்குற †நீங்குமின்
தெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் டுறமி னுயிர்க்கொலை நீங்குமின்
190 தானஞ் செய்ம்மின் றவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் றீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
195 பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
அறமனை காமி னல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்
இளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
200 உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்

(ஈ०) வரந்தரு காதை முற்றிற்று.

சொல்ல, என் தமையனுகிய செங்குடடுவன் இருக்க இவவாறு முறைமை கெடச் சொன்னையென்று அந்நிமித்திகனை வெகுண்டுநோக்கிச் செங்குட்டுவனுக்குத் துன்பம் வாராதபடி குணவாயிலிடத்துத் துறந்திருக்கின்ற கடவுளர் முன் வந்து இராச்சியபாரத்தை விட்டு நீங்கி மோட்சமாகிய இராச்சியத்தை ஆளக்கடவ வேந்தனலலையோவென்று முன்பின் நிகழ்ந்ததும் மேல் நிகழ்வதுமாகிய என் திறமுரைத்த இமையோரிளங்கொடி தன்திறமுரைத்த கதையைத் தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீரெனக் கூடடுக

188. புறஞ்சொற் சொல்லாதபடி பரிகரிமின்.
192 பொருண்மொழி - மெய்வார்தீதை
195 பிழையுயிர் - மரிக்கிற உயிர். 196. அறமனை - மனையறம்.
198. வெள்ளைக்கோட்டி - பயனிலுரைக்கோட்டி, கோடடி தவிர்மின்.
200. உள்ளநாள் [1] வீழ்நாள் படாமை இயலுமதனைக் கைவிடாது.
202. மல்லன்மா ஞாலத்துவாழ்வீ ரீங்கென்.....

சிலப்பதிகார அரும்பதவுரை முற்றிற்று

அடி, 197 . "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும், உள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை" (மணி. 24 77-8)

அடி, 199 "இளமையு நிலலா யாக்கையு நில்லா, வளவிய வானர் பெருஞ் செல்வமு நில்லா" (மணி 22 135-6)

அடி, 201 . "தன்னெடு செல்வது வேண்டி னறஞ்செய்க" (நான்மணிக். 15)

[1] "வீழ்நாள் படாஅமை நன்ருற்றி னஃதொருவன், வாழ்நாள் வழியடைக்குங் கல்" (குறள், 38) (பி - ம்.) †'நீங்குதிர்'

கட்டுரை

முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
†குடதிசை யாளுங் கொற்றங் குன்ற
ஆர மார்பிற் ‡சேரகுலத் துதித்தோர்
அறனு மறனு மாற்றலு மவர்தம்
பழவிறன் மூதூர்ப் $பண்புமேம் படுதலும்
விழவுமலி §சிறப்பும் விண்ணவர் வரவும்
ஒடியா வின்பத் தவருறை நாட்டுக்
||குடியின் செல்வமுங் கூழின் பெருக்கமும்
வரியுங் குரவையும் விரவிய கொள்கையிற்
¶புறத்துறை மருங்கி னறத்தொடு பொருந்திய
மறத்துறை முடித்த வாய்வாட் டானையொடு
பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டிக்
§§கங்கைப் பேர்யாற் றுக்கரை போகிய
††செங்குட் டுவனே டொருபரிசு நோக்கிக்
கிடந்த வஞ்சிக் காண்ட ‡‡முற்றிற்று

மூன்றுவது
வஞ்சிக்காண்டம் முற்றிற்று

அடி, 1, 4-8 மு. சிலப். பக். 265, 508.

அடி, 11-5 "கொடும்போர் கடந்து நெடுங்கட லோட்டி, யுடன்று மேல் வந்த வாரிய மன்னரைக், கடுமபுனற் கங்கைப் பேர்யாறறு வென்றேம்" (சிலப் 28 119-21) என்பதையும அதன் குறிப்புரையையும் பார்க்க.

அடி, 13 . "கங்கைப் பேர்யாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன்" (சிலப் பச் 569)

(பி - ம்) †'குடகருங்கண்டு' ‡'சேரர்குலதீ' $'பண்புண்டாதலும்' §'சிறப்பின் வானவர்வரவு, மொழியா' ||'குடியுங்கூழின் பெருக்கமுமவர்தம்' ¶'புறத்திறை மருங்கிற' §§'கங்கையாற்றுக்கரை' ††'செங்குட்டுவனை நோக்கி' ‡‡'முற்றும்'

நூற்கட்டுரை

குமரி வேங்கடங் குணகுட கடலா
மண்டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பிற்
செந்தமிழ் கொடுந்தமி ழென்றிரு பகுதியின்
ஐந்திணை மருங்கி னறம்பொரு ளின்பம்
மக்க டேவ ரெனவிரு சார்க்கும்
ஒத்த மரபி னெழுக்கொடு புணர
எழுத்தொடு புணர்ந்தசொல் லகத்தெழு பொருளை
இழுக்கா யாப்பி னகனும் புறனும்
அவற்று வழிப்படூஉஞ் செவ்விசிறந் தோங்கிய
பாடலு மெழாலும் பண்ணும் பாணியும்
அரங்கு விலக்கே யாடலென் றீனத்தும்
ஒருங்குடன் றழீஇ யுடம்படக் கிடந்த
வரியுங் குரவையுஞ் சேதமு மென்றிவை
தெரிவுறு வகையாற் செந்தமி ழியற்கையில்
